

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

காதிகிராப்ட்



DIPR/2687

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108




# ஊனமுற்றோர் உலக நாள் விழா

## மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி

''ஏழை - எளிய மக்களின் நல்வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்த அரசு, உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக ஒரு தனித் துறையையே அமைத்து, பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருவதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

''உடல் ஊனமுற்றவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்படக்கூடாது என்று இந்த அரசு மிகத் தீவிரம் காட்டி வருகிறது. உடல் ஊனமுற்றோர் உள்ள உறுதியோடு நல்ல வாழ்க்கை வாழவும், சம உரிமைகள் பெற்று அவர்கள் வசதிகளுடன் முன்னேறவும் இந்த ''ஊனமுற்றோர் உலக நாள் விழா''க் கொண்டாட்டங்கள் ஊக்கத்தை அளிக்கும் என்று நம்புகிறேன்.

''இந்தச் சீரிய விழாவில் பங்கு கொள்ளும் அனைத்துச் சகோதர, சகோதரிகளுக்கும் என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!''

## இந்த இதழில்...


சட்டப்பேரவையில் ... 2
வெள்ளத்தால் வீடுகளை இழந்தவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி ... 4
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்: நலத்திட்ட உதவிகள் ... 5
அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள் ... 6
முதல்வரின் தனிப்பிரிவில் ரூ.10 இலட்சம் செலவில் கணினி மையம் ... 9
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்: நலத்திட்ட உதவிகள் ... 11
சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை ... 13
காது - மூக்கு - தொண்டை மருத்துவம்: டாக்டர் கே.கே. ராமலிங்கம் பதில்கள்... 17
அரும்பொருட்களைப் பாதுகாக்க அரிய பயிற்சி ... 21
குடி மறப்பீர்! (கவிதை) ... 23
விஷ விருட்சம் (சிறுகதை) ... 24
தருமபுரி மாவட்ட மருத்துவமனைகள் ... 27
தேசிய மாணவர் படை ... 31
தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ... 33
தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ... 37
ஆதிதிராவிடர் நலம் ... 41
மனித வாழ்க்கையில் மரங்கள் ... 45
சென்னை மாவட்டம்: நலத்திட்ட உதவிகள் ... 47
சவூதி செல்லவிருக்கும் தமிழக மருத்துவ நிபுணர்களுக்கு ... 48


**அட்டைப்பட விளக்கம்:**

**முதல் அட்டை:**

ரூபாய் பத்து இலட்சம் செலவில் கணினி மையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார் (1.3.'93).

**நான்காம் அட்டை:**

உலக வன நாளையொட்டி, முதுமலை வனவிலங்குச் சரணாலயம்.


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024
பங்குனித் திங்கள் - 19
மலர்:23 இதழ்:19
1-4-1993



164878

# சட்டப்பேரவையில்...

### அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்து வாங்கத் தனி நிறுவனம்

அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்குவதற்காகத் தனி நிறுவ்ம் (கார்ப்பரேஷன்) அமைக்கப் படும். இந்த நிறுவனம் மூலம் மொத்தமாக அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் வாங்கப்படும். இதன் கிளைகள் மாவட்டங்கள் முழுவதும் அமைக்கப்படும். இந்தத் தகவலை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

தேவையான மருந்துகளைத் தேவைப்படும் அளவுக்கு வாங்குவது, அவற்றை அனைத்து மருத்துவ மனைகளுக்கும் சரியான வகையில் விநியோகிப்பது, மருத்துவமனைகளில் பயன்படாமல் தேங்கிக் கிடக்கும் மருந்துகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வது, மருந்து விநியோகத்தைக் கண்காணிப்பது போன்ற பணிகளை இந்தத் தனி நிறுவனம் மேற்கொள்ளும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார் (15.3.93).

### பயணிகளின் வசதிக்காகச் சென்னையில் இணைப்புப் பேருந்துகள்

சென்னையில் நெரிசல் நேரங்களில் பயணிகளின் வசதி கருதி, இணைப்புப் பேருந்துகளை இயக்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. மேலும், சென்னையில் அலுவலக நேரங்களில் பேருந்துகளில் நெரிசலைக் குறைக்க கூடுதலாகப் பேருந்துகள் விடப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (16.3.93).

### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைப்பு

மண்டல்குழு பரிந்துரைகள் மீதான வழக்குகளில் உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணைக்கிணங்க, 'தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்' ஒன்றைத் தமிழக அரசு அமைத்துள்ளது. இதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்துள்ளார்.

இந்த ஆணையத்தின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி கே. சண்முகம் இருப்பார். இந்த ஆணையத்தில் ஒரு உறுப்பினர்- செயலரும், 7 உறுப்பினர்களும் இருப்பார்கள்.

உறுப்பினர்கள் விவரம் வருமாறு:

திரு. ஆர். செல்லமுத்து, இ.ஆ.ப., உறுப்பினர்-செயலர்.
திரு. யு.எஸ். நடராஜன், இ.ஆ.ப., (ஓய்வு) - உறுப்பினர்
திரு. எம். மாணிக்கவேலு, இ.ஆ.ப., (ஓய்வு) - உறுப்பினர்
திரு. சி. முத்துசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) - உறுப்பினர்
பொருளாதாரப் பேராசிரியர் டாக்டர் சி. முருகதாஸ்-உறுப்பினர்
சமூக இயல் பேராசிரியர் டாக்டர் டி. சுந்தரம் - உறுப்பினர்

**அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் - உறுப்பினர்

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் - உறுப்பினர்.

**ஆய்வு வரம்பு:**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் அலுவல் ஆய்வு வரம்புகள் பின்வருமாறு:



TL
V 211m,N93
N93

1. பிற்படுத்தப்பட்டோர் பட்டியல், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கைகள், அப்பட்டியல்களில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது அல்லது சேர்க்கப்படாமல் விடுபட்டது குறித்த புகார்கள் ஆகியவற்றைப் பெற்று, பரிசீலித்துப் பரிந்துரைகள் வழங்குதல்.

2. மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை மறு ஆய்வு செய்தல்.

மேற்கண்ட தகவல்களை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்தார் (16.3.93).

### காணாமல் போய்த் திரும்பிவந்த மீனவர்களுக்கு முதல்வர் உதவி

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்திலிருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போய் சமீபத்தில் இலங்கையிலிருந்து திரும்பிய 12 மீனவர்களுக்குத் தலா ரூ.3 இலட்சம் செலவில் புதிய மீன் பிடிப் படகுகள், வலைகள் மற்றும் மீன்பிடி சாதனங்கள் வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

இந்த மீனவர்கள் இலங்கையிலிருந்து திரும்பியதும் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து அவர்களுடைய மீன்பிடி சாதனங்கள் மற்றும் படகுகளை இழந்து விட்டதாக முறையிட்டனர். இவர்களின் மறுவாழ்வுக்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து மேற்கண்ட நிவாரணத்தொகையை வழங்க உத்தர விடப்பட்டிருப்பதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் தெரிவித்தார் (18.3.'93).

### தமிழ்நாட்டில் பெண்கள் நலக் கமிஷன்

மத்திய அரசு உத்தரவுக்குப் பின் தமிழ்நாட்டில்தான் முதன்முதலாகப் பெண்கள் நலக் கமிஷன் அமைக்கப் பட்டிருக்கிறது. வரதட்சிணைக் கொடுமைகள் பிரச்சினைக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைப்பதற்குத் தான் பெண்களுக்கு என்று தனியாக ஒரு கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது.

வரதட்சிணைக் கொடுமைகளை விசாரித்து உடனடி நடவடிக்கை எடுக்க, சென்னையில் பெண்கள் காவல் நிலையம் அமைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இங்கு ஏராளமான புகார்கள் வருகின்றன. இந்தப் புகார்களின்மீது நல்லவிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் மற்ற எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் இது போன்ற காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேற்கண்ட தகவலை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார் (18.3.'93).

### பேருந்துப் பயணிகளுக்குக் கூடுதல் பாதுகாப்பு

தமிழ்நாட்டில் நெடுந்தூரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளிடம் கொள்ளை அடிப்பதைத் தடுக்க நவீன வசதிகள் செய்யப்படுகின்றன. இதன்படி நெடுந்தூரம் பயணம் செய்யும் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு 'மொபைல் யூனிட்' ஏற்படுத்தப்பட்டு இதில் முன்னாள் இராணுவத்தினர் பயன்படுத்தப்படுவார்கள். இவர்கள் 25 கி.மீ. தூர இடைவெளியில் ஒயர்லெஸ் வசதியுடன் பாதுகாப்புப் பணி மேற்கொள்வர். மேலும் திருவள்ளுவர் பேருந்தில் பயணிகள் ஏறும்போது 'மெட்டல் டிகெக்டர்' மூலம் சோதனை செய்யப்படும். பயணிகளின் இருக்கையின் அருகே எச்சரிக்கை செய்வதற்கு அழைப்புமணி பொருத்த ஏற்பாடு செய்யப்படும்.

—மேற்கண்ட தகவலை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தெரிவித்தார் (18.3.'93).

## பணியிலிருக்கும்போது உயிரிழந்த அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கு உடனடியாகப் பணி வழங்க 500 மிகையான பணியிடங்களைத் தோற்றுவிக்க மாண்புமிகு முதல்வர் ஆணை

ஒரு அரசு அலுவலர் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால், இன்னலுறும் அக்குடும்பத்தில் ஒருவருக்கு அவரது தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்பது அரசுக் கொள்கையாகும்.

ஆனால், பல அரசுத் துறைகளில் போதிய பணியிடங்கள் காலியின்மையாலும் நிர்வாகத் தாமதங்களினாலும் பணியிலிருக்கும்போது உயிரிழந்த அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கு உடனடியாகப் பணி வழங்க இயலாத நிலை இருப்பதை அறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அக்குடும்பங்களுக்கு உதவிடும் வகையில் 500 மிகையான பணியிடங்களைத் (Supernumerary Posts) தோற்றுவிக்க உத்தர விட்டுள்ளார். இந்த மிகையான பணியிடங்களில் நியமிக்கப்படும் அலுவலர்கள் நிரந்தரப் பணிகளில் காலியிடம் ஏற்படும்போது அதில் நிரப்பப் படுவர். இதனால் கருணை அடிப்படையிலான நியமன வாய்ப்புகள் தொடர்ந்து உருவாகிவிடும்.

மேலும், பணியிலிருக்கும்போது இறந்த அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கு, அவர்கள் மனுச் செய்த ஒரு மாதத்திற்குள் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

# வெள்ளத்தால் வீடுகளை இழந்த 10,633 நபர்களுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி!

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மத்தியில் தாக்கிய பெரும்புயலாலும் அதனையொட்டி ஏற்பட்ட வெள்ளத்தாலும் மிகுந்த சேதம் ஏற்பட்டது. இந்தப் புயலால் கன்னியாகுமரி மாவட்டம் பெருத்த பாதிப்புக்குள்ளானது. கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உடனடியாகப் பார்வையிட்டபோது, வீடுகளை முற்றிலும் இழந்தவர்களும், வீடுகள் இடிந்து மிகுந்த சேதம் ஏற்பட்டவர்களும் நிவாரண உதவி வழங்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனுக்கள் கொடுத்தனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் கடந்த டிசம்பர் மாதம் 1-ஆம் தேதி அன்று சென்னையில் இந்தச் சேதங்கள் பற்றி நடத்திய விவாதத்தின் அடிப்படையில், தமிழகத்தில் முற்றிலும் வீடுகளை இழந்தவர்கள் மற்றும் மிகுந்த சேதத்திற்கு ஆளானவர்களின் வீடுகளைப் புதுப்பிப்பதற்காக நிவாரணம் வழங்குவதற்கு ரூ.383 கோடி திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. இதில் ரூ.152 கோடியினை மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடனுதவியும், மீதமுள்ள ரூ.231 கோடியினை மானியத் தொகையாகக் கருதி மத்திய மற்றும் மாநில அரசுகள் சரிபாதியாக ஏற்றுக்கொள்ளலாமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதுவரை மாநில அரசால் கோரப்பட்ட இந்த நிவாரணத் தொகையை மத்திய அரசு வழங்கவில்லை.

வெள்ளத்தால் வீடுகள் சேதமடையப்பெற்ற கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மீண்டும் தங்களது வீடுகளைச் சீரமைப்பதற்காக நிவாரண உதவி கோரிப் பல மனுக்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் கொடுத்துள்ளனர். அம்மனுக்களைக் கருணையுடனும், பரிவுடனும் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், மத்திய அரச தமிழக அரசின் கோரிக்கையை ஏற்காத நிலையிலும், பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நிலைமையைக் கருத்தில்கொண்டு மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் கீழ்க்காணும் ஆணைகளை பிறப்பித்துள்ளார்:-

1. நல்ல நிலையிலிருந்த மங்களூர் ஓடுகள் போடப்பட்ட வீடுகள் வெள்ளத்தால் முற்றிலும் அடித்துச் செல்லப்பட்டிருந்தாலோ அல்லது முழுதும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தாலோ மீண்டும் வீடுகள் கட்டிக்கொள்ள ரூ.5,000 நிதி உதவி வழங்கப்படும்.

2. நல்ல நிலையிலிருந்த கான்கிரீட் தளமுள்ள வீடுகள் வெள்ளத்தால் முற்றிலும் அடித்துச் செல்லப்பட்டிருந்தாலோ அல்லது முழுதும் இடிந்துவிட்ட நிலையில் இருந்தாலோ மீண்டும் வீடுகள் கட்டிக்கொள்ள ரூ.10,000 வழங்கப்படும்.

இந்த நிவாரண உதவிகள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரால் இரண்டு தவணைகளாக வழங்கப்படும். இந்த உதவித்தொகையினை வருவாய்த்துறை அலுவலர்கள் வழங்குவார்கள்.

வருவாய்த்துறையினைச் சேர்ந்த வட்டாட்சியர் பதவிக்குக் குறையாத கள அலுவலர்களோ அல்லது ஒன்றியப் பொறியாளர்களோ முதல் தவணையாக வழங்கப்பட்ட தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்த பின்னர், இரண்டாவது தவணை உதவித் தொகையை வழங்குவார்கள். இரண்டாவது தவணைத்தொகை வழங்கப்பட்ட இரண்டு மாதக் காலத்திற்குப் பின்னர், கள அலுவலர்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து வழங்கப்பட்ட நிவாரண உதவி முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது குறித்த நிறைவுச் சான்றிதழ் (Completion Certificate) அளிப்பார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 10,653 பேர் இந்த உதவியினைப் பெறுவர். இதற்கு 6 கோடி ரூபாய் செலவாகும்.

இத்திட்டம் வருவாய்த்துறையினரால் வருவாய் நிர்வாக ஆணையாளர் மூலமாகக் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரால் நடைமுறைப் படுத்தப்படும்.



# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்: 10,007 பயனாளிகளுக்கு மாண்புமிகு முதல்வர் உதவி



மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 10,007 நபர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 11 கோடியே 12 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை 23.3.'93 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

ஊரக வளர்ச்சித்துறை மூலமாக 2,050 பேர்களுக்கு 2 கோடியே 67 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் நிதியுதவியும், திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் விவசாயக் கடனாகவும், தொழில் தொடங்கவும் 1,469 பேர்களுக்கு ரூபாய் 2 கோடியே 11 இலட்சத்து 82 ஆயிரம் நிதியுதவியும், பால்வள ஒன்றியம் மூலமாக 1,008 பேர்களுக்கு ரூபாய் 1 கோடியே 6 இலட்சத்து 16 ஆயிரம் கடனுதவியும், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக 42 பேர்களுக்கு ரூபாய் 90 இலட்சத்து 59 ஆயிரம் கடனுதவியும், நகராட்சிகள் மூலம் 1,606 நபர்களுக்கு ரூபாய் 1 கோடியே 5 இலட்சத்து 21 ஆயிரம் கடனுதவியும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வாயிலாக 30 பேர்களுக்கு ரூபாய் 78 இலட்சத்து 64 ஆயிரம் கடனுதவியும், கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் 46 பேர்களுக்கு ரூபாய் 50 இலட்சத்து 50 ஆயிரம் கடனுதவியும், கூட்டுறவு நகர்ப்புற வங்கிகள் மூலம் 209 நபர்களுக்கு ரூபாய் 38 இலட்சத்து 25 ஆயிரம் கடனுதவியும், வீட்டு வசதித்துறை வாயிலாக 409 பேர்களுக்கு ரூபாய் 34 இலட்சத்து 76 ஆயிரம் கடனுதவியும், வருவாய்த் துறை மூலமாக 1,125 பேர்களுக்கு ரூபாய் 24 இலட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் பல்வேறு உதவிகளும், வேளாண்துறை மூலமாக 70 பேர்களுக்கு ரூபாய் 20 இலட்சத்து 14 ஆயிரம் நிதியுதவியும், வனத்துறை வாயிலாக 60 பேர்களுக்கு ரூபாய் 45 இலட்சத்து 46 ஆயிரம் மானியமாகவும், சமூக நலத்துறை மூலமாக 200 பேர்களுக்கு ரூபாய் 7 இலட்சத்து 75 ஆயிரம் மானியமாகவும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் மூலம் 52 நபர்களுக்கு ரூ.3,06,000-மும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் 880 பேர்களுக்கு ரூபாய் 6 இலட்சத்து 87 ஆயிரம் மானியமாகவும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை வாயிலாக 250 பேர்களுக்கு ரூபாய் 1 இலட்சத்து 37 ஆயிரம் மானியமாகவும், கால்நடைப் பராமரிப்புத்துறை வாயிலாக 40 பேர்களுக்கு ரூபாய் 3 இலட்சம் நிதியுதவியும், தமிழ்நாடு கதர்கிராமத்தொழில் வாரியம் மூலம் 22 பேர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 93 ஆயிரம் நிதியுதவியும், பட்டு வளர்ச்சித்துறை மூலமாக 54 பேர்களுக்கு ரூபாய் 2 இலட்சத்து 98 ஆயிரம் நிதியுதவியும், மாவட்டத் தொழில் மையம் வாயிலாக 22 பேர்களுக்கு ரூபாய் 9 இலட்சத்து 71 ஆயிரம் மானியமாகவும், சிறுசேமிப்புத்துறை மூலமாக 352 பேர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 20 ஆயிரம் மானிய உதவியும், பேரூராட்சிகள் மூலமாக 7 பேர்களுக்கு ரூபாய் 18 ஆயிரம் மதிப்பீட்டில் நிவாரண உதவிகளும், குடும்பநலத்துறை மூலமாக 4 பெண்களுக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்கான பரிசுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 8 ஆயிரமும் வழங்கப்பட்டது.

இதுவரை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாவட்ட அளவில் வழங்கிய நலத்திட்ட உதவிகளில் திருநெல்வேலி மாவட்டம் ரூ.11 கோடிக்கு மேலாக நலத்திட்ட உதவிகளை வழங்கி முதலிடம் வகிக்கிறது.

இதுதவிர பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 20 பேர்களுக்கு இருதய அறுவை சிகிச்சைக்கென ரூ.3 இலட்சத்து 40 ஆயிரத்திற்கான நிதி உதவியினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய் திருந்தார்.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்!

ஏழை எளிய மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் காப்பிக்கொட்டை, மண்ணெண்ணெய், புளி, மிளகு, கோதுமைப் பொருட்கள், கையினால் தயாரிக்கப்படும் சோப்பு முதலியனவற்றிற்கு வரி குறைக்கப்பட்டுள்ள.







மருந்துப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், அலுமினியப் பாத்திரங்கள் போன்ற அன்றாடம் பயன் படுத்தப்படும் பொருட்களின் மீதான வரி குறைக்கப் பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் அதனோடு இணைந்த திட்டங்களுக்கு ரூ.312 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.






மக்களுக்குப் பாலங்கள் என்னும் புதிய திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு பாலம் (ரூ.5 இலட்சத்திற்கு மிகாமல்) கட்டப்படும்.




1.25 இலட்சம் குடும்பங்கள், 1993-94-இல் புதிய வீடுகள் பெற வழிவகை செய்து தரப்படும்.



ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் அமைந்த 500 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு தொடக்கப் பள்ளி அமைக்கப்படும்.

அறிவொளி இயக்கம் ஏற்கெனவே நீட்டிக்கப்பட்ட 12 மாவட்டங்களோடு மேலும் 10 மாவட்டங்களுக்கு இவ்வாண்டு நீட்டிக்கப்படும்.





கிராமியக் கலைப் பயிற்சி ஆராய்ச்சி மையம், மதுரையில் அமைக்கப்படும்.

புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத் திட்டத்தை ஒட்டி, தாய் சேய் நல முகாம்கள் நடத்தும் புதிய திட்டங்களும் தொடங்கப்பட்டு உள்ளன.







அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி உயர்த்தப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர் வீடு கட்டக் கடனுதவிக்கான ஒதுக்கீடு ரூ.25 கோடியிலிருந்து ரூ.34.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**TNPSC**

விளம்பர எண். 12/93

தமிழ்நாடு புள்ளியியல் பணியில் கல்வித்துறையின் புள்ளியியல் உதவி இயக்குநரும் உள்ளிட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் (Assistant Director of Statistics including the Assistant Director of Statistics in the Education Department) பதவியில் ஐந்து காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 19.4.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000

| | |
|---|---|
| ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | : 1 |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | : 1 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | : 2 |
| பகிரங்கப் போட்டி | : 1 |

குறிப்பு (1) 6.4.92 நாளிட்ட தேர்வாணையத்தின் அறிவிக்கைக்கிணங்க கல்வித்துறையின் புள்ளியியல் உதவி இயக்குநரும் உள்ளிட்ட புள்ளியியல் உதவி இயக்குநர் பதவிக்கு நியமனம் செய்யப்பட ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள், மற்றபடி தகுதியானவர்களாயிருந்து அவர்கள் விரும்பினால் இந்த நியமனத்திற்கும் விண்ணப்பிக்கலாம். முந்தைய நியமனத்தின் முடிவின்படி தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் இந்த நியமனத்திற்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தியிருந்தால் அதைத் திரும்பப் பெறவோ அல்லது அவர்களுக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பக் கட்டணச் சலுகை எண்ணிக்கையிலிருந்து இந்தமுறை விலக்களிக்கவோ கோரி விண்ணப்பிக்கலாம்.

(2) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவரைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

விளக்கம்: 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

வயது: 1.7.1993 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

குறிப்பு: ஆதிதிராவிட வகுப்பினர்/ பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

தகுதி: (4.3.1993 அன்றுள்ளபடி): கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

(i) A degree of M.A., or M.Sc., or a first class degree of B.A. or B.Sc., with Statistics, Mathematics, Economics or Mathematical Economics as the main subject.

and

(ii) Experience in Statistical investigation for a period of not less than three years in the case of persons holding a Master's degree and five years in the case of persons holding a Bachelor's degree.

Note: Regular members in any of the services of the Government of Tamil Nadu may also apply to this recruitment even if a period of five years has elapsed since their first appointment under the Government of Tamil Nadu provided that they posses the qualifications including the age-limit prescribed for appointment to the post.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு - செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.3.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10), சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.3.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (25 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/435/MS/93



# முதல்வரின் தனிப்பிரிவில் ரூ.10 இலட்சம் செலவில் கணினி மையம்!

ஏழை எளிய மக்களின் குறைகளை நீக்கி அவர்களது நல்வாழ்விற்காகப் பணியாற்றுவதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பொது மக்களிடமிருந்து நாள்தோறும் நேரிலும், பயணங்களின் போது பெற்றிடும் மனுக்கள் மற்றும் தபால் மூலம் பெற்றிடும் ஆயிரக்கணக்கான மனுக்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து, உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற முதல்வரின் ஆணைக்கிணங்க, முதல்வரின் தனிப்பிரிவு அன்றாடம் பெறும் ஆயிரக்கணக்கான மனுக்களை உரிய துறைகளுக்கு அனுப்பி, நடவடிக்கை எடுக்கச் செய்து உரிய மனுதாரருக்கு நடவடிக்கை குறித்துத் தெரிவித்து வருகிறது.

கடந்த காலங்களில், முதல்வரின் தனிப்பிரிவிற்கு வரும் மனுக்கள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மட்டுமே அனுப்பப்பட்டு வந்தன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவியேற்றவுடன் உடனடியாக உத்தரவிட்டதன் பேரில், இப்பிரிவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மனுக்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குப் பதில் பெறப்பட்டு, அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வரு

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் கணினி மையத்தினைத் (Computer Center) திறந்து வைத்தார் (1.3.93).



கின்றது.

மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள் உடனுக்குடன் கணிப்பொறியில் மாவட்ட வாரியாகப் பதிவு செய்யப் படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்றும் துறைகளுக்கும் அனுப்பப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும், கணிப்பொறியில் அவ்வப்போது பதிவு செய்து, மனுக்கள் மீது எடுத்த நடவடிக்கைகள் உடனுக்குடன் அறியப்படுகிறது. இப்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் தொடங்கப்பட்ட கணிப்பொறி மையத்தால் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் ஆயிரக்கணக்கான மனுக்கள் மீது உடனடி துரித நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மாவட்டங்களில் பெறப்படும் அறிக்கைகள் தலைமைச் செயலக முதல்வர் தனிப்பிரிவில் அமைக்கப் பட்டுள்ள கணிப்பொறி மையத்தில் ஒருங்கிணைக்கப்படுகிறது. இதனால் அனைத்து மாவட்டங்களிலும் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உடனுக்குடன் அறிந்து எஞ்சிய மனுக்கள் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகியுள்ளது.

மாண்புமிகு முதல்வரின் தனிப் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் குறைதீர்க்கும் தகவல் அமைப்பில் ஓய்வூதியம், நிதியுதவி, வேலை வாய்ப்பு மற்றும் பணி விவரம் மற்றும் நில விவரங்கள், சமூக அநீதி புகார்கள், அடிப்படை வசதிகள் போன்ற 16 பல்வேறு தலைப்புகளில் மனுக்கள் பிரிக்கப் பட்டுப் பதிவு செய்யப்படுகிறது. மேலும், இப்பிரிவில் பின்வரும் முக்கிய ஆறு அம்சங்கள் கணிப் பொறியில் பதிவு செய்யப்படுகின்றன.

1. மனுவாரியான விவரங்கள்.
2. எத்தரப்பு மக்களிடமிருந்து பெறப் பட்டது என்ற விவரம்
3. குறைகள் பற்றிய விவரம்.
4. சம்பந்தப்பட்ட துறைகள் நடவடிக்கை எடுத்த விவரம்.
5. உடனடி நடவடிக்கைக்கான மனுக்கள் விவரம்.
6. மற்றும் பல்விதமான அறிக்கைகள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நேரில் கொடுக்கப்பட்ட 25,941 மனுக்களில் 20,196 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 5,713 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடத்திலும் நேரிலும் அலுவலகத்திலும் கொடுக்கப்பட்டு வரும் மனுக்களின் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்காக, ரூ.15 இலட்சம் செலவில் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் தனிப்பிரிவில் கணினி மையம் (Computer Center) ஏற்படுத்தியுள்ளார்கள்.





## செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்:

# 438 மனுதாரர்களுக்கு 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் முதல்வர் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 438 நபர்களைத் தேர்ந்தெடுத்து ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

சமூகநலத்துறையின் கீழ், புரட்சித் தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 7 பெண்களுக்கு ரூ.14 ஆயிரம் நிதியுதவியும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின் கீழ் 45 பெண்களுக்கு ரூ.2.250 இலட்சம் நிதியுதவியும், குடும்ப விபத்து நிவாரண நிதியுதவி, பார்வையற்றோர் திருமண நிதியுதவி, அரசு ஊழியர் குடும்பநல உதவி, ஆதிதிராவிடர் நலத்திட்டம், தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு உதவிகள் வழங்கும் திட்டங்களின் கீழ் 41 பேர்களுக்கு ரூ.3.990 இலட்சம் மதிப்பீட்டில் உதவிகள் வழங்கப்பட்டன.

முதியோர் உதவித்தொகை 2 பேர்களுக்கு மாதம் தலா ரூ.75 வீதமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 246 பேர்களுக்கு ரூ.17.176 இலட்சமும், மாவட்ட தொழில் மைய உதவிகள் மூலம் 16 பேர்களுக்கு ரூ.161.720 இலட்சம் மதிப்பீட்டில் நிதியுதவிகளும் வழங்கப் பட்டன.

காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி தொழிற் கடன் உதவி 3 பேர்களுக்கு ரூ.18.30 இலட்சமும், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய நிதி உதவி 7 பேர்களுக்கு ரூ.38 ஆயிரமும், பிற்படுத்தப்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்ட மனுதாரர்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் (1.3.93).





மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 24 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ரூ.3,75,000-க்கான (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) நிதியுதவியினை தலைமைச் செயலகத்தில் வழங்கினார் (1.3.93).

பட்டோர் நலத்துறை பேரறிஞர் அண்ணா நினைவு ஊக்கப் பரிசு 3 பேர்களுக்கு ரூ.6 ஆயிரமும் வழங்கப்பட்டது.

முன்னாள் படைவீரர் நலத்துறையின் கீழ் 4 பேருக்கு ரூ.10 ஆயிரமும், நகராட்சி நிர்வாகத்தின் கீழ் 3 பேருக்கு ரூ.0.191 இலட்சமும், கூட்டுறவுத் துறையில் வீடு கட்ட கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 15 பேர்களுக்கு ரூ.1,305 இலட்சமும், கைத்தறி நெசவாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 5 பேர்களுக்கு ரூ.74 ஆயிரமும் உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும், விவசாயத் துறையின் மூலம் 5 பேர்களுக்கு ரூ.0.145 இலட்சம் மதிப்பில் விவசாய தொழில் கருவிகளும், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 9 பேர்களுக்கு ரூ.0.082 இலட்சம் மதிப்பில் பொருட்களாகவும், சமூக நலத்துறையின் கீழ் 9 பேர்களுக்கு ரூ.0.078 இலட்சம் மதிப்பில் பொருட்களாகவும், பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் 10 பேர்களுக்கு ரூ.0.730 இலட்சம் மதிப்பில் பொருட்களாகவும், மீன் துறையின் கீழ் 4 பேர்களுக்கு ரூ.0.560 இலட்சம் மதிப்பில் பொருட்களாகவும் உதவிகள் வழங்கப்பட்டன. இதர உதவிகள் மூலம் 2 பேர்களுக்கு ரூ.67•925 இலட்சம் மதிப்பில் உதவிகளும் வழங்கப்பட்டன.

இது தவிர, பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 24 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக ரூ.3,75,000 (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) நிதியுதவியினையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தைச் சேர்ந்த வலசரவாக்கத்தில் வசிக்கும் ஓய்வு பெற்ற அரசு அலுவலர் திரு. சுப்பிரமணியம் என்பவர், தனது நான்கு பெண்களும் (வயது முறையே 42, 38, 36, 32) Spino Cerebellar degeneration என்னும் மூளைப் பாதிப்பால் உடல் உறுப்புகள் இயங்காத கொடிய வியாதிநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் முறையிட்டார். தனக்குச் சென்னையில் வசிக்க இடம் இல்லாமல் மிகவும் சிரமப் படுவதாகக் கூறி, தனக்குக் குடியிருக்க இடம் வழங்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், மனுதாரரது கோரிக்கையைக் கருணையுள்ளத்துடன் ஏற்று திரு. சுப்பிரமணியம் குடும்பத்தாருக்குச் சென்னை, ஜாபர் கான் பேட்டையில் ஆர்ட்டிலான் பிளாட் வகையைச் சேர்ந்த ரூ.62,000 மதிப்புள்ள குடியிருப்பு மனையை திரு. சுப்பிரமணியத்திடம் 1.3.93 அன்று இலவசமாக வழங்கினார்.







# சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை

- மா.லோ. தாமோதரம்

"கற்றாரைக் காண்பதுவும் நன்று; கற்றார் சொற் கேட்பதுவும் நன்று; கற்றோரோடு இணங்கி இருப்பதுவும் நன்று" என்பர் நற்றமிழ் வல்லார். இக்கூற்றுக்குப் பொருத்தமாகவும் பொருளாகவும் சேர்ந்து ஒரு பிள்ளை பிறந்தது. ஆம்! திக்கெல்லாம் தான் பிறந்த 'ஊரும் பேரும்' விளங்க, தமிழகக் 'கடற்கரையிலே' உலாவி, 'தமிழின்பம்' பெற்று, 'தமிழ் விருந்து' படைக்க ஒரு பிள்ளை பிறந்தது.

'கம்பரும் இளங்கோவும் சேர்ந்து ஒன்றானவரோ' என்னும்படி உரையாடியது துள்ளும் நகைச் சுவையால் உள்ளம் யாவையும் அள்ளிக் கொண்டது. அந்தப் பிள்ளைதான், பொருநை பாயும் திக்கெலாம் புகழும் திருநெல்வேலிச் சீமையிலுள்ள இராசவல்லிபுரத்திலே சைவவேளாளர் குலத்திலே பிறவிப் பெருமாள் பிள்ளை என்பவருக்கும் சொர்ணத்தம்மையாருக்கும் 1896-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இரண்டாம் நாள் பிறந்த சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆவார்.

எல்லோரையும் போலவே ரா.பி.சே. தம்மூர் திண்ணைப் பள்ளிக் கூடத்திலே எழுதக் கற்று, பாளையங்கோட்டை அர்ச் சேவியர் உயர்நிலைப் பள்ளியில் பாடம் படித்து, திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் கல்வி கற்றுத் தேறியவர்தான் என்றாலும், தனிப்பட்ட ஒழுக்கக் கட்டுப்பாடுகளினால் தனிவழி ரா.பி.சே. தனிச் சிறப்புப் பெற்றார் என்பதை இக்கால மாணவர்கள் ஆழ்ந்து நோக்கி அறிய வேண்டும்.

ரா.பி.சே. அவர்கள் மாணவர் பருவத்தில் தம்முடைய காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பார். கல்வி கற்கும்பொழுது மற்றவர்களோடு வெற்றுரையாடார். வீண் பொழுது போக்கார். தனக்குத் தமிழ்க் கல்வியைக் கற்றுத் தந்த தமிழாசிரியர்கள் சுப்பிரமணிய பிள்ளை, சிவராமப் பிள்ளை அவர்களிடமிருந்து செந்தமிழ் உணர்வையும் சேர்த்து வளர்த்துக் கொண்டார்.

அதனால் இளமையிலேயே கல்லூரி பேச்சுப் போட்டியில் முதற் பரிசும், ஆங்கில மொழியில் தேறி, பரிசினையும் பெற்று அறிஞர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப் பெற்றார்.

இவ்வருடைய சொல்வன்மையும் தமிழறிவும், ஆசிரியராக இருந்து கொண்டே சட்டக்கலை கற்றுத் தேறி, பிறகு வழக்கறிஞராகத் தொழில்புரியவும் துணைபுரிந்தன.

வழக்கறிஞராக எட்டு ஆண்டுகள் தொழில் புரிந்தார். அந்தக் காலத்தில் நேர்மையான முறையில் அத் தொழிலை மேற்கொண்டு தனக்கும் பதவிக்கும் சிறப்புச் சேர்த்தார்.

வழக்கறிஞராக இருந்த பொழுதே நெல்லை நகர சபையின் துணைத் தலைவராகவும், மாவட்டக் கல்விக் கழக உறுப்பினராகவும், சென்னைப் பல்கலைக் கழகச் செனட் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ரா.பி.சே. அவர்களுக்கு அகவை இருபத்து மூன்று நிரம்பியபொழுது திருமணம் நடைபெற்றது. வாழ்க்கைத் துணைவியாக அமைந்த சானகி அம்மையார் அன்னாரின் புகழுக்கும் துணைவியாகவே விளங்கினார். அதனால்தான், அவரின் சீரிய உள்ளம் ஈடு இணையற்ற அருந்தவம் ஆசிரியத் தொழிலையே நாடியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆறு ஆண்டுகள் விரிவுரையாளராக அரும்பணி ஆற்றினார்.

1935-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார். இருபத்தைந்து ஆண்டுகள் செவ்வனே இப்பணி செய்தார்.

புதுமை விருப்பும் பழமைப் பற்றும் ஒருங்கே கொண்டிருந்த பேராசிரியர் தம் பெயருக்கு ஏற்ப அவ்விரண்டையும் பாலமிட்டு இணைப்பதில் அனைவரும் மதிக்கத் தக்க வெற்றியே பெற்றார்.

இவருடைய மேடைப் பேச்சுக்கள் எதுகை மோனையமைந்து கேட்பதற்கு இனிமையாக இருந்தபடியால், இவருடைய இலக்கிய உரையைக் கேட்கத் தமிழ் நெஞ்சங்கள் தஞ்சமடைந்தன. அவருடைய பேச்சு அளந்து தெளிந்து குளிர்ந்த அருவிப் பேச்சு. அவர் எப்

பொருளை எடுத்து விளக்கினாலும் அது கேட்போரின் உள்ளத்தில் ஆழமாகப் பதியும். நினைவில் சொல்லோவியமாகத் திகழும்.

தமிழே இன்பம், இன்பமே தமிழ். பேசுவதைப் போலவே இனி மையாகவும் எழுத வல்லவர்.

இக்கால மாணவர்களே, நீங்கள் மேடைப் பேச்சில் வல்லுநராக வேண்டுமா? ரா.பி.சே. தமிழ் நூல் களைப் படியுங்கள். கட்டுரைகள் எப்படி அமைய வேண்டும் என்று தெரிய வேண்டுமா? தேடுங்கள் ரா.பி.சே.-வின் தமிழ் நூல்களை! இவர் எழுதிய இருபத்தைந்து தமிழ் நூல்களும் உம் வெற்றிக்கு வழி காட்டும்.

'தமிழின்பம்' சாகித்தியக் கழகப் பரிசையும் 'ஊரும் பேரும்' தமிழக அரசின் பரிசையும் பெற்றுள்ளன. இதில் 'ஊரும் பேரும்' என்கிற நூலும், மற்றும் 'சொற்களும், அவற்றின் உட் கருத்தும்', 'செந் தமிழும் கொடுந் தமிழும்' என்கிற நூல்களும் ஆராய்ச்சி நலம் மிக்கவை.

இவர் எம்மதமும் சம்மதமாகக் கொண்ட பெருந்தகையாளர். இவரு டைய நூல்களில் கிறிஸ்துவப் பின்னணி கொண்ட, 'கால்டுவெல் ஐயர் சரிதம்', 'கிறிஸ்துவத் தமிழ்த் தொண்டர்கள்' என்னும் இரண்டு வரலாற்று நூல்களும் அடங்கும்.

எழுத்தறிவிலும் சொல்லிலும் எப்படி தமிழ் இன்பத்தை வாரி வாரி வழங்கினாரோ அப்படியே செயலிலும் இவர் 'பொருளை' வாரி வாரி வழங்கி தமிழ்ப் பயிரை வளர்த்தார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், சென்னைப் பல் கலைக் கழகத்திற்கும் ரூ.25,000 வழங்கித் தம் அன்னையார் சொர் ணம்மாள் பெயரால் இலக்கியச் சொற்பொழிவு அறக் கட்டளைகள் நிறுவினார். தாம் வாழ்ந்த ஊரில் ஒரு பிரசவ மருத்துவமனையையும் தம் தாயாரின் பெயரில் நிறுவினார்.

நாம், நன்கு பேசவும் ஆழமாக எழுதவும் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் நூல்களை - தமிழ் நூல்களைப் பயில வேண்டும். அதிலும் 'செந் தமிழுக்குச் 'சேதுப்பிள்ளை' என்கிற பட்டத்தை ரா.பி.சே.-க்குத் தந்த தவத்திரு சுத்தானந்த பாரதியார் முன்னுரை வழங்கிய 'தமிழின்பம்' நூல்களையும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் முகவுரை அருளிய 'தமிழகம் - ஊரும் பேரும்' என்கிற முதல் தமிழ் ஊர்- பேர்- ஆய்வு நூலையும் நாம் கண்டிப் பாகத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டும்.

கட்டுரையும் ஒரு கலையே - கவிதை போன்றதே என்பதைத் தம் 'யாழும் குழலும்', 'இடியும் மின் னலும்' போன்ற பேச்சுக் கட்டுரை யாலும், எழுத்துக் கட்டுரையாலும் காண்பித்தவர் ரா.பி.சே.

ரா.பி.சே.-யின் ஆய்வுத் திறம் புதிய தமிழகத்தின் ஊர்ப் பேர் களெல்லாம் சீர்பெற உதவியது.

''தியாகத்தை நினைவூட்ட வேண் டிய தியாகராய நகரை 'தியாகை' என்று தமிழ் மரபுப்படிச் சுருக்காமல் தி.நகர், தி.நகர் என்று தீ நினைவு வர அழைக்கலாமோ'' என்பார் அவர்.

சென்னைப் பல்கலைக் கழகம் அதன் நூற்றாண்டு விழாவின் போது, ரா.பி.சே.-க்கு டி.லிட். பட்டம் வழங்கிற்று. அன்னாரின் பெயரில் ஆண்டுதோறும் ஆராய்ச்சி சொற்பொழிவு நிகழ அறக்கட்டளை நிறுவப் பெற்றது.

தமிழ் கொழிக்கும் பொருநைக் கரையில் பிறந்து, தமிழ் பொங்கும் பொதிகைத் தென்றலில் வளர்ந்து தளராமல் தமிழ்ப்பணி புரிந்த சொல்லின் செல்வர், 1961 ஏப்ரல் 25-இல் இயற்கையெய்தினார்.

அவர் மறைந்தாலும், அவரது இலக்கியப் படைப்புகள் இன்றும் நின்று நிலவி வருகின்றன. அவரது திருப்பெயரை நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றன.

## வயதானவர்கள் நீண்ட காலம் வாழ முடியும்!

**அ**திகம் வயதாகிப் போனால், சாவு நெருங்குகிறது என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால், வயதுபெருகப் பெருக இறப்பு விகிதம் குறைகிறது என்னும் வியப்புக் குரிய உண்மையை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். மனிதனின் ஆயுளுக்கு ஏற்கெனவே வரையறுக்கப்பட்ட வரம்பு என்று ஏதும் இல்லை என்றும் இவர்கள் கூறி உள்ளனர்.

மத்தியதரைக் கடல் பகுதியைச் சேர்ந்த ஈக்கள் வகையை வைத்து இவர்கள் இந்த ஆய்வை நடத்தினர். ஈக்களுக்கு வயது அதிகரிக்க அதிகரிக்க அவற்றின் இறப்பு விகிதம் குறைகிறது என்று இவர்கள் கண்டுபிடித்தனர். மனிதர்களுக்கும் இது பொருந்தும் என்று இவர்கள் கூறியுள்ளனர்.

கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பூச்சி இயல் நிபுணர் ஜேம்ஸ் கேரி என்பவர் 10 இலட்சம் ஈக்களை வைத்து இந்த ஆய்வை நடத்தினார். வயதான ஈக்களின் இறப்பு விகிதம், இதர ஈக்களைவிடக் குறை வாகவே உள்ளது என்று இவர் கண்டறிந்தார்.

'மனிதனின் ஆயுள் இவ்வளவுதான் என்று ஏற் கெனவே வரையறுக்கப்பட்டுள்ளதாகக் கருதுவது தவறு என்பதை இந்த ஆய்வுகள் நிரூபிக்கின்றன. நீண்ட ஆயுள் என்பது மரபு ரீதியாக வருவது என்றும், பெற்றோர் அதிக நாள் உயிர் வாழ்ந்தால், பிள்ளைகளும் அதிக நாள் வாழ்வார்கள் என்று கருதுவதும் தவறான கற்பனையே என்றும் இதன் மூலம் அறிகிறோம்' என்று டியூக் பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த மக்கள் தொகை ஆய்வியல் வல்லுநர் ஜேம்ஸ் வாபெல் என்பவர் கூறினார்.

'85 வயது வரையில் ஒருவர் தாக்குப் பிடித்து வாழ்ந்து விட்டார் என்றால், அதற்கு மேல் தாக்குப் பிடித்து வாழ்வது ஒன்றும் பெரிய காரியமல்ல' என்று அவர் கூறினார்.



# ஆதித்திய கரிகாலன் காலத்திய அரிய நடுகற்கள் - கண்டுபிடிப்பு





தமிழ்நாடு அரசுத் தொல்பொருளாய்வுத்துறை அண்மையில் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் வெங்கட்டூரில் அரிய நடுகற்கள் நான்கினைக் கண்டுபிடித்துள்ளது. அறிவொளி இயக்க ஆசிரியர் திரு தேவராஜுலு அவர்கள் அளித்த தகவலின்படி வெங்கட்டூரிலுள்ள திரு கே துரைசாமி என்பாரின் நிலத்திலுள்ள இக்கல்வெட்டுகளைத் திரு அர்ச்சுனன், கல்வெட்டாய்வாளர், திரு சீனிவாசன், இளநிலைக் கல்வெட்டாய்வாளர் மற்றும் திரு முருகேசன் கல்வெட்டுச் சிற்றெழுத்தர், திரு திருஞானம், நிழற்படக்காரர் ஆகியோர் உடன் படியெடுத்து வரும்படி இத்துறையின் இயக்குநர், நடன. காசிநாதன் அனுப்பி வைத்ததில் மேற்காணும் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

நான்கு நடுகற்களில் இரண்டு நடுகற்கள் ஏழடி உயரமும் மூன்றரை அடி அகலமும் கொண்டதாக உள்ளன. மற்ற இரண்டும் அளவில் சற்றுச் சிறியதாக உள்ளன. பெரிய நடுகற்களில் உள்ள வீரர்கள் இடது கரங்களில் வில்லேந்தியும், வலது கரங்களில் கேடயம் கொண்டும் காட்சி தருகின்றனர். அவர்கள் உடலை அம்புகள் துளைத்துள்ளன. விளக்கு, முக்காலியின் மேல் வைக்கப்பட்ட மூக்குடன் கூடிய குடுவை ஆகியவை அவர்களின் வலது காலடியில் காணப்படுகின்றது. அருகில் பசுக் கூட்டங்களும் காணப்படுகின்றன. மற்ற இரண்டு சிறிய நடுகற்களில் வீரர் தம் உருவங்கள் இடுப்பு வரையே உள்ளன. மற்றப் பகுதிகளில் சிதைந்து காணப்படுகின்றன. சிதையாத பகுதியில் உள்ளவை மற்ற இருகற்களில் வீரர்களின் உடை அலங்காரத்தை ஒத்துள்ளன.

நான்கு நடுகற்களுள், ஆநிரை காக்கும் பூசலில் இறந்துபட்ட தந்தை. மகன் ஆகியோருக்காக எடுக்கப்பட்டவையாக இரண்டு நடுகற்கள் காணப்படுகின்றன. தந்தையின் பெயர் 'விக்கிரமாதித்தனாகிய தின்ம செட்டியின் மகன் சாத்தையன்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பூசல் வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரியின் மூன்றாம் ஆட்சியாண்டில் நிகழ்ந்துள்ளது. இம்மன்னன் முதலாம் இராஜராஜ சோழனின் அண்ணன் ஆவான். இவனுடைய இதே ஆட்சியாண்டில் சாத்தையனின் மகன் திருவூறல் என்பான் இறந்துபட்டதை இன்னொரு நடுகல் தெரிவிக்கிறது. எனவே, சோழனூர் என்ற தன் ஊரில் ஆநிரை காக்கும் போரில் தந்தையுடன் மகனும் இறந்துபட்டிருத்தல் வேண்டும். மற்ற இரண்டு சிறிய நடுகற்களும் தந்தை, மகனோடு உடன் போரிட்டு இறந்த வீரர்களுக்கு எடுக்கப்பட்டவை. தந்தையோடு உயிர்நீத்த வீரன் பெரியான் முத்தரையன் காரி என்றும், மகனோடு இறந்துபட்டவன் முத்தரையன் தும்பன் என்றும் கூறப்பட்டுள்ளன.

வீரன், ''கொட்டுப் பூசல்போய் தொறுமீட்டுபட்டான்'' என்று கல்வெட்டு குறிக்கிறது. இக்கொட்டுப் பூசலைக் கரந்தைப் போரோடு தொடர்புடையதாகப் புறப்பொருள் வெண்பாமாலை குறிக்கிறது. எனவே, பண்டைய இலக்கிய இலக்கண மரபுகளுக்கு இந்நடுகற்கள் சான்றாக உள்ளன என்பதை நாம் எண்ணி மகிழலாம். ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களும் அவர்தம் பணியாளர்களும் ஆநிரை காக்கும் போரில் இறந்துபட்டுள்ளனர் என்பதும், அவர்களுக்காக ஊர் மக்களே நினைவுச் சின்னங்களை எடுத்துள்ளனர் என்பதும் தெளிவு.

ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களின் நினைவாக எடுக்கப்பட்ட நடுகற்கள் ஒரே இடத்தில் காணப்படுவது மற்றுமொரு சிறப்பாகும். கல்வெட்டில் குறிக்கப்படும் மன்னனாகிய ஆதித்த கரிகாலன் குறுகிய காலமே வாழ்ந்திருந்தாலும் தமிழ்நாட்டின் வட எல்லை வரை அவனுடைய வலிமைமிகு ஆட்சி பரந்திருந்தது என்பதற்கு இக்கல்வெட்டுகள் அருமையான சான்றாக உள்ளன.

**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits**
**(Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE






# காது மூக்கு தொண்டை மருத்துவம்



ENT

டாக்டர் கே.கே. இராமலிங்கம் பதில்கள்

'தமிழரசு' இதழில் நாம் தொடங்கும் புதிய மருத்துவ வினா- விடைப் பகுதி இது! ஒவ்வொரு நோய் பற்றியும் அந்தந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் தொடர்ந்து பதிலளிப்பார்கள்; வாசகர்கள் வினாத் தொடுக்கலாம்.

இதோ, அந்த வகையில் காது-மூக்கு-தொண்டை மருத்துவம் இடம் பெறுகிறது. நம் வாசகர்களின் வினாக்களுக்கு அந்தத் துறையில் வல்லவரான டாக்டர் கே.கே. இராமலிங்கம் அவர்கள் அளித்த பதில்களை இந்த இதழில் நன்றியோடு வெளியிட்டுள்ளோம், படித்துப் பயன் பெறுங்கள்:

யு. ஜெயராமன்
அரவக்குறிச்சி

● என் காதின் உள்ளே ஓட்டை இருந்தது; வலி மிகுந்த காரணத்தால் அதற்காகப் பத்தாண்டுகளுக்கு முன்னால் தகுந்த டாக்டரிடம் காட்டி மருந்து மாத்திரை சாப்பிட்டேன் - குணமாகிவிட்டது; இப்போது மறுபடியும் வலிக்கின்றது; என்ன செய்யலாம் டாக்டர்?

"பத்தாண்டுகளுக்கு முன்னால், காதினுள் இருந்த ஓட்டையால் ஏற்பட்ட துன்பத்திற்காக டாக்டரிடம் காட்டி குணம் பெற்றதாகச் சொல்லுகிறீர்கள்; இத்தனையாண்டுக் காலத்தில் உங்கள் உடலுறுப்புகளிலெல்லாம் வளர்ச்சி மாறுபாடுகள் அதிகம் ஏற்பட்டிருக்குமே? ஆகையால், மீண்டும் அத்தகைய காது வலி ஏன் வருகிறது என்று மறுபடியும் பரிசோதித்துப் பார்த்தால்தான் இதற்குச் சரியான பதில் உங்களுக்குக் கிடைக்கும்."

ஆ. திருப்பதி
கரம்பக்குடி

● அடிக்கடி எனக்குக் காது அடைத்துக் கொள்கிறது; உள்புறம் புண்ணாகிவிடுகிறது; வெயில் காலத்தில்தான் பெரும்பாலும் இப்படி ஆகிவிடுகிறது; இதற்கு என்ன செய்வது?

"உங்கள் செவித்தொல்லைக்கு அழற்சியே (infection) காரணமாக இருக்கக் கூடும் என நினைக்கிறேன். நீங்கள் அதைச் சரியான காது மருத்துவ நிபுணரிடம் காட்டி, அவர்கள் ஆலோசனைப்படி தக்க சிகிச்சை பெற்றுக்கொள்வது நல்லது."

ஆர். ஜெயசாலி
கோபி

● எனது தொண்டையில் நான்கைந்து புண்கள் இருக்கிறது; ஏன் அப்படி ஏற்படுகிறது, என்ன செய்தால் சரியாகும் என்று தெரிவிக்கவும்?





“மருவுபோல் அது சாதாரணப் புண்ணா - அல்லது வேறு ஏதாவது அபாயகரமான புண்ணா என்பதைப் பார்க்காமல் அதற்கு என்ன செய்வது என்று எப்படிப் பதில் சொல்வது?”

*எஸ். மாரியப்பன்*
*புதுக்கோட்டை*

**• என் வயது 40, அடிக்கடி தொண்டையில் ‘இன்பெக்ஷன்’, ‘டான்சில்’ ஏற்பட்டுத் தொல்லை தருகிறது; அறுவைச் சிகிச்சையின்றிக் குணப்படுத்த முடியுமா?**

“பொதுவாக ஒருவருக்கு டான்சில், (Tonsil) ஏற்பட வயது வித்தியாசமெல்லாம் கிடையாது. அழற்சியின் அளவைப் பொறுத்தே அதன் தன்மையும், விளைவுகளும் இருக்கும். டான்சில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்று சரிவர அறிந்த பின்பே - மருந்து மூலம் குணப்படுத்தி விடலாமா அல்லது அறுவைச் சிகிச்சை செய்துதான் தீரவேண்டுமா என்று நாம் தீர்மானிக்கமுடியும்.”

*இரா. இராகவன்*
*திருவரங்கம்*

**• எனக்கு முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து தொண்டையில் ஒருவித அரிப்பும், கரகரப்பும் அதனால் இருமலும், தோள்வலியுமாக இருக்கிறது; தாங்கள் தகுந்த மருந்து ஏதாவது தெரிவிக்கவும்?**

“முப்பதாண்டுக் காலமாக இப்படி இருப்பதாகச் சொல்லுகிறீர்கள்; ஆகையால் அதை ஆபத்தான ஒன்றாக எண்ண வேண்டியது இல்லை. தொண்டையில் ஏற்படும் அரிப்பிற்கும் கரகரப்பிற்கும் ஒவ்வாமை (Allergy) அல்லது அழற்சி (Infection) காரணமாக இருக்கக் கூடும். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை, வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு உப்பைப் போட்டு வாய்க்கொப்பளித்துப் பாருங்கள்; குணம் தெரியும். மற்றபடி தொண்டைக்கும் தோள்வலிக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை.”

*க ஜெயகாந்தம்*
*சிறுபுலியூர்*

**• மூக்கின் மேல்பகுதியில் தட்டினாலே உள்ளே கலகலவென சளி இருப்பது தெரிகிறது; அப்போது கனத்த தலைவலியும் ஏற்படுகிறது; இதற்கு என்ன காரணம் - எப்படிப் போக்குவது?**

“நீங்கள் குறிப்பிடும் அறிகுறிகளைக் கொண்டு உங்களுக்கு ‘சைனஸ்’ (Sinus) தொல்லை இருக்கும் போல் தெரிகிறது. ‘எக்ஸ்-ரே’ பிடித்துப் பார்த்தால்தான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்; ஒரு சிறந்த காது மருத்துவ நிபுணரிடம் பரிசோதித்துக் கொள்ளுங்கள், நிச்சயம் குணம்பெறலாம்.”

*செ ஜோதி*
*எஸ்.வி. பாளையம்*

**• குளிக்கும்போது ஒருமுறை காதில் நீர் புகுந்துவிட்டது; அதே நாளில் கடைவாய்ப் பல் ஒன்று பிடுங்கிவிட்டேன். அதிலிருந்து தலைமுழுகினால் காதில் ஒருவித வலியும், விடாமல் ‘சொய்ங்’ என்ற சப்தமும் ஏற்படுகிறது. இதற்கு என்ன செய்வது டாக்டர்?**

“இனிமேலாவது, குளிக்கும்போது காதில் நீர் புகுந்து விடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். காதுக்கும் பல்லுக்கும் கூட ஓரளவிற்குத் தொடர்பு உண்டு தான். ஆகையால் நீங்கள் அந்த இரண்டு துறை மருத்துவ நிபுணர்களையும் நேரில் பார்த்துச் சிகிச்சை பெறுவது நல்லது.”

*ஜி. துரைராஜ்*
*மறைமலைநகர்*

**• என் மனைவிக்கு சைனஸ் நோய்; மூக்கில் நீர் வடிகிறது. அடிக்கடி மூக்கு அடைத்துக் கொள்ளுவதும், தும்மலுமாக இருக்கிறது. முகத்தில் இலேசான வீக்கமும் உள்ளது.**



**இவைகளால் மூச்சு விடவும், சில நேரங்களில் சிரமப்படுகிறாள். இதற்கு என்ன செய்வது?**

“உங்களுடைய மனைவிக்கு ‘சைனஸ்’ என்கிறீர்கள்; அது அலர்ஜியாகவும் இருக்கலாம். அதற்கு இப்போது புதிதாக Functional endoscopic sinus operation என்கிற அறுவைச் சிகிச்சை முறையெல்லாம் வந்திருக்கிறது; இந்த வகையில் முயலுங்கள், உங்கள் மனைவி குணம் பெற முடியும்.”

*டி. மாலினி*
*சீர்காழி*

**• என் நாக்கில் அடிக்கடி புண் ஏற்படுகிறது; இது ஏன் - என்ன மருந்து சாப்பிடலாம்?**

“பொதுவாக - நாக்கில் புண் வருவதென்பது உடலில் வைட்டமின் ‘பி’ சத்துக் குறைவாலும் வரலாம்; வயிற்றில் பூச்சி இருக்குமானால், அதனாலும் வரலாம்; தொடர்ந்தாற்போலிருக்கும் மனக்கவலை - அடிக்கடி உண்டாகும் பதட்டம் ஆகியவைகளாலும் வரலாம். கொஞ்ச நாள் B-Complex சாப்பிட்டுப் பாருங்கள்; அதில் குணமாகாவிட்டால், அருகில் உள்ள டாக்டரிடம் காட்டிப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.”

*சி. சேகர்*
*செங்கற்பட்டு*

**• எனக்கு ஹிரண்யா; ஹைட்ரல்; காதும் சரியாகக் கேட்பதில்லை; இதற்கும் அவைகளுக்கும் தொடர்பு உண்டா? அறுவைச் சிகிச்சை மூலம் இவைகளையெல்லாம் குணப்படுத்திவிட முடியுமா? காதில் ஆபரேஷன் செய்தால் மற்றவைகளால் உடலில் ஏதாவது பிரச்சினைகள் வருமா?**

“ஹிரண்யாவுக்கும், ஹைடிரசலுக்கும், காது கேளாமைக்கும் ஒன்றுக்கொன்று எவ்விதச் சம்பந்தமும் கிடையாது. மூன்றையுமே வெவ்வேறு அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்திவிட முடியும். இப்போது எதனால் தொல்லை அதிகமோ, அதற்கு முதலில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளுங்கள்; மற்றவைகளுக்கான அறுவைச் சிகிச்சைகளை சிறிது காலம் கழித்துச் செய்து கொள்ளலாம்.

*க. சுப்பிரமணியன்*
*சென்னை-21*

**• வெளிக்காற்று பட்டாலே எனது மூக்கிலிருந்து சளியும், தும்மலுமாக வருகிறது, சளித்தொல்லை நீங்க என்ன வழி டாக்டர்?**

“ஒருவித அலர்ஜியின் காரணமாகவே இவ்வாறு ஏற்படும்; முடிந்தவரையில் வெளிக்காற்று அல்லது தூசு பறக்கும் பகுதி ஆகியவற்றில் இருப்பதை நீங்கள் தவிர்ப்பது நல்லது; வேறு வழியில்லை.”

**—இன்னும் வரும்...**

*பி. தங்கவேல்*
*திருச்சிராப்பள்ளி*

**• காது, மூக்கு, தொண்டை - என்று மூன்றையும் இணைத்துச் சொல்லப்படுகிறதே அது ஏன் டாக்டர்?**

“மிகவும் நல்ல கேள்வி இது. மூக்கிலும், தொண்டையிலும் ஏற்படும் அழற்சியானது - தொண்டையையும் காதையும் இணைக்கும் Eaustachian Tube வழியாகப் பரவி, காதினை மிகவும் பாதிக்கும்.

“ஆகையால், காது தொடர்பான நோய்களுக்குச் சிகிச்சை மேற்கொள்ளும் முன்பாக ஒரு மருத்துவர் மூக்கின் நிலைமையையும், தொண்டையின் நிலைமையையும் மிகக் கவனமாகச் சரிபார்த்துக் கொள்ளும்படி இருக்கும். ஒருவருக்குக் காது கேட்டால்தான் தொண்டையால் பேச முடியும். காது கேட்காத குழந்தை, வாய் பேசாத குழந்தையாகத்தான் இருக்கும். குழந்தையானது முதலில் நாம் பேசுவதை உன்னிப்பாகக் கவனித்துக் கேட்கும், பிறகுதான் பதில் சொல்ல எத்தனிக்கும். ஆகவே, காது கேளாத குழந்தைக்குப் பேச இயலாத நிலைமையே அமைந்துவிடுகிறது.

“மூக்கிற்கும், தொண்டைக்கும்கூட தொடர்பு உண்டு. ஒருவருக்கு, மூக்கில் விடுகிற ஏதேனும் மருந்தின் குணம், தொண்டையிலும் தெரியும். மூக்கு சரியாக இருந்தால்தான், தொண்டையிலிருந்து பிறக்கும் ஒலி தெளிவாக இருக்கும்; மூக்கு அடைத்துக் கொள்ளும் ஒருவரின் பேச்சும் மந்தமாக இருக்கும்.

“இந்நேரம் உங்களுக்குப் புரிந்திருக்குமே? இவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருப்பதால்தான், காது- மூக்கு-தொண்டை ஆகிய மூன்றும் இணைத்துச் சொல்லப்படுகிறது.”

## செவ்வாய்க் கிரகத்துக்கு ‘ரோபாட்கள்’ தயார்!

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்கென உருவாக்கப்பட்டுள்ள ‘ரோபாட்கள்’ பலவற்றை அமெரிக்க, ரஷிய விஞ்ஞானிகள் அண்மையில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் இயக்கிக் காட்டினர்.

அடுத்த பத்தாண்டுகளில், செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதனை அனுப்பி வைப்பதற்கு முன்னோடியாக, அங்கே ரோபாட்களை அனுப்பி வைப்பதென அமெரிக்காவும் ரஷியாவும் திட்டமிட்டுள்ளன. இதற்கென பல ரோபாட்களை அவை தயாரித்து வருகின்றன. இவற்றுள் 16 ரோபாட்கள் இந்தக் கண்காட்சியில் இயக்கிக் காட்டப்பட்டன.

**—அமெரிக்கத் தகவல் நிலையம்**

• ஏலகிரி மலை இன்று சுற்றுலா, வட்டாரத்தில் 'ஏழைகளின் ஊட்டி' என்று அழைக்கப்படுகிறது. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் அமைந்துள்ள இம்மலையின் உயரம் கடல் மட்டத்திலிருந்து 3,000 அடியாகும்.

பசுமை போர்த்திய இம்மலையின் மேல் 14 கிராமங்கள் உள்ளன. இதில் உள்ள மொத்த மக்கள் தொகையின் எண்ணிக்கை 5200. இவர்களில் 4,900 பேர் பழங்குடியினர். இம்மலையில் வாழும் பழங்குடியினருக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்க 'லாம்ப்ஸ்' என்ற பெரிய அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது.

இச்சங்கம் நான்கு நியாய விலைக் கடைகளை நடத்தி வருகிறது. இதன்மூலம் 1,200 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுகின்றனர். தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் இத்தகைய 18 சங்கங்களில் இதுவும் ஒன்றாகும். வேளாண் விளை பொருட்கள் மற்றும் வனப் பொருட்களைப் பழங்குடியினரிடமிருந்து இச்சங்கம் கொள்முதல் செய்கிறது.

இந்தியாவில் முதன் முதலாக 1990-ஆம் ஆண்டு, மேகாலயா ஜெந்தியா மலைகளில் வெள்ளைப் புலி தென்பட்டதாக ஆதாரப்பூர்வமான குறிப்புகள் தெரிவிக்கின்றன. பண்டைய மன்னராட்சி பகுதியான 'ரேவா'விலும் வெள்ளைப்புலிகள் உலவியதாகத் தெரிகிறது. கடைசியாக, காட்டில் வெள்ளைப் புலி வேட்டையாடப்பட்டது 1958-இல் ஹஸாரிபாக் வனப்பகுதியில்.

சாதாரணமான புலிகளின் மரபுக் கூற்றில் ஏற்படும் சில மாற்றங்களினால் தான் வெள்ளைப்புலிகள் பிறக்கின்றன. 1980-இல் ஒரிஸாவிலுள்ள நந்தன்கானம் உயிரியல் பூங்காவில் வெள்ளைப்புலிக் குட்டிகள் பிறந்ததே இதற்குச் சாட்சி.

வெள்ளைப்புலி ஒவ்வொன்றும் வெளிநாடுகளில் .8,000 அமெரிக்கன் டாலர் வரை விலை போகிறது.



• கூட்டுறவே நாட்டுயர்வு. இந்தியாவில் பல்வேறு வகையான கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவு இயக்கமாக மாறி பல பணிகளில் ஈடுபட்டுள்ளன. இன்று உலகில் 50 கோடி உறுப்பினர்களைக் கொண்டு 7.5 இலட்சம் கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இந்தியாவில் 16 கோடி உறுப்பினர்களைக் கொண்ட 3.53 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இந்த நிறுவனங்களில் உள்ள நடைமுறை மூலதனம் ரூ.71,000 கோடியாகும்.

தமிழ்நாட்டில் முதலாவது கூட்டுறவுச் சங்கம் எம்.ஜி.ஆர். மாவட்டம் திருவள்ளூர் வட்டத்தில் உள்ள திரூர் என்ற இடத்தில் 1904-இல் தொடங்கப்பட்டது. இன்று தமிழகத்தில் 49 வகையான 30,000 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. வேளாண் தொழில் வளர்ச்சிக்கென 4,655 தொடக்க நிலைக் கூட்டுறவு வங்கிகள் 181 நிலவள வங்கிகள் மூலமாக 1991-92-ஆம் ஆண்டில் ரூ.323 கோடியை குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலக் கடனாக அளித்துள்ளன. நடப்பாண்டில் இக்கடனுதவி 335 கோடியாக இருக்கும். தமிழ்நாட்டில் உள்ள 22,000 நியாய விலைக் கடைகளில் 21,000 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்துகின்றன.

• தொலைபேசி இலக்கம் அறிவதற்காக '197'க்குச் செய்யப்படும் தொலைபேசி அழைப்புகள் இலவச அழைப்புகளாகக் கருதப்படும் என்று தொலைத் தொடர்புத் துறை அறிவித்துள்ளது.

தொலைபேசி இணைப்பு வேண்டி ஓ.ஒய்.டி. பிரிவின் கீழ் பதிவு செய்துள்ளோருக்கு ஆறு மாதங்களுக்குள்ளாகவும், பொதுப்பிரிவின்கீழ் பதிவு செய்துள்ளோருக்கு இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவும் 1993 மார்ச்சுக்குள் புதிய இணைப்புகள் வழங்க தொலைத் தொடர்புத் துறை திட்டம் தீட்டியுள்ளது.

1993 மார்ச்சிற்குப் பிறகு, அவ்வாறு இணைப்பு வழங்கத் தாமதமாகும் பட்சத்தில், டெபாஸிட் தொகைக்கு வங்கி வட்டி விகிதத்தை விட மூன்று சதவிகித வட்டி கூடுதலாக வழங்கப்படும். இணைப்பு வழங்கப்படும் வரை இது அளிக்கப்படும்.

1995-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மொத்தமுள்ள 2,32,054 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுவிடும். இவ்வாண்டு மார்ச் வரை 65,172 பஞ்சாயத்துகளுக்கு இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1992-93 நிதி ஆண்டிற்குள் 36,000 பஞ்சாயத்துகளுக்கு இவ்வசதி கிடைத்துவிடும்.





## அரும்பொருட்களைப் பாதுகாக்க அரிய பயிற்சி

சென்னையிலுள்ள அரசினர் அருங்காட்சியகமே இந்தியாவிலுள்ள அருங்காட்சியகங்களில் மிகப் பெரியதும், மிகப் பழமையானதுமாகும். விலை மதிப்பற்ற தொல்பொருட்களையும், கலைச் செல்வங்களையும் பாதுகாப்பதற்காக, ஆசியாவிலேயே முதன் முதலாக 1930-ஆம் ஆண்டில் ஒரு வேதியல் பாதுகாப்பு ஆய்வகத்தைத் (Chemical Conservation Laboratory) தொடங்கிய பெருமையும் சென்னை அரசினர் அருங்காட்சியகத்திற்கே உரியதாகும்.

இந்தியாவில் 200 பெரிய அருங்காட்சியகங்கள் உள்ளன. ஆனால், அவைகளில் ஒரு சில அருங்காட்சியகங்களே புராதனப் பொருட்களைப் பாதுகாக்கும் ஆய்வகத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ளன. அந்த ஆய்வகங்களிலும் அருங்காட்சியகப் பொருட்களைப் பாதுகாப்பதில் பயிற்சி பெற்றுள்ளவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். எனவே, அருங்காட்சியகங்கள், நூலகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு உதவிடும் எண்ணத்துடன் 1975-ஆம் ஆண்டு முதன் முதலாக இவ்வருங்காட்சியகத்தில் வேதியல் பாதுகாப்பு மறுபயிற்சி (Refresher Course in Chemical Conservation) தொடங்கப்பட்டது. இதனை இவ்வருங்காட்சியகத்தில் தொடங்க அப்போதைய காப்பாட்சியர் திரு நீலம் ஹரிநாராயணா உறுதுணையாக இருந்தார். நமது நாட்டின் தொல்பொருட்களையும் கலைப் பொருட்களையும் பேணிப் பாதுகாக்க இப்பயிற்சி அடிப்படை அறிவை அளிக்கிறது. இவ்வருங்காட்சியக வேதியல் பாதுகாப்புக் கூடத்தில் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

இந்தப் பயிற்சி ஜூன் 1 முதல் 30 வரை ஒரு மாதத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் அருங்காட்சியகம், கைவினைப் பொருள் உற்பத்தி, தொல்பொருள் ஆய்வு, அறநிலையங்கள், நூலகங்கள் ஆகிய துறைகளில் பணிபுரிவோரும் மற்றும் நுண் கலை, வரலாறு, மானிடவியல், தொல்பொருள், இந்திய தத்துவம், நூலகம் ஆகியவற்றைப் பயிலும் மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி பெற எட்டு நபர்கள் நமது நாட்டின் பல பாகங்களில் இருந்து சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாத இறுதியில் நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் இப்பயிற்சி குறித்துச் சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது. இப்பயிற்சியில் சேர விரும்புவோர் இதற்கான மனுவைப் பூர்த்தி செய்து ஏப்ரல் - 15-க்குள் அருங்காட்சியக

சு. தங்கவேலு
உதவி இயக்குநர்
அரசு அருங்காட்சியகம், சென்னை.

இயக்குநருக்கு அனுப்பி வைக்கவேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தைப் பொருத்து உரியவர்கள் இந்தப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நிறுவனங்கள் மற்றும் துறையின் மூலமாக அனுப்பப்படும் மனுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் சேரக் கட்டணம் இல்லையென்றாலும், சில வேதியல் பொருட்களை வாங்க ஆகும் செலவை மாணவர்கள் ஏற்க வேண்டும்.

இப்பயிற்சியில் அரும்பொருட்களைப் பாதுகாக்க அமல்படுத்த எடுக்கப்படும் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் அவற்றை வகைப்படுத்துதல், அரும்பொருட்களுக்கு ஏற்படும் அழிவு, உலோகத்தின் பாதுகாப்பு, வண்ண ஓவியங்களின் பாதுகாப்பு, ஆவணங்களின் பாதுகாப்பு, துணிமணிகளைப் பாதுகாத்தல் முதலியவை இடம் பெறுகின்றன. இப்பயிற்சியில் போதனை செய்முறை ஆகிய இரண்டும் அடங்கியுள்ளன.

போதனை அருங்காட்சியக அலுவலர்களால் நிகழ்த்தப்படுவதுடன், இத்துறையில் பாண்டியத்தியம் உடைய நிபுணர்கள் அழைக்கப்பட்டு போதனை நிகழ்த்தப்படுகிறது. இந்தப் பயிற்சியின்போது மாணவர்கள் மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தோல் அருங்காட்சியகத்திற்கும்; கோட்டை அருங்காட்சியகம் மற்றும் உதவி கண்காணிப்புத் தொல்பொருள் வேதியர் அலுவலகம்; பிரம்ம ஞான சபை மற்றும் அதன் நூலகம், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ஆகிய இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அவ்வமயம் ஒவ்வொரு நிறுவனத்தாலும் காட்சியுரை நிகழ்த்தப்படுகிறது. மேலும், மாணவர்களை மகாபலிபுரம், காஞ்சிபுரம் அழைத்துச் செல்வதால் நம்முடைய பண்டைய சின்னங்களின் கலையையும் கலாச்சாரத்தையும் அறியச் செய்வதுடன் அவைகளைப் பாதுகாக்கும் முறைகளையும் அறிந்து வருகிறார்கள்.

இப்பயிற்சியின் இறுதியில் ஒவ்வொருவரும் ஒரு கட்டுரை தயாரித்து அளிக்க வேண்டும். மாணவர்களால் பாதுகாக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு ஒரு கண்காட்சியும் மாணவர்களால் அமைக்கப்படுகிறது. இந்தக் கண்காட்சி பொதுமக்களின் பார்வைக்காக இரண்டு தினங்கள் காட்சிக்கு வைக்கப்படுகிறது. இப்பயிற்சியின் முடிவில் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இவ்வாறு சென்னை அரசினர் அருங்காட்சியகம் கலைச் செல்வங்களையும் தொல்பொருட்களையும் காத்திடும் பணியில் இந்தியாவின் இதர அருங்காட்சியகங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது என்பது பெருமைக்குரியதாக உள்ளது.


**எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்**

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி

**சாலாமேடு, விழுப்புரம்-605 602**

இ.எஸ். கல்வி அறக்கட்டளையின் கீழ் தமிழக அரசு அங்கீகாரத்துடன் 1989-90-ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் ஐந்து பிரிவுகளுடன் தமிழ்நாட்டில் உள்ள சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகச் சிறந்து விளங்குகிறது.

1. B.Sc., Computer Science
2. B.B.A. (Bachelor of Business Administration)
3. B.B.M. (Bachelor of Banking Management)
4. B.Com.,
5. B.Sc., (Chemistry)



**Prof. V. Rasu, M.A.,**
Principal

**E. Swamikannu**
Correspondent







# குடி மறப்பீர்!

— கவிஞர் நெ. அ. பூபதி





குடிப்பழக்கம் வந்தாலே குணங்கெ டுக்கும்;
குடும்பத்தின் நலன்கெடுக்கும்; உடல்கெ டுக்கும்;
குடிப்பெருமை குலப்பெருமை அழிந்து போகும்;
கொள்கையிலும் தடுமாற்றம் வந்து சேரும்;
குடித்தாலே மதிமயக்கும்; மனம்கெ டுக்கும்;
கொண்டவனைக் கொடுமைக்கே ஆட்ப டுத்தும்;
குடிப்பவனைக் குடிக்கடிமை யாக்கும்; மாற்றான்
குடிகெடுக்கத் தயங்காமல் துணவு கொள்ளும்!

குடிப்பவர்கள் வாய்குழறும்; நடைதள் ளாடும்;
கொண்டபொருள் கைவிட்டுத் தவறிப் போகும்;
படிப்பதற்கும் முடியாது; கண்ம றைக்கும்;
பார்ப்போரின் வெறுப்புக்கே இடம்உண்டாக்கும்;
குடிப்பதனால் குடல்வெந்து போகும்; கெட்ட
குணமெல்லாம் உடன்வந்து சேரும்; மெத்தப்
படித்தாலும் மரியாதை கெட்டுப் போகும்;
பதம்மாறிப் போனாலும் உயிர்ப றிக்கும்;

குடித்துவிட்டால் நடுத்தெருவில் ஆடச் செய்யும்;
கண்ணான நண்பனையும் பகையாய் மாற்றி
அடிதடியில் இறங்கிடவும் செய்யும்; பெற்ற
அன்னைதந்தை பெண்டுபிள்ளை உறவும் பாராக்
குடிவெறியில் கண்டபடி ஏசச் செய்யும்;
குடும்பத்தின் அமைதியினைக் கெடுக்கும்; பின்னர்
குடிபோதை தெளிந்தவுடன் வருந்தச் செய்யும்;
குடிப்பதில்லை எனஉறுதி ஏற்கும்; ஆனால்

குடிப்பதற்குக் கூழில்லை; என்ற போதும்
கடன்வாங்கிச் சாராயக் கடையைத் தேடிக்
குடிப்பதுவும் அவசியமா? வெட்கக் கேடு!
குடிக்காமல் பொழுதுவிடி யாதா சொல்வீர்!
குடியாலே கெட்டழிந்த பலரைக் கண்டும்
குடிகெடுக்கும் குடிப்பழக்கம் கொள்வ தேனோ
முடியாதா குடிக்காமல் இருப்ப தற்கு—
முன்னேற வேண்டுமெனில் குடிம றப்பீர்!



# விஷ விருட்சம்

**பா**லும், நீரும் கலந்த கலவையில் நீரை நீக்கிவிட்டுப் பாலை மட்டும் அருந்தும் ஆற்றல் பெற்றதாம் அன்னப்பறவை.

நாம் சொன்னதை அப்படியே திருப்பிச் சொல்லும் குணமுடையது கிளிப்பிள்ளை.

கள் இறக்கும் கலயத்திற்குள் சாரத்தையெல்லாம் விட்டுவிட்டுப் பூச்சி, மற்றும் அசுத்தங்களை மட்டும் பிடித்துக் கொள்ளும் குணமுடையது பன்னாடை!

அதேபோல் - நம்மில் மூன்று விதக் குணம் படைத்தவர்கள் உள்ளோம். நாட்டில் நடக்கும் நல்லவை தீயவை ஆகியவற்றில் தீயவைகளை நீக்கிவிட்டு, நல்லதை மட்டுமே செய்துகொண்டு போகும் வழக்கத்தை உடையவர்கள் முதல் ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

நல்லவை, தீயவை முதலியவற்றைச் சரியாக உணரும் பக்குவம் பெறாமல் மற்றவர்கள் சொல்வதைக் கிளிப்பிள்ளையைப் போல் அப்படியே சொல்லும் குணம் படைத்தவர்கள் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

அதிலே கவனம் செலுத்தாமல் கண் முன்னே தீய விஷயங்களிலேயே கவனத்தைத் திருப்பி அதிலேயே உழன்று கொண்டிருப்பவர்கள் மூன்றாம் ரகத்தைச் சேர்ந்தவர்கள். இந்த முன்றாம் ரகத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்துதான் பெரும்பாலான குடிப்பழக்கம் உள்ளவர்கள் உருவெடுக்கிறார்கள்.

இத்தகைய குடிப் பழக்கத்தைக் கொண்டவர்கள் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பெரும்பான்மை-வகிக்கும்போது அவர்களின் குடும்பங்கள் சீர்குலைவதோடு - நாட்டின் வளர்ச்சியும், தளர்ச்சி அடைகிறது. அரசும், அறிஞர்களும் பலவகையான முன்னேற்றத்திற்கான திட்டங்கள் தீட்டியபோதும், முழுமையான பயன் நமக்குக் கிட்டாமல் போகிறது. உதாரணமாக ஒரு மனிதனைத் தேள் கொட்டிவிடுகிறது. ஆனால் அதே மனிதனைக் கடும் விஷம் உள்ள கருநாகம் கடித்துவிட்டால் தீவிர சிகிச்சை உடனே தேவைப்படுகிறது. இல்லாவிடில் அவன் மாண்டுபோவது உறுதி. இதற்குக் காரணம் தேளின் விஷத்தை எதிர்த்து அதை முறியடித்துவிடக் கூடிய ஆற்றல் மனித உடலுக்கு உண்டு. ஆனால் கருநாகத்தின் கடுமையான விஷத்தைத் தாங்கும் சக்தி மனித உடலுக்குக் கிடையாது.

அதேபோல் - ஒரு நாட்டில் சொற்ப அளவில் குடிப்பழக்கத்திற்கு அடிமையானோர் இருந்தால் சாதாரணக் காவல்துறைச் சட்டங்கள் மூலம் அவர்களைத் தடுத்துவிட முடியும். பெரும்பாலான மக்கள் குடியின் கோரப் பிடியில் சிக்கிவிட்டால், சிந்திக்கும் சக்தியையும், உழைக்கும் சக்தியையும் அவர்கள் இழந்துவிடுகிறார்கள். அதனால் வறுமை என்னும் கொடிய விஷம் நாட்டையே உலுக்கும் சூழ்நிலை உருவாகும்.

எனவேதான், தாய்நாட்டின் விடுதலைக்காக அறவழியில் போராடி வெற்றிகண்ட அண்ணல் காந்தி அடிகள், மதுவை ஒழிக்கவும் கடும் முயற்சிகள் மேற்கொண்டார். உலகப் பொது மறையாம் திருக்குறளை நமக்களித்த தெய்வப் புலவர் திருவள்ளுவரும் 'கள்ளுண்ணாமை' என்னும் தலைப்பில் ஒரு அதிகாரத்தையே ஏற்படுத்தி உள்ளார். அந்தச் சான்றோர்களுக்குப் பின் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், செல்லரிக்கப்பட்ட ஆல மரத்தை, அதன் விழுதுகள் விழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பதுபோல் மது என்னும் அரக்கனால் ஏற்பட்டுள்ள பலவீனத்தை அகற்ற நம்மாலான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். 'நாம் எத்தகைய முயற்சி எடுத்தாலும் குடிகாரர்களைத் திருத்த முடியாது. வீணாக ஏன் நம் நேரத்தைச் செலவிட வேண்டும்' என்று. கேட்பவர்களும் நம்மிடையே இருக்கலாம். அவர்களுக்கு ஒரு சிறு நிகழ்ச்சியை நினைவுக்குக் கொண்டு வருவோம்.

ஒரு சமயம் - பூலோகத்து மக்கள் மீது கோபம் கொண்ட சிவ பெருமான் 12 ஆண்டுகளுக்குச் சங்கை ஊதவேமாட்டேன் என்று முடிவு எடுக்கிறார். சிவன் சங்கை ஊதாவிட்டால் மழை பெய்யாது என்பது ஐதீகம்!



எனவே குடியானவர்கள் எல்லோரும் வேலை எதுவும் செய்யாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தனர். ஒரே ஒரு குடியானவன் மட்டும் தன் நிலத்தில் ஏர் உழுது கொண்டிருந்தான். இதைக் கவனித்த தேவலோக ரிஷியான நாரதர், அக்குடியானவனின் அருகில் வந்து - "எல்லாக் குடியானவர்களும் வேலை செய்யாமல் இருக்கும்போது, நீ மட்டும் வீணாக ஏன் வேலை

# தமிழரசு

தமிழ்நாடு அரசு ஏடு

## சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை) ஆண்டுச் சந்தா ரூ. 24
அரையாண்டுச் சந்தா ரூ. 12

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை) ஆண்டுச் சந்தா ரூ. 12

சந்தாத் தொகையை — மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

—உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.


செய்துகொண்டிருக்கிறாய்? சிவபெருமான்தான் பன்னிரண்டாண்டுகளுக்குச் சங்கை ஊதமாட்டேன் என்று சொல்லிவிட்டாரே! உனக்குத் தெரியாதா...?'' என்று கேட்டார்.

அதற்குப் புன்னகையோடு பதிலளித்த அக் குடியானவன் - ''சிவபெருமான் சொன்னது எனக்கும் தெரியும். ஆனால் அவ்வளவு காலம் ஏர் உழாமல் விட்டுவிட்டால், நிலம் இறுகிப் போகும்; இந்த ஏர் உழும் தொழிலும் எனக்கு மறந்து போகும். அதனால் தான் நான் உழுது கொண்டிருக்கிறேன்'' என்றான்.

அதைக் கேட்ட நாரதர் குடியானவன் சொன்ன பதிலை அப்படியே போய் சிவனிடம் கூறினார். அதைக் கேட்ட சிவபெருமான் - ''அந்தக் குடியானவன் சொன்னது சரிதான். நானும் பன்னிரண்டாண்டுகளுக்கு இச் சங்கை ஊதாமல் விட்டுவிட்டால், சங்கும் கெட்டுவிடும், சங்கும் ஊதும் தொழிலும் எனக்கு மறந்து போகும். எனவே இப்போதே அதை எடுத்து ஊதி விடுகிறேன்'' என்றவர் அவ்வாறே ஊதினார். மழையும் பெய்தது. அதனால் எல்லாக் குடியானவர்களும் நன்மை அடைந்தனர்.

அதேபோல் மதுவரக்கனின் பிடியிலிருந்து மக்களை மீட்க நம்மால் முடிந்த எல்லா முயற்சிகளையும் விளைவைப் பற்றிக் கவலைப்படாமல் தளர்ச்சியின்றி நாம் செய்ய வேண்டும். துருப்பிடித்து அழிந்து போவதைவிடத் தேய்ந்து அழிந்து போவது பிறர்க்குச் சிறிதளவாவது உபயோகப்படுவதால் மேலானது என்பதை நாம் அறிவோம்.

உறங்குகின்றவன் இறந்தவன் நிலையில் உள்ளான். அதேபோல் கள்ளுண்டு மதி மயங்கியவனும் இறந்தவனுக்குச் சமமே என்கிறார் வள்ளுவர். கள்ளுண்ணும் பழக்கத்தை உடையவனைக் கண்டு பகைவர்கள் அச்சம் கொள்ளார் என்றும் அறிவுறுத்துகிறார். மேலும் கள்ளுண்டு மயங்கியவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல் நீரில் மூழ்கிப் போன ஒருவனை எரிகின்ற விளக்கு கொண்டு தேடுவது போல் என்றும் இடித்துரைக்கிறார். பிணமாகவும், பகைவர்களுக்கு எளியவனாகவும், தெளிவற்றவனாகவும் குடிப்பழக்கம் உள்ளவர்கள் மாறுகிறார்கள் என்பதை இரத்தினச் சுருக்கமாக வள்ளுவப் பெருந்தகை கூறியிருப்பதைக் குடிப் பழக்கத்திற்கு அடிமையானோர் சிந்திக்க வேண்டும். வைராக்கியம் என்னும் கோடாரியைக் கொண்டு மது என்னும் விஷ விருட்சத்தை வெட்டிச் சாய்த்து விட வேண்டும். சுழன்று ஓடும் சக்கர வண்டிக்கு அச்சாணி மிகவும் அவசியம். அச்சாணியின்றி வண்டி ஓடுமானால் சக்கரங்கள் விலகி வண்டி சிதைந்துபோவது உறுதி. அதேபோல் வாழ்க்கை என்னும் சக்கரம் சீராக ஓட ஒழுக்கம் என்ற அச்சாணி மிகவும் தேவை.

ஒரு தாய் வெளியூரில் படிக்கும் தன் மகனைக் காணச் சென்றாள். மகனின் அறையில் நுழைந்ததும் அவள் அதிர்ச்சி அடைந்தாள். அறை முழுவதும் பெண்களின் ஆபாசம் நிறைந்த படங்கள் சுவரில் ஒட்டப்பட்டிருப்பதைக் கண்டாள். மகனிடம் - அது பற்றி எதுவும் கேட்காமல், விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினாள்.

பிறகு - தன் புகைப்படம் ஒன்றை அனுப்பி, 'உன் அறையில் இதையும் மாட்டி வை' என்று மகனுக்குக் கடிதம் எழுதினாள். மறுமுறை திரும்பவும் மகனைப் பார்க்க அவள் அறையில் நுழைந்த போது அந்தத் தாயின் போட்டோவைத் தவிர வேறு எந்தப் படங்களும் அங்கு இல்லை.

மற்ற படங்களைப் பற்றி விசாரித்த போது 'உங்கள் படத்தை வைத்த பின் மற்ற படங்கள் அங்கிருப்பது வெட்கக் கேடாக எனக்குத் தோன்றியது. அதனால் அவற்றை அகற்றி விட்டேன்' என்றான் அவன்.

அதேபோல் இருளை விரட்ட வேண்டுமானால், இருளோடு மோத வேண்டிய அவசியம் இல்லை. விளக்கு ஒன்றை வைத்தால் இருள் தானாக விலகி ஓடிவிடும். அதேபோல், கள்ளுண்ணும் அறியாமை இருளை அகற்ற வைராக்கியம் என்னும் விளக்கை அப்பழக்கத்திற்கு அடிமையானோரெல்லாம் உடனே ஏற்றிடுவோம்!

குடி கெடுக்கும் குடியை விரட்டிடுவோம்...!

**(மது அருந்துவதன் தீமையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள சிறுகதை)**



# தருமபுரி மாவட்ட மருத்துவமனைகள்



தருமபுரி மாவட்டம் தனியே பிரிக்கப்பட்டபோது, தருமபுரியில் வட்டத் தலைமையிட மருத்துவமனையாகச் செயல்பட்டுவந்த மருத்துவமனைதான் மாவட்டத் தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தைப் பொருத்தமட்டில், அரசு பொது மருத்துவமனைகளாக, இயங்கி வருபவை அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனையும், தருமபுரி அரசினர் வட்டத் தலைமை மருத்துவமனைகள் ஏழும் ஆகும். அவை - கிருஷ்ணகிரி, ஓசூர், பென்னாகரம், பாலக்கோடு, அரூர், ஊத்தங்கரை, தேன்கனிக்கோட்டை ஆகிய இடங்களில் செம்மையுறச் செயல்பட்டு வருகின்றன.

**'நோய்நாடி நோயின் முதல்நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்'**
**- என்றார் திருவள்ளுவர்.**

**அந்தவகையில், பெரும்புகழ்பெற்று விளங்குவது தருமபுரியில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனை, அதன் இணை இயக்குநர் திரு. கே.எம். வரதராஜன் அவர்கள், அம் மருத்துவமனையின் சிறப்பை இந்தக் கட்டுரையில் விவரிக்கிறார்.**

இம்மாவட்டத்தில் உள்ள காவேரிப்பட்டினத்தில் ஒரு அரசினர் சமுதாய நலமையமும், 18 வட்டாரங்களில் முதன்மை அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 53 அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன; 18 முதன்மைச் சுகாதார நிலையங்களில் பாரூர், பர்கூர் மற்றும் கெலமங்கலம் ஆகிய மூன்றும் மேம்படுத்தப்பட்டு கூடுதல் வசதியுடன் செயல்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்டத் தொழுநோய் அலுவலரின் கீழ், தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையங்கள் 5 உள்ளன. அவை பள்ளிப்பட்டி, ஓசூர், கிருஷ்ணகிரி, குப்பூர், தருமபுரி ஆகிய ஊர்களிலே உள்ளன.

குப்பூரில் உள்ள தொழுநோய்க் கட்டுப்பாடு நிலையத்தின் கீழ், 40 படுக்கைகள் கொண்ட தொழுநோய் மருத்துவமனை இயங்கி வருகிறது. கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் தொழுநோய்ச் சிகிச்சைக்கென 20 படுக்கைகள் கொண்ட பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. தொழுநோயாளிகள் கிராமங்கள் தோறும் கண்டுபிடிக்கப்பட்டு நவீன கூட்டு மருந்து சிகிச்சை மூலம் தொடர் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூரிலும், கிருஷ்ணகிரியிலும் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள் மிக நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

### சித்த மருத்துவம்

மாவட்ட சித்த மருத்துவமனை, அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனையிலுள்ள தனிக்கட்டிடத்தில் செயல்படுகிறது. சித்த மருத்துவச் சிகிச்சை பெறும் ஆர்வம் இப்பகுதி மக்களிடையே நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஓமியோபதி வைத்தியப் பிரிவும் இதன் உள்ளேயே இயங்கி வருகிறது.

4 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், 11 முதன்மை ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும்

சித்த வைத்தியப் பிரிவு செயல்பட்டு வருகிறது. மௌசி, கோட்டப்பட்டி ஆகிய அரசினர் கிராம மருந்தகங்களிலும், பழங்குடியினர் நலத் திட்டத்தின் கீழ், சித்தேரியில் அரசினர் மருந்தகமும் சீரிய சித்த வைத்திய முறையில் இயங்கி வருகிறது.

இம்மாவட்டத்தில், குடும்பநலத் துறையில் 7 நகர்ப்புற குடும்பநல மையங்களும், 16 கிராமப்புறக் குடும்பநல மையங்களும் சிறப்பு வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன.

காசநோய் ஒழிப்பு

காசநோய் ஒழிப்புத் திட்டம், மாவட்டக் காசநோய் அலுவலரின் கீழ் அனைத்து அரசினர் மருத்துவமனைகளிலும், அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில், கோழைப்

அரூர் மருத்துவமனை 35 படுக்கைகளுடனும் தேன்கனிக்கோட்டை மருத்துவமனை 34 படுக்கைகளுடனும், ஊத்தங்கரை மருத்துவமனை 32 படுக்கை வசதிகளுடனும் இருக்கின்றன. பாலக்கோடு மருத்துவமனை 10 படுக்கைகளுடனும், பென்னாகரம் மருத்துவமனை 6 படுக்கைகளுடனும் இயங்கி வருகின்றன.

பாலக்கோடு அரசினர் மருத்துவமனைக்குக் கூடுதலாக 22 படுக்கைகளும், பென்னாகரம் அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாக 26 படுக்



பிரிவு, மற்றும் தொற்று நோய் சிகிச்சைப் பரிவு.

கிருஷ்ணகிரியில் உள்ள வட்ட அரசு மருத்துவமனையில் கீழ்க்கண்ட சிறப்புச் சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுகின்றன; மகப்பேறு பிரிவு, முன்னாள் படைவீரர் பிரிவு, கண் மருத்துவம், தொற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, தோல் மருத்துவம், பல் மருத்துவம், குழந்தைகள் நலப் பிரிவு.

ஓசூர் அரசினர் மருத்துவமனையில் மகப்பேறு, விபத்து, அவசரச் சிகிச்சை, பல் மருத்துவம், கண் மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், மகளிர் நல மருத்துவம், இரத்த வங்கி நரம்பியல் மருத்துவம் போன்ற சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

அரூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு, குழந்தைகள் நல மருத்

● மக்கள் சேவையே எனக்கு இறைவன் வழிபாடு; பிறந்தபோதே நம்மை மரணம் பிடித்துக் கொண்டு விட்டது; ஆகவே, இறுதியில் வழிபடுவதைவிட வாழ்வின் ஒவ்வொரு நொடியும் ஒப்பிலா முதல்வனை நினைந்துருக வேண்டும்.

பரிசோதனை செய்யப்பட்டும், அரசினர் மருத்துவமனைகளில் நுண் கதிர் படபிடிப்பு மூலமும் காச நோயாளிகள் அடையாளம் கண்டு பிடிக்கப்படுகிறார்கள்.

காசநோயாளிகள் தங்கி மருத்துவம் செய்துகொள்ளத் தருமபுரி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் 12 படுக்கை வசதிகளும், கிருஷ்ணகிரி வட்டத் தலைமை மருத்துவமனைகளில் 25 படுக்கை வசதிகளும், செய்யப்பட்டுள்ளன.

காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் தொடர் சிகிச்சை, மாவட்டக் காசநோய் அலுவலரால் மருத்துவமனைகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகிறது.

எத்தனை படுக்கைகள்

தருமபுரி அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனை 396 படுக்கைகளுடனும், கிருஷ்ணகிரி மருத்துவமனை 187 படுக்கைகளுடனும், ஓசூர் மருத்துவமனை 100 படுக்கை வசதிகளுடனும் உள்ளன;

கைகளும் அனுமதிக்கப்பட்டு, கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நகர்ப்புறக் குடும்பநல மையத்திற்கென ஊத்தங்கரையிலும் அரூரிலும் ஆறு படுக்கைகள், குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை அரங்கம் ஆகியவை அனுமதிக்கப்பட்டு அவற்றுக்கான கட்டடப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

மருத்துவப் பிரிவுகள்

மற்றும் அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனையில், கீழ்க்கண்ட சிறப்புப் பிரிவுகள் செயல்படுகின்றன;

விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, பால்வினை நோய் மருத்துவம், தோல் மருத்துவம், இயன்முறை மருத்துவம், இரத்த வங்கி, காது மூக்கு தொண்டைப் பிரிவு, பல் மருத்துவம், நரம்பியல் பிரிவு, மகளிர் நலப் பிரிவு, கண்மருத்துவப் பிரிவு, நீரிழிவு சிகிச்சைப் பிரிவு, மனநோய்ப் பிரிவு, தீவிர இருதய சிகிச்சைப் பிரிவு, எலும்பு முறிவுப்

துவம் கண் மருத்துவம் போன்ற சிறப்புப் பிரிவுகள் இருக்கின்றன.

தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் மகப்பேறு, சித்த மருத்துவ உள்நோயாளிகள் பிரிவு, மகளிர் நலச் சிகிச்சை போன்ற சிறப்புப் பிரிவுகள் இயங்கிவருகின்றன.

ஊத்தங்கரை மற்றும் பாலக்கோடு அரசு மருத்துவமனைகளில்





மகப்பேறு பிரிவு மட்டும் இயங்கி வருகிறது.

பென்னாகரம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவு, குழந்தைகள் நல மருத்துவம் ஆகிய சிறப்புப் பிரிவுகள் உள்ளன.

குடும்ப நலச் செம்மை

தருமபுரி மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் குடும்பநலத் திட்டத்தின் கீழ் 10,561 அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன. 9,161 தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது. கருத்தடை மாத்திரை 4,674 வழங்கப்பட்டு, தாய்மார்கள் கருத்தடை மாத்திரை பயன்படுத்துவோர் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.

6,770 தகுதி வாய்ந்த தந்தையர் ஆணுறை பயன்படுத்துவோர் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பெற்றனர்.

ப்ளோரஸிஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறியத் தமிழ்நாடு குடிநீர் வடிகால், வாரிய ஒத்துழைப்புடன் தருமபுரி மாவட்டம் முழுவதும் மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின்படி மருத்துவ முகாம் நடைபெற்று வருகின்றது.

இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டறிந்து சிகிச்சை அளித்து, சேவை நிறுவனங்களின் உதவியுடன் அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்கப் படுகிறது.

இந்த மாவட்டம் முழுவதுமே, கண்புரையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தனி முகாம்கள் நடத்தி, அறுவைச் சிகிச்சையும் செய்து குணப்படுத்தப் படுகிறது.

★ தகடூரை (தருமபுரி) ஆண்ட அதியமான்கலை 'சத்திய புத்திரர்கள்' என்று குறிப்பிடுகின்றன அசோகர் காலக் கல்வெட்டுகள். அதியமானுக்கும், சேரன் பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் நடைபெற்ற போரைப் பற்றிய நூலே 'தகடூர் யாத்திரை; அந்நூலின் முழுப்பகுதிகளும் கிடைக்கவில்லை. அதியமான் மரபைச் சார்ந்தவர்கள் சங்க காலத்திலே மட்டுமன்றிப் பிற்காலச் சோழ-பாண்டியப் பேரரசர்கள் ஆட்சிக் காலத்திலும் வலமைமிக்க சிற்றரசர்களாக இருந்தார்கள்.

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவநலத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 475 மருத்துவ முகாம்கள் சிறப்புற நடத்தப்பட்டன.



இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து, சிகிச்சையளிக்கத் தகுந்தபடி தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இம்மாவட்டத்தில் துவளாமல் முகாம்கள் நடத்தப்பட்டன.

நடமாடும் மருத்துவப் பிரிவு

தருமபுரியில் இயங்கி வரும் நடமாடும் கண் மருத்துவப் பிரிவு மூலம், மாவட்டம் முழுவதும் கண் நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் தர்மபுரி, அரூர், ஓசூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் நடமாடும் மருத்துவப் பிரிவு மூலம், மலைவாழ் பிரிவினருக்கும் சமுதாயத்தில் பின்தங்கியவர்களுக்கும் முறைப்படி மருத்துவச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

1992-93-ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்ட அரசினர் தலைமை மருத்துவமனையில் கூடுதலாக 24 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டு கட்டவேண்டும் என்ற பணி அரசால் ஏற்கப்பட்டிருக்கிறது.

தருமபுரி அரசினர் தலைமை மருத்துவமனையில், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறியும் எச்.ஐ.வி. கிருமிகளைக் கண்டு பிடிக்கும், நூதனக் கருவி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதன் உதவியுடன் மாவட்டத்தில் எய்ட்ஸ் நோய் வராமல் தடுக்கவும், பரவாமல் கட்டுப்படுத்தவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



எய்ட்ஸ் வைரஸ்கள் பல்கிப் பெருகுவதைத் தடுக்கும் புதிய மருந்துக் கலவையொன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.

மாஸசூஸெட்ஸ் பொது மருத்துவமனையின் சோதனைக் கூடத்தில் இந்த மருந்து உருவாக்கப்பட்டுள்ளது. இதனை எய்ட்ஸ் நோயாளிகள் சிலருக்குக் கொடுத்து சோதனை செய்து பார்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் நோய் சிகிச்சையில் இதுவரை தனித்தனியே பயன்படுத்தப்பட்டு வந்த ஏ.இசட்.டி., டைடியாக்ஸி ஐனோசின் என்னும் இரு மருந்துகளுடன், பிரிடினோன் என்னும் மற்றொரு மருந்தை இணைத்து இந்தப் புதிய மருந்துக் கலவை உருவாக்கப்பட்டுள்ளது.

இதுவரை தரப்பட்டு வந்த ஏ.இசட்.டி., டி.டி.ஐ. ஆகிய மருந்துகள் இந்த நோய் பரவும் வேகத்தை மட்டுமே கட்டுப்படுத்தி வந்தன. ஆனால் - இப்போது தரப்பட்டுள்ள மருந்துக் கலவையானது, எய்ட்ஸ் வைரஸ் பெருக்கத்தை முழுமையாகத் தடுத்து நிறுத்தியுள்ளது.

எய்ட்ஸ் நோய்க்குக் காரணமான 'எச்.ஐ.வி' வைரஸில் 'ரிபோ நியூக்ளிக் அமிலம்' என்னும் மரபுக்கூறு ஒரு புரதப் படலத்தால் சூழப்பட்டுள்ளது. இந்த வைரஸ் ஒரு செல்லைத் தாக்கும்போது, இந்தப் புரதப் பூச்சு கரைந்து, ரிபோ நியூக்ளிக் அமிலமானது டியாக்ஸி நியூக்ளிக் அமிலமாக மாறுகிறது. இம் மாற்றத்திற்கு 'ரிவர்ஸ் டிரான்ஸ்கிப்டேஸ்' என்னும் நொதிப்பொருள் தேவை. இந்த மாற்றம் நிகழ்ந்தவுடன் இந்த வைரஸ், செல்லின் கருப்பகுதியை ஆக்கிரமித்துப் பக்கத்தில் உள்ள செல்களையும் தாக்க ஆரம்பிக்கிறது.

'ரிவர்ஸ் டிரான்ஸ்கிப்டேஸ்' நொதியை அழிப்பதன் மூலம், மேற்கூறிய மாற்றங்களைத் தடுத்து நிறுத்த முடியும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மும் மருந்துக் கலவை, இந்த நொதியைத் தாக்கி அழிக்கிறது. இதனால் எய்ட்ஸ் வைரஸ்களின் பெருக்கம் தடுக்கப் படுகிறது.

## மாணவர் பக்கம்

### பொது அறிவுத் தகவல்கள்

இந்தியாவின் முதல் பிரதமர் யார்? ஜவஹர்லால் நேரு. இந்தியாவின் முதல் பெண் பிரதமர்? இந்திராகாந்தி. இந்தியாவின் தேசியப் பறவை? மயில்.

பாரதியார் பிறந்த ஊர் எது? எட்டையபுரம். அவரது சிறந்த படைப்புகள் யாவை? தேசிய கீதங்கள், பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, பாரதியார் நடத்திய பத்திரிக்கையின் பெயர் என்ன? இந்தியா.

சர்.டி. முத்துசாமி அய்யர் அவரது கல்வி பற்றிய சிறப்புச் செய்தி என்ன? தெருவிளக்கில் படித்து முன்னேறியவர். கைவிளக்கு ஏந்திய பாவை என்று யாரை குறிப்பிடுவார்கள்? ஃப்ளாரன்ஸ் நைடிங்கேல்.

சூரியகிரகணம் எவ்வாறு ஏற்படுகிறது சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் வந்து சூரிய வெளிச்சத்தை தடை செய்வதால்.

பூமியிலிருந்து வெகு தூரத்திலுள்ள கிரகம் எது - சனி.

காந்தியார் எங்கே உப்பு காய்ச்சினார்? தண்டியில்.

தமிழ்நாட்டின் உப்புசத்தியாக்கிரகம் எங்கு நடந்தது? வேதாரண்யத்தில். அதைத் தலைமை ஏற்று நடத்தியவர் யார்? சர்தார் வேதரத்தினம்.

சந்திர கிரகணம் எவ்வாறு ஏற்படுகிறது? சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும்போது பூமியின் நிழல் சந்திரன்மேல் படுவதால்.

மிகச் சிறிய கிரகம் எது - புதன்(மெர்குரி)

பூமி தன்னைத்தானே சுற்றும் போது எந்தத் திசையை நோக்கிச் சுற்றுகிறது? மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுகிறது.

உலகில் அதிமழை பொழியும் இடம் இந்தியாவிலுள்ள சிரபுஞ்சி - ஆண்டுமழை 1232 செ.மீ.

### "அறிவு வேண்டும்!"

—பசுமாத்தூர் மு. ஞானசேகரன்



அறிவு வேண்டும் தம்பி! அதனால்
ஆக்கம் ஊக்கம் உண்டே!
தெளிவு வேண்டும் போது எதையும்
தெரிந்து கொள்ள வேண்டும்!
அறிவினாலே உயர்ந்தார் தம்மை
அறிந்துகொள்ள வேண்டும்!
பரிவினோடு சொல்லும் பெரியார்
பண்பை உணர வேண்டும்!
கெட்ட அறிவு வேண்டாம் நல்ல
கேள்வி ஞானம் வேண்டும்!
அட்டியின்றிச் சொல்வேன் உயர
அறிவுச் செல்வம் வேண்டும்!

இரவும்பகலும் சமமாக இருக்கும்காலம் சூரியன் பூமத்திய ரேகையிலிருக்கும்போது, அதாவது மார்ச் 21. செப் 22. பூமிதன்னைத் தானே சுற்றுவதற்கு ஆகும் நேரம்-24 மணி.

துருவா என்பது என்ன? பம்பாயிலுள்ள அணுசக்தி ஆய்வு நிலையம்.

கோவா எந்த அந்நியர் ஆட்சியில் இருந்தது? போர்ச்சுகீசியர். அது எப்போது விடுதலை பெற்றது? 1961-இல்.

பாண்டிச்சேரியில் பிறந்த தமிழ்க் கவிஞர் யார்? பாரதிதாசன்.

இரப்பர் உற்பத்தியில் சிறந்து விளங்கும் நாடு - மலேசியா.

சீனிவாசா ராமானுஜம் எந்தத் துறையில் சிறந்து விளங்கினார் - கணிதம்.

இந்தியாவிலுள்ள மிகப்பெரிய நீர்மின் திட்டம் பக்ராநங்கல்.

மிகவும் ஒளியுள்ள கிரகம் சுக்கிரன் (வீனஸ்).

இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் யார்? சுசேதா கிருபளானி. இந்தியாவின் முதல் பெண் கவர்னர் யார்? சரோஜினி நாயுடு. சுதந்திர இந்தியாவின் முதல் சேனாதிபதி யார்? கரியப்பா.

உலகில் உள்ள மொத்தக் கண்டங்கள் எத்தனை? அவை யாவை? ஏழு. அவை ஆசியா, ஆப்பிரிக்கா, வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அண்டார்டிகா ஆகும்.

★ நல்ல எண்ணங்களைத் தூவினால்தான், அவை நல்ல பலனைத் தரும். பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.





## தேசிய மாணவர் படை



மாணவ-மாணவிகளிடையே ஓரளவுக்குப் போர்க்குணம் உண்டாகத்தான் வேண்டும் என்பது இன்றைய காலகட்டத்தில், மிகவும் முக்கியமாகிவிட்டது. 'தேசிய மாணவர் படை' என்கிற அமைப்பு, இதைத் தான் தொடக்கம் முதலே செய்து வருகிறது.

தேசிய மாணவர் படையின் (National Cadet Corps) முக்கியக் குறிக்கோள்கள் இரண்டு ஆகும். அவை-

1. இளம் சமுதாயத்தினரைக் குண நலன்கள் உடையவர்களாக்குவது, துணிவுடையவர்களாக்குவது, சகோதர பாசமுடையவர்கள் ஆக்குவது, கட்டுப்பாடு பெறச்செய்வது, வழிநடத்திச் செல்லும் வல்லமை உடையவர்களாக்குவது, வீரதீரச் செயல்களில் ஈடுபடச் செய்வது, விளையாட்டுகளிலே ஆர்வம் கொள்ள வைப்பது, தியாக சீலர்களாக்குவது, நல்ல குடிமகனாகப் பெருமை பெறச் செய்வது ஆகியவை ஒரு பகுதி.

2. விவேகம் உள்ள வீரர்களாக்குவது, இளமை முதலே நல்லெண்ணத்தோடு வளரச் செய்வது, ஒழுங்கான செயல்பாடு உடையவர்களாக்குவது, தலைமை தாங்கத் தக்க திறமை பெறச் செய்வது, போர் வீரர்களைப் போல் பொலிவுற வைப்பது, சிறந்த நாட்டுப்பற்று உடையவர்களாக்குவது ஆகியவை இன்னொரு பகுதி.

1925-இல், பிரிட்டிஷாரால் 'பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பயிற்சிப் படை' (University Officers Training Corp) என்றுதான் முதன் முதலாக இந்த அமைப்பு (VOTE) உருவாக்கப்பட்டது. அதில் கல்லூரி மாணாக்கர்களோ, பல்கலைக் கழக மாணாக்கர்களோதான் பங்குபெற முடியும்.

அதன்பின்பு, இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, 15.7.1948-இல் தான், நாடாளுமன்றத்தில் அது குறித்து முறைப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. கல்லூரி மாணாக்கர்கள் மட்டுமன்றி உயர் நிலைப்பள்ளி மாணவ மாணவிகளும் பங்குபெறத் தக்கதாக அந்த அமைப்பை மாற்றுவது பற்றி அங்கே பரிசீலித்தார்கள். முடிவாக 'தேசிய மாணவர் படை' என்ற அமைப்பு அதன்பேரில்தான் இந்தியாவில் அமைக்கப்பட்டது.

மத்திய அரசில் அதாவது டில்லியில், இந்த அமைப்பு பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது; நம் தமிழ்நாடு போன்ற மற்ற மாநிலங்களிலோ, கல்வித்துறை மூலமே இது நிர்வகிக்கப்படுகிறது.

இப்போது - தமிழ்நாடு, புதுவை ஆகிய இரு மாநிலங்களைச் சேர்ந்த தேசிய மாணவர் படைகளின் உயர் அதிகாரியாக ஒருவரே பதவி வகிக்கிறார். அவர், கம்மோடர் ரவி ஆர். நாயர் என்கிற கடற்படை அதிகாரி ஆவார்.

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் - ஆகிய நான்கு பெரிய நகரங்களிலேயே தற்போது உயர்மட்ட தேசிய மாணவர் படை அமைக்கப்பட்டுள்ளது. 'ஏ' என்றும் 'பி' என்றும் சென்னையில் மட்டுமே இதில் இரண்டு அமைப்புகள் இருக்கின்றன.

இந்தப்படையில்- தரைப்படை, தொழில் நுணுக்கப் பிரிவு, கப்பற் படை, விமானப்படை, மருத்துவப் பிரிவு, மகளிர் பிரிவு என ஆறு பிரிவுகள் இருக்கின்றன.

கல்லூரி மாணவ மாணவிகள் உள்ள தேசிய மாணவர் படை முதுநிலைப் பிரிவு (Senior Wing) என்றும், உயர்நிலைப் பள்ளி மாணாக்கர் பங்கேற்பது இளநிலைப் பிரிவு (Junior Wing) என்றும் குறிப்பிடப்படுகிறது. இதுதவிர, மகளிர் பிரிவு (Girls Wing) ஒன்றும் தனியே இருக்கிறது.

இப்படைப் பயிற்சியின் கட்டுப்பாடெல்லாம் மத்திய அரசில் இருந்த போதிலும், இதற்காக ஆகும் செலவில் மூன்றில் ஒரு பகுதியை அந்தந்த மாநில அரசே ஏற்க வேண்டும் என்பது சட்டம். படிப்புக்கு இடையூறின்றி விடுமுறை காலத்தில்தான் தேசிய மாணவர் படையினர் முகாம் வெளியூர்களில் அமைக்கப்படும். அப்போது ஆகிற செலவில் மத்திய அரசும், மாநில அரசும் பாதிக்குப் பாதி என்ற அளவில் அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

★ நாகரிகம் என்பது நமது வாழ்க்கையின் தேவைகளை அதிகரித்துக் கொண்டே போவது அல்ல; தாமாகத் தேவைகளைக் குறைத்து வாழ்வதே உயர்ந்த நாகரிகமாகும்.

—காந்தியடிகள்

ஆண்டுதோறும் ஜனவரி 26-ஆம் நாள், டில்லியில் குடியரசு நாள் விழா நடக்குமல்லவா? அதில் அணிவகுப்புகள் நடைபெறுவதுண்டு; அந்த அணிவகுப்பில் ஒவ்வொரு மாநிலத் தேசிய மாணவர் படையினரும் பங்கேற்கச் செய்வார்கள். அவர்களில் சிறந்த பயிற்சியாளராகத் திகழும் மாணாக்கர்களுக்கு இந்தியப் பிரதமரே தமது கரத்தால் விருது வழங்கிப் பாராட்டுவார்.

இந்த வகையில், கடந்த 1971-ஆம் ஆண்டு முதல் ஏழாண்டுக் காலம் தொடர்ந்து தமிழ்நாட்டுத் தேசிய மாணவர் படையினரே முதல் பரிசு பெற்று வந்தனர். இதுபற்றி முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள்- "தமிழ்நாடு தேசிய மாணவர் படையினர் திறமையான பயிற்சியாளர்கள்" என்று குறிப்பிட்டுப் பாராட்டிப் பேசியது உண்டு. அதன் பிறகும் ஓராண்டு நம் தமிழ்நாடு ஒரு முதல்பரிசு பெற்றது.

இப்போது தமிழ்நாடு முழுமையிலுமாக முதுநிலைப் பிரிவு தேசிய மாணவர் படையில் மொத்தம் 17,370 பேர் இருக்கிறார்கள். இளநிலைப் பிரிவிலோ 61,350 பேர் உள்ளனர். முதுநிலைப் பிரிவில் இருக்கின்ற பெண்கள் எண்ணிக்கை 3,200 ஆகும்; இளநிலைப் பிரிவில் உள்ள பெண்கள் எண்ணிக்கையோ 5,200.

இவ்வளவு பேர்களுக்கும் சிறந்த முறையில் பயிற்சியளிக்கின்ற அதிகாரிகள் தமிழ்நாட்டில் 949 பேர் இருக்கின்றனர்; இவர்கள் அனைவரும் முழுநேரப் படைப்பிரிவினர் அல்ல; கல்லூரிகளில் பேராசிரியர்களாகப் பணிபுரிகிறவர்களேயாவர்; இந்தப் பணி அவர்களுக்கு ஓய்வுநேரத் தனிப் பணி ஆகும்.

ஆக மொத்தத்தில்- தேசிய மாணவர் படை என்பது- இன்றைய சிறுவர்களை இந்த நாட்டின் நாளைய தலைவர்களாக்கும் உயரிய குறிக்கோளோடு ஆரம்பிக்கப்பட்டதேயாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாணவ மணிகள் ஆர்வத்தோடு இதில் சேர்ந்து பயிற்சி பெற்றால், ஒவ்வொருவரும் ஒளிமயமான எதிர்காலத்தைக் காண முடியும்.

—பி.எல்.ஆர்.

## சின்னச் சின்ன செய்திகள்

• 'ஆஸ்கார்' சர்வதேச அளவில் சிறந்த திரைப்படத்திற்காக வழங்கப்படும் விருது. அதற்குச் சமமான விருது ஒன்று, சேலம் உருக்காலைக்கும் கிடைத்துள்ளது.

பிரிட்டிஷ் பாதுகாப்புச் சபையின் 1991-ஆம் ஆண்டு கௌரவ வாள் விருது சேலம் உருக்காலைக்குக் கிடைத்துள்ளது. தொழிற்சாலைப் பாதுகாப்பு விதிகளைச் சிறந்த முறையில் கடைப்பிடிப்பதற்காக வழங்கப்படும் இவ்விருதினை சேலம் ஆலை மூன்றாவது முறையாகப் பெற்றுள்ளது.

ஏற்கெனவே 1984, 1986-ஆம் ஆண்டுகளில் இந்த விருது கிடைத்தது. தொழிற்சாலை பாதுகாப்பு சம்பந்தமான நிர்வாகம், தொழிலாளர் பயிற்சி, தொழிற்சாலை சுகாதாரம், விபத்துத் தடுப்பு ஆகியவற்றில் மிகச் சிறப்பாகச்சேவை புரியும் முப்பது நிறுவனங்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

• வர்த்தகம் என்றாலே லாப நோக்கு கொண்டதுதானே? அனைத்திந்திய வானொலியின் வர்த்தக ஒலிபரப்பு மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? 1991-92-ல் வர்த்தக ஒலிபரப்பு மூலம் வானொலிக்கு ரூ.53 கோடி லாபம் கிட்டியது. நடப்பாண்டில் இது 60 கோடியாக உயரக்கூடும். எட்டாவது திட்டகாலத்தில் மேலும் 10 விவித பாரதி மையங்களைத் திறக்க அரசு திட்டமிட்டுள்ளது. சுமார் பத்து கோடி குடும்பத்தினர் வர்த்தக ஒலிபரப்பினைக் கேட்டு இன்புறுகின்றனர்.

இவ்வாண்டு நவம்பர் முதல் தேதியன்று வர்த்தக ஒலிபரப்பு சேவை தொடங்கி 25 ஆண்டுகள் ஆகின்றன. நாட்டில் தற்போது முப்பது விவித பாரதி மையங்கள் உள்ளன. தினமும் சராசரி 800 நிமிடங்கள் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் 80 நிமிடங்கள் மட்டுமே விளம்பரத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

• சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக, இந்தியச் சுற்றுலாத் துறை "வெப்பமிகு தெற்கு" என்ற சுற்றுலா வளர்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்த உள்ளது. தென் இந்தியப் பகுதிகளுக்குச் சுற்றுலாப் பயணியரை வரவழைக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

கடந்த (அக்டோபர்) மாதத்தில் மட்டும் 11,557 சுற்றுலாப் பயணிகள் சென்னைக்கு வருகை புரிந்தனர். சென்ற ஆண்டின் இதே மாதத்தில் வருகை புரிந்த 10,158 சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடுகையில், இது 14 சதவீதம் அதிகம். இன்னும் இரண்டு ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக மொத்தம் 9,952 அறைகள் கொண்ட 199 நட்சத்திர ஓட்டல்கள் கட்டி முடிக்கப்படும். ஓட்டல் அறைகளின் எண்ணிக்கை இதனால் இரண்டு மடங்காக உயரும்.

குன்னூரில் டிசம்பர் 18 முதல் 20-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள 'தேயிலை மற்றும் சுற்றுலா' விழாவைக் கண்டுகளிக்க, இங்கிலாந்து, மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா முதலான நாடுகளிலிருந்து ஏரானமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.





# தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

**எம். சுப்பையா**
கூடுதல் பதிவாளர் ஐ.சி.டி.பி. ஒருங்கிணைந்த கூட்டுறவு மேம்பாட்டுத் திட்டம்

நாட்டின் சில தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் கூட்டுறவு வளர்ச்சியைச் செயல்படுத்துவதற்கெனத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 'ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்' எனும் திட்டத்தினை உருவாக்கியுள்ளது.

பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளான வேளாண்மை மற்றும் தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்த்தல், பன்றி வளர்த்தல், கோழிப்பண்ணை, மீன் வளர்ப்பு போன்ற வேளாண்மை சார்ந்த பிரிவுகள் மற்றும் கைத்தறி, கிராமக் கைத்தொழில் கைவினைஞர் தொழில் போன்ற பண்ணை சாரா பிரிவுகள் முதலியவற்றில் பன்முகப்படுத்திப் பெருக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். சங்கத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பகுதி அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த முதன்முதலில் காமராசர் மாவட்டம் தெரிவு செய்யப்பட்டது. காமராசர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.862.52 இலட்சங்களாகும்.

இந்த நிதி உதவி தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தமிழக அரசுக்குக் கடனாக ரூ.742.41 இலட்சமும் மானியமாக ரூ.60.05 இலட்சமும் அளிப்பதுடன், தமிழக அரசு தனது பங்கான மானியத் தொகை ரூ.60.05 இலட்சம் ஏற்றுக் கொண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறும் கடன் தொகை ரூ.742.41 இலட்சத்தில் தமிழக அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்கு ரூ.319.3175 இலட்சம் கடனாகவும், ரூ.423.0925 இலட்சம் பங்குத் தொகையாகவும் வழங்குவதால் ஏற்படும் வட்டி இழப்பை, பொது நலன் கருதி மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது.

முதன் மூன்று ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.638.90 இலட்சத்தில் தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.544.06 இலட்சம் விடுவித்துள்ளது. இத்தொகையானது கடனாக ரூ.1,91,14,255-ம், பங்குத் தொகையாக ரூ.3,04,16,745-ம், மானியமாக ரூ.48,75,000-ம் ஆகும். ரூ.544.06 இலட்சத்தில் உப திட்ட மதிப்பீட்டுக் குழு பல்வேறு துணைத் திட்டங்களுக்காக ரூ.505.74 இலட்சம் அனுமதி அளித்துள்ளது திட்ட அமலாக்க முகமையான இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி இதுவரையில் ரூ.393.64 இலட்சம் திட்ட நடைமுறைப்படுத்துவதற்கு விடுத்துள்ளது. மீதித் தொகையான ரூ.150.42 இலட்சம் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிடம் உள்ளது. நான்காம் ஆண்டிற்கென (1992-93) ரூ.158.68 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பினும் தொடர்ச்சியான திட்ட அமலாக்கத்திற்கு, ஏற்கெனவே உபரியாக இருக்கும் தொகையைக் கருத்தில் கொண்டும், சில துணைத் திட்டங்களை நீக்கி விட்டபடியாலும் ரூ.97.225 இலட்சம் மட்டுமே அனுமதிக்குமாறு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் காமராசர் மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு 134 கிடங்குகள், 100 பாதுகாப்புத் துறைகள் 100 இரும்புப் பெட்டகங்கள், 100 வங்கி முகப்புகள், 22 டிராக்டர்கள் மற்றும் ரேஷன் கடைகள் போன்ற கட்டுமான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வழிவகைகள் உள்ளன. பங்கு மூலதனமும் பெற்று பயனடைவதால் அம்மாவட்டத்திலுள்ள விவசாய அங்கத்தினர் நலிவுற்ற பிரி

வினர்கள் பயனடையவும் ஏதுவாக அமையும். மேலும் அம்மாவட்டத்திலுள்ள பிரதம விற்பனைச் சங்கங்கள், மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் இத்திட்டத்தினால் பயன் பெறக் கிடங்குகள், ஊர்திகள், காட்சியறைகள் மற்றும் பணிக் கட்டடம் போன்ற வசதிகளைச் செய்து தருவதால் மேற்படி கூட்டுறவு நிறுவனங்கள் லேவாதேவியை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் அதே நேரத்தில் பொது மக்களுக்காகச் சேவையும் பெருக்க வாய்ப்புகளும் ஏற்படும்.

இதேபோன்று தென்னார்க்காடு மாவட்டமும் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தெரிவு செய்யப்பட்டு, இத்திட்டத்தை ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்த ரூ.1508.207 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகையானது தேசியக் கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்து தமிழக அரசு கடனாக ரூ.1277.754 இலட்சமும் மானியமாக ரூ.115.2365 இலட்சமும் பெற்றும் மாநில அரசின் பங்கு மானியமாக ரூ.115.2365 இலட்சமும் சேர்த்து இத்திட்டத்தை தென்னார்க்காடு மாவட்டத்தில் செயல்படுத்துகிறது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறும் கடன் தொகை ரூ.1277.754 இலட்சத்தை தமிழக அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடனாக ரூ.461.668 இலட்சமும் பங்குத் தொகையாக ரூ.815.816 இலட்சமும் அளிப்பதால் ஏற்படும் வட்டி இழப்பைப் பொது நலன் கருதி தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறது.

1991-92-ஆம் ஆண்டு அதாவது முதலாம் ஆண்டு நிதி உதவியில் 50 சதவிகிதம் திட்டம் செயலாக்கத்திற்கென ரூ.218.722 இலட்சம் அரசு விடுத்துள்ளது. இந்த நிதி உதவியானது 31.3.92 அன்று அரசால் விடுவிக்கப்பட்டதால் இத்திட்டம் 1991-92-ஆம் ஆண்டில் செயலாக்க இயலவில்லை.

இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். தென்னார்க்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி அனுப்பியுள்ள துணைத் திட்ட மதிப்பீடு வழி முறை (System of Sub Project Approval) தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

முதலாம் ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில் எஞ்சியுள்ள 50 சதவிகிதம் ரூ.218.392 இலட்சத்திற்கு முன் மொழிவுகள் அரசுக்கு அனுப்பி விடுவிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையில் கடன் ரூ.68,93,975, பங்குத் தொகை ரூ.1,23,24,325 மானியம் ரூ.26,20,900 ஆகும். ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைத் தென்னார்க்காடு மாவட்டத்தில் 1992-93 முதல் செயல்படுத்த திட்ட அமலாக்கக் குழு மற்றும் திட்ட அமலாக்க முகமைக் குழு போன்றவை ஏற்படுத்த அரசோடு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 98 இரும்புப் பெட்டகங்களும், 135 பாதுகாப்பு அறைகளும், 290 வங்கி முகப்புகளும், 146 கிடங்குகளும், 5 கட்டடங்களும் அமைத்துக் கொடுக்கப்படும். இதேபோன்று உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் பிரதம விற்பனைச் சங்கங்கள், விவசாயப் பொறியியற் சங்கங்கள், கைத்தறிச் சங்கங்கள், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டுமானப் பணிகளும், தொழிற்கூடங்களும், பதனிடும் அலகுகளும் அமைத்துத் தருவதுடன் லேவாதேவி உயர்த்துவதற்காக பங்கு மூலதன உதவிகள் அளிக்க வழிவகை உள்ளதால், இக்கூட்டுறவு நிறுவனங்கள் தங்கள் லேவாதேவியை உயர்த்திக் கொள்ளவும், விவசாய அங்கத்தினர்களுக்கும் அங்கத்தினர் அல்லாதவர்களுக்கும் நலிவுற்ற பிரிவினர்களுக்கும் சேவை செய்ய வாய்ப்புகள் பெருக்கவும் ஏதுவாக அமைந்துள்ளன.



இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் பொருட்டு கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்கள் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக முறையே அக்ரிகல்சுரல் பைனான்ஸ் கார்ப்பரேசன் பம்பாய் மற்றும் டாட்டா எகனாமிக் கன்சல்டன்சி சர்வீசஸ், சென்னை ஆகியோர் நியமிக்கப்பட்டனர். கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அக்ரிகல்சுரல் பைனான்ஸ் கார்ப்பரேசன் தயாரித்த வரைவு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட அறிக்கை 6.7.92 அன்று நடந்த மாநிலக் குழுக் கூட்டத்தில் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டபோது சில மாற்றங்கள் பரிந்துரைக்கப்பட்டன. மாநிலக் குழுக் கூட்டம் பரிந்துரைத்துள்ள மாற்றங்கள் திருத்தம் செய்யப்பட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட வேண்டும்.



இதேபோன்று திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கென, டாட்டா எகனாமிக் சர்வீசஸ், சென்னை தயாரித்த வரைவுத் திட்ட அறிக்கை 21.4.92 அன்று மாவட்டக் குழுக் கூட்டத்தில் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது. மாவட்டக் குழு வரைவுத் திட்ட அறிக்கையைப் பரிசீலனை செய்து சில திருத்தங்கள் பரிந்துரை செய்து திட்ட அறிக்கையை மீண்டும் வழங்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. திருத்திய வரைவுத் திட்ட அறிக்கை டாட்டா எகனாமிக்ஸ் கன்சல்டன்சி சர்வீசஸ் வழங்கப்பட வேண்டியுள்ளது.

மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் 14.9.92 அன்று சட்டப்பேரவையில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தர்மபுரி மாவட்டத்தில் 1992-93-ஆம் முதல் செயல்படுத்தப்படும் என அறிவித்த தன்படி, தர்மபுரி மாவட்டத்தில் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் செயல்படும் 'திட்டக் கண்காணிப்புக் குழு' தர்மபுரி மாவட்டத்திற்காக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட அறிக்கை தயாரித்து மாநில அளவிலான குழு மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலைப் பெறும் பொருட்டு அரசுக்கு அனுப்பி வைத்தது.

இத்திட்டத்தின் மொத்தத் தொகை ரூ.1492.528 இலட்சம் ஆகும். இந்த ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட வரைவு அறிக்கை 5.11.92 அன்று நடைபெற்ற மாநில அளவிலான குழுக் கூட்டத்தில் வைக்கப்பட்டது. இக்குழு இவ்வறிக்கையைப் பரிசீலனை செய்து சில மாற்றங்கள் செய்யவும் சில திட்டங்களைக் கைவிடவும் பரிந்துரை செய்துள்ளது.


எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

**ஏழுமலை தொழில் நுட்பக் கல்லூரி**

சாலாமேடு, விழுப்புரம்-605 602

இ.எஸ். கல்வி அறக்கட்டளையின் கீழ் தமிழக அரசு அங்கீகாரத்துடன் 1983-84-ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் ஐந்து டிப்ளமோ இன் இன்ஜினியரிங் பிரிவுகளுடன் தமிழ்நாட்டில் உள்ள சிறந்த தொழில் நுட்ப பயிலகங்களில் ஒன்றாக விளங்குகிறது. 1990-91-ஆம் ஆண்டு தேர்வில் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பாலிடெக்னிக்குகளிலும் முதலாவதாக இங்கு பயின்ற திரு. ஜி. சரவணன் இடம் பெற்றது இப்பயிலகத்திற்குச் சிறப்பாகும்.

1. சிவில் இன்ஜினியரிங் (Civil Engineering)
2. மெக்கானிக்கல் இன்ஜினியரிங் (Mechanical Engineering)
3. எலெக்ட்ரிகல் & எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் (Electrical & Electronics Engineering)
4. எலெக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் (Electronics & Communication Engineering)
5. கம்ப்யூட்டர் டெக்னாலஜி (Computer Technolo y)



சே.ம. சீனிவாசன்
முதல்வர்

ஏ. சாமிக்கண்ணு
தாளாளர்

# நூல் நயம்

## உலகக் கவிஞர்களின் கவிதைகளில் டாக்டர் புரட்சித்தலைவி

**ஆசிரியர்:** கே.கே. ராஜன்
**வெளியீடு:**
பிரிம்மா பதிப்பகம்,
1, திருவீதி அம்மன் கோவில் தெரு,
சென்னை-600 004.

பக்கம்:60 விலை:ரூ.50/-

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அருமை பெருமைகளை, சிறப்பியல்புகளை, அருந்தொண்டுகளைச் சித்திரிக்கும் சிறப்புக் கவிதைகளின் தொகுப்பே இந்நூல். உலக நாட்டுக் கவிஞர் பெருமக்களின் உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த உணர்ச்சிக் கவிதைகள் தித்திக்கும் தீந்தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. மொழிபெயர்த்த கவிஞர் முருகுவண்ணன் அவர்களையும், இந்நூலை அழகுறத் தயாரித்துத் தொகுத்த கே.கே. ராஜன் அவர்களையும் பாராட்ட வேண்டும்.

## மனோன்மணீயம்

**பதிப்பாசிரியர்:**
முல்லை பி.எல். முத்தையா,
**வெளியீடு:**
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:360 விலை:ரூ.40/-

**த**மிழ் நூல்கள் பலவற்றிலும், முதல் முதலாக நாடக முறையில் வெளிவந்தது மனோன்மணீயமாகும். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, சுந்தரத் தமிழில் எழுதியுள்ள இந்நாடகப் பெருநூல் பலராலும் போற்றப்பட்டு வரும் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். படிக்கவும், நடிக்கவும் ஏற்ற இந்தப் பைந்தமிழ் நாடக நூல், தக்க விளக்கங்களுடன் பதிப்பிக் கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை வரலாறு, மனோன்மணீயக் கதைச் சுருக்கம்- விளக்கம்- விமரிசனம், நாடக மூலம், உரைக் குறிப்புகள் என்று படிப்பதற்கு ஏற்ற வகையில் பக்குவமாய்த் தயாரிக்கப்பட்டிருக்கும் பாங்கு பாராட்டு தற்குரியது.

—பொ. மறைமலை

## மாணவர் மன்றம் மயிலை சிவமுத்து நூற்றாண்டு விழா மலர்

**கிடைக்குமிடம்:** சிவமுத்து நிலையம்,
41, இப்ராகிம் தெரு,
சென்னை-600 001.

பக்கம்:156 விலை:ரூ.50/-

**மா**ணவ மணிகள் மதிநலம் பெற மாணவர் மன்றம் கடந்த 60 ஆண்டுகளாக நற்றொண்டாற்றி வருகிறது. மாணவர் மன்றப் பணிகள் மற்றும் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் அருமை பெருமைகள் குறித்துப் பல கோணங்களில் எழுதப்பெற்ற சிறப்புக் கட்டுரைகள் இதில் அடங்கியுள்ளன.

பல்துறை அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள், தலை சிறந்த கவிஞர்களின் கவிதைகள், சுவையான துணுக்குகள் முதலானவை கருத்துக்கு விருந்தூட்டும் வண்ணம் அமைந்துள்ளன.

## இணையிலா மனிதர் ஏவி.எம்.

**ஆசிரியர்:** பி.வி. கிரி
**வெளியீடு:**
திருமலைப் பதிப்பகம்,
பிளாக்:என்.385,
அண்ணாநகர் கிழக்கு,
சென்னை-600 102.

பக்கம்:104 விலை:ரூ.15/-

**உ**ழைப்பையே மூலதனமாகக் கொண்டு உயர்ந்த உத்தமர் திரு. ஏவி.எம். அவர்கள். பள்ளிப் பருவத்திலேயே நாடக ஆர்வம் கொண்டு, அதுவே படிப்படியாக வளர்ந்து பிற்காலத்தில், படவுலகுக்கு நுழைய அடித்தளம் அமைத்தது.

தமிழ்த் திரையுலகில் பல திருப்பங்களை உண்டாக்கி, பல புதுமைகளை உருவாக்கிய முன்னோடி அவர். தம் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகளையெல்லாம் துணிவுடன் தாங்கி, சாதனைகளாக்கிக் காட்டிய சரித்திர நாயகர் திரு. ஏவி.எம்.

அவரது வாழ்க்கை வரலாறு, முன்னேறத் துடிப்போர்க்கு ஒரு முன் மாதிரியாக விளங்கும் என்றால் அது மிகையில்லை. மாணவர்கள், இளைஞர்கள் இந்நூலைப் படிக்க வேண்டும். இந்தச் சுவையான உண்மைக் கதையை எளிய, இனிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர். பள்ளியில் பாடமாக வைக்கத் தக்க பயனுள்ள நூல்.

## யாருக்காக உலகம்

**ஆசிரியர்:** மூவேந்தர் முத்து
**வெளியீடு:**
பூவழகி பதிப்பகம்,
29/2 சீனுவாச பெருமாள்
சன்னதி தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

பக்கம்:324 விலை:ரூ.40/-

**எ**ழுத்து இவருக்குப் புதிதல்ல; ஏற்கெனவே இவர் சில படைப்புகளைத் தமிழுக்குத் தந்திருக்கிறார்.

சொல்லும் செயலும் முரண்படுவதென்பது இயல்பாகிவிட்ட இந்த காலத்தில்- சொல்வதைச் செயலாக்குவதும், செயலாக்க முடிவதை மட்டுமே சொல்வதுமாக வாழ்கிற கதிரவனே இந்த நாவல் முழுவதும் விரவியிருக்கிறார்.

பல இடங்கள் குறிப்பிடும்படி இருந்தாலும் குறிப்பாக "மான்போல் ஒரு பெண் துள்ளித் திரிந்தால் அவளைப் புலிக் குணம் கொண்டவர்கள் துரத்துவார்கள்"

"இந்த உலகம் யாருக்காக, வாழ்க்கை யாருக்காக என்றும் அப்போது புரியவில்லை" என்று கங்கா கூறும்போதும்,

"நீதி என்று வரும்போது ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி இல்லை. அதுவும் இந்தக் காலத்தில் பெண்கள் எல்லா நிலைகளிலும் உயர்ந்து உன்னத நிலையில் இருக்கிறார்கள்" என வெண்ணிலா கூறும்போதும் 'உலகம் யாருக்காக?' என்பதைப் புரிய வைக்கிறது. தலைப்பில் கவிஞர்களின் பாடல் வரிகளைச் சொல்லிக் கதையை கொண்டு செல்வது மேலும் மெருகு சேர்க்கிறது.

சுருங்கக் கூறின் "மூவேந்தர் முத்து அவர்களின் "யாருக்காக உலகம்" படிக்க வேண்டிய சொத்து!

—மருதமுத்து

## அருட்பெருஞ்சோதி வள்ளலார்

**ஆசிரியர்:** ஸ்வாமி முருகானந்தா
**வெளியீடு:**
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோயில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.16/-

**வ**ள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல, அவர் உலக மாந்தர் உய்ய வேண்டி உணர்த்திய உண்மைகளையும் அழகுறத் தொகுத்துக் கூறுகிறது இந்நூல்.

வள்ளலாரின் பெருமை சொல்லவும் அரிதே என்று சொல்லத்தக்க அளவில், சொல் மாலை கட்டியுள்ளார் நூலாசிரியர். எல்லாத் திறத்தாரும் படித்துப் பயன் பெறத்தக்க கருத்துக்கள் பொதிந்துள்ள நூல்.



# தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி - சில தகவல்கள்

**த**மிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி 1905-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டு தமிழகத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கடந்த 86 ஆண்டுகளாகப் பயனுள்ள சேவை புரிந்து வருகிறது.

வங்கி, குறுகிய கால மற்றும் நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்களை வழங்கி வருவதுடன், மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு நூற்பாலைகள், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் உட்பட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றி வருகிறது.

### பங்கு மூலதனம்

31.10.1992 ஆம் நாளன்று வங்கியின் பங்கு மூலதனம் ரூ.5.83 கோடியாகும். இதில் தமிழ்நாடு அரசு ரூ.1.26 கோடி வங்கியின் பங்கு மூலதனத்தில் பங்கேற்றுள்ளது. மாநிலத்திலுள்ள 18 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ரூ.4.50 கோடி அளவுக்குப் பங்குகள் எடுத்துள்ளன.

### காப்பு மற்றும் இதர ஒதுக்கீட்டு நிதிகள்:

31.10.1992 அன்று வங்கியின் காப்புநிதி 31.77 கோடியாகும். இயற்கையில் சீற்றத்தால் ஏற்படும் பயிர்ப் பாதுகாப்பிற்காக மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு நடுத்தரக் கால மாற்றுக் கடன்கள் வழங்க நிறுவப்பட்ட வங்கியின் வேளாண்மைக் கடன் (நிலைப்படுத்தும்) நிதியில் 31.10.1992-ஆம் நாளன்று ரூ.25.20 கோடி திரண்டுள்ளது. வங்கியின் இதர ஒதுக்கீடுகளில் ரூ.17.04 கோடி உள்ளது.

31.10.1992 அன்று வங்கி ரூ.522.59 கோடி வைப்புகள் பெற்றுள்ளது. 31.10.1992-ஆம் நாளன்று வங்கி பெற்ற கடன் ரூ.432.69 கோடியாக உள்ளது. 31.10.1992 அன்று அரசு (மத்திய மற்றும் மாநில) கடன் உறுதி ஆவணங்கள், மாநில நிலவள வங்கியின் கடனீட்டு ஆவணங்கள், பங்குகள் ஆகியவற்றில் ரூ.176.27 கோடியளவிற்கு முதலீடுகள் உள்ளன.

### வழங்கிய கடன்கள்:

31.10.1992-ஆம் நாளன்று வங்கி வழங்கிய கடன்களின் நிலுவை ரூ.792.52 கோடியாக உள்ளது. இவ்வங்கி வேளாண்மைக் கடன்கள், நடுத்தரக்கால வேளாண்மை சார்ந்த கடன்கள், நடுத்தரக்கால மாற்றுக் கடன்கள், நெசவுத் தொழில் முதலியனவற்றிற்குத் தேசிய வங்கி வழங்கும் நிதியைப் பெற்றுத் தருகிறது. மேலும், வங்கி அதனது சொந்த நிதியாதாரங்களிலிருந்து கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள், கூட்டுறவுச் சர்க்கரை மற்றும் நூற்பாலைகள் முதலியனவற்றிற்கு வழங்கும் நிதி வசதிகளுக்கு ஈடு செய்யும் காசுக் கடன் ஒப்பளிப்பு அளித்து வருகிறது. மேலும், இவ்வங்கி தேசிய வங்கியின் முழு மறு நிதி வசதித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கான பெருத்த நிதி உதவித் திட்டம், எரிவாயு மேம்பாட்டுத் திட்டம் முதலியனவற்றிற்கும், புன்செய் நில மேம்பாடு உட்பட்ட வேளாண்மை சார்ந்த காரியங்களுக்கான திட்டங்களுக்கும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு மறுநிதி வசதி அளித்து வருகிறது. மேலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பொது வங்கியியல் தேவைகளுக்காக அவை முதலீடு செய்துள்ள அரசு பொறுப்பாட்சியர் கடன் பத்திரங்கள் மற்றும் தலைமை வங்கியில் வைத்துள்ள நிலை வைப்புகளின் பேரில் அவற்றின் நடப்புக் கணக்கின் மீது அதிகப்பற்று வசதிக்கு ஒப்பளிப்பு அளித்து வருகிறது.

சிறு அளவுத் தொழில்கள், சாலைப் போக்குவரத்து, சிறு வாகனம் இயக்குபவர்கள் ஆகியவற்றிற்கு நகர வங்கிகள் வழங்கும் காலக் கடன்களுக்கான மறுநிதி வசதியை இந்தியச் சிறுதொழில் மேம்பாட்டு வங்கியிடமிருந்து பெற்றுத் தருகிறது. ரிசர்வ் வங்கி மறுநிதித் திட்டத்தின் கீழ் நகர வங்கிகள் சிறு அளவு தொழில்கள் நடைமுறை மூலதன வசதிக்கு மறுநிதி வழங்குகிறது.

இவ்வங்கி கிராமக் கைவினைஞர்கள், மிகச் சிறு கிராமக் குடிசை மற்றும் சிறு அளவு தொழில்கள் முதலியனவற்றிற்குக் கடன் வழங்க வேளாண்மை சாராப் பிரிவின் கீழ் தேசிய வங்கியிடமிருந்து மறுநிதி வசதி பெற்றுத் தருகிறது. தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழ்நாடு தொழிலியல் கூட்டுறவு வங்கி (TAICO BANK) கடன்கள் வழங்குவதற்குத் தேசிய வங்கியிடமிருந்து மறுநிதி வசதி பெற்றுத் தருகிறது.

31.10.1992 அன்று வங்கியின் நடைமுறை மூலதனம் ரூ.1090.69 கோடியாக உள்ளது.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழிலியல் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் இணையம், திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துச் சாகுபடியாளர் இணையம் முதலிய தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு இவ்வங்கி நேரிடையாக நிதி வசதியினை அளித்து வருகிறது.

### சர்க்கரை மற்றும் நூற்பாலைகளுக்குக் காலக்கடன் வசதி:

மாநிலத்திலுள்ள சர்க்கரை மற்றும் நூற்பாலைகளுக்கு வங்கி அதனது சொந்த நிதியிலிருந்து காசுக் கடன் வசதி அளித்து வருகிறது. மேலும், தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI), இந்தியத் தொழில் நிதியுதவிக் கழகம் (IFCI), இந்தியத் தொழிற் கடன் முதலீட்டுக் கழகம் (ICICI), ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆகியவை காலக்கடன் வழங்குவதற்கு இடைப்பட்ட காலத்தில் இடைநிரப்பு வசதியளித்து வருகிறது. மேலும் மாநிலத்திலுள்ள சர்க்கரை மற்றும் நூற்பாலைகள் தவணை முறையில் இயந்திரச் சாதனங்களைப் பெறுவதற்கு வரையும் வட்டி பட்டிகளை ஏற்றுக்கொள்ளும் பொறுப்பேற்றுள்ளது.

**டி.எம். ஆறுமுகம், இ.ஆ.ப.,**
**தனி அலுவலர் - மேலாண்மை இயக்குநர்**
**தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுத் தலைமை வங்கி**

**கூட்டமைப்பின் அடிப்படையில் வழங்கும் கடன் உதவி:**

கனரா வங்கியைத் தலைமையாகக் கொண்ட வர்த்தகங்களை இணைக்கும் கூட்டமைப்பின் கீழ், தேசிய வங்கியின் கடன் வழங்கும் உரிமம் அளிக்கும் திட்டத்தின்கீழ் அனுமதி பெற்று இவ் வங்கி தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ.2.50 கோடி அளவிற்கு காசுக்கடன் வரம்பு ஒப்பளித்துள்ளது. குறுகிய கால வேளாண்மைக் கடன் களுக்கான வட்டி வீதத்தை குறைத்ததன் விளைவாக, தலைமைக் கூட்டுறவு வங்கி களுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் பொருட்டு, தேசிய வங்கி, பாரத ஸ்டேட் வங்கியைத் தலைமையாகக் கொண்டு பல்வேறு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளை உள்ளடக்கிய ஒரு உணவு தானியக் கூட்டமைப்பை உருவாக்கி யுள்ளது. பதிவாளரது அனுமதியுடன் இவ்வங்கி மேற்குறிப்பிட்ட கூட்டமைப் பில் ரூ.5 கோடி செலுத்தியுள்ளது.

**தேசிய வீட்டு வசதி வங்கி:**

குடியிருப்பு வீடுகள் வாங்கவும், கட்டு வதற்கும் மற்றும் பழுது பார்த்தலுக்கும் வங்கிக்கடன்கள் வழங்கவும் அதற்கு முழு அளவு மறுநிதி உதவி வழங்கவும் தேசிய வீட்டு வசதி வங்கி ஒப்புக் கொண்டுள் ளது. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் இவ்வகைக் கடன்களுக்கு மறு நிதி வழங்கப்படும் எனத் தெரிவித் துள்ளது.

**உலக வங்கி கிடங்கு கட்டுமானத் திட்டம்:**

தேசியக்கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், மூன்றாவது உலக வங்கி கிடங்கு கட்டு மானத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் கிடங்கு வசதியை மேம்பாடு செய்வதற் கான ஒரு திட்டத்தை முன்வைத்துள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகக் கடனுதவி இவ்வங்கியின் மூலமாக அளிக்கப்படும். மாநில அரசு இக்கடனை 3 ஆண்டுகள் ஒத்திவைப்புக் காலத் துடன், 12 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துவதற்கான அரசு பொறுப்பு நிதி யளித்துள்ளது.

**தொழில் நுட்பப் பிரிவு:**

வேளாண்மை சாராக் கடன்கள் வழங்குவதற்குத் தேவையான தொழில் நுட்ப அறிவினை மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்குத் தந்து உதவிடவும், இவ் வகைக்கடன் விண்ணப்பங்களைப் பரி சீலனை செய்யவும் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பப் பிரிவுத் தொழில் துறையிலிருந்து மேலும் ஒரு உதவி இயக்குநர் எடுத்துக் கொண்டதன் மூலம் வலிவூட்டப்பட்டது.



**தருமபுரி மாவட்டத்தின் கர்நாடக எல்லையோரப் பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் பொதுவாக மிதமான வெப்பமே காணப்படும். ஆண்டில் மார்ச் தொடங்கி மே மாதம் வரை இங்கு பொதுவாக அதிக வெப்பம் காணப்படும். ஏப்ரல் மாதத்தில் இந்த மாவட்டத்தின் அதிகபட்ச சீதோஷ்ண நிலை 38 டிகிரி செண்டிகிரேடு. டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை இந்த மாவட்டம் பொதுவாகக் கடுங்குளிராக இருக்கும். ஜனவரி மாதத்தில் இதன் சீதோஷ்ண நிலை குறைந்த அளவு 17 டிகிரி செண்டிகிரேடாக இருக்கும். தருமபுரி மாவட்டத்தின் ஆண்டு மழை அளவு 825 மி.மீட்டர். இது மாநிலத்தின் சராசரி மழை அளவைக் காட்டிலும் 10 சதம் குறைவாகும்.**

**சார்பு நிறுவனங்களின் முன்னேற்றம்:**

இவ்வங்கி 1985-86-ஆம் ஆண்டு முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நவீன வங்கி முகப்பு அமைக்கவும், மேஜை, நாற்காலி போன்ற தளவாடச் சாமான்கள் வாங்கவும் ஆகும் செலவில் 50 விழுக் காட்டினை மானியமாக அளித்து வரு கிறது. இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக் கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை 1000-லிருந்து 1640-ஆக உயர்த்தப் பட்டுள்ளது. 31.10.1992 வரை வங்கியால் இத்திட்டத்தின் கீழ் 584 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ.33.36 இலட்சம் மானிய மாக அளிக்கப்பட்டுள்ளது.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வசூல் பணியினைச் செவ்வனே நிறைவேற்று வதற்காக அவைகளுக்கு இவ்வங்கி வாக னங்கள் வாங்கிக் கொடுத்துள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன்கள் வழங்க ஏதுவாக இவ்வங்கி 150 தேர்ந்தெடுக்கப் பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பெட்டகங்கள் வழங்கியுள்ளது.

இவ்வங்கி தனது நிதியிலிருந்து மாநிலத்திலுள்ள அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் அவற்றின் மாநில வரைவோலைத் திட்டத்தை மேலும் சிறப்பாகவும் துரிதமாகவும் செயல்படுத்த கம்ப்யூட்டர் பிரிண்டர், குளிர்சாதன வசதி மற்றும் அதற்குத் தேவையான சாஃப்ட்வேர் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

**வேளாண்மைக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையம்:**

கிடங்குகளைப் பெ. ற்றுள்ள தொடக்கக் கூட்டுறவுகளின் பணியாளர் களுக்குத் தேவையான பயிற்சி அளிப்ப தற்கு, இவ்வங்கி, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலமாக உலக வங்கி யிடம் பெற்ற நிதியுதவியுடன் ஒரு பயிற்சி நிலையத்தைத் துவக்கியுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்துக்கான சொந்தக் கட்டடம் மாதவரத்தில் ரூ.245 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதில் ரூ.110 இலட்சம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மானியமாகும்.

ஒரே சமயத்தில் நான்கு பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு வசதியாக இப்பயிற்சி நிலையம் உருவாக்கப்பட் டுள்ளது. தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட மாநிலத்திள்ள அனைத்து கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் பயிற்சித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஒரு நிறுவனமாக இது அமையும்.

**தொடக்கக் கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி நிதி:**

தொடக்கக் கூட்டுறவு நிறுவனங் களுக்கு உதவும்பொருட்டு, தலைமைக் கூட்டுறவு வங்கி அளவில் ''தொடக்கக் கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி நிதி'' உருவாக்கப்பட்டுள்ளது. தலைமை வங்கியும், அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், தங்களது நிகர இலாபத்தில் 5 விழுக்காட்டினை இந்த நிதிக்கு ஒதுக்க வேண்டும். 31.10.1992 வரை இந்த நிதியில் சேர்ந்துள்ள மொத்தத் தொகை ரூ.74.57 இலட்சமாகும்.

**கிளைகள்:**

சென்னை மாநகரம் முழுமையிலும் பரவலாக 38 கிளைகளை வங்கி துவக்கி யுள்ளது. இக்கிளைகள் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ளதால், வாடிக் கையாளர்களின் வசதிக்கிணங்க, ஐந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகள் ஞாயிற்றுக் கிழமைகளில் செயல்படுகின்றன. வெளி நாட்டில் வசிக்கும் இந்தியர்களிடமிருந்து வைப்புகள் திரட்டும் விதத்தில் ஆறு தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளில் வசதி செய்யப்பட்டுள்ளது. தலைமை அலு வலகம் மற்றும் 29 கிளைகளில் பாது காப்புப் பெட்டக வசதியுள்ளது.

**செயல்பாட்டு விருதுகள்:**

1982-83-ஆம் ஆண்டிலிருந்து சிறப் பாகச் செயல்படும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு விருது வழங்கும் திட்டத் தினை மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையம் நிறுவியுள்ளது.

சிறந்த செயல்பாட்டிற்கான ஏதாவது ஒரு விருதினை 1985-86-ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளாக இவ்வங்கி தொடர்ந்து பெற்று வருகிறது.

இதனைப் பின்பற்றி மாநிலத்திலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடையே ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்த வும், அவற்றின் செயல்பாடுகளில் மேலும் முன்னேற்றம் ஏற்படுவதை ஊக்கு விக்கவும், 1990-91-ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டு விருதுகள் வழங்கும் திட்டத்தினை இவ்வங்கி செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசின் உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை யின் செயலரைத் தலைமையாகக் கொண்ட குழுவினால் மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட விபரங் களின் அடிப்படையில் 1990-91-ஆம் ஆண்டிற்கான சிறந்த செயல்பாட்டு விருதுகள் முடிவு செய்யப்பட்டன. இதன் படி, தென்னார்க்காடு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி சிறந்த வங்கியாகத் தெரிவு செய்யப்பட்டது.

**இலாபம்:**

இவ்வங்கி 1991-92-ஆம் ஆண்டில் ரூ.12.63 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. நடைமுறை மூலதன அதிகரிப்பும், நிதி யாதாரங்களைச் சீரிய முறையில் பயன் படுத்தியதும்தான் இந்த இலாப அதி கரிப்புக்கு முக்கியக்காரணங்களாகும்.

இவ்வங்கி 1990-91-ஆம் ஆண்டில் 14 சதவிகிதம் பங்கு ஈவுத்தொகை வழங்கியது. 1991-92-ஆம் ஆண்டிலும் அந்த அளவிற்கே வழங்க உத்தேசித் துள்ளது. ●

**★ செல்வத்தில் எல்லாம் சிறந்த செல்வம் கருத்துச் செல்வம். அடுத்து வரும் தலைமுறையினருக்கு அத் தகைய செல்வத்தை நாம் விட்டுச் செல்ல வேண்டும். அதற்கான பணியில் ஈடுபட்டால் சமுதாயம் நன்கு வாழ முடியும்.**






**தருமபுரி மாவட்டத்தில் நீர்வளம் குறைவே என்றாலும் மீன்வளத்திற்குப் பஞ்சமில்லை!**

**மாவட்டம் முழுமையிலுமாக 210 ஏரிகள் இருக்கின்றன; மீன் வளர்ப்பு நீர் நிலைகள் 10 உள்ளன. இந்தப் பத்திலும் எப்போதும் தண்ணீர் இருக்கும்படி கவனிக்கப்படுகிறது.**

**இங்கெல்லாம் மீன் வளர்ப்பு என்பது பத்தாண்டு குத்தகைக்கு விடப்படுகிறது; இது குறித்த தொகையை அந்தந்த ஊராட்சி ஒன்றியமே நிர்ணயிக்கிறது. திரு. வி. கே. ஜெகந்நாதன் தருமபுரியில் உள்ள மீன்வளர்ப்பு அமைப்புகளின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருக்கிறார்.**

**தருமபுரி மாவட்டத்தில் - கட்லா, ரோகு, மிர்கால், காமன்கார்ப் (சாதாக் கெண்டை), வெள்ளிக்கெண்டை, புலிக் கெண்டை போன்ற வகை மீன்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன- அல்லது கிடைக்கின்றன. மீன் வளர்ப்பில்- தளி, ஓசூர், தேன்கனிக்கோட்டை, கௌமங்கலம் போன்ற ஊர்கள் முன்னணியில் உள்ளன.**

**மீன் வளர்க்க முன்வருவோர்க்கு- அரசு விலை நிர்ணயத்தில் 25 சதவிகிதம் உதவித்தொகை என்ற வகையில் மீன் சினை தரப்படுகிறது தருமபுரி மாவட்டத்தில்! இந்த மீன்வளர்ப்பு முகமைக்கு, மாவட்ட ஆட்சியாளரே தலைவராவார். இப்போதைக்கு, இம் முகமையின் பொறுப்பில் 467 எக்டேர் நீர்ப் பரப்புள்ள 164 ஏரிகள் இருக்கின்றன. மீன் வளர்க்கும் விருப்புள்ளோருக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது இங்கே. இதுமட்டுமல்ல; மீன் வளர்க்கவும், அதற்கான இடுபொருட்களுக்காகவும் தக்கபடி கடனும் மானியமும் கூட அளிக்கப்படுகிறது. சொந்த நிலம் வைத்திருப்போர், ஒரு எக்டேரில் மீன் வளர்ப்புக் குளம் கட்ட மொத்தம் ரூ.1,00,000 செலவிட்டால், அதில் ரூ.20,000-ஐ இம் முகமை மானியமாகத் தரும். இத்திட்டம் கடந்த ஆண்டிலிருந்து தான் செயல்படுத்தப்படுகிறது.—'இந்திரன்'**




எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

சிவமயம்

ஸ்ரீ அருஞ்சுனை காத்த அய்யனார் சுவாமி அருள்

தொலைபேசி: 3597, 3472

**ஸ்ரீ செந்தில் ஆண்டவர் ஆயில் மில்ஸ்**

**&**

**விநாயகர் லாரி சர்வீஸ்,**

கிழக்கு பாண்டி ரோடு,

விழுப்புரம்.

**நிறைந்த வசதி** **குறைந்த வாடகை**

விழுப்புரத்தில் புதியதோர்

**பிரம்மாண்டமான கல்யாண மண்டபம்**

**மணிஅரசி திருமண மண்டபம்**

கிழக்கு பாண்டி ரோடு

விழுப்புரம்

**உரிமையாளர்கள்:**

சி. சுப்பிரமணிய நாடார்

(மதுரை நாடார் மகாஜன சங்கம் கல்வித் தந்தை)

எஸ். திருநாவுக்கரசி

எஸ். சுகுமார்

எஸ். முருகானந்தம்


# ஆதிதிராவிடர் நலம்




**வி.பி. துரைசாமி**

தலைவர்

தமிழ்நாடு ஆதிதிராவிடர்

வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்


தமிழக அரசு இதுவரை ஆதி திராவிட மக்களின் மேம்பாட்டுக்காக மாபெரும் பணியை ஆற்றியுள்ளது. ஆதி திராவிட மக்களைக் காப்பாற்ற நான் இருக்கிறேன் என்று சொல்லி மத்திய அரசிடம் ரூ.16 கோடிக்கு உத்தரவாதம் கொடுத்துத் தொகையை வாங்கி ஆதி திராவிட மக்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள்.

தாட்கோ நிறுவனம், பயனாளிகள், வங்கி அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து திட்டத்தைச் சீரிய முறையில் நிறைவேற்றி வருகிறோம். தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் ஆலோசனைப்படி, மாவட்டந்தோறும் பயணம் சென்று, மேற்கண்ட மூவரையும் ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டு, நலத்திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றிட நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

வீடு கட்டுவதற்காகவே தொடங்கப்பட்ட தாட்கோ நிறுவனத்திடமிருந்து, வீடு கட்டும் பணியை உள்ளாட்சித்துறைக்குக் கடந்த கால அரசால் மாற்றப்பட்டுள்ள அதிகாரத்தை, மீண்டும் தாட்கோ நிறுவனத்திடமே ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களிடம் முன்வைத்துள்ளேன்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் 15.2.74 ...று தோற்றுவிக்கப்பட்டது.

நலிந்த இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுத்தல், இந்து ஆதிதிராவிடர் மாணவ மாணவியருக்குப் பள்ளிகள், தங்கும் விடுதிகள், சமுதாயக் கூடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான மையங்கள் (பால்வாடிகள்) ஆகியவற்றிற்கு இலவசமாகக் கட்டடங்கள் கட்டிக்கொடுத்தல், ஆதிதிராவிடர்களின் வருமானத்தை வறுமைக்கோட்டிற்கு மேலே உயர்த்திட பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துதல், அரசால் அவ்வப்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்காகச் சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

தாட்கோ - வளர்ச்சிப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு எனும் இரு பிரிவுகளாக இயங்கி வருகின்றது.

**வளர்ச்சிப் பிரிவு:**

இப்பிரிவு, பொது மேலாளர் (வளர்ச்சி)-யின் கீழ் இயங்கி வருகிறது. இது மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு மாவட்ட வருவாய் நிலையிலுள்ள மண்டல மேலாளரின் கீழ் செயல்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் துணையாட்சியர் நிலையிலுள்ள அலுவலர் மாவட்ட மேலாளர் (தாட்கோ) தாட்கோ திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

**தொழில்நுட்பப் பிரிவு:**

தொழில்நுட்பப் பிரிவு, பொது மேலாளர் (தொழில்நுட்பம்) 8 கோட்டங்களாக இயங்கி வருகிறது. ஒவ்வொரு கோட்டமும் ஒரு செயற்பொறியாளரின் தலைமையின் கீழ் செயல்படுகிறது.

ஆதிதிராவிடர் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றம் அடைய, கீழ்க்கண்ட பொருளாதாரத் திட்டங்களை மத்திய மாநில அரசின் நிதி உதவியுடன் தாட்கோ செயலாற்றி வருகின்றது.

1. சுய வேலைவாய்ப்புத் திட்டம்
2. சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்.
3. விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டம்.
4. சிறுதொழில் கடன்.
5. தனி நபர் தொழில் முனைவோர் ஊக்குவிப்புத் திட்டம்.
6. பிற துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்கள்.

**1. சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

நகர்ப்புறம் மற்றும் கிராமங்களில் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் இந்து ஆதிதிராவிட மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தி அவர்கள் சுய தொழில் செய்ய அவரவர் தகுதி, பயிற்சி மற்றும் அனுபவம் ஆகியவற்றிற் கேற்பத் தொழில் உருவாக்கிட நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அதிகப்பட்சமாக ரூ.10,000 நிதி வசதி பெறலாம். மொத்த திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகித வங்கிக் கடனாகவும், எஞ்சிய 50 சதவிகிதம் தாட்கோவின் மானியமாகவும் பெறலாம். இவ்வாறு அதிகப்பட்சமாக ரூ.5,000 மானியமாகத் தாட்கோ வழங்குகிறது.

மளிகைக் கடை, பெட்டிக்கடை, டீக்கடை, காய்கறிக் கடை, சைக்கிள் கடை, சிறு பாத்திரக் கடை, இட்லி ஆப்பக் கடை, கறிக்கடை, தோல் பொருள் விற்பனைக் கடை, மைக்செட், சைக்கிள் ரிக்ஷா, கட்பீஸ் வியாபாரம், மாவரைக்கும் இயந்திரம், விறகு தொட்டி, சுண்ணாம்புக்காளவாய், செங்கல் தொழில், தச்சுத் தொழில், ரெடிமேட் துணி விற்றல், தையல் இயந்திரம் அளித்தல், கூடை மற்றும் பாய் முடைதல், நைலான் பை முடைதல், ரேடியோ ரிப்பேர், கடிகார ரிப்பேர், கயிறு திரித்தல், கடலை மிட்டாய் தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல் மற்றும் வருமானம் ஈட்டக்கூடியதும் அதிக முதலீடு தேவையில்லாததுமான பிற சுய தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

## சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள்

இத்திட்டத்தின்கீழ், இந்து ஆதி திராவிட இளைஞர்கள் சுய வேலை வாய்ப்புப் பெறும் வகையில் அவரவர் கல்வி மற்றும் தகுதி அடிப்படையில் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிகள் அரசு நிறுவனங்கள் மூலமும், தானியங்கிச் சேவை நிறுவனங்கள் (Voluntary Organisation) மூலமும் மற்றும் சிறந்த தனியார் நிறுவனங்கள் மூலமும் அளிக்கப்படுகின்றது.

பயிற்சியின்போது ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் மாதம் ரூ.300 உதவித் தொகையும், பயிற்சியின் முடிவில் ரூ.500 பெறுமான தொழில் உபகரணங்களும் இலவசமாக அளிக்கப்படுகின்றன.



நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களில் பயிற்சி அளிக்க அரசு ஆணை வழங்கி தாட்கோ மாவட்ட மேலாளர் மூலமாகச் செயல்படுத்தி வருகிறது:

கம்ப்யூட்டர் பயிற்சி, அளிக்கப்படும் காலம் 12 மாதங்கள். இதேபோல, ரேடியோ மற்றும் டி.வி. மெக்கானிசம் டேப் ரிக்கார்டர், ஒலிபெருக்கி, வி.சி.ஆர். வீடியோ மற்றும் பூஸ்டர் மெக்கானிசம் 12 மாதங்கள், ரொட்டி மற்றும் மிட்டாய் தயாரித்தல் 6 மாதங்கள், எண்ணெய்ப்பொறி மற்றும் பெட்ரோல் மெக்கானிசம் 6 மாதங்கள், டெய்லரிங் 6 மாதங்கள், டர்னர் மற்றும் லேத் 12 மாதங்கள், ஃபிட்டர் பிளம்பிங் மற்றும் பம்பு மெக்கானிசம் 12 மாதங்கள், ஆட்டோமொபைல் மெக்கானிசம் மற்றும் கார் ஓட்டுநர் மெக்கானிசம் 12 மாதங்கள், கம்பளி ஆடை தயாரித்தல் 6 மாதங்கள், சிம்பிள் ஒயரிங் 6 மாதங்கள், வெல்டிங் 12 மாதங்கள், குளிர்சாதனம் மற்றும் குளிர்சாதனப் பெட்டி மெக்கானிசம் 12 மாதங்கள், ஆட்டோ எலக்ட்ரிஷியன் 6 மாதங்கள், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி 6 மாதங்கள், அச்சுக்கோத்தல் மற்றும் பைண்டிங் 6 மாதங்கள், சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து 12 மாதங்கள், செயற்கை வைரம் பட்டை தீட்டுதல் 6 மாதங்கள், மின்மோட்டார் ரீவைண்டிங் 6 மாதங்கள், பாட்டரி சார்ஜிங் 6 மாதங்கள், மரம் மற்றும் கல் சிற்ப வேலை 6 மாதங்கள், ஸ்கிரீன் பிரிண்டிங் 6 மாதங்கள், தோல் பதனிடுதல் 12 மாதங்கள், காலணி தயாரித்தல் 12 மாதங்கள், இரண்டு சக்கர வாகனம் பழுதுபார்த்தல் 6 மாதங்கள்.

இவை தவிர, காவல்துறைப் பணி, வங்கிப் பணி, இந்திய ஆட்சிப் பணி தேர்வுகளில் சேருவதற்கு முன் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பெரும்பான்மையான ஆதிதிராவிட மக்கள் விவசாயத்தையே சார்ந்திருப்பதால், அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்களைத் தாட்கோ நிறைவேற்றி வருகிறது.

### சிறு தொழில் கடன் (Petty Trade)

இத்திட்டத்தின்கீழ், பெட்டிக்கடை, காய்கறிக் கடைகள் ஆகியன போன்ற சிறு முதலீட்டில் எளிதாக நடத்தக்கூடிய கீழ்க்கண்ட தொழில்கள் தொடங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி அல்லாது கிறித்துவ இந்து ஆதிதிராவிடர், மதம் மாறிய கிறித்துவருக்கும், நிதி உதவி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், பெறப்படும் கடனில் 50 சதவிகித மானியமும் 25 சதவிகித விளிம்புத் தொகைக் கடனும் மீதமுள்ள 25 சதவிகிதம் வங்கிக் கடனாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட தொழில்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது:

அச்சகம், காலணிகள் செய்தல், மோட்டார் மெக்கானிக், டிங்கரிங் மற்றும் ஸ்பிரே பெயிண்டிங், லேத் மற்றும் டர்னிங் பட்டறை, மின் மற்றும் கேஸ் வெல்டிங் மற்றும் கிரில் வேலைகள், மளிகைக் கடைகள் - (பேரூர்களில்), நகரங்களில் - ரேஷன் கடைகள் உட்பட, ஹோட்டல்கள் (டீ, காபி, பிஸ்கட், குளிர்பதனங்கள், கடைகள், இனிப்புக் கடைகள் வீட்டுக் கடைகள் உட்பட.) துணி மற்றும் தையல் கடைகள், சைக்கிள் வாடகை மற்றும் ரிப்பேர் கடை, மோட்டார் சைக்கிள் ரிப்பேர் கடை, பழம் மற்றும் காய்கறிக்கடை (வெற்றிலை பாக்குக் கடை உட்பட), தோல் பயிற்சி, தட்டெழுத்து நிலையம், மருந்துக்கடை (அலோபதி, ஆயுர்வேதம், யுனானி மற்றும் சித்த மருத்துவம் உட்பட), விறகு மற்றும் கரிக்கடை, தச்சு மற்றும் ஸ்லேட் செய்தல், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுதல், வணிகக் கலைகள், கயிறு தொழில், செருப்புத் தொழில், முடி திருத்தகம், லீகோ கரிக்கடை, செங்கற் சூளை, சுண்ணாம்புக் காளவாய், மாவு அரைக்கும் இயந்திரம், மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா ஓட்டுதல், ஊசியும், பாசி மணியும் செய்தல், பெட்ரோல் மற்றும் டீசல் துணை விற்பனை நிலையம் பிரம்புத் தொழில்.

### பயனாளிகள் தேர்வு மற்றும் கடன் வழங்கல் முறை

சுய வேலைவாய்ப்பு, விவசாயம் மற்றும் அதைச்சார்ந்த திட்டங்களுக்கு தாட்கோ மானியம் மற்றும் வங்கிக் கடனுதவி பெறுவதற்கு அரசு ஆணைப்படி, நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன:

மாவட்ட அளவில் மாவட்ட மேலாளர் (தாட்கோ)-வினால் ஆதிதிராவிடர் பயனாளிகளிடமிருந்து கடன் கோரி விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. பெறப்பட்ட விண்ணப்பங்கள் வட்டார அளவில் நடைபெறும் தேர்வாணைக் குழு பரிசீலனை செய்கிறது. இக்குழுவில் தாட்கோ மாவட்ட மேலாளர் தலைவராகவும், பிரதம வங்கியின் மேலாளர் சம்பந்தப்பட்ட பகுதியின் வங்கி மேலாளர், மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர்/பிரதிநிதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக அலுவலர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

பயனாளிகள் குழு நேர்முகத் தேர்வு செய்கிறது. குழுவினால் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்குக் கடன்



வழங்க பரிந்துரை செய்யப்படுகிறது. வங்கிகள் கடன் வழங்கி அனுமதி அளித்த உடன் மாவட்ட மேலாளர்கள் மானியம் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு விடுவிக்கின்றனர். மானியம் பெற்றபின் வங்கிகள் பயனாளிகளுக்குக் கடன் வழங்கி சொத்துக்கள் ஏற்படுத்துகின்றனர்.

### புதிய நபர் தொழில் முனைவோர் திட்டம்

சிறப்புமிகு இத்திட்டம் மூலம் இந்து ஆதிதிராவிடத் தொழில் முனைவோர் புதுத் தொழில் தொடங்கிட நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தாட்கோ ரூ.15,000 மானியம் வழங்குகிறது. மொத்தத் திட்ட மதிப்பீட்டில் 20 சதவிகிதம் அல்லது அதிகப்பட்சமாக ரூ.85,000 வரை தொடக்க நிதி உதவி அளிக்கப்படுகிறது. வழங்கப்படும் தொடக்க நிதி உதவிக்கு ஆண்டொன்றுக்கு 4 சதவிகித குறைந்த வட்டியில் வட்டி வசூலிக்கப்படுகிறது. இத்தொகை, பத்து ஆண்டில் தாட்கோவிற்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். திட்டத்தின் எஞ்சிய தொகையை வங்கிக் கடனாகப் பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ், பயன்பெற விண்ணப்பித்துள்ள பயனாளிகளை மாவட்ட அளவில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்குத் தேர்வு செய்யும் மாவட்ட அளவிலான குழுவே இத்திட்டத்திற்கும் பயனாளிகளை நேர்முகத் தேர்வு செய்கிறது. தேர்வுக்குழுவில் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பம் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்குக் கடன் வழங்க ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. வங்கிகளின் அனுமதி பெற்றபின் மாவட்ட மேலாளர்களால் தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு மனுக்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. தாட்கோ, தலைமை அலுவலகத்தில் இதற்காக அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான தேர்வுக்குழு பயனாளிகளை நேரடித் தேர்வு செய்கிறது.

மாநிலக்குழு அனுமதி அளித்தபின் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு மானியம் மற்றும் விளிம்புத் தொகையை மாவட்ட மேலாளர்கள் மூலம் விடுவிக்கப்படுகிறது பின்னர் வங்கிகள் கடன் வழங்கி சொத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.



### சிறப்புப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர்களின் நலனை மேம்படுத்த சிறப்புப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைத் தாட்கோ மூலம் நிறைவேற்ற அரசு ஆணை வழங்கியுள்ளது.

கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் ஆதிதிராவிடர்களுக்கெனத் தலா ஒன்று வீதம் 2 தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். ஒவ்வொரு தொழிற்பேட்டையிலும் பனியன் மற்றும் அதைச்சார்ந்த தொழில்களை மேற்கொள்ள 100 தொழிற்கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொழிற்பேட்டையின் மொத்த மதிப்பீடு ரூ.40 கோடி ஆகும்.

தமிழ்நாட்டில் நிலமுள்ள 4,000 விவசாயிகளுக்கும், நிலமற்ற 4,000 விவசாயத் தொழிலாளர்களுக்கும், பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும். நிலமுள்ள விவசாயிகளுக்குப் பட்டுப் பூச்சி வளர்க்கத் தேவையான உபகரணங்கள் மற்றும் பயிற்சி அளிக்கப்படும்.



நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குத் தலா ஒரு ஏக்கர் வீதம் நிலம் தனியாரிடமிருந்து நிலம் வாங்கி இத்திட்டத்திற்காக வழங்கப்படும். இத்திட்டம் சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலமுள்ள விவசாயிகளைத் தேர்வு செய்ய 2 வட்டாரங்களும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களைத் தேர்வு செய்ய 2 வட்டாரங்களும் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. நிலமுள்ள மற்றும் நிலமற்ற ஆதிதிராவிடப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்டாரங்கள் தேர்வு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1992-93, 1993-94 மற்றும் 1994-95-ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். இத்திட்டத்திற்குச் சுமார் ரூ.48 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### இறால் பண்ணை அமைக்கும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள 8 கடலோர மாவட்டங்களில், தகுதிவாய்ந்த 1000 ஆதிதிராவிட குடும்பங்களுக்குத் தலா ஒரு எக்டேர் வீதம் நிலம் வாங்கிக்கொடுத்து இறால் பண்ணை அமைக்கும் திட்டம் அமல்படுத்தப்படும். இத்திட்டம் 1992-93 மற்றும் 1993-94-ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். இத்திட்டத்திற்கு ரூ.100 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த நிலம் மற்றும் பயனாளிகளைத் தேர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# TNPSC

விளம்பர எண். 13/93

தமிழ்நாடு பொதுப்பணியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அலுவலகத்தில் பொருளியலர் (Economist) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 26.4.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

***சம்பளம்:*** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3000-100-3500-125-4500

(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்விற்குப் பொருந்தாது)

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவரைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 40 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை.

*(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)*

**Qualification as on 18.3.1993**

i. Educational qualification

A Doctorate in Economics or Econometrics;

and

ii) Experience

Practical eperience for a period of not less than three years in the fields of plan/project formulation, project scrutiny and appraisal at the Supervisory or Managerial level; *or*

Research experience for a period of not less than two years in areas relating to project formulation and appraisal; *or*

Teaching experience for a period of not less than three years at the Collegiate level in the field of investment analysis and appraisal.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'களில் தரப்பட்டுள்ளன. ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள் முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு - செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.3.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10), சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.3.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்தத்தக்க - பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**DIPR/453/MS/93**






**ம. ஹரிகிருஷ்ணன், இ.வ.ப.,**
**முதன்மை வனத்துறைத் தலைவர்**

உயிரினங்கள் தோன்றிய காலந் தொட்டே மனிதனின் வாழ்க்கைச் சூழலில் மரங்கள் முக்கிய அங்கம் வகித்து வந்திருக்கின்றன. மரங்களும் காடுகளும் மனித இனத்திற்கு இயற்கையால் அளிக்கப்பட்ட வரப்பிரசாதமாகும். வற்றாத வளம் தரும் செல்வங்களுள் சிறப்பானது மரங்களாகும். வனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் கிடைக்கும் பொருட்கள் நமது பொருளாதாரத்திற்கும், வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் தீர்வு செய்ய முடியாத வகையில் தொடர்வு உடையதாக இருக்கிறது.

ஏறத்தாழ பூமியின் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பு (நான்கு மில்லியன் எக்டேர் பரப்பு) காடுகளால் சூழப்பட்டுள்ளது. பூமியில் ஏறத்தாழ 2,50,000 எண்ணிக்கை பூக்கும் தாவர இனங்கள் இருப்பதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி ஆண்டிற்கு 17 மில்லியன் எக்டேர் பரப்புள்ள காடுகள் அழிந்து வருகின்றன. இயற்கைச் சமன்பாட்டைப் பாதுகாக்கக்கூடிய காடுகளின் பணி நமது சுற்றுச் சூ[illegible]க்கு இன்றியமையாததாகும்; எனவே, அவற்றைப் பாதுகாக்க வேண்டியதில் உலகந் தழுவிய அளவில் கவலையும் ஆர்வமும் ஏற்பட்டுள்ளது.

மனிதனுடைய வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதில் மரங்கள் அளிக்கும் தொண்டு மகத்தானது. மரத்தடிகள், கட்டடங்கள் கட்டவும், அறைகலன்கள் செய்யவும் உதவுகின்றன. விறகு, உணவு, மருந்துப் பொருள் தயார் செய்யப்படுகிறது. தாவரத்திலிருந்து உற்பத்தியாகும் மற்றொரு முக்கிய பொருளான 'காகிதம்' அறிவு வளர்வதற்கும், செய்திகள் பரவுவதற்கும் ஒரு சுழற்சி இயக்க மையமாகத் தொடர்கிறது. அத்தகைய அறிவுக் களஞ்சியங்கள் சாதாரண மனிதர்களுக்குக் குறைந்த செலவில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்ட காகிதங்களால் புத்தக வடிவில் வந்துள்ளது. மரவகைகளிலிருந்து மனிதர்களுக்குப் பல தரப்பட்ட தேவையான கோந்து, மரப் பிசின், ரப்பர் முதலியன கிடைக்கப் பெறுவது மற்றொரு வரப்பிரசாதமாகும்.

### மனித வாழ்க்கையில் மரங்கள்

வனத்திற்குள்ளும் மற்றும் வன ஓரத்திலும் வசிக்கும் மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே வசிப்பதால் அவர்கள் வருவாயைப் பெருக்குவதற்குண்டான வசதிகளைப் பெருக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகிறது.

வனங்கள் மக்களுக்குக் கீழ்க்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன;

சீராக உணவு வகைகள் கிடைப்பதற்கு நேரிடையாக வகை செய்கிறது.

ஊரக மக்களுக்கு ஆரோக்கியத்திற்குத் தேவையான மருந்துகளும், ஊட்டச்சத்துகளும், மற்ற உணவுகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களும் கிடைக்க வனங்கள் வகைசெய்கின்றன. வனங்களிலிருந்து கிடைக்கும் மருந்துப் பொருட்கள், மருத்துவ வசதியே இல்லாத பழங்குடியினருக்குப் பெரும் உபயோகமாக இருக்கிறது. மரங்கள் நிரந்தரமாகவும் தொடர்ந்தும் உணவுப் பொருட்களை அளித்து உணவுத் தேவைக்குப் பாதுகாப்பளிக்கின்றன. மரங்கள் வீடு கட்டுவதற்கும், கால்நடைத் தீவனங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் மருந்துகளுக்குத் தேவையான மூலிகைகளையும் வழங்குகின்றன

வறட்சி மற்றும் நெருக்கடி காலங்களில் உணவுப் பற்றாக் குறையை, பசியைப் போக்கிக்கொள்ள உணவுப் பொருட்களைக் கொடுத்து, பற்றாக் குறையை நிவர்த்தி செய்கிறது.

உணவுப் பொருட்களைச் சமைப்பதற்கும், பதப்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் எரிபொருளாக உதவுகிறது.

மண்வளத்தையும், நீர் அமைப்பையும், காற்றின் வேகத்தையும் கட்டுப்படுத்தி சீரான உணவு கிடைக்கவும், விவசாய உற்பத்தி மேம்படவும் உதவுகிறது.

பழக்கப்பட்ட உணவுப் பயிர்களை அபிவிருத்தி செய்யத் தேவையான மூலப் பொருள்களின் சேமிப்புக் கிடங்காக விளங்குகிறது.

### ஆரோக்கியத்திற்கான மரங்கள்

முற்கால மனிதர்கள் நோய்த் தடுப்பிற்கும், குணப்படுத்தவும் மூலிகைகளை உபயோகப்படுத்தி வந்தார்கள் தற்பொழுது உலகம் முழுவதும் அவைகளைத் தொடர்ந்து பெருமளவில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 80 சதவிகிதம் மக்கள் நோயைத் தீர்ப்பதற்கு மூலிகைகளை நம்பியிருக்கிறார்கள். வளர்ச்சியடைந்த நாடுகளும் நவீன

மருத்துவ வசதி சார்ந்திருந்தும் நோய்களைக் குணமாக்குவதற்கு மூலிகைகளை இன்றும் உபயோகித்து வருகிறார்கள்.

இந்தியா போன்ற நாடுகளில் ஆயுர்வேதம், யுனானி, சித்தா போன்ற உள்நாட்டு மருத்துவ முறையை அனுசரித்தாலும், 95 சதவிகித மருத்துவக் குறிப்புகள் மூலிகையைச் சார்ந்தவையாக இருக்கின்றன. இருந்த போதிலும், மனிதர்கள் பலதரப்பட்ட நோய்களுக்கும், வீட்டு மிருகங்களுக்கு ஏற்படும் நோய்களுக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மூலிகைகளைப் பயன்படுத்தி தற்காலத்திலும் தொடர்ந்து முக்கியமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.

மரங்கள் நிலத்திற்கும் வானத்திற்கும் தொடர்ந்து ஆங்காங்கே ஏற்படும் மழை மேகங்களை நீர்த்துளிகளாக மாற்றி மழையாகவோ அல்லது தூறலாகவோ பொழியச் செய்கின்றன. மரத்தில் ஒரே ஒரு கிராம் உலர் பகுதி 300 முதல் 1000 கிராம் வரை நிலத்தடி தண்ணீர் இலைப் பரப்பின் மூலமாக நீராவியாக மாற்றி விடுகிறது. இந்த அளவு தண்ணீர் ஆவியாவது நிலப்பரப்பு மூலம் ஆவியாவதை விட மரத்தினால் சூழப்பட்ட அதே இடத்தில் மிகவும் அதிகமாக உள்ளது. இவ்விதமாக நீராவியாக மாற்றப்பட்ட தண்ணீர் சுற்றுப்புற ஈரத்தன்மையை அதிகப்படுத்தி சீதோஷ்ண நிலையைக் குறைத்து, மேகங்கள் மேலும் மேலும் உண்டாக உதவி செய்து மழையாக பெய்யச் செய்கிறது.

**மறைமுக நன்மைகள்**

மரங்களினால் கிடைக்கின்ற மறைமுக நன்மைகள் எளிமையாகக் காணப்பட்டாலும் அதனுடைய பண மதிப்பு மனித இன மேம்பாட்டின் பொருளாதார முக்கியத்துவத்தை விசாலப்படுத்துகிறது.

ஒரு நடுத்தர அளவான மரம் ஓராண்டில் சுமாராக ஒரு டன் பிராண வாயுவை உற்பத்தி செய்கிறது. மேலும், சராசரியாக ஐம்பது ஆண்டுக் காலகட்டத்தில் ரூ.0.25 மில்லியன் தற்கால அங்காடி விலைக்கு ஈடான பிராணவாயுவை உற்பத்தி செய்கிறது. இயற்கையாகக் கிடைக்கின்ற பிராண வாயுவை நாம் உபயோகிக்கவில்லையெனில், நமக்குக் கிடைக்கின்ற தினசரி வருமானத்தைக்கொண்டு உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றிற்குச் செலவிட இயலாமல், இந்தப் பயனுள்ள பொருளுக்கே அதிகம் செலவழிக்க வேண்டும்.

மரங்கள் காற்றைச் சுத்தப்படுத்தும் தன்மை இப்பொழுது நன்றாகத் தெரிந்ததாகவும், புரிந்துகொள்ளப்பட்டதாகவும் இருக்கிறது. மரம் உயர்ந்த அளவிலான நச்சுப்பொருள் மற்றும் இதர வாயுக்களான நைட்ரஜன், கந்தகம் மற்றும் கரியமிலத்தின் ஆக்சைட்களை எடுத்துக்கொள்கிறது. மரங்களின் இந்தச் செயல்களைச் செயற்கை முறையினால் மாற்றினால் ரூ.0.5 மில்லியன் மரம் செலவாகிறது; இதைத் தவிர ஆராய்ச்சி உபகரணங்கள் கொண்டு செயல்படுத்துவதற்கு மூலதனச் செலவு அதிக அளவில் தேவைப்படும். சுமார் ஐம்பது டன் எடையுள்ள நடுத்தர அளவிலான ஒரு மரம் சராசரியாகத் தன்னுடைய ஐம்பது ஆண்டுக் காலத்தில் ரூ.1.6 மில்லியன் மதிப்புள்ள உணர முடியாத நன்மைகளை உற்பத்தி செய்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மரங்கள் மக்களுக்கும், பிராணிகளுக்கும், பயிர்களுக்கும், நிழலைக் கொடுக்கிறது. பல பயிர்கள் மரத்தின் நிழலில் நன்றாக துளர்கின்றன. பயிர் நிலங்களில் வளர்க்கப்படும் மரங்கள் நிலத்திற்கு ஊட்டச்சத்தை அளிக்கின்றன.

தமிழக அரசு தொடர்ந்து 1988-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்திய அரசின் தேசிய வனக்கொள்கையின் அடிப்படையில், திறமையான முறையில் நிலையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வறுமைக்கோட்டின் கீழ் இருப்பவர்களுக்கும், ஏழைமக்களுக்கும் இயற்கையான முறையில் காடுகளினால் தேவைப்படும் பொருள்கள் அளித்து அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேம்பட ஆவன செய்யப்படுகிறது.

நம்முடைய, பிறந்த நாட்கள், திருமண நாட்கள், மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளில் மரங்களை நட்டு அவைகளைப் பாதுகாக்க முன்வர வேண்டும். தொழிற்சாலைகளிலும், அரசாங்கப் பயிற்சிக் கூடங்களிலும், தனியார் துறையிலும், மற்றும் காலி இடங்களிலும் மரங்களை நட்டுப் பராமரிக்க வேண்டும். இதை ஒவ்வொருவரும் உறுதி மொழியுடன் ஏற்றுச் செயல்படுவோம்!



## வனவளம் காப்போம்!

உயிர்க் காக்கும் மருந்தாய் விளங்குவன மரங்கள்!

சுற்றுச் சூழலைப் பாதுகாத்து நாம் சுகம் பெற வழிவகுப்பன மரங்கள்!

வாரி வழங்கும் வள்ளலாய் மாரியைத் தருபவையும் மரங்களே!

இயற்கை அன்னை கொலுவிற்றிருக்கும் அற்புத அரண்மனை அல்லவா வனங்கள்!

சுற்றுலாப் பயணியர்க்குமட்டுமல்ல, சொர்க்கப் பூமியாம் வனங்களைப் பற்றி ஆராய்வோருக்கும் இது ஒரு ஆராய்ச்சிக்கூடமன்றோ?

மரங்களை மகிழ்ச்சியுடன் வளர்ப்பது ஒருபுறம்; அதைத் தன்னலத்துக்காக அழிப்பது மற்றொரு புறம்.

இந்த நிலை மாற வேண்டும். மக்கள் மனத்திலே மந்த மாருதம் வீசவேண்டும்!

அரிய விலங்குகள் - அதிசய உயிரினங்கள் - அழகிய மலர்கள் - நெடிய மரங்கள் - கொடிகள், செடிகள், புல்பூண்டுகள் ஆம். தாவர இனங்கள் தவழ்ந்து விளையாடும் தத்ரூபக் காட்சிகள். வனங்கள் அன்றோ?

காடுகள் வாழ்ந்தால், நாடுகள் வாழும். காடுகள் செழித்தால் நாடுகள் செழிக்கும். காடுகள் வளர்ந்தால் நாடுகள் வளரும்!

'வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்!' என்பதை உண்மையில் செயல்படுத்துவோம்!

'மரம் வளர்ப்போம்!' எனக் கரம் உயர்த்துவோம்!

வனவளம் காத்து, பொதுநலம் பூத்திட உழைப்போம்.

—பி.வி.ஜி.



# சென்னை மாவட்டத்தைச் சார்ந்த 593 மனுதாரர்களுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னை மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 593 நபர்களைத் தேர்ந்தெடுத்து, சுமார் ரூ.2 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை 16.3.93 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

வாகனம் மற்றும் தொழில் கடனுதவித் திட்டத்தின்கீழ் 28 பேர்களுக்கு ரூ.91.38 இலட்சமும், நலிந்தோர் குடும்ப நல உதவித் திட்டத்தின்கீழ் 76 பேர்களுக்கு ரூ.2.65 இலட்சம் நிதியுதவியும், குடிசைமாற்று வாரியத் திட்டங்களின்கீழ் 125 பேர்களுக்கு ரூ.8.48 இலட்சம் கடனுதவியும், மீன் வளத் துறையின் நலத்திட்டங்களின் கீழ் 27 பேர்களுக்கு ரூ.25.44 இலட்சம் நிதியுதவியும், கூட்டுறவுத்துறைத் திட்டத்தின்கீழ் 36 நபர்களுக்கு ரூ.8.59 இலட்சம் கடனுதவியும், ஆதிதிராவிட உதவித் திட்டங்களுக்கு தாட்கோ மூலம் 50 நபர்களுக்கு ரூ.51.58 இலட்சம் நிதியுதவியும், 23 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகையாக ரூ.65,000-மும், 36 பெண்களுக்கு விதவை உதவித் திட்டத்தின்கீழ் ரூ.32,000-மும், விபத்து நிவாரண உதவித் திட்டத்தின்கீழ் இருவருக்கு ரூ.20,000-மும், சாலை விபத்து நிவாரண உதவி திட்டத்தின்கீழ் 28 பேர்களுக்கு ரூ.1,10,000-மும், இருதய அறுவைச் சிகிச்சைக்கென ஒருவருக்கு ரூ.5,000 நிதியுதவியும், நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 10 பேர்களுக்குச் சிறு கடனுதவியாக ரூ.67,000-மும், ஆதிதிராவிடர் நலத்திட்டங்களின் கீழ் 14 பேர்களுக்கு ரூ.15,000 நிதியுதவியும், பிற்படுத்தப்பட்டோர் நலத்திட்டங்களின் கீழ் 27 பேர்களுக்கு ரூ.27,000 மானியமும், முன்னாள் படைவீரர் நலத் திட்டங்களின்கீழ் 9 பேர்களுக்கு ரூ.28,000 நிதியுதவியும், சமூக நலத் துறைத் திட்டங்களின் கீழ் 63 பேர்களுக்கு ரூ.1,88,000 கடனுதவியும், ஊனமுற்றோர் உதவித் திட்டத்தின்கீழ் 38 பேர்களுக்கு ரூ.46,000 மானியமும் வழங்கப்பட்டது.

இவை த்விர, பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 29 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக, ரூ.4,70,000 நிதியுதவியினையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்.

## பார்த்தோம் படித்தோம்

**16.2.93** இதழ், அட்டைப்படம் மிக அருமை. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இரு மொழிக் கொள்கை குறித்து ஆற்றிய உரையைப் படித்து மகிழ்ந்தேன். இவ்விதழ் புத்துணர்ச்சியூட்டும் புதுமலராக மலர்ந்திருக்கிறது.

டி. மாரியப்பன்,
சிந்தாமணி
(நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம்)

**16.2.93** இதழில் 'தருமபுரி மண்ணும் விடுதலைப் போராட்ட உணர்வும்' என்னும் தலைப்பில் வெளியாகி இருந்த செய்திகள் பயனுள்ளதாக இருந்தன.

அ. துசை மேரி
அணிலாடி
(தென்னார்க்காடு மாவட்டம்)

சுதந்திரத் தியாகிகளின் வரலாறு அருமையிலும் அருமை!

கே.பி. சுந்தரமூர்த்தி
கொளத்தூர்

'மாணவர் பக்கம்' பயனுள்ளதாக இருந்தது. கவிஞர் அ. சுப்பையன் எழுதிய 'சிக்கனமே சிறந்தது' கவிதை போற்றும்படி இருந்தது.

கோ. நேரு,
எரவலம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

'சிக்கனமே சிறந்தது' கவிதையும், 'அறிவுச்சுடர்' முத்துக்களும் சிந்தனைக்கு விருந்தாய் அமைந்ததோடு, தேன் போல் இனிக்கவும் செய்தன.

ஸ்ரீநிவாஸ் பிரபு
சென்னை-90

'அறிவுச்சுடர்' சிந்தனையைத் தூண்டும் சிறப்புச் சுடராக உள்ளது.

கே. சிவாசத்ரியன்
குமராட்சி

தருமபுரியைப் 'பெருங்கற்காலம்' என்ற பெரும் பண்பாட்டைச் சார்ந்தது என்றே அழைக்கலாம். தென்னார்க்காட்டில் 'இளைஞர் வார விழா' கட்டுரை படித்தேன். மிகவும் அருமை.

எஸ். அப்துல் ரபீக்
விஜயபுரம்
(சின்ன சேலம்)

தருமபுரி மாவட்டத்தில் சிறந்த காவல் நிலையம் பற்றிய கட்டுரை என் மனதை மிகவும் கவர்ந்தது.

வி. சென்றாயன்
ரயில்வே காலனி
சேலம்

'படமும் செய்தியும்' படிப்பதற்கும் பார்ப்பதற்கும் மிகவும் அருமையாக உள்ளது.

கே. கிருஷ்ணவேணி
நன்னாட்டம் பாளையம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

## சவூதி செல்லவிருக்கும் தமிழக மருத்துவ நிபுணர்களுக்கு...

**எஸ். இரகுபதி, இ.ஆ.ப.,**
**மேலாண்மை இயக்குநர்**

சவூதி அரேபியாவின் சுகாதார அமைச்சகத்தின் கீழ் உள்ள அரசுக்குச் சொந்தமான மருத்துவமனைகளில் பணியாற்ற, தமிழக அரசுக்குச் சொந்தமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் ஏராளமான மருத்துவர்கள் மற்றும் மருத்துவத்தைச் சார்ந்த பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பெரதுவாக இந்திய மருத்துவப் பணியாளர்களுக்குச் சவூதி அரேபியாவில் நல்ல மதிப்பு இருந்தாலும், தமிழக மருத்துவர்களுக்குத் தனிச் சிறப்பு என்றும் உண்டு.

வழக்கமாகப் புது தில்லியில் நடத்தப்பட்டு வந்த நேர்முகத் தேர்வு, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரின் முயற்சியினாலும், சவூதி அரேபியா அரசின் மருத்துவத் தேர்வு மைய அதிகாரியின் ஒத்துழைப்பினாலும் இம்முறை சென்னையில் நடத்தப்பட்டது. இதனால் நம் மருத்துவ நிபுணர்களின் நேரம் மற்றும் போக்குவரத்துச் செலவு மிச்சப்படுத்தப்பட்டதுடன், அவர்கள் அதிக அளவில் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள முடிந்தது. கடந்த ஆண்டு இறுதியில் சவூதி அரேபிய மருத்துவர்களால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் சென்னையில் சுமார் 1000 நபர்கள் பங்கு பெற்று - 802 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்டுள்ள மருத்துவ நிபுணர்கள் இவ்வாண்டு இறுதிக்குள் சவூதி அரேபியாவிற்கு அனுப்பப்படுவார்கள்.

நம் தமிழக மருத்துவ நிபுணர்கள் இவ்வாறு வெளிநாடு செல்வதால் அவர்கள் நவீன நுணுக்கங்களை அறிந்து வருவதோடு, அதிக அளவிலான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தர வாய்ப்பிருக்கிறது. இதனால் தமிழகத்தில் வேலையில்லாமல் இருக்கும் மருத்துவ நிபுணர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற வழி அமைகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் பெட்ரோலியம் மற்றும் உரத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பொறியியல் மற்றும் பொறியியல் துறையைச் சார்ந்தவர்களுக்குக் குவைத் நாட்டில் அதிக வாய்ப்பிருப்பதனால் கூடிய விரைவில் நேர்முகத் தேர்வு நடத்தி தேர்வு செய்ய குவைத் நாட்டுடன் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. இதுவரை சுமார் 5,000 நபர்களைப் பல்வேறு வளைகுடா நாடுகளுக்கு அனுப்பியுள்ள இந்நிறுவனம், வருங்காலங்களில் அதிக அளவில் அனுப்ப முனைந்து செயல்படுகிறது.

இந்நிறுவனத்தின் மூலம் வெளிநாடு சென்று பணிபுரிய விரும்புவோர் நேரில் அல்லது தபால் மூலம் ரூ.110-க்கான டிமாண்ட் டிராப்டை நிர்வாக இயக்குநர், ஓவர்சிஸ் மேன்பவர் கார்பரேசன் லிமிடெட், சென்னை என்ற பெயரில் எடுத்து, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி விண்ணப்பத்தைப் பெற்று, பூர்த்தி செய்து பதிவு செய்து கொள்ளலாம்.

முகவரி:

அயல்நாட்டு வேலைவாய்ப்பு
நிறுவனம் (தமிழக அரசு நிறுவனம்)
12, முதல் மாடி,
கிருஷ்ணமா சாலை
நுங்கம்பாக்கம்,
சென்னை-600 034.


**தமிழரசு**

16-4-93 இதழ்

தென்னார்க்காடு மாவட்டச்

சிறப்பிதழாக மலர்கிறது!

- அரசு ஆற்றி வரும் அரும் பணிகளின் தொகுப்பு!

மற்றும்

- சிந்தைக்கு விருந்தூட்டும் சிறுகதை!
- கருத்தைக் கவரும் கட்டுரைகள்!
- கற்கண்டாய் இனிக்கும் கவிதைகள்!
- பக்கத்துக்குப் பக்கம் படங்கள்!

**தமிழரசு**

படிக்க — பயன்பெற — பாதுகாக்க



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
அலுவலகம்: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 564926, 568927



**எளிமையானவை! நேர்த்தியானவை!**
**மேன்மை மிகுந்தவை!**
**தோற்றம் அளிப்பவை!**



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.




16-4-1993 ரூ.1

காதிகிராப்ட்



DIPR/273/...

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


| | |
|---|---|
| "எல்லா மதத்தினரும் இணைந்து வாழும் இனிய தமிழகத்தின் பெருமை காப்போம்!" —இராணிப்பேட்டையில் மாண்புமிகு முதல்வர் உரை ... | 2 |
| மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூல்கள் வெளியீட்டு விழா ... | 12 |
| பொருட்காட்சி நிறைவு விழாவில் முதல்வர் உரை ... | 15 |
| வளரும் தென்னார்க்காடு மாவட்டம் ... | 17 |
| பழுப்புப் புரட்சியில் நெய்வேலி ... | 19 |
| முன்னேற்றம் காணும் தென்னார்க்காடு ... | 23 |
| வடலூர் இராமலிங்க அடிகளார் ... | 25 |
| காது-மூக்கு-தொண்டை மருத்துவம் ... | 30 |
| ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன் ... | 33 |
| பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ... | 47 |



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

சித்திரைத் திங்கள் - 3

மலர்:23 இதழ்:20

16-4-1993


## தென்னார்க்காடு மாவட்டச் சிறப்பிதழ்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் - சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் பிறந்த நாளன்று (14.4.93), சென்னையில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்.





# “எல்லா மதத்தினரும் இணைந்து வாழும் இனிய தமிழகத்தின் பெருமை காப்போம்!”

வரலாற்றுச் சிறப்புமிக்க வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்திற்கு, வருகை தருவதிலும், இங்கே எழுச்சியோடு திரண்டு இருக்கின்ற, இலட்சக் கணக்கான அன்பு நெஞ்சங்களைச் சந்திப்பதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

செல்லுகின்ற திசைகளில் எல்லாம், நாட்டு மக்கள் என் மீது, காட்டி வருகின்ற அன்பும், பாசமும், பரிவும், ஆதரவும், நாளுக்கு நாள் பெருகி வருவதைப் பார்த்து, நான் நெகிழ்ந்து போகிறேன். அதே நேரத்தில், மகத்தான இந்த மக்கள் சக்தியின் உணர்வுகளுக்கு, நான் எப்படி கைம்மாறு செலுத்தப் போகின்றேன் என்பதை எண்ணி மலைத்து நிற்கிறேன். நான், உங்களைச் சந்திக்க வருகின்ற இதுபோன்ற வேளைகளில், கை நிறையத் திட்டங்களுடனும், உதவிகளுடனும் வந்தாலும், அவை, நான் எண்ணும் அளவிற்கு, உங்களுக்குச் செய்த கைம்மாறாகக் கருத முடியாது என்பதை நன்கு அறிவேன். எனவேதான், உங்கள் வளர்ச்சிக்கும், உயர்விற்கும், இனிய வாழ்விற்கும், அயராது பாடுபடுகின்ற பழக்கத்தினை, எனது அன்றாடப் பணியாக ஏற்றுக்கொண்டு, பாடுபட்டு வருகின்றேன். மேலும், இதனை என் வாழ்நாள் கடமையாகக் கருதி, தொடர்ந்து பணியாற்றி வருகின்றேன். இந்த எண்ணங்களுக்கு உருக் கொடுக்கிற வகையில்தான், இன்னும் புதிய புதிய திட்டங்களைத் தீட்ட வேண்டும். மேலும் மேலும் நலப் பணிகள் தொடங்கப்பட வேண்டும், புதுப்புது உதவிகள் வழங்கப்பட வேண்டும், என்று என் உள்ளம் சிந்தித்துக் கொண்டே இருக்கின்றது.

உங்கள் அன்புச் சகோதரியான என்னிடத்தில், நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைக் கண்கூடாகக் காணும் போதெல்லாம் நான் கடந்து வருகின்ற தடைகளும், இடர்ப்பாடுகளும், தூள் தூளாக மறைந்து போய்விடுகின்றன. அவைகளைத் தூசாக, துச்சமாக மதிக்கும் மனத்தெம்பும், தைரியமும், எனக்கு தானே வருகிறது.

தற்போது வளர்ந்துவரும் தொழில்களால், வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் மாவட்டம் இந்த மாவட்டம். சட்டமேதை, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயரைத் தாங்கி நிற்கின்ற இந்த மாவட்டத்தில், உண்மையான ஒருமைப்பாடும், ஒற்றுமையும், ஓங்கி நிற்பதைக் கண்டு, உளம் மகிழ்கின்றேன்.

**அம்பேத்கரின் விளக்கம்**

மாபெரும் தலைவர், டாக்டர் அம்பேத்கர் அவர்கள், எது ஜனநாயகம் என்று, ஒருமுறை மிக அழகாக விளக்கம் கூறினார். அந்த விளக்கத்தில்,

“சகோதரத்துவமும், ஜனநாயகமும் வெவ்வேறானவையன்று. ஜனநாயகம் என்பது, ஒரு அரசியல் முறை மட்டுமன்று. ஒருவருக்கொருவர், அன்பு செலுத்துகிற, ஒரு சமூக வாழ்வேயாகும்” - என்று குறிப்பிட்டார்.

இது அண்ணல் அம்பேத்கர் அவர்கள், ஜனநாயகத் தத்துவத்திற்குத் தந்த, அரிய, அற்புதமான விளக்கம் ஆகும். ஜனநாயகம் என்பது, சகோதரத்துவம்தான் என்று, ஆணித்தரமாக அறைகூவிய அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தத்துவத்தைத்தான், உங்கள் சகோதரியாகிய நான், இன்று செயல்படுத்தி வருகின்றேன்; உங்கள் அரசும் செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஜாதி மத பேதமற்ற சமதர்மச் சமுதாயத்தைத்தான், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்

# ரூ.502 கோடிக்கான திட்டங்களை வழங்கி இராணிப்பேட்டையில் மாண்புமிகு முதல்வர் உரை!



களும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அமைக்க விரும்பினார்கள். அந்தச் சமுதாயத்தில், எல்லோரும் சகோதரர்களாக இருப்பார்கள்; இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், அந்தப் பெருந்தகையோர் தங்கள் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டனர். அந்தத் திராவிட இயக்கத் தலைவர்களின் இன்றைய பிரதிநிதியாக உங்கள் முன் நிற்கும் நான், ஒன்றைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். திராவிடப் பாரம் பரியத்தின் பரிசாக, இன்று எல்லாச் சமய மக்களும், நல்லிணக்கத்தோடு தமிழகத்தில் வாழ வகைசெய்துள்ள நிலையை, எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காரணத்திற்காகவும், பாதிக்க, எங்கள் அரசு அனுமதிக்காது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

ஏனென்றால், சமீபகாலமாக ஒரு சில அரசியல் கட்சியினர், மக்களைக் குழப்பும் முயற்சியில், தொடர்ந்து தவறான கருத்துக்களைப் பரப்பிவருகின்றனர்.

...டுள்ளேன், என்ற மக்களின் மாபெரும் நம்பிக்கையே, என்னை இந்த அளவு உயர்த்தி உள்ளது.

**நானும் சிறுபான்மைச் சமுதாயத்தினரும்**

இது கண்டு பொறாத சிலர், என்னோடு நேரடியாக மோத முடியாது, என்ற முடிவுக்கு வந்த பலர், இல்லாத பொல்லாத பொல்லாங்குகளை, என் மீது சுமத்திட, அன்றாடம் படாத பாடு பட்டு வருகிறார்கள் என்பதை, நீங்களே பார்த்துவருகிறீர்கள்.

சமீப காலமாகச் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு - குறிப்பாக இஸ்லாமிய இனத்திற்கு, நான் எதிரான கருத்துக் கொண்டுள்ளேன் என்ற நச்சுக் கருத்தை, நாட்டு மக்களிடையே பரப்பி, அவர்களைத் திசை திருப்ப முயன்றுவருகின்றன. எனவே கடந்த கால நிகழ்ச்சிகளையும், சில சம்பவங்களையும், இந்த நேரத்தில் நினைவுகூர்வது அவசியம் என்று கருதுகின்றேன்.

இஸ்லாமியர்கள் மிகுந்திருந்த திருச்செந்தூர் தொகுதி. என்னுடைய அரசியல் வாழ்க்கையின் முதல் சவால் அது.

தங்கள் வீடுகளை விட்டுச், சாதாரணமாக வெளியே வராத இஸ்லாமியச் சகோதரிகள் பல்லாயிரம் பேர், நான் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்துள்ளேன் என்பதை அறிந்து, வெளியில் வந்து என்னை வாழ்த்தியதோடு மட்டுமல்லாமல், எங்கள் வேட்பாளர் வெற்றி பெறுவதில் இருந்த, மிக நெருக்கடியான சூழ்நிலையை மாற்றி அமைத்து, நாங்கள் வெற்றி பெறச் செய்திட்ட உதவியையும், அவர்கள் எனக்குப் பெற்றுத் தந்த முதல் வெற்றியையும், என்னால் எப்படி மறக்க முடியும்?

இஸ்லாமியச் சகோதர சகோதரர்களின் பேராதரவு மட்டும் அன்று எனக்குக் கிடைத்திருக்காவிட்டால், என்னுடைய பொது வாழ்க்கையின் முதல் முயற்சியிலேயே தோல்வி அடைந்திருப்பேன். என்னுடைய அந்த வெற்றிக்கு முழுமுதற் காரணமாக இருந்த அந்த

# பாபர் மசூதி - இராமர் கோயில் இருதரப்பினரும் பாதிக்கப்படக் கூடாது!

தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும், என் மீது கொண்டிருக்கும் அழுத்தமான பிடிப்பும், பாசமும், அளவிட முடியாத தன்மையில் உள்ளதை அறிந்து, என் மனம் நெகிழ்கிறது. ஆனால், அதுவே இன்று பலர் கண்களை உறுத்துவதையும், என்னால் உணர முடிகிறது; என் மீது பலரும், இன்று குற்றமும் குறையும் கூறுவதற்கு, அதுதான் காரணம் என்பதை, என்னைவிட நீங்கள் நன்கு அறிவீர்கள்.

நாட்டு மக்கள், என் மீது இருந்த அளவுக்கு ஆழமான, அழுத்தமான நம்பிக்கை கொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம், மக்களோடு மக்களாய், மக்களின் பிரதிநிதிகளாய், மக்கள் சக்தியை அறிந்து, மக்களின் நன்மைக்கு என்றே, மக்களின் நம்பிக்கைக்கு உரியோராய், மக்கள் நலப் பணியாற்றி வந்த, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகிய மக்கள் சக்தியின் மகோன்னதத் தலைவர்களின் அடிச்சுவட்டில் இருந்து, துளியும் பிறழாது, என் பொது வாழ்வுப் பாதையை அமைத்துக்கொண்டு, மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நோய்வாய்ப்பட்டு, பொது மக்களை அதிக அளவில் சந்திக்க முடியாதிருந்த ஒரு கால்கட்டத்தில், அவர் சார்பில் மக்களைச் சந்திக்க, என்னைத் தேர்ந்தெடுத்தார் என்பதை, நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள். அவர் என்னை, முதன்முதலாகத் தேர்தல் பணியில் ஈடுபடச் செய்த இடம், இஸ்லாமியர்கள் ...

அன்புச் சகோதர சகோதரிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் எண்ணம் என் நெஞ்சில் ஏற்படுமா?

**எனக்காக உயிர்ப்பலி**

இன்னும் உணர்ச்சி பொங்க, ஒரு சம்பவத்தை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1989.இல் சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து, தேர்தல்

**அட்டைப்பட விளக்கம்**

**முதலாவது அட்டைப் படம்**

**வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் இராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் ‘சிங்கக்குட்டி’ பரிசளித்தார்; மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி முத்தையா அவர்கள் விழாத் தலைமை ஏற்றார்.**

**கடைசிப்பக்க அட்டைப் படம்**

**தென்னார்க்காடு மாவட்டம் வடலூரில் உள்ள சத்திய ஞானசபை,**



முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன், இரு அணிகளாகப் பிரிந்திருந்த நாங்கள், வெற்றி வாய்ப்பை இழந்து, அதன் காரணமாக அன்றைக்குத் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், எங்கள் உடன்பிறப்புகள் வேட்டையாடப்பட்ட போது, எனக்காக முதல் உயிர்ப்பலி கொடுத்த செயல் வீரர், சென்னை நகரில் வாழ்ந்த 'ஆலந்தூர் ஜஹாங்கீர்' என்ற இஸ்லாமியச் சகோரர் தான், என்பதைக் கண்ணீர் மல்க நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த அளவுக்கு, என் மீது உயிரையே வைத்துள்ள இஸ்லாமிய சமுதாயத்தினரைத் தான், என்னிடமிருந்து பிரித்து விட சிலர் முயன்று வருகின்றார்கள்.

நாடாளுமன்றத்திற்கு நான் முதன் முதலில் தேர்வு செய்யப்பட்டு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அமர்ந்திருந்த அதே இருக்கையில் அமரும் அரிய வாய்ப்பைப் பெற்ற அன்றும் சரி; அப்பேரறிஞர் அண்ணாவும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அமர்ந்திருந்த தமிழக முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்து, பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ள இன்றும் சரி; என் உணர்வுகளும், எண்ணங்களும், சிறுபான்மையினரைப் பாதுகாப்பதிலும், அரவணைப்பதிலும் இருந்து வருகின்றது என்பதையும், அவர்களைப் பாதிக்கும் எந்த முயற்சியையும், முறியடிக்கும் திடமான நெஞ்சுறுதி, எனக்கு உள்ளது என்பதையும், தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

### பாபர் மசூதி - இராமர் கோயில்

பிரச்சினை ஆக்கப்பட்டுவிட்ட 'பாபர் மசூதி - இராமர் கோயில்' விவகாரத்தில், எதிருக்குப் புதிரான கருத்துக்கொண்டவர்கள், சிறிதும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இன்றி, இதனைப் பூதாகாரமாக்கினர். ஒரு சாரார், மசூதி உள்ள இடத்தில் இராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என்றும், இன்னொரு சாரார், மசூதி மட்டுமே இருக்க வேண்டும் என்றும், நிலை கொண்டனர். எத்தரப்பினரும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே, என்ற ஆதங்கம்தான் எனக்கு.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், போற்றி வளர்த்துள்ள சமயப் பொறையுடமை மிக்க, தமிழகத்தின் சார்பில் சென்று தேசிய ஒருமைப்பாட்டுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட நான், எப்படி ஒரு சாராருக்குச் சாதகமாகக் கருத்தை வெளியிடமுடியும்?

# இஸ்லாமிய சமுதாயத்தினரை என்னைவிட்டுப் பிரிக்க முடியாது!

எனவே தான், நான் முதலமைச்சர் ஆனவுடன், 1991 நவம்பர் திங்களில் நடந்த, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில், இப்பிரச்சினை தொடர்பான விவாதத்தை, பாபர் மசூதியா? அல்லது ராமர் கோயிலா? என்று இல்லாமல்; ராமர் கோயிலும்- பாபர் மசூதியும், என்று தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று, அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தேன். அதாவது,

"In so far as our party is concerned, we will support any decision that respects the rights of the minorities, acknowledges the freedom of the majority in this country to pursue its worship in a free and fair manner, and satisfies the aspirations of our people. the discussion need not be on RAM JANMA BHOOMI Vs BABRI MASJID, but could and ought to be on RAM JANMA BHOOMI AND BABRI MASJID."

- என்று குறிப்பிட்டேன். இந்த நிலையில் சிறு மாற்றமும் இன்றிதான், தொடர்ந்து சொல்லிவந்துள்ளேன்.

கடந்த 1992 நவம்பரில் நடந்த, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்திலும், இதையேதான் மீண்டும் வலியுறுத்தினேன். மேலும், நான் மட்டும் தான், பாபர் மசூதி ஆதியிலேயிருந்து இருந்ததா, இல்லையா, என்கிற வரலாற்றுப் பிரச்சினையைக் கிளப்பக் கூடாது, இந்த நாட்டு மக்களை நிம்மதியாக வாழ வழிவகை செய்யுங்கள். மசூதி அப்படியே பாதுகாக்கப்பட வேண்டும், என்றும் தெரிவித்தேன்.

### இன்று நிலை என்ன?

அப்போது என் கருத்துக்களுக்கு மதிப்பு அளித்தார்களா? இல்லை. நான் கூறிய நல்ல கருத்துக்களை அன்று புறக்கணித்ததோடு மட்டுமன்றி, என் மீது புழுதியும் வாரித் தூற்றினார்கள். பாபர் மசூதி எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படக்கூடாது; பாதுகாக்கப்பட வேண்டும்; நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி, ராமர் கோயில் கட்டவேண்டும் என்று, இரு தரப்பினரும் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் நான் தெரிவித்த கருத்துக்களை, எள்ளி நகையாடினர்.

இன்று நிலை என்ன? சரித்திரச் சான்றாகப் பல்லாண்டுக் காலம், நமது நாட்டின் சகோதரத்துவக் கொள்கையின் சின்னமாகத் திகழ்ந்த, பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இதற்கு யார் காரணம்?

பாபர் மசூதி பாதுகாக்கப்பட வேண்டும், என்று கூறிய நான்தான் காரணம் என்று, சிலர் கூறுகின்றனர். இதில் என்ன நியாயம் இருக்கின்றது? கரசேவையை நான் தான் அனுமதித்தது போன்றும், பாபர் மசூதியை நான்தான் இடிக்கச் சொன்னது போன்றும், ஒரு மாயையை ஏற்படுத்த, என்மீது அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலர், தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றார்கள்.

### இது நியாயமா?

அந்தத் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமருக்குத் தான், இப்பிரச்சினை குறித்து முடிவெடுக்க, அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டன. அந்த முடிவிற்கு என்னுடைய ஆதரவைப் பிரதமருக்குத் தெரிவித்த



# யாரோ செய்த தவறுக்காக என்னைக் குறைகூறுவது நியாயமா?

தோடு, பி.ஜே.பி. தலைவர் திரு. அத்வானி அவர்களுக்கும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க, உதவிட வேண்டும் என்று கோரி கடிதமும் எழுதினேன்.

இத்தனை முயற்சிகள் எடுத்துக் கொண்ட என் மீது, யாரோ செய்த தவறுக்காகக் குற்றம் சாட்டுகிறார்கள், குறை கூறுகிறார்கள். இது நியாயமா? நீங்கள் தான் நல்லதொரு முடிவு கூற வேண்டும்.

நிச்சயமாகக் கூறிக்கொள்கிறேன். நான் தெரிவித்த கருத்துக்களுக்கு மதிப்பு அளித்து, அதன்படி நடவடிக்கைகள் தொடர்ந்திருந்தால், இப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டிருக்கும்.

இது போன்ற அவல நிலை ஏற்பட்டிருக்காது; இஸ்லாமியச் சகோதரர்களின் உணர்வுகள் பாதுகாக்கப்பட்டிருக்கும், என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மை நிலை இவ்வாறு இருக்க, நான் சொன்ன கருத்துக்களை, அரசியல் ஆதாயத்திற்காக இருட்டடிப்புச் செய்துவிட்டு, நான் சிறுபான்மை முஸ்லீம் சகோதர சகோதரிகளுக்கு, விரோதமாக இருப்பது போலச் சிலர் இன்றும் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அவர்களை நீங்கள் நம்ப வேண்டாம். எந்தக் கால கட்டத்திலும், எக்காரணத்திற்காகவும், சிறுபான்மையிருக்கு முரண்பட்ட எந்த இயக்கத்தினருடனும், எங்களுக்குத் தோழமை இருக்காது என்பதைத் தெளிவுபட அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன்.

ஏக பரம்பொருளை வழிபடும் இஸ்லாமியச் சகோதரர்களும், கிறிஸ்தவச் சகோதரர்களும், இந்துச் சகோதரர்களும் சகோதரிகளும் இணைந்து வாழும் நம் இனிய தமிழகத்தின் பெருமையினை, எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது. அப்படிப் பிரிக்க முயலும் சக்திகளை, முறியடிக்க, எங்கள் அரசு தயங்காது, தவறாது, என்று உறுதி கூறுகின்றேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 21 மாத காலத்தில், தமிழக மக்களுக்காக - குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்காக, நலிவுற்ற சிறுபான்மையினருக்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, உங்கள் அரசு ஆற்றியுள்ள அரும் பணிகள் அனைத்தையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இஸ்லாமிய சமுதாயப் பெருமக்களுக்கு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலும், தற்போது என்னுடைய தலைமையில் அமைந்துள்ள அரசின் ஆட்சிக் காலத்திலும், செய்துள்ள நன்மைகள் பற்றி, இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்த நன்மைகள்:

1. புரட்சித் தலைவர் ஆட்சிக்கு முன்பு, வக்பு வாரிய நிறுவனங்களின் மராமத்துக்காக, ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருந்தது. இதை மாற்றி படிப்படியாக, 3 இலட்சம் ரூபாய், 4 இலட்சம் ரூபாய், 5 இலட்சம் ரூபாய் என்று, 1977-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு வரை, உயர்த்தி ஆணையிட்டார்கள்.

2. 1984 மற்றும் 1985-ஆம் ஆண்டுகளுக்கு, மேற்சொன்ன காரியங்களுக்காக, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினார்கள்.

3. வக்பு நிறுவனங்களுக்கு நன்கொடை அளிக்கப்படும் சொத்துக்களுக்கு, சொத்து மதிப்பு எவ்வளவாக இருந்தாலும், 100 ரூபாய் மட்டுமே முத்திரைக் கட்டணம் செலுத்தினால் போதும் என்று ஆணையிட்டார்கள்.

4. சென்னை நகரில் வக்பு வாரியத்திற்கு அலுவலகம் கட்ட, 13 ஆயிரத்து 204 சதுர அடி நிலத்தை, மத்திய அரசின் பாதுகாப்புத் துறையிடம் இருந்து பெற்று, அதற்கான விலை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 692 ரூபாய் தொகையை, வக்பு வாரியத்திற்கு மானியமாக வழங்கினார்கள்.

5. 9.8.1980 அன்று, சட்டமன்றத்தில் காயிதேமில்லத் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்கள்.

6. 1985-ஆம் ஆண்டு இஸ்லாமிய சமுதாயத்தினரின் (1) அன்சர் (2) ஷேக் (3) சையத் ஆகிய பிரிவினரை, பிற்பட்ட வகுப்பினராக அறிவித்தார்கள்.

7. உலமா பென்ஷன்:

1981-ஆம் ஆண்டு, 60 வயதிற்கு மேற்பட்டவராகவும், 20 ஆண்டு முஸ்லீம் மத நிறுவனங்களில் பணியாற்றியவர்களுக்கு, மாதந்தோறும் 250 ரூபாய் ஓய்வூதியம் வழங்க உத்தரவிட்டார்கள். அப்போது 400 நபர்கள் பயனடைந்தார்கள். படிப்படியாக அதனை 1,400 நபர்கள் என்று உயர்த்தினார்கள்.

நான் முதலமைச்சரான பிறகு இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்த நன்மைகள்:

1. இஸ்லாமிய சமுதாயத்தினரின் மயானங்களைச் சுற்றி சுவர் கட்ட, சென்ற ஆண்டு 2 இலட்சம் ரூபாய், எளிய கடனாக அரசு அனுமதித்தது. இத்தொகை இந்த ஆண்டு மேலும்



சமண சமய மகான் மகாவீரர் பிறந்த நாளையொட்டி, சென்னையில் உள்ள ஜெயின் ஆலயம், மகாவீரர் அகிம்சா பிரச்சாரச் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த 17 பேர் 5.4.93 அன்று காலை மாண்புமிகு முதல்வர் அவர்களை இல்லத்தில் சந்தித்துப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்கள்.

அதிகரிக்கப்பட உள்ளது.

2. தமிழ்நாடு வக்பு வாரியம், அதன் கீழ் உள்ள நிறுவனங்களிலிருந்து பெறப் படும். 6 சதவிகித சகாயத் தொகையைக் கொண்டு, நிர்வாகச் செலவு செய்து வருகிறது. இத்தொகை அதன் நிர்வாகச் செலவிற்குப் போதவில்லை என்பதால், இதற்காகச் சென்ற ஆண்டு சிறப்பு இனமாக 5 இலட்சம் ரூபாயை அரசு மானியமாக வழங்கியது.

3. வக்பு வாரியத்திற்குப் புதிய கட்டடம் கட்ட, 5 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

4. சிறுபான்மையினர் நலம் கருதி, சிறுபான்மையினர் நல ஆணையம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ் வாணையத்தின் தலைவராக, திருமதி பாதர் சையீத் என்ற பெண்ணை, முதன் முதலாக நியமித்துள்ளோம்.

5. உலமா பென்ஷன் பெறுபவர்கள் எண்ணிக்கையை, 1400-இல் இருந்து தற்போது 1500-ஆக உயர்த்தியுள்ளோம்.

6. 1991-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, காயிதே மில்லத் அவர்களின் பெயரைச் சூட்டி உள்ளோம்.

- இப்படி, எங்கள் ஆட்சிக் காலம் முழுவதும், இஸ்லாமிய சமுதாயப் பெரு மக்களை அன்புடன் அரவணைத்து வந்துள்ளோம். அவ்வாறே இதர சிறு பான்மையினப் பெருமக்களுக்கும் நன்மைகள் பல செய்துள்ளோம். அனைத்து சிறுபான்மையினப் பெருமக் களையும் தொடர்ந்து அரவணைத்து, பாதுகாப்புடன், அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு மேலும் பல புதிய புதிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்து வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழகத்தில், உடுத்த மாற்று உடை யின்றி, கந்தலையே கசக்கிக் கட்டிக் கொண்டிருந்த, ஏழை எளியோருக்கு, ஏதாவது உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம், நாங்கள் ஆட்சிப் பொறுப் பேற்றவுடனே என் நெஞ்சத்தில் தோன் றியது. அதன் வெளிப்பாடுதான், தமிழ கத்தில் வாழும் ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகளுக்கும், நகரங்களில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை-எளியவர்களுக்கும், இலவச சேலை-வேட்டி வழங்கும் திட்டம். கடந்த இரு ஆண்டுகளாகப் பொங்கல் திருநாளை முன்னிட்டு, இலவச சேலை-வேட்டி வழங்கினோம். அடுத்த ஆண்டும் இத்திட்டம், தொடர்ந்து சிறப்பாக நிறைவேற்றப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது.

தந்தை பெரியார்.



கிராமப்புறங்களில் வாழும் மக் களுக்கு, கூடுதலாக மருத்துவ வசதி கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், மருத்துவர்களே கிராமங்களுக்குச் சென்று, மருத்துவ முகாம்களை நடத்தி, மக்களைச் சந்தித்து, நோயை அறிந்து, அங்கேயே அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும், மகத்தான மருத்துவ நலத் திட்டத்தை அறிமுகப்படுத்தி மாபெரும் வெற்றியும் கண்டு உள்ளோம்.

மாவட்டம் தோறும் மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை, விரைவாக வும் முறையாகவும் பரிசீலனை செய்து, தகுதியுள்ள அனைவரையும் தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து, பல்வேறு நலத் திட்டங்களின் கீழ், உதவிகள் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி உள்ளதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

**சமுதாய வீதியில்...**

சமுதாய வீதியில், விலை போகாமல் வீசி எறியப்படுகிற பூக்களாக, பெண் குழந்தைகள், இத்தனைக் காலம், இந்தத் தேசத்தில் அடைந்த துன்பத்திற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று உறுதி கொண்டேன். எனவே தான் அண்மையில், பெண் குழந்தை களைப் பாதுகாக்கும் திட்டத்தையும், பெண் குழந்தைகளை அரசே வளர்க்கும் திட்டத்தையும், அறிமுகப்படுத்தி இருக் கிறேன்.

'மங்கையராகப் பிறப்பதற்கே, நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா!' என்று, கவிஞர்கள் பெண்களின் புனிதத் தைப் பறைசாற்றினாலும், எதார்த்த நிலை, வேறாகவே உள்ளது. பிறக்கப் போகிற குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்துச் சொல்லும் திற மையை, இன்று விஞ்ஞானம் பெற்றிருக் கிறது.

இது வளர்ச்சிதான் என்றாலும், அந்த அறிவியல் தகவலை அறிந்துகொண்டு, பெண் குலத்தின் ஆணிவேரையே அறுத்து எறிகிற வேதனை, தொடர்கிறது.

இந்தக் கொடுமைக்கு, சமூகம், மவுன சாட்சியாக இருக்கலாம். ஆனால் பெண் ணுரிமைக்குப் போராடிய தந்தை பெரி யாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், வகுத்த வழியிலே நடைபோடும் பொறுப்பான அரசு, ஒரு பெண்ணையே முதல்வராகக் கொண்ட இந்த அரசு, எப்படி இதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியும்?

வெற்றி பெறுகிற ஒவ்வொரு ஆணுக்குப் பின்னும், ஒரு பெண் இருக் கிறாள் என்பது, உலகறிந்த தத்துவம். இருந்தாலும், அந்தத் தத்துவத்தை உண ராத சில மக்களும், நம்மிடையே இருக்கத் தான் செய்கின்றார்கள். 'பெண் குழந்தையா? அது வேண்டாம். கருவிலே கலைத்து விடலாமா? அவ்வாறு கலைக்க முடியாவிட்டால், பிறந்த பெண் சிசுவை அழித்து விடலாமா?' என்ற அவல நிலை, ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளில் நிலவி வருகின்றது. ஆனால், இன்று உங்கள் சகோதரியான என் கையில்தானே, தமிழகத்தின் கோடானு கோடி மக்கள், ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக் கின்றீர்கள்? நானும் ஒரு பெண் தானே!

திராவிட இயக்கத்தின் அடித்தளமே, பெண்ணுக்குச் சம உரிமை, என்ற உறுதியான கொள்கையின் அடிப்படை யில் - தானே அமைக்கப்பட்டது? தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகி யோர் பெண்களின் உயர்விற்காகவும் உரிமைக்காகவும் எவ்வளவு பாடுபட்ட னர். இத்தனை முயற்சிகள் மேற்கொண்ட பின்னரும், தமிழகத்தில், பெண் குழந்தை களை அழிக்கும் எண்ணம், ஒரு சிலர் மனதில் தோன்றுகிறது என்றால், அவர்கள் எத்தனைக் கீழ்த்தரமானவர்கள்?

இந்த மாபெரும் கொடுமைக்கு, நிரந் தரமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்ற நல்லெண்ணத்தில் தான், புதியதொரு புரட்சிகரமான திட்டத்தை, அரசு தீட்டியது. கருவில் வளரும் குழந்தை, பெண் என்று அறிந்து, அதனை வேண்டாம் என்று எண்ணும் பெற்றோர்கள், தயவுசெய்து அந்தச் சிசுவை அழித்துவிடாதீர்கள்.

அவர்களை வளர்த்துக் காக்க, எங்கள் அரசு இருக்கின்றது. பெண் குழந்தை களைப் பெற்றெடுங்கள். அவர்களை வளர்த்து வாழ்வு அளிக்க வசதி இல்லை என்றால், அருகிலுள்ள சமூக நலத்துறை இல்லங்களில் ஒப்படையுங்கள். நாங்கள் அவர்களை வளர்க்கின்றோம் என்று அறிவித்தேன். பல சமூக நலத்துறை இல்லங்களுக்கு வெளியே, தொட்டில்கள் கட்டி வைக்கச் சொல்லி இருக்கின்றேன். பெற்றோருக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தைகளைப் பிறருக்குத் தெரியாமல், அந்தத் தொட்டில்களில் போட்டுவிட்டுப் போகலாம்.

அவர்களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தை, அரசுக்கு வேண்டும், தமிழகத்திற்கு வேண்டும். ஏனெனில், தாயாக ஒரு பெண் வேண்டும் - தாரமாக ஒரு பெண் வேண்டும் - தமக்கையாகக் கூட ஒரு பெண் வேண்டும் - ஆனால் தங்கள் குழந்தையாக ஒரு பெண் வேண்டாம் என்று எண்ணும் எத்தர் களுக்குப் பெண் குழந்தை வேண்டாம் என்றாலும், நல்லதொரு சமுதாயத்தை நாளை உருவாக்க, அவர்கள் எங்களுக்குத் தேவை, இந்நாட்டுக்குத் தேவை. எனவே அவர்களை ஏற்று, வளர்த்து, காக்கும் பொறுப்பை, அரசே ஏற்றுக்கொண்டு உள்ளது. இனி எந்தப் பெற்றோரும், பெண் குழந்தைகளை அழிக்க வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்தைத் தயவு செய்து அவர்கள் தயங்காமல் பயன் படுத்திக் கொள்ளவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அரசின் ஒவ்வொரு துறை யிலும், புதுமைகளைப் படைக்கும் புரட்சிகரமான அரசாக, உங்கள் சகோதரி யின் அரசு செயல்பட்டு வருவதை, நீங்கள் கண்கூடாகக் காண்கின்றீர்கள். சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப் பினருக்கும், உரிய உதவிகளைச் செய்ய, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களைப் பாதுகாக்க, எங்கள் அரசு என்றுமே தயங்கியதில்லை.

**ரூ.502 கோடிக்கான திட்டங்கள்**

உங்களின் அன்புச் சகோதரியாகிய நான், இன்று கை நிறைய உதவிகளையும், மனம் நிறையத் திட்டங்களையும், சுமந்து கொண்டுதான் உங்கள் மாவட்டத்திற்கு வந்து இருக்கின்றேன்.

உங்கள் மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, 502 கோடி ரூபாய்க்கான திட்டங்களோடு வந்திருக்கின்றேன் என் பதை, மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்பு கின்றேன்.

நான் சட்டப்பேரவையில் 1991-ஆம் ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரி விக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய பொழுதே, தமிழகத்தில் அதிக அளவில் ஏற்றுமதி தொழில் செய்யும் நகரங் களுக்கு, அடிப்படை வசதிகளை அமைத் துத் தரும் திட்டங்களை, அரசு வகுத்து நிறைவேற்றும் என்று தெரிவித்தேன். அதன் அடிப்படையில், இம்மாவட்டத் தின் முக்கியத் தொழிலான, தோல பொருள் பதனிடல் மற்றும் தயாரித்தல் ஆகியவற்றில், பல ஆண்டுகளாக இந்தியா விலேயே முன்னணியில் இருந்துவரும் ஆம்பூர், வாணியம்பாடி, ராணிப் பேட்டை, மற்றும் பேரணாம்பட்டு ஆகிய பகுதிகளை, நவீன வசதிகளுடன் கூடிய, ஏற்றுமதி நகரங்களாக்கும் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள், மூன்று மாதங்களில் முடிக்கப்பட்டு, மத்திய அரசு, உலக வங்கி, மற்றும் இதர நிதி நிறுவனங்களின் உதவியுடன், இந்தத் திட்டத்தினை ஐந்து ஆண்டுகளுக்குள் செய்து முடிக்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் படும். இத்திட்டம் இந்த மாவட்டத்தின் தொழில் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன். மேலும், அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ், இம்மாவட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட பணிகளைத் திறந்து வைத்ததிலும், நலத் திட்ட உதவிகளை இம்மாவட்ட மக் களுக்கு வழங்கியதிலும், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தாங்கள் தேர்ந்தெடுத்த முதலமைச் சரை, சந்திக்க முடியாது என்ற ஒரு நிலை, தமிழக மக்களுக்கு, என் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது, என்ற எனது உறுதியான முடிவின் அடிப்படை யில் தான், இதுவரை சென்னை, தர்மபுரி, தென்னார்க்காடு, நாகப் பட்டினம்-காயிதே மில்லத், கோவை, பெரியார், சிதம்பரனார், திருச்சி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில், அரசு விழாக்களில் கலந்து கொண்டும், திருநெல்வேலி, சிதம்பரனார், கன்னியா குமரி ஆகிய மாவட்டங்களில், வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடி யாகச் சந்தித்தும் வந்துள்ளேன்.

இப்படி, மக்களைச் சந்திப்பதற்கு, நான் கொடுத்து வரும் முக்கியத்துவத்தின் தொடர்ச்சியாக, இன்று, இங்கே, வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட மக்களா கிய உங்கள் முன் நிற்கின்றேன்.

**தேர்தல் கருத்துக் கணிப்புகள்**

நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களை யும், ஏழை, எளியோரின் பாதுகாவலர் களையும், எவராலும், என்றைக்கும், அசைக்க முடியாது என்ற திடமான நம் பிக்கைஎனக்கு இருக்கிறது. மக்கள் மத்தி யில், அரசியல் கட்சிகளுக்கு உள்ள செல் வாக்கைக் கணக்கிட்டுச் சொல்லுவதாகச் சில பத்திரிகைகள் கருத்துக் கணிப்புகளை வெளியிடுகின்றன.

அவை, கல்லூரி மாணவர்களைக் கொண்டு சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங் களின் அடிப்படையிலோ, அல்லது ஒரு பத்திரிகையின் வாசகர்களிடமிருந்து பெறப்படும் பதில்களின் அடிப்படை யிலோ, கணக்கிடப்படுபவை. இவற்றில், குறிப்பிட்ட சிலர் மட்டுமே கலந்து கொண்டு, கருத்துக்களைச் சொல்கின் றார்கள். எனவே, பொதுவாக இவை, மக்களின் ஏகோபித்த கருத்துக்களாக அமைவது கிடையாது. ஏன்? - என் னையே எடுத்துக் கொண்டால், இதுவரை பல முறை கருத்துக் கணிப்புகள் செய்து வெளியிட்ட பத்திரிகைகள் எதிலும் - நான் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவேன், முதலமைச்சர் ஆவேன் என்று கருத்துச் சொன்னதில்லையே!

அவர்கள் கணிப்புகள் எல்லாம் தவறென்று, தமிழக மக்கள் நிரூபித்துக் காட்டினர். எனவே, எப்பொழுதுமே இதுபோன்ற கருத்துக் கணிப்புகளின் முடிவுகளுக்கு, நான் மதிப்புக் கொடுப்ப தில்லை. குறிப்பிட்ட சில பகுதிகளில் உள்ள, சில ஆயிரம் மக்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் அமையும், இதுபோன்ற ''கருத்துக் கணிப்புகள்', பொது மக்களின் ஏகோபித்த உணர்வு களைப் பிரதிபலிப்பதாக எப்போதும் அமைவதில்லை. ஏனென்றால், பத்திரி கைகளில் வரும் இந்த முடிவுகளைப் பார்த்துவிட்டு, எங்களுக்கு ஓட்டளிக்கும் மக்கள் யாரும் தங்களது ஆதரவைத் தருவது பற்றித் தீர்மானிப்பதில்லை.

எனக்கு என்று ஒரு கணிப்பு உள்ளது. அதுதான் 'நான் மாவட்டங்களுக்குச் செல்லும்பொழுது, காண்கின்ற மக்களின் முகங்கள். அவற்றில் காணப்படும் ஆர்வம், அன்பு, மகிழ்ச்சி, ஆகிய உணர் வுகளே, எனக்கு உள்ள ஆதரவு என்ன என்பதைத் தெளிவாக எடுத்து உணர்த் துவதாக நான் கருதுகின்றேன். நான் ஒவ்வொரு முறை சுற்றுப் பயணம் செல்லும் பொழுதும், சந்திக்கின்ற மக்களின் கண்களில் வீசுகின்ற ஒளி யினைக் கொண்டே, அவர்களின் நெஞ் சங்களை என்னால் எடைபோட முடி கிறது. நாளுக்கு நாள், நான் செல்லும் இடங்களில் எல்லாம், மக்களின் எழுச்சி கூடிக்கொண்டே வருவதை நான் காண் கின்றேன். நாங்கள் வளர்ந்துகொண்டு வருவதையும் நான் உணர்கின்றேன்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 25.3.93 அன்று ரம்ஜான் பண்டிகையையொட்டி, சென்னை, அண்ணாசாலையில் உள்ள தர்காவில் நடைபெற்ற பிரார்த்தனையில கலந்துகொண்டார்; ஏழை எளிய இசுலாமியர்களுக்கு வேட்டி, சேலை வழங்கினார்.

தமிழக மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து, அவர்களின் பேராதரவைத் தந்து, அவர்களுக்கு உழைக்கும் வாய்ப்பை எனக்கு நல்கி இருக்கிறார்கள். மக்கள் ஆதரவே, மகத்தானது என்தை உணர்ந்திருப்பவள் நான். மக்கள் பணியே மகேசன் பணி என்று கொண்டிருப்பவள் நான். எனவே எனக்கு உங்கள் ஆதரவு உள்ளவரை எந்தச் சக்தியாலும் எங்களை நெருங்க முடியாது, அசைக்க முடியாது.

**உங்களுக்கு நான் - எனக்கு நீங்கள்**

நான் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. என் மீது எத்தனை எத்தனையோ குற்றச்சாட்டுக்களையும், குறைபாடுகளையும், சிலர் திட்டமிட்டே கூறி வந்தாலும், உங்களுக்குப் பணிபுரிய நானும், என் மீது நம்பிக்கை வைத்து, பேராதரவு தர நீங்களும் இருக்கும் வரை, நான் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன். தொடர்ந்து, என் மக்கட் பணியினை, தொய்வில்லாது ஆற்றுவேன் என்று, உறுதி கூறுகிறேன்.

இன்றைய தினம், இந்த மாபெரும் விழாவில், அலை கடல் என, ஆர்ப்பரித்துக் கூடியுள்ள அன்பு உள்ளங்களைச் சந்தித்ததில், நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இந்த மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு, ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுக்கும் வாய்ப்பு, எனக்குக் கிடைத்ததற்குப் பெருமை அடைகின்றேன்.

இந்த விழா, இத்தனைச் சிறப்பாக நடைபெற, அயராது உழைத்த, உங்கள் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர், சகோதரர் ஜி. விஸ்வநாதன் அவர்களையும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் சகோதரி திருமதி இந்திரகுமாரி அவர்களையும், பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். நித்தம், நித்தம், மக்கள் பிரச்சினைகளையே எதிர்நோக்க வேண்டியுள்ள, முக்கியத் துறைகள் இரண்டின் பொறுப்பில் உள்ள சகோதரர் ஜி. விஸ்வநாதன், அவற்றை, எங்களை எதிர்ப்பவர்கள் கூட குறைகூற முடியாத அளவிற்கு, மிகவும் திறமையாக நிர்வகித்து வருகின்றார். புதிய பொதுவிநியோகத் திட்டத்தில் பல முற்போக்கான முறைகளை அறிமுகம் செய்துள்ளார், என்று கூடக் கூறலாம். அவருக்கு என் மனப்பூர்வமான பாராட்டுக்களை, மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்திற்குச் சட்டமன்ற உறுப்பினராகி, இன்று சமூக நலத்துறை அமைச்சராக - சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற திருமதி இந்திரகுமாரி அவர்கள், பல்வேறு, சமூக நலத்திட்டங்களை ஆர்வத்தோடு செயல்படுத்தி வந்தாலும், என் எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுப்பதில் பாராட்டுக்குரியவர்கள். குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், பெண்சிசுக் கொலையினைத் தடுக்கும், தொட்டில் குழந்தைத் திட்டத்தினை மிகச் சிறப்பாக, விரைந்து நிறைவேற்றி வருகின்றார்.

இந்த விழாவை, வெற்றி விழாவாக ஆக்குவதற்கு, அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும், வட 'ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு இராமசுந்தரம் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் இருந்து, நான் இந்த விழாவில் கலந்துகொள்ள, வருகை தந்த பாதையில் எல்லாம், வழிமேல் விழி வைத்து, என் வருகைக்காகக் காத்திருந்து, என்னை உவகைப் பெருக்கோடு, வாழ்த்தி வரவேற்ற பெருமக்கள் ஒவ்வொருவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த விழாவில், பாசத்துடன் கலந்துகொண்டு, சிறப்பித்துள்ள பெருமக்கள் ஒவ்வொருவருக்கும், என் இதயம் கனிந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். உங்களின் அன்பும், ஆதரவும், இந்தப் பாசமும், பரிவும் உங்களுக்கான சேவைகளை, நான் இன்னும் வேகமாகத் தொடர, எனக்குப் புதிய சக்தியை அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 5.4.1993 அன்று வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் இராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரையின் முழு விவரம்.**





# தென்னார்க்காடு - வள்ளலார் மாவட்டம் : விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டம்

## புதிய மாவட்டங்கள் உதயம்!

### மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

எங்கள் அரசு பொறுப்பேற்றவுடன், பெரிய வருவாய் மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து சீரான நிர்வாக அமைப்பிற்கு வழி வகுத்து வருகிறது. அதன் அடிப்படையில் சென்ற 2 ஆண்டுகளில், தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதே போல், தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து; கடலூரைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் என்றும், விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, விழுப்புரம் மாவட்டம் என்றும் பெயர் வைப்பது என்று முடிவு செய்து, வருவாய்த்துறை அமைச்சர், இந்தப்பேரவைக்கு, தனது மானியக் கோரிக்கை மீதான பதில் உரையில் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, விழுப்புரத்தினை தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, வைக்க வேண்டிய பெயர் குறித்து, பல்வேறு இடங்களில் இருந்தும், பலதரப்பட்ட மக்களிடம் இருந்தும், எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. குறிப்பாக, வன்னியர் சமுதாய இனத்தைச் சேர்ந்த, வன்னியர் சமுதாய மக்களின் வளர்ச்சிக்கு வழிகோலும் 18 சங்கங்கள், என்னிடம் ஒரு கோரிக்கை மனுவை வைத்தார்கள்.

தமிழ்நாடு வன்னியர் மன்றம், தமிழ்நாடு வன்னியர் பேரவை, தமிழ்நாடு வன்னியர் சங்கம், தமிழ்நாடு வன்னியர் வளர்ச்சிக் கழகம், வன்னிய குலசத்திரிய மகா சங்கம், வன்னியர் நல உரிமைச் சங்கம், ஜனநாயக வன்னியர் பேரவை, தேசிய வன்னியர் பேரவை, வன்னிய இளைஞர் பேரவை, தமிழ்நாடு வன்னியர் மாணவ நலக் கழகம், சமுதாய மேம்பாட்டுக் கழகம், வன்னிய இளைஞர் இயக்கம், தமிழ்நாடு வன்னிய இளைஞர் மன்றம், வன்னியர் நலச் சங்கம், கிறித்துவ வன்னியர் அமைப்பு, ஐ.சி.எப். வன்னியர் பேரவை, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி மற்றும் உழைப்பாளர் பொதுநலக் கட்சி.

இந்த 18 வன்னியர்கள் மன்றங்களை உள்ளடக்கிய, வன்னியகுலசத்திரிய நல அமைப்புகளின், மத்திய மையத்தின் தலைவர் இரா. குலசேகரன் 13.4.93 அன்று என்னை சந்தித்துக் கூட்டமைப்பின் தீர்மான நகலுடன், மனுவினைக் கொடுத்தார்கள். இச்சங்கங்கள் விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி, அதை என்னிடம் வேண்டுகோளாகவும் வைத்தார்கள். அதே போல் 14.4.1993 அன்று பிரிக்கப்படாத தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 14 சட்டமன்ற உறுப்பினர்கள், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில், என்னைச் சந்தித்து, ஒரு கோரிக்கைமனுவை கொடுத்தார்கள். அவர்களும், எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார் பெயரை, விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்குச் சூட்ட வேண்டும் என்ற தங்களின் விருப்பத்தினை மாவட்ட மக்களின் சார்பாக வைத்தார்கள்.

எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியாரைப் பற்றி இந்த மாநிலத்தில் அரசியல் தெரிந்தவர்கள், அறியாமல் இருக்க வாய்ப்பு இல்லை. வன்னியர் சமுதாயப்பெருங்குடி மக்களிடையே மட்டுமன்றி, தன்னுடைய களங்கமற்ற பொது வாழ்க்கையாலும், அரசியல் சாதுரியத் தன்மையாலும், பேச்சு வன்மையாலும், எல்லா தரப்பு மக்களும் தன்னை மதிக்கும்படி வாழ்ந்து, தான் ஒரு சகாப்தம் என்பதை நிரூபித்துக்காட்டியவர் அவர். முதன் முதலாக கடலூர் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் 1952 முதல் 1962 வரை, தமிழ்நாடு சட்டப்பேரவையில், சட்டப்பேரவை




உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றி, தமிழக அரசியலில் தன்னுடைய ஆழமான முத்திரையைப் பதித்தவர். 1954 முதல் 1957 வரை உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பணிபுரிந்து, பல சாதனைகளை, நிகழ்த்திக் காட்டியவர். அது மட்டுமின்றி, கடலூர் நகராட்சி மன்றத்தின் தலைவராகவும், உழவர் உழைப்பாளர் கட்சியின் தலைவராகவும் பல்வேறு சமூக பொது நல நடவடிக்கைகளில் பங்கு கொண்டு, நாட்டிற்காக உழைத்த நல்லவர், உத்தமர் எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார் ஆவார்.

**விழுப்புரம் வட்டத்தில் உள்ள மண்டகப்பட்டில், பல்லவர் ஆட்சிக் காலத்தே கட்டப்பட்ட முதலாவது குகைக் கோயில் உள்ளது.**

**சிதம்பரத்திற்கு அருகே இருக்கும் குடிகாடு என்ற இடத்தில், கி.பி. 2-ஆம் நூற்றாண்டு ஆட்சிக் கால வரலாறு கூறும் தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, ஒரு மதிப்பு மிக்க உழவர் வகுப்பைச் சேர்ந்த அவர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனில் மிகுந்த ஆர்வத்தையும், நாட்டத்தையும். காட்டி, அவர்கள் சமுதாயத்தில், மதிப்புமிக்க அங்கத்தினைச் சேர்ந்தவர்களாக வேண்டும் என்பதில், தீவிர ஆர்வம் காட்டியவர்.

ஜாதி, சமயம் போன்றவற்றைக் கடந்து நாணயமான அரசியல் வாழ்க்கை நடத்திய நல்லவர்களை, என்றென்றும் போற்றி வணங்குகின்ற பெருந்தன்மை உடையது, எங்கள் அண்ணா தி.மு.கழகம். அந்த உணர்வினைமதிக்கின்ற விதத்தில், ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை நிர்மாணிப்பதில், இந்த அரசு காட்டுகின்ற ஆர்வத்தின் உந்துதலின் காரணமாக, விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, "விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டம்" என்று பெயர் சூட்டப்படும் என்பதை, இம்மாமன்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**—சட்டப் பேரவையில், 15.4.93 அன்று ஆற்றிய உரையிலிருந்து.**





# முத்திரைத் தமிழில் சித்திரை வாழ்த்து!

**கவிஞர் இளந்தேவன்**

கரும்பிலே செய்த வில்லைக்
காமனார் ஏந்தும் காலம்!
அரும்பிலே செய்த அம்பை
அன்புடன் எய்யும் காலம்!

வேம்பிலே பூத்த பூக்கள்
வெளியெலாம் பறக்கும் காலம்!
காம்பிலே தேனைப் பூக்கள்
காதலாய் வளர்க்கும் காலம்!

வந்தது வசந்தம் என்று
வழிந்தது மகிழ்ச்சி வெள்ளம்!
சென்றது துன்பம் என்று
செழித்தது மக்கள் உள்ளம்!

ஆண்டதோர் ஆண்டு சென்று
அரும்பிற்று புதிய ஆண்டு!
பாண்டியர் தமிழில் வாழ்த்துப்
பாடிற்று உலகம் ஈண்டு!

ஆழிசூழ் உலகம் எல்லாம்
அமைதிப்பெண் ஆடும் கூத்து!
நாழிகை எல்லாம் இங்கு
நன்மைப் பெண் பாடும் பாட்டு!

பிறக்கின்ற புதிய ஆண்டு
பெண்மைக்குப் புகழ்சேர்க் கட்டும்!
இருக்கின்ற திசைகள் எட்டும்
இளமைக்கு முடிசூட் டட்டும்!



# மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூல்கள் வெளியீட்டு விழா!

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஆற்றிய உரைகளின் தொகுப்புப் புத்தகங்கள் வெளியீட்டு விழா, 31.3.93 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் மிகச் சிறப் பாக நடைபெற்றது.

மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் விழா வுக்குத் தலைமை வகித்தார்.

**தமிழக வரலாற்றில்...**

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு. இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''இந்த இனிய விழா, தமிழக வரலாற்றிலே இடம் பெறத்தக்க ஒரு முக்கிய விழா என்று சொல்லலாம். மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேச்சு - செயல் - கொள்கைகள் - கோட் பாடுகள் எல்லாம் அவரது உரை களிலே பரக்கக் காணலாம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் பேசிய உரைகளைத் தொகுத்துத் தமிழில் 'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்றும், ஆங்கிலத்தில் 'Jayalalitha Speaks' என்றும் இரு நூல்களை வெளியிட்டிருக்கின்றோம். ஆங்கில உரை, பிற மாநிலத்தவர் தெரிந்து கொள்ளப் பெரிதும் பயன்படும். ஆங்கிலத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குள்ள புலமை - நளினம்- சொல்லாற்றல் முதலியன இந்த



நூலைப் படித்தால் நன்கு விளங்கும்'' என்றார்.

பிறகு, இயக்குநர் அவர்கள், அமைச்சர் பெருமக்களுக்குப் பொன் னாடை அணிவித்தார்.

**நூல்கள் வெளியீடு**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதவி ஏற்று ஓராண்டுக் காலத்தில், பல்வேறு நிகழ்ச்சிகளில் தமிழில் ஆற்றிய உரைகளைத் தொகுத்து, 'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்றும், ஆங்கிலத்தில் ஆற்றிய உரைகளை 'Jayalalitha Speaks' என்றும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை தொகுத்திருந்தது.

இந்த இரு நூல்களை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டார். அவற்றின் முதல் பிரதிகளை, மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார்.



**பயன்தரும் நூல்**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்-

''ஓராண்டுக் காலத்தில் பல் வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆற்றிய உரைகளை ஒன்று திரட்டி இரு நூல்களாக வெளியிட்டிருக்கிறார்கள். இரு நூல்களையும் மிக அழகுற உருவாக்கி யிருக்கிறார்கள். அழகிய - அரிய - அருமையான நூல்களை வெளி யிட்ட செய்தி-மக்கள் தொடர்புத் துறையினரைப் பாராட்டுகிறேன். இந்த நூல் நல்ல தாளில், நல்ல அச்சு வடிவமைப்புடன் உருவாக்கப் பட்டிருக்கிறது.

''கொள்கைகள்-கோட்பாடுகள்- குறிக்கோள்கள் அடிப்படையில் இதில் சொல்லப்பட்டிருக்கிற கருத் துக்கள் உங்களுக்கு மிகவும் பயன் தரும். இந்த நூலில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், வள்ளுவரைப் பற்றி, தந்தைப் பெரியாரைப் பற்றி, பேரறிஞர் அண்ணாவைப் பற்றி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பற்றி, சௌந்தரபாண்டியனாரைப் பற்றி, கண்ணியம் மிக்க காயிதே மில்லத் பற்றி மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார்கள்.''

**எங்கும் பரவ வேண்டும்!**

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் பேசுகையில், ''இந்த நூல்கள் மிகச் சிறப்பாக - நல்ல முறையில் வடிவ மைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டிருக் கிறது. இந்நூலில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு தலைப்புகளில், பல்வேறு கருத்துக் களைச் சொல்லியிருக்கிறார். தொலை நோக்குப் பார்வையோடு, தமிழக முன்னேற்றம் கருதி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அருமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது இந்த நூலைப் பார்த்தால் தெரியும். இந்த நூலை தமிழ்நாடு முழுவதும், இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பரப்பவேண்டும்.'' என்றார்.

**கருத்துக் களஞ்சியம்**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசுகை



யில், ''அரிய சிந்தனைகளின் தொகுப்பாக இந்நூல் விளங்கு கிறது. பேச்சுக் கலை என்பது யாருக்கும் எளிதல்ல; மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாட்டுக்கும் -

●●

**நல்ல அச்சமைப்பு!**

**''இரு நூல்களையும் மிக அழகுற உருவாக்கியிருக் கிறார்கள். அழகிய - அரிய - அருமையான நூல்களை வெளியிட்ட செய்தித்துறை யினரைப் பாராட்ட வேண் டும். நல்ல தாள்; நல்ல அச்சமைப்பு...''**

**- மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்.**

●●

மக்களுக்கும் பயன்படத்தக்கக் கருத் துக்களை இந்நூலில் கூறியிருக் கிறார்கள். எழுத்தாற்றல், பேச் சாற்றல் ஒருங்கே அமைந்த கருத்துக் களஞ்சியமாக இந்த நூல் விளங்கு கிறது'' என்றார்.



**ஆற்றல் மிக்க உரை**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் பேசு கையில், ''குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட உரையாற்றும் திறம், ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறுகிற ஆற்றல் வேறு எவருக்கும் வராது. அத்தகைய ஆற்றல்மிக்க உரையைச் சிறப்பான முறையில் வடித்துள்ளதைப் பாராட்ட வேண்டும்'' என்றார்.



**வெற்றி முழக்கம்**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், ''இனிய முயற்சியுடன் திறமையோடு வெளியிட்டிருக்கிற செய்தித்துறைக் குப் பாராட்டுக்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழுக்காக,



தமிழ் மண்ணுக்காக ஆற்றிய உரை களைத் தொகுத்து இந்த வெற்றி முழக்கம் வெளிவந்திருக்கிறது'' என்றார்.

**பயன்தரக்கூடிய கருத்துக்கள்**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் பேசுகையில், ''மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர் களின் எழுத்துக்களை - பேச்சுக்



களைத் தொகுத்து நாட்டுக்குத் தந்துள்ளார்கள். டாக்டர் புரட்சித் தலைவியின் பேச்சில் சத்தியம் - நியாயம் - தொலைநோக்கு இருக்கும். அந்த வகையில் மக்களுக்குப் பயன்தரக்கூடிய கருத்துக்களை இந்த நூலில் சொல்லியிருக்கிறார். எழுத்தும் - பேச்சும் - செயலும் கொண்ட ஒரே தலைவி புரட்சித் தலைவி'' என்றார்.



**எல்லாரும் வாங்க வேண்டும்!**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் பேசுகையில், ''அழகிய வண்ண முகப்புடன் 44 தலைப்புகளில் முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் உரைகள் தொகுக்கப் பட்டுள்ளன. இந்த நூலைத் தேவை



●●

## படிக்கத் தூண்டுகிற வகையில்...

**''இந்த நூல் மிக நேர்த்தியாக வெளியிடப்பட்டிருக்கிறது. பார்க்கிற நேரத்தில், படிக்கவேண்டும் என்கிற ஆவலைத் தூண்டுகிற வகையில் நூல் அமைந்திருக்கிறது. இதைத் தமிழ் கூறு நல்லுலகம் வரவேற்கும் என நம்புகிறேன்''.**

- மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர்
திரு. சேடபட்டி முத்தையா.

●●

யான அளவிற்குத் தயார் செய்து வழங்க வேண்டும். புரட்சித்தலைவி அவர்களின் உரைகளை வீடியோ - ஆடியோவாகத் தயாரித்து வெளியிட்டால், எல்லாரும் அறிய ஏதுவாகும். இந்தத் தொகுப்புகளை எல்லாரும் வாங்கிப் பயனடைய வேண்டும்'' என்றார்.

**நேர்த்தியாக உருவாக்கப்பட்ட நூல்!**

மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில், ''சில தலைவர்கள் நன்றாகப் பேசுவார்கள், சில தலைவர்கள் நன்றாக எழுதுவார்கள். இந்த இரண்டு திறமைகளும் ஒருங்கே பெற்றவர் புரட்சித்தலைவி அவர்கள்.

●●

## நல்ல வடிவமைப்பு!

**''இந்த நூல்கள், நல்ல வடிவமைப்புடன் மிகச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முயற்சி எடுத்துக் கொண்ட செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்களைப் பாராட்டுகிறேன்''.**

- மாண்புமிகு கல்வியமைச்சர்
திரு. செ. அரங்கநாயகம்.

●●



பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆற்றிய உரைகளைக் கொண்ட இந்தத் தொகுப்பு மிக நேர்த்தியாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நூலைப் பார்க்கிற நேரத்தில், படிக்க வேண்டும் என்கிற ஆவலைத் தூண்டுகிறது. தமிழ்கூறு நல்லுலகம் இதனை வரவேற்கும் என நம்புகிறேன்'' என்றார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திர குமாரி அவர்கள் பேசுகையில், ''முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் உரையை அழகாகத் தொகுத்துத் தந்துள்ளது செய்தித்துறை. ஒவ்வொரு தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர்களும் இதை வாங்கி மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். நாட்ரம்பள்ளித் தொகுதிக்கு 500 பிரதிகளை நான் வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறி, முதல் நூறு பிரதிக்கான தொகையைக் கொடுத்தார்.

விழாவில், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு அழகு திருநாவுக்கரசு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம்-மீன்வளத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு ஊரகத் . துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர் மீரான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த இனிய விழாவில், அரங்கம் நிறைந்த மக்களைக் காண முடிந்தது. விழா மேடை வண்ண மலர்களால் எழிலுற அமைக்கப்பட்டிருந்தது.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு. பா. செயப்பிரகாசம் அவர்கள் நன்றி நவின்றார்.

- பி.வி. கிரி.



# உலக அளவில் தமிழ்நாட்டை ஒரு தலைசிறந்த சுற்றுலா மாநிலமாக்குவோம்!

## பொருட்காட்சி நிறைவு விழாவில் முதல்வர் உரை



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை-காமராசர் சாலையில் உள்ள தீவுத் திடலில் நடத்திவந்த 19-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி நிறைவு விழா 29.3.93 அன்று சிறப்புற நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்றுப் பரிசுகளை வழங்கி நிறைவு விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் - மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், மாண்புமிகு துணைச் சபாநாயகர், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

**விழா விவரம்**

செய்தி-சுற்றுலாத்துறையின் அரசுச் செயலரும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவருமான திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார்; மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

சுற்றுலாத் துறையின் இயக்குநரும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநருமான திருமதி ப. சிவகாமி, இ.ஆ.ப., திட்ட அறிக்கை படித்தார்.

**தலைமை உரை**

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுள்ள எந்தத் துறையும் சோடைபோகாது என்பதை நிரூபிக்கும் வகையில் இந்தச் சுற்றுலாப் பொருட்காட்சி அமைந்திருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, ஆண்டுக்கு ஆண்டு இந்தத் துறை இலாபகரமாக வளர்ச்சி பெற்றுவருவதை நாம் பார்க்கிறோம்.

''மாநில அரசின் எல்லாத் துறைகளும் இந்தப் பொருட்காட்சியிலே அரங்கம் அமைத்துள்ளன. மாநிலத்தின் தலைநகராம் சென்னை மாநகரிலே நடைபெறும் இந்தப் பொருட்காட்சியில், மத்திய அரசின் அரங்குகள் ஆறே ஆறுதான் இடம் பெற்றுள்ளன. இந்த வருத்தத்தை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்டும் நான், இந்த வகையிலாவது மத்திய அரசு மாநில அரசுக்கு இன்னும் அதிக அளவில் உதவவேண்டும் - கைகொடுக்க வேண்டும் என்பது தமிழக மக்களின் எண்ணமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

- இவ்வாறு சட்டப்பேரவைத் தலைவர் உரையாற்றியதையடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவு விழாப் பேருரையாற்றினார்; அதன்பின், சிறந்த அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கினார்.

விழா முடிவில் - தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகப் பொது மேலாளர் திரு. டி.சி. மதுசூதனன் நன்றி கூறினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் நிறைவு விழாப் பேருரை விவரம் வருமாறு:

''இன்றையதினம், பத்தொன்பதாவது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழாவில் கலந்துகொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதில், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஆண்டு, இப்பொருட்காட்சியைச் சிறப்பாக நடத்தி முடித்துள்ள, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தையும், அதன் அலுவலர்களையும், பொருட்காட்சியில் பங்குகொண்டவர்களையும், பரிசுகள் பெறுபவர்களையும் நான் பாராட்டுகின்றேன்.

''சுற்றுலா ஒரு தொழில்'' என்று அறிவித்த, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்

களின் வழி நடக்கும் எங்கள் அரசு, தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு, ஆக்கபூர்வமான நடவடிக் கைகளை எடுத்துவருகின்றது. நாங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள், தீட்டியுள்ள திட்டங்கள், வழங்கு கின்ற உதவிகள் அனைத்தும், நாட்டு மக்களுக்கு நன்கு தெரிந்தவையே. சுற்றுலாப் பயணிகளைத் தமிழகத்திற்குக் கவர்ந்து இழுக்கும் வண்ணம், சுற்றுலாத்துறை பல சீரிய முயற்சிகளைக் கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக மேற்கொண்டதன் பயனாக, சென்ற ஆண்டு, வெளிநாட்டுச் சுற்று லாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது; வருவாயும் அதிகரித்துள்ளது என்பதை, மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

''தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலை, சீர்கேடு அடைந்துள்ளது என்று, ஒரு சிலர் தொடர்ந்து கூறி வருகின்றார்கள்.

''ஆனால் தமிழகம் ஒன்று தான் இன்றைய நிலையில், பாதுகாப்பான மாநிலம், பத்திரமான மாநிலம், எவ்விதப் பாதிப்பும் இல்லாமல், சுற்றுலா சென்று வரக்கூடிய இடம் என்று, இதர மாநிலத்தினர் மட்டுமல்ல, வெளிநாட்டவரும் திடமாக நம்புகின்றனர் என்று குறிப்பிட்டால், அது மிகை ஆகாது. அந்த உண்மையான அமைதி நிலையின் காரணமாகத்தான், கடந்த ஆண்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்த குழப்ப மான சூழ்நிலையிலும், பாதுகாப்பற்ற பதட்ட நிலையிலும், தமிழகத்திற்கு வருகை தந்த வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

''3,33,877 வெளிநாட்டுச்சுற்றுலாப் பயணிகள், 1991-ஆம் ஆண்டில் தமிழகம் வந்து சென்றுள் ளனர். இதனுடன் 1992-ஆம் ஆண்டில், தமிழகம் வந்து சென்ற வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அவர்களின் எண்ணிக்கை 4,18,424 ஆக உயர்ந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இது சென்ற ஆண்டைவிட, 25.32 சதவிகிதம் உயர்வாகும். தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்கின்றது என்பதற்கு, இதைவிட வேறு சான்று தேவையில்லை. ஒரு மாநிலத்தில் நிலவும் அமைதி யான சூழ்நிலையைக் கணக்கிட, இதைவிட சரி யான அளவுகோல் வேறு இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

''தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கின் றது என்பதை, வெளிநாட்டவரே தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கும்போது, நம்மவர்களில் ஒரு சிலர், அந்த உண்மையை ஏற்க மறுக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது தான், அவர்களின் உள்நோக்கம் என்ன என்பது நமக்குத் தெரிய வருகின்றது. அரசியல் இலாபத்திற்காக, ஒரு சிலர் வெளியிடும் தவறான கருத்துக்களுக்கும், ஆதார மற்ற செய்திகளுக்கும், மக்கள் எவ்வித முக்கியத்து வமும் கொடுக்க வேண்டாம் என்று, இத்தருணத் தில் கேட்டுக்கொள்கிறேன். தமிழகம், அமைதிப் பூங்காவாகத் தொடர்ந்து திகழவேண்டும் என்பதற்



காகத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எங்கள் அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கின்றேன்.

''சுற்றுலா வளர்ச்சி என்பது, அரசிற்கு வருவாயை மட்டும் ஈட்டித் தருவது என்று கருதி னால், அது முற்றிலும் தவறான கருத்தாகும். ஒரு சுற்றுலாப் பயணியின் வருகை, மறைமுகமாக அப் பகுதியில் வாழும் பல்வேறு தரப்பு மக்களுக்கு, உதவியாக அமைந்து, அப்பகுதியின் பொருளா தார நிலையையே உயர்த்துகின்றது. அந்த வகை யில் அரசு, சுற்றுலா வளர்ச்சியை எவ்வளவு ஊக்குவிக்கின்றதோ, வளர்க்கின்றதோ, அவ்வளவு நன்மை அப்பகுதி மக்களுக்கு நேரடியாகக் கிடைக் கின்றது, என்ற உண்மை நிலையை உணர்ந்து தான், எங்கள் அரசு சுற்றுலா வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தி, ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றது. சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் பேசும்போது, மத்திய அரசு மாநில அரசுக்குக் கைகொடுக்க வேண்டும் என்றெல்லாம் குறிப் பிட்டார்; மத்திய அரசு உதவுகிறதோ இல்லையோ சுற்றுலாத்துறை இலாபகரமாக இயங்க இங்கே இரண்டு பெண்மணிகள் உதவிபுரிகிறார்கள். இத் துறையானது, கடந்த 1990-ஆம் ஆண்டுவரை நட்டத்தில்தான் இயங்கி வந்தது; நான் இந்தத் துறையின் பொறுப்பேற்றபின் துறைச் செயலாள ராக இன்னொரு பெண்மணியையும் (திருமதி சி.கே. கரியாலி), நிர்வாக இயக்குநராக மற்றொரு பெண்மணியையும் (திருமதி ப. சிவகாமி) நியமித்தேன்; இப்போது இத்துறை தொடர்ந்து இலாபகரமாக நடந்து வருகிறது என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மாநிலங் களுக்கு எடுத்துக்காட்டாக இந்த அளவுக்கு இந்தத் துறை விளங்குவதற்குக் காரணமான இவ்விரு பெண்மணிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள் கிறேன்.

சுற்றுலா வளர்ச்சிக்கு இடையூறுகளாகவும், இடர்ப்பாடுகளாகவும் உள்ள பிரச்சினைகளை, எங்கள் அரசு உடனுக்குடன் பரிசீலித்து, விரைந்து முனைப்போடு தீர்த்து வருகின்றது. தமிழகத்தை உலக அளவில், ஒரு தலைசிறந்த சுற்றுலா மாநிலமாக ஆக்கவேண்டும் என்ற எங்கள் எண் ணத்திற்குச் செயல்வடிவம் கொடுத்து, விரைவில் செய்து முடிக்க, அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்பதையும் தெரிவித்து, விடை பெறுகின்றேன்.''











# வளரும் தென்னார்க்காடு மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டம் தமிழ்நாட்டி லேயே பரப்பளவிலும், மக்கள் தொகை அள விலும் மிகப்பெரிய மாவட்டமாகத் திகழ்கிறது. 11000 ச.கி.மீ. பரப்பளவையும் 48 இலட்சம் மக்கள் தொகையும் கொண்டுள்ளது.

மாவட்டத்தின் கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலும், மேற்கில் சேலம் மாவட்டமும், வடக்கில் செங்கல்பட்டு- எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டங்களும், தெற்கில் திருச்சி, தஞ்சை மாவட்டங்களும் எல்லைகளாக அமைந் துள்ளன.

- ஆறு காடுகளால் இம்மாவட்டம் சூழப்பட்டு இருந்ததால், ஆர்க்காடு என்றும், மற்றும் ஆர்க் மரங்கள் நிறைந்த காடுகளாக இருந்ததால் ஆர்க் காடு எனப் பெயர் பெற்றதாகவும் இம்மாவட்டத் தின் பெயர்க் காரணங்கள் கூறப்படுகின்றன.

கடலூர், சிதம்பரம், விருத்தாசலம், திருக் கோயிலூர், திண்டிவனம், நெய்வேலி என்ற ஆறு கோட்டங்களையும், 14 வட்டங்களையும், 35 ஊராட்சி ஒன்றியங்களையும் தென்னார்க்காடு மாவட்டம் நிர்வாக அமைப்புக்களாக கொண்டு நிர்வகிக்கப்படுகிறது.

அந்நிய நாடுகளில் வாழும் இந்தியர்களின் முதலீட்டால் வெகுவிரைவில் ரூ.1000 கோடி முதலீட்டில், பிரமாண்டமான மின் உற்பத்தி நிறுவனம் இம்மாவட்டத்தில் உருவாக உள்ளது. கோவையைச் சேர்ந்த திரு. ஜி.என். சாமி என்ப வரின் முயற்சியின் பயனாக, வெகு விரைவில் இந்தத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பண்ணுருட்டி அருகே காடாம்புலியூரில் ரூ.1000 கோடி முதலீட்டில் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனமும், ஐ.டி.சி. நிறுவனமும் இணைந்து ஒரு காகிதத் தொழிற்சாலை நிறுவ உள்ளன.

இம்முயற்சிகளின் பலனாக, தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான படித்த வேலையில்லாத இளைஞர்கள் பயனடை வார்கள் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்திலேயே முதன் முதலில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட மிகப் பழமை யான சர்க்கரை ஆலை தென்னார்க்காட்டில் நெல்லிக்குப்பம் என்ற இடத்தில் இன்றும் சிறப் போடு இயங்கி வருகிறது. தமிழகத்திலேயே அதிக மான சர்க்கரை ஆலைகளைக் கொண்ட மாவட்ட மும் தென்னார்க்காடு மாவட்டமேயாகும்.

இங்கே குன்னம் என்னுமிடத்தில் கிடைக்கும் கிரானைட் கருப்புக்கல் உலகப் புகழ் பெற்றது.

**ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**தென்னார்க்காடு மாவட்டம்**

★ தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண் டிக்கத்தக்கது ஒன்று' உண்டானால் அது குடி என்ற சாபக்கேடுதான். மதுப் பழக்கம் ஒரு வனுடைய மனிதத் தன்மையை அழித்து அவனை மிருகமாக மாற்றி, மனைவி, தாய், உடன் பிறந்தவர் முதலியவர்களைக் கூடப் பிரித்துணர இயலாதபடி ஆக்குகிறது.

- அண்ணல் காந்தியடிகள்.



**பலாப்பழம் விளையும் ஊர்கள் பல இருக்கலாம்; ஆனால், ஏராளமாகப் பலாப்பழம் விளையும் ஊர்-இன்னும் சொல்லப் போனால் இந்தியாவிலேயே சுவைமிகுந்த பலாப்பழம் விளையும் ஊர், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பண்ணுருட்டிதான்!**

இம்மாவட்டத்தில் வெட்டியெடுக்கப்படும் கிரானைட் கற்கள் மூலம் மட்டும் ஆண்டிற்கு ரூ.6 கோடி அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

பண்ணுருட்டியில் முந்திரியும், விருத்தாச்சலம்-கடலூரில் பலாப்பழமும் ஏராளமாக விளைகின்றன. தேவையான அளவில் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது.

டென்மார்க் நாட்டின் நிதி உதவியுடன் இயங்கும் டேனிடா திட்டமும், 'டேன்லேப்' (DANLEP) என்ற பெயரில் டேனிடா தொழுநோய் ஒழிப்புத் திட்டமும் தென்னார்க்காடு மாவட்டத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வசதி அளித்தல், தொழுநோய் ஒழிப்பு ஆகிய பணிகள் இத்திட்டத்தின் மூலம் தீவிரமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு 90,000 மக்கள் கொண்ட பகுதிக்கும் ஒரு சுகாதாரக் கிளை மையம் என 58 மையங்கள் டேனிடா திட்டத்தின் கீழ் செவ்வனே செயல்படுகின்றன. இதனால் 2,389 கிராமங்கள் மிகுந்த பயனடைகின்றன.

கல்வராயன் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் சிறப்பாகச் செயல்படும் ஒரு நல்ல திட்டமாகும். மலைவாழ் மக்களின் குடிநீர் விநியோகம், பள்ளிகள், சாலை வசதிகள் ஆகிய தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

ஆதிதிராவிட நலத்துறையினரால் நடத்தப்படும் உண்டு உறைவிடப் பள்ளிகள் குறிப்பிடத்தக்க பயன்களை அளித்து வருகின்றன. மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான பட்டு வளர்ப்புத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. கல்வராயன் மலையில் கிடைக்கும் கடுக்காய் மிகவும் பிரசித்தி பெற்றது. அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே விளையும் கருவேப்பிலை மிகவும் ருசியானது. இங்குள்ள வாழும் மக்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்காக மலைமக்கள் மேம்பாட்டுத் திட்டம் செவ்வனே நடந்தேறி வருகிறது. இம்மாவட்டத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மின்வசதி செய்து ஒளிமயமாக்கப்பட்டுள்ளது என்பது மனநிறைவை அளிக்கும் சாதனையாகும்.

ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டிற்காகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டில் 3,400 வீடுகள் கட்டியும், 950 ஜீவன் தாரா கிணறுகள் வெட்டியும் தரப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 11,151 குடும்பங்களுக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1,710 எக்டேர் சமூகநலக் காடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்துக் கிராமங்களிலும் பள்ளிக்கூட வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. இங்கே படித்தவர்கள் 68 சதவிகிதம் உள்ளனர். வரும் ஆண்டில் இம்மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் செயல்படுத்தப்பட உள்ளது.

இம்மாவட்டத்தில் 89 கி.மீ. நீளக் கடற்கரை உள்ளது. 5000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலை நம்பி வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் வாழும் 40 கிராமங்களில் மீனவர்களுக்கான சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தற்சமயம் செயற்கை முறையில் இறால் வளர்ப்புத் திட்டங்கள் பெரிதும் வெற்றியடைந்து வருகின்றன. மீனவர்களுக்கென்று தனியே பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. மீனவர்களுக்கென வீடு கட்டும் திட்டம் நிறைவேறி வருகின்றது. அவர்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ள 400 வீடுகளில் 250 வீடுகள் இவ்வாண்டில் முடிவடைய உள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள 200-க்கும் மேற்பட்ட குளங்களில் மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன. மீனவர்கள் முன்னேற்றத்திற்கு அமைக்கப்பட்ட மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமை இம்மாவட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

இம்மாவட்டத்திலுள்ள பிச்சாவரம் என்கிற சுற்றுலா மையம் ஏராளமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆண்டுதோறும் சிதம்பரம் நடராசர் கோயிலில் நடைபெறும் 'நாட்டியாஞ்சலி' பல்வேறு மாநிலங்களிலிருந்து வரும் நாட்டியக் கலைஞர்களைக் கொண்டு சிறப்பாக நடத்தப்படுவதாகும். இது அனைவரும் கண்டுகளிக்க வேண்டிய ஓர் ஒப்பற்ற நாட்டிய நிகழ்ச்சியாகும்.

பொதுமக்கள் அரசின் திட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதுடன், நாட்டின் முன்னேற்றத்திற்கு அரும்பணியாற்றிட வேண்டும்.



# பழுப்புப் புரட்சியில் நெய்வேலி



பண்டித நேருவுக்கும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துக்கும் ஒரு தொடர்பு உண்டு. அது என்ன? பண்டித நேரு பிறந்தது நவம்பர் 14. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் பிறந்ததும் நவம்பர் 14. ஆனால், ஆண்டுதான் வெவ்வேறு.

பண்டித நேருவின் 68-வது பிறந்த நாளன்று (14.11.1956) அவருடைய மாபெரும் கனவு நனவாகும் வகையில், நவீன இந்தியாவை உருவாக்கும் அவரது முயற்சியின் முதல் படியாக 'நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்' அவரது பொற்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

21-ஆம் நூற்றாண்டுடன் இந்தியாவை இணைக்கும் சக்தி மிக்க பாலமாக விளங்கும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் (NLC) இன்றைய தினம் 23,000 தொழிலாளர்கள், தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர்.

என்.எல்.சி.-க்கு ஒருமுறை முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வருகை புரிந்தபோது - "NLC has grown into a show piece of India" என்று புகழ்ந்தார்.

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் என்.எல்.சி. பற்றிக் குறிப்பிடுகையில் "Neyveli has shown that public ownership, public mangament can be efficient, can give return on the investment that has been made and can work profitably for the development of the country". ("அரசு பொது நிறுவனங்கள் திறமையாக இயங்க முடியும்- போட்ட முதலீட்டுக்கு இலாபத்தை ஈட்டித்தர முடியும். நாட்டின் முன்னேற்றத்திற்கென இலாபகரமாக இயங்க முடியும் என்பதையே நெய்வேலி காட்டுகிறது") என்று புகழாரம் சூட்டினார்.

என்.எல்.சி.-க்கென்றே தங்களை அர்ப்பணித்துவிட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும், நிர்வாகமும் தங்களது இடைவிடாத உழைப்பின் மூலம், 'பழுப்புப் புரட்சி'யினைச் (Brown revolution) சாதித்துக் காட்டியுள்ளனர்.

ஒவ்வொரு டன் லிக்னைட்டை உற்பத்தி செய்திட, 12 டன் தாதுப் பொருளை 80 மீட்டர் ஆழத்திலிருந்து வெட்டி எடுக்க வேண்டியுள்ளது.

1962 மே திங்களில் 50 மெகா வாட் உற்பத்தித் திறனுடன் மின் சாரப் பிரிவு செயல்படல் தொடங்கியது. படிப்படியாக 1970-இல் 9 பிரிவுகள் செயல்படத் தொடங்கின. என்.எல்.சி.- யின் மொத்த மின் உற்பத்தி அளவு 600 மெகா வாட்டை எட்டியது.

1987-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27-ஆம் நாள் இரண்டாம் அனல் மின் நிலையத்தை, மறைந்த முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நாட்டிற்கு அர்ப்பணித்தார். இவ்விரு மின் நிலையங்களும் தெற்காசியாவிலேயே முதன் முதலில் தொடங்கப்பட்ட மின் நிலையங்களாகும்.

நாட்டின் பிற பகுதிகளில் தொடர்ந்து வறட்சி ஏற்பட்ட காலங்களிலும் நெய்வேலியில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டதே இல்லை. ஒரு டன் நிலக்கரி வெட்டி எடுக்கப் படும்போது 15 டன் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. நாளொன்றுக்கு 30,000 டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்படுவதால், 4,50,000 டன் நீர் வெளியேற்றப்படுகிறது. இதில் 70 சதவிகிதம் நீர் விவசாயத்திற்கும் மீதமுள்ள 30 சதவிகிதம் சமுதாயத்தின் உபயோகத்திற்கும் பயன்படு



கிறது. நெய்வேலியைச் சுற்றி 25 முதல் 30 கி.மீ. பரப்பளவில் உள்ள கிராமங்கள் இதனால் பயனடைகின்றன. எனவே, மிகப் பெரிய பிரச்சினையாக உருவாகியிருக்க வேண்டிய தண்ணீர் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது.

தற்பொழுது என்.எல்.சி.-க்குச் சொந்தமாக இரண்டு பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்கள் (தெற்காசியாவிலேயே மிகப் பெரியது)இரண்டு பெரிய அனல் மின் நிலையங்கள், யூரியா தயாரிக்கும் உரத் தொழிற்சாலை, லிக்னைட் கோக் (Lignite Coke) மற்றும் கார்போ இரசாயனப் பொருட்கள் (Carbo Chemical Products) தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவை உண்டு.

நாட்டிலேயே முதன் முதலாக 210 மெகாவாட் திறன் கொண்ட கொதிகலன்களை (210 MW lignite fired boilers) உடையது, இரண்டாம் அனல் மின் நிலையம். இங்கு தான் முதன் முதலில் Tower type boiler பயன்படுத்தப்பட்டது. இங்கு தான் முதன் முதலில் மிகச் சிறந்த Soft warebased burner management முறை பயன்படுத்தப்பட்டது.

இங்குதான் முதன் முதலில் ஹைட்டிரஜனைக் கொண்டு குளிர்ப் படுத்தப்படும் மிகப் பெரிய ஜெனரேட்டர் தொடங்கப்பட்டது. ஹைட்ரோபுளோரிக் அமிலத்தைக் கொண்டு இதை சுத்தம் செய்யும் முறையும் இங்கேதான் முதன் முதலில் தொடங்கப்பட்டது. இதனால் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் இலட்சக்கணக்கான இல்லங்களுக்கு ஒளியை வழங்குகிறது.

என்.எல்.சி.-யின் மின் உற்பத்தித் திறனைத் தொடர்ந்து பெருக்கிக் கொண்டே செல்ல, இடையறாத முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இப்போதுள்ள மின் நிலையங்களின் உற்பத்தியளவையும், சுரங்கத்தின் உற்பத்தி அளவினையும் பெருக்குதல் - 500 மெகாவாட் யூனிட்டுகள் திறன் கொண்ட 3 பிரிவுகள் அடங்கிய மூன்றாம் அனல் மின் நிலையம் அமைத்தல் ஆகியவை என்.எல்.சி.-யின் அடுத்த கட்டத் திட்டமாகும். இதனால் மின் உற்பத்தியின் அளவு அடுத்த பத்தாண்டில் 4200 மெகாவாட்டாக உயரும். 2000-ஆம் ஆண்டிலும் அதற்கு அப்பாலும் நான்காவது, ஐந்தாவது, ஆறாவது அனல் மின் நிலையங்கள் முறையே



630, 1500, 1000 மெகாவாட் திறனுடன் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.



நெய்வேலி, இயந்திரங்களுக்காகவும், தொழில் நுட்பத்திற்காகவும் மற்றவர்களை எதிர்பார்க்கும் காலம் மலையேறிவிட்டது. தமது 30 ஆண்டுக் கால அனுபவத்தையும் தொழில் நுட்பத்தையும் உலகத்தோடு பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளது. சுரங்கத் தொழிலிலும், மின் உற்பத்தியிலும், நீர் ஆதாரங்களை நிர்வகிப்பதிலும், மனித வள மேம்பாட்டிலும், மின் சக்தியை நிர்வகிப்பதிலும், தொழிற்சாலை சுற்றுச்சூழல் சமநிலையைப் பராமரிப்பதிலும் தன்து ஆற்றலையும் அனுபவத்தையும் நாட்டின் நலனுக்காக மற்ற நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக உள்ளது.

தமிழகத்தில் 480 ச.கி.மீ. பரப்பில் உள்ள நிலக்கரியைப் பற்றி



ஆய்வு செய்து வரைபடத்தை என்.எல்.சி. தயாரித்துள்ளது. தமிழகத்தின் சில பகுதிகள், பாண்டிச்சேரி, ராஜஸ்தான், ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் நிலக்கரி தோண்டும் பணிகளில் என்.எல்.சி. ஈடுபட்டுள்ளது. என்.எல்.சி.-யில் புதிய ஐந்து திட்டங்களுக்குத் திட்ட அறிக்கைகளைத் தயாரித்துத் தந்துள்ளது. இதன் மூலம் நெய்வேலியில் ஆண்டொன்றுக்கு 32 மில்லியன் டன் நிலக்கரியைப் பெற இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. ராஜஸ்தானிலும், குஜராத்திலும் நிலக்கரியை வெட்டி எடுப்பதில் என்.எல்.சி. தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'பக்கட்-வீல்' (Bucket-wheel) தொழில் நுட்பத்தை நமது சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு என்.எல்.சி. மாற்றிக் கொண்டது. தற்போது என்.எல்.சி.-க்குத் தேவைப்படும் 70 சதவிகிதம் உதிரி பாகங்கள் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மின் நிலையங்களைப் புதிதாகத் தொடங்க திட்டமிடுதல், அமைத்தல், தொடங்கி வைத்தல், வெற்றிகரமாக மின்சாரம் தயாரித்தல், பராமரித்தல் ஆகிய பணிகளை என்.எல்.சி. செவ்வனே செய்து வருகிறது. மின் நிலையப் பொறியாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இங்கே பயிற்சி அளிக்கப் படுகிறது. கல்பாக்கம், தாராபூர் அணுமின் நிலையங்கள் உள்ளிட்ட பல மின் நிலையங்களில் முக்கியப் பிரிவில் பணியாற்றும் பல நிறுவனங்களில் பணிபுரிவோர் என்.எல்.சி.-யில் பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டிலேயே லிக்னைட் நிலக்கரி தயாரிக்கும் ஒரே நிறுவனமாக என்.எல்.சி. இருப்பதால் இத்துறையில் ஆலோசனையும், பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

உலகிலேயே மிகச் சிறந்த தொழில் நுட்பமும், விஞ்ஞான வளர்ச்சியும், இந்தியாவின் கலாச்சாரத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில், ''செய்யும் தொழிலே தெய்வம்'' என மதித்து அதற்குத் தங்களை அர்ப்பணிக்கும் உன்னதப் பண்பாடும் இணைந்து என்.எல்.சி.-யைத் தலைசிறந்த நிறுவனமாக விளங்கச் செய்துள்ளன.

-என். இளங்கோ



## 'தமிழரசு' இதழில்...

மருத்துவ நிபுணர் வினா-விடைப் பகுதியில் அடுத்ததாகக் **'கண் மருத்துவம்'** இடம் பெறுகிறது!

வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, அரசு கண் மருத்துவமனை இயக்குநரும் கண்காணிப்பாளருமான **டாக்டர் வி.எம். லோகநாதன்** அவர்கள் பதிலளிப்பார்.

கண் மருத்துவம் குறித்த வினாக்கள் அனுப்பப்பட வேண்டிய கடைசித் தேதி 16.5.1993

வினாக்களை அஞ்சலட்டையில் எழுதவும். எழுதும்போது தலைப்பில் 'மாதம் ஒரு மருத்துவர்' என்று குறிப்பிடவும்.

# முந்திரி

தமிழகத்திலேயே வேறெங்கும் இல்லாதபடி தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏராளமான இடங்களில் முந்திரி பயிரிடப் படுவதை நாம் காண முடியும்.

பண்ணுருட்டியில், கடந்த 40 ஆண்டுக் காலமாக இத்தொழிலில் ஈடுபட்டு முன்னேறியிருப்பவர் திரு. டி.ஆர். வெங்கடாசலம். முந்திரி பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள் இவை:



தென்னார்க்காடு மாவட்டத்தில் சுமார் இரண்டு இலட்சம் ஏக்கரில் முந்திரி பயிரிடப் படுகிறது; குறிப்பாகப் பண்ணுருட்டி, கடலூர், விருத்தாசலம் பகுதிகளில் அதிகம். காரணம் இது செம்மண்ணும் சரளைக் கல்லும் கலந்த மண் வாகுள்ள பகுதி.

இங்கு வளரும் ஒரு பெரிய முந்திரி மரம் சுமார் 12 சென்ட் நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும்!



முந்திரிக்கு அதிக மழையோ, குறைவான மழையோ கூடாது; ஓரளவு தண்ணீர் இருந்தாலே போதும்.

முந்திரியில் 22 ரகங்கள் இருக்கின்றன.



'10 ரக -

இங்கிருந்து முந்திரிப் பருப்பு அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, ஹாங்காங், சிங்கப்பூர், துபாய், சவூதி போன்ற பல நாடுகளுக்கு முந்திரி ஏற்றுமதி செய்யப்படுகிறது. பண்ணுருட்டியில் மட்டும் இருபது முப்பது பேர் முந்திரி ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சுற்றுப்புறத்திலுள்ள சுமார் முப்பது கிராம மக்கள் இலாபகரமானதாக இருப்பதால் முந்திரி பயிரிடுவதை முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.



முந்திரி பயிருக்கான பூச்சி மருந்து வாங்குவது போன்ற சில வகைகளில் தமிழக அரசும் இதற்கு உதவி வருகிறது.

—'சித்தார்த்தன்'

TNSC BANK

## The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits**
**(Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# முன்னேற்றம் காணும் தென்னார்க்காடு

— டாக்டர் நா. முருகேசன்

செங்கை மடியில் தலையை வைத்து
சேலம் தஞ்சை திருச்சி மண்ணில்
கால்களைப் பதித்துக் களிநடம் புரிந்து
வங்கக் கடலை ஒருகரம் தொட்டு

வடஆர்க்காட்டினை மறுகரம் அணைத்து
மகிழ்ச்சிக் கடலில் திளைக்கும் மங்கை,
தென்னார்க் காடெனும் செந்தமிழ்க்கங்கை!

மருதம் முல்லை நெய்தல் பாலை
நால்வகை நிலங்களும் நங்கையின் உடல்வளம்!
மணிலா கரும்பு வாழை நெல்வகை
மாற்றுக் குறையா மக்கட் செல்வம்!

உலகையே ஈர்த்திடும் உயர்ந்த நடனம்
அலகில் சோதியன் அம்பலத் தாடி,
அழைத்தே அருள்தரும் அற்புதச் சிதம்பரம்!

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடிய வள்ளலார் மக்களைத் திருத்த
சமரச சுத்தசன் மார்க்கம் கண்டதெம்
வடலூர் என்னும் மந்திர பூமியில்!

மலைகளின் வயிற்றில் கறுப்புவைரம்
விலையிலாச் சீதனம் விளையும் இடம்இது!
காவிரிக் கரங்கள் படுகிற இடமெலாம்
கருத்தைக் கவரும் பசுமைப் புரட்சி!

இளமை குறையா எளிமை அழகுடன்
தென்னார்க்காட்டுக் கடற்கரைப் பகுதிகள்!
கற்பு மாறாக்கடலூர்க்கடற்கரை,
காண்போர் மனத்தில் ஆட்சி செலுத்திடும்!
வங்கக் கடல்தரும் குளிர்ச்சியைப் போல
தெங்கிள நீரின் தென்னந்தோப்புகள்!

பிச்சாவரம் ஓர் உல்லாச உலகம்!
கடல்கள் ஒதுக்கிய கண்ணீர்க் குழந்தைகள்
அடக்கமாய் வாழும் அமைதி நீர்க் கிடங்கு!

படகுப் பயணமும் கரபுன்னை நடனமும்
மனதை மயக்கும் மகிழ்ச்சிப் பூங்கா!

கரும்பின் பிறப்பு அதிகம் இருப்பதால்
சர்க்கரைப் பிறப்பும் சட்டென நடக்க
ஐந்து ஆலைகள் அயரா துழைக்கும்!

பண்ணுருட்டியை எண்ணிடும் போதிலே
என்னடா நாக்கிலே இப்படி உமிழ்நீர்!
பலாப்பழங்களும் முந்திரிக் கொட்டையும்
உலா நடத்திடும்! ஊரைக் கூட்டிடும்!

கல்வராயன் மலைவாழ் மக்கள்
கள்ளம் கபடம் இல்லா உளத்தார்
முன்னேறத் துடிக்கும் முல்லை மனத்தார்!

நேசக்கரமுடன் ரஷ்ய நாட்டினர்
நெய்வேலி வளம்பெறச்செய்த உதவியால்
நிலக்கரி மின்விசை நித்தமும் கிடைக்கும்!
உற்பத்தித்திறன் உயரே செல்லும்!

எண்ணால் எழுத்தால் கண்ணைக் கொடுக்கும்
அண்ணாமலையார் பல்கலைக் கழகம்!

விண்ணையும் அடக்கி வெற்றியைக் குவித்த
திண்திறன் தோளான் தேசிங்கு ராஜன்
மலைமேல் எழுப்பிய கோட்டை கொத்தளம்
மங்காப் புகழின் தங்கப் பதக்கம்
சிந்தையை மயக்கும் செஞ்சி நகரிலே!

மாவட்ட ஆட்சித் தலைவர் மாண்புற
'கிளைவ்'வின் பங்களா சிறப்பாய் உதவும்!

எங்கள் இந்த மண்வாழ் மக்கள்,
பொருளாதாரம், சமூக வளர்ச்சியில்
மறுமலர்ச்சி; மாற்றம் விரும்பி
உழைப்பை மூல தனமாய் ஆக்கி
ஒவ்வொரு நொடியும் வெற்றி காண்கிறார்!
விரைவில் சாதனை நிச்சயம் நிகழும்!
தென்னார்க்காடு முன்னேற்றம் காணும்!



# வடலூர் இராமலிங்க அடிகளார்

●●●

உலகளாவிய புகழ்பெற்ற வள்ளல் பெருமானின் வாழ்க்கை வரலாறு இந்தக் கட்டுரை மூலம் இனிய-எளிய தமிழில் விளக்கப்படுகிறது:

●●●

'அருட்பிரகாச வள்ளலார்' என்று பிற்காலத்தில் சிறப்புறக் குறிப்பிடப்பட்ட இராமலிங்கர், 5.10.1823-இல் (சுபானு ஆண்டு, புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை) பிறந்தார். அவருடைய பெற்றோர்-இராமையா பிள்ளை - சின்னம்மாள் தம்பதியாவர்.

பிறந்த ஊர், தில்லைக்கு வடமேற்கே உள்ள மருதூர்; பார்வதிபுரம் என்றும் இவ்வூருக்குப் பெயருண்டு.

இராமையா பிள்ளைக்குச் சின்னம்மாள் ஆறாவது மனைவி; அவருக்கு நம் இராமலிங்கர் ஐந்தாவது பிள்ளை - அதாவது கடைசி மகன். கருணீகர் மரபைச் சேர்ந்த சைவவேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

பிள்ளைப் பருவத்திலேயே இராமலிங்கரை 'அம்பலவாணரின் அருட்குழந்தை' என்று, தில்லையம்பதியில் அப்போது பணியாற்றிய சுப்பைய தீட்சிதர் என்பார் பாராட்டியுள்ளார். 'திருவருட்பாப் பெருநூலில்' இச்செய்தி காணப்படுகிறது.

இராமலிங்கரின் சிறுவயதிலேயே இராமைய்யா பிள்ளை மரணமடைந்தார். குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு அவரது மூத்த மகன் சபாபதியினுடையதாயிற்று. எல்லோரையும் அழைத்துக் கொண்டு, பொன்னேரியில் இருந்த தம் பாட்டியார் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் சபாபதி. பிறகு, சென்னையில் ஏழு கிணறு பகுதியில் உள்ள வீராசாமி பிள்ளை வீதி, 39-ஆம் எண்ணுள்ள வீட்டில் குடியேறினார்.

மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் தமிழ் பயின்று புலமை பெற்றிருந்தவர், சபாபதி.

ஆகவே, தமது தந்தையைப் போலவே சிறுவர் சிறுமியர்க்குத் தமிழ் கற்பித்தும்-புராணச் சொற்பொழிவுகள் ஆற்றியும் பணம் சம்பாதித்துக் குடும்பத்தை நடத்தி வரலானார் அவர்.

ஐந்து வயதடைந்த இராமலிங்கரை முறைப்படி பள்ளியில் சேர்த்தார்கள். பள்ளிப் படிப்பில் அவருக்கு நாட்டமில்லை. படிக்கவே பிடிக்காத தம்பிக்குத் தாமாவது கற்பிக்க எண்ணினார் சபாபதி; அதிலும் பயனில்லை. 'ஓதாதுணர்ந்த' இராமலிங்கர் பிற்காலத்தில் எப்படி தமிழிலும் வடமொழியிலும் பெரும்புலமை வாய்க்கப் பெற்றார் என்பதே எவருக்கும் புரியாத விந்தை!

ஆன்ம ஞானத்தால் புகழ்பெற்ற இராமகிருஷ்ண பரமஹம்சரே இரண்டாம் வகுப்புவரை படித்தவர்தானே! ஆகவே, நாம் அவரோடு இவரையும் சமமாக வைத்தெண்ணலாம்!

தம்பி படிக்காததற்காக மனம் மிக வருந்திய சபாபதி, இராமலிங்கரை வீட்டைவிட்டே துரத்தி விட்டார். அவர் மனைவியான பாப்பாத்தி அம்மாளோ, கணவருக்கும் தெரியாமல் அவருக்கு மறைவாக உணவளித்து வந்தார். தந்தையாரின் திதியன்றும் கூட நம். இராமலிங்கருக்கு இதே நிலைதான்!

இதற்காகக் கண்ணீர் விட்டனர் சபாபதியும் அவர் மனைவியாரும். அவர்கள் கவலைக்கான காரணத்தை உணர்ந்த இராமலிங்கர், 'இனிமேல் படிக்கிறேன்' என்று உறுதி கூறினார்; அவர்கள் வீட்டு மாடி அறையிலேயே தங்கினார்.

சின்ன வயதிலேயே தமிழ்க் கடவுளாம் சிங்காரவேலன் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார் இராமலிங்கர். மாடி அறையையாவது அவர் படிக்கப் பயன்படுத்திக் கொண்டாரா என்றால் அதுதான் இல்லை; எப்போதும் அங்கே தெய்வீக மணம் கமழ்ந்தது; மணிவாசகரின் தேன்தமிழ்ப் பாக்கள் இராமலிங்கரால் இசை ஞானத்தோடு பாடப்பட்டன. அங்கே யாருக்கும் தெரியாமல் அவர் வாங்கிப் போய் மாட்டிய கண்ணாடி ஒன்றில், தெய்வீகக் களை பொருந்திய தன் முகத்தைத் தானே அடிக்கடி பார்ப்பதும் பரவசப் படுவதும், முருகப் பெருமானைப் போற்றிப் பாடுவதுமே அவருடைய அன்றாடப் பணியாயிற்று.

அந்தக் கண்ணாடியில், ஒன்பதாம் வயதில், முருகக் கடவுளே தரிசனம் தரக்கண்டு ஆனந்தக் கூத்தாடி, பாடி அகம் மகிழ்ந்தார் அவர் என்கிறது வரலாறு.

அண்ணனும் அண்ணியும், தெய்வாம்சம் பொருந்திய இராமலிங்கரை முழுமையாக உணரத் தலைப்பட்டார்கள்.

அப்போது சென்னை-முத்தியாலுப்பேட்டை பகுதியில் இருந்த சோமு செட்டியார் என்பவர் வீட்டில், நாள்தோறும் தொடர்ந்து புராணச் சொற்பொழிவு நடத்தி வந்தார் சபாபதி. ஒருநாள், அவருக்குப் பெரிதும் உடல்நலக் குறைவு ஏற்பட்டது; சொற்பொழிவுக்குச் செல்லாவிட்டால் வருவாய்த் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் அல்லவா?

ஆகவே, தன் மனைவியின் ஆலோசனைப்படி

- பி.எல். ராஜேந்திரன்



★★★

**சத்திய ஞானசபை**

**வள்ளல் இராமலிங்க அடிகளாரால், 25.1.1872-இல் அமைக்கப்பட்டது சத்திய ஞானசபை; மேலே எண் கோணமும், கீழ்ப்பிரகாரம் 43 கோணமும் உடையதாக உருவாக்கப்பட்டுள்ளது.**

**இதன் இடதுபுறம் பொற்சபையும், வலதுபுறம் சிற்சபையும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. நுழைவாயில் வளைவில்- 'அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி தனிப்பெரும் கருணை அருட்பெருஞ் ஜோதி' காணப்படுகிறது.**

**உள் சுவரில் பதிக்கப்பட்டுள்ள கருப்புச் சலவைக் கல்லில்- இராமலிங்க அடிகளார் எழுதிய 'அருட்பெருஞ் ஜோதி அகவல்' வடிக்கப்பட்டிருக்கிறது. அவர் எழுதிய சபை வழிபாட்டு விதிமுறைகளும், சத்திய ஞான சபையின் பராமரிப்பு முறைகளும்கூட அதேபோலப் பொறிக்கப்பட்டிருக்கின்றன.**

**சபையினுள், மனிதனின் ஆசாபாசங்களைக் குறிப்பதாக ஏழு வண்ண மாயத் திரைகள் உள்ளன; ஒவ்வொன்றாக அவை விலக்கப்பட்டபின், கடைசியாக உள்ள கண்ணாடியில் இறையொளி தோன்றும்; இதுவே அருட்பெருஞ் ஜோதிக் கடவுள்.**

★★★

★★★

## சித்தி வளாகம்

**கருங்குழியில், தமது அருட் திறத்தால் நீருற்றி விளக்கெரித்தார் வள்ளலார் எனப்படுகிறது.**

**அவர், 30.1.1874 வெள்ளிக்கிழமை இரவு பன்னிரண்டு மணிக்குத் தம் சீடர்களுக்கெல்லாம் உபதேசித்து விட்டு, "வெளியே பூட்டிக் கொள்ளுங்கள்" எனக் கூறியபின் உட்புகுந்த நாட்டு ஓடு வேயப்பட்ட அந்தத் திருவறை மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் இருக்கிறது.**

**இன்னமும் பூட்டப்பட்டே கிடக்கும் அந்த அறையின் மேலே- 'திருக் காப்பிட்டுக் கொண்ட திரு அறை' என்று எழுதப்பட்டிருக்கிறது. அறைக்கு வலது புறம்—**

**'ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை**
**நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர் வாடாதீர்**
**என்மார்க்கம் இறப்பொழிக்கும்**
**சன்மார்க்கம்தானே!'**

**—என்னும் வள்ளலாரின் பாடலடிகள் எழுதப்பட்டுள்ளன.**

**கட்டடத்தின் முன்னே- மேலே மஞ்சள் வண்ணமும், கீழே வெள்ளை நிறமும் கொண்ட வள்ளலாரின் அமைதிக்கொடி அழகுறப் பறக்கிறது.**

**அதை அடுத்துள்ள உண்டியில்- 'தமிழக அரசு இந்த சமய அறநிலைய ஆட்சித்துறை ஆளுகை' என்ற எழுத்துக்கள் காணப்படுகின்றன.**

★★★

தனக்குப் பதில் இராமலிங்கரைப் போய் வரச் சொன்னார் சபாபதி.

"இரண்டு மூன்று பக்திப் பாடல்களைப் பாடித் தீபாராதனை செய்துவிட்டு வா" என்பதே அண்ணனின் ஆணை. ஆனால், அங்கு சென்ற தம்பி இராமலிங்கரோ, ஞானசம்பந்தரின் புராணச் சொற்பொழிவையே முறைப்படித் தொடங்கி மூன்று மணி நேரம் தங்குதடையின்றி நடத்திடலானார். திரண்டிருந்த பக்திமான்களெல்லாம் தித்திக்கும் அவரது தெய்வீகப் பாமழையிலே திணறிப்போனார்கள்.

நாளடைவில், தமது தம்பிக்கு இத்தனை ஆற்றலுண்டா என்றெண்ணி - அவர் சொற்பொழிவை மறைந்திருந்து கண்டும் கேட்டும் உணர்ந்து கொண்டார் சபாபதி. தம்பி இராமலிங்கர் 'ஓதாமையைக் கண்டு உள்ளம் கசந்தேன்; உண வளிக்கவும் மறுத்தேன்; உடையளிக்கவும் வெறுத்தேனே, ஐயோ! என்னுடைய அச் செய்கைகளெல்லாம் அவரின் பெருமையறியாத உன்மத்தனின் செயலாயிற்றே!' எனப் புலம்பி மனம் நொந்தார். அவரிடம் தனி மரியாதை செலுத்திடலானார்.



ஆனால், இதையெல்லாம் இராமலிங்கர் சிறிதும் விரும்பினாரில்லை.

இதற்கிடையில் அடிகளாருக்குத் திருமணம் செய்து வைக்கும் முயற்சியும் நடைபெறலாயிற்று.

இராமலிங்கர் மனம் எப்போதும் தெய்வ சிந்தனையுடனேயே இருந்தது; அண்ணலோ தனது கடமையை உணர்ந்தார். வாலிபப் பருவத்தையடைந்த அவருக்கு அன்னையும் அண்ணனும் சேர்ந்து திருமணம் செய்து வைக்க முடிவெடுத்தார்கள்.

அடிகளாரால் எதிர்த்து நிற்க முடியாத நிலையில் தனது மூத்த சகோதரி உண்ணாமலையாரின் மகள் தனக்கோட்டி என்பாளுக்கு மற்றவர்கள் கட்டாயத்தின் பேரில் மாலையிட நேர்ந்தது. மணம்தான் முடிந்ததே தவிர, இராமலிங்கரால் இல்லற வாழ்வை இனிதே தொடர முடியவில்லை.

அதே நேரத்தில் - துறவு நிலை பூண்ட மனத்தரான அவர், பின்னாட்களில் தம்முடைய சீடர்கள் மனவாழ்வு மேற்கொள்ளுவதை 'ஆதரிக்கவே செய்தார். பெண் குலத்தைப் போற்றி மதித்தார். பெண் கல்வியை ஆதரித்தார் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் அவ்வீட்டின் மேல் மாடி அறையிலிருந்து இராமலிங்கர் விடுதலை பெற்றார். திருவொற்றியூர் சென்று தியாகேசப் பெருமானைப் பாடிப் பரவசமுற்றார். காஞ்சித் தமிழறிஞர் சபாபதி முதலியார் கோரியபடி 'மனுமுறை கண்ட வாசகம்' என்ற நூலைச் சிறுவர்க்கேற்ப இயற்றித் தந்தார்.

தொழுவூர் வேலாயுத முதலியாரிலிருந்து பலரும் வெள்ளாடைத் துறவி போல் இருந்த இராமலிங்கரின் சீடர்களாயினர். பாதயாத்திரை மூலமே புதுவைக்கும் கடலூர், தில்லை, கருங்குழி எனத் தமிழகத்திலுள்ள பல ஊர்களுக்கும் இவர்களுடைய பக்திப் பயணம் தொடர்ந்தது.

இந்த நிலையில்தான் இராமலிங்கரின் தாயார் சின்னம்மாளும் இறந்து போனார். அடுத்த சில



சன்மார்க்கக் கொடிக்கம்பம்



அணையா விளக்கு



சித்திவளாகம்

காலத்தில் அண்ணன் சபாபதியும் சென்னையில் இயற்கை எய்தினார்.

அண்ணனை இழந்தபின், எல்லா உறவுமே தன்னைவிட்டுப் போய் விட்டதாக ஒருவித மனவிரக்திக்கு ஆளானார் இராமலிங்கர். சமரச சுத்த சன்மார்க்க சங்கம் நிறுவிட ஏதாவது ஒரு சிற்றூரைத் தேர்ந்தெடுக்க எண்ணினார். அப்படி அவர் வந்து சேர்ந்த இடம்தான் பொதுநிதியில் அவரால் 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' நிறுவப் பட்டுள்ள வடலூர் ஆகும்.

**'பசித்திரு! தனித்திரு! விழித்திரு!**

- என்கிற மூன்று முக்கிய மந்திரங்களைத் தம் அடியார்க்கெல்லாம் உபதேசித்து, இராமலிங்க அடிகளானார் அவர்.

பணம் சேர்க்கும் எண்ணம் ஒரு சிறிதும் அவரிடம் இருந்ததில்லை; யாருக்கேனும் உதவும்படி வேண்டுமானால் யாருக்காவது கூறியிருப்பாரே தவிர, அவரே தனக்கெனச் சேர்த்து வைத்தாரில்லை.

அவருடைய தோற்றம் பற்றி அன்னாரின் தலைமாணாக்கர் தொழூவூர் இராமையா முதலியார் 'திருவருட்பாப் பெருநூலில்' இவ்வாறு கூறியிருக்கிறார்.

'உருவத்தில் சாதாரண உருவமுள்ளவர்; மெலிந்த சரீரமுடையவர். எலும்புகள் தெரியும். ஆயினும் வீரியபலமுள்ளவர். நிமிர்ந்த தேகம்; தெளிந்த மாநிற (சாதாரண சிவப்பு) மேனியர். நீண்ட மெல்லிய நாசியுடையவர். பறந்த பொறி பறக்குங் கண்களையுடையவர். இவருடைய முகத்தில் சதா சற்று விசனக்குறி காணப்பட்டிருந்தது.

'இவர் கடைசிக் காலத்தில் முடியை நீளமாய் வளரவிட்டிருந்தார்.

'இவர் யோகிகளுக்கு அடுக்காத வழக்கமாகிய பாதரட்சையைத் (ஆர்க்காட்டுச் சோடு) தரித்தார்.

'இவருடைய உடை இரண்டு வெள்ளையாடையைத் தவிர வேறு இல்லை; ஒரே ஆடையை உடுத்தியிருந்ததாகவும் கேள்வி'.

- இவைகளே நம் இராமலிங்கரைப் பற்றிய படப்பிடிப்பு ஆகும்.

அவர் உடுத்திய வெள்ளாடை அந்நாளில் சிறப்புற்றிருந்த 'லாங்கிளாத் மல்' துணியே என்று அறியப்படுகிறது.

அடிகளார் தம்மைப் புகைப்படம் பிடிக்கவோ, சிலையாக வடிக்கவோ யாரையும் அனுமதித்ததில்லை; இதற்காகப் பலரும் அவரிடம் அனுமதி பெற முயன்று தோற்றதுண்டு.

★★★

## சத்திய தருமசாலை

**வடலூர் சத்திய ஞானசபை அருகே உள்ளது சத்திய தருமசாலை.**

**வள்ளல் இராமலிங்க அடிகளால் ஏற்றப்பட்ட அணையா தீபமும், அடுப்பும் இங்குள்ளது. அவர் கைப்பட எழுதிய அகவல் மூலநூலும் இங்கே வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.**

**'மற்றவர்களின் பசி நீக்குவதே இறைவனை அடையும் உண்மை வழி' என்னும் கொள்கையோடிருந்த வள்ளலாரின் ஏழை எளிய அடியார்களுக்கு இங்கே நாள்தோறும் இலவச உணவு அளித்து உபசரிக்கப்படுகிறது.**

**வள்ளலாரால் உருவாக்கப்பட்ட இந்த சத்திய தருமசாலைத் திருப்பணி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நடந்து கொண்டிருக்கிறது.**

**ஒவ்வொரு நாள் உணவளிப்பிற்கும் ஆகும் செலவை ஒவ்வொரு அன்னதானக் கட்டளைதாரர் ஏற்றுக் கொள்கிறார்; அவர் பெயர் அங்குள்ள தகவல் பலகையில் தவறாமல் எழுதப்படுகிறது.**

**திருப்பணிக்கு ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் நிதியளிப்போரின் பெயர் கல்வெட்டில் இடம்பெறும்.**

★★★

9 வயதில் தொடங்கி 50 வயது வரை பாடிக் கொண்டே இருந்தவர் இராமலிங்க அடிகள்; அவை யாவுமே தெய்வீகப் பாடல்கள்; ஒன்றுகூடத் தனிமனிதர் துதிப்பாடல்களல்ல.

மற்றவர் படும் துயரையும் தம் துயராக எண்ணிக் கலங்கும் மெல்லிதயம் படைத்தவர் அவர்.

வடலூர் மக்கள் காணிக்கையாகத் தமக்களித்த தொண்ணூறு காணி நிலத்தில் 22.5.1867-இல் சத்திய ஞானசபை நிறுவி, கட்டடத் திறப்பு விழாவும் நடத்தினார் அடிகளார்; அன்றே அன்ன தானப் பணி துவக்க விழாவும் நடைபெற்றது; அடுப்பில் இந்த நல்லெண்ணத்துடன் அங்கே அவர் அன்று மூட்டிய தீ, இன்றும் அணையாமல் எரிகிறது!

சத்திய ஞானசபையானது சமரச சன்மார்க்க நெறிப்படி எண்கோணத் தாமரை வடிவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சங்கமே தமிழகத்தில் முதன்முதல் உருவான சமயச் சீர்திருத்த அமைப்பு எனப்படுகிறது.

வள்ளல் இராமலிங்க அடிகளார் அருளிய 'திருவருட்பா' ஆறு திருமுறைகளைக் கொண்டது ஆகும். அதிலே உள்ள ஆறாம் திருமுறையிலேயே அவரது சீர்திருத்தக் கருத்துக்களுடைய பாடல்கள் ஏராளம் காணப்படுகின்றன.

இளமைக் காலத்திலே அடிகளார் முருகப் பெருமானையும், வினாயகரையும், கலைமகளையும், திருமகளையும், திருமாலையும், தில்லை நடராசரையும் இன்னபிற தெய்வங்களையும் வழிபட்டுப் பாடியதுண்டு; ஆனால் அறிவால் முதிர்ந்த மனப்பக்குவம் அடைந்த நாளில் இறைவன் அருட்சோதி வடிவானவன் என்றே அவர் முடிவெடுத்தார். முன்பெல்லாம் உருவ வழிபாட்டை ஆதரித்த அவரே பிற்காலத்தில் அதை வெறுத்தார்; ஏற்க மறுத்தார். 'பொங்குபல சமயமெனும் நதிகள் எல்லாம் புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும் கங்குகரை காணாத கடலே' என்றும் - 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே' என்றும் இறையருளைப் பாடிப் பரவசப்பட்டார்.

அந்நாளிலேயே, அவரது கருத்துக்களை எதிர்த்தோருண்டு; அருட்பாவுக்கு எதிராக மருட்பா இயற்றியோருண்டு; அடிகளார் மீது அவரது சீர்திருத்தக் கருத்துக்களுக்கு எதிராக ஆறுமுக நாவலர், கடலூர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது கூட உண்டு!

தனது 51-வது வயது முதலே தாம் இந்த உலகை விட்டு மறையப்போவதாகவும் சமாதி நிலை அடையப்போவதாகவும் தம் அடியார்களிடம் அடிக்கடி கூறிவந்தார் வள்ளலார். பெரும்பாலும் கடைசிக் காலத்தில் - மேட்டுக்குப்பத்தில் தாம் இருந்த சித்திவளாகத்தினுள்ளேயே இருப்பதும் பிறகு வெளிப்படுவதும், அடியார்களுக்கெல்லாம் அரிய உபதேசம் நிகழ்த்துவதுமாக இருக்கலானார் வள்ளலார்.

★★★

**வள்ளலார் கண்காட்சி**

**வடலூரில் உள்ள சத்திய ஞானசபை அருகே, வள்ளலாரின் வரலாற்றை விளக்கும் நிரந்தரப் பொம்மைக் கண்காட்சி ஒன்று நிர்மாணிக்கப் பட்டுள்ளது.**

**வள்ளல் பெருமானின் பிறப்பு முதல் சித்தி பெற்றது வரையிலான அவரது வரலாற்றுச் சம்பவங்கள் பல வண்ணப் பொம்மைகள் மூலம் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பொம்மைகள், காலால் மிதித்த களிமண்ணால் செய்யப்பட்டவை அல்ல; கையால் பிசைந்த களிமண்ணால் செய்யப் பட்டவை என்பது முக்கிய சிறப்பம்சமாகும்.**

**வள்ளலார் குறித்த நூற்கள், இசை மேதைகள் சிலர் இனிதே பாடிய அருட்பாப் பாடல்களின் ஒலி நாடாக்கள் ஆகியவைகளும் இங்கே விற்கப் படுகின்றன.**

★★★

ஒரு நாள் முழுவதுமாக அப்படி உபதேசித்த அவர், முடிவாக ஒரு தீபத்தை ஏற்றி வைத்து, "ஆண்டவன் இப்போது தீபமுனையில் விளங்குகிறபடியால் - வீணே காலங் கழிக்காமல்... நினைந்து நினைந்து என்று தொடக்கமுடைய பாடலில் கண்டபடி தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற்குச் செய்யுங்கள். நான் இப்போது இந்த உடம்பிலிருக்கிறேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்ளுவேன்" என்றார்.

அவர் - 'நாம் அருட் பெருஞ்சோதி ஆண்டவின் ஆணைப்படி கடைவிரித்தோம்; கொள்வாரில்லை, கட்டிவிட்டோம். ஆதலால் இனி இரண்டரைக் கடிகை நேரம் உங்களுடைய ஊனக் கண்களுக்குத் தோன்றமாட்டோம்... என்றெல்லாம் குறிப்பிட்டு, அவ்வறையை வெளியே பூட்டிக் கொள்ளுமாறு தன் அடியார்களுக்கு அன்புடன் ஆணையிட்டார்.

அவருடைய சீடர்களெல்லாரும் இதுகேட்டுக் கண்கலங்கினர். இராமலிங்க அடிகளார், மேலும் அவர்களை நோக்கி மிக நிதானமாகச் சொன்னார்-

"நான் உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப் போகிறேன்; பார்த்து அவநம்பிக்கை அடையாதீர்கள். ஒருக்கால் பார்க்க நேர்ந்து பார்த்தால், யாருக்கும் தோன்றாது; வெறும் வீடாகத் தானிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார். நாம் திருக்கதவை மூடியிருக்குங்கால் அரசாங்கத்தினர் திறக்கும்படி ஆக்ஞாபிக்கின், ஆண்டவர் அருள் செய்வார் என்று சொல்லிவிட்டு, சித்திவளாகத்தினுள் புகுந்து தாளிட்டுக் கொண்டார், கதவு அவர் சொன்னபடியே வெளியில் பூட்டப்பட்டது.

இது நடந்தது 1874 ஜனவ்ரி 30-ஆம் நாள் வெள்ளிக் கிழமையன்று நள்ளிரவு சரியாகப் பன்னிரண்டு மணிக்கு ஆகும். அப்போது அவருக்கு 51-ஆம் வயது நடந்துகொண்டிருந்தது.

தாம் நிறுவிய வடலூர் சத்திய ஞானசபையை, என்ன மனவிரக்தி காரணமாகவோ தாமே பூட்டிவிட்டு நான்காண்டுக் காலம் சித்திவளாகத்திலேயே கடைசிக் காலத்தைக் கழித்து வந்தார் இராமலிங்க அடிகளார். தைப்பூச நாளன்று மட்டும் அவர் சத்திய ஞானசபைக்கு வந்துபோய்க் கொண்டிருந்தார். அதே நேரத்தில், திங்கள் தோறும் பூசநட்சத்திரத்தில் ஞானசபைத் தரிசனம் நடக்க வகைசெய்திருந்தார் 'மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர் புணைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்'

- என்ற தம் சொல்லுக்குத் தாமே எடுத்துக் காட்டாகிவிட்ட அவரது மறைவுக்குப் பின் - அடிகளாரின் அடியார்கள் அவர் விட்டுச் சென்ற தத்துவார்த்தங்களை வளர்க்கப் பாடுபடவில்லை. இதனாலேயே சன்மார்க்க சங்கமும் பலவீனம் அடைந்தது.

வள்ளலார் வையப் புகழ்பெறக் காரணமாக இருந்த வடலூர் பற்றி, அந்நாளில் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஜே.எச். கார்டின்ஸ் எம்.சி.எஸ். என்பார் எழுதிய 'தென்னார்க்காடு மாவட்ட மானுவல்' எனும் நூலின் 316, 317 ஆகிய இருபக்கங்களில் அடிகளாரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அச் செய்திகளில் சில வருமாறு:

'இராமலிங்கப் பரதேசி, யாவரும் வியக்கத்தக்க வகையில் வாழ்ந்த சித்தர்களில் ஒருவராவார்; அவரை அவருடைய சீடர்கள் கடவுள் போலவே மதித்துப் போற்றினார்கள்.

"...இராமலிங்கப் பரதேசி தமது சீடர்களிடம், மாண்டவர்களும் மீண்டும் உயிர்த்தெழலாம் என்று உபதேசித்து வந்தார். இறந்த உடலை எரிப்பதை விடப் புதைப்பதே நல்லதென்றார்...

"...1874-இல், கருங்குழியைச் சேர்ந்த குக்கிராமமான மேட்டுக்குப்பத்தில், அவர் ஓர் அறைக்குள் புகுந்துகொண்டு வெளியே தாளிடச் செய்திருக்கிறார். அவ்வறையைத்தான் சமாதி அல்லது தியானத்திற்காக அவர் பயன்படுத்துவது வழக்கமாம். அந்த அறையைச் சில காலத்திற்குத் திறக்கக் கூடாது எனத் தம் அடியார்களுக்கு அவர் கட்டளையிட்டார். அன்றிலிருந்து அவர் காணாமல் போய் விட்டார். அந்த அறை இன்னமும் பூட்டியே கிடக்கிறது. அவருடைய சீடர்கள் அவர் கடவுளுடன் ஐக்கியமாகிவிட்டார் என்றும், காலம் வந்ததும் அவர் மீண்டும் தோன்றுவார் என்றும் நம்புகிறார்கள்..."



- இவ்வாறு அந்த ஆங்கிலேய மாவட்ட ஆட்சித் தலைவரே அடிகளாரைப் பற்றிச் சிறப்புற எழுதியுள்ள குறிப்பு, ஆழ்ந்து நோக்கத் தக்கதாகும்.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய இரண்டு நூல்கள் வடலூர் இராமலிங்க அடிகளாரால் இயற்றப்பட்டவை, இவைமட்டுமல்ல; ஒரே இரவில், 1596 அடிகளைக் கொண்டதாக அடிகளார் எழுதிய 'அருட்பெருஞ்சோதி அகவல்' என்னும் நூலே சன்மார்க்க சங்கத்தாரின் பொதுமறை என்று கருதப்படுகிறது.

ஒழிவிலொடுக்கம், தொண்டை மண்டலச் சதகம், சின்மய தீபிகை ஆகிய நூற்கள் அவரால் பதிப்பிக்கப்பட்டன. அவற்றின் மூலமே - மேலும் 23 நூற்கள் எழுதி விரைவில் வெளியிடவிருப்பதாக அவரால், அறிவிக்கப்பட்டிருந்தது.

திருவருட்பா ஆறுதிருமுறைகளிலும் சேராத சில பாடல்களும் அடிகளாரால் அவ்வப்போது அருளப்பட்டன. மொத்தத்தில், அவர் பாடியவற்றுள் ஆறாயிரம் பாடல்களே நமக்குக் கிடைத்துள்ளன. சுத்த சன்மார்க்க சங்கம் (1865), சத்திய தருமசாலை (1867), சத்திய ஞானசபை (1872), சித்தி வளாகம் (1870) ஆகிய நான்கு தெய்வீக அமைப்புகள் நம் வடலூர் இராமலிங்க அடிகளாரால் நிறுவப்பட்டன.

ஏமசித்தி, சாகாக் கல்வி, தத்துவ நிக்கிரகஞ் செய்தல், கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் - ஆகிய நான்கு நெறிகள் அடிகளாரால் கற்பிக்கப் பட்டன.

இந்திரிய ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என்ற நால்வகை ஒழுக்கங்கள் அவரால் வலியுறுத்தப்பட்டன.

அன்னாரின் மந்திரச் சொற்களான -

'அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

- என்கிற வள்ளலாரின் அற்புதச் சொற்கோவை, அகிலமெங்கும் போற்றிப் புகழப் பெற்று, பக்திப் பரவசத்தோடு இன்னமும் இனிமையோடு உச்சரிக்கப்படுகிறது. ●

# காது மூக்கு தொண்டை



ENT



டாக்டர்
கே.கே. இராமலிங்கம்
பதில்கள்

## மருத்துவம்

பி. கர்ணன்
கவரப்பட்டு

**• எட்டாம் வகுப்பு படிக்கும் என் வயது 13. ஒரு தடவை கொஞ்சம் உரத்த குரலில் சத்தினாலே தொண்டை கம்மிவிடுகிறது; இந்த என் துன்பம் நீங்க வழிகூறுங்கள் டாக்டர்?**

''உரக்கக் கத்தினாலே தொண்டை கம்மிவிடுகிறது என்றால், குரல் வளையில் (Vocal cord) சிறுசிறு கட்டிகள் ஏற்படுவதே அதற்குக் காரணம். ஆகையால் நீங்கள் உரத்த குரலில் பேசாதிருக்கப் பழகுங்கள். ஒருவேளை அதனால் உங்கள் குரல் பாதிக்கப்படுமானால், அவ்வாறான காலத்தில் இரண்டு மூன்று நாட்கள் மௌன விரதம் இருங்கள் - சரியாகிவிடும்.''

வி. சுப்பிரமணியன்,
கீழகுண்டால்

**• சுமார் 2 ஆண்டுகளாக எனக்குச் சரியாகக் காது கேட்பதில்லை; எப்போதும் அடைத்துக் கொண்டது போலவே இருக்கிறது. மூக்கை அடைத்து 'தம்' பிடித்தால், அதன் பிறகு சிறிது நேரம் காதில் விழும்; பிறகு மறுபடி பழைய மாதிரியே ஆகிவிடும். நிரந்தரமாக நன்றாகக் காது கேட்க என்ன செய்ய வேண்டும் டாக்டர்?**

''ஒரு சிறு அறுவைச் சிகிச்சையின் மூலம் உங்கள் காதின் செவிப்பறையில் சிறியதோர் Tube-ஐப் பொருத்தி, உங்களுடைய குறையை நிரந்தரமாகப் போக்கிவிடலாம். காது மருத்துவம் இப்போது நிறைய முன்னேறியிருக்கிறது.''

எம். ரேகா
தஞ்சாவூர்

**• எனக்குத் தம்பி பிறந்த பிறகு, என் அம்மாவுக்கு அடிக்கடி விக்கல் ஏற்படுகிறது. அந்த விக்கல் உரத்த குரலில் நீண்ட ஒலியோடிருப்பது என்னவோ போலிருக்கிறது. இது ஏன் - எப்படி இதை நிறுத்துவது டாக்டர்?**

''ஒருவகையான மனநோய் உள்ளவருக்குத்தான் இப்படிப்பட்ட விக்கல் ஏற்படும். ஆனாலும் விக்கலுக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. எதற்கும் தகுந்த மருத்துவ நிபுணரைப் பார்த்து நீங்கள் ஆலோசனை பெறவும்.''

பி. தங்கவேல்
திருச்சி

**• சிலருக்குப் பிறவியிலேயே காது கேளாமல் இருக்கிறது; சிலருக்குப் பாதியில் காது செவிடாகிறது; இது எதனால்? சில சாமியார்கள் இதைக் குணப்படுத்துவேன் என்கிறார்களே; நம்பலாமா?**

''விதை நல்லதாக இருந்தால் செடி நல்லபடி வளரும் அல்லவா? அதே போல ஆண் கருவும் பெண் கருவும் தக்கபடி எந்தக் குறையுமின்றிக் கலந்தே ஒரு பெண் கர்ப்பமாகிறாள்; பிறகு குழந்தை நல்லபடி பிறந்து நல்லபடி வளர்க்கிறது. கருவில் குறையிருந்தால், பிறக்கும் குழந்தையும் ஏதாவது குறையுடையதாகவே பிறக்கும். கணவன் மனைவியாகிய ஆணும் பெண்ணும் மிகமிக நெருக்கமான உறவு முறையினர்களாக இருந்தல் - அதாவது பரம்பரை பரம்பரையாகத் திரும்பத் திரும்ப நெருங்கிய சொந்தத்திற்குள்ளேயே கொள்ளல் கொடுத்தல் நிகழ்ந்திருக்குமானால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை, நீங்கள் சொல்லுவதுபோலச் செவிடாகப் பிறக்க வாய்ப்பு உண்டு.

''கருத்தரித்த பெண்மணி, முதலாவது மூன்று மாதத்திற்குள் - 'எக்ஸ்-ரே' பிடித்துக் கொள்ளுவதோ, கடுமையான மருந்துகள் சாப்பிடுவதோ கூடாது; அப்படிச் செய்தாலும் பிறவியிலேயே குழந்தை செவிடாக இருக்க வாய்ப்பு உண்டு.

• ''அல்லது உட்கொள்ளும் மருந்து ஒவ்வாமையாலும் இப்படி ஏற்படக் கூடும்.

''காது செவிட்டைப் போக்க சாமியார்களால் நிச்சயம் முடியாது என்பது என் கருத்து. அவர்கள் முறையின்றித் தரும் கண்ட மருந்துகளால், தொல்லை ஒருவேளை அதிகமானாலும் ஆகக்கூடும்; எச்சரிக்கையாகக் காதைக் கவனியுங்கள். சாமியார்களால் காதைக் கெடுத்துக் கொண்டு வந்த பல நோயாளிகளுக்கு நான் சிகிச்சையளித்திருக்கிறேன்.

எஸ். சண்முகசுந்தரம்,
திருவில்லிபுத்தூர்

**• எனக்கு வயது 65 ஆகிறது. 20 ஆண்டுகளாகக் காதில் 'நொய்ங்' என்று சப்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது; காதும் சரியாகக் கேட்பதில்லை; என்ன செய்வது?**

''ஆண்களைப் பொறுத்தவரையில், பொதுவாகவே 60 வயதுக்கு மேல் செவியொலி மங்குவது இயல்பு தான். ஆனால் நீங்களோ கடந்த 45 வயதிலிருந்தே இப்படி இருக்கிறது என்கிறீர்கள். இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி இருந்தால் கூட, ஒருவருக்கு இவ்வாறான பாதிப்பு ஏற்படக் கூடும்; ஆகையால் இதற்காக நீங்கள் ஒரு பொது மருத்துவரிடம் (எம்.டி.) பரிசோதித்துக் கொள்ளுங்கள். முடிந்தவரையில் அனாசின் போன்ற காதின் கேட்பு உணர்வைப் பாதிக்கும் மருந்து மாத்திரைகளை அடிக்கடி உட்கொள்ளுவதைத் தவிர்ப்பது நல்லது.''

எஸ். திருநாவுக்கரசு
சென்னை-82

**• காதில் ஈ, எறும்பு போன்ற சிறு பூச்சிகள் புகுந்துகொண்டால் என்ன செய்ய வேண்டும்?**

''அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தலையைச் சாய்த்து வைத்து, காதில் சிறிதளவு தண்ணீர் விட்டாலே போதும் - அது உயிருடனோ, இறந்தோ வெளியில் வந்து விடும்; வராத பட்சத்தில் வேண்டுமானால் டாக்டரிடம் காட்டலாம். குச்சியை விட்டோ அல்லது ஹேர்பின்னை விட்டோ அதற்காகக் காதைக் குடையக் கூடாது.''

கே. ரவி
உதகை

**• என் வயது 10, காதுகளின் கீழ்ப்புறம் அடிக்கடி வெடிப்பு (Cut) ஏற்படுகிறது; தேங்காய் எண்ணெய் தடவினால் சரியாகிவிடுகிறது; இப்படி எதனால் வருகிறது - இதற்குத் தகுந்த நிவாரணம் பெற நல்ல மருந்து என்ன?**

''நீ சொல்லுவதை வைத்துப் பார்த்தால் உனக்கு உள்ளது ஒரு வகை எக்சீமா (Eczema) நோய் போலத் தெரிகிறது. தேங்காய் எண்ணெயைவிடச் சிறந்த Ointmentகள் பல இப்போது வந்திருக்கின்றன. அப்படி வெடிப்பு உள்ளபோது சரியான தோல் வைத்தியரிடம் காட்டிக்கொள், இதில் அலட்சியம் காட்டக்கூடாது; ஏனென்றால் - இப்படி உண்டாகிற வெடிப்பு சிலருக்கு தோல் தொடர்பான தொழுநோய் அல்லது காச நோயாகவும் இருக்கலாம்.

சண்முகசுந்தரம்
மதுரை

**• மூக்கில் சைனஸ் தொந்திரவால் மூக்கெலும்பு உடைப்பு (Puncturing) வைத்தியம் செய்யப்பட்டது. ஒரு தடவை இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் போதுமா? அடிக்கடி செய்து கொள்ள வேண்டுமா? இந்த அறுவைச் சிகிச்சையால் பிற்காலத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்படுமா?**



''ஒருமுறை இதற்காக Puncture செய்துகொண்டால், பிறகு அடிக்கடி செய்துகொள்ள வேண்டும் என்று பாமர மக்களிடையே ஒரு கருத்து பரவலாக நிலவுகிறது. அது தவறு. தகுந்த காரணம் இருக்கும் போது ஒரு தடவை Puncturing operation செய்து கொள்ளுவதே போதுமானது. திரும்பத் திரும்பச் செய்து கொள்ளத் தேவையில்லை. பிற்காலத்தில் அதனால் எவ்விதக் கெடுதல் ஏற்படவும் வழியில்லை.''

கதிரவன்
சென்னை

**• தலைகுளித்த பிறகு காதில் அடைத்துக் கொண்டு அரிக்கிறது; ஏன் இப்படி? இதற்கு என்ன செய்யலாம்?**

''தலை குளிக்கும்போது, காதில் தண்ணீர் புகாமல் பார்த்துக்கொள்ளுவது தான் இதற்குச் சரியான வழி.''

ராகி
சென்னை-4

**• நீண்டநேரம் காதில் நமைச்சல் இருப்பதால், குச்சிபோன்றவற்றால் குடைந்துகொண்டே இருக்க நேரிடுகிறது. இப்படி ஒரு வருடமாக உள்ளது. காதும் சில சமயம் வலிக்கிறது. என்ன செய்வது டாக்டர்?**

''எப்போதாவது, என்ன காரணத்தாலாவது காதில் அரிப்பு ஏற்பட்டுச் சிறிது நேரம் குச்சியால் குடைந்திருப்பீர்கள்; சுகமாக இருந்திருக்கும்; ஆகவே தொடர்ந்து அதே போல் செய்து வருகிறீர்கள் போல் தெரிகிறது. காதில் குச்சி விட்டுக் குடைந்தால் வலிக்கத்தான் செய்யும். அப்படிக் குடைவதே காது கெட முக்கியக் காரணம்.

''குச்சி நுனியில் பஞ்சைச் சுற்றி அதன் மூலம் நவீன முறையில் காது குடைகிற பழக்கமும் ஆபத்துதான்; இவ்வாறெல்லாம் குடைவதால் காதின் உட்புறம் புண்ணாகி, சீழ் பிடிப்பது போன்ற மோசமான விளைவுகள் ஏற்படக்கூடும்.

''காதில் அழுக்கெடுப்பது என்

கிறார்களே? அப்படி செய்வதும் தவறுதான். ஆகையால், காது குடையும் வழக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிடுங்கள்; அது தான் உங்களுக்கு நல்லது.''

**கே. சரவணபவன்**
**திருப்பத்தூர்**

**● குழந்தைகளுக்குத் திடீரென்று மூக்கில் இரத்தம் வருகிறது. இதை 'சில்லி மூக்கு உடைதல்' என்கிறார்கள். கிராமத்தில், வராட்டியை நுணுக்கி உறிஞ்சச் சொல்லுகிறார்கள். சரியாகிவிடுகிறது. இது என்ன நோய்? இதற்குச் சிகிச்சை என்ன?**

''சிறு குழந்தைகளுக்குத் தொடர்ந்து சளி பிடித்தால், அப்படி சிறிதளவு எப்போதாவது இரத்தம் வரக்கூடும். அப்போது மட்டும் கொஞ்ச நேரம் மூக்கை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தாலே அது தானாக நின்றுவிடும். அல்லது சிறிது பஞ்சை வைத்துக் கொண்டிருந்தாலும் இரத்தம் நின்றுபோய் விடும். அப்படி வருவது குழந்தை வளர வளரச் சரியாகிவிடும்.

''ஆனால் அதற்காக வராட்டி போன்றவற்றை நுணுக்கிப் போட்டால் டெடானஸ் (Tetanus) போன்ற உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக் கூடிய நோய்கள் வரவும் வழியுண்டு, ஜாக்கிரதை.''



**ஜே.எம். கன்னிமேரி**
**சென்னை**

**● என் மகன் சிறுவன்; அடிக்கடி சளி பிடித்து மூக்கடைப்பு ஏற்படுகிறது. அப்போது ஒரு மிளகை ஊசி நுனியில் குத்தி, விளக்கில் கருக்கிப் புகையை உறிஞ்சினால் சரியாகிவிடும். இப்படிச் செய்தால் ஏதாவது தொந்தரவு ஏற்படுமா?**

''அது நல்லதல்ல. ஆகையால் உங்கள் மகனை அப்படி செய்து பழக்கிவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்; அடுத்த முறை சளி பிடித்தால், தகுந்த டாக்டரிடம் காட்டி மருந்து வாங்கிக் கொடுங்கள்; அதுதான் நல்லது.''

**இ. ராகவன்**
**சென்னை**

**● ''காதில் புண் மற்றும் வலி ஏற்பட்டால் என்ன செய்யலாம்?**

''அப்படியெல்லாம் ஏற்படப் பலவிதமான காரணங்கள் இருக்கின்றன; ஆகவே ஒரு சிறந்த டாக்டரிடம் காட்டலாம்.''

**சி. செல்வகுமார்**
**சத்தியமங்கலம்**

**● என் இரண்டு காதுகளிலும் அடிக்கடி சீழ் வருகிறது. நாற்றமடிக்கிறது, காதும் சரியாகக் கேட்பதில்லை; என்ன மருந்து போடலாம்? சில சாமியார்கள் இதைச் சரிப்படுத்தி விடுவேன் என்கிறார்களே, அதை நம்பி வைத்தியம் செய்து கொள்ளலாமா?**

''இதே அடிப்படையில் உள்ள கேள்விகளை - ஊத்தங்கரை வி. செல்வம், வேம்பூர் எஸ். இராதாகிருஷ்ணன், அனுப்பபட்டு டி. கண்ணன், புதுவை சி. வத்சலா உள்ளிட்ட பலரும் கேட்டிருக்கிறார்கள், அனைவருக்கும் பொதுவான விடை இது தான்:

''இதற்கு - காதின் உட்புறப் பகுதியில் ஏதோ பெரிய அளவிலான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று பொருள். மிகவும் ஆபத்தான நிலைமை இது. காதில் சீழ் வந்தாலே துர்நாற்றம், வலி, செவி கேளாமை, அவ்வப்போது மயக்கம், முக வீக்கம் ஆகிய எல்லாத்துன்பமும் இருக்கும். இந்தப் பாதிப்பிற்கு ஆளானவர்கள் கண்ட மருந்தையும் மாற்றி மாற்றித் தாமாகப் போட்டுக் குணம் பெற முடியாது; காது தொடர்பான திறமை மிக்க டாக்டரிடம் காட்டி அறுவைச் சிகிச்சைச் செய்து கொண்டால்தான் பரிபூரணமாக இந்தத் தொல்லையிலிருந்து நீங்கள் விடுபடமுடியும்.

''இதில் அலட்சியமாக இருந்தால், அந்தச் சீழானது நாளடைவில் மூளைக்கும் உங்களை அறியாமலே பரவக்கூடும். அப்படி நேருமானால், மூளைக் காய்ச்சல் கண்டு உயிருக்கே ஆபத்து நேரிடவும் வாய்ப்பிருக்கிறது.

''கைதேர்ந்த அறுவைச் சிகிச்சை நிபுணர் மூலம் மட்டுமே, நிரந்தரமாக இதைக் குணப்படுத்த முடியும். பச்சிலை வைத்தியம், சாமியார் மந்திரம் மூலமாக எல்லாம் காதிலிருந்து சீழ் வருவதை அத்தனை எளிதாக நிறுத்திவிட முடியாது என்பது என் அழுத்தமான கருத்தாகும்.''

**—இன்னும் வரும்..**





தென்னார்க்காடு மாவட்டத்தில்

# ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலம்

**திரு எம். ஆனந்தன்**
**மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரமும் வாய்ப்பும் வசதிகளும் பெருகுவதற்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள்.

1991-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 5.56 கோடி. இதில் ஆதி திராவிடர் 1.07 கோடியும், பழங்குடியினர் 5.74 இலட்சமும் ஆவர். மொத்த மக்கள் தொகை சுமார் 5-இல் ஒரு பங்குள்ள இப்பிரிவு மக்களின் முன்னேற்றத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது டாக்டர் புரட்சி தலைவி அரசின் கொள்கையாகும்.

தமிழகத்தின் வரலாற்றில் தென்னார்க்காடு மாவட்டம் மிக முக்கியமான ஒரு இடத்தை வகிக்கிறது என்பதை நாம் அறிவோம். அனைத்து மாவட்டங்களையும் விட தென்னார்க்காடு மாவட்டத்தில்தான் ஆதி திராவிடர் சமுதாயத்தினர் அதிகம் வாழ்கின்றனர்.

1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இம்மக்களின் எண்ணிக்கை 13.23 இலட்சம் ஆகும். அதேபோல இம்மாவட்டத்தின் கள்ளக்குறிச்சி வட்டம் கல்வராயன்மலையில் பழங்குடியினர் அதிகமாக வசிக்கின்றனர். அவர்களின் எண்ணிக்கை சுமார் 58,000. சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் இம்மக்களின் வாழ்க்கை நிலை உயர பாடுபட்ட பல பெரியோர்கள் இம் மாவட்டத்தில் இருந்திருக்கிறார்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் திருநாளைப்போவாரின் வரலாற்றைக் கோபால கிருஷ்ண பாரதியார் 'நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளாகப்' பாடிப் புகழ் சேர்த்துள்ளார் என்பதை நாம் அறிவோம். நந்தனார் 'சிதம்பர தரிசனத்தை'த் தன் வாழ்நாளில் குறிக்கோளாகக் கொண்டிருந்ததும், இறுதியாகப் பல இன்னல்களைக் கடந்து அதை அவர் எய்தியதும் பக்தி வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்றவை. அத்தகைய சிறப்புப் பெற்ற தலமாகிய தில்லையம்பதியுடன், வரலாற்றில் நீங்கா இடம் பெற்றிருக்கும் மாவீரன் தேசிங்குராஜன் வாழ்ந்த செஞ்சியும் இம்மாவட்டத்தின்கண்ணே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. 'அருட்பெருஞ்சோதி தனிப் பெருங் கருணை' என்ற ஆன்மிக தாரக மந்திரத்தை உலகுக்கு அளித்த இராமலிங்க வள்ளலார் பிறந்த பதியும் அவரால் நிறுவப்பட்ட அறக் கோயில் என்ற சிறப்பைப் பெற்றுத் திகழும் வடலூரும் இம்மாவட்டத்தில்தான் உள்ளன!

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் நெய்வேலியும், அறிவுக் கோயிலாகத் திகழும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் இம்மாவட்டத்தில்தான் இருக்கின்றன.



# அடுத்த இதழில்...

● சென்னையில் அமைக்கப்படவுள்ள அம்பேத்கர் நூற்றாண்டு விழா நினைவு மண்டப அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.

● சென்னைத் தரமணியில் எம்.எஸ். சுவாமி நாதன் ஆராய்ச்சி நிறுவனத் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.

—மற்றும்—

● தென்னார்க்காடு மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த கட்டுரைகள் - சுவையான தகவல்கள் முதலியன இடம் பெறுகின்றன.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க

எல்லாவற்றிற்கும் மேலாக அண்மைக் காலம் வரை நம்மிடையே இருந்து மறைந்த சுவாமி சகஜானந்தா பற்றியும் இங்கு நாம் நினைவுகூருவது சாலப் பொருத்தமாகும். சிறந்த கல்விமானாகவும், மிகப் பெரிய சுதந்திரப் போராட்ட வீரராகவும் விளங்கிய சுவாமிகள் சமுதாயத்தின் அடித்தளத்து மக்களான ஆதி திராவிடர்களின் அறிவுக் கண்களைத் திறக்க வேண்டும் என்ற நோக்கோடு நிறுவிய நந்தனார் கல்வி நிலையங்கள் இன்று அருகுபோல் வேர்விட்டு ஆல் போல் தழைத்து சுமார் 4,000 மாணவ மாணவியர் பயிலும் நந்தனார் மேல்நிலைப் பள்ளிகளாகச் சிறந்து விளங்குவதை இன்று நாம் கண்ணாரக் காண்கிறோம்.

**வளர்ச்சித் திட்டங்கள்**

இத்தகைய சிறப்புப் பெற்ற தென்னார்க்காடு மாவட்டத்தில் . உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்காக டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவை யாவை என இப்போது காண்போம்.

**கல்வி வளம்**

வறுமை ஒழிப்புக்கு முதல்படி அறியாமை ஒழிப்பே, அதாவது கல்வி வளம் பெருகுதலே, மகாகவி பாரதியார் -

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்...''

- என்று பாடியிருக்கிறார். இதனைக் கருத்தில் கொண்டு இந்த அரசு அனைத்துத் திட்டங்களிலும் முதன்மையானதாகக் கல்விக் கண் திறப்பதையே கருத்தாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.



இம்மாவட்டத்தில் நந்தனார் ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் உட்பட ஏழு மேல்நிலைப் பள்ளிகளும், ஏழு உயர்நிலைப் பள்ளிகளும், 6 நடுநிலைப் பள்ளிகளும், 216 தொடக்கப் பள்ளிகளும் நடத்தப்பட்டு வருகின்றன ஆதி திராவிடர் மக்களின் தொழிற் கல்விக்காக ஒரு தொழிற் பயிற்சி நிலையமும் சிதம்பரத்தில் இயங்கி வருகிறது. இத்துடன் 78 மாணவர் விடுதிகளும், 29 மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன.

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடன் இம்மாவட்டத்திற்கு மொத்தம் 21 விடுதிகள் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றின் மூலம் ஆதி திராவிடர் மாணவ மாணவியர் இலவச உணவு, உறைவிட வசதிகளைப் பெற்று வருகிறார்கள். மாணவ மாணவியர் பயன்பெறும் வண்ணம் அனைத்து விடுதிகளிலும் நூலகங்களைத் திறந்த பெருமை மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களையே சாரும்.

இத்துறை நடத்திவரும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கும் மற்ற பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியருக்கும் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் ஆகியவை இத்துறையினரால் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்காக இவ்வாண்டு சுமார் ரூ.62 இலட்சம் விடப்பட்டுள்ளது. இம்மாணவ மாணவியருக்கு இலவசமாக ரூபாய் 45 இலட்சத்தில் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் ஆதி திராவிடர் பழங்குடியின மாணவ மாணவியரின் நலனுக்காகக் கல்வி உதவித் தொகைகள் வழங்குதல் உள்ளிட்டு இவ்வரசினால் இவ்வாண்டு சுமார் ஒரு கோடியே இருபத்தி மூன்று இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

**கல்வி ஊக்கத்தொகை**

இவை மட்டுமல்லாது, பள்ளிப் பொதுத் தேர்வுகளில் சிறப்புடன் மதிப்பெண்கள் பெறும் மாணவர்க்கும், அதிக மதிப்பெண்கள் பெறுவதற்குப் பாடுபட்ட பாட ஆசிரியருக்கும், தேர்வு விழுக்காட்டினை அதிகமாகப் பெறும் தலைமை ஆசிரியர்களுக்கும் ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**1992-93-இல் செயல்படுத்தப்பட்ட வீட்டு வசதி மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்:**

மனிதனுக்கு உறைவிடம் மிக அத்தியாவசியம் என்ற உண்மையை உணர்ந்து ஆதி திராவிடர் குடும்பத்தினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் 1992- 93-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்திற்கு 10,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்காக ரூ.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் ஆதி திராவிடர் வாழும் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதிக்காக இவ்வாண்டு ரூ.2.30 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு . முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு ஆதி திராவிடர் குடியிருப்பும் இடுகாடு மற்றும் இடுகாட்டுக்குப்போகும் பாதை வசதியில்லாமல் இருக்கக் கூடாது என்று ஆணைப் பிறப்பித்து, அதற்குத் தேவையான நிதியும் ஒதுக்கியுள்ளதன் அடிப்படையில் இம்மாவட்டத்தில் சென்ற ஆண்டு இடுகாட்டுப் பாதை வசதிக்காக ரூ.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 190 பேருக்குச் சலவைப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

காலணிகள் செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்காகப் பெட்டிக்கடை (Petty shops) அளிக்கும் பணிக்காக இவ்வாண்டு 200 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள இவ்வின மக்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்காக இம்மாவட்டத்திற்கு இவ்வாண்டு ரூ.2.72 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 181 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன் பெறுவர்.

**பழங்குடியினர் நலம்**

இம்மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையில் உள்ள மலையாளி என்னும் பழங்குடியின மக்கள் ஒரு காலத்தில் ஜாகிர்தார்களிடம் கொத்தடிமைகளாய்ப் பிணைத் தொழிலாளர்களாய்ப் பணிபுரிந்தனர். ஆனால், தற்போது அவர்கள் அரசின் முயற்சியினால் கொத்தடிமைப் பிணைப்பிலிருந்து விடுபட்டு மற்றவர்களைப் போலவே சுதந்திரக் குடிமக்களாக வாழ்கின்றனர். அவர்களது சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டு வளர்ப்பு, வேளாண்மை, பழத் தோட்டம், கால்நடைப் பராமரிப்பு, சுகாதாரம், நெடுஞ்சாலை போன்ற பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த முயற்சியுடன் பல சிறப்புப் பணிகள் கல்வராயன் மலையில் செயல்பட்டு வருகின்றன: இதன் பலனாக இங்கு வாழும் பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரியதொரு மாற்றம் தெரிகின்றது.

பழங்குடியினர் கல்வி வளர்ச்சிக்கு இம்மாவட்டத்தில் 29 உண்டுறைவிடத் தொடக்கப் பள்ளிகளும், 5 உண்டுறைவிட நடுநிலைப் பள்ளிகளும், ஒரு உண்டுறைவிட மேல்நிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகின்றன. கள்ளக்குறிச்சி வட்டம் சங்கராபுரத்தில் பழங்குடி மாணவர்களின் நலனுக்காக ஒரு சிறிய தொழிற் பயிற்சி நிலையமும் நடத்தப்படுகிறது. இவற்றின் மூலம் பழங்குடியினரிடையே கல்வி மறுமலர்ச்சி வேகமாகப் பெருகி வருவதை நாம் அறிய முடிகிறது.

**தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்:**

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகச் சுய தொழில் வேலை வாய்ப்புத் திட்டம், விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த திட்டங்கள், இதர பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவையும் செயல்படுத்தப்படுகின்றன. சென்ற ஆண்டு இம்மாவட்டத்தில் இவற்றின் மூலம் சுமார் 20,000 ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர். அவற்றிற்காக ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இவற்றோடு, ஆதிதிராவிட மக்களின் பொருளார்தார மேம்பாட்டிற்கென, மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியின் ஆணையின்படி இம்மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம், இறால் வளர்ப்புத் திட்டம் ஆகியவையும் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தி வருவதன் மூலம் ஆதி திராவிடர், பழங்குடியினர் போன்ற நலிந்த பிரிவினரின் வளர்ச்சிக்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவியின் கீழ் இவ்வரசு அயராமல் பாடுபட்டு வருகிறது என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்.

**'தமிழரசு' அச்சகத்தில் அச்சுக் கோத்தல் மற்றும் இயந்திரங்கள் பிரிவு மேம்படுத்தல்:**

அச்சுக்கோத்தலை நவீனப்படுத்துவதற்காகவும், அச்சு எழுத்துக்களைப் புதிய வடிவமைப்புகளுடன் மேம்படுத்தவும் ரூ.4 இலட்சம் செலவில் (Desk Top Publishing System) டெஸ்க் டாப் பப்ளிஷிங் சிஸ்டம் என்ற நவீனக் கருவி ஒன்று நிறுவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அச்சு இயந்திரங்களைச் சுத்தப்படுத்தும் வேலைப் பளுவைக் குறைக்கும் வகையிலும், நேரத்தை மிச்சப்படுத்துவதோடு இயந்திரங்களை நல்ல முறையில் சுத்தம் செய்யும் வகையில் ரூ.30 ஆயிரம் செலவில் தானியங்கி டேம்ப்பர் ரோலர் கிளீனிங் மெஷின் (Automatic Damper Roller Cleaning Machine) ஒன்று 1993-94-ஆம் ஆண்டில் நிறுவப்படவுள்ளது.

'தமிழரசு' இதழின் சந்தாதாரர்களின் முகவரிகளைத் தொகுத்து நிர்வாகத்திற்கு உதவிட ரூ.1 இலட்சம் செலவில் புதிய கணினி வாங்க முடிவு செய்யப்பட்டது.

—மாண்புமிகு முதல்வர்

விளம்பர எண். 14/93

தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் படத்தொகுப்பு உதவி விரிவுரையாளர் (Assistant Lecturer in Editing) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 3.5.1993 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவிற்குப் பொருந்தாது.)

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவை அவரைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,640 - 2,900

**வயது:** 1.7.1993 அன்றுள்ளபடி 35 வயதிற்குக் குறைவாக.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பட்டம், இண்டர்மீடியட், புகுமுகவகுப்பு, மேல்நிலை வகுப்பு ஆகியவற்றில் எந்தக் கல்வித் தகுதியையேனும் பெற்றிருந்தாலோ அல்லது பி.டி.சி./பி.யு.சி./மேல்நிலை வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் (Diploma) பெற்றிருந்தாலோ அவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் பெற்றிருக்கும் ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினருக்கு வயது வரம்பு ஐந்து ஆண்டுகள் உயர்த்தப்படும்.

(மேலும் சில சலுகைகள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளன.)

தகுதி29.3.1993 அன்றுள்ளபடி:- (கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை.)

1. (அ) மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக் குழுமம், தமிழ்நாடு வழங்கிய, படத்தொகுப்பில் ஒரு பட்டயம் (Diploma in Film Editing) மற்றும்

ஆ. திரைப்படத் தொகுப்பில் (Editing of Motion Pictures) இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத செயல்வழி அனுபவம் அல்லது இப்பாடத்தைக் கற்பித்தலில் அதே கால அளவிற்கு அனுபவம். அல்லது

2. (அ) கலை அல்லது அறிவியல் வணிகவியலில் ஒரு பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். (B.O.L.) அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. (B.B.A.) அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம்./பி.லிட் (B.B.M./B.Litt) மற்றும்

ஆ) திரைப்படத் தொகுப்பில் (Editing of Motion Pictures) மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத செயல்வழி அனுபவம்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் க மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'- தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.4.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய, 1.4.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-இல் செலுத்தத்தக்க ரூ. 10-க்கான 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடனும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்பவேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/483/MS/93





விளம்பர எண். 15/93

தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவில், விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர் (Hostel Superintendent-cum-Physical Training Officer) பதவியில் ஏழு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 10.5.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,200-30-1,560-40-2,040

ஆதிதிராவிட வகுப்பினர்: 1
மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்: 1
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்: 2 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது)
பகிரங்கப் போட்டி: 3 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது)

**குறிப்புகள்:**

(1) தெரிவு செய்யப்பட்ட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில் அக்காலியிடங்கள் ஆண் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

(2) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவரைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 35 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பட்டம், புகுமுக வகுப்பு, மேல்நிலை வகுப்பு ஆகியவற்றில் எந்தக் கல்வியேனும் பெற்றிருந்தாலோ அல்லது பி.டி.சி./பி.யு.சி./மேல்நிலை வகுப்பில் தேர்ச்சி பெற்று, பின்பு பட்டயம் (Diploma) பெற்றிருந்தாலோ அவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் பெற்றிருக்கும் ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு வயது வரம்பு ஐந்து ஆண்டுகள் உயர்த்தப்படும்.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (19.3.1993 அன்றுள்ளபடி): கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

I.(a) A Diploma in pHysical Education of any University or Institution recognised by the University Grants Commission for the purpose of its grants. (or)

(b) The Teacher's Certificate in Physical Education (Higher Grade) and Teaching experience for a period of not less than one year. (and)

II. Must have been declared eligible for admission to the College Course of Study under the old 11 years Schooling or must have been declared eligible for admission to the Higher Secondary Course under the present 10 year schooling.

**Note:** Other things being equal, preference will be given to candidates who have completed one year Apprenticeship under the Government of India Scheme or one year training under the State Government Apprenticeship Scheme.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், பிணைத் தொழிலாளர்கள், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்ற வர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு - செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.4.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10), சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.4.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்தத்தக்க - பத்து ரூபாய்க் கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்பவேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற் கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/507/MS/93

TNPSC

விளம்பர எண்: 16/1993

தொகுதி-2 (Group-II) மற்றும் தொகுதி-3 (Group-III)-இல் உள்ளிட்ட கீழ்க்காணும் பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யப்படுவதற்காக நடைபெறவுள்ள முதனிலைத் தேர்விற்கு (Preliminary Examination) அனுமதிக்கப்பட விண்ணப்பங்கள் 10.5.1993 அன்று மாலை 5.45 மணிவரையில் வரவேற்கப்படுகின்றன:- **ஒரு தொகுதிக்குள் உள்ள எத்தனை பதவிக்கு விண்ணப்பித்தாலும் அத்தொகுதிக்கென்று ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பினால் போதுமானது. எனினும், தொகுதி-2-க்கும் தொகுதி-3-க்கும் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பவேண்டும்.**

| பணி மற்றும் பதவியின் பெயர் (1) | காலி இடங்கள் (2) | வயது (1.7.93 அன்றுள்ளபடி) (3) | கல்வித்தகுதி (30.3.1993 அன்றுள்ளபடி) அடியிற்குறிப்பிட்டுள்ளவை அல்லது அவற்றிற்கு இணையானவை (4) | சம்பள விகிதம் (5) |
|---|---|---|---|---|
| தொகுதி-2 GROUP II SERVICES | | | | |
| 1. தமிழ்நாடு சிறை சார்நிலைப் பணியில் நன்னடத்தைப் பொறுப்பு அலுவலர். | 4 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 22 வயதுக்கு மேல் 30 வயதிற்குள். | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1820-3200 |
| 2. தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்பு சார்நிலைப் பணியில் சமூக பாதுகாப்புத்துறையில் நன்னடைத்தைப் பொறுப்பு அலுவலர். | 1 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 26 வயதுக்கு மேல் 40 வயதிற்குள். | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1820-3200 |
| 3. தமிழ்நாடு வணிகவரித்துறை சார்நிலைப்பணியில் உதவி வணிகவரி அலுவலர். | 3 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு 35 வயதுக்குக் குறைவாக.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக,<br>சட்டத்தில் ஒரு பட்டம் பெற்றவர்களுக்கு 32 வயதுக்குக் குறைவாக | - மேற்படி - | ரூ.1600-2660 |
| 4. தமிழ்நாடு தொழிலாளர் சார்நிலைப்பணியில் தொழிலாளர் உதவி ஆய்வாளர். | 5 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ. ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக. | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். அல்லது பொறியியலில் பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1600-2660 |
| 5. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர். | 17 | (6 இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், உடல் ஊனமுற்றோர் உட்பட)<br>அ. இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்<br>1. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>2. பிற வகுப்பினருக்கு 30 வயதிற்குக் குறைவாக | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1600-2660 |
| | | ஆ. இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்: (உடல் ஊனமுற்றோர்)<br>1. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ. ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>2. பிற வகுப்பினருக்கு 40 வயதிற்குக் குறைவாக<br>3. விண்ணப்பதாரர் உடல் ஊனமுற்றவராயிருந்து, அன்னாரது உடல் ஊனம்50 சதவிகிதத்திற்குக் குறையாமலிருந்து அது சம்பந்தமான சான்றிதழ் உதவி மருத்துவர் தகுதிக்குக் கீழ் அல்லாத மருத்துவரால் வழங்கப்படவேண்டும். உடல் ஊனத்தின் விபரமும் இழப்பின் சதவிகிதமும் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. | | |

| உடல் ஊனத்தின் விவரம் | இழப்பின் சதவிகிதம் |
|---|---|
| 1. தோள் பட்டையில் புஜ இழப்பு | 100 |
| 2. தோள் பட்டைக்குக் கீழே கை இழப்பு | 85 |

| | |
|---|---|
| 3. மணிக்கட்டிலும், மணிக்கட்டின் மேலும் கையில் இழப்பு | 66 |
| 4. ஒரு கையின் மொத்த பக்கவாத பாதிப்பு | 50 |
| 5. விபத்தினால், முகவடிவமைப்பின் மொத்த பாதிப்பு | 50 |
| 6. ஒரு கையில் ஒரு பெருவிரலும் மறு கையில் நான்கு விரல்களும் இழப்பு | 60 |
| 7. ஒரு கையில் நான்கு விரல்கள் பாதிப்பு | 50 |
| 8. ஒரு கண் உடையவர்கள் | 50 |
| 9. முழங்காலுக்குக் கீழே மொத்த பக்கவாதம் | 60 |
| 10. அரை குறையான முடக்குவாத பாதிப்பு ஒரு காலில் முழங்காலுக்கு மேலும் மறுகாலில் முழங்காலுக்குக் கீழும் | 50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. தமிழ்நாடு பதிவுத்துறை சார்நிலைப் பணியில் சார்பதிவாளர் இரண்டாம் நிலை | 32 | அ) ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ) பிற வகுப்பினருக்கு 20 வயதிற்கு மேல் 30 வயதிற்குள். | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம். | ரூ.1600-2660 |
| 7. தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்பு சார்நிலைப் பணியில் மகளிர் நல அலுவலர் (மகளிர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்) | 1 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.- ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக. | -மேற்படி- | ரூ.1600-2660 |
| 8. தமிழ்நாடு அமைச்சுப் பணியில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் உதவி ஆய்வாளர் | 68 | -மேற்படி- | -மேற்படி- | ரூ.1400-2600 |
| மாநில வணிகத் திட்டத்துறையில் உதவி ஆய்வாளர் | 26 | -மேற்படி- | -மேற்படி- | ரூ.1400-2600 |
| இந்து சமய அறநிலையத்துறையில் தணிக்கைப் பிரிவில் தணிக்கை ஆய்வாளர் (இந்துமத விண்ணப்பதாரர் மட்டுமே தகுதியுடையவர்) | 14 | -மேற்படி- | -மேற்படி- | ரூ.1400-2600 |



| | | | | |
|---|---|---|---|---|
| 9. தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப் பணியில் கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர். | 40 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ. ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதிற்குக் குறைவாக | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். அல்லது ஊரகப் பணியில் பட்டயம் அல்லது பட்டயக் கணக்கர்களுக்கான நிலையங்களில் இணை உறுப்பினர்களுக்கான பட்டயம். | ரூ.1400-2600 |
| 10. தமிழ்நாடு வேளாண்மை விற்பனை சார்நிலைப் பணியில் மேற்பார்வையாளர் | 8 | -மேற்படி- | ஒரு பட்டம் (A degree) | ரூ.1400-2600 |
| 11. தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப் பணியில் கூட்டுறவு தணிக்கைத்துறையில் இளநிலை கூட்டுறவு தணிக்கையர். | 131 | -மேற்படி- | பி.காம். பட்டம் அல்லது பி.ஏ. (கூட்டுறவு) அல்லது பி.ஏ. (பொருளாதாரம்) | ரூ.1200-2040 |
| 12. தமிழ்நாடு சிறைத்துறை சார்நிலைப் பணியில் உதவி சிறை அலுவலர். | 1 | அ) ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.- ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ. பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக. | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1200-2040 |
| | | உடற்தகுதி: உயரம்<br>மார்பு: | 168 செ.மீ.<br>(மூச்சு உள்ளிழுக்கும்போது) 86 செ.மீ.<br>விரிவடையவேண்டியது 5 செ.மீ. | |
| | | ஆ.தி.வ., ப.வ.-க்கு உயரம்<br>மார்பு | 160 செ.மீ.<br>(மூச்சு உள்ளிழுக்கும்போது) 79 செ.மீ.<br>விரிவடைய வேண்டியது 5 செ.மீ. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 13. தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வருவாய்த்துறையில் உதவியாளர் | 40 | அ. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ. ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ) பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக. | பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ. அல்லது பி.எஸ்சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் அல்லது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பி.பி.ஏ. பட்டம் அல்லது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.லிட். பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம். | ரூ.1200-2040 |
| 14. தமிழ்நாடு நகரிய ஊராட்சி சார்நிலைப் பணியில் நகரிய ஊராட்சித்துறையில் நிர்வாக அலுவலர் இரண்டாம் நிலை. | 2 | அ) ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.<br>ஆ) பிற வகுப்பினருக்கு 30 வயதுக்குக் குறைவாக | ஒரு பட்டம் (A degree) | ரூ.1200-2040 |

**தொகுதி-3 GROUP III SERVICES**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தமிழ்நாடு பதிவுத்துறை சார்நிலைப் பணியில் சார்பதிவாளர் இரண்டாம் நிலை | 7 (இக் காலியிடங்கள் ஆ.தி. வகுப்பினருக்கு ஒதுக்கப் பட்டவை | வயது வரம்பு இல்லை | இடைநிலைத் தேர்வு (Intermediate) அல்லது புகுமுக வகுப்பில் தேர்ச்சி (Pre-University) அல்லது மேல்நிலைப்பள்ளி கல்வியில் (Higher Secondary Courses) தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்). | ரூ.1600-2660 |
| 2. தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப்பணியில் கூட்டுறவு சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர் | 84 (இக் காலியிடங்கள் ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ., /சீ.ம. மற்றும் பி.வ.-ருக்கு ஒதுக்கப்பட்டது.) | -மேற்படி- | -மேற்படி- | ரூ.1400-2600 |

குறிப்பு:

1. மேற்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை தோராயமானவையே. அவை தெரிவு செய்யப்படும் போதோ அல்லது அதற்கு முன்னரோ அன்றைய நிலைமைக்கு ஏற்ப மாறக்கூடும்.

2. ஆ.தி.வ., ப.வ., மி.பி.வ.,/சீ.ம., பி.வ., ப.போ. பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டுள்ள காலியிடங்களின் தெரிவு, நியமன ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும். தகுதியான பெண் பணி வேட்பாளர்கள் தெரிவுசெய்யக் கிடைக்கப் பெறாவிடில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் ஆண் பணிவேட்பாளர்களால் நிரப்பப்படும். தகுதியான உடல் ஊனமுற்ற பணிவேட்பாளர் தெரிவு செய்யக்கிடைக்கப்பெறாவிடில் அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட சுற்றுமுறை (Turn) அதே பிரிவைச் சார்ந்த உடல் ஊனம் இல்லாத பணிவேட்பாளரால் நிரப்பப்படும்.



3. இப்பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து குறைந்த பட்ச மதிப்பெண்களைப் பெறுவதின் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

விளக்கம்: 'ஆதரவற்ற விதவை' என்பது வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

### (2) தேர்வு மையங்கள் மற்றும் குறியீட்டு எண்கள்

| தேர்வு மையம் | குறியீட்டு எண் | தேர்வு மையம் | குறியீட்டு எண் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | 01 | சேலம் | 13 |
| கடலூர் | 02 | சிவகங்கை | 14 |
| தர்மபுரி | 03 | தஞ்சாவூர் | 15 |
| திண்டுக்கல் | 04 | திருச்சிராப்பள்ளி | 16 |
| ஈரோடு | 05 | திருநெல்வேலி | 17 |
| காஞ்சிபுரம் | 06 | தூத்துக்குடி | 18 |
| சென்னை | 08 | உதகமண்டலம் | 19 |
| மதுரை | 09 | வேலூர் | 20 |
| நாகர்கோவில் | 10 | விருதுநகர் | 21 |
| புதுக்கோட்டை | 11 | நாகப்பட்டினம் | 51 |
| இராமநாதபுரம் | 12 | திருவண்ணாமலை | 76 |

3. தேர்வுத்திட்டம்: போட்டி எழுத்துத்தேர்வு, தொடர்ந்து மூன்று நிலைகளைக் கொண்டவை. அதாவது:

அ) முதன்மை எழுத்துத் தேர்வுக்கு விண்ணப்பதாரரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதனிலை எழுத்துத்தேர்வு.

ஆ) முதன்மை எழுத்துத் தேர்வு மற்றும்

இ) நேர்முகத் தேர்வு.

முதனிலைத் தேர்வு: இது பணிவேட்பாளர்களின் போட்டி எண்ணிக்கையைக் குறைப்பதற்காக நடத்தப்படும் எழுத்துத்தேர்வு (Screening Test) ஆகும். முதன்மை எழுத்துத்தேர்வுக்கு அனுமதிக்கப்படத் தகுதியானவர்களென அறிவிக்கப்படும் பணி வேட்பாளர்களின் இறுதி தகுதி நிலையை நிர்ணயிக்கும்போது அவர்கள் முதனிலை எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. முதனிலை எழுத்துத்தேர்வு முடிவின்படி, முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் பணி வேட்பாளர்களின் எண்ணிக்கை நியமன ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி, தெரிவு செய்யப்படவேண்டிய பணிவேட்பாளர்களின் எண்ணிக்கையைப் போல் சரியாகப் பத்து மடங்காக இருக்கும். முதனிலைத் தேர்வு பொது அறிவு (கொள்குறி வகை) (Objective type) பாடத்தில் இரண்டு மணி நேர கால அளவில் மொத்தம் 100 மதிப்பெண்கள் கொண்டதாக அமையும்.

குறிப்பு: முதனிலைத் தேர்விற்கு அனுமதிக்கவே இவ்விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்கள், தேர்வாணையத்தால் பின்னர் அறிவிக்கப்படும் விரிவான விண்ணப்பப் படிவத்தில் (Detailed Application) விண்ணப்பிக்க வேண்டும்.

### (4) முதனிலைத் தேர்விற்கான பாடத்திட்டம்

### தொகுதி-2 பொது அறிவு (இளங்கலைப்பட்ட தரம்)

1. Modern History of India and Indian Culture
2. Current Events of National and International Importance.
3. Statistical analysis, graphs and diagrams.
4. Indian Polity
5. Indian Economy and Geography of India
6. The role and impact of science and technology in the development of India.

Modern History of India and Indian Culture will cover the broad history of country from above the middle of the Nineteenth Century and would also include questions on Gandhi, Tagore and Nehru. The part relating to statistical analysis, graphs and diagrams will include exercises to test the candidate's ability to draw common sense conclusions for imformation presented in statistical graphical or diagrammatical form and to point out deficiencies limitations or inconsistencies therein. The part relating to Indian Polity, will include questions on the political system in India. In the part pertaining to the Indian Economy and Geography of India, questions will be put on planning in India and the physical, economic and social geography of Tamil Nadu. In the third part relating to the role and impact of science and technology in the development of India, quetions will be asked to test the candidate's awareness of the role and impact of science and technology in India, emphasis will be on applied aspect.

**Note:** Some of the questions asked in this paper shall be exclusively with reference to Tamil Nadu/

### தொகுதி - 3 பொது அறிவு - மேல்நிலைப்பள்ளிக் கல்வி தரம்

1. General Science, 2. Indian History, 3. Geography of India, 4. Economics & Commerce, 5. Indian Polity, 6. Indian National Movement, 7. Current Affairs, 8. Mental Ability Tests.

**General Science** General Science will cover general appreciation and understanding of science including matters of everyday observations and experience as may e expected of a well educated person who has not made any special study of any scientific discipline. The questions shall be from topics, in physics, chemistry and biology, viz. Scientific laws, Scientific Instruments, Inventions and Discoveries, Scientists and their contributions, Human Phyiology Disease-their cause, cure and prevention, diet-balanced diet, human genetics, animals, mammals and birds, environment and ecology, elements and compounds, acids, bases and salts and allied subjects; motion, newton's laws, matter-properties of matter, electricity, national laboratories and other related topics.

**History of India:** Dates and events relating to Indusvalley Civilization, Vedic, Aryan and Sangam age, Maurya Dynasty, Buddhism and Jainism, Guptas and Vardhanas, Pallavas, Cholas and Pandias, Sultanate and Mughal Period, Advent of European powers specially the British and other related, topics.

**Geography of India:** Earth, Motions of earth, Rotation and Revolution and their effects, structure of earth, Natural regions of India, Weather, Monsoon and Climate, Rainfall, Natural calamities, Indian Towns and places, Hill stations, National Parks, Major Ports, Crops and Minorals, Location of major industries, Forests and Wild life, population idstribution in India and other related topics.

**Economics and Commerce:** Agriculture, Major Crops and crop in India, Industrial development, Major Medium, Small Scale and Cottage Industries of Tamil Nadu, Village and Rural Development in India. Housing, Drinking water and other developmental schemes - Price Policy, Inflation, Population and unemployment problems, Imports and Exports.

**Indian Poli:y:** Indian Constitution, Salient features, Citizenship, Elections, Parliament and State Legislature Executive set up of State, Judiciary System, Local Self Governments, Centre State Relations, Language Policy, Foreign Policy.

**Indian National Movement:** National freedom movement and attainment of independance, contribution of National leader like Bal Ganga Dhar Tilak, Gopalakrishna Gokhale, Dada Bhai Naoroji, M.K. Gandhi, Jawaharlal Nehru and others, role of Tamil Nadu in freedom movement, Bharathiyar, V.O.C., Subbramaniya Siva, Rajaji and others.

**Current events:** Latest development in science and technology, political developments in India. New developments in trade, transport and communication, historical events. Fine arts like dance, drammas, films, painting, major literary works, games and sports, National and International awards, National and International Organisations, abbreviations, who is who, books nd authors, general terminology. India and it's neighbours, present day India and other related topics.

**Mental ability tests:** These tests are meant to verify the candidate's capability to draw conclusions through inductive or deductive reasoning from tables and charts. It will included elementary problems from school mathematics.

**Note:** Some of the questions asked in this paper shall be exclusively with reference to Tamil Nadu.

**தேர்வுக் கட்டணம்:** ரூ.40 (ரூபாய் நாற்பது மட்டும் - ஒவ்வொரு தொகுதிக்கும்) இத்தேர்வுக் கட்டணம் செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களுக்கு வழங்கப்படக்கூடியதாக சென்னையில் செலுத்தத்தக்க 'கேட்புக் காசோலையாக' ஏதேனும் ஒரு ஷெட்யூல்ட் வங்கியில் பெற்று விண்ணப்பத்துடன் அனுப்பப்படவேண்டும். மேற்படி கேட்புக் காசோலை சென்னை ஆயிரம் விளக்கு, பாரத ஸ்டேட் வங்கி கிளையில் செலுத்தத்தக்கதாக ஏதேனும் ஒரு பாரத ஸ்டேட் வங்கி கிளையில் பெறப்பட்டிருப்பது விரும்பத்தக்கது. இக்கேட்புக் காசோலை 30.3.1993-க்குப் பிறகு பெறப்பட்டிருக்க வேண்டும்.



**விண்ணப்பிக்கும் முறை:** முதனிலைத் தேர்வில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் கண்டுள்ள விண்ணப்பம் மற்றும் வருகைத்தாளை 30 x 21 செ.மீ. அளவுள்ள ஒரு நீள வெள்ளைத்தாளில் சீராக இடைவெளியிட்டு தட்டச்சு செய்து, முறைப்படி நிரப்பி உரிய சான்றிதழ்களுடன் 'செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், சென்னை-600 002 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். தேர்வாணைய விளம்பரத்தில் வெளியிடப்பட்டிருக்கும் அதே படிவத்தில் அமைந்திருக்கும் பட்சத்தில் தனியார் மூலம் விற்கப்படும் அச்சிடப்பட்ட விண்ணப்பங்களையும் பயன்படுத்தத் தடையில்லை. விண்ணப்பம் அனுப்பப்படும் உறையின் மீது 'தொகுதிப்பணிகளில் அடங்கிய பதவிகளுக்கான முதனிலைத் தேர்வு விண்ணப்பம்' என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

அரசுப்பணியில் உள்ளவர்களும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அல்லது அதைப் போன்ற நிறுவனங்களில் பணிபுரிவோரும் நேரடியாகத் தேர்வாணையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆனால், தாம் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விபரத்தை தங்களின் நியமன அதிகாரிகளுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

**விண்ணப்பத்துடன் அனுப்பப்படவேண்டியவை:-**

1. தேர்வுக் கட்டணமாக ரூ.40-க்கான 'பாரத ஸ்டேட் வங்கி' கேட்புக் காசோலை (Demand Draft) (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு கோருவோர் தவிர) (ஒவ்வொரு தொகுதிக்குரிய விண்ணப்பத்துடனும் தனித்தனியாகக் கேட்புக்காசோலை இணைத்தனுப்ப வேண்டும்).

2. வருகைத்தாள் (Attendance Sheet) (மாதிரிப்படிவத்தில் உள்ளவாறு).

3. அண்மையில் எடுத்த பணிவேட்பாளரின் கையொப்பமிடப்பட்ட (5 x 7 cms.) அளவுள்ள ஒரே மாதிரியான இரண்டு நிழற்படங்கள் (ஒன்றை விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்திலும், மற்றொன்றை வருகைத்தாளிலும் ஒட்ட வேண்டும்.)

4. வயது, கல்வித் தகுதிக்கான மற்றும் சாதிச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல்கள்/நகல்ச்சுகள் (Xerox copy)

5. சுயவிலாசமிட்ட 45 காசுகள் கூடுதல் அஞ்சல்வில்லை ஒட்டப்பட்ட ஓர் அஞ்சல் அட்டை.

**குறிப்பு:** தகுந்த தேர்வுக்கட்டணம் செலுத்தப்படாத அல்லது முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் குறைபாடுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது தொடர்பாக மறு பரிசீலனை செய்யக்கோரி பெறப்படும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

7. ஆ.தி.வ., ப.வ., மற்றும் பி.வ., ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், பிணைத்தொழிலாளர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும் கல்வித்தகுதி, கட்டணச் சலுகைகள் சம்பந்தமாக அனுமதிக்கப்பட்ட சலுகைகளைக் கூறும் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' 16.8.89 நாளிட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டிலும் (Tamil Nadu Public Service Commission Bulletin) 1.9.89 நாளிட்ட 'தமிழரசு' ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்புகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. செய்தி அறிவிப்பு வெளியீடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் அரசு வெளியீட்டு விற்பனை மையங்களின் மூலம் விலைக்கு கிடைக்கப்பெறும். (பிற்படுத்தப்பட்டவர்களுக்காக அறிவிக்கப்பட்டுள் சலுகைகள் அனைத்தும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கும் பொருந்தும்).

**சுருக்கங்கள்**

| | |
|---|---|
| ஆ.தி.வ. | - ஆதி திராவிட வகுப்பினர் |
| ப.வ. | - பழங்குடி வகுப்பினர் |
| மி.பி.வ./சீ.ம. | - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர் |
| பி.வ. | - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் |
| ப.போ. | - பகிரங்கப்போட்டி |

Advertisement No. 16/93.

**APPLICATION FOR PRELIMINARY EXAMINATION FOR POSTS INCLUDED IN GROUP ............ SERVICES, 1993**
**(Specify Group II or Group III)**

1. EXAMINATION CENTRE: ............... CODE ________
(To be specified in block letters)

2. REGISTER NUMBER:
(To be assigned by Office)

Paste here a signed copy of recent photograph of passport size (5 cms. x 7 cms.)

3. Details of fee paid:

| Name of the Bank | Number of the Demand Draft | Date | Value Rs. P. |
|---|---|---|---|
| | | | |

4. Do you claim fee exemption? Yes / No
If yes, mention the relevent catagory under which exemption is claimed. : ........................

5. NAME AND ADDRESS (IN CAPITALS)
(a) Name : ........................
(b) Father's Name : ........................
(c) Present Postal Address : ........................
Pin ........................

6. Date of Birth

| Day | Month | Year |
|---|---|---|
| | | |

Do you claim age relaxation? Yes / No

If Yes, mention the relevant category ................

7. SEX MALE / FEMALE
(Tick the relevant Box

8. (a) Religion : ........................
(b) Name of the Community : ........................
(Tick the relevant Box)

| 01 | 02 | 03 | 04 | 05 |
|---|---|---|---|---|
| SC | ST | BC | OTHERS | MBC/DC |

9. Do you possess the requisite educational qualification? Yes / No
(Tick the relevant Box. If yes, gives details)

| Examination passed | Subjects of Study | Year of pass | Marks/ Grade | Institution |
|---|---|---|---|---|
| | | | | |

10. Do you possess any additional or preferential qualifications prescribed for the post? Yes / No
(Tick the relevant Box
If yes, give details)

| Examination passed | Sujbects of Study | Year of pass | Marks/ Grade | Institution |
|---|---|---|---|---|
| | | | | |

11. Do you claim any preference/relaxation under the following category? : (If yes evidence to be produced)
(a) Destitute Widow : Yes / No
(b)Physically handicapped : Yes / No
If yes, tick the relevent category : Blind / Deaf / Orthopaedic
(c) If you claim any concession state reasons therefor.

**DECLARATION**

I hereby declare that all the particulars furnished in this application are true, correct and complete to the best of my knowledge and belief. In the event of any information being found false or incorrect or ineligibility being detected before or after the examination, action can be taken against me by the Commission.

I have read the advertisement, Notification and "Instructions to candidates' carefully and I hereby undertake to abide by the instructions therein.

I further declare that I fulfil all the eligibility conditions prescribed for admission to the examination.

* I have informed my employer in writing that I am applying for this examination.

(* Strike off this if not applicable).

Station: Signature of the candidate.
Date:

**TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION**
**Madras-2**
**ATTENDANCE SHEET**
**Preliminary examination for the post included in**
**GROUP..................................................SERVICES, 1993.**
(Specify Group II or Group III)
(To be filled by candidate)

REGISTER NUMBER

Examination Centre : ........... (To be filled by office)
Code:

Name of the candidate: ...............
Date of Birth : ...............................
Communication address : ..............
..........................................
..........................................
..........................................

Paste here a signed copy of your recent passport size photograph (5 cm. x 7 cm.)

(To be filled at the time of Examination)

| Date of Time | Examination Subject | Candidate's Signature |
|---|---|---|
| | | |





## தமிழ் வளர்த்த பெரியார்



### பன்மொழிப் புலவர்

### தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்

- புலவர் தமிழ்ப்பித்தன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் புலவர் இறுதி ஆண்டு வகுப்பறையின் உள்ளே நுழைகிறார் அந்தப் பேராசிரியர். அவரது கரத்திலே மாணவர்களின் விடைத்தாள்கள் தஞ்சம் அடைந்திருக்கின்றன. மாணவர்களை நோட்டமிட்டபடியே இருக்கையில் அமர்கிறார்.

''இந்த வகுப்பில் ஞானசம்பந்தம் என்பவர் யார்?'' - பேராசியர் வினவுகிறார்.

ஒரு மாணவர் எழுந்து நிற்கிறார்.

''சேனாவரையர் உமக்கு என்ன கெடுதல் செய்தார்? ஏன் இவ்வளவு கடுமையாகத் தாக்கி எழுதியிருக்கிறீர்கள்?'' பேராசிரியர் கேட்கிறார்.

மாணவர், மறுமொழி கூறாது நிற்கிறார்.

''சேனாவரையரின் கருத்துக்களை மறுத்திருக்கிறீர்களே, அவற்றிற்கெல்லாம் நீங்கள் கூறும் புதிய கருத்துக்கள் யாவை? அவற்றை ஏன் விடைத்தாளில் எழுதவில்லை?'' - பேராசிரியர் வினாக்களைத் தொடர்கிறார்.

''சேனாவரையரின் கருத்துக்களில் பொருந்தாமை, குறைபாடு ஆகியவை எனக்குத் தோன்றுகிறதே தவிர புதிய கருத்துக்கள் தோன்றவில்லை. அதனால் மறுத்ததோடு நிறுத்திக் கொண்டேன்''. - மாணவர் பதிலளிக்கிறார்.

''உங்கள் விடையிலிருந்து நீங்கள் சேனாவரையத்தை நன்கு கற்றிருக்கிறீர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. என்றாலும் முளையிலேயே கனிய நினைக்க வேண்டாம்''. நன்கு வளர்ந்த பின் கனிவதே நல்லது'' - என்று சொல்லிவிட்டு, விடைத்தாளை அந்த மாணவரிடம் கொடுக்கிறார் பேராசிரியர்.

விடைத்தாளை வாங்கிப் பார்த்த மாணவர் வியப்பில் மூழ்குகிறார். நம்ப முடியாத அளவுக்கு உயர்ந்த மதிப்பெண்கள் விடைத்தாளில் காணப்படுகின்றன.

கருத்து வேறுபாட்டிற்காக எவரையும் பழிவாங்காத பேராசிரியரின் பேருள்ளத்தை மாணவர் புரிந்துகொள்கிறார். அந்தப் பேராசிரியர்தான் பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், மாணவர் டாக்டர் நன்னன்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் வாழ்ந்து வந்த தென்பட்டினம் பொன்னுச்சாமி கிராமணி - ருக்மணியம்மாள் தம்பதியரின் இரண்டாவது மகனாக 1901 ஜனவரி 8-ஆம் நாளில் பிறந்தவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். கிருஷ்ணசாமி என்ற தமையனார், வடிவாம்பாள் என்ற தமக்கை, திரிபுர சுந்தரி என்ற தங்கை, முத்துக்குமாரசாமி என்னும் தம்பி தெ.பொ.மீ-யின் உடன் பிறந்தோர் ஆவர்.

பொன்னுச்சாமி தமிழ்ப் புலமை மிக்கவர். வீணை வாசிப்பதில் வல்லவர். மூத்த மகன் கிருஷ்ணசாமி, பாவலர் என்னும் சிறப்புப் பெற்றவர். நாடகப் பேராசிரியர். நாட்டுப்பற்றுள்ளவர்.தேச பந்து என்னும் திங்கள் ஏட்டினை நடத்தி வந்தவர்.

பள்ளிக் கல்வியைப் பாங்குற முடித்த தெ.பொ.மீ. பச்சையப்பன் கல்லூரியில் ''சரித்திரம், பொருளாதாரம், அரசியல்' என்னும் பிரிவில் பயின்று முதுகலைப் பட்டதாரி ஆனார். பின்னர் சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று சட்டக் கல்வி பெற்றார். முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் அவர்கள் சட்டக் கல்லூரியில் இரவது சகமாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தெ.பொ.மீ. சிந்தாதிரிப்பேட்டை வேதாந்த சங்கத்தின் தலைவரும் பெரும் புலவருமான கோ. வடிவேலு செட்டியாரிடம் தமிழ்க் கல்வி பயின்றார். வித்வான் முதல் நிலை, இறுதி நிலை இரண்டு தேர்வுகளையும் ஒரே ஆண்டில் எழுதி, மாநிலத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அப்போது வித்வான் தேர்வுக் குழுவுக்குத் தலைவராக இருந்தவர் உ.வே.சா. என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை மாநகராட்சி ஆல்டர் மேனாகவும், சைதை நகராட்சி வழக்கறிஞராகவும் சிறிது காலம் பணியாற்றிய தெ.பொ.மீ. சிந்தாதிரிப்பேட்டையில் தொடக்கப் பள்ளிக் கல்விச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். 1944 முதல் 1946 முடிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணி ஆற்றினார். 1952-இல் சென்னை மாநிலக் கல்லூரியில் ஆய்வுப் பேராசிரியர் பணி; 1958-ஆம் ஆண்டில் மறுபடியும் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பணியை மேற்கொண்டார்; அங்கே, மொழி இயல்துறை (Linguistics)-யின் தலைவராக அவர் நியமிக்கப் பெற்றார். அதே ஆண்டில் திராவிட மொழி இயல

கழகத்தின் தலைமைப் பொறுப்பும், அனைத்திந்திய மொழியியல் கழகத்தின் தலைமைப் பொறுப்பும் இவரைத் தேடி வந்தன. இந்திய விடுதலைக்குப் பின்னர் உருவான மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது துணைவேந்தராக இவர் 1965-இல் நியமிக்கப் பெற்றார். ஐந்தாண்டுகள் இப்பணியை ஆற்றி 1971-இல் ஓய்வு பெற்றார். தமிழ்ப் புலமையின் அடிப்படையில் அவருக்குக் கிடைத்த பதவிதான் துணைவேந்தர் பதவி!

எழுத்தார்வம் மிக்க தெ.பொ.மீ. தமது பதினைந்தாவது வயதிலேயே (1916) கட்டுரைகளைத் தீட்டியிருக் கிறார். என்றாலும் அவை 1929-ஆம் ஆண்டில் தான் நூல் வடிவம் பெற்றன.

நமது அன்னைத் தமிழுக்கு ஒரு பெருமை உண்டு; தமிழ்க் கல்வி கற்று இலக்கியத் தொண்டாற்றிய புலவர்கள் மட்டுமன்றி சட்டக் கல்வி கற்று வழக்கறிஞ ராகிய பல பெருமக்களும் தமிழன்னை யின் புகழ் பாடியிருக்கிறார்கள்; நாவலர் சோமசுந்தர பாரதியார், வ.உ. சிதம்பரனார், ரா.பி. சேதுப்பிள்ளை, கா.சு. பிள்ளை இப்படி அந்தப் பட்டியல் நீளும். சட்டக் கல்வி கற்ற தெ.பொ.மீ. அவர்களும் தமிழன்னைக்குத் தொண்டு செய்வதில் ஈடுபட்டார். ஏனைய பெருமக்களுக்கும் இவருக்கும் ஒரு வேற்றுமை உண்டு. அவர்களில் பலர் தமிழின் பெருமை குறித்துத் தமிழிலேதான் எழுதி வந்தனர்; தமிழைக் குறித்து ஆங்கிலத்தில் நூல் எழுதியதில்லை. அந்தப் பணியை ஆர்வத் துடன் செய்து வேற்றுமொழியினருக்கும் வேற்று நாட்டினர்க்கும் தமிழின் பெரு மையை எடுத்துரைத்து, உலக அரங்கில் அதன் பெருமையை உயர்த்தியவர் தெ.பொ.மீ. ஆவார். 1929-ஆம் ஆண் டிலிருந்து அவர் எழுதிய நூல்களின் எண் ணிக்கை 42. இவற்றில் ஆங்கில நூல்கள் மட்டும் 13 ஆகும்.

குலசேகரர், கானல்வரி, குடிமக்கள் காப்பியம், நற்றிணை நாடகங்கள், வள்ளுவரும் மகளிரும், வள்ளுவர் கண்ட நாடும் காமமும், சம்பந்தரும் சமணரும், தமிழ் மணம், பாட்டிலே புரட்சி, கல்விச் சிந்தனைகள் இப்படி அவரது நூல்கள் பலவகையில் அமைந்தன. ஒவ்வொரு நூலிலும் அவரது முத்திரை ஒளி வீசும். இனிய நடை - வலுவான வாதம் - தக்க அகச்சான்றுகள் - புறச் சான்றுகள் அவரது நூல்களில் திகழும். படிப் போரைப் பயமுறுத்தும் நடை அவரிடம் கிடையாது. அவரது நூல்கள், இளநிலை, இளங்கலை, முதுகலை வகுப்புகளுக்கும் பாடநூல்களாக இடம் பெற்றிருந்தன.

கோவலன்-மாதவி பண்பு நலன் குறித்து ஆய்வு செய்து எழுதிய கானல் வரி நுட்பம் நிறைந்த நூலாகும். தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றதாகும்.

முல்லைப்பாட்டு குறித்து ஆய்வு செய்து ஆங்கிலத்தில் எழுதிய நூல் சான்றோர்களின் பாராட்டை அதிக அளவில் பெற்றது. 1952-இல் தமிழக அரசின் பரிசு பெற்றது.



## புலவர் தமிழ்ப்பித்தன் மறைவு

புலவர் தமிழ்ப்பித்தன் (எஸ். சண்முக சுந்தரம்) அவர்கள் 8.4.93 அன்று காலமானார்.

புலவர் தமிழ்ப்பித்தன், 'தமிழரசு' தொடங்கிய காலத்திலிருந்தே (1970) பணியாற்றி வந்தவர். முதலில் 'டைப்போ கிராப்பர்' ஆகச் சேர்ந்து, உதவியாசிரிய ராகி பிறகு இணையாசிரியராகப் (மக்கள் தொடர்பு அலுவலர்) பணியாற்றி ஓய்வு பெற்றவர் (1991).

கவியரசு கண்ணதாசன் அவர்களின் உதவியாளராக நீண்டநாள் பணியாற்றிய தோடு, அவரது தென்றல், முல்லை இதழ் களில் உதவியாசிரியராகவும் பணியாற்றி யவர். இலக்கிய உலகில் புகழ்பெற்றதைப் போலவே திரையுலகிலும் பல்லாண்டுகள் (1957-1969) பணிபுரிந்துள்ளார். முப்பதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதி யுள்ளார். 'தென்னாட்டுக் காந்தி' என்னும் நூலுக்குத் தமிழக அரசின் பரிசும் (1973), குழந்தை எழுத்தாளர் சங்க இலக்கியப் போட்டியில் வெள்ளிப் பதக்கமும் (1987) பெற்றவர்.

20 ஆண்டுக்காலத் 'தமிழரசு' குறித்து ஆய்வு செய்தவர். அது, ''இதழியல் உலகில் தமிழரசு'' என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

அன்னாரின் மறைவுக்கு, 'தமிழரசு' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள் கிறது.

தமிழ் இலக்கியத் துறையில் ஒப்பீட்டு இலக்கியம் வளர்வதற்குப் புதிய பாதையை உருவாக்கினார் தெ.பொ.மீ.

அறிவியல் கருத்துக்கள் தமிழில் பரவவேண்டும் என்பதில் தெ.பொ.மீ. அவர்களுக்கு மிகுந்த அக்கறை இருந்தது. அறிவியல் ஏடான கலைக்கதிரில் அறிவியல் கட்டுரைகள் பலவற்றை அவர் ஆவர்வத்துடன் தீட்டி வந்தார். ஐன்ஸ்டி னுடைய சார்புக் கொள்கையை (Theory of Relativity) முதன் முதலில் தமிழில் எடுத்துரைத்தார்.

மாண்டிசோரி அம்மையாரின் புதிய கல்வி முறையைப் போற்றினார். 1943-இல் அவுரே மாண்டிசோரிப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். ஓரளவு படித்தவர்களும் அந்த அம்மையாரின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளும் வகையில் குழவி உள்ளம் என்னும் நூலை எழுதினார். அதனை ஒரு பெண்ணின் பெயரில் வெளியிட்டார்.

உளவியல் நூல் (Psychology) ஒன்றை 1944-இல் எழுதினார். மாதை சாத்திரம் என்னும் தலைப்புள்ள அந்நூல்தான் தமிழ் மொழியில் முதன்முதலாக எழுதப் பட்ட உளவியல் நூல் ஆகும்.

விண்வெளி ஆராய்ச்சிச் சாதனைகள் குறித்துத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு 1945-ஆம் ஆண்டிலேயே எடுத்துரைத்த தெ.பொ.மீ. அவர்கள், தமது மூத்த மகள் காமேச்சுவரியின் திருமண வரவேற்பின் போது, வருகை புரிந்த பெருமக்களுக்கு 'வானக் குமிழி' என்னும் விண்வெளி ஆய்வு நூலை அன்பளிப்பாக வழங் கினார். விருந்தினர்க்குத் தேங்காய் பழம் தந்துவரும் வழக்கத்தை மாற்றி அறிவு தரும் நூல்களை வழங்கும் புதிய முறையை அறிமுகம் செய்தார்.

தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் பத்துத் தொகுதிகளிலும் தெ.பொ.மீ. அவர் களின் சாதனையைக் காணலாம். ஒவ் வோர் எழுத்துக் குறித்தும் அவர் எழுதிய குறிப்புகள் போற்றிப் பாராட்டத் தக்கவை.

1955-இல் அனைத்து அறிவி[illegible] சொல்லாக்கக் குழுவின் தலைவராக நியமிக்கப் பெற்றார். தெ.பொ.மீ. - Personality என்பதற்குரிய தமிழ்ச் சொல் என்ன என்னும் சிக்கல் எழுந்த போது, ''ஆளுமை'' என்னும் சொல்லை அறி முகம் செய்தார். அச்சொல் இன்று எளியோராலும் விரும்பிச் சொல்லப் படும் பெருமை பெற்றுள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.




# தமிழரசு

1-5-1993 ரூ.1

பூவையர் மகிழும் வண்ணம்




தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108


# இந்த இதழில்...


அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம் 1 கோடி ரூபாய் செலவில் அமையும் —மாண்புமிகு முதல்வர் உரை ... 2

சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க நெய்வேலியிலிருந்து இரயில் மூலம் தண்ணீர் ... 5

ஊர்த் தொழிலாளர் உழைப்பு (கவிதை) ... 7

காவல் துறையை நவீனப்படுத்திட 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் ... 9

விஞ்ஞான நகரம் உருவாக்குவோம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 11

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மாளிகை ... 15

மேன்மையான நாள் (கவிதை) ... 16

கல்வராயன் மலை ... 17

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ... 21

தொழுநோய் ஒழிப்பு - 'டேன்லப்' திட்டம் ... 23

ஆடல் காணீரோ! ... 24

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ... 27

மகளிர் நலம் பெற ... 29

'மக்கள் பணியே மகேசன் பணி' என்ற கடமை உணர்வோடு பணியாற்றுவீர்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 33

சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க கர்நாடக அரசுடன் கூட்டு முயற்சி ... 41

காது, மூக்கு, தொண்டை மருத்துவம் ... 44

அறிவியல் மேதை பெ.நா. அப்புஸ்வாமி... 47



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024
சித்திரைத் திங்கள் - 18
இதழ்:21
மலர்:23
1-5-1993


# மேதினம் பூத்தது!



தொழிலாளி -முதலாளி முறையே இருக்கக்கூடாது; வேலை செய்பவர்கள் பங்காளிகளாக அல்லாமல் கூலிக்காரர்களாக இருப்பது அடிமைத்தனம்.



ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக் கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள், சமதர்ம நோக்குடைய தலைவர்கள் . அந்த அரும் பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டு திட்டம் முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி,மே தினம்!



சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் எனும் மூலக் கருத்திற்கு முதலிடம் தாருங்கள்! நம்மைக் காட்டிலும் நலிந்துள்ள நமது உடன் பிறப்புக்களை முன்னேற்றக்கூடிய பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை அமைத்திடுங்கள்! புதுயுகத்தின் ஈட்டி முனைகளாக, முன்னோடிகளாக விளங்கிடுவீர்.

**நான்காம் அட்டை:**
மே தினத்தைக் குறிக்கும் உழைப்பாளர் சிலை.

# அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம் ஒரு கோடி ரூபாய் செலவில் அமையும்!



## அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை!

**மா**னுட இனத்தின் மகத்தான விடிவெள்ளியாகத் திகழ்ந்த, ஒரு மாமேதைக்கு மணிமண்டபம் அமைக்கும், இந்த மாபெரும் விழாவில் கலந்து கொள்வதில், மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அண்ணல் அம்பேத்கர், ஆயிரம் ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே மலரும் அதிசய மலர். ஒருவர் மாமேதையாக இருக்கலாம்; போராட்ட வீரராய் இருப்பதில்லை. போராட்ட வீரராய் இருக்கலாம்; பேரறிஞராய்த் திகழ்வதில்லை. அம்பேத்கர் அவர்கள், போராட்ட வீரராய்த் திகழ்ந்த மாமேதை!

அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தந்தை பெரியாரைப் போன்ற போராட்ட வீரர்!

பேரறிஞர் அண்ணாவைப் போன்ற மாமேதை!

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப் போன்ற, ஒரு மனிதாபிமானி!

- எனவே தான், அவரைப் போற்றுவதில் வேறு யாரையும் விட நாம் முன் நிற்கின்றோம்.

அவருக்குச் செய்யப்படும் சிறப்பு, அறிவுக்குச் செய்யப்படும் சிறப்பு மட்டுமல்ல; புரட்சிக்கும், போராட்ட உணர்வுக்கும் செய்யப்படுகின்ற சிறப்பு; ஜனநாயகத் தத்துவத்துக்குச் செய்யப்படுகின்ற சிறப்பு; பலகோடித் தாழ்த்தப்பட்ட சகோதர, சகோதரிகளுக்கு, நாம் செய்யும் சிறப்பு!

அந்தச் சிறப்பை, திராவிட இனத்தின் இலட்சிய விளக்கை, கைகளில் ஏந்தியிருக்கிற நான், இன்றைக்குச் செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.








மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 14.4.93 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நினைவு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டி, 365 ஆதிதிராவிட மக்களுக்கு ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்தியாவில் தோன்றிய அரசியல் இயக்கங்கள், சமூக சீர்திருத்த விடுதலை இயக்கங்கள், எத்தனையோ இருந்தாலும், திராவிடப் பாரம்பரியத்திற்கு மட்டுமே - திராவிட இயக்கங்களுக்கு மட்டுமே - மாமேதை அம்பேத்கர் அவர்களின் கொள்கை, நெருக்கமானது.

''1924-இல், தந்தை பெரியார் வைக்கத்தில் நடத்திய, தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் தான் என்னுள், பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது'' என்று, 1927-ஆம் ஆண்டிலேயே, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பிரகடனம் செய்தார். ''அம்பேத்கர் அவர்களுக்குச் சமமாக, இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது. இன்று மட்டுமல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே, இதை நான் கூறியிருக்கிறேன். 1930-ஆம் ஆண்டு முதலே எனக்கு அவரைத் தெரியும்'' என்று, தமிழகம் தந்த தன்மானச் சிங்கம், தந்தை பெரியார் அவர்கள், அறிவுலக மேதை அம்பேத்கர் அவர்களுக்கு, மகுடம் சூட்டி மகிழ்ந்தார்.

வைர வரிகளாக விளங்கும், இந்த இரு வாசகங்களும், அண்ணல் அம்பேத்கர் யார், அவர்க்கும் நமக்கும் உள்ள இலட்சியப் பிணைப்பு என்ன, எப்படிப்பட்டது என்பதைக் காலமெல்லாம் நிலைத்து நின்று கூறப் போகிற, கருத்துக் கருவூலங்களாகும்.

புரட்சி மனப்பாங்கைப் போற்றுவதில், சீர்திருத்த உணர்வுக்குச் சிறப்பளிப்பதில், தமிழகம் என்றைக்குமே முன்னணியில் தான் நிற்கின்றது. 1990-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 12-ஆம் நாள், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படம், நாடாளுமன்றத்தில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னரேயே, அதாவது 1980-ஆம் ஆண்டிலேயே, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்தை, நமது இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழ்நாடு சட்டப்பேரவையில் திறந்து வைத்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவருக்குத், தமிழகம் தன் மரியாதையைத், தக்க சமயங்களில் தவறாது வெளிப்படுத்தியே வந்திருக்கிறது. போற்றத் தக்க அந்தப் புகழ் வரலாற்றில்,

இன்னொரு புதிய அத்தியாயம், இன்று எழுதப் படுகிறது என்று கூறிக்கொள்வதில், நான் பெரு மகிழ்ச்சி கொள்கின்றேன். நான் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன். அத்தியாயம், இன் று எழுதப் படுகிறது என்று கூறிக்கொள்வதில், போற்றத் தக் க அந்தப் புகழ் வரலாற்றில், இன்னொரு புதிய சமயங்களில் தவறாது வெளிப்படுத்தியே வந்திருக் கிறது. தலைவருக்குத் , தமிழகம் தன் மரியாதை யைத், தக்க வைத்தார்கள்.

''அம்பேத்கர் இருந்த இடமும், தூரமும், மிக அதிகம். எனினும், இங்கு தமிழ்நாட்டில் பற்பல இடங்களில், அம்பேத்கர் மன்றம், அம்பேத்கர் படிப்பகம், அம்பேத்கர் படத் திறப்பு, என்று அவரது அந்தப் பெயரைச் சொல்லி, உவகை கொள்வதுண்டு நாம்'', என்று, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமையுடன் கூறினார்கள். அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியபடி, இன்று அவர் வழியில் நடை போடுகின்ற இந்த அரசு, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயர், என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில், அவரது பெயரைத் தாங்கும் போக்குவரத்துக் கழகம் ஒன்று அமைக்க, ஆணை பிறப்பித்துள்ளது.

அதே வரிசையில்தான், இன்று இந்த மணி மண்டபத்திற்குக் கால்கோள் விழா நடந்தேறிக் கொண்டு இருக்கிறது. அந்தத் திராவிடப் பாரம் பரியத்தில் வந்த, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு, என்றும் நிலைத்திருக்க, தமிழகத்தின் தலை நகரில், அண்ணல் அம்பேத்கர் மணிமண்ட பத்திற்கு இன்று அடிக்கல் நாட்டுகின்றேன். இம் மணிமண்டபத்திற்காக 5 ஏக்கர் நிலம் கொடுக்கப் பட்டுள்ளது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில், கட்டப்பட உள்ள இந்த மணிமண்டபத் திற்கு, 50 இலட்சம் ரூபாய் ஏற்கெனவே கொடுக் கப்பட்டுள்ளது.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் எழுத்தோவி யங்களைக் கொண்ட ஒரு நூலகமும், ஒரு நவீன மாநாட்டுக் கூடமும், அழகுற அமைக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு, மிகக் குறுகிய காலத்தில் கட்டி முடிக்கப்படும்.

தெற்கே தந்தை பெரியாரும், வடக்கே டாக்டர் அம்பேத்கரும், தோன்றியிராவிட்டால், தாழ்த்தப் பட்ட மக்களுக்கு நமது சமுதாயத்தில், மீட்சி என் பதே கிடைத்திருக்காது. அப்படிப்பட்ட மாபெரும் தலைவரான, விடுதலை வீரரான, சமூகப் போராட்ட சீலரான, இந்திய அரசில் சட்டத்தின் சிற்பியான, இந்திய அரசின் முதல் சட்ட அமைச் சரான, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் புகழ், என்றென்றும் வாழ்க, வளர்க, என்று வாழ்த்தி, அவர் புகழைப் போற்றும் வகையில், அவர் பெயரால், காலகாலத்திற்கும் நின்று நிலைக்கப் போகும், இந்த மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டுவதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்து விடைபெறுகிறேன்.

**—14.4.1993 அன்று, சென்னையில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு நினைவு மண்டபம் அடிக்கல் நாட்டு விழாவில ஆற்றிய உரை.**

### தாயின் பெயரின் முதலெழுத்தையும் மாணவர்கள் பெயரில் சேர்க்க அனுமதி

**மா**ணவர்கள் பள்ளியில் சேரும் போது, தாயின் பெயரில் உள்ள முதலெழுத்தையும் அவர்கள் பெய ருக்கு முன்னால் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படும்.

மாணவர்களின் நலனில் தாய் தந்தை இருவருமே பொறுப்பாக இருப்பதால் தாயினுடைய பெயரி லுள்ள முதல் எழுத்தும் மாணவரின் பெயருக்கு முன்னால் இடம் பெறு வது தகுதியாக இருக்கும். எனவே, மாணவர்கள் முதல் வகுப்பில் சேரும்போது விருப்பம் தெரிவித் தால் அவர்கள் பெயருக்கு முன் னால் தாய் பெயரின் முதலெழுத்தை 'இனிஷியலாக'ச் சேர்க்க வகை செய்யப்படும்.

மேற்கண்ட தகவலை, மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார் (1.4.'93).

### தமிழ்நாட்டில் புதிய போக்குவரத்துக் கழகங்கள்

**த**மிழ்நாட்டில் புதிதாக மூன்று போக்குவரத்துக் கழகங்கள் உருவா கின்றன.

★ திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங் களுக்குச் செல்லும் பேருந்துகளைக் கொண்டு 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்' என்னும் பெயரில் புதிதாக போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப் படும்.

★ கவிக்குயில் பாரதியாருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சேரன் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மலைப் பிரதேசத்துக்குச் செல்லும் பேருந்து களைக் கொண்டு ஊட்டியில், 'மகாகவி பாரதியார் போக்கு வரத்துக் கழகம்' எனும் புதிய போக்குவரத்துக் கழகம் உருவாக் கப்படும்.

★ பல்லவன் போக்குவரத்துக் கழகத் தைப் பிரித்து 'டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகமும் உருவாக்கப்படும்.

- போக்குவரத்துத்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத் துக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் சட்டப் பேரவையில் பதிலளித்துப் பேசுகை யில் அறிவித்தார். (6.4.1993).




## சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க நெய்வேலியிலிருந்து இரயில் மூலம் தண்ணீர்: முதல்வர் பெற்றுக் கொண்டார்

சென்னை நகரக் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க ஈரோடு மற்றும் நெய்வேலி நகரங் களிலிருந்து இரயில் மூலம் தண்ணீர் கொண்டுவர அரசு முடிவு செய்தது.

இந்தத் திட்டத்தின்கீழ் நெய்வேலியிலிருந்து முதன்முறையாகச் சென்னைக்கு இரயில் மூலம் கொண்டுவரப்பட்ட தண்ணீரை, தமிழ்ப் புத் தாண்டுத் தினமான 14.4.'93 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

ஒன்பது வேகன்களில் சென்னை எழும்பூர் வந்தடைந்த குடிநீரை, எழும்பூரில் நடைப்பெற்ற எளிமையான விழாவில் பச்சை விளக்கு காண் பித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேற் றார். பின்னர் இரயிலில் ஒரு வேகனில் இருந்த குழாயைத் திறந்து, 9 பெண்களுக்குக் குடங்களில் தண்ணீர் விநியோகம் செய்து குடிநீர்த் திட்டத் தைத் தொடங்கி வைத்தார் முதல்வர் அவர்கள்.

நாள்தோறும் 18 இலட்சம் லிட்டர் தண்ணீர் நெய்வேலியிலிருந்து சென்னைக்கு இரயில் மூலம் கொண்டு வரப்படும். எழும்பூருக்குக் கொண்டு வரப்படும், இந்தத் தண்ணீர் பின்னர் லாரிகள் மூலம் கீழ்ப்பாக்கத்திலுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டு பின்னர்,



# தொலைக்காட்சி நிலையம்

**(1) சென்னைத் தொலைக்காட்சி-2வது அலை வரிசைக்குப் புதிய கட்டடம்:**

தற்போது சென்னை தொலைக்காட்சி நிலையத்திலுள்ள பழைய கட்டடத்திலிருந்து 2-வது அலை வரிசை நிகழ்ச்சிகள் அஞ்சல் செய்யப்பட்டு வருகின்றன.

இரண்டாவது அலைவரிசைக்கென பழைய கட்டடத்தின் அருகாமையிலேயே புதிய கட்டடம் உருவாகி வருகிறது.

இவ்வருட இறுதிக்குள் நவீன காமிராக்கள் மற்றும் இதர சாதனங்கள் இக்கட்டடத்தில் வைக்கப்படும்.

**(2) இராமேஸ்வரத்தில் உயர் சக்தி தொலைக் காட்சி அஞ்சல் நிலையம்:**

இராமேஸ்வரத்தில் உயர்சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்திற்கான 300 மீட்டர் உயரமான கோபுரம் கட்டும் பணி துவங்கப்பட்டு விட்டது. இந்த உயர் சக்தி அஞ்சல் நிலையத்திற்குத் தேவையான சாதனங்கள் தயாராக உள்ளன.

**(3) கும்பகோணத்தில் உயர் சக்தி அஞ்சல் நிலையம்:**

எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கும்பகோணத்தில் ஒரு உயர் சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் நிறுவப்படவுள்ளது. இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**(4) குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள்:**

1992-93-ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் கீழ்க் கண்ட இடங்களில் குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.-

1. ராஜபாளையம்
2. ஆர்க்காடு
3. குடியாத்தம்
4. பட்டுக்கோட்டை

மேலும், உடுமலைப்பேட்டையில் ஒரு குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளது.

**வானொலி-நிலையத் திட்டங்கள்**

**1. தூத்துக்குடி:** தூத்துக்குடியில் ஒரு 2 × 100 கிலோ வாட் மத்திய அலைவரிசை (Medium wave) டிரான்ஸ்மிட்டர் மற்றும் டைப் 1(ஆர்) அஞ்சல் திட்டம் முடியும் தருவாயில் உள்ளது.

**2. கிண்டி:** சென்னை, கிண்டியில் நேஷனல் சேனல் ஸ்டுடியோ அமைப்பதற்கான வரைவுகள் இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளன. இத் திட்டம் ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது.

**3. கொடைக்கானல்** ஒரு 2 × 5 கி.வாட் பண்பலைவரிசை அஞ்சல் நிலையம், கொடைக்கானலில் உள்ள தொலைக்காட்சி அஞ்சல் நிலைய வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. கொடைக்கானலில் அகில இந்திய வானொலி பண்பலை நிலையம் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டு, கட்டப் பட்டு வருகிறது. இந்தப் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் முடிந்துவிடும்.

**4. உதகமண்டலம்:** மத்திய அலைவரிசை 1 கிலோ வாட் அஞ்சல் நிலையம் மற்றும் எம்பி ஸ்டுடியோ திட்டங்கள் ஏற்கனவே துவக்கப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது. இது இன்னும் ஆறு மாத காலத்திற்குள் செயல்படுத்தப்படும்.

(செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல்-கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து)

அங்கிருந்து குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

விழாவிற்கு வந்திருந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் ஆகியோர் வரவேற்றனர்.

நெய்வேலியிலிருந்து சென்னைக்கு இந்த இரயில் வந்துசேர, ஆறரை மணி நேரம் ஆகிறது.

இதைப்போல ஈரோட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட தண்ணீர் வில்லிவாக்கத்தில் பெறப்பட்டு அங்கிருந்து லாரிகள் மூலம் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் திரு. க. பொன்னுசாமி, நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன் இ.ஆ.ப. தென்னக இரயில்வே கூடுதல் பொது மேலாளர் திரு. சி.எஸ். கண்ணன், சென்னை குடிநீர் வாரிய அலுவலர்கள், சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# ஊர்த் தொழிலாளர் உழைப்பு!

## புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார்

சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே!-உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பினில்
உதித்தது மெய் அல்லவோ?

நீர்களல் நல்ல நிலம் வெளிகாற்றென
நின்ற இயற்கைகளே!-உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ? - பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

TNPSC

விளம்பர எண். 17/93

தமிழ்நாடு தொழில் சார்நிலைப் பணியில், இளநிலை வேதியியலர் (Junior Chemist) பதவியில் இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 24.5.1993 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன.

ஆதிதிராவிட வகுப்பினர் .. .1
பகிரங்கப் போட்டி .. 1

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவர்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூ.1,640-2,900

**வயது:** 1.7.1993 அன்றுள்ளபடி 30 வயதிற்குக் குறைவாக.

ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோர் பட்டம் பெற்றிருந்தாலோ அல்லது பி.டி.சி./பி.யு.சி./மேல்நிலை வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் (Diploma) பெற்றிருந்தாலோ அவர்களுக்கு வயது வரம்பு இல்லை. எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற பின்பு பட்டயம் பெற்றிருக்கும் ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினருக்கு வயது வரம்பு ஐந்து ஆண்டுகள் உயர்த்தப்படும்.

(மேலும் சில சலுகைகள் கீழே அறிவிக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (6.4.1993 அன்றுள்ளபடி): அடியிற்குறிப்பிட்டுள்ளவை அல்லது அவற்றிற்கு இணையானவை:

வேதியியலில் ஏதேனும் ஒரு பிரிவில், முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் முதுநிலைப் பட்டம்.

அல்லது

இன்ஸ்ட்டிடியூஷன் ஆஃப் கெமிஸ்ட்ஸ் (இந்தியா), தேர்வு மூலம் வழங்கிய அசோசியேட்ஷிப் டிப்ளமா.

ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப் பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு விழங்கக்கூடிய 1.4.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணா சாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக் கூடிய 1.4.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-600 006-இல் செலுத்தத்தக்க ரூ.10-க்கான 'கேட்புக் காசோலை' (Demand Draft) -யுடனும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின், அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/613/MS/93





## காவல்துறையை நவீனப்படுத்திட

## 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்!

(சட்டமன்றத்தில் காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதங்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 22.4.'93 அன்று அளித்த பதிலுரையிலிருந்து சில பகுதிகள்...)

**குழு பாதுகாப்புத் திட்டம்:**

• காவல்துறையில் உள்ள அனைவரையும் ஒரு ஒட்டு மொத்த குழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் (Group Insurance Scheme) கொண்டு வந்து, அவர்களுக்கும் குறிப்பாக அவர்தம் குடும்பங்களுக்கும் ஒரு நிலையான பாதுகாப்பை அளிக்க இந்த அரசு முன் வந்திருக்கிறது. அண்டை மாநிலமான கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் குழுப் பாதுகாப்புத் திட்டம் உள்ளது. அவற்றை எல்லாம் பரிசீலித்து, அவற்றைவிட அதிகப் பயனுள்ள வகையில் ஒரு பாதுகாப்புத் (Insurance) திட்டத்தைத் தீட்டியுள்ளோம். அதன்படி, காவல் துறையில் உள்ள அனைவரும் பணிபுரியும் பொழுது இறந்தால் (Death in duty) காவலர் முதல் கூடுதல் கண்காணிப்பாளர் நிலை வரை உள்ள அலுவலர்களுக்கு 1 இலட்சம் ரூபாயும், கூடுதல் கண்காணிப்பாளர் முதல் காவல்துறைத் தலைவர் நிலை வரை உள்ள அலுவலர்களுக்கு 5 இலட்சம் ரூபாயும், கூடுதல் காவல்துறை இயக்குநர் நிலை அலுவலர்களுக்கு 7.5 இலட்சம் ரூபாயும், காவல்துறை இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு 10 இலட்சம் ரூபாயும் வழங்கப்படும்.

• புதிய குழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் (Unnamed Group Insurance Scheme) சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்கவிருக்கும் தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படையினர் (Tamil Nadu Special Task Force) மற்றும் மிக முக்கியப் பிரமுகர்களைப் (V.V.I.P.) பாதுகாக்கும் பணியில் இருக்கும் தனிப் பாதுகாப்புக் குழுவினர் (S.S.C.) ஆகியோர் கடமையாற்றும்போது இறந்தாலோ அல்லது நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டாலோ அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். எந்த அதிகாரி இறந்தாலும் 10 இலட்சம் வழங்கப்படும்.

**எழில்மிக்க பல மாடிக் கட்டடம்:**

• தற்சமயம், சென்னையில் இயங்கிவரும் காவல்துறை இயக்குநர் அலுவலகத்தை அகற்றிவிட்டு, அந்த வளாகத்தில் ஒரு எழில்மிக்க பல மாடிக் கட்டடத்தை எழுப்பி, சென்னை மாநகரத்தில் சிதறிக் கிடக்கும் பல்வேறு காவல்துறை அலுவலகங்களையும் ஒரே கட்டடத்தில் கொண்டு வர இந்த அரசு முயற்சி எடுக்கும். அதற்கான திட்டத்தை விரைவில் தயாரிக்கும்.

**குழந்தைகள் கற்றுத் தேற:**

• A Centre for Excellence என்று சொல்லக் கூடிய கூர்மதி மையம் ஒன்றை சென்னையில் நிறுவி, காவல் துறையினரின் குழந்தைகள் கற்றுத் தேற வகை செய்யப்படும். இதில் விடுதி வசதியும் செய்து தரப்படும். இந்தப் பள்ளியில் சின்னஞ்சிறு சிசுக்களுக்கான L.K.G. முதல் பள்ளி இறுதி வகுப்பு வரை தொடங்கப்படும்.

**விளையாட்டு வீரர்களுக்கு வாய்ப்பு:**

• காவல் துறையினரைத் தேர்ந்தெடுக்கும் போது, வாட்டசாட்டமான, திறம் சான்ற விளையாட்டு வீரர்களைக் கவரும் வகையில், இனிவரும் காவல் துறைத் தேர்வுகளில் ஒவ்வொரு முறையும் பத்து சதவிகித இடம் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**மானிய விலையில் உணவுப் பொருள் வழங்கிட...**

• இப்போது காவல் துறையினருக்குப் பொது விநியோக விலையில் 50 சதவிகித மானியத்தில் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இதே பயன், தீயணைப்புத் துறை மற்றும் சிறைத் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் விரிவாக்கம் செய்யப்படும். காவல் துறைப் பணியாளர்களைப் போன்று 50 சதவிகித மானிய விலையில் தீயணைப்புத் துறையினர் மற்றும் சிறைத் துறையினருக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்படும்.

**காவல்துறையை நவீனப்படுத்திட...**

• மைய அரசின் உதவி கிடைக்கும் வரை காத்திராது, நம் மாநில நிதியைக் கொண்டே முடிந்தவரை காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக நடப்பு ஆண்டில், 10 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்ற மிகப் பெரிய செய்தியை இந்நியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- நல்வாழ்த்துக்களுடன் -

பண்ணுருட்டி நகரம்
உரம் மற்றும்
பூச்சி மருந்து
வியாபாரிகள் சங்கம்

பண்ணுருட்டி
தென்னார்க்காடு மாவட்டம்





# விஞ்ஞான நகரம் உருவாக்குவோம்!

### எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி ஆய்வு மையத் தொடக்க விழாவில்

## மாண்புமிகு முதல்வர் உரை

**விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மையம் சென்னை அடையாறு தரமணியில் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அறக்கட்டளை நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சி மையத்தின் தொடக்க விழா 14.4.'93 அன்று நடந்தது. விழாவுக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமை வகித்தார்.**

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி இந்த மையத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:**

நமது நாட்டின் கிராமப்புற வளர்ச்சியைக் குறிக்கும் வகையில் கவர்ச்சிகரமான புதிய வசதிகள் தொடங்கப்படும் இந்த முக்கியமான நிகழ்ச்சியில் பங்கேற்க என்னை அழைத்தமைக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று தமிழ்ப் புத்தாண்டு நாள். இந்த மகிழ்ச்சிகரமான விழா இன்று நடைபெறுவது மிகவும் பொருத்தமே. புத்தாண்டு பிறப்பது, கொண்டாடுவதற்குரிய ஒரு சந்தர்ப்பமாக மட்டுமல்லாது, மனித வாழ்க்கையில் இயற்கையின் முக்கியத்துவத்தின் சின்னமாக விளங்குகிறது. ஏனெனில் பெரும்பாலான பொருளாதார, சமூக நடவடிக்கைகளைத் தொடங்கி வைக்கிறது. அவை கிராம மக்களின் வாழ்க்கையோடும் எதிர்காலத்தோடும் பிரிக்க இயலாத வகையில் பின்னிப் பிணைந்துள்ளன. மனித வாழ்க்கையுடன் இயற்கை எவ்வளவு தூரம் ஒன்றியுள்ளது என்பதையும், வாழ்வதற்கு, இயற்கையுடன் இணைந்து வாழ்வது ஒன்றே வழி என்பதையும் இங்கே உட்கார்ந்து கொண்டு, உணர்வது என்பது கடினமே. ஆனால் இயற்கையின் கீதத்தைப் புரிந்துகொண்டு ரசிப்பது, கிராம மக்களின் வாழ்க்கை முறையாகவே விளங்குகிறது. எனவே, இம்மையத்தில் உள்ள வசதிகளை இந்நன்னாளில் மக்களுக்கு அர்ப்பணிப்பது மகிவும் பொருத்தமேயாகும்.

கிராமப்புறங்களிலிருந்தே பெரும்பாலும் வரும் ஏழை எளிய மக்களின் உரிமைக்காகப் பாடுபட்ட டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது இந்த அர்ப்பணிப்பு விழாவும் சேர்ந்து வருகிறது. இன்றைய விழா மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மிகவும் நேசித்த ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காக இந்த ஆராய்ச்சி மையத்தில் உள்ள வசதிகள் பயன்படுத்தப்படும்.

தொடர்ந்து நியாயமான முன்னேற்றம் காண்பதென்பது மனித சமுதாயத்திற்கு விடப்பட்ட பெரிய சவாலாக உள்ளது. கடந்த பத்தாண்டுக் காலத்தில் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருந்தாலும் உலகில் 100 கோடிக்கும் மேலான மக்கள் இன்



எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தில் அமைக்கப் பட்டுள்ள பொருட்காட்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுற்றிப் பார்த்தார்.

னும் வறுமையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, நல்ல வாழ்க்கைக்குத் தேவையான வருமானம் இல்லாமல் வாடிக்கொண்டுள்ளனர். இந்தியாவில் உணவு உற்பத்தி பெருக்குதல், நீர் வளத்தை மேம்படுத்துதல், திருப்திகரமான வாழ்க்கைத் தரத்தைத் தேவையான வசதிகளை அனைவரும் பெறுவதை உறுதி செய்தல் ஆகிய பிரச்சினைகள் மகத்தானவை. நாம் கடக்க வேண்டிய தூரம் நெடியது. காலமோ சிறியது. நேரம் ஓடிக் கொண்டே உள்ளது. எனவே அதிக உணவு மற்றும் இதரப் பொருட்களைப் பெருக்குவதற்குத் தைரியமான, புதிய ஆராய்ச்சி யுக்திகளையும், பொதுக் கொள்கைகளையும் வகுப்பதைத் தவிர வேறுவழியில்லை. இவை கிராமப் புறங்களில் பல்வேறு விதமான வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கும்.

எனவே எதிர்வரும் பல ஆண்டுகளுக்கு வேளாண்மை, கிராமப்புற மேம்பாடு, விவசாயிகளின் பிரச்சினைகள், பண்ணைப் பொருட்கள், வேளாண் தொழில்நுட்பங்கள், விவசாயத்தில் வேலைவாய்ப்பு, விவசாயிகள் சமூக பொருளாதார முன்னேற்றங்கள் ஆகியவற்றில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, சமுதாயத்தில் உழவர்களின் . முக்கியப் பங்கைப் பற்றித் திருவள்ளுவர்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

எனக் கூறினார்.

விவசாயத்தை நவீனப்படுத்த வேண்டும் என்ற நம் ஆர்வத்தில், சுற்றுப்புறச் சூழலிலும், தட்பவெட்ப நிலைகளிலும் ஏற்பட்ட பாதிப்புகளை நாம் கவனிக்கத் தவறிவிட்டோம். நாம் பாதுகாத்துத் தொடர்ந்து பேண வேண்டிய ஆதாரங்களுக்கு நமது முயற்சிகளே, சரிசெய்யப் பட முடியாத பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தோன்றுகிறது.

மேலும், கிராமப்புறத்து மக்கள் நிலத்தையும் மற்ற வள ஆதாரங்களையும் எத்தகைய செயல்முறை ஞானத்தோடும், நிதானத்தோடும், பயன்படுத்தினார்களோ, அவற்றை இழிவுபடுத்தாமல், மேலும் மேலும் வளப்படுத்திட, எந்த முயற்சிகளை மேற்கொண்டார்களோ, அவற்றோடு நமக்கிருந்த தொடர்பை நாம் இழந்துவிட்டோம். இந்த அறிவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத் தேவையைப் பொறுத்தே தொடர்ச்சியான முன்னேற்றம் சாத்தியமாகும்.

தொடர்ச்சியான வளர்ச்சி குறித்து 1987-இல் சுற்றுச் சூழல், வளர்ச்சிக்கான பன்னாட்டுக் குழு (World Commission on Environment and Development) பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது: "எதிர்காலச் சந்ததியரின் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளாமல் நிகழ்காலச் சந்ததியரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே தொடர்ச்சியான வளர்ச்சியாகும்."

இந்தத் தலைமுறையின் ஏழைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்ச்சியான முன்னேற்றத்தின் இன்றியமையாத ஓர் அம்சமாகும். அது இனிவரும் தலைமுறைகளின் தேவைகளையும் கவனத்தில் கொள்ளும் இந்தச் சூழலில் தான் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய கருத்தில் உருவான, 'வேளாண்மை மற்றும் ஊரக தொடர் வளர்ச்சிக்கான ஆராய்ச்சி மையத்தின்' குறிக்கோள்கள், விளைவுகள், திட்டங்கள், ஆகியவற்றைப் பொறுத்த வரையில் நாம் நிறைய எதிர்பார்க்க வேண்டிய உள்ளன.

இச்சந்தர்ப்பத்தில் நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலியாக இருக்கிறோம் என்



பதைக் குறிப்பிட்டாக வேண்டும். டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் சென்னையிலேயே தங்கி, இம்மையத்தை வளர்த்து நம் மாநிலத்தின் முன்னேற்றத்திற்காக, தமது தொண்டை அர்ப்பணித்திருக்கிறார். அவர் நமக்கு வழிகாட்ட வேண்டுமென விரும்புகிறோம். நம் மாநிலத்தின் மேம்பாட்டிற்கான தொடர் வேளாண்மைத் திட்டங்களை, திட்டமிட்டு நிறைவேற்றுகின்ற முழுப் பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுக்க விரும்புகிறேன்.

2000-வது ஆண்டில் எல்லோர்க்கும் உணவு, நலவாழ்வு, வேலைவாய்ப்பு, என்னும் தத்துவத்திற்குத் தமிழ்நாடு அரசு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது.

ஆரம்பச் சுகாதாரப் பாதுகாப்பு, ஆரம்பக் கல்வி, ஆகியவற்றிற்கான மிகப்பெரும் திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். அடுத்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் எழுத்தறிவு இன்மையை முற்றிலும் அகற்ற நாங்கள் விரும்புகிறோம். 1998-ஆம் ஆண்டு அளவில் குழந்தை இறப்பு விகிதத்தை 1000-க்கு 40 என்னும் அளவுக்குக் குறைத்துவிட உறுதிபூண்டிருக்கிறோம். பெண் சிசுக் கொலை, குழந்தைத் தொழிலாளர் முறை, தீண்டாமை, போன்ற சமூகத் தீமைகளை ஒழித்துவிடவும் உறுதி பூண்டிருக்கிறோம். இந்த மாபெரும் பணிகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்றால் கிராமப்புற ஆண்கள் பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். நகர்ப்புறங்களில் சேரிகள் வளர்வதில் கிராம வேலைவாய்ப்பின்மை பிரதிபலிக்கிறது. கிராமப்புற ஏழ்மையும் நகர்ப்புற ஏழ்மையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. கிராமப்புற வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதன் மூலமே நகர்ப்புறச் சேரிகளின் பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும்.

தமிழ்நாட்டில் இயற்கை வளங்கள் குறைவே. இந்தியாவின் மற்ற பகுதிகளை விட தமிழ்நாட்டில்தான் தனிநபர்க்குக் கிடைக்கும் நிலம், நீர், குறைவாக இருக்கிறது. தீவிரக் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை நாம் எடுத்திருந்த போதும், 1991- இல் 556 இலட்சமாக இருந்த நம் மக்கள்தொகை 2000-ஆம் ஆண்டில் 650 இலட்சமாக உயரலாம். ஆக, இனி வருங்காலத்தில், குறைவான நிலத்தில் குறைவான நீரைக் கொண்டு நாம் அதிக உணவையும், அதிக ஆடையையும், அதிக எரிபொருட்களையும்,



★ தீண்டாமையைத் தாக்குவது உயர்வு தாழ்வு வேற்றுமையைத் தாக்குவதாகும். தீண்டாமை ஒழித்தால், அதே விநாடியில் சாதிமுறை பரிசுத்தமாகி விடும்.

அதிக வேளாண் பொருட்களையும் உற்பத்தி செய்யவேண்டியிருக்கும். இந்தச் சவாலை, உயர்தரமான, சமுதாயத் தேவைகளுக்குத் தொடர்புடைய விஞ்ஞானத்தின் மூலமே நாம் சமாளிக்க முடியும்.

இம்மையம் விஞ்ஞானத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள நல்லிணக்கக் கூட்டின் (Symbiosis) அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆராய்ச்சி மையத்தின் பணிகளின் மூன்று அம்சங்கள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.

முதலாவதாக, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், கிராமப் பெண்களின் நேரத்திற்குப் பொருளாதார மதிப்பைக் கூட்டுவதிலும் இம்மையம் கவனம் செலுத்துவது. நிலமற்ற தொழிலாளர்களின் குடும்பங்கள் செய்யும் பணிக்குப் பொருளாதார மதிப்பு கூடும் வரை அவர்கள் வாழ்க்கைத் தரம் முன்னேற முடியாது. புதிய திறமைகளை வளர்ப்பதிலும், வேலைவாய்ப்புகளுக்கும், வேலை தேடுகின்ற தகுதிகளுக்கு மிடையே உள்ள பாலமைப்பதிலும் குறியாக இருப்பது மிகவும் பொருத்தமேயாகும். இந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட 'பயோ வில்லேஜ்' (the concept of Bio-village) திட்டம் நமது தேவைகளுக்கு மிகவும் தொடர்புடையதாக இருக்கும்.

இரண்டாவதாக, தமிழ்நாட்டில் அபாயத்திற்கு உள்ளாகியுள்ள மலைவாழ் மக்களும், கிராம மக்களும் உருவாக்கும் மருந்துச் செடி உட்பட தாவர இனங்களைக் காப்பாற்ற இம்மையம் முற்போக்கான திட்டங்களைத் தீட்டியுள்ளது ஐக்கிய நாடுகள் சபை 1993-ஆம் ஆண்டை 'உலகச் சொந்த நாட்டு மக்கள் ஆண்டாக' முற்போக்கான திட்டங்களை (World Indigenous People) அறிவித்துள்ளது. இவ்வாண்டின் மையக் கருத்து 'சொந்த நாட்டு மக்கள் ஒரு புதிய கூட்டு' இந்த மையம் நடத்திவரும் Tribal Area Bio-diversity Network', நவீன விஞ்ஞானத்திற்கும், பண்டைய அறிவாற்றலுக்கும் உள்ள பயன்மிகு கூட்டாக விளங்குகிறது. வடிவமைக்கப்பட்ட கருத்துக்களை வார்த்தைக்கு வார்த்தை செயல்படுத்துவதைவிட, அதிக எதார்த்தமான அளவில் தொடர் வளர்ச்சிக்கான நமது திட்டங்களை வடிவமைக்கவே இந்தக் கூட்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட வேளாண் சுற்றுச் சூழல் பகுப்பின் அடிப்படையில் இம்மையத்தின் தோட்டம் உருவாக்கப்பட்டு வருவது அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்ட ஐவகை நிலங்கள் வேளாண்மை ஆராய்ச்சிக்கும் பயிற்சித் திட்டங்களுக்கும் அருமையான தளம் அமைத்துத் தருகின்றன.

இறுதியாக, கடற்கரை ஆய்வுக்கு மிகப் பெரும் முக்கியத்துவம் தரப்பட்டிருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில், 1000 கி.மீ. தொலைவுக்கு மேலாக நீண்டதொரு கடற்கரை தமிழகத்திற்கு இயற்கையின் கொடையாகக் கிடைத்திருக்கிறது. தொழில் மயமான நாடுகளில் கடற்கரைப் பகுதிகள் வளமான பகுதிகளாக விளங்கிக் கொண்டிருக்க, நம் நாட்டிலோ அவை பெரும்பாலும் வறுமையில் மூழ்கிப் போயிருக்கின்றன. ஐரோப்பாவில் மத்திய தரைக் கடல் கடற்கரைப் பகுதி உலகச் சுற்றுலாப் பயணிகளில் $\frac{1}{3}$ பங்கினரைக் கவர்ந்திருக்கிறது.

மீனளம், உவர்நீர் உயிரின வளர்ப்பு, கடல் சார்ந்த நிலக் காடு வளர்ப்பு, வேளாண் - காடு வளர்ப்பு, சுற்றுலா ஆகிய அனைத்திலும் ஒரே நேரத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் நெய்தல் நிலப்பகுதிகளில் வாழுகின்ற சமூகங்களின் வளத்தை வளர்க்கலாம். அதே சமயத்தில் மாங்கரோவ் காடுகளையும் மற்ற நெய்தல் நிலத் தாவரங்களையும், பாதுகாப்பதன் மூலம் கடல் சார்ந்த பகுதிகளில் ஏற்படும் புயல் துன்பங்களைக் குறைக்க முடியும். பழங்காலத் தமிழருக்கு மாங்கரோவ் காடுகளின் முக்கியத்துவம் தெரிந்திருந்தது. உதாரணமாக, சிதம்பரம் நடராசர் திருக்கோயிலில் ஒரு மாங்கரோவ் மரத்தின் அழகிய சிற்பம் வடிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு என்றும் ஏற்பட்டிராத அளவிற்குத் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது

ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட கடற்கரைப் பகுதி வளர்ச்சிக்கான திட்டம் உருவாக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

அத்தகையதொரு திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று நான் இன்னும் நம்புகிறேன். கடற்கரைப் பகுதியில் வாழும் மக்களது வாழ்க்கைப் பாதுகாப்புக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் அது வலிமையளிக்கும். நான் ஏற்கெனவே கடற்கரைப் பகுதி ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சிக்கான ஒரு திட்டத்தை வகுக்குமாறு தமிழ்நாடு திட்டக் குழுவைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அது, மீனளம், காடு வ'ளர்ப்பு, கடற்கரைப் பகுதி தொழில் வளர்ச்சி (குறிப்பாக ஏற்றுமதி) மற்றும் சுற்றுலா ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியாக இருக்கும். காற்று மற்றும் சூரிய சக்தி ஆகியவற்றால், கடல் நீரை நன்னீராக்குதல், வேளாண்மை, தொழில்கள், ஆகியவற்றை மேற்கொள்ள கடற்கரைப் பகுதிகள் நல்ல வாய்ப்பளிக்கின்றன. புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி வடிவங்களைப் பயன்படுத்துவதில் உலகிற்கே ஒரு முன்னோடியாகத் திகழவேண்டும் என்று தமிழகம் விரும்புகிறது. மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி வள அமைச்சகமும், அறிவியல் தொழில்துறை ஆராய்ச்சித் துறையும் சேர்ந்து இந்த ஆய்வு மையத்தில் தன்னிகரற்ற சூரியசக்தி உற்பத்திக் கலன் ஒன்றைப் படைத்திருக்கின்றன என்பது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். புதிய சூரியசக்தி உற்பத்திக் கலனை வடிவமைப்பதில் வெற்றிகண்ட மத்திய மின்னணுத் துறையை நான் பாராட்டுகிறேன்.

டாக்டர் சுவாமிநாதன் அவர்களின் அறிவுக் குழந்தையாகத் திகழும் இந்த மையத்திற்குத் தமிழ்நாடு அரசின் நன்கொடையாக ரூ.5 இலட்சத்தை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். கூடுதலாக 1.5 ஏக்கர் நிலத்தை ஒதுக்கித் தரவேண்டுமென டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் கேட்டுக் கொண்டார். தமிழ்நாடு அரசு அவருக்குக் கூடுதலாக 2.5 ஏக்கர் நிலத்தை அளிக்கும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உன்னத நோக்கத்திற்காகத் தேவையான நிலத்தையும், இன்னும் கூடுதல்ாக அவருக்குத் தேவைப்பட்டாலும் தமிழ்நாடு அரசு வழங்கும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வளாகத்தை ஒரு விஞ்ஞான நகரமாக (Science City) உருவாக்க வேண்டுமென ஆலோசனை நல்கிய திரு. சி. சுப்ரமணியம் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மகிழ்ச்சியுடன் இந்த ஆலோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். முன்னணி விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்களுடன் உதவியுடன், இப்பகுதியை உலகப் புகழ்பெற்றதொரு விஞ்ஞான நகரமாக உருவாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் என நான் உறுதியளிக்கிறேன்.

தமிழ்நாடு விரைவாகச் செயல்படுவதாக திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறினார். விரைவாகவும், நல்ல தரத்துட'னும் செயல்படுவதில் அரசு நம்பிக்கை வைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகத் தரத்துடன் ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கினை ஒரு சாதனையாக, ஏழே மாதத்தில் நாங்கள் முடித்தோம்.

மேலும், என் உறுதிமொழிகள் காகிதத்தில் மட்டும் நிற்காமல், செயலிலும் நிறைவேற்றப்படும் என உறுதி கூறுகிறேன்.

டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் உதவியுடனும் வழிகாட்டுதலுடனும் தமிழ்நாடு, இம்மாநிலத்தின் கடலோரப் பகுதியை ஒட்டி கடலோரப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை விரைவில் தொடங்கும் . என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பகுதியில் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் நிபுணத்துவத்தை முழுமையாக நாங்கள் பயன்படுத்திக் கொள்வோம்.

ஊரக மறுமலர்ச்சிகுப் பெருந்துணையாகும் பல புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளுக்கு இம்மையம் ஒரு நிலைக்கலனாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இயற்கையையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதிலும் கிராமப்புற வாழ்வை மேம்படுத்தும் வழிமுறைகளைப் புதிதாகக் கண்டுபிடிப்பதிலும் வேட்கையோடு திகழும் இம்மையத்தின் விஞ்ஞானிகளும் பணியாளர்களும் மென்மேலும் வெற்றிபெற வாழ்த்துகிறேன். பல நாடுகளிலிருந்தும் தமிழகம் வந்து நமது விஞ்ஞானிகளோடு கருத்துப் பரிமாற்றம், அனுபவப் பரிமாற்றம் செய்ய வருகை புரிந்திருக்கும் டாக்டர் சாங் ஜியாங், பேராசிரியர் ஹம்மி, ஜோன் ஹோம்ஸ் ஆகியவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்திலும் இந்தியாவிலும் நீங்கள் தங்கியிருக்கும் காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதனுடைய தலைவிதி இயற்கையோடு இணைந்திருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே நமது பழம்பெரும் முனிவர்கள் இதை உணர்ந்திருந்தார்கள். நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் என்னும் ஐந்தையும் பரம்பொருளின் வடிவமாகவே அவர்கள் பாவித்து வியப்போடும் அச்சத்தோடும் மரியாதையோடும் வணங்கி வளமான வாழ்வை அவற்றின் நன்கொடையாக அவர்களால் அறுவடை செய்ய முடிந்தது.

அதர்வ வேதத்தில் முனிவர் பிருத்வி சூக்தத்தில் பின்வருமாறு பாடுகிறார்:

எதன்மீது ஆழ்கடல்கள்
அசைகின்றனவோ
எதை நோக்கி நதிகளும் மற்ற
நீர்ப்பரப்பும் நகர்ந்து செல்கின்றனவோ
எதன்மீது உயிர்களெல்லாம்
வாழ்கின்றனவோ,
எதன்மீது உணவுப் பொருட்களும் பிற
பயிர்களும் வளர்கின்றனவோ
அந்தப் பூமித்தாய் வாழ்வின் அமுதத்தை
நமக்கு முதலில் வழங்குவாராக

கோடைக் காலம், மழைக் காலம், இலையுதிர் காலம், இளவேனிற் காலம் என்பவை ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வர உன்னுடைய பருவங்கள் அனைத்தும் ஒவ்வொன்றும் தமக்கே உரிய வகையில், ஓ! பூமித்தாயே எங்களுக்கு நல்ல விளைச்சலை நல்குவதாக!

இந்தத் தரிசனத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதிலும் போற்றுவதிலும் இவற்றுக்கு ஏற்ப வாழ்வாங்கு வாழ்வதிலும் தான் நமது ஞானம், எதிர்காலத்திற்கான நம்பிக்கைகள் அடங்கியிருக்கின்றன. தொடர் வேளாண்மை, ஊரக வளர்ச்சிக்கான இந்த ஆய்வு மையத்தை' நாட்டுக்கு அர்ப்பணிப்பதில் நான் பேருவகை கொள்கிறேன். நன்றி!

## 5-ஆம் வகுப்புக்கும் பொதுத் தேர்வு

தமிழ்நாட்டில் மாவட்ட அளவில் 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு பொதுத் தேர்வு நடத்த அரசு முடிவு செய்துள்ளது. 1993-94-ஆம் கல்வியாண்டிலிருந்து இந்த முறை அமலுக்கு வரும்.

-சட்டப்பேரவையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் (1.4.1993).





# கிளைவ் இருந்த மாளிகை!

ஆங்கிலேய ஆளுநர்களும், துணை ஆளுநர்களும் தமிழ்நாட்டில் தங்குவதற்காகக் கி.பி.1738-இல் கடலூரில் உள்ள மஞ்சகுப்பத்தில்




ஒரு தோட்ட மாளிகை கட்டப்பட்டது.

வெடிகுண்டுகளுக்கெல்லாம் ஈடுதரக்கூடிய வலிமைமிக்க சுவர்கள் கொண்டது அம்மாளிகை. மனித உடலுக்குள்ளது போலவே ஒன்பது வாசல் உடையது இது; எதிரி எப்படி வந்தாலும் உள்ளே இருப்போர் எளிதில் தப்பிச் சென்றுவிடலாம்.

இங்கிருந்து தேவனாம்பட்டினம் கடற்கரையைச் சென்றடையத்தக்க சுரங்கப்பாதைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கி.பி.1756-இல், இங்கே கவர்னர் ஜெனரலாக இருந்த இராபர்ட் கிளைவ் இம்மாளிகையைக் கைப்பற்றிக் குடிபுகுந்தார். மொகலாயர் காலக் கட்டடப் பாணியும், ஐரோப்பியக் கலை நுணுக்கங்களும் உடைய அந்த மாளிகைதான் இப்போதைய தென்னார்க்காடு மாவட்ட' ஆட்சித் தலைவரின் 'சிறப்புப் பணி அலுவலக'மாகப் (Camp Office) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பல்லாண்டுக் காலத்திற்கு முந்தியது எனினும் - அதன் சுவர்களின் பளபளப்பு இன்றைக்கும் குறையவில்லை. கீழே, பிரம்மாண்டமான தூண்கள் நிமிர்ந்து நிற்கும் 'வராண்டா'வில், இராபர்ட் கிளைவ் அங்கே வாழ்ந்ததை நினைவுகூரும் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. வட்டமாக வழவழப்போடு காணப்படும் அதன் படத்தையே நீங்கள் இங்கே காண்கிறீர்கள்.

- பி. சம்பந்தம்.



# மேன்மையான நாள்

— கவிஞர் அ. சுப்பையன்

மேதினி எங்கும் கொண்டாடும்
மேன்மை யான நாள்இதுவாம்;
ஏதினி வர்க்க பேதமென்றே
இயம்பிடும் நாளே மேநாளாம்!

உழைப்புக் கேற்ற ஊதியத்தை
உரிமை யுடனே பெற்றதிந்நாள்;
களைப்பு நீங்கிப் பாகுபடக்
கணக்காய் நேரம் கண்டதிந்நாள்!

உழைக்கும் வர்க்கம் உயர்வடைய
உன்னத நிலையைத் தானடைய
வழிவகை செய்த நாள்இதுவாம்;
வாட்டம் போக்கிடும் நாள்இதுவாம்!

நித்தம் உழைத்திடும் பாட்டாளி
நிம்மதி கண்டிடும் நாள்இதுவாம்;
புத்தம் புதிய பலம் பெற்றுப்
பொலிவுடன் திகழ்ந்திடும் நாள்இதுவாம்!

அல்லும் பகலும் தொழிலாளி
அயரா துழைத்தது போதுமென
எல்லை வகுத்திடும் நாள்இதுவாம்;
ஏற்றம் பெற்றிடும் நாள்இதுவாம்!



# கல்வராயன் மலை



தென்னார்க்காடு மாவட்டம் என்றாலே நமக்குக் கல்வராயன்மலை நினைவு வரும். ஏனென்றால் அம்மாவட்டத்தில் உள்ள மலைகளிலேயே பெரிய மலை அது தான்.

கடல் மட்டத்திலிருந்து 100 முதல் 3,500 அடி உயரம் உடைய தாக- சுமார் 600 கிலோ மீட்டர் பரப்பளவு உடையதாக இருக்கிறது இம்மலை. இதனைப் பெரிய கல்வராயன் மலை, சிறிய கல்வராயன் மலை என்று இரு பிரிவினதாகக் குறிப்பிடுகிறார்கள்.

பெரிய கல்வராயன் மலையின் உயரம் சுமார் 4,300 அடி; சிறிய கல்வராயன் மலையின் உயரம் சுமார் 3000 அடி. இவ்விரண்டையும் சார்ந்த 106 கிராமங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

காடு சூழ்ந்த இம்மலைப் பகுதி வாழ் மலையாளிகளின் முன்னோரெல்லாம் மன்னர்களாக இருந்து கோலோச்சியதாக வரலாறு கூறுகிறது, பிற்காலத்திலோ இம்மக்களெல்லாம் நலமும் வளமும் குன்றி, செல்வாக்குள்ளோரின் அடிமைகளாக வாழப் பழகி விட்டார்கள்.

1976-இல்தான் இவர்களெல்லாம் ஜாகீர்தார்களின் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். பல்லாண்டுக் காலம் அடிமைப்பட்டுக் கிடந்த இம்மக்களிடம் கல்வியறிவையோ, நாகரிக முதிர்ச்சியையோ காண முடியாத நிலை இருந்தது.

தமிழ்நாடு அரசு, அம்மக்களின் இத்தகைய அவலநிலைமாற்ற அரும்பாடுபட்டு வருகிறது. எல்லா வகையிலும் அவர்கள் முன்னேற அரசு உதவிக்கரம் நீட்டியுள்ளது.

**அரசின் உதவிகள்**

'உழவே தலை' என்று உணர்ந்துள்ள அம்மக்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1991-92-இல் 110 உழவு மாடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன; மலைவாழ் மக்கள் என்பதால் அவர்கள் இதில் 50 சதவிகிதத்தைக் கடனாகப் பெற முடியும்.

எட்டுப் பேருக்குக் கறவை மாடுகளும், மளிகை- சிறுதொழில் தொடங்க 5 பேருக்குக் கடனுதவியும் செய்யப்பட்டிருக்கிறது. 'ஆயில் என்ஜின்' எண்மருக்கு வழங்கப்பட்டுள்ளது.

டயர் வண்டிகளும் மாடுகளும் அரசு மூலம் ஒன்பது பேருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன ஆடுகள்

கல்வராயன் மலைவாழ் மக்களுக்கு வாரம் ஒரு முறை மருத்துவப் பரிசோதனை



இரண்டு பேருக்கு கொடுக்கப் பட்டுள்ளன.

-இந்த விவரங்களையெல்லாம் நமக்குத் தெரிவித்த கல்வராயன் மலை கால்நடை மருத்துவ அலுவலர், டாக்டர் சுப்பிரமணியம், 1992-93-இல் மேலும் அப்பகுதி மக்களுக்கு அளிக்கப்பட்ட அரசு உதவிகள் பற்றியும் நமக்குத் தெரிவித்தார்; ஊர்நல அலுவலர் திரு. பி. வடிவேலுவும் உடனிருந்து உதவினார்.

''உழவு மாடுகள் 31 பேருக்கும், ஆயில் என்ஜின் 9 பேருக்கும், கறவை மாடுகள் 5 பேருக்கும், டயர் வண்டியும் மாடுகளும்


மர வகை மல்பரி' வளர்ப்பு

இருவருக்கும் அளிக்கப்பட்டுள்ளன; மூவருக்குச் சிறுகடன் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவை தவிர- மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனைப்படி இன்னும் நூறு பேர்களுக்கு இப்பகுதியில் உதவி செய்யவிருக்கிறோம்''.

## மருத்துவ உதவி

கல்வராயன் மலைவாழ் மக்களுக்கு மருத்துவ உதவி தங்குதடையின்றி கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை மூலம் அளிக்கப்படுகிறது.

டாக்டர் ஆர்.எம். இளங்கோவன், செவிலியர் திருமதி ஆர். மல்லிகா, மருந்தாளுநர் திரு. எம். பழனிவேல் முதலான 9 பேர் கொண்ட நடமாடும் மருத்துவ வண்டியொன்று, இதற்காக வெள்ளிக்கிழமைதோறும் கல்வராயன் மலைக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறது.

மற்ற நாட்களில் இக்குழு இந்த மலையின் மற்ற பகுதி மக்களுக்கு மருத்துவ உதவி புரியச் செல்லுகிறது.

உழவு மாடுகள்- கறவை மாடுகள் கடனில் பெற்ற திரு. வெள்ளி, திரு. மொட்டை, திரு. எம். இராசேந்திரன்- திருமதி. ஜெய்ராணி, திருமதி. பொட்டியம்மாள் ஆகியோர்தாம் பெற்ற பயன்பாடுகளுக்காகத் தமிழக அரசை மனமாரப் பாராட்டி வாழ்த்தினார்கள்.

## பட்டுத் தொழில்

கல்வராயன் மலையில் வெள்ளிக்


கல்வராயன் மலையில் வெள்ளிக்கிழமை சந்தை

கிழமையன்று சந்தை களை கட்டியிருந்தது. அங்கு ஏராளமான பொருட்கள் மிக மலிவாகவும் தரமானதாகவும் கிடைக்கின்றன.

கடுக்காய் மரங்களும், கறிவேப்பிலை மரங்களும் மண்டிக் கிடந்து மணம் பரப்பும் கல்வராயன் மலையின்வெள்ளிமலைப் பகுதியில் புதுவகை மல்பரி





செடிகள், ஒருங்கிணைந்த மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிரிடப்பட்டிருப்பதைக் கண்ணுற்றோம்.

அதைப்பற்றி அங்கிருந்த பட்டு வளர்ச்சித் துறை உதவி ஆய்வாளர் திரு. ஆர். ரங்கராஜனிடம் பேசியபோது கிடைத்த விவரங்கள் இவை:

''தென்னார்க்காடு மாவட்டத்தில் சுமார் 200 ஏக்கர் அளவில் மல்பரி பயிரிடப்படுகிறது; இங்கு தயாராகும் பட்டுக்கூடு சேலம் சந்தைக்குப் போய் விற்பனையாகிறது. கல்வராயன் மலையில் மரவகை மல்பரி (Tree Type) பயிரிடுகிறோம்; வெற்றுடம்போடு சிறிது உயரமாக வளர்ந்து பிறகு தழைக்கும் வகையைச் சேர்ந்தது இது; உயர இருப்பதால் ஆடு, மாடு தின்ன முடியாது. இலாபகரமான தொழிலாதலால் இதில் சுமார் முந்நூறு நானூறு குடும்பத்தார் ஈடுபட்டிருக்கிறார்கள். மல்பரி இங்கே மூன்று அல்லது நான்கு போகம் வரை பயிரிடப் படுகிறது''.

**• தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன; அவற்றில் பெரும்பாலானவை - குறிச்சி, பாடி, ஊர், பாக்கம், குப்பம் என்ற சொல்லுடனேயே முடிவதாக உள்ளன.**

கல்வராயன் மலையில் உள்ள வெள்ளிமலையில் ஓர் அருவியில் கொஞ்சமாக நீர் கொட்டிக் கொண்டிருந்தது மிக அழகாக இருந்தது. எங்கு நோக்கினும் பச்சைப்பட்டுப் போர்த்திய குன்றுகள் மலிந்த கல்வராயன் மலை, விரைவிலேயே மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக மாறும் என்பது திண்ணம்.

**அ. சந்திரசேகரன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**தென்னார்க்காடு மாவட்டம்**

**• தென்னார்க்காடு மாவட்டத்தின் எழில்மிகு சுற்றுலாத் தலமாக விளங்கும் பிச்சாவரம், சிதம்பரத்திலிருந்து சுமார் 15 கி.மீட்டர் தொலைவில் இருக்கிறது. இங்கு சுற்றுலாத்துறை மூலம் தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சுரபுன்னை மரங்கள் மண்டிக் கிடக்கும் காடாக விளங்கும் தீவுப் பகுதியாகத் திகழ்வது இது; ஆழமற்ற உப்பங்கழியான இப்பகுதியில் உவகையுறப் படகுப் பயணம் செய்து மகிழ்வோர் பலராவர்; இப்பகுதியில் அடிக்கடி திரைப்படக் குழுவினரின் வெளிப்புறக் காட்சிப் படப்பிடிப்புகளும் நடப்பதுண்டு.**



**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits**
**(Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE




# தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகம்

போக்குவரத்து வசதி என்கிறபோது, இன்று குக்கிராமங்களில் கூட, பேருந்துகள் செல்கின்ற பாங்கினைப் பார்க்கின்றோம். அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளின் காரணமாகப் புதிய வழித்தடங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அதனால், மக்கள் பெரிதும் பயனடைந்து வருகிறார்கள். குறிப்பாக, கிராமத்து மக்கள் • பெரிதும் பயனடைந்து வருவதை நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஆற்றிவரும் பணிகள் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது:

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் 1975-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 14-ஆம் நாள் நிறுவப்பட்டது. அப்போது 172 பேருந்துகளே இருந்தன. இப்போக்குவரத்துக் கழகத்திலிருந்து 1.12.1982-ஆம் ஆண்டு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகமும், 1.4.1992-ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகமும் பிரிந்தன. தற்பொழுது தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் திரு. சு. பாலசண்முகம் அவர்களை மேலாண்மை இயக்குநராகக் கொண்டு 802 பேருந்துகளையும், 6015 பணியாளர்களையும் கொண்டு சீரிய முறையில் இயங்கிவருகிறது.

தென்னார்க்காடு மாவட்டம் விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட மாவட்டம் ஆகும். இம்மாவட்ட மக்கள் போக்குவரத்திற்கும், பொருட்களை எடுத்துச் செல்லுவதற்கும், தங்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கும் பேருந்தையே பெரிதும் நம்பி இருக்கிறார்கள்.

இலாபத்தை மட்டுமே கருத்தில் கொள்ளாமல் எல்லா மக்களுக்கும் போக்குவரத்து வசதி செய்து சேவை செய்வதையே முக்கியக் குறிக்கோளாகத் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஏற்றுக்



கொண்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், 1000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு 31.12.1992-க்குள் போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டதற்கேற்ப, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் போக்குவரத்து வசதி இல்லாத 145 கிராமங்களுக்குப் புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகளை இயக்கியதால், 1,96,059 மக்கள், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பயன் பெற்றுள்ளார்கள்.

1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு 46,517 இலவசப் பயண அனுமதி அட்டையும், 9-ஆம் வகுப்பு முதல் உயர்கல்வி பயிலும் 32,963 மாணவ மாணவியர்களுக்கு 50 சதவிகித சலுகையும் அளித்து அரைக் கட்டணத்தில் பயண அனுமதி அட்டையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஊனமுற்றவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஆகியோர்களுக்கும் இலவசப் பயண அனுமதி அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

பண்ணுருட்டி, விழுப்புரம் ஆகிய இடங்களில் பணிமனையும், விக்ரவாண்டியில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி, தொழில் பயிற்சி பள்ளி, பயிற்சி மையம் எரிபொருள் சிக்கனச் சிறப்புப் பயிற்சி மையம் ஆகியனவும் இயங்கி வருகின்றன.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை சுமார் 15 இலட்சம் கிராம மக்கள் புதிதாகப் பேருந்து வசதி பெற்றுள்ளனர். இரவில் சாலை விபத்தினைத் தடுக்கும் பொருட்டு, இக்கழக இயக்க எல்லைக்குள் 7,915 மாட்டு வண்டிகளுக்கு 15,830 இலவச ஒலிப் பிரதிபலிப்பான்கள் 29,472 இலவச ஒளி பிரதிபலிப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன. விழுப்புரத்தில் ரூ.1.75 இலட்சம் செலவிலும், கடலூரில் ரூ.2.30



இலட்சம் செலவிலும் தானியங்கி மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இயங்கி வருகின்றன. ஆண்டு ஒன்றிற்கு ரூ.50,000-க்கான பெயிண்ட், சாலை நடுக் குறியீட்டிற்காகக் காவல்துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் வழங்கப்படுகிறது.

விழாக் காலங்களில் தனிச் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மாமண்டூரில் 60.82 இலட்சம் செலவில் நவீன சாலையோர உணவு விடுதி திறக்கப்பட்டது. இது நாள்தோறும் சுமார் 11,000 மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்துவருகிறது.

தொழிலாளர்களின் வருங்கால வாழ்வைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் சேமநல நிதித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையில் உணவு, அனைத்துப் பணிமனைகளிலும் படித்து மகிழ படிப்பக வசதி, தலைமையகத்தில் பரிசோதனைக் கூடத்துடன் கூடிய மருந்தக வசதி மற்றும் தொழிலாளர்கள் அவர்தம் குடும்பத்தவர்கள் பயன்பெறும் வண்ணம் அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் அரசு ஊழியர்களுக்கு இணையான மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. அத்துடன் அவ்வப்போது பல்வேறு மருத்துவ முகாம்கள் மூலம் மருத்துவ வசதியும் செய்யப்படுகிறது.

தொழிலாளர்களின் வசதியைப் பெருக்கும் நோக்கில் தமிழக அரசின் கொள்கையின்படி, நமது போக்குவரத்துக் கழகங்கள், இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த அரசு நிறுவனமும் செயல்படுத்திடாத சொந்த வீடு கட்டும் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்தி வருகின்றது. இதன் முதற்கட்டமாக விழுப்புரத்தில் 393 வீடுகள் ரூ.4.85 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களால் கடந்த 7.1.92 அன்று திறந்து வைக்கப்பட்டன. மேலும், கடலூர், பாண்டி, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கென வீடு கட்டும் திட்டம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழக மக்களுக்காகத் தினமும் தனது சேவையை அர்ப்பணித்து வரும் போக்குவரத்துக் கழகங்களுக்கு, பொதுமக்களின் ஒத்துழைப்பும், பாதுகாப்பும் மிகவும் தேவையாகிறது.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் பொது மக்களுக்கும், அதன் பணியாளர்களுக்கும் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது.

—ம. அரிகிருஷ்ணன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்





# தொழுநோய் ஒழிப்பு - டேன்லப் திட்டம்

சேலம், தருமபுரி, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் டென்மார்க் நாட்டு உதவியோடு செயல்படுத்தப்பட்டு வருவது 'டேன்லப்' (Danish Leprosy Eradication Project) திட்டம்.

தொழுநோயை அடியோடு ஒழித்து விட முடியும் என்ற உறுதியைக் கிராமப்புற மக்களுக்கும் உண்டாக்குவது இந்தத் திட்டம்.

டாக்டர்கள் என். முருகேசன், எஸ்.பி. ராமலிங்கம், டேனிடா திட்ட அலுவலர் டாக்டர் சந்திரன், திட்டத் துணை அலுவலர் திரு. அன்பு கணபதி ஆகியவர்களோடு அத்திட்டம் செயல்படுத்தப்படும் விதம் பற்றி அறியத் தென்னார்க்காடு மாவட்டக் கிராமப் புறங்களில் பயணம் சென்றோம் நாம்.

பணிக்கன் குப்பம் கிராமத்தில், மாணவ மாணவிகளும் இந்த முகாமில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். "ஆரம்ப நிலையில் உள்ள தொழுநோயைக் கண்டுபிடிக்க டாக்டர்கள் தான் வேண்டும் என்பதில்லை; சாதாரண மக்களாலும் அது கண்டறியப்பட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவ்வாறான முகாம்கள் நடத்தப்படுகின்றன என்றார் டாக்டர் என். முருகேசன்.

திருமதி. பாமா என்ற ஆசிரியையின் தலைமையில் அன்று வந்திருந்த பத்துப் பதினைந்து மாணவிகளில் எஸ்.எஸ். சிவசங்கரி என்பவரை அழைத்து விசாரித்தோம்.

"உனக்கு இந்தப் பணியில் ஈடுபடுவது அருவருப்பாக இல்லையா?"

"அப்படியிருந்தால் இதற்கு வந்திருக்கவே மாட்டேன்; மனப்பூர்வமாகச் சம்மதித்தே இதற்கு வந்திருக்கிறேன்".

"இதனால் படிப்புக்கு இடையூறாக இல்லையா?"

"இல்லை; பெரும்பாலும் ஓய்வு நேரத்தில்தான் இந்தப் பொதுப் பணியில் ஈடுபடுகிறோம்!"

"யாருக்காவது தொழுநோய் இருக்கிறதா என்று கண்டறிய நீங்கள் கிராமப்புற வீடுகளுக்குச் செல்லும்போது மக்கள் வெறுப்போடு பார்க்கிறார்களா?"

"இல்லீங்க; நல்லபடி ஒத்துழைப்புத் தர்றாங்க; ஆண் பிள்ளைங்க மட்டும் கொஞ்சம் எங்ககிட்ட கூச்சப்படுவாங்க; அது மாதிரி நேரத்துல மாணவர்களைப் பார்க்கச் சொல்லுவோம். இன்னிக்கி இந்தக் கிராமத்துல நாங்க ரெண்டு சிறுவருங்களுக்குத் தொழுநோய் ஆரம்ப கட்டத்துல இருக்கிறதெ கண்டு பிடிச்சோம்".

"இது மாதிரி வேலைங்களுக்கு நீங்க வர்றதெ ஒங்க வீட்லெல்லாம் அனுமதிக்கிறாங்களா?"

"வீட்ல பர்மிஷன் தராம நாங்கள்ளாம் இப்பிடி வெளி கிராமத்துக்கு வர முடியுங்களா?" என்று சிரிப்போடு கேட்டார் அந்த மாணவி.

பண்ணுருட்டியைச் சேர்ந்த ஸ்ரீ சுப்பராய செட்டி மகளிர் மேனிலைப் பள்ளி மாணவிகளான அவர்களை திரு. ஆர். கந்தசாமி என்கிற 'டேன்லப்' திட்ட அலுவலரே வழி நடத்தினார்.

"சாதாரணத் தேமல் போல் காணப்படும் இடத்தில் கோழிச் சிறகால் நீவும்போது கூச வேண்டும்; குண்டூசியால் குத்தினால் வலிக்க வேண்டும்; அப்படியில்லாதபட்சத்தில் அதுவே தொழுநோய்க்கான அறிகுறி என அறியப்படுகிறது" என்றார் அவர்.

—எல். சுதாகர்

***

★ திருக்குறட் சொற்பொழிவைத் தேன்நிகர் சுவையோடு ஆற்றுவதாலேயே 'திருக்குறள் முனிசாமி' என்று குறிப்பிடப்படும் அத்தமிழறிஞர் இம்மாவட்டத்தைச் சேர்ந்த விழுப்புரத்தில் பிறந்தவரே.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக உள்ள டாக்டர் ஔவை நடராசன் பிறந்த ஊர் இந்த மாவட்டத்தில் உள்ள ஔவையார் குப்பமேயாகும்.

***



# ஆடல் காணீரோ

தென்னார்க்காடு மாவட்டத் திருக்கோயில்கள்- சமய வழிகாட்டிகள் குறித்த விவரங்கள் இங்கே தரப்படுகின்றன:

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகருக்குத் தெற்கே 200 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது கடலூர். தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரமாகும் இது.

சங்ககாலம் முதலே இந்த மாவட்டம் சிறப்புற்றிருப்பதைப் புறநானூறு, அகநானூறு போன்ற இலக்கியங்களின் வாயிலாக நாம் உணரலாம்.

தேவாரம் பாடிய சைவ சமய குரவர்கள் நால்வருள் இருவரான திருநாவுக்கரசரும் (திருவாமூர்), சுந்தரரும் (திருநாவலூர்) இம்மாவட்டத்தில் பிறந்தோரேயாவர்; தேவாரம் பாடிய மூவரில் இருவர் என்ற சிறப்பும் இவர்களுக்குண்டு. திருத்தொண்டர் புராணம் என்கிற பெரியபுராணம் பாடப்பட்டதும், அரங்கேற்றப்பட்டதும் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரத்திலேயே ஆகும்.

திருநாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியார் பிறந்து பெருமை பெற்றதும் இங்குள்ள திருவாமூரிலே தான்.

'திருவருட்பா' அருளிய வள்ளல் பெருமான் (மருதூர்), சிவஞான போதம்' முதலான சைவ சமய நூல்கள் இயற்றியவர்களெல்லோரும் இம்மாவட்டத்தினரேயாவார்கள்.

இயற்றமிழுக்கு எழில் சேர்த்த ஆறுமுக நாவலர் வளர்ந்த ஊர் சிதம்பரமே.

### சிதம்பரம் கோயில்கள்

இறை வழிபாட்டால் ஏற்றம் கொண்ட மாவட்டம் தென்னார்க்காடு மாவட்டம். சைவம் வைணவம் ஆகிய சமயத்தாரால் போற்றப்பட்ட திருத்தலங்கள் பல இங்குண்டு. சைவ சமயத்தின் முழு முதல் கடவுளான சிவபெருமானும், வைணவத் தெய்வமாகிய திருமாலும் ஒருசேரக் காட்சி தரும் இடம் தில்லைத் திருத்தலம்.

ஆடற்கலையில் - சக்தியைத் தோல்வி காணச் செய்த ஆடல் வல்லானாகிய ஈசன் நடராசக் கடவுளாகக் காட்சிதருவதும் தில்லைத் திருத்தலத்திலேயேயாகும்.





### மாவட்டத் திருக்கோயில்கள்

தென்னார்க்காடு மாவட்டத்தில் நின்றிலங்கும் திருக்கோயில்கள் பல.

திருநாறையூர் பொல்லாப் பிள்ளையார் கோயில், விருத்தாசலம் பழமலைநாதர் கோயில் பெண்ணாகடம், திருவதிகை, திருநாவலூர், திருப்பாதிரிப்புலியூர் (பாடலீசுவரர்), திருவெண்ணெய் நல்லூர், திருவாமூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்கள் மிகச் சிறந்தவை; பெருமக்களால் பாடப்பெற்றவை.

இம்மாவடடத்தில் உள்ள திருவந்திபுரம் கோயிலுக்கு ஒரு சிறப்பு உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

திருப்பதி வெங்கடாசலபதிக்குப் பிரார்த்தனை செய்து கொள்ளுவோர், அங்கே செல்லமுடியாத நிலையில் இக்கோயிலில் தம் பிரார்த்தனையைச் செலுத்திக் கொள்ளலாம்; ஆனால், இக்கோயிலுக்குப் பிரார்த்தனை செய்து கொள்ளுவோர், அதற்குப் பதில் திருப்பதிக்குப் போனாலும் சமமானது ஆகாதாம்!

### சிதம்பரம் கோயில்

சரித்திரப் பிரசித்தி பெற்றது சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் கோயில் எனப்படும் அருள்மிகு நடராசர் கோயில்; 'ஆடல் காணீரோ' என ஆனந்தக் கூத்தாடும் ஈசனை இங்கே கண்டுவக்கலாம்.

1955-இல் திருக்குடமுழுக்கு நடந்ததன் பிறகு, 1987-இல் மறுபடியும் திருக்குடமுழுக்கு நடத்தப் பெற்றது. பூலோகக் கைலாயம் எனப்படும் கோயில் இது; பஞ்ச பூதத் தலங்களிலே இதுவும் ஒன்று.

வைணவ சம்பிரதாயப்படி 'கோயில்' என்றால் திருவரங்கம் தான்; அதேபோலச் சைவ சம்பிரதாயப்படி 'கோயில்' என்றால் சிதம்பரம் திருக்கோயில்தான்.

பெரிய புராணம் பாடிய சேக்கிழாராலும் - திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், உமாபதிசிவம், வடலூர் இராமலிங்க அடிகளார் ஆகியோராலும் பாங்குறப் பாடப் பெற்ற தலம் இது.

### கோயிலின் கதை

சிதம்பரம் கோயிலின் கிழக்கு வாசல் கோபுரம் கி.பி. 1250- இல் மதுரை சுந்தர பாண்டியனாரால் கட்டப்பட்டது; வடக்குக் கோபுரம் கி.பி. 1509-1530-இல் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டது. தென் திசைக் கோபுரமும் மேற்றிசைக் கோபுரமும் கி.பி. 1243-இல் கோப் பெருஞ்சிங்க தேவனால் கட்டப் பட்டவை.

> • கடலூரையொட்டிச் செல்லும் கெடில நதி பாடல் பெற்ற நதியாகும். இது கடலில் கலக்குமிடத்தில், அந்நாளில் மிகப்பெரிய துறைமுகம் அமைந்திருந்தது; கடல் வழியே வந்த ஆங்கிலேயர் கால் ஊன்ற அதன் காரணமாகவே இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.

கிழக்கு-மேற்குக் கோபுரங்களில் 108 நாட்டிய வகைகளைக் காட்டும் சிற்பங்கள் இருக்கின்றன.

இந்தக் கோயிலினுள் இருக்கும் ஆயிரங்கால் மண்டபத்தில் 999 தூண்கள் உள்ளன; ஆயிரத்தில் இன்னொன்று - தில்லை நடராசரின் கால் எனப்படுகிறது.

கி.பி. 1118-1150-இல் கட்டப்பட்டது இது; பிரகாரங்கள் எல்லாம் சோழ மன்னர்களால் கட்டப்பட்டவை. இந்த மண்டபத்திலே தான் சேக்கிழாரின் பெரியபுராணம் அரங்கேற்றப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

பேரரசன் ராஜராஜ சோழன் காலத்திலே தான் (கி.பி. 985-1014), நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைக் கண்டெடுத்துத் தொகுத்தளித்தார்.

### பொற்சபை விவரம்

தில்லையம்பதியில் உள்ள - அருள்மிகு நடராசப் பெருமானுக்குரிய ஐந்து சபைகளில் ஒன்றான கனகசபையில் திருமூலநாதரும், உமையம்மையும் இணைந்தபடி எழிலாகக் காட்சி தருகின்றனர்; இச் சபையின் மேல்விதானம் பொன் ஓடு வேயப்பட்டதாகும்.

சிதம்பரத்திற்குத் தில்லைவனம், பெரும்பற்றப் புலியூர், பொன்னம்பலம், வியாக்கிரபுரம், பூலோகக் கைலாயம், புண்டரீகபுரம் என்ற பெயர்களும் உண்டு.

55 ஏக்கர் பரப்பளவுள்ள இந்தக் கோயிலில் உள்ள மூலவர் பெயர்

சபாநாயகர்; அம்பிகையின் பெயர் சிவகாமி. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் இத்தலம் பெருமை பெறுகிறது.

பொன்னம்பலம், பேரம்பலம், சிற்றம்பலம், நிருத்தசபை, ராஜசபை ஆகிய ஐந்து சபைகள் இங்குள்ளன. பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மும்மூர்த்திகளும் இங்கே கோயில் கொண்டிருக்கின்றனர்.

இக்கோயிலின் தலவிருட்சமான தில்லை மரம் திருமூலட்டானக் கோயில் மேற்குப் பிரகாரத்தின் மேற்புரம் கருங்கல் வடிவில் செதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

ராஜகோபுரங்கள் ஒவ்வொன்றும் 135 அடி (40.5 மீட்டர்) உயரமும், ஏழு தளங்களும் கொண்டவை. கோபுரங்களின் மேல் 7 அடி 6 அங்குலம் உயரமுள்ள 13 செப்புக் கலசங்கள் உள்ளன. ராஜ கோபுரங்களின் அடிப்பகுதி 90 அடி நீளமும் (27 மீட்டர்), 60 அடி (18 மீட்டர்) அகலமும் கொண்டு சதுர வடிவில் அமைந்திருக்கிறது. ராஜகோபுரவாயில்கள் தலா 40 அடி (12 மீட்டர்) உயரமுள்ளவை.

சிற்சபை எனப்படும் பொன்னம்பலத்தின் மேல், ஆய கலைகள் 64 என்பதை உணர்த்தும் விதத்தில் 64 கைமரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் மனிதன் விடும் சுவாசங்களின் எண்ணிக்கையை விளக்கவே இதன் கூறை 21,600 ஓடுகளால் வேயப்பட்டிருக்கிறது என்பது ஐதீகம். இந்தப் பொன் ஓடுகளில் அறையப்பட்டுள்ள ஆணிகளின் எண்ணிக்கை 72,000.

இந்தச் சிற்றம்பலத்திற்கு முதலில் பொன்வேய்ந்தவன் இரண்யவர்மன் எனக் கோயில் தல புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுக்குப் பிறகு சோழ மன்னன் பராந்தகன் பொன்வேய்ந்தான். அவன் தந்தை ஆதித்த சோழனே பொன்னம்பலத்தின் முகப்பிற்குப் பொன் வேய்ந்தவன்.

இக்கோயிலில் உள்ள நடராசப் பெருமானின் திருவுருவம் - விஞ்ஞானம், சமயம், கலை ஆகிய அனைத்தையும் கொண்டு விளங்கும் உண்மை ஒளி எனப்படுகிறது.

*சிதம்பர ரகசியம்*

பூசைக் காலத்தில், சிற்சபையில் சபாநாயகரின் வலப்புறம் உள்ள திரை அகலும்; தீபாராதனை காட்டப்படும்போது உள்ளே திருவுருவம் ஏதும் தோன்றாது. தங்கத்தாலான ஒரு வில்வதளமே காட்சி தரும். ஆகவே இறைவன் ஆகாச உருவில் இருக்கிறான் என்பது ஐதீகம்.

இதுதான் சிதம்பர ரகசியம் எனப்படுவது!

**அனல்வாதம் புனல்வாதம் எனப்பட்ட சமயப் போராட்டத்தின் காரணமாக அப்பர் கன்னாம்புக் காளவாயில் போடப்பட்டு உயிர் மீண்டதாகவும், கல்லைக் கட்டிக் கடல் நடுவே போடப்பட்ட பிறகும் திருநாவுக்கரசர் உயிரோடு கரை சேர்ந்ததாகவும் கூறப்படும் புராணச் சம்பவங்கள் நடந்த இடம் கடலூர்தான்!**

**எல்லாக் கோயில்களிலும் உழவாரத்தோடு நிற்கும் அப்பர் விக்கிரகத்தையே நாம் காண முடியும்; கடலூர் பாடலீசுவரர் கோயிலிலோ அத்தகைய சோதனைகளுக்கெல்லாம் பிறகு, உழவாரத்தோடு அமைதியாக அமர்ந்திருக்கும் அப்பரை நாம் காணலாம்.**

இந்தியாவிலேயே நடராசப் பெருமானுக்கு இங்குதான் தனிக் கோயில் உள்ளது. இப்போதும் - தில்லைவாழ் அந்தணர்களாகிய தீட்சிதர்களுக்கே இந்தக் கோயில் சொந்தமாக இருக்கிறது; இதற்கென்று சொந்தமான நிலம் இல்லை.

ஆறுகாலப் பூசை, சிறப்புப் பூசை, திருவிழா ஆகியவற்றிற்குப் பலரால் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டு, அவரவர் குடும்பத்தவரே அந்தக் கட்டளைகளைத் தீட்சிதர்கள் மூலம் நடத்திவருகின்றனர்.

திருவாதிரை நாள் ஆருத்ரா தரிசனம் இக்கோயிலில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகும்.

சமஸ்கிருதத்திலேயே சுமார் 1300 ஆண்டுகளுக்கு மேலாக மந்திரம் ஓதப்பட்டுவந்த இக்கோயிலில், அண்மையில் குடமுழுக்கு நடைபெற்ற காலத்தில் - தேனினும் இனிய தேவாரம், திருவாசகம் பாடிப் பரமன் தொழுது வணங்கப்பட்டான்.

***சமய வழிகாட்டிகள்***

சைவ, வைணவ சமய வழிகாட்டிகள் பலரும் தென்னார்க்காடு மாவட்டத்தில் பிறந்திருக்கிறார்கள்.

அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பெண்ணாகடத்தில் தோன்றிய மெய்கண்ட தேவர், திருத்துறையூரில் தோன்றிய அருணந்தி சிவாச்சாரியார், திருவந்திபுரத்தில் பிறந்த வேதாந்த தேசிகர், திருப்பாதிரிப் புலியூரில் வாழ்ந்த ஞானியாரடிகள் ஆகியோராவர்.

வரலாற்றிலே...

பொய்கையார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் போன்றோர் பாடிய இங்குள்ள திருக்கோவிலூருக்கு வரலாற்றுச் சிறப்பொன்று உண்டு.

முன்னொரு காலத்தில் - இம் மாவட்டத்தின் பெரும் பகுதிகளைக் கொண்டதாக நடுநாடு - சேதிநாடு ஆகியவை விளங்கின; மலையமான் திருமுடிக்காரியும், மெய்ப்பொருள் வேந்தனும் திருக்கோயிலூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டுள்ளனர்.

பிற்காலத்தில் - நவாபுகள், நாயக்கர்கள், காடவர்கள், ஆங்கிலேயர் ஆகியோர் இப்பகுதியில் ஆட்சி செலுத்தியுள்ளனர்.

வரலாற்றைப் படித்தோமானால்- தில்லையம்பதியிலே முடிசூட்டிக் கொண்ட சோழ மன்னர்கள் பலரை நாம் காண முடியும்.

அக்காலத் தமிழகத்தில் சமணமும் ஓரளவுக்குப் பரவியிருந்தது; செஞ்சி வட்டம் மேல்சித்தாமூரில் உள்ள ஸ்ரீபார்சுவநாதர் ஆலயமே இதற்குச் சான்றாகும்.

சமணர் கோயிலான இதில் உள்ள பாகுபலேசுவரர் திருவுருவம், சரவணபெல்கோலாவில் உள்ளது போலவே தோற்றமளிக்கிறது.

**- இந்திரன்**





# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிலையங்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ள புகழ் அளவிடற்கரியதாகும்; இதோ, அது பற்றிய விவரங்கள்:**

தென்னார்க்காடு மாவட்டம் என்றாலே நமக்கு நினைவு வரக்கூடியவை சிலவற்றில் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் ஒன்றாகும்.

அண்ணாமலைப் பலகலைக்கழகம் தோன்றுவதற்கு அடிப்படையாக, செட்டிநாட்டரசர் டாக்டர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தொலைநோக்கு உணர்வுடன் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் 1920-ஆம் ஆண்டிலேயே மீனாட்சிக் கல்லூரியை நிறுவினார்.

கல்லூரிக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் கொண்ட மீனாட்சிக் கல்லூரிதான் 1929-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக அண்ணாமலை நகரில் வளர்ச்சியுற்றுத் தென்னிந்தியப் பண்பாட்டிற்கும் கல்வி மேம்பாட்டிற்குமாகச் செயல்படத் தொடங்கியுள்ளது.

இப்பல்கலைக்கழகம் உயர்ந்தோங்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் 300 ஏக்கர் நிலப்பரப்பையும் 20 இலட்சம் ரூபாயையும் செட்டிநாட்டரசர் அவர்கள் பெருங்கொடையாக வழங்கினார். செட்டிநாட்டரசர் அவர்கள் இணைவேந்தராக இருந்த 19 ஆண்டுகளிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு துறையிலும் மிகச் சீரிய வளர்ச்சியினைக் கண்டது என்பது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை.

**இசைத்துறை**

இந்தியப் பெருநாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனக்கென ஒரு தனிச் சிறப்பினைக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில் உலகப் புகழ்பெற்ற மகாகனம் வி.எஸ். சீனுவாச சாஸ்திரி, சர். சாமுவேல் அரங்கநாதன் முதலிய பேரறிவாளர்கள் துணைவேந்தர்களாக நியமிக்கப்பட்டனர்.

இந்தியாவில் முதன் முதலில் இசைக்கு என ஒரு தனித் துறையை அமைத்த பெருமை செட்டிநாட்டரசர் அவர்களையே சாரும். மேலும் நம் நாட்டிற்கு மிகத் தேவையான பொறியியல் புலம் ஒன்றையும் அவர் 1945-இல் இங்கே தோற்றுவித்தார்.

**தனித்தனித் துறைகள்**

1948-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிறுவனர் இயற்கை எய்தினார். பின்னர் அவருடைய மூத்த மகன் டாக்டர் இராஜா முத்தையா அவர்கள் இணை வேந்தரானார். இனிய சுபாவமும், தொண்டுள்ளமும் ஒருங்கே அமையப் பெற்ற டாக்டர் முத்தையா அவர்கள், புதிய பல்கலைக்கழகம் செயல்படப் பெரிதும் பாடுபட்டார்.

அவர் காலத்தில் தான் வேளாண்துறை, பொறியியல்துறை, வணிகவியல்துறை, நிர்வாக வணிக இயல்துறை, மருத்துவத்துறை ஆகியவை தோன்றலாயின. மேலும் 1979-இல் தொலைதூரக் கல்வி இயக்ககம் இப்பல்கலைக்கழகம் சார்பில் நிறுவப்பட்டது. இதன் காரணமாகப் பலரும் கல்வி தொடரும் நல்வாய்ப்பு ஏற்பட்டது.

மருத்துவப் பிரிவு அதனுடன் பல் மருத்துவம், செவிலியர் பயிற்சி, மருந்தகத்துறை ஆகியவற்றுடன் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

இன்று மருத்துவக் கல்வி வசதிகள் பலவும் பெற்று 'இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி' என்ற பெயரில் புதிய பொலிவோடு அது இயங்கிவருகிறது.

இராஜா முத்தையா அவர்கள் 1984-ஆம் ஆண்டு மே மாதம் மறைந்தார். எனினும், அவருடைய உயர் நோக்கங்களை விரிவாக்கி வளர்க்க அவருடைய மகன் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் நிறுவன இணைவேந்தராக நியமனம் பெற்றார்.

**உடற்கூறு விஞ்ஞானம்**

பதவி ஏற்ற குறுகிய காலத்திலேயே மருத்துவக் கல்லூரியைப் பொது மருத்துவம், பல் மருத்துவம், செவிலியர் பயிற்சி முதலிய துறைகளில் பெரும் முன்னேற்றத்தைக் காணத் தக்க வழிவகைகளைச் செய்தார். இவற்றுள் முதுகலைப் பயிற்சியும் ஆராய்ச்சியும் சமுதாயத்தின் உடல்நல வளமும் ஆக்கம் பெறுதலை நாம் காணலாம். இங்கு உடற்கூறு விஞ்ஞானத்தை வளர்க்க ஒரு பெரிய கட்டடம் அமைக்கப் பெற்றது.

விடுதிகள் கட்டவும், இராஜா முத்தையா உடற்கூறு விஞ்ஞான நிறுவனம் அமைக்கவும் இணைவேந்தர் பெருங்கொடை வழங்கியுள்ளார். மேலும் - கணிப்பொறி அறிவியல், தொலைதூரக் கல்வி ஆகியவையும் நம் இந்தியப் பெருநாட்டில் தனித்தன்மையோடு விளங்க வழிவகுத்த இவரது பேராற்றல் போற்றத்தக்கது.

பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சியையும் விளையாட்டுக்களையும் ஆதரிக்கும் பண்பால் உடல்வளக் கல்வியியல்துறை விரிவடைவதற்காகவும், டென்னிஸ் ஆடுகளம், ஜிம்னாசியம், விளையாட்டு ஆய்வுக்கூடம், விளையாட்டு உள் அரங்கம் (Indoor Stadium) ஆகியவை அமையவும் இவர் அயராமல் பாடுபட்டு வருகிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் - தொடக்கத்தில் 7



பல்கலைக்கழக நிறுவனர்

துறைகளே தமது பணிகளைத் தொடங்கின. காலந்தோறும் வளர்ச்சியுற்று கடந்த 66 ஆண்டுக் காலத்தில் 58 துறைகளாகப் பல்கிப் பெருகி மக்கள் பலருக்குத் தொண்டாற்றும் ஆற்றல்மிகு நிறுவனமாக இன்று இப் பல்கலைக்கழகம் வளர்ந்துள்ளது.

**மத்திய-மாநில அரசு உதவிகள்**

பல துறைகளிலும் முனைவர் பட்டத்திற்கும் முதுமுனைவர் பட்டத்திற்கும் பயன்தரும் வகையில் ஆய்வுக்கூடங்களும் நூலகமும் இப்பல்கலைக்கழகவளாகத்தின்முன் அமைந்துள்ளன. பல துறைகளில் மக்களுக்குப் பயன்நல்கும் பல்வகை ஆராய்ச்சித் திட்டங்கள் மாநில மத்திய அரசுகளின் தாராள நிதி உதவியுடனும், பல்கலைக்கழக மானியக்குழு நிதி உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆராய்ச்சியும் பயிற்சித் திட்டங்களும் பெருமளவில் வளர இந்நிறுவனம் பல தொழிற்சாலைகளுடனும் சில நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு இப்போது மிக நல்லவண்ணம் இயங்கிவருகின்றது.

கல்வித்துறை, வேளாண்மை, பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவ இயல் ஆகியவற்றில் பெரிதும் விரிவாக்கம் செய்து மக்கள் பலருக்கும் பயன்கிட்டுமாறு செய்து முதியோர் உதவி மையங்களின் துணையோடு செயல்படுத்தப்படுகிறது.

சாஸ்திரி ஹால், சர்.சி.பி. இராமசாமி ஐயர் நூலகக் கட்டடம், பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கட்டடங்கள், அரசர் முத்தையா பேரில் அமைந்துள்ள மருத்துவத் துறைக் கட்டடங்கள், வேளாண் துறைக் கட்டடங்கள், பொன்விழா நினைவுக் கட்டடம், உடற்பயிற்சித் துறையில் விளையாட்டு உள் அரங்கக் கட்டடம், மாணவர் பலருக்காக அமைந்த பல விடுதிகள், ஆசிரியர் அலுவலர் குடியிருப்புகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவைகளாகும். உயரிய நோக்கோடு நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகத்திற்குப் பூங்காக்களும், நிழற்சாலைகளும் அணி சேர்க்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குப் பெருமை சேர்க்கும் வளர்புலங்களின் எண்ணிக்கை 9 ஆகும். துறைகளின் எண்ணிக்கையோ 58. இவற்றுள் கடல்வாழ் உயிரினத்துறையும், மொழியியல் துறையும் மத்திய உயர் ஆய்வு மையங்களாகத் திகழ்கின்றன. பல்கலைக்கழகத்தின் இன்றைய வேந்தர் பொறுப்பில் இருப்பவர், மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள், துணைவேந்தர் டாக்டர் எம்.ஜி. முத்துக்குமாரசாமி பதிவாளர் டாக்டர் பெரி. கற்பக கணபதி. இவர்கள் மட்டுமல்ல -ஆளவை(செனட்), கல்விக்குழு வளர்புலங்களின் உறுப்பினர்கள், பாடத்திட்டக்குழு உறுப்பினர்கள், நிர்வாகத்துறை அலுவலர்கள் ஆகிய அனைவருமே இதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகின்றனர். இங்குள்ள மாணவர்கள் தேசிய உணர்வு பெறவும், உடல்நல ஆக்கம் பெறவும் தேசிய மாணவர் படைப் பயிற்சியும், மாணவர் நாட்டுநலப் பணித்திட்டமும், சமூக சேவை இயக்கமும், இணைவேந்தர், துணைவேந்தர் ஆகியோரின் நல்லாதரவினைப் பெற்றுச் செம்மையுற இயங்கி வருகின்றன. பல்வேறு துறைகளில் நடைபெறும் கருத்தரங்குகளும், அறிஞர்களின் சொற்பொழிவுகளும் கல்வி வளர்ச்சிக்கும், ஆய்வு வளர்ச்சிக்கும் பெரிதும் துணைபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

- பி.எல்.ஆர்.



# மகளிர் நலம் பெற...



இந்தியாவின் வளர்ச்சி, கிராமங்களின் முன்னேற்றத்தைப் பொறுத்து அமைகிறது. ஒரு வீட்டின் வளர்ச்சி பெண்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தது. ஒரு பெண் வளர்ந்தால் முன்னேற்றம் அடைந்தால் அந்தக் குடும்பமே வளர்கிறது. நமது இந்திய நாடு விவசாய நாடு ஆகும். எனவே பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மகளிர் மேம்பாட்டுத் திட்டம் தமிழக அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

பெண்களின் தரத்தை உயர்த்துவதற்குச் சிறந்த வழி அவர்களைச் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் உயர்ந்தவர்களாகச் செய்வதே ஆகும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் தென்னார்க்காடு மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஊர்களிலும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்கள் 20 நபர்களைத் தேர்ந்தெடுத்து மகளிர் மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. எட்டாம் வகுப்பு வரை படித்த 18 முதல் 55 வயது வரை உள்ள மகளிர் மன்ற உறுப்பினர்களாக்கப்பட்டு அவர்களில் ஒருவர் மன்ற ஊக்குனராக அமர்த்தப்படுகிறார்.



மகளிர் தையல் பயிற்சி

பன்னாட்டு நிதி உதவியுடன் கூடிய வேளாண் அபிவிருத்தித் திட்ட நிதியைப் பெற்று வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள கிராமத்துப் பெண்களின் மூலம் விவசாய அபிவிருத்தியும், வளர்ச்சியும் அடைய இத்திட்டம் வழிவகை செய்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள சிறு மற்றும் குறு விவசாய மகளிர் மற்றும் விளைநிலங்கள் இல்லாத மகளிரையும் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் மூலம் தெரிவு செய்து மகளிர் மன்றங்கள் அமைக்கப்படுகின்றன.

மன்றத்தில் அவர்களுக்குச் சமுதாய முன்னேற்றம் குறித்தும், விழிப்புணர்ச்சி, கல்வி, ஒற்றுமை, தன்னம்பிக்கை, சுற்றுச் சூழலுடன் சுகாதாரம், குழந்தை வளர்ப்பு, சிறுசேமிப்பு ஆகியவை குறித்தும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன.

இதில் அவர்கள் முன்னேற்றம் அடைந்தபிறகு அவர்களுக்கு அரசுத் துறை அலுவலர்கள் மூலம், துறையின் திட்டங்கள் பற்றி விளக்கி அவர்கள் தேவைப்படும் துறை சார்ந்த பணிக்குக் கடனுதவி அளிக்கப்படுகிறது; சிறு சேமிப்பு பற்றியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இதில் அவர்கள் முன்னேற்றம் அடைந்தபிறகு அவர்களுக்கு அரசாங்கத், துறை அலுவலர்கள் மூலம் துறையின் திட்டங்கள் பற்றி விளக்கி அவர்கள் தேவைப்படும் துறை சார்ந்த பணிக்கு கடனுதவி அளிக்கப்படுகிறது. சிறு விவசாயிக்கு 25 சதவிகிதம் குறு விவசாயிக்கு 33 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மகளிருக்கு 50 சதவிகிதம் மானியம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் அளிக்கப்படுகிறது. கடன் தொகையினை இந்தியன் வங்கியும், வள்ளலார் கிராம வங்கியும் அளிக்கின்றன. வறுமைக்கோட்டிலுள்ள அவர்களுக்கு நிரந்தர வருமானம் பெற்று உயர்த்திட வழிவகை செய்கின்றன.

மன்ற உறுப்பினர்களின் சிறுசேமிப்பிலிருந்து உறுப்பினர்களின் அவசரத் தேவைக்குச் சிறு கடன்பெற வழிவகை செய்கிறது. இத்திட்டத்தினால் பயனாளிகளின் வாங்கும் திறனும், தன்னிச்சையாக முடிவெடுக்கும் திறனும், எல்லா வகையான நேரங்களிலும் திறம்படச் செயல்படவும் முடிகிறது.

1991-92-ஆம் ஆண்டு "அசேபா" என்ற தொண்டு நிறுவனம் கள்ளக்குறிச்சி,சின்னசேலம், தியாகதுருகம், விருத்தாசலம் ஆகிய பகுதிகளில் 160 மகளிர் மன்றங்களைச் சார்ந்த 2,583 மகளிர்களுக்குப் பயிற்சி அளித்து, இவர்களுக்கு வேளாண்மைப் பொறியியல், வேளாண்மை,

ரெக்சின் ஆடம்பரப் பொருட்கள்





கிளிஞ்சல் அலங்காரப் பொருட்கள்

எண்ணெய்வித்து, பட்டுவளர்ப்பு, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, கதர்-கிராமத் தொழில்கள் ஆகிய தொழில்கள் செய்வதற்காக ரூ.137 இலட்சம் தொகையும், இதில் ரூ.63.74 இலட்சம் மானியமும் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையை இந்தியன் வங்கி அளித்துள்ளது.

இந்த ஆண்டு இம்மாவட்டத்தில் மேலும் 644 மகளிர்களுக்கு ரூ.40•30 இலட்சம் கடனும் இதில் ரூ.14.05 இலட்சம் மானியமும் வழங்கப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிற்கு இம்மாவட்டத்தில் கோலியனூர், மைலம், விக்ரவாண்டி, உளுந்தூர்ப்பேட்டை ஆகிய ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கோலியனூர், மைலம் ஆகிய ஒன்றியங்கள் பவ்டா என்ற தொண்டு நிறுவனத்தின் மூலமும் விக்ரவாண்டி ஒன்றியம் 'கல்வி கேந்திரா' என்ற தொண்டு நிறுவனம் மூலமும், உளுந்தூர்ப் பேட்டை ஒன்றியத்தில் ''சிட்ட்ரஸ்ட்'' என்ற தொண்டு நிறுவனம் மூலமும் மன்றங்கள் அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1993-94-ஆம் ஆண்டிற்கு சங்கராபுரம் நல்லூர், ரிஷிவந்தியம், மங்களூர், செஞ்சி, மேல்மலையனூர், வல்லம், கரக்காணம் ஆகிய ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.

தென்னார்க்காடு, சேலம், தருமபுரி ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் மூன்று ஆண்டுகளில் மொத்தம் 40,300 நபர்களுக்குப் பயிற்சி அளித்து, மன்ற உறுப்பினர்களாகச் சேர்த்து, கடன் வழங்கக் குறியீடு தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் பயிற்சிக் காலம் ஒரு மாதம் ஆகும். பயிற்சிக் கால உதவித் தொகை ரூ.300 அளிக்கப்படுகிறது. தொண்டு நிறுவனங்கள், மகளிர் மன்றங்களை அமைக்கின்றன. இத்திட்டம் மூன்று ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்டுப் பின்னர் மகளிர் மன்றங்கள் சுயமாக இயங்குமாறு தயார்ப்படுத்தப்படுகின்றன.

பயனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு ரூ.5,000 சிறு விவசாயிகளுக்கு ரூ.3,000 மிகச் சிறு விவசாயிகளுக்கு ரூ.3,000 வரையிலும் அதிகபட்சக் கடன் வழங்கப்படுகிறது. மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டவுடன், இம்மன்றம் இந்தியன் வங்கியில் கணக்கு ஆரம்பித்து உறுப்பினர்கள் தங்களால் இயன்ற தொகையினை வங்கிக் கணக்கில் போட்டு வரவேண்டும். மூன்று மாதங்களுக்குப் பிறகு இத்தொகையினை உறுப்பினர்களுக்குக்




கடனாகக் கொடுக்கப்படுகிறது. மகளிர் மன்ற உறுப்பினர்களில் கடன் பெற்று யாராவது ஒரு நபர் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டாலும் அனைவருக்கும் மறுபடியும் கடன் வழங்கப்படமாட்டாது என்ற விதிமுறையும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் சீரிய முறையில் நிறைவேற்றப்பட்டு வருவதுடன், கடன் பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் உரிய முறையில் கடனைத் திருப்பிச் செலுத்தி வருகிறார்கள் என மகளிர் மேம்பாட்டுத்திட்ட அலுவலர் திரு. டி.சீனிவாசன் தெரிவித்தார். பெண்கள் இத்திட்டத்தின் மூலம் தங்களை உயர்த்திக் கொள்வதுடன் நாட்டையும் உயர்த்துகிறார்கள். ●



பாய் முடைதல்



# நூல்நயம்

## SIDDHA SYSTEM OF TOXICOLOGY

**ஆசிரியர்:**
டாக்டர். எஸ். சிதம்பரதாணுப் பிள்ளை

**வெளியீடு:**
Siddha Medical Literature
Research Centre,
E-32, Anna Nagar (East),
Madras-600 102.

பக்கம்: 104 + 10 விலை: ரூ.100/-

**டா**க்டர் சிதம்பரதாணுப் பிள்ளை அவர்கள் சித்த மருத்துவத்தில் ஒரு வல்லுநர். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த இவரது குடும்பம் பல தலைமுறைகளாகச் சித்த மருத்துவச் சிகிச்சையளித்து வருகிறது.

இவர் இதுவரை சுமார் 60 சித்த மருத்துவப் புத்தகங்கள் எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ள Siddha System of Toxicology என்கிற இந்த நூலில், பல வகை விஷத்தினால் ஏற்படும் உடல் நலக்குறைவு, அதற்கான சிகிச்சை முறைகள் ஆகியவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உணவு மற்றும் தாவர வகைகள், இரசாயன மருத்துவப் பொருட்கள், பாம்புக்கடி, நாய்க்கடி, அட்டை முதலானவற்றால், ஏற்படும் உடல் நலக்குறைவு ஆகியவற்றிற்கு மருந்தும், சிகிச்சை முறையும், கடைப்பிடிக்க வேண்டி பத்தியமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சித்த மருத்துவர்களுக்கும், சித்த மருத்துவ முறையைப் பின்பற்றுவோருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும்.

—ஆர். ராஜசேகரன்

## சமைப்போம் ருசிப்போம்!

**ஆசிரியர்:** திருமதி பவானி விஸ்வநாத்

**வெளியீடு:**
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி.
சென்னை-600 004.

பக்கம்: 128 விலை: ரூ.14/-

**உ**யிர்வாழ நாம் உணவு உட்கொள்கிறோம். இந்த உணவு சில நேரங்களில் சுவையாகவும் சில நேரங்களில் சுவையற்றும் இருப்பதை நாம் காண்கிறோம். ருசியான உணவை எவ்வாறு தயாரிக்கலாம் என்பதை விளக்குகிறது இந்நூல்.

சாம்பார் பொடி, மசால் பொடி போன்ற பலவகையான பொடி வகைகளும், கறிகூட்டு வகைகளும் தயாரிக்க வேண்டிய பொருட்கள் மற்றும் செய்முறைப் பற்றி விவரமாகக் கூறியிருக்கிறார் ஆசிரியர்.

—ஜே.சி.

## நொண்டி நாடகம்

**ஆசிரியர்:** ந. இளங்கோ

**கிடைக்குமிடம்:**
976, டி.வி.எஸ். காலனி,
அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்,
சென்னை-600 101.

பக்கம்: 132 விலை: ரூ.18/-

**சீ**தக்காதி நொண்டி நாடகம், ஞான நொண்டி நாடகம் என்னும் பொருளில் எம்.பில். பட்டத்திற்காக, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்ட ஆய்வேடே இந்நூல்.

''ஆய்வைக் காலப் போக்கிற்காகச் செய்பவர் உண்டு; ஆய்வைப் பட்டம் பெறுவதற்காக மட்டுமே செய்பவர் உண்டு; ஆய்வை ஓர் உண்மை ஆய்வாகக் கருதிச் செய்பவர் அரிது. அவ்வாறிருக்க, இந்நூலாசிரியர் ஆய்வின் நோக்கமே தலைமையாய்க் கொண்டு நுணுகிக் காணும் முயற்சியை மேற்கொண்டவர்'' என்று இதற்கு அணிந்துரை நல்கிய டாக்டர் து. இன்னாசி கூறுவது முற்றிலும் உண்மை.

நொண்டி நாடக இலக்கியத்தின் தோற்றத்தை விளக்கும் பாங்கும், தமிழில் நொண்டி நாடகங்களைக் கூறி, நொண்டி நாடகப் பாகுபாடுகள் குறித்துத் தெரிவிக்கும் கருத்துக்களும், சீதக்காதி மற்றும் ஞான நொண்டி நாடகங் குறித்த ஒப்பீடும் நூலாசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றது. அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூல்.

—பி.வி.ஜி.

## சிந்தனைச் சோலை

**ஆசிரியர்:** ஆர்.சி. தமிழன்பன்

**வெளியீடு:**
கோமதி பதிப்பகம்,
247, அவ்வை சண்முகம் சாலை,
சென்னை-86.

பக்கம்: 256 விலை: ரூ.33/-

**சி**ந்தனையின் சிதறல்களாக இந்நூல் விளங்குகிறது. ஆசிரியரின் பழுத்த அனுபவமும், புலமைத் திறமும் ஒவ்வொன்றிலும் புலப்படுகிறது. நிலம் முதல் இறைமை ஈறாக 114 தலைப்புகளில் சிந்தனை விருந்து படைக்கிறார் அவர்.

நிலத்தின் வியர்வை நீர் ஊற்று என்றும், 'பெண்மையின் உடல் மென்மையானது, உள்ளமோ மேன்மையானது' என்றும், 'அறிவு வளர்ச்சிப் பண்ணை தான் கல்வி' என்றும், 'இயற்கைக் கூறுகளின் மறுபிறப்பே அறிவியல்' என்றும் இப்படிச் சிந்தனை ஊற்றுக்கள் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

படிக்கப் படிக்க இன்பந்தரும் இனிய வரிகள், நம் இருதயத்தைத் தொடுகின்றன; தமிழ் மொழி வளத்தை அள்ளித் தெளிக்கின்றன. தெளிந்த சிந்தனையில் மிதக்கும் தேனடைகளாக விளங்கும் இந்தச் சொல் மாலை மணக்கிறது. படித்து மகிழ வேண்டும்.

—பி.வி.ஜி.

## 'மனிதர்கள்'

**ஆசிரியர்:**
ஏர்வாடி. எஸ். இராதாகிருஷ்ணன்

**வெளியீடு:**
சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித் தெரு,
புரசைவாக்கம், சென்னை-600 007.

பக்கம்: 92 விலை: ரூ.10/-

**பா**திரியார், பெண் செயலாளர், தொழிற்சங்கத் தலைவர், அலுவலக மேலாளர், இந்தத் தலைமுறையின் பொழுதுபோக்குக் காதலைக் கண்டு குமுறும் பெரியவர், நட்புக்கு இலக்கணமாகத் திகழும் அலுவலர், பதவியின் பெருமையை உணரும் காவல்துறை அதிகாரி, காதலைப் போற்றும் கந்தசாமி ஏழ்மையை மதிக்கும் பெரியவர், சுற்றுச் சூழலைக் காக்கப் போராடும் முதியவர், மனந்திருந்தும் எழுத்தாளர், ... இப்படிப் பல துறையில் உள்ள பல மனிதர்களின், பெண்களின் குணநலன்களை அப்பட்டமாக விவரிக்கும் நூல் 'மனிதர்கள்' நல்ல தலைப்பு.

ஆரம்பித்தவுடனேயே ஆர்வத்தோடு படிக்கத் தூண்டும் நடை, ஒவ்வொரு கதையின் பிரச்சினைக்கும் தந்திருக்கும் தீர்வுகள் எதிர்பாராதவை. கதைகளுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.

—என். குமாரசாமி

## அருளும் பொருளும் தரும் அபிராமி அந்தாதி

**ஆசிரியர்:**
எம். நாராயண வேலுப்பிள்ளை

**வெளியீடு:**
செந்தில் பதிப்பகம்,
10, பொன்னுசாமி நாயக்கன் தெரு,
சென்னை-600 014.

பக்கம்: 76 விலை: ரூ.10/-

**அ**பிராமிபட்டர் எழுதிய அபிராமி அந்தாதியின் மூலமும் உரையும் எளிய இனிய நடையில் எழுதப்பெற்றுள்ளது. இந்நூலின் சிறப்பு மூல நூலாசிரியரின் வரலாற்றுடன் பாடல்களும், பதவுரைகளும் எல்லாத் திறத்தாரும் படித்துப் புரிந்து கொள்ளும்வண்ணம் அமைந்துள்ளன.

தென்னார்க்காடு மாவட்டச் சிறப்பு மலருக்கு வாழ்த்துக்கள்

## விழுப்புரம் தாலுக்கா பஸ் உரிமையாளர்கள் சங்கம்
## விழுப்புரம் - பதிவு எண் 34/89

**எம்.கே. ஷாகுல் அமீது, (எம்.கே.எஸ்.)**
**தலைவர்**
**போன்: 3323 3353 3373**

**பி. தொமினிக் சாவியோ**
**(ஜெ.ஆர்.பி.எஸ்.)**
**செயலாளர்**
**போன்: 3114**

**எம். இராமலிங்கம்**
**(பிரபு)**
**பொருளாளர்**
**போன் 3494**

**டாக்டர் ஆர் முருகையன்**
**(சுந்தரம்)**
**உதவி தலைவர்**

**ஏ. மூர்த்தி**
**(எஸ்.பி.டி.)**
**உதவி செயலாளர்**

**உறுப்பினர்கள்**

எஸ். பாத்திமா (எம்.கே.எஸ்)
ஏ. ராஜநாயகி (எஸ்பிடி)
கே. தாராபாய் (விபிஎஸ்)
க.பெ. லிபிஎஸ். குருநாதன்
கே. வசந்தா (விஎம்கே)
ஜி. சூரியகுமாரி (எஸ்ஜிஎல்பிஎஸ்)
டி. லலிதா (மனோன்மணி)
ஏ. குபேரன் (பிரபு)
வி.எம். கண்ணப்பன் (விஎம்கே)
ஏ. சீதாராமகவுண்டர் (எஸ்ஜெஎன்)
ஏ. அப்துல் சத்தார் (வசந்தம்)
வி. அப்பாவு ரெட்டியார் (சக்தி)
ஸ்ரீ ஜெயசக்தி பஸ் சர்வீஸ்
ஆர். கலியபெருமாள் (ஆர்கேஆர்)
நடனராணி பஸ் சர்வீஸ்
எஸ்.டி. பஸ் சர்வீஸ்
வி. கிருஷ்ணமூர்த்தி (ராகவேந்திரா)
ஸ்ரீ ஜெயவிலாஸ் பஸ் சர்வீஸ்
கே.வி. ராமகிருஷ்ணன் (கேவிஆர்)
டி. துரைராஜ் (பச்சையம்மாள்)
ஆர்.சி. கிருஷ்ணசாமி நாயுடு (ஆர்சிகே)
பி. கண்ணன் (பாரதி)
எம். ரவி (அமுதா)
எஸ். இப்ராகீம் (பிஸ்மில்லா)
எச். அமீர் ஜிவானிபாபா (எஸ்எம்எச்ஏ)
எம்.கே. ஜமால்மொய்தீன் (காசீம்)
மாணிக்கசாமி (எம்ஆர்டி)
ராதாகிருஷ்ணன் (எம்ஆர்வி)
ஜெயராம் பஸ் சர்வீஸ்
கிருஷ்ணன் (கேஆர்எஸ்)
கே. ஸ்ரீதர் (நாகம்மாள்)
ஜி. ராமுநாயுடு (எஸ்ஆர்கேடி)
ஜி. நடராஜன் (எஸ்ஆர்கேடி)
ஜி. பார்த்தசாரதி (எஸ்ஆர்கேடி)
வெங்கடேஸ்வரா பஸ் சர்வீஸ்



# ‘மக்கள் பணியே மகேசன் பணி’ என்ற கடமை உணர்வோடு பணியாற்றுவீர்!

## - தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் இரண்டாவது மாநில மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

அரசு நிர்வாகத்தின் அடிப்படை ஆதாரமாக இருந்து பணிபுரியும், கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின், இரண்டாம் மாநில மாநாட்டில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அரசு விழாக்களின் போதும், இயற்கையின் சீற்றத்தின் போதும், வளர்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும் போதும், அரசு சொத்துக்களைப் பாதுகாக்கும் போதும், கள்ளச்சாராயத்தைக் களைந்தெடுக்கும் போதும், மக்களின் நில உரிமைகளைப் பாதுகாக்கும் போதும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படும் போதும், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆற்றிவரும் அரிய பணிகளை, நான் நன்கு அறிவேன்.

குறிப்பாக, சென்ற ஆண்டு நான் சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்டங்களுக்குச் சென்று, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து, ஆறுதல் கூறியபோது, நீங்கள் ஆற்றி இருந்த சீரிய பணிகளை நேரில் கண்டேன். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், இரவு பகல் என்று பாராமல், எதிர்பார்ப்புகளுக்கு மேல், எழுச்சியுடன் உழைப்பவர்கள் தான் வருவாய்த்துறையினர், என்பதை நான் உணர்ந்தேன். அந்த என் கணிப்பிற்கு அடிப்படைக் காரணமானவர்களே, நீங்கள் தான், என்பதையும் நான் அறிந்தேன். இப்படித் தமிழக மக்களுக்கும், அரசிற்கும், நேரடி இணைப்புப் பாலமாக இருக்கும் உங்களை இன்று சந்திப்பதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் மாநாட்டு மலரினை வெளியிட்டதில் உவகை கொள்கிறேன்.

தமிழகத்தில் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக, வெள்ளையர்கள் காலந்தொட்டு இருந்து வந்த, முன்னாள் பகுதி நேர, வாரிசு அடிப்படையிலான கிராமக் கர்ணம், கிராம முன்சீப் முறையை மாற்றி, அரசு நிர்வாகத்தில் கிராம நிர்வாகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதில் படித்தவர்களும் இளைஞர்களும் இடம்பெற வேண்டும் என்ற அடிப்படையில், இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் என்ற பதவியினை உருவாக்கி, அதில் உங்களையெல்லாம் பணி அமரச் செய்தார். இதனால் கிராம நிர்வாகம் புதுப்பொலிவுடன் மிளிரச் செய்தார். ‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’ என்னும் தொல்காப்பியத்தின் வழக்கிற்கிணங்கச் செயல்பட்ட, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இந்த முடிவினை, சிலர் அரசியல் உள்நோக்கத்துடன் தீவிரமாக எதிர்த்தார்கள். எத்தனை எதிர்ப்புகள் வந்த போதிலும், தனது ஆட்சிக் காலம் முழுவதும், உங்களை அவர் பாதுகாத்தே வந்தார். அதன் பின் அரசியல் விபத்தின் காரணமாக ஆட்சிக்கு வந்தவர்கள், புரட்சித் தலைவரின் புகழையும், அவர் புரிந்த சாதனைகளையும், அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அந்த முயற்சியில் நீங்



**தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் இரண்டாவது மாநில மாநாட்டில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூபாய் நான்கு இலட்சத்திற்கான காசோலை வழங்கப் பட்டது.**

களும் பல தாக்குதல்களுக்கு உள்ளாக்கப் பட்டீர்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நியமித்த உங்களை, பணியில் இருந்து நீக்க வேண்டும் என்று, முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி, முழு மூச்சாக நடவடிக்கைகள் எடுத்த தருணத்தில், நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், உங்களை ஆதரித்து, அரவணைத்து, உங்களைப் பணியிலிருந்து நீக்கக் கூடாது என்று வாதாடியதையும், போராடியதையும், நினைவுகூர விரும்புகின்றேன். அதனைத் தொடர்ந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில், எங்கள் கட்சி சார்பிலேயே இதற்காகப் போராடுவோம்; ஏன் - உச்ச நீதிமன்றம் வரை சென்று வாதாடுவோம், என்று தீர்மானம் நிறைவேற்றினோம், என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

எனவே, எங்கள் கட்சியும், அரசும், உங்களை என்றென்றும் பாதுகாத்து, அரவணைத்து வரும் என்பதை, நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும், என்ற நிலையில் நீங்கள் இல்லை. இன்று நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றோம். நீங்களும் உங்களுடைய நீண்ட நாளைய கோரிக்கைகளை, அரசின் முன் வைத்திருக்கின்றீர்கள்.

உங்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும், நான் நன்கு அறிவேன். இப்பொழுதே இங்கேயே அவற்றில் முக்கியமானவைகளுக்கு, நீங்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பவைகளுக்கு, நல்ல முடிவினைக் கூற வேண்டும் என்பது தான், என்னுடைய விருப்பம். ஆனால், தற்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அரசு எடுக்க இருக்கின்ற கொள்கை முடிவுகளை, இங்கே தெரிவிக்க முடியாத சூழ் நிலையில் இருக்கின்றேன். இருப்பினும், கொள்கை முடிவாக இல்லாத உங்களின் கோரிக்கைகளுக்கு, இப்பொழுதே நல்ல முடிவுகளையும், கொள்கை முடிவாக உள்ள உங்களின் கோரிக்கைகளுக்கு, என்னுடைய கருத்துக்களை மட்டும் இங்கே தெரிவிக்க விழைகிறேன்.

1. உங்களுடைய கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்திற்கு, அரசு அங்கீகாரம் தர வேண்டும் என்பது, உங்களின் நீண்ட நாளைய கோரிக்கை. இது ஏற்றுக் கொள்ளக் கூடிய கோரிக்கை என்றே, நான் கருதுகின்றேன். தக்க முடிவுகள், விரைவில் அறிவிக்கப்படும்.

2. வருவாய்த் துறையின் அடிப் படைப் பணி, கிராம நிர்வாக பணியாக இருக்க வேண்டும், என்ற உங்களின் கோரிக்கையில் உள்ள, சாத்தியக் கூறுகளை ஆராய, அரசு ஓர் குழுவினை நியமிக்கும். அந்தக் குழு அளிக்கும் பரிந்துரைகளை ஆராய்ந்து, அரசு தக்க முடிவு எடுக்கும்.

3. ஜமாபந்தி முறையை ஒழித்து, ஆடிட் (Audit) முறையை ஏற்படுத்த வேண்டும் என்றும், பசலி தோறும் கணக்கு எழுதும் முறையை மாற்றி, எளிய முறையில், ஆண்டுக் கணக்குகளை முடிப்பது போல, கணக்குகள் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று கேட்டு வருகிறீர்கள். கிராமக் கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டியது, மிக மிக அவசியப் பணி ஆகும். பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில், ஜமாபந்தியை விட, சிறந்த மாற்று முறையை ஏற்பாடு செய்யும்வரை, இம்முறை நீடிக்கும்.

4. பொதுமக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், கிராமக் கணக்குகள் எளிதாக அமைந்திட, தற்போதுள்ள கிராமக் கணக்குகளை ஆராய்ந்து, அவற்றின் எண்ணிக்கையைக் குறைத்து, திருத்தி அமைத்து, செயல்படுத்த, அரசிற்குப் பரிந்துரைகளை வழங்க, அரசு அலுவலர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.



5. அனைத்துக் கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், வீட்டு வாடகைப்படி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, எங்கள் அரசால் ஏற்கப்பட்டு, 1.4.1993 முதல் செயல்படுத்தப்படுகிறது.

6. கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பலன் தரும் பல ஆணைகள், உடனுக்குடன் செயல்படுத்தப்படுவதில்லை என்றும், அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும் என்றும், குறிப்பிட்டுள்ளீர்கள். அரசின் ஆணைகள், உடனுக்குடன் நிறைவேற்றப்பட வேண்டுமென்று, ஏற்கெனவே ஆணைகள் வெளியிடப்பட்டிருந்தாலும், மீண்டும் அதனை வலியுறுத்தி, தக்க அறிவுரைகள் வழங்கப் படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. கிராம நிர்வாக அலுவலர்கள் அனைவரும், தேர்வாணைக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, சிறப்புத் தேர்வு வைத்து அனைவரையும், நிரந்தரப்படுத்த வேண்டும், என்ற உங்களின் கோரிக்கைகள், அரசின் தீவிரக் கவனத்தில் உள்ளன. உங்களது நலனைக் கண் எனக் காத்து வரும் இந்த அரசு, இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்து, விரைவில் தக்க முடிவுகள் எடுக்கும்.

8. நீங்கள் கட்டியுள்ள பிணை வைப்புத் தொகை, நீண்ட கால ஈட்டு வைப்புத் தொகையாக மாற்றப்படும்.

9. அரசின் நிதி நிலைமைக்கேற்ப, உங்களுக்கு, மேசை, நாற்காலி, அலமாரி போன்றவை, படிப்படியாக அளிக்கப் படும்.

10. கிராமக் கணக்குகள் எழுதுவதற்குத் தேவையான படிவங்கள், தற்பொழுது மாற்றப்பட்டுள்ள கணக்கு முறைக்குத் தக்கவாறும், நல்ல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியும், அச்சிட்டுத் தரப்படும். உங்களுக்குத் தேவையான வெள்ளைத் தாள், கார்பன் தாள், பென்சில், ரப்பர் போன்ற எழுது பொருட்களும், உரிய நேரத்தில் வழங்கப் படும்.

11. நிர்வாக வசதியை முன்னிட்டு, மாவட்டம், கோட்டம், வட்டம் ஆகியவற்றைப் பிரித்து, நிர்வாகத்தைச் செம்மைப்படுத்துவது போல், தேவைப் படுகின்ற இடங்களில், கிராமங்களையும் பிரித்து, புதிய கிராமங்கள் உருவாக்கப் படும்.



★ போற்ற வேண்டியவை உண்மை-உழைப்பு-உயர்வு; பின்பற்ற வேண்டியவை கனிவு-பணிவு-துணிவு; பேணப்பட வேண்டியவை கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு.

12. வரும் காலங்களில், ஏற்படும் காலியிடங்களைப் பூர்த்தி செய்யும் பொழுது, அரசு ஏற்கெனவே அறிவித்துள்ள கொள்கைக்கிணங்க, புதிய விகிதாச்சார அடிப்படையில், பெண்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப் பட்டவர்களும், பழங்குடி மக்களும், கிராம நிர்வாக அலுவலர்களாக, நேரடிப் பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

13. கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டைப் பகுதியிலும், மற்றும் தமிழ்நாட்டில் உள்ள குறிப்பிட்ட சில இடங்களிலும், பணிபுரியும் சுமார் 35 கிராம நிர்வாக அலுவலர்கள், தற்போது 825 ரூபாய் அடிப்படை ஊதியத்தில் பணி புரிகிறார்கள். தமிழ்நாட்டில் பணிபுரிகின்ற, மற்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு உள்ள தகுதிகள் அனைத்தையும், இவர்கள் பெற்றிருந்தால், நம் மாநிலத்தில் பணிபுரியும், மற்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்குவதைப் போல், இவர்களுக்கும் அடிப் படை ஊதியம் 975 ரூபாய் வழங்கப் படும்.

14. 10 ஆண்டுகள் பணி முடிக்காத கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. இதனைக் கருணை அடிப்படையில் தளர்த்தி, இதனால் பாதிக்கப்பட்டுள்ள 150 ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர்கள், குறைந்த பட்ச ஓய்வூதியமாவது பெறும் வகையில், புதிய கிராம நிர்வாக அமைப்பு ஏற்படுத்திய நாள் முதல், அவர்கள் பணியினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அவ்வாறு 10 ஆண்டுகள் பணி முடித்திருப்பவர்களுக்கு, ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தனை மகிழ்ச்சிகரமான செய்திகளை உங்களுக்குத் தெரிவித்ததைத் தொடர்ந்து, ஒரு சில அறிவுரைகளையும் நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன். நாட்டின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள், கிராமக் கணக்குகளின் அடிப் படையில் தான் தீட்டப்படுகின்றன. அரசின் கொள்கை முடிவுகள், கிராம நிர்வாகம் அளிக்கும் புள்ளி விவரங்களின் அடிப்படையில் தான், எடுக்கப் படுகின்றன. இத்தகைய முக்கியப் பொறுப்பில் நீங்கள் இருக்கின்றீர்கள்.

சமுதாயத்தின் அடித்தளத்தில், கடைநிலையில், வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற, எண்ணற்ற மக்களின் வாழ்வினை உயர்த்த வேண்டும், என்ற உயரிய நோக்கத்தோடு செயல்படும் எங்கள் அரசிற்கு, உறுதுணையாக இருந்து, அவர்களின் வாழ்வினைத் தூக்கி நிமிர்த்தும் எங்கள் முயற்சிக்கு, நீங்கள் முழு மனதாக ஒத்துழைக்க வேண்டும். அரசின் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில், ஆணிவேராகச் செயல்படுகின்ற பொறுப்பு, உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றது. மேலும், கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் பணியிலும், நீங்கள் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றீர்கள். உங்களது கடமைகளை நீங்கள் தவறாது ஆற்ற வேண்டும் என்று, அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களில் சிலர், தங்கள் பொறுப்புக் கிராமத்தில் குடியிருப்பதில்லை என்ற செய்தியும், என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மக்கள் உங்களை இரவு பகல் என்று பாராமல், எந்த நேரமும் அணுகி, தங்கள் குறைகளை எடுத்துக் கூற வசதியாக, நீங்கள் அனைவரும் தவறாது, அவரவர் கிராமத்திலேயே குடியிருக்க வேண்டும், என்பது தான் என் விருப்பம், இதனை ஓர் அன்புக் கட்டளையாக, நீங்கள் ஏற்பீர்கள் என்று நம்புகின்றேன்.

அரசிற்கு அவசியமான பணிகளையும், மக்களின் நலன் காக்கும் முக்கியப் பணிகளையும் செய்கின்ற நீங்கள், அரசியல், பணம், பலம், பகட்டு, மிரட்டல் போன்ற எதற்கும் ஆட்படாது, மக்கள் பணியே மகேசன் பணி, என்ற கடமை உணர்வோடு பணியாற்ற வேண்டும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் தாரக மந்திரத்தை, நெஞ்சில் நிறுத்தி, நீங்கள் பணிபுரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எங்கள் கட்சியும், எங்கள் அரசும், என்றென்றும் உங்களுக்கு அரணாகத் திகழும், உங்கள் நலன் காக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களை மேதகு ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண்சிங் அவர்களும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் சென்னை விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றனர் (24.4.93).

# செய்தியும் படமும்

இந்தியன் ரிசர்வ் வங்கியின் கவர்னர் திரு. சி.ரங்கராஜன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார். அவ்வமயம் தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்டராமன், நிதித்துறைச் செயலர் திரு. என். நாராயணன் ஆகியோர் உடனிருந்தனர் (15.4.93).





விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, ''விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம்'' எனப் பெயர் சூட்டியதற்காக, திரு. எஸ்.எஸ். ராமசாமி படையாட்சியார் அவர்களின் துணைவியார் திருமதி ஞானம்பாள் ராமசாமி படையாட்சி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார் (22.4.93).

காவல்துறையினரால் மீட்கப்பட்ட களவு போன பொருட்களை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை ராஜரத்னம் விளையாட்டரங்கில் பார்வையிட்டார் (19.4.93).



## பொது அறிவுத் தகவல்கள்

காந்தியாரின் சுயசரித்திர நூல் எது?
சத்தியசோதனை

• • •

காந்தியாரை மகாத்மா என்று முதலில் குறிப்பிட்டவர் யார்?
கவியரசர் தாகூர்

• • •

இந்தியாவின் தேசிய மலர்ச் சின்னம் யாது?
தாமரை

• • •

ஜப்பானின் தேசிய மலர்ச் சின்னம் யாது?
செர்ரி மலர்

• • •

மனித உரிமை தினமாகக் கொண்டாடப் படும் நாள் எது?
டிசம்பர் மாதம் 10-ம் தேதி

• • •

திருவண்ணாமலையுடன் தொடர்புள்ள முருக பக்தர் யார்?
அருணகிரிநாதர்

• • •

அருணகிரிநாதர்பாடிய பாக்களின் பெயர்?
திருப்புகழ்

• • •

தேவாரத்தைத் தொகுப்பதில் இராஜ ராஜருக்கு உதவியவர் யார்?
நம்பியாண்டார் நம்பி

• • •

சீக்கிய சமயத்தை நிறுவியர் யார்?
குருநானக்

• • •

உலக எழுத்தறிவு ஆண்டாகக் கொண் டாடப்பட்டது எந்த ஆண்டு?
1990

• • •

• • •

ஐக்கிய நாடுகள் சபை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
1945-ஆம் ஆண்டு

• • •

ஐக்கிய நாடுகள் தலைமையகம் எங் குள்ளது?
நியூயார்க்கில்

• • •

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள்: ஏப்ரல்-29



## சாவேந்தாப் பாவேந்தன்!

— கவிஞர் பல்லவன்

பாவேந்தன் பாட்டை-நம்
நாவேந்த வேண்டும்!
பல்லாண்டுக் காலம்-அவன்
புகழ்வாழ வேண்டும்!
—பாவேந்தன்

காவேந்தும் பூவேந்தன்! கனவேந்தும் விழிவேந்தன்
சாவேந்தாக் கவிவேந்தன்! சரித்திரம் புகழ்மாந்தன்!
—பாவேந்தன்

அய்யாவின் பாதையில் அறிவுநடை யிட்டான்!
அண்ணாவின் பரிசாலே அகல்வானைத் தொட்டான்!
பொய்ச்சாதி மதம்மீது புலிக்கோபம் கொண்டான்!
புதியதோர் உலகிற்குப் புதுப்பாதை கண்டான்!
—பாவேந்தன்

இருள்விலங்கை உடைத்தெறிந்த எழுகதிரின் தோற்றம்!
எழுத்தெல்லாம் சிங்க இடிக்குரலின் சீற்றம்!
கருஞ்சட்டைப் பெரியாரின் கருத்தேந்திக் காக்கும்!
காலங்கள் இவன்கவியைக் கல்வெட்டாய் ஏற்கும்!
—பாவேந்தன்

ஐக்கிய நாடுகள் சபையின் பலம் மிக்க உறுப்பு எது?
பாதுகாப்புச் சபை

• • •

உலகில் முதன் முதலில் வானொலி நிலையம் தோன்றிய நாடு எது?
இங்கிலாந்து - 1920

• • •

'மாணவர் பக்கம்' மாணவர்களுக்கு மட்டுமின்றி, மற்றவர்க்கும் பல அரிய செய்திகளைத் தரவல்லதாய் அமைந் துள்ளது.

அரிமா பூபாளம்
ப. முருகேச பாண்டியன்
கரப்பாடி, (கோவை)

அமெரிக்காவைச் சார்ந்த ஜான் 1840-ம் ஆண்டு சைக்கிளைக் கண்டு பிடித்தார்.

• • •



சாம்பர் ஏரி எங்குள்ளது - ராஜஸ்தானில்

• • •

உலகின் மிகப்பெரிய சுவர்க்கடிகாரம் எங்குள்ளது? - பிரான்சு நாட்டில் உள்ள பியூவைஸ் கதீட்ரலில் உள்ள அஸ்ட்ரான மிகல் கடிகாரம்.

• • •

ஒட்டகத்தின் ஆயுட்காலம்-20 ஆண்டுகள்.
யானையின் ஆயுட்காலம்-47.



# தமிழ்நாடு மின்சார வாரியம்
## வடசென்னை அனல்மின் திட்டம்
### ஒப்பந்த அறிக்கை

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக, வடசென்னை அனல்மின் திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்காக மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (இரு பிரிவு ஒப்பந்தங்கள்) மூன்று நகல்களோடு மேற்பார்வைப் பொறியாளர்/ பொதுவியல்/அனல் மின்னாக்கம்-1, மூன்றாவது தளம், நடிப்பிசைப் புலவர், கே.ஆர். இராமசாமி மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரியில் கீழே கையொப்பமிட்டவரால் வரவேற்கப் படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. பணியின் பெயர் | : | வட சென்னை அனல் மின் திட்டம் - முதல் கட்டப் பணிக்கு நிர்வாகக் கட்டடம் மேல்நிலைக் கட்டுமானப் பணி. (வேறு ஒப்பந்ததாரரால் இறக்கப்படும் நீள்பதிக் கால்களில் மேல் கட்டப்பட வேண்டும்.) |
| 2. ஒப்பந்த வரையறை எண் | : | எஸ்.இ.சி.டி.1/என்.எம்.டி.பி.பி./25 (S.E.C.T.I/N.M,T.P.P./25) |
| 3. வேலையின் உத்தேச மதிப்பு | : | ரூ.1,25,00,000 (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சங்கள்) |
| 4. பிணை வைப்புத் தொகை | : | ரூ.1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) |
| 5. ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்வதற்காக இறுதி நாளும், நேரமும் | : | மதியம் 2 மணி வரை - 26.5.93 புதன்கிழமை. |
| 6. தொழில்நுட்ப இனங்களுக்கான ஒப்பந்தங்கள் திறப்பதற்கான நாளும் நேரமும் | : | மதியம் 2 மணி 26.5.93 புதன்கிழமை. |

**2. ஒப்பந்த வரையறை ஒன்றின் விலை:**

| | | |
|---|---|---|
| தமிழ்நாட்டிற்கு | : | ரூ.500 (ரூபாய் ஐநூறு மட்டும் - ஒவ்வொன்றிற்கும்) |
| தமிழ்நாட்டிற்கு வெளியே | : | ரூ.550 (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்-ஒவ்வொன்றுக்கும்) |

அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50 கூடுதலாகச் செலுத்த வேண்டும்.

**3. ஒப்பந்தத்தை அனுப்புதல்:**

இது இரு பிரிவு ஒப்பந்த அறிவிப்பு ஆகும். எனவே, ஒப்பந்தங்கள் ஒப்பந்த வரையறைப் பகுதி 'எ3' மற்றும் பகுதி 'இ' ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி அனுப்பப்பட வேண்டும். இந்தக் கூறுகளின்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் ஏற்கப் படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

**4. அடிப்படைத் தகுதித் தேவைகள்**

ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்குக் கீழ்க்கண்ட அடிப்படைத் தகுதித் தேவை களை ஒப்பந்ததாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் அதற்கான சான்றுகளையும் சமர்ப்பிக்க வேண்டும்.

1. ஒப்பந்ததாரர்கள் முந்தைய மூன்று வருடங்களில் ஒப்பந்தங்களை இதையொத்த கட்டடங்களைக் கட்டியிருத்தல் வேண்டும். ஒன்றிலாவது ரூபாய் ஐம்பது இலட்சம் பெறுமானத்திற்கு மேற்பட்டு கட்டியிருக்க வேண்டும்.

2. ஒப்பந்ததாரர்கள் முந்தைய மூன்று வருடங்கள் ஒவ்வொன்றிலும், ரூபாய் நூறு இலட்சத்திற்குக் குறையாமல் வேலைகள் செய்திருத்தல் வேண்டும்.

3. ஒப்பந்ததாரர்கள் கீழ்க்கண்ட இயந்திரங்கள்/உபகரணங்களைத் தங்கள் கைவசம் சொந்தமாக வைத்திருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| அ. | கான்கிரீட் கலவை இயந்திரம் | : மூன்று |
| ஆ. | கட்டுமானத் தூக்கி | : இரண்டு |
| இ. | வைப்ரேட்டர் | : நான்கு |
| ஈ. | எஃகு சாரத் தகடுகள் | : 1000 சதுர மீட்டர் |
| உ. | எடை அலகு | : ஒன்று |
| ஊ. | எஃகுக் குழாய் முட்டுகள் மற்றும் தேவையான பிடிகள் | : 2000 மீட்டர்கள் |

5. ஒப்பந்த வரையறை வேண்டுவோர், தலைமை உள்தணிக்கை அலுவலருக்கு (முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணாசாலை, சென்னை-600 002) ஒப்பந்த வரையறைக்கான விலையைப் பணமாகவோ/பணவிடை வாயிலாகவோ, ஒப்பந்த வரையறை எண் குறிப்பிட்டுச் செலுத்தி பெறப்பட்ட ரசீதை இணைத்து, முழு முகவரியுடன் விண்ணப்பித்து மேற்பார்வைப் பொறியாளர்/பொதுவியல்/ அனல் மின்னாக்கம்-1 அலுவலகத்தில் 26.4.93 காலை 10.30 மணி முதல் 24.5.93 மாலை ஐந்து மணிவரை பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்த வரையறை பெறுவதற்குச் செலுத்தப்பட்ட தொகை எக்காரணத்திற்காகவும் திருப்பித்தரப்பட மாட்டாது. அஞ்சல் வாயிலாக வேண்டுவோர் ஒவ்வொரு ஒப்பந்த வரையறைக்கும் ரூ.50 கூடுதலாகச் செலுத்த வேண்டும். அஞ்சலில் அனுப்பப்படும் ஒப்பந்த வரையறை தவறிப் போனாலும், காலதாமதம் ஆனாலும் மின்சார வாரியம் பொறுப்பு ஏற்காது. ஒப்பந்த வரையறை மாற்றத்தக்கதல்ல.

குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் ஒப்பந்தங்கள் பிரிக்கப்படாமல் உடனடியாக அதற்குரிய ஒப்பந்ததாரர்களுக்குத் திருப்பி அனுப்பப்படும். பிணை வைப்புத் தொகையின்றி வந்து சேரும் ஒப்பந்தங்கள் ஏற்கப்படாமல் விடுவதற்கு ஏதுவாகும்.

6. குறைந்த மதிப்பீடு கொண்ட அல்லது மற்ற எந்த ஒரு ஒப்பந்தத்தையோ ஏற்றுக் கொள்வதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் தெரிவிக்காது எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யும் முழு உரிமை இவ்வாரியத்துக்கு உண்டு. விற்பனை செய்யப்படும் எந்த ஒரு ஒப்பந்த வரையறையில் கண்டுள்ள எந்த ஒரு நிபந்தனையும் தேவை எனக் கருதும்போது தளர்த்தவும் கைவிடவும் உள்ள உரிமை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கே உரியது.

DIPR/626/MS/93

**தலைமைப் பொறியாளர்/பொது வடிவமைப்பு**


நல்வாழ்த்துக்களுடன்

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

### புதுப்பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழிற்சங்கம் லிமிடெட் நெ.IND 61, புதுப்பேட்டை-607 108, தென்னார்க்காடு மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டம்

சங்கம் துவங்கிய நாள்: 25.3.1957

எங்கள் கூட்டுறவுச் சங்கத்தில் விசைச்செக்கில் சுத்தமான முறையில் தரமான நல்லெண்ணெய் மற்றும் மணிலா எண்ணெய் உற்பத்தி செய்து சென்னை குறளகம் கதர் கைத்தொழில் அங்காடிக்கும், சென்னை காதி கிராமோத்யோக் பவனுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் கீழ்க் காணும் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்கிறோம்.

**சங்கத்தின் விற்பனைக் கிளைகள்:**

தலைமை அலுவலகம்: புதுப்பேட்டை போன் எண். 2257
முதற்கிளை : கடைவீதி, புதுப்பேட்டை.
2-வது கிளை : காந்தி வீதி, பண்ருட்டி.
3-வது கிளை : 25வது வட்டம் நெய்வேலி டவுன்ஷிப்.

எங்கள் சங்கத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் எண்ணெய், பிண்ணாக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

''தங்களது தேவையைக் குறித்த காலத்தில் செய்து முடிப்பதே எங்களது நோக்கம்''.

**தனி அலுவலர்**
புதுப்பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர்
கூட்டுறவுக் குடிசைத் தொழில் சங்கம் லிட்.






# சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க
# கர்நாடக அரசுடன் கூட்டு முயற்சி

சந்தனக் கடத்தல் வீரப்பனையும் அவனது குழுவினரையும் பிடிக்க, தமிழக அரசு சிறப்பு வன ரோந்துக்காவல் படை ஒன்றைக் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நியமித்தது. இப்படை இரவு பகல் பாராது அடர்ந்த காடு மலைப்பகுதிகளில் திரிந்து, வீரப்பனையும் அவனது குழுவினரையும் பிடிக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றது.

9.4.93 அன்று திரு. கோபால கிருஷ்ணன் 40 அதிரடிப்படையினருடனும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினருடனும் சென்றார். பகல் 12 மணி அளவில் மேட்டூர் அருகே பாலாறு பாலத்தைத் தாண்டி, சரக்க மடுவு என்ற இடம் அருகே இரண்டு வண்டிகளுகம் சென்று கொண்டிருந்தன. முதலில் சென்ற பேருந்தில் திரு. கோபால கிருஷ்ணனும் மற்ற காவல்துறையினரும் பயணம் செய்தனர். அப்போது சற்றும் எதிர்பாராத விதத்தில், காட்டுப் பாதையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் பயங்கரச் சத்தத்துடன் வெடித்தன. முதலில் சென்ற பேருந்து, இந்தக் கண்ணி வெடியில் சிக்கித் தூள் தூளாகச் சிதறியது. பேருந்தில் பயணம் செய்த போலீசாரும், அவர்களுக்கு உதவியாகச் சென்றவர்களும் தூக்கி எறியப்பட்டனர். அதே இடத்தில் 6 போலீசார் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர். 16 பேர் படுகாயம் அடைந்தனர்.

அப்பகுதி முழுவதும் உடல்கள் தாறு மாறாகச் சிதறிக் கிடந்தன. சிலரது உடல் உறுப்புக்கள் மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன.

காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. கோபால கிருஷ்ணனின் இடது கால் முறிந்தது. அவருக்குத் தலையிலும் உடலிலும் காயங்கள் ஏற்பட்டன.

சம்பவம் நடந்தது பற்றித் தகவல் தெரிந்தவுடன், சேலத்திலிருந்த காவல் துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால் அவர்கள், சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்தார். இறந்தவர்களின் உடலைத் தகுந்த மரியாதையுடன் மேட்டூருக்குக் கொண்டு செல்லவும், காயம் அடைந்தவர்களை மருத்துவமனையில் சேர்க்கவும் தக்க ஏற்பாடுகளைச் செய்தார். இச்சம்பவம் பற்றிய விரிவான தகவலை திரு ஸ்ரீபால் அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்தார்.

இத்துயரச் சம்பவத்தைக் கேள்வியுற்ற மாண்புமிகு முதல்வர் உடனடியாகச் சேலம் விரைந்தார். இச்சம்பவம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளதாவது:

''சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்குத் தமிழக அரசால் நியமிக்கப்பட்டு உள்ள சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த 5 போலீசார், 2 வனத்துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறையினருக்கு உதவியாக இருந்த பொதுமக்கள் 15 பேர் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சி அடைந்தேன்.

''வீரம்மிக்க அவர்கள் நயவஞ்சகமான முறையில் நிலத்தின் அடியில் புதைத்து

வைக்கப்பட்டு இருந்த கண்ணி வெடிக் குண்டுகள் மூலம் கொல்லப்பட்டு உள்ளனர். அவர்களின் இறப்புக்கு எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இறந்துபோன அவர்களுடைய குடும்பத்தினருக்கும் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள் கிறேன். மேலும் 5 போலீசாரும் அவர் களுக்கு உதவியாக இருந்த பொதுமக்கள் 2 பேரும் காயம் அடைந்துள்ளனர் என் பதை அறிந்து வருத்தம் அடைகிறேன்.

"சிறப்புக் காவல் படையின் காவல் துறைக் கண்காணிப்பாளரான கே. கோபாலகிருஷ்ணனும் குண்டு வெடித்த தில் காயம் அடைந்து உள்ளார். அதிகாரி களும், காவலர்களும் இந்த தீரம்மிக்க செயலைச் செய்ததன் மூலம் பெருமை அடைகிறார்கள். எதிர்பாராவிதமான முறையில், அசாதாரணமாக நடந்துள்ள இந்தச் சம்பவத்தில் சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த 5 பேர், தங்கள் உயிரை இழந்துள்ளனர்.

"இந்தத் தாக்குதலில் இறந்த காவலர்கள் மற்றும் வனக் காவலர்களின் குடும்பத்தினருக்கு முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து தலா ரூ.3 இலட்சம் உதவித்தொகை வழங்கப் படும். இத்துடன் குடும்பநல நிதியில் இருந்து ரூ.60 ஆயிரமும் வழங்கப்படும். ஆக மொத்தம் ரூ.3 இலட்சத்து 60 ஆயிரம் வீதம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்படும். இதேபோல் காவலர் களுக்கு உதவியாக இருந்து மரணம் அடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1 இலட்சம் வழங்கப்படும்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயம் அடைந்த போலீசாருக்குத் தலா ரூ.50 ஆயிரமும், போலீசுக்கு உதவியாக இருந்த வர்களுக்கு ரூ.25 ஆயிரமும் வழங்கப் படும்.

வீரத்துக்குப் பெயர் பெற்ற தமிழகப் போலீசார் வீரப்பன் கும்பலின் அட்ட காசத்துக்கு விரைவில் முடிவு கட்டு வார்கள். வீரப்பனையும், அவனுடைய கும்பலையும் விரைவில் பிடித்து விடுவோம்.

10.4.93 இன்று காலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் சேலம் விரைந்தார்.

இறந்த காவல்துறையினர் திருவாளர்கள், சாமிநாதன், பஞ்சலிங்கம், தயாளன், ரமேஷ், சுகுமார், வனக்காவலர்கள் சீரங்கன், சண்முகம் ஆகியோரது உடல் களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள்





மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தினார். இரண்டு நிமிடம் சோக இசை ஒலிக்கப்பட்டது. காவல்துறையினர் துப்பாக்கியைத் தலைகீழாகப் பிடித்து அஞ்சலி செலுத்தினர்.

அதன்பிறகு, காயமடைந்த காவல் துறையினரை அரசு மருத்துவமனையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சந்தித்து ஆறுதல் கூறினார். அவர்களுக்கு அளிக் கப்படும் சிகிச்சை பற்றி மருத்துவக் கல்லூரி முதல்வர் திரு. வீரபாகு அவர் களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டறிந்தார். இறந்த காவல்துறையினர் குடும்பத்தினர் கண்ணீர் விட்டுக் கதறி அழுதபோது, முதல்வர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். அவர்களுக்கு அனைத்து உதவிகளும் செய்யப்படும் என மாண்புமிகு முதல்வர் உறுதியளித்தார்.

கண்ணிவெடியில் சிக்கிப்பலத்த காயம் அடைந்து சிகிச்சை பெற்றுவரும் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. கோபால கிருஷ்ணனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்தார். திரு. கோபால கிருஷ்ணனின் தாய் தந்தைக்கு ஆறுதல் கூறினார். அவரது வீரத்தையும் கடமை யுணர்வினையும் வெகுவாகப் பாராட்டி னார். அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை விபரங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.



### கர்நாடக முதல்வருடன் கூட்டு நடவடிக்கை

வீரப்பனைப் பிடிக்கத் தமிழக அரசும், கர்நாடக அரசும் கூட்டாக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசனை நடத்த சென்னை வருமாறு கர்நாடக மாநில முதல்வர் அவர்களுக்கு தமிழக முதல்வர் அவர்கள் விடுத்த அழைப்பினை ஏற்று மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. வீரப்ப மொய்லி அவர்கள் விமானம் மூலம் 11.4.93 காலை 10 மணிக்குச்





சென்னை வந்தார். முதல்வர்கள் இரு வரும் அதிகாரிகள் துணையுடன் ஆலோ சனை நடத்தினார்கள்.

கூட்டத்தில் சந்தனக் கடத்தல் வீரப் பனையும், அவனது குழுவினரையும் விரைவில் பிடிக்க அனைத்து முயற்சி களையும் மேற்கொள்ள வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது. இம்முயற்சிகளில் தமிழ்நாடு, கர்நாடக அரசு காவல் துறை யினர் ஒருங்கிணைந்து செயல்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், வீரப்பனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூ.40 இலட்சம் பரிசு வழங்குவது எனவும், இதற்காகத் தமிழ்நாடு அரசு ரூ.20 இலட்சமும், கர்நாடக அரசு ரூ.20 இலட்சமும் வழங்குவது எனவும் முடிவு செய்யப் பட்டது.

மேலும் 22.4.1993 அன்று காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"புதிய குழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்கவிருக்கும் தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் சில முக்கியப் பிரமுகர்களைப் பாதுகாக்கும் பணியில் இருக்கும் தனி பாதுகாப்புக் குழுவினர் ஆகியோர் கடமையாற்றும் போது இறந்தாலோ அல்லது நிரந்தர மாகப் பாதிக்கப்பட்டாலோ அவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். எந்த அதிகாரி இறந்தாலும் ரூ. 10 இலட்சம் வழங்கப்படும்.

"சமீபத்தில் 9.4.1993 அன்று சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் கும்பலால் கொல்லப்பட்ட சிறப்பு அதிரடிப் படை யினராகிய பஞ்சலிங்கம், சுகுமாரன், தயாளன், ரமேஷ், சுவாமிநாதன் மற்றும் வனக் காவலர்கள் சண்முகம், ஸ்ரீரங்கன் ஆகிய 7 பேர்களின் குடும்பங்களுக்கும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள உதவிகளுக்கும் மேல் இத்திட்டத்தின் கீழும் தலா 10 இலட்சம் வழங்கப்படும்.

"சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனை யும், அவனது கும்பலையும் பிடிக்கும் முயற்சியில் ஒரு அங்கமாக, புதிதாக வனப் புலனாய்வுப் பிரிவு ஒன்று உடனடியாகத் தொடங்கப்பட்டு, சிறப்பு அதிரடிப்படை யின் கீழ் செயல்படும். இப்பிரிவு, வீரப்பன், அவனது கும்பல் ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, அவர் களது நடமாட்டம் பற்றிய நுட்பமான செய்திகளையும், அவனது திட்டங்களை யும் திரட்டித் தரும்."

வீரப்பனையும் அவனைச் சேர்ந்த குழுவினரைப் பிடிப்பதில் புதிய அத்தி யாயம் தொடங்கி உள்ளது... வெற்றி வெகு தொலைவில் இல்லை.

—என். இளங்கோ

# காது, மூக்கு, தொண்டை மருத்துவம்





கே. சௌந்தரராஜன்
குழியம்பாறை

**• என் அடித்தொண்டையில் எப்போதாவது அடைபோலக் கட்டி ஏற்படும்; வலிக்கும்; சிறிது நாளில் வற்றிவிடும். ஆனால் இப்போது கொஞ்சநாளாக அந்தக் கட்டி வற்றாமல் இருக்கிறது; இதற்கிடையில் எனக்கு அல்சர் வேறு- அதற்காக மருந்து சாப்பிடலாமா- நான் என்ன செய்யலாம் டாக்டர்?**

''அல்சருக்குத் தாராளமாக மருந்து சாப்பிடலாம்; அதே நேரத்தில் தொண்டைப் பாதிப்பையும் திறமையான ஒரு டாக்டரிடம் காட்டிச்சிகிச்சை பெறுவது நல்லது. ஏனெனில், இந்த இரு கோளாறுக்கும் தொடர்பு இருக்கவும் கூடும்''.

மு. முருகேசன்,
குன்னிச்செட்டிப்பட்டி

**• அவ்வப்போது என் காதிலும் மூக்கிலும் மாறிமாறி இரத்தம் வருகிறது; கொஞ்சம் தேங்காய் எண்ணெய் விட்டால் சரியாகி விடுகிறது; எதனால் இப்படி ஏற்படுகிறது?**

''மூக்கில் இரத்தம் வருவது ஒரு வியாதி; காதில் இரத்தம் வருவது அதைவிட மோசமான வியாதி. இந்த நிலையில் உள்ள தாங்கள், காதைக் குடைவது கூடாது; எண்ணெய் விடுவதும் நல்லதல்ல. அப்படிச் செய்வதால் காதில் சீழ் பிடிக்கும்; பூஞ்சை (Fungus) வரவும் கூடும். நாளடைவில் காதே கேட்காமலும் போய்விடக் கூடும். ஏன் நீங்கள் இதற்காக ஒரு நல்ல டாக்டரிடம் காட்டி சிகிச்சை பெறக் கூடாது?''

சீனிவாஸ் பிரபு
சென்னை-90

**• 'கிளைமேட்' மாறும்போது சளி-காய்ச்சல் வரும் என்கிறோம்; அப்படி வராமலிருக்க என்ன செய்ய வேண்டும்?**

''கிளைமேட் மாறுவது மட்டு மல்ல; சளிக்கும் காய்ச்சலுக்கும் பல காரணங்கள் உண்டு. 'சி' வைட்டமின் சாப்பிடுவதோடு- சத்துள்ள உணவு, சுத்தமான காற்று, தூய்மையான சுற்றுப்புறம், உடல் பயிற்சி ஆகிய வற்றின் மூலமும் நல்ல இரத்தம் பெறுவதன் வாயிலாக அதெல்லாம் வராமல் தடுக்கலாம்''.

எஸ். ஜாகிருதீன்
காதிகானா பள்ளி-தருமபுரி

**• ஐஸ், வாழைப்பழம், ஜூஸ்- இவற்றில் என்ன சாப்பிட்டாலும் எனக்குச் சிறிது நேரத்தில் சளி பிடித்து விடுகிறது டாக்டர்; என்ன மருந்து மாத்திரை சாப்பிட்டாலும் லேசில் சரியாவதில்லை; இது ஏன் டாக்டர்?**

''நீங்கள் சளி என்று கூறுவது ஒருவேளை அலர்ஜி அல்லது சைனஸ் ஆகவும் இருக்கக்கூடும்; ஆகையால் நீங்களே கண்ட மருந்துகளையும் வாங்கி உட்கொள்ளாமல்- டாக்டரிடம் உங்கள் உடலைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்''.

டாக்டர்
கே.கே. இராமலிங்கம்
பதில்கள்
-நிறைவு-

எஸ். கிருஷ்ணமூர்த்தி
ஒரையூர்

**• எனக்கு வயது 77 ஆகிறது டாக்டர். சில நாட்களாக- என் வலது காதினுள் சிறிது நேரம் மணியடிப்பது போலிருக்கிறது; பிறகு நின்று விடுகிறது; ஆனால் வலி ஏதும் இல்லை. இதற்குக் காரணம் என்ன?**

''காதில் அப்படி ஒலி ஏற்படக் காரணம்- சாதாரணமாக, வயது காரணமாக உண்டாகும் நரம்புத் தளர்ச்சியால் இருக்கக்கூடும். நரம்பைப் பாதிக்கக்கூடிய மருந்துகளாலோ, வைரஸ் கிருமிகளாலோ ஒருவேளை அப்படி ஆகவும் கூடும். உள்காதில் கட்டி ஏற்படுவது- உள் காதுக்குத் தேவைப்படும் இரத்த ஓட்டம் குறைவது போன்றவைகளும் அதற்குக் காரணமாக இருக்கலாம்.''

வி. ராமசாமி மாரியசாமி
சடையப்புரம்

**• காது வலி காரணமாகச் சில ஆண்டுகளுக்கு முன், என் மகள் காதில் நாட்டு வைத்தியர் ஆலோசனைப்படி ஒரு பச்சிலைச்சாறு ஊற்றினோம். அதிலிருந்து சரியாகக் காது கேட்பதில்லை. நகரத்து டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்டினோம். அந்தச் சாறு விட்டதால் ஜவ்வு கிழிந்து விட்டது; அதனால்தான் இரண்டு காதும் கேட்கவில்லை என்றார்கள். இதற்கு என்ன செய்வது டாக்டர்?**

''என்ன துன்பமானாலும் சரி; காதில் பச்சிலை சாறெல்லாம் விட்டால் ஆபத்துதான்; அதனால் பலவிதக் கேடுகள் ஏற்படும். பொதுவாக, ஒரு காதில் சாறு விட்டால் அடுத்த காதும் அதனால் பாதிக்கப் படச் சாத்தியம் இல்லை. ஜவ்வில் ஓட்டை விழுந்திருந்தால், அதற்கேற்ற அறுவைச் சிகிச்சை மூலம் குணமாக்கிவிடலாம்; அப்படிச் செய்தபோதிலும்கூட காது நரம்புகள் கெடாமல் இருந்தால்தான் உங்கள் மகளின் காது, கேட்கும் திறனைப் பெறும்.''

ஆர். ராஜராஜன்
ஆனைக்குப்பம்

**• ஒருவருக்கு இருவிதக் குரலோ, கீச்சுக் குரலோ ஏற்பட என்ன காரணம்?**

''எல்லோருக்கும் வயதுக்கேற்பக் குரலும் மாறும்; ஒரு சிலர் சிறு வயதிலிருந்து பெரியவராக மாறும் போது குரல் மாற்றம் முறைப்படி ஏற்படத் தவறி இரட்டைக் குரலில் பேச்சு வரும். முறையான பேச்சுப் பயிற்சி மூலம் (Speech Therophy) அதைச் சரிப்படுத்திவிடலாம்.

''சிலருக்கு மூக்கு அடைத்துக் கொள்கிறபோதோ- சளி, அழற்சி, சைனஸ் போன்ற காரணங்களாலோ- வாயினுள்ளே மேலன்னத்தில் பிளவு ஏற்படுவதனாலோ மூக்கால் பேசுவது போன்ற ஒலி பேதம் உண்டாகக் கூடும். அறுவைச் சிகிச்சை மூலம் இதைக் குணமாக்கி விடலாம்.''

எஸ். பெரியசாமி
கரூர்

**• என்னுடைய குரல் அடிக்கடி மாறிவிடுகிறது; இது எதனால் - இதற்கு நிவாரணம் என்ன?**

''நன்றாக வளர்ந்த ஒரு ஆணிடம் தொடர்ந்தாற்போல் 15 நாட்களுக்குமேல் குரல் மாற்றம் தெரிந்தால், தொண்டையில் அவருக்குப் புற்றுநோயாகக்கூட இருக்கலாம்; அதற்கேற்றபடி சிகிச்சை மேற்கொள்' என்று மருத்துவ நூல் கூறுகிறது.

''தொண்டையில் அழற்சி ஏற்பட்டுள்ள ஒருவர், உரத்த குரலில் அதிக நேரம் விடாமல் பேசிக் கொண்டே இருந்தாலும், இவ்வாறான குரல் மாற்றம் ஏற்படக் கூடும். நேரில் பார்க்காமல் உங்களுக்கு என்ன காரணம் என்று திட்டவட்டமாக என்னால் சொல்ல முடியாது.''

...... (பெயரில்லை)
நாகமங்கலம்

**• என் மருமகளுக்கு வயது 25. சின்ன வயதிலிருந்தே தொண்டை வலி இருந்து வருகிறது. திருமணம் செய்தால் சரியாகிவிடும் என்றார்கள். கல்யாணம் ஆன பிறகும் அப்படியே இருந்ததால் ஆபரேஷன் செய்யப்பட்டது. செய்தும் பயனில்லை. அடிக்கடி தொண்டை வலியால் என் மருமகள் துடிக்கிறாள். இதுபற்றி மேலான தங்கள் ஆலோசனையைத் தெரிவிக்கவும்!**

''தொண்டை வலிக்கிறது என்றால் அதற்குச் சதை வளர்ச்சி (Tonsil) போன்ற பல காரணங்கள் உண்டு. திருமணத்திற்கும் அதற்கும் எவ்வகையிலும் சம்பந்தம் இல்லை.

''அறுவைச் சிகிச்சை செய்தும் சரியாகவில்லை என்றால் - இன்னும் கை தேர்ந்த தொண்டை மருத்துவ நிபுணர் மூலம் Endoscopy செய்து பார்த்து, உண்மை நிலையை அறிந்து அதற்கு ஏற்றபடி சிகிச்சை பெறவேண்டும்; சரியாகிவிடும்.''

அந்தோணிமுத்து,
வாலிபாளையம்

**• எனது மகளுக்கு வயது 28. அடிக்கடி மூக்கு அடைப்பும், சளியுமாக இருக்கிறது. தும்மலும் இருக்கிறது. அலர்ஜி என்றார்கள் சிலர். என் மகள் சமயத்தில் மூச்சுவிடக்கூட திணறுகிறாள். என்ன மருந்து தரலாம் டாக்டர்?**

''நீங்கள் தரும் விவரத்தைக் கொண்டு பார்த்தால், தங்கள் மகளுக்கு ஒவ்வாமை (Allergy) உண்டு போல் தெரிகிறது. இதை நீக்க, நோயாளியின் தன்மை, நோயின் நிலை ஆகியவற்றுக்கு ஏற்பப் பல வகை சிகிச்சை முறைகள் இருக்கின்றன. ஆகவே, நோயாளியைப் பார்க்காமல் நீங்கள் எழுதுவதை வைத்துச் சரியான மருந்தைக் குறிப்பிட்டெழுத என்னால் இயலாது.''

எஸ்.பி. வேலுசாமி
கே.பி. சத்திரம்

**• எனக்கு அடிக்கடி தொண்டை கட்டிக் கொள்கிறது. காதும் மந்தமாகிவிடுகிறது. இதற்கு ஏற்ற சிகிச்சை முறை என்ன?**

''தொண்டை கட்டிக் கொள்ளுவதற்கும், காது கேளாமல் போவதற்கும் அவற்றின் இடையிலான இணைப்புப் பாதையில் ஏற்படும் அடைப்பே காரணமாகும். அந்த அடிப்படையின் தன்மை அல்லது இயல்பைப் பரிசோதனை மூலம் கண்டறிந்த பிறகே இதை மருந்தால் குணப்படுத்திவிடலாமா, அல்லது அறுவைச் சிகிச்சை செய்தே ஆகவேண்டுமா என்று தீர்மானிக்க முடியும்.

''இந்த இரண்டு முறையையும் தவிர - மூச்சைச் சிறிது நேரம் இழுத்துப் பிடித்து 'தம்' கட்டும் ஒருவகைப் பயிற்சி மூலமும் எளிதில் இதைச் சரிப்படுத்தலாம். என்ன முறை மேற்கொள்ளுவது என்பதை டாக்டரே தீர்மானிக்க வேண்டும்.''

தொகுப்பு: பி.எல். ராஜேந்திரன்
புகைப்படங்கள்: ஸ்ரீதரன்





# முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம் (கணக்கு மற்றும் பணிவரவு) தமிழ்நாடு, சென்னை-600 018.

## தமிழ்நாடு அரசு சேம நலநிதி சந்தாதாரர்களின் தகவலுக்காக

பொது சேமநல நிதிக் கணக்குகள் பராமரித்தலின் செயல்திறனின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு கணிப்பொறியியல் செயல்பாட்டுமுறைக்கு (Computerisation) மாற்றியமைக்க. முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம் திட்டமிட்டு, செயலாக்கப்பட்டு முழுமையடையும் நிலையில் உள்ளது.

இதன் மூலம் சந்தாதாரர்களின் கணக்குகள் பராமரிப்பு சரியான காலகட்டம் வரை இருக்கும் என்பதுடன், இதுகாறும் தாங்கள் பெறப்பட்டதைவிட மேலும் கூடுதல் தகவல்களுடன், மிகத் துல்லியமாகவும் அளிக்க முடியும். உதாரணமாக.

1. செலுத்தப்படும் சந்தாத் தொகை மாதவாரியாக இதன்மூலம் காட்டப்படுமாதலால் சந்தாத் தொகை, கணக்கில் விடுபட்டிருப்பின் எளிதில் கண்டுபிடிக்க முடியும்.

2. முன்பணம் மற்றும் பணம் மீளப்பெறல் எந்த மாதத்தில் வழங்கப்பட்டதோ அந்த மாதத்திற்கு எதிராகக் காட்ட முடியும்.

3. கணக்கில் சேர்க்க விட்டுப்போன பழைய தொகைகளைக் கணக்கில் நேர் செய்தலையும் அதற்குண்டான வட்டித் தொகையையும் தனியாகக் காட்ட முடியும்.

மனிதச் செயல்பாட்டு முறையினின்று கணிப்பொறியியல் செயல்பாட்டு முறைக்கு மாற்றியமைக்கும்போது, அம்முறையினால் தவறுகள் ஏதும் இருக்கக்கூடாது என்பதனை உறுதி செய்ய வேண்டியிருப்பதால், இந்தச் செயல்மாற்றம் முழுமையடைய காலதாமதம் எதிர்பார்க்கப்பட்டது. அந்த வகையில் 1991-92-ஆம் ஆண்டுக்கான கணக்கு இருப்பு அறிக்கை வெளியிடுவதில் மேலும் சிறிது காலம் ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் 1991-92 ஆண்டுக்கான கணக்கு இருப்பு அறிக்கையை 1993-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் அனுப்ப தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் காலதாமதத்தினால் சந்தாதாரர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாக, இடைக்கால ஏற்பாடாகச் சந்தாதாரர்கள் முன்பணம் மற்றும் பணம் மீளப் பெறுதலுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு மார்ச்'91 வரை உள்ள இறுதி இருப்பிற்குப் பின்னர் தங்களிடம் உள்ள சந்தாத்தொகை, திரும்பச் செலுத்திய தொகை மற்றும் வழங்கலைக் கணக்கில் கொண்டு அனுமதி அளிக்குமாறு துறைகள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இதனால் ஏற்படும் சிரமங்களைச் சந்தாதாரர்கள் பொறுத்துக் கொள்வார்கள் என நம்புகின்றோம்.

முதன்மை மாநிலக் கணக்காயர்.

# பார்த்தோம் படித்தோம்



**1.4.93** இதழ் அட்டைப்படம் மிக அருமை. அத்தோடு நான்காம் பக்க அட்டையில் இடம்பெற்ற முதுமலை வனவிலங்குச் சரணாலயப் படமும் மிக நன்றாக இருந்தது.

—முத்து சுப்பிரமணியன்
சரவணம்பாக்கம்
(தெ.ஆ. மாவட்டம்).

'சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை' கட்டுரை கற்கண்டு. 'தமிழ் வளர்த்த பெரியார்' வரிசை தொடரட்டும்!

—இன்பவல்லி வாசுதேவன்
கீரைச்சாத்து

(இதேபோல இக்கட்டுரையைப் பாராட்டி மணலி, மு.இளவரசு, நெல்லை, எஸ். முருகலெட்சுமி சுந்தர ராசன் ஆகியோர் எழுதியுள்ளனர்)

'மாணவர் பக்கம்' பயனுள்ள பகுதி. பக்கங்களை அதிகப்படுத்தவும்.

—டி. பிரபு
அரியூர்

'மாணவர் பக்கம்' என் போன்ற மாணவர்களுக்குப் பயனுள்ளதாக உள்ளது.

—வி. கணேஷ்குமார்
மல்லியம்.

கவிஞர் நெ.ஆ. பூபதியின் 'குடி மறப்பீர்!' கவிதை மதுவின் தீமையை விளக்கியது. கவிஞருக்குப் பாராட்டுக்கள். 'விஷ விருட்சம்' சிறு கதையும் நன்றாக இருந்தது.

—க. பாஸ்கரன்,
நக்கம்பாடி
(நாகை-காயிதேமில்லத் மாவட்டம்)

(இதேபோல, குமராட்சி கே. சிவா சத்திரியன், தஞ்சை 'சிவாஜி நகர் ந. இராமையன், சென்னை-90 ஸ்ரீநிவாஸ் பிரபு ஆகியோர் பாராட்டி எழுதியுள்ளனர்)

மருத்துவப் பகுதி, சின்னச் சின்ன செய்திகள் பயனுள்ள பகுதிகளாகும்.

—எஸ். அப்துல்ரபீக்
சின்னசேலம்-2
மருத்துவ நிபுணர்

'காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர் டாக்டர் கே.கே. ராமலிங்கம் பதில்கள் எல்லாருக்கும் பயனுள்ளவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

—இரா. இராகவன்,
திருவரங்கம்.

மாணவர் பக்கத்தில் வரும் 'பொது அறிவுத் தகவல்கள்' பொதுவாக, எல்லாரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள செய்திகளாகும்.

—எல். சிவகு...
தேத்துறை
(தி.ச. மாவட்டம்)

'தேசிய மாணவர் படை' என்னும் கட்டுரை என் மனத்தை மிகவும் கவர்ந்தது.

—வி. சென்றாயன்
கருப்பூர் (சேலம்)



# தமிழ் வளர்த்த பெரியார்

## அறிவியல் மேதை பெ.நா. அப்புஸ்வாமி



எளிய இனிய நடையில், எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடிய வகையில், அறிவியல் நூல்கள் எழுதியவர் யார்?

சங்ககாலப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, உலகறியச் செய்தவர் யார்?

அவர்தான் 'பேனா மன்னன்' என்று புகழப்படுகிற பெ.நா. அப்புஸ்வாமி.

பெ.நா. அப்புஸ்வாமி, சென்னையில் 31.12.1891-ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தை பெயர் டாக்டர் ஏ.ஒய். நாராயண அய்யர், தாயார் இலட்சுமி அம்மாள். தொடக்கக் கல்வியைத் திருநெல்வேலியில் படித்த அவர், தம் பட்டப் படிப்பை, சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்றார். பிறகு சட்டக் கல்வியைப் படித்தபின் சென்னை உயர்நீதி மன்ற வழக்குரைஞராகப் பணியாற்றினார்.

பிரபல நாவலாசிரியர் அ.மாதவய்யா (பத்மாவதி சரித்திரம் எழுதியவர்) இவரது சிறிய தகப்பனார் மட்டுமல்ல, இவருக்குக் குருவாகவும் விளங்கினார்.

சென்னையில் பெ.நா. அப்புஸ்வாமி மயிலாப்பூர் சித்திரக்குளம் தெருவில் குடியிருந்தார். பிறகு, அடையாறில் குடியேறினார். அப்போதெல்லாம் விஞ்ஞான அறிவை வளர்க்கப் பெரிதும் பாடுபட்டார்.

1912-இல், பெ.நா. அப்புஸ்வாமிக்குத் திருமணம் நடந்தது. மனைவி பெயர் சுப்பலட்சுமி.

1917-ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளிவந்த 'தமிழர் நேசன்' என்னும் பத்திரிகையில் ''பிரபஞ்சத்தில் மனிதன் தனித்திருக்கிறானா?'' என்று ஒரு கட்டுரை எழுதினார். இதுவே இவர் எழுதிய முதல் கட்டுரையாகும்.

மாதந்தோறும் இலக்கியக் கூட்டங்களைத் தம் சொந்தச் செலவில் நடத்தினார். கூட்டத்துக்கு வருவோர் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப் பட்டன. தமிழிலக்கியம், மொழி, கம்பன் பாடல்கள் முதலான பொருள்கள் குறித்துக் கலந்துரையாடல்கள் நிகழ்ந்தன.

''வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கி, இலக்கிய ஆர்வமுடையவனாகத் தொடர்ந்து, விஞ்ஞானக் கட்டுரைகளை எழுதுகிற கிழவனாகி விட்டேன். தமிழ் இலக்கியங்களையெல்லாம், ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும். உலக இலக்கியங்களுக்கு நிகராகச் சங்க இலக்கியங்களைப் புகழ் பெற செய்ய வேண்டும் என்பதே என் இலட்சியம்'' என்று முழங்கியவர் அவர்.

''அறிவியல் எல்லா நுட்பங்களையும், அதில் அன்றாடம் நிகழும் முன்னேற்றங்களையும் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தர வேண்டும்'' என்கிற இலட்சிய நோக்கோடு அவர் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்.

''விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழில் சொல்ல முடியாது'' என்று வாதாடியவர்களின் வாயை அடைத்து, 'தமிழால் முடியும்' என்று சொன்னதுமல்லாமல், அதைச் செயலிலும் காட்டியவர் பெ.நா. அப்புஸ்வாமி.

கடினமான கருத்துக்களையும், எளிய நடையில் பாமர மக்களும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் எழுதியவர் அவர்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர் பெ.நா. அப்புஸ்வாமி.

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ்ச் சொல்லகராதி (Lexicon) தயாரிப்பில் இவருக்குப் பெரும் பங்குண்டு. இதேபோல மாரே ராஜம் வெளியிட்ட சங்க நூல்களின் சில பகுதிகள், கம்பராமாயணம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகிய நூல்களுக்கு இவரது ஆலோசனையும் அயராத உழைப்பும் பெருமளவு தேவைப் பட்டது.

மொழிபெயர்ப்புக் கலையில் இவர் ஒரு முன்னோடியாக விளங்கினார். பாரதியின் எழுத்துக்களை இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவர் நடத்திய மொழிபெயர்ப்புப் பயிலரங்கு பலருக்கும் பயனைத் தந்தது. அத்துடன், 'மொழி பெயர்ப்பாளர் துணைவன்' என்னும் அரிய நூலையும் இயற்றித் தந்திருக்கிறார்.

அறிவியல் கருத்துக்களை, பள்ளிக் குழந்தைகள்கூடப் படித்துப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் எழுதி எல்லோராலும் புகழப் பட்டவர் பெர்.நா. அப்புஸ்வாமி. அவர் எழுதிய 'அற்புத உலகம்', 'மின்சாரத்தின் விந்தை!, 'வானொலியும் ஒலிபரப்பும்', 'எக்ஸ்ரே கிர

ணங்கள்', 'அணுவின் கதை', 'விஞ்ஞானம் பேசுகிறார்', 'நீராவியின் கதை' ஆகியவை பெரியவர்கள் மட்டுமல்ல குழந்தைகளும் படிப்பதற்கேற்ற அற்புத நூல்கள். இவைபோன்று 25 நூல்களுக்கும் மேல் எழுதியவர் பெ.நா. அப்புஸ்வாமி. அவர் குழந்தைகளுக்காகப் பல பாடல்களையும் எழுதியுள்ளார். அவை பெரும்பாலும் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தவையாகும். அவை 'சித்திரப் பாடல்கள்' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளன. இதேபோல, 'சித்திர வாசகம்' என்னும் பாடநூல் வரிசை குழந்தைகளை வெகுவாகக் கவர்ந்தன. ஒரு செய்தி, இப்படி எழுதிய பாடல்களில்கூட, அவர் அறிவியல் கருத்தைச் சொல்ல மறந்ததில்லை!

பெ.நா. அப்புஸ்வாமியை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'தமிழர் நேசன்' பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரைகள் பெரும் வரவேற்புக்குள்ளாயின. பிறகு கலைமகள், கொழும்பில் வெளிவந்த வீரகேசரி ஆகியவற்றில் எழுதிய அறிவியல் கட்டுரைகள், தமிழுக்குக் கிடைத்த கலைச் செல்வங்களாகும்.

காலப்போக்கில் அவரது அரிய கட்டுரைகளைத் தாங்கி, தினமணி, கலைக்கதிர், இளம் விஞ்ஞானி ஆகிய இதழ்கள் வெளிவந்து, அறிவியல் தாகம் கொண்டோர்க்கு அரிய நெல்லிக்கனிகளாய் விளங்கின. இவைதவிர பாடநூல்கள், அறிவு நூல்கள் எனப் பலவற்றை எழுதிக் குவித்தவர் அவர்.

பெ.நா. அப்புஸ்வாமி அவர்கள் நினைத்ததை முடிக்கின்ற தன்மை கொண்டவர். தமது கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா, இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டது இல்லை. தமக்குச் சரி என்று தோன்றிய கருத்தைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறினார் அவர்.

பெ.நா. அப்புஸ்வாமி அவர்கள் எப்போதும் கோட்டும் சூட்டுமாகவே காட்சியளிப்பார். ஒல்லியான நெடிய உருவம். எண்பது வயதுக்குப் பிறகும்கூட அவர் கொஞ்சம் கூடத் தளராமல் எழுதிக் கொண்டே இருந்தார். அதில் அவர் சோர்வடையவே இல்லை. எண்பதிலும் இருபது வயது இளைஞராகவே காட்சியளித்தார். ஆழ்ந்த சிந்தனை, உழைப்பு, விடாமுயற்சி முதலான தன்மைகளை அவரிடமிருந்து இக்கால இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

பெ.நா. அப்புஸ்வாமி அவர்கள் விளையாட்டுப் பிரியரும் கூட. கால்பந்து, டென்னிஸ், கிரிக்கெட், ஹாக்கி இவை இவருக்குப் பிடித்தமான விளையாட்டுகள். இவற்றில் இவர் பதக்கங்களும், கோப்பைகளும் வாங்கியிருக்கிறார்.

இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி, தமிழ் எழுத்தாளர் சங்கம், குழந்தை எழுத்தாளர் சங்கம் ஆகியவை வெள்ளிக் கேடயங்கள் வழங்கிப்பாராட்டியுள்ளன இவரது சிறந்த கட்டுரை ஒன்றுக்காக, தமிழ் எழுத்தாளர் சங்கம் இவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கியுள்ளது.

இவரது நூல்கள் சில, சென்னைப் பல்கலைக்கழகத்தின் பரிசுகளைப் பெற்றுள்ளன. 'வானத்தைப் பார்ப்போம்!, எனும் நூல் யுனெஸ்கோ பரிசை பெற்றுள்ளது. 'பயணத்தின் கதை' மத்திய அரசின் பரிசு பெற்றுள்ளது. மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் இவருக்குப் 'பேரவைச் செம்மல்' என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

1986-ஆம் ஆண்டு மே மாதம் 16-ந் தேதி!

பெ.நா. அப்புஸ்வாமி அவர்கள் கோடை வெயிலையும் பொருட்படுத்தாமல், தம் வீட்டிலிருந்து அடையாறு கஸ்தூரிபா அஞ்சலகத்திற்குச் செல்கிறார்.

பிறகு, அங்கிருந்து வீடு நோக்கி வருகிறார். சாலையில் நிலை தடுமாறி மயங்கி விழுகிறார்.

ஆம், விழுந்தவர் எழவே இல்லை; அந்நிலையிலேயே அவர் உயிர் பிரிந்து விடுகிறது.

காலமெல்லாம் எழுதி எழுதிக் குவித்தவர், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று தமிழுக்காகத் தளராமல் உழைத்தவர். 95-வயதிலும் தொண்டாற்றிச் சிறந்தவர். அவர் மறைந்தாலும், அறிவியல் உலகம் அவர் பெயரை என்றென்றும் நினைவில் வைத்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

**பி.வி.கிரி**

---

## 'தமிழரசு' இதழில்...



மருத்துவ நிபுணர் வினா-விடைப் பகுதியில் அடுத்ததாகக் **'கண் மருத்துவம்'** இடம் பெறுகிறது!

வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு, அரசு கண் மருத்துவமனை இயக்குநரும் கண்காணிப்பாளருமான **டாக்டர் வி.எம். லோகநாதன்** அவர்கள் பதிலளிப்பார்.

கண் மருத்துவம் குறித்த வினாக்கள் அனுப்பப்பட வேண்டிய கடைசித் தேதி **16.5.1993**

வினாக்களை அஞ்சலட்டையில் எழுதவும். எழுதும்போது தலைப்பில் 'மாதம் ஒரு மருத்துவர்' என்று குறிப்பிடவும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.




16-5-1993 ரூ 1

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதிகிராஃப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR/273

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



● சத்தியமாகிய பாறையின் மீது தான் நிலையான வெற்றிக்குரிய அடிப்படைகளை அமைக்க முடியும்.

● உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை வைத்தே மலைகளைக் கூட அசைத்து விடலாம்.

# இந்த இதழில்...


| | |
|---|---|
| வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் — மாண்புமிகு முதல்வர் ஆய்வு ... | 2 |
| ரூ.1 கோடி செலவில் மெரினா மேம்பாட்டுத் திட்டம் ... | 4 |
| களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைப்பு ... | 7 |
| பசுமைப் புரட்சியில் ஒரு மைல்கல்! ... | 8 |
| டேனிடா - மக்கள் நல்வாழ்வுத் திட்டம் ... | 9 |
| மீனவர் வாழ்வில் விழிப்புணர்ச்சி ... | 15 |
| நீரின்றி அமையாது... ... | 17 |
| தேசிங்கு ராஜன் ... | 24 |
| காவல் துறையின் கனிவான பணிகள் ... | 29 |
| தென்னார்க்காடு மாவட்டத்தில் வளரும் வேளாண்மை ... | 33 |
| கோட்டகம் ரோமானியப் பொற்காசுகள் ... | 37 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ... | 39 |
| கோவை-ஊட்டி தினசரி சுற்றுலா ... | 42 |
| திருப்பூர் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ... | 45 |
| தென்னார்க்காடு மாவட்டத்தில் கனிமச் செல்வங்கள் ... | 48 |


164878


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

வைகாசித் திங்கள் - 3

மலர்:23 இதழ்:22

16-5-1993



# வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர்!

## மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

நான் இன்று (10.5.93) தலைமைச் செயலகத்தில், சென்னை நகருக்குக் குடிநீர் விநியோகம் செய்வது குறித்து ஆய்வு செய்தேன். பொதுப்பணித்துறை அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர், கைத்தறித் துறை அமைச்சர் ஆகியோர் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர். தலைமைச் செயலர், சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத் தலைவர், தமிழ்நாடு குடிநீர் வாரியத் தலைவர், தமிழ்நாடு குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர், பொறியாளர்கள், உள்ளாட்சித் துறைச் செயலர், முதல்வரின் செயலர் மற்றும் பல அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகரின் அனைத்துப் பகுதிகளுக்கு குறிப்பாக குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில், குடிநீர் விநியோகத்தை மேம்படுத்த தேவையான பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கும்படி சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கும் விரிவான அறிவுரைகளை வழங்கியுள்ளேன். ஏற்கெனவே சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம் குழாய்கள் மூலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் 7 மில்லியன் காலன் தண்ணீரையும், 242 லாரிகள் மூலமும் 168 டிராக்டர்/டிராய்லர்கள் மூலமும் 7 மில்லியன் காலன் நீரையும் விநியோகம் செய்து வருகின்றது.

லாரி, டிராக்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி நாளொன்றுக்கு 10 மில்லியன் டன் குடிநீரை விநியோகம் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். மேலும் ஆலந்தூர், மாங்காடு, நரவரிக்குப்பம், பல்லாவரம், திருநின்றவூர், கடம்பத்தூர், ஜகந்நாதபுரம், இரட்டை ஏரி ஆகிய பகுதிகளில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கொண்டு, சென்னைக்குக் கூடுதலாக 4 மில்லியன் கேலன் நீர் விநியோகிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டேன்.

இனிவரும் மாதங்களில் சென்னை நகரின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க, நெய்வேலியிலிருந்து ரயில்கள் மூலம் குடிநீர் கொண்டுவருவதுடன், லாரிகளிலும், தண்ணீர் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். நெய்வேலியிலிருந்து நீர் கொண்டுவர உடனடியாக 200 லாரிகள் பயன்படுத்தப்படும். இவ்வாறு நெய்வேலியிலிருந்து நீர் கொண்டு வருவது மே திங்கள் 20-ஆம் நாள் தொடங்கி தொடர்ந்து நடைபெறும். தேவைகளைப் பொறுத்து லாரிகளின் எண்ணிக்கை ஆயிரமாக உயர்த்தப்படும்.

குடிநீரைப் பொறுத்த மட்டில் சென்னை மாநகர மக்கள் தொடர்ந்து சந்தித்து வரும் இன்னல்களை நான் நன்கு அறிவேன். எனவே, கிருஷ்ணா நீர்த் திட்டத்தைத் தவிர, வேறு நீர் ஆதாரங்கள் இருக்கிறதாவென ஆராயும்படி அதிகாரிகளை கேட்டுள்ளேன். இது தொடர்பாக, வீராணம் ஏரியிலிருந்த நாளொன்றுக்கு 40 மில்லியன் காலன் குடிநீர் சென்னைக்குக் கிடைக்கும் என்று சுட்டிக் காட்டப்பட்டது. குடிநீர் இவ்வாறு இருப்பதையும், சென்னைக்குக் கூடுதலாக நீர் கிடைக்க நமக்குள்ள நீர் ஆதாரங்களைக் கருத்தில் கொண்டும், அதிகாரிகளின் . ஆலோசனையின் பேரில், சென்னைக்குக் கூடுதல் நீர் கிடைக்க வீராணம் நீர்த் திட்டம் நல்லதொரு நீர் ஆதாரம் என்பதை ஏற்றுக் கொண்டேன்.

எனினும், முன் வலுவூட்டப்பட்ட கான்கிரீட் குழாய்களும், அதன் பழைய தொழில் நுட்பமும் பயன் படுத்த மாட்டா. மிக நவீன தொழில் நுட்பத்தையும் சிறந்த மூலப் பொருட்கள் கொண்டு தயாரிக்கப் பட்ட குழாய்கள் மூலமும் புதிய வீராணம் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டம் 12 மாதங்களுக்குள் நிறைவேற்றப்படும். மிக நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஒரு திட்ட அறிக்கையையும், திட்டம் அமலாக்கத் தேவையான மிகக் குறுகிய காலத்தையும், அதற்குத் தேவையான நிதி ஆதாரங்களையும் ஒரு வாரத்துக்குள் தருமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளேன். அதற்குப் பிறகு இத்திட்டத்தை ஒட்டு மொத்தமாக நிறைவேற்ற, உலக டெண்டர் கோரப்படும்.

இத்திட்ட அறிக்கையைத் தயார் செய்து ஒரு வாரத்திற்குள் எனக்குச் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தையும் சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்தையும் கேட்டுள்ளேன். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேற்பார்வையில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். சென்னைக் குடிநீர் வாரியம் குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ளும்.

இப்புதிய வீராணம் குடிநீர்த் திட்டம் நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அமையும். சிறந்த தொழில்நுட்பத்துடன், பொருளாதார ரீதியில் சாத்தியமான தண்ணீர்க் குழாய்கள் இதற்குப் பயன் படுத்தப்படும்.

**(10.5.93 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிக்கை)**



# திரைப்படத் துறையில் சிறந்த சேவைக்கு 'ஜெயலலிதா விருது'

தமிழ்த் திரைப்படத் துறையில் சிறந்த சேவை புரிந்த கலை விற்பன்னர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், கலைவாணர், ராஜா சாண்டோ, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரால் கலை வித்தகர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு முதல், மேற்சொன்ன விருதுகளுடன் சேர்த்து ஒரு சிறப்பு விருதாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பெயரால் 'ஜெயலலிதா விருது' வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்த் திரைப்படத் துறையில் நடிப்பு, திரைப்பட இயக்கம், திரைக்கதை, தொழில்நுட்பம் இப்படி எந்தத் துறையிலும் மிக உன்னத அளவில் சாதனை படைத்த திரைப்படக் கலைஞருக்கு இந்தச் சிறப்பு விருதாகிய 'ஜெயலலிதா விருது' வழங்கப்படும்.

இந்த விருதுக்குரிய திரைப்படக் கலைஞர்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களே தேர்வு செய்வார். இந்தச் சிறப்பு விருதாகிய 'ஜெயலலிதா விருது' இந்த ஆண்டு நடைபெற உள்ள மாநிலத் திரைப்பட விழாவில் வழங்கப்படும்.

# திரைப்பட விருது: தேர்வுக்குழு அறிவிப்பு

1992-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் திரைப்பட விருதுகளுக்குத் தகுதியுடைய திரைப் படங்கள், நடிகர்கள், நடிகைகள், மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்து பரிந்துரைப்பதற்காக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 14 பேர் கொண்ட குழுவை அறிவித்துள்ளார். இதன் தலைவராக மாண்புமிகு நீதிபதி திரு. எஸ். பிரதாப் சிங் அவர்கள் இருப்பார். கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

1. மாண்புமிகு நீதிபதி திரு எஸ். பிரதாப் சிங் .. தலைவர்
2. திரு கே.வி. மகாதேவன், இசையமைப்பாளர் .. உறுப்பினர்
3. திரு ஏ.சி. திருலோகசந்தர், இயக்குநர் .. உறுப்பினர்
4. திரு என். பாலகிருஷ்ணன், கேமராமேன் .. உறுப்பினர்
5. திரு எம்.என். நம்பியார், திரைப்பட நடிகர் .. உறுப்பினர்
6. திரு ஆர்.கே. இராமச்சந்திரன், ஓய்வுபெற்ற எடிட்டிங் பேராசிரியர், திரைப்படக் கல்லூரி, பூனா. .. உறுப்பினர்
7. திருமதி பண்டரிபாய், திரைப்பட நடிகை .. உறுப்பினர்
8. திருமதி வாணி ஜெயராம், பின்னணிப் பாடகி .. உறுப்பினர்
9. திரு முத்துராமலிங்கம், கவிஞர் .. உறுப்பினர்
10. திருமதி மஞ்சுளா ரமேஷ், பத்திரிகை ஆசிரியர் .. உறுப்பினர்
11. திரு ஏ.எஸ். பிரகாசம், திரைப்பட இயக்குநர் .. உறுப்பினர்
12. திரு வி. இராமமூர்த்தி, ஆசிரியர், சினிமா எக்ஸ்பிரஸ் .. உறுப்பினர்
13. இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை .. உறுப்பினர்
14. தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தைச் சார்ந்த ஒருவர் .. உறுப்பினர்

# திரைப்படங்களுக்கு அரசு மானியம்!

குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தகுதியுடைய தரமான திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கி வருகிறது.

அரசு மானியத் தொகையை ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாக உயர்த்தி மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

1992-ஆம் ஆண்டு குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட 50 தகுதியுடைய தரமான திரைப்படங்களைத் தேர்வு செய்து படம் ஒன்றுக்கு ரூபாய் 3 இலட்சம் வீதம் அரசு மானியமாக வழங்கப்படும். இப்படங்களைத் தேர்வு செய்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக 8 பேர்கள் கொண்ட குழுவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இதன் தலைவராக மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு.கே.பொன்னுசாமி அவர்கள் இருப்பார். இக்குழுவில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

1. திரு ஆர்.எஸ். மனோகர்
2. திரு பி.எஸ். வீரப்பா
3. கவியரசு திரு நா. காமராசன்
4. திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப., செயலாளர், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை
5. இணை ஆணையர் (நிர்வாகம்) வணிகவரித் துறை, சென்னை-5.
6. அரசு துணைச் செயலாளர்/ இணைச் செயலாளர், உள்துறை(சினிமா), சென்னை-9.
7. முதல்வர் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சிக் கல்லூரி, தரமணி, சென்னை-113.



ரூபாய் 1 கோடி செலவில்

# மெரினா மேம்பாட்டுத் திட்டம்

**மா**ண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்த ''எழில்மிகு சென்னை 2000'' என்ற திட்டத்தில், மெரினா கடற்கரை மேம்பாட்டுத் திட்டம் ஒரு முக்கிய அம்சமாகும்.

இந்தக் கடற்கரை மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூபாய் நூறு இலட்சம் ஒதுக்கியுள்ளார்.

இதில்- வாகனங்கள் நிறுத்தும் இடத்தை மேம்படுத்துதல், கடற்கரை சாலையில் புதிய நடைபாதை அமைத்தல், மூன்று உயர்ந்த மின் கம்பங்களில் அதிக மின்சக்தி கொண்ட விளக்குகள் பொருத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக அனுமதிக்கப்பட்ட தொகையில் 50 சதவீதத்தை மாநில அரசும், மீதி 50 சதவீதத்தை சென்னை மாநகராட்சியும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

காமராசர் சாலையில் எழிலகத்திலிருந்து கலங்கரை விளக்கம் வரையிலான மெரினாவின் கிழக்குப் பகுதியில் சர்வதேசத் தரத்துக்கு ஏற்ற வகையில் நடைபாதை அமைக்கப்படும். இதன் மதிப்பு ரூ.50 இலட்சம் ஆகும்.

கடந்த 29.4.93 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந்த நடைபாதையில் பதிக்கப்படவிருக்கும் பளிங்குக் கற்களின் மாதிரியைப் பார்வையிட்டார். இந்தக் கற்களின் நிறங்களில் சில மாற்றங்கள் செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசனை வழங்கினார். அதன்படி கற்களில் தகுந்த மாறுதல் செய்யப்பட்டு முதல்வர் அவர்களுக்குக் காட்டப்பட்டது. மாறுதல் செய்யப்பட்ட கற்களின் வண்ணங்களுக்கு ஒப்புதல் அளித்து, பணிகளை மேற்கொண்டு தொடருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு ஆணையிட்டார்.



இந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு சுமார் 10 மாதக் காலங்களில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பணிகள் முடிந்த பிறகு, மெரினா கடற்கரையின் இந்தக் கிழக்கு நடைபாதை சர்வதேசத் தரத்தில் இருக்கும். இந்த நவீன நடைபாதையை அமைக்கும் நிறுவனமே இதை இரண்டு ஆண்டுகளுக்குப் பராமரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 25 இலட்சம் செலவில் விளம்பரம் செய்வதற்கான வசதிகளுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்புகள் கொண்ட அழகான கைப்பிடி வேலியை நடைபாதையை ஒட்டி அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணியை மேற்கொள்ள நன்கொடையாளர்களை அழைக்கவும் சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி, மெரினா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட பணிகளைச் சென்னை மாநகராட்சி எடுத்துக்கொண்டுள்ளது. இவற்றில் சில பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மெரினா கடற்கரைக்குப் புதிய பொலிவை ஏற்படுத்தும் வகையில் மற்ற பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

- ரூபாய் 25 இலட்சம் செலவில் மூன்று உயர்ந்த கம்பங்களில் அதிக மின் சக்தி கொண்ட மின் விளக்குகள் பொருத்துதல்.
- ரூபாய் 49.18 இலட்சம் செலவில் நடைபாதையை மேம்படுத்துதல்.
- நடைபாதையையொட்டி ரூபாய் 25 இலட்சம் செலவில் கைப்பிடி வேலி அமைத்தல்.
- ரூபாய் 22.45 இலட்சம் செலவில் வாகனங்கள் நிறுத்தும் இடத்தை மேம்படுத்துதல்.

மேற்கண்டவாறு, மெரினா கடற்கரையை அழகுபடுத்த சென்னை மாநகராட்சி 1 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட இருக்கிறது.

## தமிழரசு

### வாசகர்களுக்கு

### ஒரு முக்கிய அறிவிப்பு!

'தமிழரசு' கடந்த 22 ஆண்டுகளாக, தமிழக மக்களின் நலனுக்காக நற்றொண்டாற்றி வருவதை வாசகர்கள் நன்கறிவார்கள்.

மக்கள் வாழ்க்கைத் தரம் உயரப் பல்வேறு துறைகளின் கீழ், அரசு ஆற்றிவரும் அரும் பணிகளை அறிவிக்கும் சாதனமாகத் தமிழரசு விளங்கி வருகிறது.

அரசுச் செய்திகளோடு. கலை, இலக்கியம், அறிவியல் குறித்த பல்சுவைப் பகுதிகளும் இணைந்து இன்சுவை இதழாக இலங்கி வருகின்றது, 'தமிழரசு'.

படிக்கவும்-பயன்பெறவும்-பாதுகாக்கவும் வேண்டி, ஒவ்வொரு பக்கமும் மிக்க கவனத்துடன் தயாரிக்கப்படுகிறது. அந்த வகையில் ஒரு தரமான பத்திரிகையாக 'தமிழரசு' விளங்கி வருவதைப் பல்துறை அறிஞர் பெருமக்கள் மனதாரப் பாராட்டி வருகிறார்கள்.

அரசுச் செய்திகளை முழுமையாகத் தரும் ஒரே ஏடாக விளங்கும் தமிழரசு மிகக் குறைந்த விலையிலேயே - அதாவது ஒரு ரூபாய் விலையிலேயே இத்தனை ஆண்டுக் காலமும் வழங்கப் பட்டு வந்ததை வாசகர்கள் நன்கு அறிவார்கள்.

வாசகர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்.

வருகிற [illegible] 1993-லிருந்து 'தமிழரசு' தனிப் பிரதியின் விலை ரூ.3 ஆக உயர்த்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆண்டுச் சந்தா ரூ.[illegible], அரை ஆண்டுச் சந்தா ரூ.[illegible]) வழக்கம்போல் வாசகப் பெருமக்கள் ஆதரவு வழங்குவார்கள் என்று நம்புகிறோம்.

- ஆசிரியர்.

**TNPSC**

விளம்பர எண்.18/1993

தமிழ்நாடு பொதுப்பணியில் சமூகநலத்துறையில் பார்வையற்றோர் காப்பக பட்டறையின் கண்காணிப்பாளர் (Superintendent. Sheltered Workshop for the Blind) பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 31.5.93 அன்று மாலை 5.45 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,400-40- 1,600-50-2,300-60-2,600

(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்விற்குப் பொருந்தாது)

**வயது:** 1.7.1993 அன்று 30-க்குக் குறைவாக.

குறிப்பு: ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வயது வரம்பு இல்லை.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன)

**Qualifications as on 21.4.1993:**

(i) A degree.

(ii) B.Ed., Degree and Junior Diploma in teaching the Blind; and

(iii) Must have experience for a period of not less than three years in the field of education or training or rehabilitation of the Blind acquired from a school or Institution for the Blind.

**Notes:** (i) Destitute Widows who posses the prescribed qualifications and are found fit by getting the minimum marks for selection will be selected in preference to others who have secured even higher marks.

**Explanation:** "Destitute Widow" means a widow who have neither any means by hereself to live nor any dependent to protect her from starvation.

(2) Candidates who were holding temporary appointment as Superintendent, Scheltered Workshop for the Blind in the Social Welfare Department in the Tamil Nadu General Service on 24.7.1987 may also apply even if they do not satisfy the prescribed age-limit and qualifications.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரி பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.5.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.5.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/655/MS/93




# களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைப்பு!



சென்னையில், கடந்த 3 மாதங்களில் கொள்ளையர்களிடமிருந்து காவல்துறையினரால் மீட்கப்பட்ட, ரூ.1 கோடியே 64 ஆயிரத்து 500 மதிப்புள்ள பொருட்களை, அதன் உரிமையாளர்களிடம், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஒப்படைத்தார்.

களவுபோன பொருட்களில் 4 லாரிகள், 12 கார்கள், 8 ஆட்டோக்கள் 85 ஸ்கூட்டர்கள், 232 சைக்கிள்கள், 15 மூன்று சக்கர வண்டிகள், 959 பவுன் நகைகள், 31 கிலோ வெள்ளி மற்றும் டெலிவிஷன், வி.சி.ஆர்., பாத்திரங்கள் பட்டுச் சேலைகள், ரேடியோக்கள் ஆகியவை அடங்கும்.

இவை சென்னை, கே.கே. நகர், தியாகராயநகர், அடையாறு, கிண்டி, திருவல்லிக்கேணி, அண்ணாசாலை, அண்ணாநகர், இராயபுரம், பூக்கடை, கீழ்ப்பாக்கம், வேப்பேரி, அமிஞ்சிக்கரை, புரசைவாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள 566 வீடுகளில் திருட்டுப் போனவையாகும்.

இது தொடர்பாக 134 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 62 பேர் பழைய குற்றவாளிகள்.




இவ்வாறு மீட்கப்பட்ட இந்தப் பொருட்களை அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி, சென்னை எழும்பூர் மார்ஷல் சாலையில் உள்ள ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்தில் 19.4.93 அன்று நடைபெற்றது. அன்று காலை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ராஜரத்தினம் விளையாட்டு மைதானத்திற்கு வந்தார். அவரை, காவல்துறை குதிரைப்படை வீரர்கள் அணி வகுத்து அழைத்து வந்தனர். உள்துறைச் செயலாளர் திரு. மலைச்சாமி, காவல்துறை இயக்குநர் திரு. ஸ்ரீபால், காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு. தேவாரம், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் திரு. ராஜகோபாலன் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர்.

அதன் பிறகு, துப்பு துலக்கிய. துணை ஆணையாளர்கள் திரு. சண்முகநாதன், திரு. இளங்கோவன், உதவி ஆணையாளர்கள், காவல்துறை ஆணையாளர் ஆகியோரை முதல்வர் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

# பசுமைப்புரட்சியில் ஒரு மைல் கல்!

டாக்டர் அனுராதா கதி ராஜிவன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மைக்குத் தண்ணீர் என்பது அரிதான பொருளாகிவிட்டது. பெரும்பாலும் மழையை நம்பியே 5,385 குளங்கள் இங்கு உள்ளன. 23,400 எக்டேர் நிலங்களுக்கு 55,400 கிணறுகள் மூலம் நீர்ப்பாசனம் கிடைக்கிறது. பருவ மழைகளை நம்பியே பயிர்கள் இருக்கின்றன. நிலத்தின் மேல் உள்ள நீர் ஆதாரங்கள் நிலையானதாக இல்லை.

சோதனை அடிப்படையில் நபார்டு, நிதியுதவி வங்கி ஆகியவைகளின் ஆலோசனையின் பேரில் 'புதுவெல்' (PUDUWELL) என்ற சிறப்புச் சமூக ஆழ்குழாய்க் கிணறுகள் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 7 பிளாக்குகளில் மிகுதியாக உள்ள நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொள்ள உதவும்.

இத்திட்டத்திற்கு அரசு வேளாண்மைத்துறை ஒப்புதல் அளித்து ரூ.100 இலட்சத்தை சிறு விவசாயிகளுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும் மானியமாக வழங்கி உள்ளது. அந்தந்தப் பகுதிகளில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட, தனியார் வங்கிகளின் மூலம் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது. நில வரியையும் சமூக ஆழ்குழாய்க் கிணறுகளைப் பராமரிக்கும் செலவுகளையும் விவசாயிகளே செலுத்துவார்கள். இந்தப் 'புதுவெல்' (PUDUWELL) திட்டத்தின்கீழ் 150 முதல் 300 மீட்டர் ஆழத்திற்குக் கிணறு வெட்டி, அதற்கு 45 எச்.பி. திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்படுகிறது.

-புவியியல், நிலத்தடி நீர் ஆகியவற்றில் மாவட்ட அளவிலான நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கான இடங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தின் 'இன்ஸ்டியூட் ஆப் ரிமோட் சென்ஸிங்' (Institute of Remore Sensing)-லிருந்து நிபுணர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சமுதாய ஆழ்குழாய்க் கிணற்றுக்கும் ஒரு விவசாயிகள் சங்கம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுமார் 20-25 விவசாயிகள் ஒவ்வொரு சங்கத்திற்கும் உறுப்பினர்களாக இருப்பார்கள். ஒரு பெரிய விவசாயியின் நிலம், சிறு, நடுத்தர விவசாயிகளின் நிலங்களிடையே இருந்தால், அவரும் இந்தச் சங்கத்தின் உறுப்பினராகி இந்த வேளாண்மை ஆதாரங்களின் பலன்களை அனுபவிக்கலாம். ஆனால், அவருக்கு மானிய உதவி வழங்கப்படமாட்டாது.

இதில் பங்கு பெறுவோர்களுக்கும் அமல்படுத்தும் அலுவலர்களுக்கும் ஒரு உயர்மட்டப் பயிற்சிக்கு 'நபார்டு' ஏற்பாடு செய்துள்ளது. பயிரிடும் முறை, ஆழ்குழாய்க் கிணறுகளைப் பராமரித்தல், ஒழுங்காகக் கடனைத் திருப்பிக் கட்டுதல் ஆகியவை இப்பயிற்சியின் அங்கமாகத் திகழும். வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் (Drought Prone Area Programme) கீழ் தோண்டப்பட்ட வெற்றிகரமான ஆழ்குழாய்க் கிணறுகளை நேரில் சென்று பார்க்கவும் இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது.

தங்களுடைய ஆழ்குழாய்க் கிணறுகளைப் பராமரிக்கும் பொறுப்பு விவசாயிகள் சங்கத்தையே சாரும். இதனுடைய பராமரிப்புக்கென்று சங்கம் ஒரு நபரை நியமிக்கும். மோட்டாரின் குதிரை சக்தித் திறனுக்கேற்ப விதிக்கப்படும் நீர் வரியை வசூலிப்பது அரவது பொறுப்பாகும். அவ்வாறு வசூலிக்கப்பட்ட நீர்வரியில் குறிப்பிட்ட சதவிகிதம் அவருக்கு ஊதியமாக வழங்கப்படும்.

நிலத்தடி நீரின் தன்மையைப் பொறுத்து ஆழ்குழாய்க் கிணற்றின் ஆழம் 150 முதல் 300 மீட்டராக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கிணற்றின் ஆழத்தைப் பொறுத்து இதற்கு ரூ.3.75 இலட்சத்திலிருந்து ரூ.4.87 இலட்சத்திற்குள் செலவாகும். இதற்காக வழங்கப்படும் கடன் தொகையை ஓர் ஆண்டு விடுமுறையுடன் கூடிய 9 ஆண்டுகளுக்குள் செலுத்த வேண்டும்.

தற்பொழுது இப்பகுதியில் வாழும் விவசாயிகள், ஓராண்டிற்கு மட்டுமே அறுவடை செய்து ரூ.3000 வருமானமாகப் பெறுகிறார்கள். இக்கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் இவர்கள் ஓர் ஆண்டில் 2 முதல் 3 அறுவடைகள் செய்து ஆண்டொன்டிற்கு ரூ.15,000 வருமானமாகப் பெறுவார்கள். இத்திட்டம் பொருளாதார ரீதியில் வெற்றிகரமானதாகும். ஏனெனில், இவை கட்டி முடிக்கப்பட்ட பின்பும், நல்ல வருமானம் பெருக வழிபிறக்கும். ஒவ்வொரு கிணறும் 25 முதல் 40 ஏக்கர் வரை நிலங்களுக்குப் பயனளிக்கும். நெல், தானிய வகைகள், பருப்பு வகைகள் ஆகியவை பயிரிடப்படும். இப்பயிர்கள், குறைந்த நீரைப் பயன்படுத்திக் கொள்வதோடு குறுகிய காலத்தில் பயனளிப்பதாக உள்ளது.

தனி நபர்களின் விருப்பத்திற்கேற்ப இத்திட்டம் செயல்படுகிறது. இதன் நிபந்தனைக்கு உட்பட்ட, விருப்பமான விவசாயிகளே இதில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இதற்கு இலக்கு நிர்ணயிக்கும் முறை தவிர்க்கப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள 2000 சிறு, நடுத்தர விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இத்திட்டம் வழிவகுக்கிறது. இம்மாவட்டத்தின் பசுமைப் புரட்சியில், இத்திட்டம் ஒரு மைல் கல்லாகத் திகழும் என்பதில் ஐயமில்லை!



# டேனிடா மக்கள் நல்வாழ்வுத் திட்டம்

டாக்டர் ஜே.எஸ். சந்திரன்
திட்ட அலுவலர்
டேனிடா, கடலூர்

'தமிழ்நாடு அரசு டேனிடா திட்டம்' டென்மார்க் நிதி உதவியுடன், கிராமப்புற மக்களின் நல்வாழ்வினை மேம்படையச் செய்யும் சீரிய நோக்கத்தோடு, தமிழ் நாட்டில் தென்னார்க்காடு மற்றும் சேலம் மாவட்டங்களில் இயங்கி வருகிறது.

கிராமங்களில் நல்வாழ்வுப் பணிகளை, குறிப்பாக தாய் சேய் நலப்பணிகளை ஆற்றும் துணைச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டடம் கட்டித் தருதல், தேவையான தளவாடங்கள், மருந்துகள் வழங்குதல், ஆரம்பச் சுகாதார நிலையங்களை, துணைச் சுகாதார நிலையங்களுக்கு ஆதரவாகச் செயல்பட வளமைப் படுத்துதல், தேவையான பணியாளர்களை நியமித்தல், பயிற்சி அளித்தல், கல்வி செய்தித் தொடர்புப் பிரிவுகளுக்குக் கருவிகள் உபகரணங்கள் வழங்கி மேம்படுத்துதல், மருந்துக் கிடங்கு ஒன்று கட்டி மருந்துகளைப் பெற்று, சீராக வழங்கும் முறையை ஏற்படுத்துதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் வழியாகக் கிராமப்புற மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் முயற்சிகளை இது மேற்கொண்டுள்ளது.

இத்திட்டம், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையின் 40,000 மலைவாழ் மக்களுக்கு இதுகாறும் முழுமையாகச் சுகாதாரப் பணிகள் கிடைக்கப் பெறாமல் இருந்த நிலைமையை மாற்றி, மலைவாழ் மக்கள் நல்வாழ்வுத் திட்டம் ஒன்றினை நம் மாவட்டத்திற்கு எனச் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்துகிறது.

டேனிடா திட்டம், தமிழ்நாட்டில் 1981-ஆம் ஆண்டு முதல், மூன்று கட்டங்களில் இயங்கி வருகிறது. முதல் கட்டம் 1981 முதல் 1987 வரையிலும் இடைக்காலக் கட்டம் 1987 முதல் 1989 வரையிலும் செயல்பட்டது. 1989 முதல் 1992 வரையில் திட்டமிடப்பட்டுச் செயல்பட்ட மூன்றாம் கட்டத்தினை 1990-இல் மதிப்பீடு செய்த பிறகு இடைக்கால ஆய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேலும் 2 ஆண்டுக் காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

1981-1987 வரையிலான முதல் கட்டத்தில் சுமார் 8 கோடி ரூபாய் தென்னார்க்காடு மாவட்டத்திற்குச் செலவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்திற்காக மொத்தம் 23 கோடியில், தென்னார்க்காடு மாவட்டத்திற்கு மட்டும் ஏறத்தாழ 14 கோடி ரூபாய் நிதி தரப்பட்டுள்ளது. டென்மார்க் நாடு வழங்கும் 80 சதவிகித நிதி உதவித் தொகையாகத் தரப்படுகிறது. கடனாக அல்ல. மத்திய அரசு 5 சதவிகித நிதியினையும், தமிழக அரசு எஞ்சிய 15 சதவிகித நிதியினையும் தமது பங்காகச் செலுத்தி வருகின்றன.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த மாநில அளவில் தற்போது திருமதி ஸ்மிடா நாகராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இயக்குநரகமும், வழி நடத்திட மேல்மட்டக் குழுக்களான இத்திட்டத்தின் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட மாநிலத் திட்ட ஒருங்கிணைப்புக் குழுவும், செயல்திறன் ஆணைக் குழுவும் மாநில அளவில் நிறுவப்பட்டுள்ளன. திட்டத்தின் பல்வேறு அம்சங்களைச் செயல்படுத்திட மாநில இயக்குநர் அலுவலகமும் இரு மாவட்டங்களில் இரு திட்ட அலுவலகங்களும் செயல்படுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திட்டத்தின் மாவட்டத் திட்டக் கூர்ந்தாய்வுக் குழுத் தலைவராகச் செயல்பட்டு, பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பினை ஒருங்கிணைத்துத் திட்டம் வெற்றிபெறப் பணியாற்றுகிறார்.

டேனிடா திட்டம், நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த சுகாதாரத் துணை நிலையங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்களை வளமைப்படுத்தி நல்வாழ்வுத் துறையின் முயற்சிகளுக்கு உறுதுணையாக ஒத்துழைப்புத் தந்துதவிப் பலப்படுத்துகிறதே தவிர, தனியாகவோ, அதற்கு மாற்றாகவோ செயல்படுவது இல்லை. நல்வாழ்வுப் பணிகள் ஆற்ற இந்திய அரசு நிர்ணயித்துள்ள அளவிற்குத் தேவையான சுகாதார நிலையங்களை நிறுவவும் பணியாளர்களை நியமிக்கவும், பணியாற்றத் தேவையான பயிற்சிகள், தளவாடங்கள் கருவிகள், உபகரணங்களை உடனடியாக வழங்குகிறது. அரசு இவற்றைத் தருவதற்கு ஆகும் கால கட்டத்திற்கு முன்னதாகவே உடனடியாக வழங்கி, எவ்விதம் செயல்படலாம் என்பதனையும் கண்டறியச் செய்கிறது. நல்வாழ்வுத் துறைக்குத் துணையாகவோ இணையாகவோ செயல்படுகிறதே தவிர, அத்துறைக்கு மாற்றாகவோ, மாறாகவோ செயல்படுவதில்லை என்பதை நன்கு உணர வேண்டும்.

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு டேனிடா தன் முதல் கட்டத்தில், கிராமச் சுகாதாரச் செவிலியர்கள், பகுதிச் செவிலியர்கள், களப்பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், மருத்துவ அலுவலர்கள் தங்கிப்பணியாற்ற 285 துணைச் சுகாதார நிலைய மையக் கட்டடங்கள் 163 பெண் நல மேற்பார்வையாளர் குடியிருப்புகள், 20 மருத்துவ அலுவலர் குடியிருப்புகள் கட்டித் தந்துள்ளது. ஆரம்பச் சிகிச்சைகள் சரியாக நடைபெற 7 பொது மருந்தகங்கள் கட்டடங்கள், 20 வட்டார அளவிலான சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர்கள், 34 வட்டார அளவிலான சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள், பயிற்சி நடத்தக் கட்டடங்கள் போன்றவற்றைக் கட்டிக் கொடுத்துள்ளது. மேலும் 14 வட்டாரச் சுகாதார நிலையங்களில் அறுவைச் சிகிச்சைகளுக்கான அரங்கு



களைச் சீரமைத்துத் தந்துள்ளது. ஆரம்பச் சுகாதார நிலையங்களிலிருந்து நோயாளிகள் மேல் சிகிச்சை பெற பரிந்துரை செய்து அனுப்பபப்படுவதால் தாலுக்கா அளவிலான மருத்துவமனைகளில் குழந்தைகள் பிரிவுக் கட்டடமும், மற்றொன்றில் மகப்பேறு பிரிவுக் கட்டடமும் குளிர்ப்பதன வசதியோடு கூடிய அறுவைச் சிகிச்சை அரங்குகளும் கட்டி டேனிடா வழங்கியுள்ளது.

**குடிநீர் வசதி**

குடிநீர் வசதி ஏற்படுத்துவதில், மற்ற திட்டங்களினின்று சற்று வேறுபட்ட நல்லதொரு முறையை டேனிடா திட்டம் கடைப்பிடிக்கிறது. சுகாதார நிலையங்களுக்குக் குடிநீர் வசதிகளைக் கிராம மக்களுக்கும் பயன்படும்படி அமைத்துத் தந்துள்ளதால், சுகாதார நிலையங்களுக்கும், கிராம மக்களுக்கும் சுமுகமான தொடர்பு ஏற்பட ஏதுவாகிறது.

அனைத்துச் சுகாதார துணை நிலைய வட்டார அளவிலான ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் குடிநீர் வசதி அமைத்துத் தரப்பட்டுள்ளது.

**முன்தடுப்புப் பராமரிப்பு**

ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப் பட்டுள்ள கட்டடங்கள், வழங்கப் பட்டுள்ள இருக்கை வசதிகள், கருவிகள், உபகரணங்கள் தொடர்ந்து பழுதில்லாமல் செயல்படவும், சிறு பழுது ஏற்பட்டால் உடனே அவற்றைச் சரி செய்து, பெரிய பழுது ஏற்படுவதையும், பயனின்றிப் போவதையும் தவிர்த்திடவும் பயனுள்ள முன்தடுப்புப் பராமரிப்பு முறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. கருவிகள் உபகரணங்கள் பராமரிப்புக்கென ரூ.2000 ஆண்டுதோறும் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பழுது ஏற்பட்டால் உடனடியாகச் சரி செய்து கொள்ள மருத்துவ அலுவலருக்கு நிதி வசதி செய்து தரப் பட்டுள்ளது.

கட்டடங்களுக்கும் இருக்கைகளுக்கும் ஏற்படும் பழுதுகளை நீக்க மருத்துவ அலுவலர்கள் மதிப்பிட்டு அனுப்பும் தேவைப் பட்டியலின் படி, நிதியினை மாவட்டத் திட்ட அலுவலர் வழங்கும் முறை வழக்கில் உள்ளது.

இந்த முன்தடுப்புப் பராமரிப்பு முறை திட்டக் காலத்திற்குப் பின், நல்வாழ்வுத் துறையின் ஒரு நிரந்தர அங்கமாக மாறித் தொடர்ந்து பலன் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.





**ஆய்வகங்கள்**

டேனிடா திட்டத்தினைச் செயல் படுத்தும் தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களில் உள்ள வட்டார அளவிலான ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நோய்களைக் கண்டறியத் தேவையான இரத்த, மல, சிறுநீர்ப் பரிசோதனைகளைச் செய்திட ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு ஆண்டுதோறும் ஆய்வுகளுக்கான இரசாயன மற்றும் மூலப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கர்ப்பிணிகள், தாய்மார்கள், குழந்தைகளுக்கு இந்த ஆய்வக வசதி பெரிதும் நன்மை பயக்கின்றது. இப்பரிசோதனைகளுக்காக, கிராம மக்கள் வெகுதூரம் சென்று அவதியுறும் நிலை தவிர்க்கப்படுகிறது.

**கை கொடுக்கும் பை**

கிராமப்புறங்களில் பிரசவங்கள் நடத்தும் தாதியர்களுக்கு, நோய்க் கிருமிகளால் தாய்க்கும், சேய்க்கும் பாதிப்பு ஏற்படாதபடி, தூய்மையான முறையில் நடத்தப் பயிற்சி தரப்பட்டிருக்கிறது. இருப்பினும் பிரசவங்கள் வீட்டிலேயே நடைபெறுகிறபொழுதும், பயிற்சிபெற்ற தாதியரோ, பயிற்சி பெறாத தாதியரோ உறவினர்களில் மூத்த பெண் ஒருவரின் பிரசவம் நடத்துகிற பொழுது, சுத்தமான முறையில் பிரசவம் நடக்க ஏதுவாக ஒரு எளிய சாதனம் - பாலீதீன் பை ஒன்று வழங்கப்படுகிறது. அப்பையில், பிரசவம் நடத்துபவர்கள் கைகளைக் கழுவிக் கொள்ள சோப் துண்டு ஒன்றும், தொப்புழ் கொடியை வெட்டக் கிருமிகள் படாத பிளேடு ஒன்றும், கொடியினை வெட்டிய பின் அதைக் கட்டக் கெட்டியான நூல் துண்டு ஒன்றும், ஒரு லிட்டர் தண்ணீர் கலந்து உபயோகிக்கும் திரவம் 10 மில்லியும், கட்டுப் போடத் தேவையான பஞ்சு, கார்ச்சீலை, துணி போன்ற பொருட்கள் தேவையான அளவிலும் உள்ளன.

கர்ப்பிணிப் பெண்களிடம் இது நேரிடையாகக் கடைசி இரண ஜன்னித் தடுப்பு ஊசி போடும்பொழுது தரப்படுகிறது. அவர்களிடம் இருப்பதால் யார் எந்த இடத்தில் எப்போது பிரசவம் நடத்தினாலும் நுண் கிருமிகள் தாக்காத வகையில் சுத்தமான முறையில் பிரசவம் பார்ப்பது உறுதி செய்யப்படுகிறது. இந்த எளிய சாதனத்தின் அடக்கம் ரூ.5 மட்டுமேயானாலும், அதனால் காப்பாற்றப்படும் உயிர்கள் விலை மதிப்பற்றவை அன்றோ!

**நல்வாழ்வுப் பணிகளுக்கான மனித வள மேம்பாட்டு நிறுவனம்**

நல்வாழ்வுப் பணிகள் மக்களுக்கு உரிய நேரத்தில் (தேவையான தக்க அளவில் குறையாமல்) முறையாக, நல்ல தரத்தோடு ஆற்றப்படத் தேவையான பணியாளர்களை நியமித்து, அவர்களுடைய பணி ஊதியத்தினை அரசே ஏற்கும் காலகட்டம் வரை டேனிடா திட்டம் ஏற்றுக் கொண்டது.

**பயிற்சி**

நல்வாழ்வுப் பணிப் பயிற்சியில் பெரிய மாறுதல்களைப் புரட்சிகரமாக்கிய பெருமையும் டேனிடாவிற்கு உண்டு. சுகாதாரக் களப்பணியாளர்கள், மேற்பார்வையாளர்களுக்குத் தேவையான பயிற்சியினைப் புதிய அணுகு முறையில் நடத்தியது. மருத்துவ அலுவலர், பொது சுகாதாரச் செவிலியர், சுகாதார மேற்பார்வையாளர் கொண்ட மாவட்டப் பயிற்சிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த அணுகுமுறையினால் வகுப்பு அறை விரிவுரைகள் தவிர்க்கப்பட்டு



தேவையான திறமைக் கூர்மைப் பயிற்சி அதிகப்படுத்தப்பட்டது. இந்தப் புதிய முறையினால் பயிற்சியின் நன்மைகள் எண்ணிக்கையில் பெருகின. களப்பணியாளர்களுக்குச் செயல் திறன் கூடியதையும் கண்கூடாகக் காண முடிந்தது.

இந்தப் புதிய அணுகுமுறை நடுவண் அரசின் பயிற்சிக் கொள்கையில் இடம் பெற்றதோடு அல்லாமல், மற்ற மாநிலங்களில் மாவட்டப் பயிற்சிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று பெருமையோடு தெரிவிக்கலாம்.

மேலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் இயங்கி வந்த மூன்று மாவட்டப் பயிற்சிக் குழுக்களை ஒருங்கிணைத்து மனித வள மேம்பாட்டு நிலையம் ஒன்று விழுப்புரத்தில் நிறுவப்பட்டுள்ளது. அந்நிலையம் நல்வாழ்வுப் பணி ஆற்றுகிற அனைவர்க்கும் தாதியர் முதல் மருத்துவ அலுவலர் வரையில் அனைவர்க்கும் பணி இடைப் பயிற்சி தரும் பெரும் பொறுப்பினை ஆற்றி வருகின்றது.

இந்த மனிதவள மேம்பாட்டுப் பயிற்சி நிலையமும் இனி வரும் காலத்தில் மற்ற மாவட்டங்களுக்கு முன் மாதிரியாக ஆகும் வாய்ப்பு இருக்கிறது என்ற பெருமையும் இத்திட்டத்திற்கு உண்டு.

**சீரமைக்கப்பட்ட நல்வாழ்வுச் சேவைத் தகவல் முறை**

மற்ற நல்வாழ்வுப் பணிகள் சீரமைத்துப் பரிசோதனை செய்வது போலவே, நல்வாழ்வுச் சேவைத் தகவல்களை எளிமையான முறையில் - முழுமையான தகவல்கள் சேகரிக்கும் முறை சீரமைக்கப் பட்டது. பதிவேடுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு எளிமை ஆக்கப்பட்டது. தாய் சேய் நலப்பணிக்கும் அட்டையில் சேவைத் தகவல்கள் பதிவு செய்யும் முறையும், மாதாந்தர அறிக்கைப் படிவங்களையும், அத்தகவல்கள் கணிப்பொறியில் (கம்ப்யூட்டரில்) தொகுக்கப்படும் புதிய தொகுப்பு முறையும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இந்தப் பரிசோதனைத் திட்டம் வெற்றி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் இறுதி விளைவுகள் நம் மாநிலத்தின் நல்வாழ்வுத் துறைக்குப் பெரும் உதவியாக இருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவும் டேனிடாவின் சாதனைகளில் ஒன்றாகும்.

**கல்வித் தகவல் தொடர்புப் பிரிவு**

நல்வாழ்வுப் பணிகள் மக்களிடையே நல்ல சுகாதாரப் பழக்கங்களை நடைமுறையில் கொண்ட வாழ்க்கை முறையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு நல்வாழ்வுச் சேவைகள் மட்டும் போதாது. மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுத் தகவல்களும், நல்வாழ்வுப் பழக்கங்களுக்குத் தேவையான கல்வியும் தரப்பட வேண்டும். நலக் கல்வியினைத் திறம்பட ஆற்றி சமுதாய மற்றும் வட்டார அளவிலான ஆரம்பச் சுகாதார நிலையங்களில், வட்டாரக் கல்வி, தகவல் தொடர்புப் பிரிவுகள் ஏற்பட்டுள்ளன.

தேவையான உடனடியாக கல்வித் தகவல் கொண்ட பட்டியல்கள் பொருட்கள் தயாரிக்கவும் மற்றும் சிறு பழுதுகள் நீக்கவும் ஆண்டுதோறும் ரூ.500 வழங்கப்பட்டுள்ளது.

200 துணைச் சுகாதார நிலையங்களில் கிராமச் சுகாதாரக் குழுக்கள்



குடிசை மாற்றுவாரியத் தலைவராகவும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத் தலைவராகவும் திறம்படப் பணிபுரிந்தமைக்காகப் பெங்களூரில் (10.4.93) திருமதி ஈ.வெ.கி. சுலோசனா சம்பத் அவர்களுக்கு விஜய் ரத்னா விருது வழங்கப்பட்டது.

அமைக்கப்பட்டுள்ளன. கிராமத்தில் செல்வாக்கு உள்ள தலைவர்களையும் ஆரம்பச் சுகாதார நிலையக் களப்பணியாளர்களையும் கொண்ட இக் கிராமச் சுகாதாரக் குழுக்கள் துணைச் சுகாதார நிலையத்தைச் சார்ந்த பகுதியின் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றியும் விவாதித்து முடிவு செய்து செயல்படுகின்றன. கிராம மக்களின் ஈடுபாட்டோடு துணைச் சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் திட்டத்தில் கிராமச் சுகாதாரக் குழுக்கள் முக்கியப் பங்கு ஆற்றியுள்ளன. இது தவிர மக்கள் தொகைக் கல்விக்கருத்தரங்குகள், பிரச்சார (விளம்பரம்) நாடகங்கள், பொம்மலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் தேவையான நிதி திட்டத்தில் ஒதுக்கப்படுகிறது.

**மருந்துக் கிடங்கு**

சுகாதாரத் துணை நிலையங்களுக்கும், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் மருந்துகள் பல திட்டங்களின் சார்பில் பல நோய்த் தடுப்புத் திட்டங்களின் கணக்கில் பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு தவணைகளில் பல வழிமுறைகளில் தரப்படுகின்றன. பல்வேறு துறைகளினின்று தரப்படும் மருந்துகளைக் கணக்காகப் பெற்றுப் பாதுகாப்பாக இருப்பில் வைத்து முறையாக முறைமைப்படுத்தப்பட்ட/சீரமைக்கப்பட்ட சுகாதார மையங்களுக்கு அனுப்பிடும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்காக ரூ.17 இலட்சத்திற்குக் கூடுதலான செலவில் மருந்துக் கிடங்கு ஒன்று கட்டப்பட்டு நிறைவுபெற உள்ளது.

**கல்வராயன் மலைவாழ் மக்கள் சிறப்பு நல்வாழ்வுத் திட்டம்**

கல்வராயன் மலைப்பகுதியில் 40,000 மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அப்பகுதியின் நல்வாழ்வுக்கு எனச் சுகாதார நிலையத்தில் போதுமான அளவு இருந்தாலும் முறையாக அமைக்கப் பெறாததால், சேவைகள் முழுமையாகக் கிடைக்கப் பெறாமல் இருந்தன. போக்குவரத்து வசதியற்ற மலைப்பாங்கான 151 குடியிருப்பு வாழ்கிற மக்களுக்கு நல்வாழ்வு சேவைகள் சென்றடைய வசதியாக நல்வாழ்வு நிலையங்கள் ஏற்படுத்தப்படவும், சீரமைக்கவும் முறைப்படுத்தவும் திட்டங்கள் திட்டமிடப்பட்டுச் செயலாக்கப்படுகின்றன. 5 ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கெண்ட 5 வட்டங்களாக மாற்றி அமலாக்கப்படும். இவ்வாறு சுகாதார நிலையத்தின் சேவை சென்றடையும் பகுதிகளை எல்லைப்படுத்தி மாற்றி அமைத்து, ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு 3 அல்லது 4 துணைச் சுகாதார நிலையங்கள் இணைக்கப்படும். நல்வாழ்வுச் சேவைகள் இனி ஒதுங்கியுள்ள மலைக் கிராமங்களுள் ஊடுருவிச் சென்றடைய மற்ற துறைகளின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பு தேவை.

ஒவ்வொரு துணைச் சுகாதார நிலையத்திற்கு 2 அல்லது 3 அரசு மலைவாழ் உறைவிடப் பள்ளிகளும் 4 அல்லது 6 ஊட்டச்சத்து மையங்களும் சேர்த்திணைக்கப்படவும் இருக்கின்றன துணைச்சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ள கிராமம் இணைப்புத் தலைமையிடமாக (Co-Terminus) ஆக்கப்பட்டு மற்ற துறைகளான வளர்ச்சி, வருவாய், கல்வித்துறை போன்ற பணியாளர்களாக இணைந்து செயலாற்ற வழிவகை காணப்பட்டுள்ளது.

சிறப்புத் திட்டத்தின்கீழ், உள்ள மற்றொரு சிறப்பு அம்சம் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். மலைவாழ் மக்களுக்கு நல்வாழ்வுக் கருத்துக்களைத் தகவல்களைத் தரவும் விழிப்புணர்வு, சுகாதார அறிவு, தக்க மனோநிலை, செயல்திறன், இவைகளைப் பெருக்கவும் தேவையான வசதிகளை ஏற்படுத்தி பழக்க வழக்கங்களில் தேவையானதொரு மாற்றத்தினைத் தோற்றுவிக்கச் சிறப்பு நலக் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் நல்வாழ்வுத் துறையின் சேவை சென்றடையாத இப்பகுதியின் தனித் தன்மைகளையும், அதனால் உள்ள பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு - பல பயிற்சிகள் விவாதக் குழுக் கூட்டங்கள் விளம்பர உட்பிரிவுகள், ஒலி, ஒளிபரப்புகள் சினிமாப் படங்கள், ஸ்லைடுகள், திட்டங்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு அவற்றின் முடிவாகச் சிறப்பு நலக்கல்வித் திட்டம் 22 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.



அதன் முதற் கட்டத்தின் தொடக்கமான நலக்கல்வி விழிப்புணர்ச்சி முகாமினை கல்வராயன் மலை கோடை விழாவின்போது மாண்புமிகு வீட்டுவசதி அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி ஆகியோர் தொடங்கி வைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவாக,டேனிடாத் திட்டத்தின் சீரிய பணியின் அடையாளமாக டேனிடா திட்டத்தின் சிறப்புச் சேவைகள் டேனிடாத் திட்டத்தின் நன்கொடையாகக் கைகொடுக்கும் பை, மாவட்டப் பயிற்சிக் குழு அணுகு முறை போன்றவற்றைக் குறிப்பிட்டாலும் மலையில் திட்ட விளக்கமாகக் குன்றிலிட்ட விளக்காகக் குறிப்பிடப்பட வேண்டியது சமுதாய ஒத்துழைப்புடன் துணைச் சுகாதார நிலையங்கள் கட்டப்படும் திட்டமே ஆகும்.

வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த, இயங்கி வருகிற துணைச் சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்களைத் தரமான கட்டடங்களைக் கிராம மக்களே கட்டித் தரும் திட்டம் டேனிடாத் திட்டத்தின் மிகச் சீரிய திட்டமாகும்.

அரசின் பங்குத் தொகையான ரூ.90,000 மட்டும் டேனிடா திட்டம் வழங்குகிறது. கிராமச் சுகாதாரக் குழுத் தலைவரும் மருத்துவ அலுவலரும் இணைந்து செயல்பட்டு துணைச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தின் மொத்தமுள்ள 262 வாடகைத் துணைச் சுகாதார நிலையங்களில் 232 நிலையங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 52 துணைச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மீதியுள்ள கட்டடங்கள் வேறு வேறு நிலையில் உள்ளன. அனைத்துக் கட்டடங்களும் அக்டோபர் 1993-க்குள் கட்டி முடிக்கப்படும். இது ஒரு பெரிய சவாலாக இருப்பினும், வெற்றி பெற்று விட்டால் இது மகத்தானதொரு சாதனையாக விளங்கும். இன்னும் எஞ்சியுள்ள 30 துணைச் சுகாதார நிலையங்களுக்கும் திட்டம் விரிவாக்கம் செயல்பட்டால் இம் மாவட்டத்தின் அனைத்துத் துணைச் சுகாதார நிலையங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்கும் பெருமை தென்னார்க்காடு மாவட்டத்திற்குக் கிட்டும்.

இனி இத்திட்டமானது தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தர்மபுரி மாவட்டங்களுக்கு விரிவாக்கப்படும் என்ற தகவல் நம் எல்லோருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.


**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

TNSC BANK

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits (Effective from 1.3.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 11.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 11.00% |
| | For 1 YEAR and above | 11.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

**VIJAYA TALKIES**

**Post Box No.9**

**Panruti, South Arcot District.**

**(An upto-date Cinema House equipped with R.C.A. Double Projectors, with wide angle projection, with H.I. ARC Lamps)**

''முயற்சி திருவினையாக்கும்''
''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

''நாடும் நன் மக்களும் நன்கு தழைத்து வாழ இறைவனை வேண்டுகின்றோம்''

K.S.R. சக்கரபாணி செட்டியார்
&
R.C. குப்புசாமி செட்டியார்

உரிமையாளர்: விஜயா டாக்கிஸ்
பண்ருட்டி, தென்னார்க்காடு மாவட்டம்.





# மீனவர் வாழ்வில் விழிப்புணர்ச்சி

இரா. கண்ணன்
இயக்குநர்
பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

தமிழ்நாடு பெற்றிருக்கும் சிறப்பு அம்சங்களில் ஒன்று அதன் கிழக்கு எல்லையில் வங்காள விரிகுடாவும், தெற்கு எல்லையில் இந்துமாக் கடலும் அமைந்திருப்பதாகும். கடல் தரும் செல்வங்களைத் துய்ப்பவர் களில் கடலோர மீனவர்கள் முக் கியப் பங்கினைப் பெறுகின்றனர். அவர்கள் வாழ்வில் மீன் பிடித்தலே முக்கியத் தொழிலாக அமைகின்றது.

மீனவர்களுக்கு மீன்பிடித் தொழில் மட்டும் தெரிந்திருந்தால் போதுமா? இவ்வினாவிற்கு விடையாக 'இல்லை' என்ற பதிலே அமைகின்றது. ஏறக் குறைய 442 கிராமங்களில் 15 வயது முதல் 35 வயது வரையில் சுமார் 90,000 பேர் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருக்கக்கூடிய நிலைமை இருந்துவருகிறது. அதிலும் குறிப்பாக, மீனவப் பெண்கள் அதிக மாகக் கல்வி அறிவு இல்லாதவர் களாகக் காண்பப்படுகின்றனர்.

கல்வி அறிவு இல்லாத காரணத் தினால் மீனவர்களில் பலர் அதிக உழைப்பாளர்களாக இருந்தும் கூட, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியாத நிலை யில் உள்ளனர். இதற்குக் காரணம் எழுத்தறிவின்மையே ஆகும். சமூகத் தில் மற்றவர்களோடு தொடர்பு இல்லாமல் அவர்கள் வாழ்கின் றனர். சிலர் குடிப் ப்ழக்கம் போன்ற கெட்ட பழக்கம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். சேமிக்கும் பழக்கம் இல்லாதவர்களாகவும் உள் ளனர்.

எனவே, மீனவர்களுடைய வாழ் வில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத் தியாக வேண்டும் என்ற நோக் கோடும், அவர்கள் சமூகத்தில் உள்ள மற்றவர்களோடு தொடர்பு கொண்டு வாழவும், தமிழக அரசு அவர்களுக்காக ஓர் எழுத்தறிவு இயக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு டென்மார்க் நாட்டு 'டானிடா' அமைப்பும் உதவி செய்வதன் வாயி லாக இத்திட்டம் சிறப்பாக அமைந்து வருகின்றது. இத்திட்டத்தின் மூலம்

- எழுத்தறிவு பெறவும் கடிதங்கள் எழுதவும், வாசிக்கவும், எளிய கணித முறைகளை அறிந்து தங் களது அன்றாட வாழ்க்கையில் பயன் பெறவும்,
- தங்கள் பிரச்சினை பற்றிக் கலந்து பேசி, கூட்டுறவு முறையில் அவை களைத் தீர்க்கும் திறமைகளைப் பெறவும், சுயசார்புடையவராக இருக்கவும்,
- தங்கள் சமுதாயத்தினர்கள் ப்டும் பல இன்னல்களைத் தங்களால் தீர்க்க இயலும் என்ற தன்னம் பிக்கை கொண்டவராகவும் செயல் படும் திறமைகளைப் பெறுகின்றனர்.

இந்தக் கடலோர மீனவர்களுக் கான வயதுவந்தோர் கல்வித் திட் டத்தின் முன்னோடித் திட்டம் (Pilot Phase) 1991-92-ஆம் ஆண்டு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட் டத்தில் செயல்படுத்தப்பட்டது. இந்த முன்னோடித் திட்டத்தின்கீழ் கேளம்பாக்கம் மற்றும் திருவொற்றியூர் திட்ட அலுவலகங்களின் கீழ் 200 மையங்கள் ஓராண்டு செயல்பட்டன.

6,061 கற்போர் இந்த முன் னோடித் திட்டத்தின் கீழ் பயன் பெற்றனர். இதில் பெண்களின் ஆர்வமும், முன்னேற்றமும் குறிப் பிடும் வகையில் அமைந்திருந்தது. மீன் வளத்துறையும் இத்திட்டத்தின் வெற்றிக்குப் பெரிதும் உறுதுணை யாக இருந்து வந்தது. கற்போர்களில் 68.4 சதவிகிதம் பேர் எதிர்பார்த்த பயனைத் திறம்படப் பெற்றுள்ளனர்.

நடப்பு ஆண்டில் (1992-93) 10 திட்டங்கள் துவக்கப்பட்டுள் ளன. அவை பின்வருமாறு:

| | |
|---|---|
| செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., சென்னை மாவட்டங்கள் | - 2 திட்டங்கள். |
| தென்னார்க்காடு | - 2 திட்டங்கள் |
| நாகப்பட்டினம்-காயிதே மில்லத் | - 2 திட்டங்கள் |
| தஞ்சாவூர் | - 1 திட்டம் |
| இராமநாதபுரம் | - 2 திட்டங்கள் |
| சிதம்பரனார் | - 1 திட்டம் |
| மொத்தம் | 10 திட்டங்கள் |

இத்திட்டங்கள் மீன் வளத்துறை, சுகாதாரக் குடும்பநலத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கூட்டுறவுத் துறை, தொண்டு நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப் படுகின்றன. இதனால், மீனவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற் படும். கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவு வதன் மூலமும், பிடிக்கப்படும் மீன்களைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்ய வழிவகை ஏற் படும். பெண்கள் கூட்டுறவுச் சங் கங்கள் மூலம் பல்வேறு தொழில் களில் பயிற்சி அளிக்கவும் திட்ட மிடப்பட்டுள்ளது. அரசின் வளர்ச் சித் துறைத் திட்டங்கள் மூலம் பெற வேண்டிய பயன்களை மீனவர்கள் பெற ஏற்பாடு செய்யப்படும். மீனவர்கள் குழந்தைகள் தொடர்ந்து பள்ளிப் படிப்பை விடாமல் தொடர்வதற்கும் உதவி செய்யப் படும்.

இவ்வாறு பல்வேறு திட்டங் களின் மூலம் மீனவர்கள் பயன்பெற டானிடா உதவியுடன் கூடிய கடலோர மீனவர்களுக்கான வயது வந்தோர் கல்வித் திட்டம் செயல் படுத்தப்படும். இதன் மூலம் 30,000 மீனவர்கள் பயன்பெறுவர்.

## இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!



விவசாயிகளே!
உங்கள் நிலை உயர வேண்டாமா?
உணவு உற்பத்தியைப் பெருக்கிடவும்,
உழவுத் தொழிலுக்கு உறுதுணையாகவும்,
மீன் வளர்ப்பினைத் தொடங்கி
நாட்டின் வளத்தைப் பெருக்கிடுவோம்!
மீன் உற்பத்தியைப் பெருக்கிடுவீர்!
அதிக லாபம் பெற்றிடுவீர்!
உணவுப் பற்றாக்குறையை நீக்க
மீன்வளர்ப்பை ஏற்றிடுவீர்!
புரதச்சத்துக் குறையைப் போக்க
மீன் அதிகம் உண்ணுங்கள்!

உணவிற்கு மீன்-
உல்லாசத்திற்கு மீன்-
உடல் வலிவிற்கு மீன்-
அதிக வருவாய்க்கு மீன்!

—மேலும் விவரங்கட்கு—
தென்னார்க்காடு மாவட்ட
மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமை,
கடலூர்-607 003.

**வி.எஸ். இராதாகிருஷ்ணன்,**
தலைமை நிர்வாக அலுவலர்,
F.F.D.A. கடலூர்

**ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,**
பெருந்தலைவர்/மாவட்ட ஆட்சித் தலைவர்,
F.F.D.A., கடலூர்.





# நீரின்றி அமையாது...

தென்னார்க்காடு மாவட்டம் தமிழ் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு கடற்கரை மாவட்டம் ஆகும். தமிழ்நாட்டின் பின் தங்கிய மாவட்டங்களுள் ஒன்றாக இம்மாவட்டமும் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. செஞ்சி மற்றும் கல்வராயன் மலைக்குன்றுகள் இம் மாவட்டத்தின் முக்கிய மலைப்பகுதிகளாகும். இவை நீங்கலாக மற்ற பகுதிகள் பெரும்பாலும் சமதளமாகவே உள்ளன. இம்மாவட்டத்தின் நிலப்பரப்பு தென் கிழக்கு அல்லது கிழக்கு நோக்கி மிகவும் நிதானமாகச் சரிந்துள்ளது.

இம்மாவட்டத்தின் வழியே செல்லும் முக்கிய நதிகள் தென் பெண்ணை, கோமுகி, மணிமுத்தாறு, வெள்ளாறு, கெடிலம், வராக நதி ஆகியவையாகும். கொள்ளிடமும், வெள்ளாறும் இம் மாவட்டத்தின் தெற்கு எல்லையாக அமைந்துள்ளன. இந்த ஆறுகள் அடுத்த மாநிலத்தில் அல்லது மாவட்டங்களில் உருவெடுத்து, ஓடி, இம்மாவட்டத்தில் முடிந்து கடலுடன் கலக்கின்றன. இந் நதிகள் உருவெடுத்து ஓடும் மாநிலங்கள் அல்லது மாவட்டங்களில் இந்நதிகளின் குறுக்கே கட்டப்பட்ட அணைகளாலும், தலைமை நீர்ப் பிடிப்பு இடங்களில் பெய்யும் குறைவான மழையாலும் இந்நதிகளில் போதிய அளவு நீர் வரத்து இருப்பதில்லை.

இம்மாவட்டத்தின் மொத்த நிலப் பரப்பில் பெரும்பகுதி மலையும், மலையைச் சார்ந்த பகுதியுமாகும். எஞ்சிய பகுதி கடலைச் சார்ந்த பகுதியாக இருக்கின்றது. மலையிலும், மலையைச் சார்ந்த பகுதிகளிலும் நிலத்தடி நீர் வளம் இல்லையென்றே கூறலாம். கடலைச் சார்ந்த பகுதியில் கிடைக்கும் நிலத்தடி நீரில் கடல் நீரும் கலந்து விடுவதால் அவை வீட்டு உபயோகத்திற்கு ஏற்றதாக இருப்பது இல்லை.

மேலும் பல ஆண்டுகளாக இம் மாவட்டத்தில் தொடர்ந்து நிலவும் வறட்சியின் கொடுமையால் நிலத்தடி நீரின் அளவு நாளுக்கு நாள் பெரிதும் குறைந்து வருகின்றது. இம்மாவட்டத்தில் உள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் நிலக்கரி எடுக்க நிலத்தடி நீரை மிக ஆழத்தில் இருந்து அதிக அளவில் வெளியேற்றுவது, விவசாயம் மற்றும் பெருகி வரும் தொழிலகங்களின் தேவைக்குச் சமீப காலங்களாக நிலத்தடி நீரையே அதிகம் பயன்படுத்துவது போன்ற செயல்கள் இம்மாவட்டத்தின் நிலத்தடி நீர் வளத்தைப் பெரிதும் பாதித்துள்ளன.

இத்துணை இடர்ப்பாடுகளுக்கு இடையேயும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தென்னார்க்காடு மாவட்டத்தில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி, இங்குள்ள மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்து வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன் நரம்புச்சிலந்தி என்ற குடிநீரால் பரவும் கொடிய தொற்றுநோய் அதிகம் உள்ள மாவட்டங்களில் தென்னார்க்காடு மாவட்டமும் ஒன்று என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது இம் மாவட்டத்தில் அந்நோய் முழுவதும் அழிக்கப்பட்டுள்ளதற்கு முக்கியக் காரணம் அப்பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்பட்டதே ஆகும்.

**மக்கள் தொகையும் குடிநீர்த் தேவையும்**

இம்மாவட்டத்தில் மொத்தம் சுமார் 48,71,874 மக்கள் வசிக்கின்றார்கள். இவர்களில் கிராமங்களில் மட்டும் சுமார் 38,71,521 பேர் இருக்கின்றார்கள். மற்றவர்கள் நகரங்களில் உள்ளனர்.

நகரங்களில் உள்ள மக்கள் தங்களின் அன்றாட அனைத்து குடிநீர்த் தேவைகளும் பாதுகாக்கப்பட்ட குடிநீரையே எதிர் பார்க்கின்றார்கள். ஆனால் கிராமங்களில் வாழும் மக்களுக்கோ பருக மற்றும் சமைக்க மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. நகரங்களில் வாழும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு குறைந்தது 70 முதல் 90 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீரும், கிராமங்களில் வாழும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு குறைந்தது 40 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீரும் வழங்கப்பட வேண்டி உள்ளது. இதன்படி கணக்கிட்டால் இம்மாவட்டத்தில் வாழும் அனைத்து மக்களின் முழுத் தேவையை நிறைவு செய்ய நாள் ஒன்றுக்கு 225 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவையாய் உள்ளது. இதில் தற்பொழுது 158 மில்லியன் லிட்டர் குடிநீரே வழங்கப்படுகிறது. எஞ்சிய குறையை நிறைவு செய்யத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

**நகரங்களில் குடிநீர் நிலைமை**

இம்மாவட்டத்தில் நெய்வேலி நகரியம்

கோ. இராஜாங்கம்
மேற்பார்வைப் பொறியாளர்
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
கடலூர்

நீங்கலாக 7 நகராட்சிகளும் 7 நகரப் பேரூராட்சிகளும், மற்றும் 24 ஊரகப் பேரூராட்சிகளும் உள்ளன. இவற்றுள் இன்று அனைத்து நகராட்சிகள், நகரப் பேரூராட்சிகள் மற்றும் 22 ஊரகப் பேரூராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. எஞ்சிய 2 ஊரகப் பேரூராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தர ஆவன மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நகரங்களில் உள்ள வசதிகளிலும், நாகரீகத்திலும், மோகம் கொண்டு அங்கு குடியேறும் மக்களாலும், நகரங்களில் வாழும் மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீரையே தங்களின் அன்றாட அனைத்து உபயோகத்திற்கும் பயன் படுத்துவதாலும், மக்கள் பெருக்கத்தாலும் குடிநீர் வசதி அளிக்கப்பட்ட பல நகரங் களில் தற்பொழுது குடிநீர்ப் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது.

இம்மாவட்டத்தில் இவ்வாண்டு (1992-93) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியே இல்லாத அரகண்டநல்லூர், மரக்காணம், வடலூர் ஆகிய நகரங் களுக்கு ரூ.121.24 இலட்சங்கள் மதிப்பீட்டில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டு அஃது சுமார் 36,000 மக்களுக்குப் பயன் அளிக்கின்றது. மேலும் விருத்தாசலம் (வட பகுதி-ஒன்று) திண்டிவனம் ஆகிய குடிநீர்ப் பற்றாக் குறை உள்ள நகரங்களுக்கு ரூ.206.41 இலட்சங்கள் மதிப்பீட்டில் குடிநீர் விரி வாக்கத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அதன்மூலம் 78,600 மக்கள் பயன் பெறுகின்றனர்.

இவை நீங்கலாக இன்று வரை பாது காக்கப்பீட்ட குடிநீர் வசதியே இல்லாமல் இருந்த செஞ்சி, அனந்தாபுரம், சேத்தியா தோப்பு, மேல்பட்டாம்பாக்கம், கங்கை கொண்டான், இலால்பேட்டை ஆகிய நகரங்களுக்கு ரூ.636.78 இலட்சங்கள் மதிப்பீட்டில் புதிய பாதுகாக்கப்பட்ட குடி நீர்த் திட்டங்களும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இருந்தும் அது பற்றாக் குறையாக இருந்த காட்டுமன்னார் கோயில் நகரத்திற்கும் ரூ.98.3 இலட் சங்கள் மதிப்பீட்டில் குடிநீர் விரிவாக்கத் திட்டமும் தற்பொழுது செயல்படுத்தப் படுகின்றன. இவை வரும் நிதியாண்டு களில் அரசு ஒதுக்கும் நிதி நிலைக்கு ஏற்ப விரைவுபடுத்தப்பட்டு மக்களின் பய னுக்குக் கொண்டுவரப்படும்.

இம்மாவட்டத்தில் எடுத்துக் கொள் ளப்படும் நகர குடிநீர்த் திட்டங்கள் பெரும்பாலும் ஆயுள் காப்பீட்டுக் கழக

***

**• தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முதன் முதல் ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட மாவட்டம் தென்னார்க்காடு மாவட்டம்தான். 'ஆர்க்காடு' என்ற பெயரே அவர்களால் தான் சூட்டப்பட்டுள்ளது என்கிறது வரலாறு.**

***

நிதி உதவியுடன் மாநில அரசின் நிதி உதவியையும் சேர்த்து நிறைவேற்றப் படுகின்றன. இவை நீங்கலாக இம் மாவட்டத்தில் உள்ள கிள்ளை, பெண்ணாடம், வளவனூர், திட்டக்குடி, வடக்குநந்தல் ஆகிய ஊரகப் பேரூராட்சி களுக்கு உலக வங்கியின் நிதி உதவியுடன் குடிநீர்த் திட்டங்களும், பண்ணுருட்டி நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டமும் (Low cost sanitation programme) நிறைவேற்றப் பட்டுள்ளன.

### குடிநீர் விரிவாக்கத் திட்டம்

இவ்வாண்டு முதன் முறையாக கங்கைகொண்டான் நகரப் பேரூராட் சிக்கு 'ஹட்கோ' நிறுவனத்திடம் இருந்து கிடைக்கும் நிதி உதவியுடன் மாநில அரசின் நிதியுதவியையும் சேர்த்து அப் பேரூராட்சிக்குக் குடிநீர் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இம்மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் நகர குடிநீர்த் திட்டங்களில் செஞ்சி அனந்தாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிகவும் சிறப்புத்தன்மை மிக்கது. செஞ்சி, அனந்தாபுரம் நகரங்களிலும் அவைகளை அடுத்த பல சிற்றூர்களிலும் வாழும் மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறு வதைத் தங்களின் பகற்கனவாகக் கருதி வந்தனர். அவர்களின் ஏக்கத்தைத் தீர்க்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தீவிர ஆய்வு செய்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள தென்பெண்ணை யாற்றில் இருந்து நீர் கொண்டு வந்து, இவ்விரு நகரங்களில் உள்ள மக்களுக் கும், மற்றும் நீர் கொண்டு வரும் வழி யோரங்களில் உள்ள 21 சிற்றூர் களுக்கும், ரூ.498 இலட்சங்கள் மதிப் பீட்டில் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இத்திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடைந்து அதனை ஆவலுடன் எதிர் பார்த்துள்ள அனைத்து மக்களுக்கும் அது பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

சிதம்பரம் நகராட்சி, கள்ளக்குறிச்சி, தியாகதுருகம் உளுந்தூர்ப்பேட்டை நகரப் பேரூராட்சிகள் மற்றும் சின்னசேலம் ஊரகப் பேரூராட்சி ஆகிய நகரங் களுக்குக் குடிநீர் வழங்கும் ரூ.1,306 இலட்சங்கள் மதிப்புள்ள திட்ட மதிப் பீடுகள் அரசின் அனுமதிக்காக அனுப்பப் பட்டுள்ளன.

இவற்றுள் சின்னசேலம், கள்ளக் குறிச்சி, தியாகதுருகம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். இந்த நகரங்களுக்குப் போதிய பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப் பல





ஆண்டுகளாகக் கடும் முயற்சி எடுத்து, தற்பொழுது சுமார் 55 கி.மீ. தூரத்தில் உள்ள மணலூர்ப்பேட்டைஅருகே தென் பெண்ணையாற்றை நீராதாரமாகக் கொண்டு இந்நகரங்களுக்குக் குடிநீர் வழங்க ரூ.911.50 இலட்சங்கள் மதிப் பீட்டில் திட்டம் தயாரித்து அரசு அனு மதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைந்து செயலாக்கப்பட்டு உடன் பயனுக்குக் கொண்டு வரப்பட்டால் இம்மூன்று நகரங்களில் வாழும் மக்க ளோடு, போதிய பாதுகாக்கப்பட்ட குடிநீரை அடைவதைத் தங்களின் பகற் கனவாக இந்நாள் வரை எண்ணியிருந்த 40 வழியோரச் சிற்றூர்களில் வாழும் அனைத்து மக்களின் தேவையும் நிறைவு அடையும்.

தற்பொழுது விழுப்புரம் மற்றும் பண்ணுருட்டி நகராட்சிகளில் குடிநீர்த் திட்ட விரிவாக்கம் ஆய்வு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடு அரசின் அனுமதிக்கு இவ்வாண்டுக்குள் அனுப்பி வைக்கப்பட இருக்கின்றது. மேலும் கடலூர் நகராட்சி மற்றும் திருக்கோயிலூர் பேரூராட்சிக்குக் குடிநீர்த் திட்ட விரிவாக்கப்பணி ஆய்வில் உள்ளது. இவை நீங்கலாக விழுப்புரம் மற்றும் கடலூர் நகராட்சிப் பகுதியில் பாதுகாக்கப்பட்ட பாதாளச் சாக்கடை வசதி செய்ய ஆய்வுப் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

### கிராமங்களில் குடிநீர் நிலைமை

கிராமங்களில் வாழும் மக்களில் பெரும்பாலோர் குடிநீரால் பரவும் கொடிய தொற்று நோய்களால் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை நன்கு உணர்ந்த மத்திய மற்றும் தமிழக அரசுகள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தீவிர முயற்சிகள் எடுத்துக் கிராமங்களில் வாழும் அனைத்து மக்களுக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு குறைந்தது 40 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீரானது வழங்க வேண்டும் என்று பல திட்டங் களை அறிவித்து, செயல்படுத்தியும் வரு கின்றது. ஆண்டுதோறும் இப்பணிக்கு ஒதுக்கப்படும் நிதி ஆதாரமும் கடந்த 10 ஆண்டுகளில் பல மடங்கு பெருகி உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இவ்வாய்ப்பை நன்கு பயன்படுத்தி, தனது சீரிய முயற்சியால், தன்னிடத்தே உள்ள சிறந்த பணியாளர்களால் பணியைத் தீவிரப்படுத்தி கிராம மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதில் இந்தியா வில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாட்டை முதன்மையான - மற்றும் முன்னோடி மாநிலமாகத் திகழச் செய் கிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 35 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,766 ஊராட்சிகளில் 5,335 ஊரக சிற்றூர்கள் உள்ளன. அனைத்துச் சிற்றூர்களிலும், ஒவ்வொரு சிற்றூரிலும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரமாவது உருவாக்கப்பட்டு, குடிநீர் ஆதாரமே உருவாக்கப்படாத சிற்றூர் இம்மாவட்டத் தில் எதுவுமே இல்லை என்ற பெருமை யைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தேடித்தந்துள்ளது. இருப்பினும் சூழ்நிலை மாறுபாட்டினால் பாதிக்கப்பட்டு அவை அப்பகுதியில் வாழும் மக்களுக்கு முழுப் பயனை அளிக்கவில்லை.

இந்நிலையைக் கண்டறிந்து ஆவன செய்யத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அனைத்துச் சிற்றூர்களையும் ஆய்வு செய்து அவ்வாய்வின் அடிப்படையில் குறைபாடுகளை நிறைவு செய்ய முயற்சிகள்

***

**• தென்னார்க்காடு மாவட்டத்தில் கிடைக்கும் கனிமச் செல்வங்களில் குறிப்பிடத்தக்கவை சுண்ணாம்புக்கல், களிமண், தரமான சைனா களிமண், துத்தநாகம், ஈயம், செம்புப் படிவங்கள், பழுப்பு நிலக்கரி, கிரானைட் ஆகியவைகளாகும்.**

**• கடலூரில் உள்ள சரசுவதி கானசபா மூலம் இசை, நாடகக் கலை வளர்ச்சி பெற்று வருகிறது.**

***

மேற்கொள்கின்றது. இதன்படி கடந்த 1990-ஆம் ஆண்டு நடத்திய ஆய்வின் அடிப்படையில் இம்மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சிற்றூர்களில், 1.4.92 நில வரப்படி, 2,223 சிற்றூர்கள் முழுமை யாகக் குடிநீர் வசதியைப் பெற்றுள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது. எஞ்சிய 3,112 சிற்றூர்களில் குடிநீர் வசதிகள் இருந்தபோதிலும் அவை அங்குள்ள மக்களின் முழுத் தேவையை நிறைவு செய்யாததால் அவைகளில் குடிநீர் பற்றாக்குறை இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள 3,112 சிற்றூர்களில் நிலவும் குடிநீர் பற்றாக் குறையை நிறைவு செய்ய ஆண்டுதோறும் பற்றாக்குறைத் தன்மையின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து, சிற்றூர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவைகளுக்கு வரும் நிதி ஆண்டுகளில் முழு அளவு குடிநீர் வசதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் படி. 1992-93-இல், 386 குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள சிற்றூர்களைத் தேர்வு செய்து குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டன. அவற்றுள் 228 சிற்றூர்கள் இவ்வாண்டிலேயே முழுப் பயனுக்குக் கொண்டு வரப்பட உள்ளன. எஞ்சிய சிற்றூர்களுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் (1993- 94 ) முழு அளவு குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும். இத்துடன் வரும் நிதியாண்டில் (1993-94) மேலும் 237 குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள சிற்றூர்களில் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டு அவைகளில் 158 சிற்றூர்களுக்கு 1993-94-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக முழு அளவு குடிநீர் வசதி செய்து கொடுத்து அவை அம்மக்களின் முழு பய னுக்கும் கொண்டு வரப்படும்.

### சிறப்புத் திட்டங்கள்

மாநில அரசு ஆண்டுதோறும் வரை யறுக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கான பயன் அனைத்து மக்களுக்கும் பகிர்ந் தளிக்கப்படவேண்டும் என்ற சீரிய நோக் கத்தோடு 1991- 92-ஆம் ஆண்டு அரசு நிர்ணயித்த வளர்ச்சிப் பணிகளுக்கான முழு ஒதுக்கீடும், அனைத்து ஒன்றியங் களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் (Special self sufficiency programme) ஒன்றை அறி வித்தது. இத்திட்டத்தின் கீழ் தென்னார்க் காடு மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.669.63 இலட்சங்களை ஒதுக்கி 426 சிற்றூர்களுக்குக் குடிநீர் வசதி செய்ய வகை செய்துள்ளது.

இவை நீங்கலாக இம்மாவட்டத்தில் டென்மார்க் நாட்டு அரசு உதவியுடன் பரங்கிப்பேட்டை மற்றும் மரக்காணம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து ஊரகச் சிற்றூர்களுக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதியும், குறைந்த செல விலான பாதுகாக்கப்பட்ட கழிப்பிடங் களும் அமைக்கும் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத் தின் கீழ் இவ்விரு ஒன்றியங்களில் குடிநீர் வசதிக்கு மட்டும் சுமார் ரூ.300 இலட் சங்கள் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு சில ஊரக கிராமங்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீரை அடைய வாய்ப்பே இல்லாமல் இருப்பதை உணர்ந்து, ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் இயக்கம் (Rajiv Gandhi National Drinking



# மனமாற்றம் முக்கியம்

சட்டங்களின் மூலம், அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மதுவிலக்குக் கொள்கைகளை எவ்வளவு தீவிரமாகச் செயல்படுத்த முடியுமோ, அவ்வளவு தீவிரமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. இருப்பினும் குடிப்பழக்கம் என்பது ஒரு தனிப்பட்ட நபரின் மனநிலையைப் பொறுத்துத்தான் அமைவது. அதனைச் சட்டங் களினால் மட்டுமே தடுத்து நிறுத்திவிட முடியாது. உண்மையில் ஒருவர் குடிப்பழக்கத்தை நிறுத்த வேண்டுமானால் அதற்கு மனமாற்றம் அவசியம். அந்த மனமாற்றம் ஏற்படுவதைத் தூண்டும் வகை யில் அவர்களுக்கு உதவினால் நிச்சயமாகத் தாங்கள் கொண்டுள்ள தீய பழக்கத்தின் கொடுமை களை உணர்ந்து, அவர்கள் அதனை நிரந்தரமாகக் கைவிட வாய்ப்புகள் ஏற்படும்.



Water Mission) என்ற ஒரு சிறப்புத் திட்டத்தைச் சில ஆண்டுகளுக்கு முன் அறிவித்து, அதில் தென்னார்க்காடு மாவட்டத்தையும் ஒன்றாக இணைத் துள்ளது. நீராதாரமற்ற கடினமான பகுதி களில் பல மத்திய மாநில நிறுவனங் களின் கூட்டு முயற்சியால் ஆய்வு செய்து நீர் ஆதாரங்களை உருவாக்கி அதை அப்பகுதி மக்களின் நிரந்தர முழுப் பயனுக்குக் கொண்டு வருவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத் தின்கீழ் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு ரூ.231 இலட்சங்கள் மத்திய அரசு மானியமாகக் கொடுத்துள்ளது. அதில் 206 சிற்றூர்களுக்கு நீர் ஆதாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உருவாக்கப் பட்ட அனைத்து நீர் ஆதாரங்களின் கொடு திறன் (Yield) மற்றும் தன்மை ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அவற்றில் அதிகக் கொடு திறன் மற்றும் நல்ல தன் மையுடைய நீர் ஆதாரங்களைத் தேர்வு செய்து அவற்றைப் பயன்படுத்தி 100 சிற்றூர்களுக்குத் தெருக்களில் பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாக்கப் பட்ட குடிநீர் உருவாக்க எந்தவித வசதி யும் இல்லாத கடலோரச் சிற்றூர்களில் வாழும் மக்களின் அன்றாடக் குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய உவர்ப்பு நீரை நல்ல நீராக்கும் 9 இயந்திரங்களையும் (Desalination plant) ஒரு நடமாடும், உவர்ப்பு நீரை நல்ல நீராக்கும் இயந்திரத் தையும் (Mobile desalination plant) நிறுவி மத்திய அரசே தனது சொந்தச் செலவில் அவற்றைப் பராமரித்தும் வருகிறது.

கடந்த பல ஆண்டுகளாக இம் மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட பல திட்டங்களின் சில குடிநீர் ஆதாரங்கள் பொய்த்து விட்டதாலும் மற்றும் சில பழுதடைந்து உள்ளதாலும், அத்திட்டங் களைத் தக்க முறையில் பராமரிக்கப் போதிய நிதி வசதி இல்லாததால் அவை பயனற்றுப் பல மாதங்களாக, ஆண்டு களாக இருந்தன. இக்குறையை நீக்க நீர் ஆதாரம் பொய்த்துவிட்ட திட்டங்களுக்கு இவ்வாண்டு 153 மாற்று ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துப் பயனுக்குக் கொண்டுவரப்பட உள்ளன.

மேலும், 63 திட்டங்கள் ரூ.36 இலட்சங்கள் மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டு மக்களின் உடனடிப் பயனுக்குக் கொண்டுவரப்பட உள்ளன.

மக்கள் தொகை பெருகி குடிநீர்த் தேவை அதிகரிக்கும் இன்றைய சூழ்நிலை யில், புதிய தொழில் நுட்ப அணுகு முறைகள் மூலம் நீர் வளத்தைப் பாது காத்து, கிடைத்தற்கு மிகவும் அரிதாகி விட்ட பாதுகாக்கப்பட்ட குடிநீரைச் சேகரித்து, இம்மாவட்டத்தின் அனைத்துப் பொதுமக்களின் தேவை அறிந்து, ஏற்ற நேரத்தில், தக்க இடத்தில் பகிர்ந்தளிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல் திட்டங்களைத் தீட்டியுள்ளது. வரும் ஒரு சில ஆண்டுகளுக்கு இம் மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களுக் கும் முழு அளவு பாதுகாக்கப்பட்ட குடி நீர் கிடைக்க ஆவன செய்யப்படும்.



# தென்னார்க்காடு: சின்னச்சின்ன செய்திகள்



• கடலூரைத் தலைநகராகக் கொண்ட இந்த மாவட்டத்தின் பரப்பளவு 10,770 சதுர கிலோ மீட்டர் ஆகும்; கூடலூர் என்ற பெயரே நாளடைவில் கடலூர் ஆயிற்று எனப்படுகிறது.

• கடலூரில் அமைந்த செயின்ட் டேவிட் கோட்டையில் இருந்து கொண்டுதான், ஆங்கிலேயர் தமிழகத்தை அரசாண்டிருக்கிறார்கள்; பிரஞ்சுக்காரர்களால் அக்கோட்டை அழிக்கப்படாமல் இருந்திருக்குமானால், ஒருவேளை இன்றைக்குக் கடலூரே தமிழ்நாட்டின் தலைநகரம் என்ற தகுதியைப் பெற்றிருக்கக் கூடும்.

• தென்னார்க்காடு மாவட்டத்தில், ஆண்டுக்குச் சராசரி 1270 மில்லி மீட்டர் மழை பெய்கின்றது; கடலூர் வட்டத்தில் ஆண்டுக்குச் சராசரி 2000 மி.மீட்டர் மழை பெய்கிறது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவக்காற்றே இந்த மாவட்டம் பெரிதும் மழைபெற உதவுகிறது. இம்மாவட்டத்தில் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மூன்று மாதங்களுமே மழைக்காலமாகும். மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகியவை பனி மாதங்கள்.

• தென்னார்க்காடு மாவட்டத்தில் மொத்தம் 6 வருவாய்க் கோட்டங்களும் 14 வட்டாட்சி அலுவலகங்களும், 5 வளர்ச்சிக் கோட்டங்களும், 35 ஊராட்சி ஒன்றியங்களும், 32 பேரூராட்சிகளும், 1,766 ஊராட்சிகளும் 2,389 உள் இடைக் கிராமங்களும், 2,391 கிராமங்களும் இருக்கின்றன. 7 நகராட்சிகள், 2 நகரியங்கள் இங்கு உண்டு.

• ஏறத்தாழ 370 கி.மீட்டர் தொலைவிற்குத் தென்னார்க்காடு மாவட்டத்தில் இருப்புப் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன; சென்னை-விழுப்புரம் (மெயின் லைன்), விழுப்புரம்-திருச்சிராப்பள்ளி, காட்பாடி-விழுப்புரம், விழுப்புரம்-புதுவை, கடலூர்-விருதாச்சலம், விருதாச்சலம்-சேலம் ஆகிய ஆறு இருப்புப்பாதைகளே அவை.

• இம்மாவட்டத்தில் தட்டுப்பாடின்றித் தண்ணீர் கிடைக்கச் செய்பவை - வீராணம் ஏரி, பெருமாள் ஏரி, முகலாறு ஏரி, புத்தனேந்தல் ஏரி, திருவதிகை ஏரி, வானமாதேவி ஏரி ஆகியவைகளும் - வெலிங்டன், வீடூர், திருவகீந்திரபுரம் நீர்த்தேக்கங்களுமேயாகும். கெடில நதி, பெண்ணையாறு, சங்கராபரணி, பரவனாறு, கொள்ளிடம், துரிஞ்சலாறு, செஞ்சியாறு போன்ற ஆறுகள் பலவும் இம்மாவட்டத்திற்கு வளஞ்சேர்க்கின்றன.

• கடலூர் முதுநகர்ப்பகுதியில் உள்ள துறைமுகம் மிகப் பழமையானது; இப்போது நடுத்தரத் துறைமுகம் என்ற அந்தஸ்துடன் செயல்படும் இதன் மூலம் இரும்புக் கனிகள், எரிபடிவங்கள் ஆகியவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக இருக்கின்றன; கந்தகம், உரம், உணவு தானியங்கள் ஆகியவை முக்கிய இறக்குமதிப் பொருட்களாக இருக்கின்றன. பரங்கிப்பேட்டையிலும் ஒரு சாதாரணத் துறைமுகம் உண்டு.

With
Best
Compliments
From

**Bus Owners Association**
**Cuddalore Taluk**
**South Arcot District**




## 19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்

**ஆசிரியர்:** அ.மா. சாமி

**வெளியீடு:**

நவமணி பதிப்பகம்,
12, 2-வது பெருஞ்சாலை,
நகர வளர்ச்சிக் குடியிருப்பு,
சென்னை-4.

பக்கம்:304 விலை:ரூ.75/-

தமிழில் முழுமையான இதழியல் வரலாறு வெளிவந்துள்ளதா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும். அவ்வாறு எழுத முனைவோருக்கு, இந் நூல் வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

நூலாசிரியர் திரு. அ.மா. சாமி அவர்கள் ஏற்கெனவே 'தமிழ் இதழ்கள் தோற்றம்-வளர்ச்சி' என்னும் நூலை எழுதியவர். அதற்குப் பிறகு 19-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த தமிழ் இதழ்கள் குறித்த தகவல்களையெல்லாம் ஒன்று திரட்டி இந்நூலைப் படைத்திருக்கிறார்.

"உண்மையில் இந்திய இதழியல் வரலாறு, தமிழ்நாட்டில் இருந்து எழுதப் பட வேண்டும். அச்சு இதழ்கள் தோன்றி வளர அச்சகங்களே அடிப்படை. இந்திய மொழிகளில் முதன்முதல் அச்சு கண்ட மொழி தமிழே!" என்னும் கருத்து வர வேற்கத்தக்கது.

'மாசத் தினச் சரிதை' என்ற தமிழ் இதழ், 1812-ஆம் ஆண்டு வெளி வந்தது. இந்திய மொழியில் வந்த முதல் இதழ் இதுவே.

தமிழ் இதழியல் வரலாற்றுக்குப் பிள்ளையார் சுழி போட்டவர் ஜான் மர்டாக் (1819-1904) என்ற ஆங்கிலேயர். 1865-இல் அவர் தொகுத்த 'தமிழ் அச்சு நூல் பட்டியல்' என்ற நூலைத்தான் தமிழ் இதழியல் வரலாற்றின் திருமறையாக இன்றும் பலர் கருதுகிறார்கள்.

இவை போன்ற பல வரலாற்றுச் செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

19-ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இதழ்களின் பட்டியல்களைக் கூறி, அந்த இதழ்களின் நோக்கும் போக்கும் பற்றி அலசியிருக்கிறார் ஆசிரியர். அத்துடன் அந்த இதழ்களால் தமிழ் வளர்ந்த விதத்தையும் விளக்கியிருக்கிறார் அவர்.

தமிழ் இதழியல் 190 ஆண்டு வரலாறு கொண்டது. ஆனால், முறையாக வரலாறு தொகுக்கப்பட்டிருக்கும் சிறப்பினைப் பெற்றிருக்கிறது இந்நூல் என்றால் அது மிகையல்ல.

— மறைமலை

## படைப்பாளர்கள் பார்வையில் மானுடத்தின் காயங்கள்

**பதிப்பாசிரியர்:**

தி. தயானந்தன் பிரான்சிஸ்

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க் டவுன்,
சென்னை-600 003.

பக்கம்:115 விலை:ரூ.30/-

கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் சார்பில், நடத்துவரும் இலக்கிய நண்பர் வட்டக் கருத்தரங்கில், ஆய்வுப் பொருளைத் தழுவி வழங்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

வித்வான் ஆர்.எஸ். ஜேக்கப், கவிஞர் இன்குலாப், டாக்டர் மா.வீ. சுதாகர், டாக்டர் எஸ். லாரன்ஸ், பி.வி.கிரி, டாக்டர் எஸ். குலசேகரன், மு. பரமசிவம், த. இயேசுதாஸ் ஆகியோர் வழங்கியுள்ள ஆய்வுக் கட்டுரைகள் சிந்தைக்கு விருந்தூட்டுவனவாக உள்ளன.

—மறைமலை

# நூல்-நயம்

## பட்டு வளர்ப்பு

**ஆசிரியர்:** கிரிநாத்

**வெளியீடு:**

புத்தகப் பூங்கா
32, அய்யம்பெருமாள் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:128 விலை:ரூ.16/-

பட்டு வளர்ப்பு லாபம் தரும் தொழிலாகும். இதற்கு மத்திய-மாநில அரசுகள் உதவி வருகின்றன. சிறந்த குடிசைத் தொழிலான இதற்கு நிதி உதவியும் கிடைக்கின்றது. படித்து வேலையற்றோர் மற்றும் இதில் ஆர்வமுள்ளோர் சொந்தக் காலில் நிற்க இத்தொழிலைச் செய்ய முன்வரலாம். இத்தொழில் தொடர்பான நுணுக்கங்களையும், வழி முறைகளையும் விரிவாகக் கூறுகிறது இந்நூல்.

## தாய்மைக் கனவுகள்

**ஆசிரியர்:** கவிஞர் துளசிதாசன்

**வெளியீடு:**

இளந்தென்றல் பதிப்பகம்,
குளத்தூர்,
புதுக்கோட்டை.

பக்கம்:80 விலை:ரூ.10/-

புதுக் கவிதைகளின் தொகுப்பாக இது பூத்திருக்கிறது. நூலாசிரியர் சிந்தனைகளின் சிதறல்கள் கவிதைகளாக உருவெடுத்திருக்கின்றன. காதல், வீரம், சோகம் முதலான சமுதாயப் பிரச்சினைகளை அலசுகிறார் கவிஞர். படித்து மகிழலாம்.

## தலைமுடி வளர அற்புத வழிகள்

**ஆசிரியர்:**

வைத்தியர் சீதாராம் சுப்ரமணியம்

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சூளைமேடு, சென்னை-600 094.

பக்கம்:80 விலை:ரூ.10/-

இன்று வளர்ந்துள்ள நாகரிகங்களில் தலைமுடி பராமரிப்பும் ஒன்றாகும். மற்ற விஷயங்களில் கவனம் செலுத்துவது போல, தலைமுடி பராமரிப்பிலும் போதிய கவனம் செலுத்தாததன் காரணமாக இளம் வயதிலேயே சிலருக்கு முடி உதிர்வது, வளர்ச்சி இல்லாமை, இளநரை போன்ற நோய்கள் வருகின்றன. இவற்றைப் போக்கக் கூடிய மருத்துவ முறைகளை விளக்குகிறது இந்நூல்.

பொதுவாக தலைமுடியைப் பாதுகாக்க முதலில் என்னென்ன வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்பதை விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார் ஆசிரியர். இது அனைவருக்கும் பயன் தரக் கூடியது.

பொதுவாக ஆண் பெண் இரு பாலரும் படித்துப் பயன்பெறத்தக்கது இந்நூல்.

- ஜே.சி.

## 'தலா ஒரு தோட்டா'

**ஆசிரியர்:** தேவிபாலா

**வெளியீடு:**

மயிலவன் பதிப்பகம்,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:196 விலை:ரூ.26/-

'அவளை அதிர்ச்சியுடன் பார்த்தான் பாலாஜி' என்று தொடங்குவதில் இருந்து, 'மஞ்சு பின் தொடர்ந்தாள்...' என்று முடிக்கும் வரை இந்த நீண்ட கதையை மிகவும் விறுவிறுப்போடு கொண்டு சென்றிருக்கிறார் ஆசிரியர்.

வேலை தேடி அலையும் பட்டதாரி இளைஞன் தற்கொலைக்கு முயன்று சந்தர்ப்ப வசத்தால் சிக்கலில் மாட்டிக் கொண்டு, அதிலிருந்து விடுபடுவதுதான் கதை.

கதை வழக்கமானதுபோல் தோன்றினாலும், அமைத்து எழுதப்பட்டிருக்கும் முறை நன்றாக உள்ளது. முடிவு மிகச் சிறப்பாகவும் எதிர்பார்க்க இயலாததாகவும் உள்ளது பாராட்டுக்குரியது.

—குமார்

செஞ்சிக்கோட்டையைப் பார்க்கும் நாம், அதிலிருந்து அரசாண்டவர்கள் வரலாற்றையும் அறிய உதவும் ஆய்வுக் கட்டுரை இது:

பொன். நடராசன்
தேர்வுநிலை வரலாற்று விரிவுரையாளர்
அ.அ. அரசினர் கலைக் கல்லூரி
விழுப்புரம்

தென்னிந்திய இடைக்கால வரலாற்றில் 12-ஆம் நூற்றாண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சியை ஆனந்தக்கோன் என்பவர் ஆட்சி செய்தார். இவர் செஞ்சியின் முதல் அரசராவார். செஞ்சியின் வரலாறும் இவர் காலத்திலிருந்தே ஆரம்பமாகிறது.

இவருக்குப் பின் குரும்ப வம்சமும், 13-ஆம், 14-ஆம் நூற்றாண்டுகளில் ஹோசாலர்களும் செஞ்சியை ஆண்டனர். விஜய நகர அரசு தோன்றியவுடன் 15-ஆம் நூற்றாண்டு முதல் 17- ஆம் நூற்றாண்டு வரை செஞ்சி நாயக்கர்கள் விஜய நகரப் பேரரசின் கீழ் ஆண்டு வந்தனர். 1698-இல் செஞ்சியை அவுரங்கசீப்பின் மொகலாயப் படைகள் கைப்பற்றின|கி.பி. 1700- இல் அவுரங்கசீப் தாவூத்கான் என்பவரைக் கர்நாடக நவாப்பாக நியமித்தார்.

தாவூத்கான் கீழ் சொருப்சிங் என்பவரை செஞ்சியின் நவாப்பாக நியமித்தார். இவர், 1700 முதல் 1714 வரை செஞ்சியை ஆட்சி செய்துவந்தார். அவருக்குப்பின் அவரது மகன் தேசிங்கு ராசன் என்பவர் 1714 சனவரியிலிருந்து அக்டோபர் வரை ஆட்சி புரிந்தார். ஆக மொத்தத்தில் தேசிங்குராசன் 10 மாதங்களே செஞ்சியை ஆட்சி புரிந்தார்.

**தேசிங்கின் இளமைப் பருவம்**

தேசிங்கின் இளமைப் பருவம் பற்றி| பலவேறான கருத்துக்கள் கூறப்படுகின்றன. அவரது பெற்றோர், பிறப்பிடம், பெயர் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

புகழேந்திப் புலவரின் 'தேசிங்கு ராசன் கதை' என்ற நாட்டுப்புறப் பாடல் தேசிங்கின் தந்தை தேரணிராசன் என்றும் தாய் ராமாபாய் என்றும் கூறுகிறது. அதோடு தேரணிராசன் செஞ்சியின் அரசராக இருந்தபோது தேசிங்கு செஞ்சியில் பிறந்தார் என்றும் கூறுகிறது. ஆனால் 1714-1718-இல் இங்கிலாந்துக் கடிதம் தேசிங்கின் தகப்பனார் சொருப்சிங் என்று கூறுகிறது. தேசிங்குராசன் தன்னுடைய தந்தையார் சொருப்சிங் நோய்வாய்ப்பட்டு இறக்கும் தருவாயில் இருக்கும்போது வட இந்தியாவிலுள்ள பாண்டேல்கண்ட் என்ற தான் பிறந்த ஊரிலிருந்து முதன் முதலாக செஞ்சிக்கு வந்தார் என்று செஞ்சி வாசியான நாராயணப்பிள்ளை கூறுகின்றார். இவருடைய கருத்தே முதன்மைக் கருத்தாகக் கருதப்படுவதால் ஏற்புடையதாக உள்ளது.

தேசிங்கின் பெயர் பலவேறாக அழைக்கப்பட்டுள்ளது. மெக்கன்சி குறிப்புகள் செயசிங் என்றும், டெய்லர் என்பவர் தேசிங்கு என்றும், ராபர்ட் என்பவர் தேப்சிங் என்றும் குறிப்பிடுகின்றனர். ஆனால் பொதுவாக நாட்டுப்புறப் பாடல்களிலும், மற்றும் ஆங்கிலக் கடிதங்களிலும் தேசிங்கு என்றே அழைக்கப்படுகிறது. தேசிங்கின் பெற்றோர்கள் சொருப்சிங்-ராமாபாய் என்று கூறப்படுகிறது. அவர் பிறந்த இடம் பண்டேல் கண்ட் என்றும் அவரது பெயர் தேசிங்கு என்றும் ராசபுத்திர வம்சத்தைச் சார்ந்தவர் என்றும் ஆதாரங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது.


கிருஷ்ணகிரி மலை

# தேசிங்கு ராஜன்




மலைமேலுள்ள சுப்பிரமணியசுவாமி கோயில்

தேசிங்கு 5 வயது இருக்கும்போது டெல்லி சென்று மொகலாயப் பேரரசிடமிருந்த அடக்க முடியாத பாராசாரிக் குதிரையை அடக்கி, குதிரையை அடக்க முடியாமல் சிறைப்பட்ட தன் தந்தையை மீட்டு வந்ததாக நாட்டுப் புறப்பாடல் கூறுகின்றது. ஆனால் நாராயணப் பிள்ளை தேசிங்குராசன் தன் தந்தை சொருப்சிங் நோய்வாய்ப்பட்டு உடல் நலம் குன்றிவிட்டார் என்ற செய்திகேட்டு பாண்டேல்கண்டிலிருந்து ஒரு சிறிய படைத்துணையுடன் செஞ்சிக்குப் புறப்பட்டு வந்தார். வரும் வழியில் கர்நாடகத்திலுள்ள பிகானூரில் அந்நாட்டு அரசரைச் சந்தித்தார்.

தேசிங்கு தந்தை சொருப்சிங் ஏற்கெனவே பிதானூர் அரசரிடம் செய்து கொண்டிருந்த உடன்படிக்கையின்படி அவருக்கிருந்த எதிரிகளை முறியடிக்க தேசிங்கு ஒத்துக்கொண்டார். பிதானூர் அரசரின் எதிரியான மராத்தியர்களோடு தேசிங்கு போரிட்டு வெற்றி அடைந்தார். தேசிங்கின் வீரத்தைப் பாராட்டி அவருக்கு ஒரு இலட்சம் பணமும், மிகச் சிறப்பு வாய்ந்த பாராசாரி என்ற ஒரு குதிரையும் கொடுக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள்.

நாட்டுப்புறப் பாடல்கள் தேசிங்கின் இளமைப் பருவச் செயல்களைத் தமக்கே உரித்தான முறையில் கதைப் பாடல் நாயகனை மிகைப்படுத்திக் கூறியுள்ளன. இவை ஏற்புடைத்தன்று.

**தேசிங்கின் ஆட்சிமுறை**

தேசிங்கு பிதானூரிலிருந்து செஞ்சிக்கு வந்து சேர்ந்த பின்னரே சொருப்சிங் இறந்ததாக சீனுவாச சாஸ்திரி

***

• **தென்னார்க்காடு வட்டாரத்தில் வழக்கில் உள்ள நாட்டுப் பாடல்களில் ராஜா தேசிங்கு பற்றிய பாடல்கள் அதிகமாகும். அதையடுத்து வழக்கில் உள்ள கேள்வி-பதில் பாடல்களில் இதோ இரண்டு:**

**'என்ன ஊர்?**
**மயிலாப்பூர்**
**என்ன மயில்?**
**காட்டு மயில்**
**என்ன காடு?**
**ஆர்க்காடு**
**என்ன ஆறு?**
**பாலாறு**
**என்ன பால்?**
**கள்ளிப்பால்**
**என்ன கள்ளி?**
**இலைக் கள்ளி**
**என்ன இலை?**
**மா இலை**
**என்ன மா**
**அம்மா!'**

**'ஏன்டி குட்டி**
**என்னடி குட்டி**
**என்னடி செய்யிறே?**
**பாம்புக் குட்டிக்குப்**
**பல்லு வெளக்கறேன்**
**சும்மாவா கெடக்கறேன்!'**

***

கூறுகின்றார். சொருப்சிங் இறந்த பிறகு அவரது மகன் தேசிங்கு 1714 சனவரியில் ஆளுநராகப் பதவி ஏற்றார். பேரரசு மற்றும் ஆர்க்காடு நவாப்பின் அனுமதி பெறாமல் தேசிங்கு பதவியேற்றதை அவரது அமைச்சர்களும், மத்தியப் பேரரசும் விரும்பவில்லை.

எனவே ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே அரசுரிமை பற்றிய பிரச்சினை எழுந்தது. இதனால் ஆர்க்காடு நவாப் சதத்-உலா- கானுக்கும் தேசிங்குராசனுக்குமிடையே பகைமை தோன்றியது. செஞ்சி அமைச்சர்களும் தேசிங்கின் அரசுரிமையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

மொகலாயப் பேரரசின் அதிகாரிகளும் அங்கீகாரம் செய்யவில்லை. தேசிங்கை அரசுரிமையைப் புதுப்பிக்க வேண்டினர். ஆனால் தேசிங்கு தன் தகப்பனார் சொருப்சிங்கிற்கு அவுரங்கசீப் அரசுரிமை கொடுத்துள்ளார் என்றும் எனவே தான் யாரிடமும் உரிமை பெற வேண்டியதில்லை என்றும் கூறிவிட்டார். அக்காலத்தில் அரசுரிமையானது வாரிசு உரிமை பெற்றதாகும். தேசிங்கு பதவியேற்றபோது வழுதாவூர், திண்டிவனம், திருவாமாத்தூர், அரப்பூர், திருக்கோவிலூர், வேட்டவலம், கடலூர், திருப்பாப்புலியூர், மஞ்சகுப்பம் ஆகிய பகுதிகள் செஞ்சி அரசின் கீழ் இருந்தன.

பேரரசர் பகதூர்ஷா 1710-இல் சதத்-உலா-கான் என்பவரை ஆர்க்காடு நவாப்பாக நியமித்தார். அவர் தொடர்ந்து 1732 வரை ஆட்சியில் இருந்தார். சொருப்சிங் 1710 முதல் 1714 வரை சதத்-உலா-கானின் கீழ் 4 ஆண்டு ஆட்சிபுரிந்துவந்தார். இச் சமயத்தில் கப்பப்பணம் நிலுவைத் தொகை செலுத்தாதது சம்பந்தமாக இருவருக்குமிடையே பிரச்சினை இருந்தது. இப்பிரச்சினையானது தேசிங்கு பதவியேற்றதும் மேலும் வளர்ந்தது. அச்சமயத்தில் டெல்லிப் பேரரசர் பருக்ஷியார் நிலுவையிலுள்ள கப்பப்பணத்தை வசூலிக்குமாறு சதத்-உலா- கானுக்குச் செய்தி அனுப்பினார்.

பேரரசின் செய்தியைப் பின்பற்றி நவாப், தன்னுடைய செயலாளர் லாலா தோடர்மாலைக் கப்பப்பணம் குறித்தும் அரசுரிமை பற்றியும் அறிந்துவர செஞ்சிக்கு அனுப்பினார். தேசிங்கின் முரட்டுக் குணத்தை அறிந்திருந்த தோடர்மால் தயக்கத்துடனும் தக்க பாதுகாப்புடனும் சென்றார். செஞ்சியை அடைந்த தோடர்மால் நவாப்பின் ஆணைப்படி வந்திருப்பதா

கவும், கப்பத்தொகை பெறவும், மறுத்தால் செஞ்சியைக் கைப்பற்றப்போவதாகவும் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இச்செய்தியை அறிந்த தேசிங்கு தம் தந்தைக்கு அவுரங்கசீப் அரசுரிமை கொடுத்ததாகவும், தந்தையின் உரிமை, வாரிசான தனக்கு உண்டு என்றும்கூறினார். எனவே கோட்டையை விட்டுத் தர இயலாது என்றும் கூறினார். மத்திய அரசு அதிகாரி பையாராமகிருஷ்ணா தேசிங்கைச் சமாதானப்படுத்தி தோடர்மாலைச் சந்திக்குமாறு கூறினார். மேலச்சேரியிலிருந்து தோடர்மாலைச் சந்திக்க தேசிங்கு சென்றார். தேசிங்கு வரவைக் கண்ட தோடர்மால் கூடாரத்தைவிட்டு வெளியே வந்து வணக்கம் கூறினார்.

ஆனால் தேசிங்கு குதிரை மீதிருந்தே தோடர்மாலுக்கு வணக்கம் கூறினார். இதனால் அவமதிப்பிற்குள்ளான தோடர்மால் ஒன்றும் பேசாது கூடாரத்தினுள் சென்றுவிட்டார். தேசிங்கு கோட்டைக்குத் திரும்பிவிட்டார். மறுநாள் தோடர்மால் தேசிங்கின் அரசவைக்குச் சென்று பேரரசின் கடிதத்தையும், நவாப்பின் அறிக்கையையும் கொடுத்தார்.

கடிதத்தைப் படித்த தேசிங்கு கடும் கோபம் கொண்டார். கடிதத்தை வீசி எறிந்தார். தோடர்மால் சிதறிய கடிதத்தை ஒன்று சேர்த்து எடுத்துக்கொண்டு ஆர்க்காடு திரும்பினார். தேசிங்கை, அன்பினாலோ, சமாதானத்தின் மூலமோ அடக்கமுடியாதென்றும் வாள்முனையில் தான் அடக்கமுடியுமென்றும் நவாப்பிடம் தெரிவித்தார்.

### தேசிங்கு நவாப்பிடையே போர்

நவாப் சதத்-உலா-கான் தம் பெரும் படையுடன் செஞ்சிக்குப் புறப்பட்டார். வழியில் தேசிங்கின் கோபத்தைத் தூண்டுகிற வகையில் செஞ்சிக்கு உட்பட்ட தேவனூரில் கொள்ளையிட்டனர். வீடுகளுக்குத் தீயிட்டனர். இச்சமயத்தில் தேசிங்கிடம் சிறிய படையே இருந்தது. 350 யானைப்படைகளும் 500 தரைப் படை வீரர்களுமே இருந்தனர். எனவே தனக்குக் கீழ் இருந்த வழுதாவூர் பாளையத்தைச் சேர்ந்த மகபத்கானை உதவிக்கு அழைத்தார். மகபத்கான் ஆங்கிலேயருடன் போர்புரிய சொரூப்சிங்கிற்கு உதவி செய்தவராவார். தேசிங்கிற்கு நெருங்கிய நண்பராவார். தேசிங்கின் போர் அழைப்புச் செய்தியை அறிந்தார். அன்று அவருக்குத் திருமணம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. திருமணத்தை இடையிலேயே நிறுத்திவிட்டு 50 படை

***

**★ இந்திய விடுதலைப் போராட்டக் கனல் மூண்ட காலத்தில்- 1927 செப்டம்பரில் தென்னார்க்காடு மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து தீவிரப் பிரச்சாரம் செய்தார், மகாத்மா காந்தி அடிகள். 1935-ஆம் ஆண்டில் ஜவகர்லால் நேரு, அதே நோக்கின் அடிப்படையில் இம் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.**

***

வீரர்களோடு உடனே மணக்கோலத்துடன் புறப்பட்டு செஞ்சி வந்து சேர்ந்தார்.

### கடலிமலைப் போர்

22 வயதுடைய ராசாதேசிங்கு சிறந்த வீரமும், வலிமையும் உடையவராகத் திகழ்ந்தார். நவாப்பின் படையை எதிர்க்கத் தன் மனைவியிடம் விடை பெற்று மகபத்கானோடு போர்க்களம் நோக்கிச் சென்றார். படைகள் வராக நதிக் கரையை அடைந்தன. ஆற்றில் கரை புரண்டு ஓடிய வெள்ளத்தைப் பொருட்படுத்தாது தேசிங்கும் மகபத்கானும் கடந்து சென்றனர்.

நவாப்போ, தன் படைத்தலைவன் தவுலத்கானிடம் தேசிங்கைக் கொல்லாமல் உயிருடன் பிடித்து வரும்படி கூறியிருந்தார். தேசிங்கும் மகபத்கானும் வீரத்துடன் போராடி ஏராளமான எதிரிகளைக் கொன்றனர். இறுதியில் தன்னைப் பிடிக்க வந்த தவுலத்கானைத் தேசிங்கு ஈட்டியால் குத்திக் கொன்றார்.

இதற்கிடையில், வீரத்தோடு போராடிக் கொண்டிருந்த மகபத்கான், முகலாய வீரன் ஒருவனால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டான். தளபதி தவுலத்கான் தேசிங்கால் கொல்லப்பட்ட நிலையிலும் கூட தேசிங்கைக் கொல்லாமல் உயிருடன் பிடிக்க நவாப் ஆணையிட்டுக்கொண்டிருந்தார்.

போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நவாப்பின் போர்வீரன் ஒருவன் தேசிங்கின் குதிரையின் முன்னங்கால்களை வெட்டினான். குதிரை கீழே விழுந்தது. பிறகு தேசிங்கு துணிவுடன் காலாட்படை வீரனாகப் போர் புரிந்தான். இச்சமயத்தில் நவாப், பங்காரு எச்சம நாயக்கனோடு தேசிங்கைப் பிடிப்பதற்கு மிக அருகில் வந்தார். ஆனால் தேசிங்கு, நவாப்பிற்குப் பாதுகாப்பாக முன் வந்த வீரனை ஈட்டியால் குத்த கை ஓங்கினான். அப்போது தங்களுக்கு நேர் இருந்த ஆபத்தை உணர்ந்த நாயக்கன் தேசிங்கைச் சுட உத்தரவிட்டார். தேசிங்கு சுடப்பட்டு இறந்தார்.

ஆனால் நாட்டுப்புறப்பாடலும், ஏம். அருணாசலம் என்பவரும் தேசிங்கு தன் நண்பன் மகபத்கான் இறந்ததாலும், தன் குதிரை பாராசாரி இறந்ததாலும் மனம் விரக்தி அடைந்து வாளை மேலே எறிந்து, அதனைத் தன் மார்பிலே தாங்கி,



ஆனைக்குளம்



தற்கொலை செய்துகொண்டு இறந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் நாராயணப் பிள்ளை, சி.எஸ். சீனுவாச சாஸ்திரி ஆகிய அறிஞர்கள் தேசிங்கு சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறுகிறார்கள். முதன்மை ஆதார அடிப்படையில் சுட்டுக் கொல்லப்பட்டதே உண்மைச் செய்தியாகிறது.

தேசிங்கு 1714-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ஆம் நாள் இறந்ததாகக் கூறப்படுகிறது. நாராயணப் பிள்ளை ஜெய வருடம் ஐப்பசி மாதம் 12-ஆம் நாள் இறந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

நவாப் பெற்ற வெற்றியைப் பாராட்டி பாண்டிச்சேரி பிரஞ்சுக்காரர்கள் 1200 பகோடா பரிசாகக் கொடுத்தார்கள். அதே போன்று நவாப்பின் வெற்றியைக் குறித்து சென்னை ஆங்கிலேயர்களும் பாராட்டுக் கடிதம் அனுப்பி இருந்தார்கள்.

### தேசிங்குராசனின் இறுதிச் சடங்கு

தேசிங்கு இறந்தவுடன் நவாப் சதத்-உலா-கான் செஞ்சி கோட்டைக்குள் சென்று அரசின் கருவூலம் உள்ள கல்யாண மகாலைக் கைப்பற்றினார். தேசிங்கு இறப்புப் பற்றி அவர் மனைவி

கல்யாண மகால்



ராணிபாயிக்குத் தெரிவிக்கப்பட்டது. இச்செய்தியைக் கேட்ட ராணிபாய், தன் கணவர் இறந்த பிறகு தான் உயிரோடு வாழ விரும்பவில்லை என்றும், தன் கணவர் எரியூட்டில் உடன்கட்டை ஏறத் தன்னை அனுமதிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நவாப்பும் அதற்கு ஒத்துக்கொண்டார். மறுநாள் காலை கோட்டைக்கு அண்மையில் உள்ள ராமுச் செட்டி குளக்கரைக்கு அருகில் தகனமேடை அமைக்கப்பட்டது. தகன மேடையில் தேசிங்கு உடல் எரியூட்டப்பட்டது. அத்தீயில் ராணிபாய் ராசபுத்திர வழக்கப்படி உடன்கட்டை ஏறி உயிர் துறந்தார்.

தேசிங்கு இறந்த இடத்தில் ஒரு கோவில் கட்டப்பட்டது. அருகே அரச மரமும் வேப்பமரமும் நடப்பட்டன. அழகிய பூங்கா ஒன்றும் ஏற்படுத்தப் பட்டது. அதேபோல், இறந்த மகபத்கானுக்கும், பாராசாரி குதிரைக்கும் கூட நினைவுச் சின்னங்கள் அங்கே அமைக்கப்பட்டன. ராணிபாய் நினைவாக நவாப் ஆர்க்காட்டிற்கு அருகில் ராணிப்பேட்டை என்ற ஊரை ஏற்படுத்தினார்: பின்னர் நவாப் 1732 வரை செஞ்சியை ஆட்சி புரிந்தார்.

தேசிங்குராசன் வீரமும் வலிமையும ஒருங்கே பெற்றிருந்தவர்தான்; ஆனால் அவருக்கிருந்த முன்கோபமும், எதையும் சரியாகச் சிந்திக்காமல் எடுத்த முடிவுகளும், மக்கள் - அமைச்சர்கள் ஆகியோரின் முழு ஆதரவும் இல்லாமையுமே தோல்விக்குக் காரணமாகும் என்பது வரலாறு தெரிவிக்கும் உண்மையாகும்.●


வாழ்த்துக்கள்

**விருத்தாசலம் தச்சு, கருமார மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் லிட்**

**பதிவு எண்: KVI/CLE/40**

**142, செராமிக் ஆலடி ரோடு**
**விருத்தாசலம், தென்னார்க்காடு மாவட்டம்**

**அலுவலகம்:**
**690-, ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம்,**
**தென்னார்க்காடு மாவட்டம்.**

அரசு துறைகளுக்கும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகராட்சி அலுவலகங்களுக்குத் தேவையான அனைத்து நாற்காலி, மேசைகள், ரேக்குகள், புதிய கட்டடங்களுக்குத் தேவையான பர்னிச்சர்கள், மர மற்றும் இரும்பு அலமாரிகள், ஸ்டூல்கள், கட்டடங்களுக்கு டிரஸ் ஒர்க்ஸ், மருத்துவமனைக்குத் தேவையான கட்டில்கள், இதர தளவாடச் சாமான்கள் அனைத்தும் நியாயமா விலையில் உற்பத்தி செய்து சப்ளை செய்யப்படும். இது ஒரு அரசு நிறுவனமானதால், விலைப்புள்ளி கோராமலேயே நேரடியாகக் கொள்முதல் செய்யலாம்.

தனி அலுவலர்
விருத்தாசலம் தச்சு கருமார மற்றும்
பலநோக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கம்

போன்: 37928

வாழ்த்துக்கள்

**குவாலிட்டி எண்டர்பிரைசஸ்**
**காமராஜ் சாலை, சாரம்**
**பாண்டிச்சேரி-605 013**

**விற்பனையாளர்:**
**ஜெயின் P.V.C. பைப்**

வாழ்த்துக்கள்



**சுபவள்ளி விலாஸ் ஜூவல்லரி**
**M.V.P. சுப்பராயச் செட்டியார் சன்ஸ்**
**39, சுப்புராயச் செட்டித் தெரு**
**கடலூர்-2.**



தென்னார்க்காடு மாவட்டம்

# காவல் துறையின் கனிவான பணிகள்



எந்த ஒரு நாடும் - அந்த நாட்டின் சட்டம் அமைதி ஒழுங்கைப் பொறுத்தே மேம்பட முடியும்.

இந்த ஜனநாயக நியதிக்கு மதிப்பளிக்கும் வகையிலே சிறப்புற்றுத் திகழ்கிறது தென்னார்க்காடு மாவட்டக் காவல்துறை. அத்துறையின் அனைத்து விவரமும் அறியும் ஆவலில் மாவட்டக் காவல்துறை உயர் அதிகாரி (Superintendent of Police) திரு. ச.ரா. ஜாங்கிட், இ.கா.ப., அவர்களோடு தொடர்பு கொண்டோம்.

அவர் தெரிவித்தபடி மறுநாள் காலையில் சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் அவருடைய அலுவலகத்திற்குப் போய்க் காத்திருந்தோம். தனது காரில் 9.10-க்கு வந்திறங்கிய அவர், தனது பத்து நிமிடத் தாமதத்திற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார் எங்களிடம்.

இதன்மூலம் அவரது கடமை உணர்வை எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது.

**மழலைத் தமிழ்**

அவருக்கு எதிரே இருந்த மாவட்டக் காவல்துறை உயர் அதிகாரிகள் பெயர் விவரம் குறித்த அறிவிப்புப் பலகையில் - திரு. எம். கோவிந்த நாயர் என்று தொடங்கி, 19-வது இடத்தில் திரு. ச.ரா. ஜாங்கிட் என்றிருந்தது. அதைப் பார்த்த நாம் "1925-இல் தான் இந்த மாவட்டம் துவங்கியதா என்ன?" என்றோம்.

"அப்படியில்லை; அது முதல் கிடைத்த விவரங்களை எழுதி வைத்திருக்கிறோம்; இன்னும் சேகரிக்கப்பட வேண்டியிருக்கிறது" என்று சிரித்தவாறே சொன்னார் அவர்; அவருடைய தாய்மொழி வேறானதால் - தமிழ், மழலையாக வெளிப்பட்டது.

**குற்றங்கள் கட்டுப்பாட்டில் உள்ளன**

திரு. ச.ரா. ஜாங்கிட் சொன்ன சில விவரங்கள் வருமாறு:

தென்னார்க்காடு மாவட்டக் காவல்துறையில் - ஆய்வாளர், துணை ஆய்வாளர், காவலர், போக்குவரத்துக் காவலர், பெண் காவலர் என எல்லோரையும் சேர்த்து 1,600 பேர் இருக்கிறார்கள். 43 காவல் நிலையங்கள் இருக்கின்றன.

சிதம்பரத்தில் ஒரு தனி துணைக் காவல்துறை அதிகாரி (D.S.P.) அலுவலகமும் உள்ளது.

கடலூரிலும், சிதம்பரத்திலும் மட்டும் மகளிர் காவல் நிலையங்கள் தனிப்பட இரண்டு உள்ளன.

இம்மாவட்டத்தில் எல்லா வகையான குற்றங்களும் பரவலாகக் காணப்பட்டாலும் - கடந்த இரண்டாண்டுகளாக எல்லாமே மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**மீட்கப்பட்ட பெரும்பொருட்கள்**

கடந்த பத்தாண்டுக் காலத்தில் இம்மாவட்டத்தில் பலராலும் பறிகொடுக்கப்பட்ட ஐம்பத்தைந்து இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் காவல்துறையினரால் அரும்பாடுபட்டு அண்மைக் காலத்திலே மீட்கப்பட்டிருக்கின்றன.

சுமார் 1,200 பேர் பறிகொடுத்த அப்பொருட்களில், கோயில் அணிமணிகளும் அடங்கும்.

சில நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. ஆனந்தன் அவர்கள் தலைமையில் ஒரு விழா நடத்தப்பட்டு, அப்பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.




**வாகன வசதி**

தென்னார்க்காடு மாவட்டக் காவல்துறைக்குச் சொந்தமாக 5 பெரிய பஸ்களும், 12 ஜீப்புகளும், 42 மோட்டார் சைக்கிள்களும் உள்ளன.

எல்லாக் காவல் நிலையத்திற்கும் 'ஒயர்லஸ்' வசதி உண்டு.



'சோதனைச் சாவடிகள்' ஐந்து இருக்கின்றன.

80 கிலோமீட்டர் நீளமுள்ள கடலோரப் பாதுகாப்பிற்கெனத் தனிக் காவலர் படையொன்று அமைக்கப் பட்டுள்ளது; இதற்காக மூன்று விசைப்படகுகள் இருக்கின்றன. இதேபோல, பெண் காவலர் பிரிவிலும், நடமாடும் தனிப் படையொன்று இயங்குகிறது; இவர்கள் ஆங்காங்கே மகளிருக்குள் ஏற்படும் பிரச்னைகளுக்குக் காரணமானவர்களை அங்கேயே கண்டுபிடித்துத் தண்டிப்பார்கள், அல்லது தீர்த்து வைப்பார்கள்.

இக்குழுவில் ஒரு பெண் வழக்கறிஞரும், ஒரு வருவாய்த்துறைப் பெண் அதிகாரியும் இருப்பார்கள். இம்மாவட்டத்தில் மட்டுமே இவ்வாறான அமைப்பு உள்ளது.

**கள்ளச் சாராயம் ஒழிப்பு**

கடந்த இரண்டு மூன்றாண்டுகளில் மட்டும் இந்த மாவட்டத்தில் 25,500 கள்ளச் சாராயம் - சாராயக் கடத்தல் - காய்ச்சல் வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பாக 473 வாகனங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு இந்தப் பக்கம் புதுச்சேரியும், அந்தப் பக்கம் காரைக்காலும் இருப்பதால் அங்கே போய் மலிவு விலை மது வாங்கி, மற்ற ஊர்களுக்குக் கடத்தும் தொழிலில் பல ஆண்களும் பெண்களும் ஈடுபட்டார்கள்; தரைவழியாக மட்டுமல்ல; படகு மூலம் கடல் வழியாகவும்கூட இந்தக் கடத்தல் நடக்கும்.

சென்ற மாதக் கடைசியில் - அவ்வாறே மதுப்புட்டிகளைக் கடத்திய ஒரு படகு, தேவனாம்பட்டினம் காவல்நிலையக் காவலர் இருவரால் விரட்டிப் பிடிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய குற்றங்களின் எண்ணிக்கை இப்போது பத்து சதவிகிதம் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது.

கடல் வழியாகக் கடத்துவோரைப் பிடிப்பதில் புதுவை மாநிலக் காவலர்களும் போதுமான அளவுக்கு உதவியாக இருக்கிறார்கள்.

சென்ற ஆண்டில், அகில இந்திய அளவில் நடைபெற்ற துப்பாக்கி சுடும் போட்டியில் திரு. வால்டர் தேவாரம் முதல் பரிசு பெற்றாரென்றால் - தமிழ்நாட்டு அளவில் ரைஃபிள் போட்டியில் திரு. ச.ரா. ஜாங்கிட் முதல் பரிசு பெற்று மாண்புமிகு முதல்வரால் பாராட்டப்பட்டிருக்கிறார்.

**சட்டம் ஒழுங்கு**

சட்டம் ஒழுங்கைக் காத்து அமைதி நிலவச் செய்வதில் இம்மாவட்டத்தில் உள்ள போக்குவரத்துத் துறைக் காவலர்களும் பெரும்பங்கேற்றுப் பணியாற்றி வருகின்றார்கள்.

**'ஜெ. ஜெயலலிதா மகளிர் குழந்தைகள் நலத்திட்டம்'**

**மா**ண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவ நலத் திட்டத்தின்கீழ் "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மகளிர் குழந்தைகள் நலத்திட்டம்" என்ற புதிய திட்டம் தொடங்கப்படவுள்ளது. இதன்மூலம் மருத்துவ வசதிகள் இல்லாத கிராமப்புறங்களில் வசதியற்ற மகளிர் மற்றும் குழந்தைகளுக்குச் சுகாதார நலப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வறுமையில் வாடும் ஏழை நோயாளிகளுக்கான உயிர்காக்கும் அறுவைச் சிகிச்சைக்குத் தரப்பட்டு வந்த நிதியுதவியும் அதிகரிக்கப்பட்டு இதற்காக எப்போதும் இல்லாத வகையில் மேலும் ரூபாய் 47.30 இலட்சம் ஒதுக்கப்படும்.

மருத்துவம், குடும்பநலம் குறித்து சட்டப்பேரவையில் வழங்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் தெரிவித்துள்ளார் (22.3.'93).





கடலூர் துறைமுக உப்பங்கழியில் இக்கரையிலிருந்து அக்கரைக்கு மாணவ மாணவியர் படகுச் சவாரி.

**காவலருக்கு முதல்வர் உதவி**

சென்னை, வண்ணாரப்பேட்டை போக்குவரத்துப் பிரிவுக் காவலர் திரு வீரமுத்துவை 3.4.93 அன்று, சில விஷமிகள் கத்தியால் தாக்கி சம்பளப் பணம் 1,748 ரூபாயையும், தங்க மோதிரத்தையும் பறித்துச் சென்றார்கள் என்ற தகவலை அறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தனது சொந்த நிதியிலிருந்து ரூபாய் ஐயாயிரத்தை மேற்படி காவலர் திரு. வீரமுத்துவிற்குத் தனி நபர் மூலமாக அனுப்பி வைத்தார்.

இழந்த சம்பளத்தையும் அடைந்த காயங்களுக்குச் சிகிச்சை பெறவும் இந்தத் தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். அவர்தம் குடும்பத்தினரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

கடந்த ஓராண்டில் அந்த வகைப் பிரச்சினை இந்த மாவட்டத்தில் ஏதுமில்லை.

**காவலருக்குச் சிலை**

மாவட்டக் காவல்துறை உயர் அதிகாரி அலுவலக வளாகத்தினுள், வெண்பளிங்குக் கல்லால் ஆன புத்தூர்க் காவலர் கே. இராசேந்திரனுக்கு ஒரு சிலை எடுத்திருக்கிறார்கள். அதை 26.5.92-இல், காவல்துறைத் தலைவர் திரு. தேவாரம் திறந்து வைத்திருக்கிறார்.

மே 1991-இல் புத்தூர் காவல் நிலையத்தை நக்சலைட்டுகள் தாக்கியபோது, உயிர் நீத்தவராம் அந்தக் காவலர்.

அவர் குடும்பத்தாருக்கு அரசு தந்த பணம் போக - இம்மாவட்டக் காவல்துறையினரே நிதி வசூலித்துத் தனிப்பட ரூ.50,000 வழங்கியிருக்கிறார்கள்.

இதேபோலக் காடாம்புலியூர் காவல் நிலையத்திற்குப் பணிபுரியச் சென்ற வேறொரு காவலரான தென்னரசு என்பார் நோயுற்று இறந்தபோதும் நிதியுதவி செய்திருக்கிறார்கள்.

**திருமண மண்டபம்**

இதையெல்லாம் சொல்லிக் கொண்டே வந்த திரு. ச.ரா. ஜாங்கிட், உற்சாகமாக - "இங்கே நாங்களே வசூல்செய்து ஒரு பெரிய கல்யாண மண்டபம் கட்டிக் கொண்டிருக்கிறோம் தெரியுமோ?... அது கூடிய சீக்கிரம் முடிவடைந்துவிடும். போலீசாரெல்லாம் இதற்காக நாலு நாள் சம்பளம் கொடுத்தார்கள்; நான் பத்து நாள் சம்பளம் கொடுத்திருக்கிறேன்!... இது தொடர்பான நிதியை ஒரு தனிக் குழு நிர்வகித்து வருகிறது. வேறு எங்கேயும் காவல் துறையால் இப்படியொரு நல்ல காரியம் செய்யப்படுவதை நீங்கள் பார்த்திருக்க முடியாது!" - என்று கூறிப் பெருமிதத்தோடு தன் படர்ந்த மீசையை நீவிக்கொண்டார்.

அதிருக்கட்டும்; கட்டி முடிந்ததும் அதற்கு எப்படி வாடகை நிர்ணயிக்கப் போகிறீர்கள்?" என்றோம் நாங்கள்.

"போலீஸ் குடும்பக் கல்யாணம்னா வெறும் எரநூத்தம்பது ரூவாதான்; மத்தவங்கள்னா மூவாயிரத்தி ஐநூறுன்னு இப்போதைக்கு முடிவு பண்ணீருக்கம்!" என்றார் அவர்.

அந்த மண்டபத்தையொட்டியே ஒரு பூங்கா அமைக்கப்படுவதையும் - அங்கே சிறு குழந்தைகள் விளையாடும் இடமும் அமைவதையும் தெரிவித்த திரு. ச.ரா. ஜாங்கிட், "எல்லாம் இந்த ஆண்டுக்குள் முடிவடைந்துவிடும்" என்று மிகுந்த நம்பிக்கையோடு நம்மிடம் தெரிவித்தார்.

- 'ராஜு'

காவலர் நிதியில் உருவாகும் கல்யாண மண்டபம்



தென்னார்க்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை
சாரம்-604 307, திண்டிவனம் தாலுக்கா

தந்தி: 'NOOL'
திண்டிவனம்

தொலைபேசி:
ஆலை அலுவலகம்: 2157
நிர்வாக இயக்குநர் (இல்லம்): 2336

தயாரிக்கப்படும் தரமான நூல்:
10s, 20s, 34s, 40s, 50s, 60s, 80s கார்ட்டு, கோம்புடு காட்டன்
சிட்டம், ஈரெழை ரகங்கள்.

நவீன இயந்திரங்களின் உயர் ரகப் பஞ்சைப் பயன்படுத்தி மிகத் தரமான நூல் உற்பத்தி செய்து தமிழ்நாடு மற்றும் வெளி மாநிலங்களுக்கும் கைத்தறி மற்றும் விசைத் தறி உபயோகத் திற்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தேவைக்கு நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும்

நல்வாழ்த்துக்கள்

உரம் மற்றும் பூச்சி மருந்து வியாபாரிகள் சங்கம்
விழுப்புரம் - 605 602

ராம்கோ உர நிறுவனம்
விழுப்புரம்

கிரசன்ட் உர நிறுவனம்
விழுப்புரம்
தென்னார்க்காடு மாவட்டம்





# தென்னார்க்காடு மாவட்டத்தில் வளரும் வேளாண்மை

தமிழகத்தின் வேளாண்மை உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கும் தென்னார்க்காடு மாவட்டம் 10,898 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் விரிந்துள்ளது. இவ்வாண்டு இம்மாவட்டத்தில் நெல் 2,51,553 எக்டேரிலும் சிறு தானியங்கள் 1,08,940 எக்டேரிலும், பயறு வகை 96,751 எக்டேரிலும், பருத்தி 12,054 எக்டேரிலும், கரும்பு 57,116 எக்டேரிலும் நிலக்கடலை 1,99,402 எக்டேரிலும், எள் 35,387 எக்டேரிலும் பயிரிடப்பட்டது. மாவட்ட அரிசி உற்பத்தி 9 இலட்சம் மெட்ரிக் டன்னைத் தாண்டும் நிலையில் உள்ளது.

கடந்த ஆண்டு எக்டேர் அரிசி உற்பத்தி 3,650 கிலோவாக இருந்தது. இவ்வாண்டு இதுவரை 3,855 கிலோவாக அதிகரித்துள்ளது. இம்மாவட்டத்தின் இயல்பான மழையளவு 1,137 மி.மீ. ஆனால், இவ்வாண்டு 850 மி.மீ. மட்டுமே கிடைத்துள்ளது. எனினும், இம்மழை பரவலாகக் கிடைத்ததால் மேற்கூறப்பட்ட பரப்பளவினை அடைவு செய்ய முடிந்தது.

மேலும் இம்மாவட்டத்தில் 3,05,214 எக்டேர் பரப்பளவு பாசன வசதி பெறுகின்றது. அரசு கால்வாய் மூலம் 78,348 எக்டேர்களும், ஏரி மற்றும் குளம் மூலம் 1,12,875 எக்டேரும், குழாய்க் கிணறு மூலம் 1,03,308 எக்டேரும் இதர வகையில் 10,683 எக்டேரும் பாசனம் பெறுகின்றன. இம்மாவட்டத்தில் பொதுப் பணித்துறை ஏரிகள் 495- பஞ்சாயத்து ஏரிகள் 2,235- உள்ளன.

இவ்வாண்டு பல்வேறு நலத் திட்டங்கள் வேளாண் துறையில் இம்மாவட்டத்தில் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவையாவன:

**ஒருங்கிணைந்த அரிசி உற்பத்திப் பெருக்குத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு 2000 மெ.டன் சான்று பெற்ற நெல் விதையும், 45 மெ.டன் சிங்க்சல்பேட்டும், 300 மெ.டன் ஜிப்சமும், 9000 லிட்டர் களைக்கொல்லியும், 500 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும், 1600 வேளாண் கருவிகளும், 130 விசை உழுவைகளும், மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு இதுவரை ரூ.66 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**உணவு தானிய உற்பத்திச் சிறப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 15 மெ.டன் ராகி விதை, ஒரு மெ.டன் சோளம் விதை, 150 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், 300 வேளாண் கருவிகள், 300 லிட்டர் களைக் கொல்லி ஆகியன மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு இதுவரை ரூ.3 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**தேசிய பயிறு வகை உற்பத்திப் பெருக்கத் திட்டம்**

இவ்வாண்டு 1,500 மினிகிட்டுகளும், 25 பெரு விளக்கப் பண்ணைகளும், 76 மெ.டன் விதை விநியோகமும், 20 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும் 15,000 ரைசோபியம் பொட்டலமும் 15 தெளிப்பு நீர்ப் பாசனமும் அமைக்கப்பட்டு ரூ.6 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**சிறு தளைப் பைகள்**

குறு விவசாயிகள் தங்களுக்குத் தேவையான புதிய விதைகளைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும் பொருட்டு, 200 நெல் மினிகிட்டுகளும், 300 சோளம் மினிகிட்டுகளும், 1000 பயறு வகை மினிகிட்டுகளும் விநியோகிக்கப்பட்டன.

**அனுசரணை ஆராய்ச்சித் தளைகள்**

வெளியிடப்படாத புதிய ரகங்களை விவசாயி வயல்களில் ஆய்விடும் நோக்கத்துடன் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், பருத்தி, எண்ணெய்வித்து ஆகிய பயிர்களின் அனுசரணை ஆராய்ச்சி வயல்களும், வயல் வழி ஆராய்ச்சித் தளைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

**சிறு டிராக்டர்கள்**

இவ்வாண்டு 2 சிறு டிராக்டர்கள் ரூ.60,000 மானியத்தில் வழங்கப்படுகிறது.

**சிறு விவசாயிகளுக்கு உதவிடும் திட்டம்**

சிறு குறு விவசாயிகளுக்குப் பயன் தரும் வகையில் மானிய விலையில் 300 டயர் வண்டிகளும், 1,500 விதை சேமிப்புக் களஞ்சியங்களும் தார்ப்பாய்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

**விதைப் பெருக்குத் திட்டம்**

விதைப் பெருக்குத் திட்டத்தில் 2,730 மெ.டன் சான்று நெல் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அந்த வகையில் ரூ.1,20,45,000 செலவு செய்யப்பட்டது.

சிறு தானியங்களான கம்பு, ராகி,

சோளம் முதலியவைகளில் 80.5 மெ.டன் சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு ரூ.2,50,000 . செலவு செய்யப்பட்டது. பயறு வகைப் பெருக்குத் திட்டத்தில், 220 மெ.டன்கள் (துவரை, உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப்பயறு) கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு ரூ.18,26,700 செலவு செய்யப்பட்டது.

விதைப் பெருக்கத் திட்டத்தில், வேளாண்மைப் பல்கலைக்கழகத்திடம் இருந்து பெறப்படும் மூல விதைகளைப் (Breeder seeds) பயன்படுத்தி, ஆதார விதைகள் அரசு விதைப் பண்ணை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, அவ்விதையை ஆர்வமுள்ள விவசாயிகளிடம் சான்று விதைப் பண்ணைகள் அமைத்து அப்பண்ணை விதைச் சான்றுதுறை மூலம் ஆய்வு செய்து சான்று விதைகளாக உற்பத்தி செய்யப்பட்டு அவ்விதை வேளாண்மைத் துறை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

### ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாடு

1992-93-ஆம் ஆண்டு மானாவாரி நிலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானாவாரி நிலங்கள் 3,300 எக்டேர் தேர்வு செய்து அதில் கோடை உழவு, ஊட்டமேற்றிய தொழு உரம் உபயோகம், மேலும் இடுதல் பயிர்ப் பாதுகாப்பு இரு போகச் சாகுபடி மற்றும் பயிற்சிகளின் மூலம் மானாவாரி விளைச்சலை மேம்படுத்த ரூ.13.46 இலட்சம் செலவிடப்பட்டது.

### தரிசு நில மேம்பாடு

இத்திட்டத்தின்கீழ் ஓர் ஆண்டிற்கு மேல் தரிசாக உள்ள நிலங்களை 500 எக்டேர் தேர்வு செய்து இவற்றில் மரக் கன்றுகள் நட்டு வளர்க்கவும், ஊடு பயிர்ச் சாகுபடிக்கும் ரூ.7.5 இலட்சம் செலவிடப்பட்டு 580 விவசாயிகள் இதனால் பயன் பெறுகிறார்கள்.

### வேளாண் காடுகள்

இத்திட்டத்தின்கீழ் 5,73,700 மரக் கன்றுகள் உற்பத்தி செய்து 4,600 சிறு/குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. மேலும், சென்ற ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகட்கு உயிருடன் உள்ள கன்றுகளுக்கு மானியம் வழங்குதல் திட்டத்தின் கீழ் ரூ.8 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

### மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள சிறு-குறு விவசாய மகளிருக்கு நிரந்தர வருமானம் தரக்கூடிய வகையில் சொத்துக்கள் ஏற்படுத்தும் திட்டத்தின்கீழ் 130 விவசாய மகளிருக்கு 7.2 இலட்சம் வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உள்ளது.

### எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டங்கள்

தென்னார்க்காடு மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டு எண்ணெய்வித்து உற்பத்தியைப் பெருக்க வேளாண் துறையின் மூலம் 1,900 மெ.டன் நிலக்கடலை, 25 மெ.டன் எள், 1.5 மெ.டன் ஆமணக்கு, 3 மெ.டன் சூரியகாந்தி, 10 மெ.டன் சோயாமொச்சை விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் 200 நீர்த்தூவும் கருவிகள், 4,500 வேளாண்மைக் கருவிகள், 2,500 பயிர்ப் பாது



காப்புக் கருவிகள், ஜிப்சம் 500 மெ.டன், 1,855 மினிகிட்டுகள், 1,950 மெ.டன் விதைக் கொள்முதல், 90,000 ரைசோபியம் பொட்டலங்கள் ஆகியன ரூ.141 இலட்சம் செலவில் மானியமாக வழங்கப்படுகிறது.

தேசிய எண்ணெய்வித்து மற்றும் தாவர எண்ணெய் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 30,000 நெட்டை ரகத் தென்னங் கன்றுகள் மானியமாக வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாகத் தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 4,840 நெட்டை-குட்டை தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. எண்ணெய்வித்து பகுதி-2 திட்டத்தில் 150 மெ.டன் நிலக்கடலை விதைகள் ரூ.3,80,000 மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### உர மாதிரி எடுத்தல்

இத்துறையில் உரக் கட்டுப்பாட்டுச் சட்டம் மிகவும் இன்றியமையாதது. இதனுடைய முக்கிய வேலை, உர மாதிரிகள் எடுத்து அவற்றினை ஆய்வு செய்து உரச்சத்தின் அளவு சரியாக இருக்கிறதா என்று சரிபார்த்து நடவடிக்கை எடுப்பதாகும். இவ்வாண்டு (1992-93) இதுவரை 1,074 உர மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. அதில் 47 உர மாதிரிகள் உரச்சத்து, குறிப்பிட்ட பிரிவின்கீழ் குறைவாக உள்ளது எனக் கணக்கிடப்பட்டு நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.

சிறு-குறு விவசாயிகளுக்கு உரம் மானிய விலையில் வழங்கிட 'என்கோபெட்' நிறுவனம் மூலம் ரூ.167 இலட்சமும், 'தாய்' நிறுவனம் மூலம் ரூ.65 இலட்சமும், 'கூட்டுறவுத்துறை' மூலம் ரூ. 2 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

1992-93-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 845 விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றி பயிற்சி யளிக்கப்பட்டது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.100 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் 13 வேளாண்மைக் கோட்டங்களிலும் ரூ.84,500 ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

### துவரைக் காய்ப்புழு பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

இம்மாவட்டத்தில் துவரைக் காய்ப்புழுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 1000 ஏக்கருக்கு ரூ.75,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. இம்மாவட்டத்தில் விருத்தாசலம், திட்டக்குடி, கள்ளக்குறிச்சி, திருக்



கோயிலூர், உளுந்தூர்ப்பேட்டை, திண்டிவனம் ஆகிய கோட்டங்களில் 1000 எக்டேரில் துவரை காய்ப்புழுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. எக்டேருக்கு ரூ.75 வீதம் ரூ.75,000 மானியம் வழங்கப்பட்டுள்ளன.

### பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்குதல்

இம்மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டு பல்வேறு பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக இதுவரை ரூ.82 இலட்சம் மதிப்புள்ள பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளது.

### சிறு/குறு விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு மினிகிட்

இம்மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டு புரட்சித்தலைவியின் இலவசப் பயிர்ப் பாதுகாப்பு மினிகிட் வழங்கும் திட்டத்தின்கீழ் 30,000 சிறு/குறு விவசாயிகளுக்குத் தலா ரூ.150 மதிப்புள்ள பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

### கரும்பு ஒட்டுண்ணி உற்பத்தித் திட்டம்

கரும்புப் பயிரில், நுனிகுருத்துப்புழு, இடைக்கணுப்புழு தாக்குதலை ஒட்டுண்ணி மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திண்டிவனம் ஆகிய இடங்களில் ஒட்டுண்ணி உற்பத்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. இதுவரை 1,048 எக்டேருக்கு ஒட்டுண்ணி விடப்பட்டுள்ளது.

### தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்புப் பகுதி நில மேம்பாட்டுத் திட்டம்

மானாவாரி நிலங்களிலும் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதுடன், வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களான கால்நடைப் பராமரிப்பு, பழ மரங்கள் வளர்ப்பு, வேளாண் காடு வளர்ப்பு ஆகிய தொழில்கள் மூலம் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினை அளிக்கவும் மானாவாரி நில விவசாயிகள் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்புப் பகுதி நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அக்கிராமத்தில் தேர்ந்தெடுத்த ஒரு உழவர் நண்பருக்கு வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, பழச் சாகுபடி, மரச் சாகுபடி, மண் வளம், நீர்வளப் பாதுகாப்பு முறைகள் பற்றிய தொழில் நுட்பப் பயிற்சி அளிக்



கப்படுகிறது. பயிற்சி பெறும் உழவர் நண்பன் அந்தந்தக் கிராமங்களில் மற்ற விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பார்கள்.

தென்னார்க்காடு மாவட்டத்தில், பண்ணுருட்டி, வல்லம், மேல்மலையனூர் வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. வெட்டிவேர் நடுதல், மரக்கன்றுகள் நடுதல், தீவனப் பயிர்கள் சாகுபடி, தடுப்பு அணை அமைத்தல், வடிகால் வசதி செய்தல், விவசாயிகளுக்குப் பயிற்சி செயல் விளக்கங்கள் ஆகிய பணிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

பண்ணுருட்டி வட்டம் வேகாக்கொல்லைக் கிராமத்தில் 1,036 எக்டேர் பரப்பில் 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ.1.63 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் 665 விவசாயக் குடும்பங்கள் பங்கு பெற்றுப் பலன் அடைகின்றனர்.

### டான்வா - பண்ணை மகளிர் திட்டம்

இத்திட்டம் டென்மார்க் நாட்டின் பண உதவியுடன் 1986-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஏழாண்டுக் காலத் திட்டமாகத் தமிழகத்தில் ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### நோக்கம்

1. பண்ணை மகளிருக்குப் புதிய தொழில் நுட்பங்களைத் தெரிவித்தல்.

2. செயல் விளக்கங்கள் மூலம் செய்து காட்டுதல்.

3. பயிற்சி பெற்றவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுதல்.

இதனால், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், சமுதாயத்தில் வேளாண் மகளிரின் நிலையை உயர்த்தவும் முடிகிறது. இத்திட்டத்தில் பண்ணை மகளிருக்குப் பலவிதப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

## தமிழகப் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் 62 சதம் பயணிகள்



தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை 14,514. இந்தப் போக்குவரத்துக் கழகங்களில் மொத்தம் 1.10 இலட்சம் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். சுமார் 2 கோடி நபர்கள் நாள்தோறும் அரசுப் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள். தமிழ்நாட்டின் மக்கட் தொகையில் 62 சதவிகிதம் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

-மேற்கண்ட தகவலை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார் (6.4.93).

தமிழ்நாட்டில் மொத்தம் 43,695 ஆட்டோ ரிக்ஷாக்கள் தற்சமயம் ஓடுகின்றன.




**NEYCER**

Sanitaryware and floor tiles
for quiet sophistication and class
in a wide range of colours
a must for your prestigeous buildings
and beautiful homes

**NEYCER INDIA LIMITED**

VADALUR-607 303,
SOUTH ARCOT DISTRICT
PHONE 388 (VADALUR 3 LINES)
STD 04148-598 TLX: 461241 NYCR IN
REGD OFFICE:

52, CHAMIERS ROAD, MADRAS-600 028.





# கோட்டகம் ரோமானியப் பொற்காசுகள்

கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரையான அரும் பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டு, கடலூர் அரசு அருங்காட்சிய கத்தில் பாதுகாக்கப்படுகின்றன. அரிய மணி வகைகள், சிற்பங்கள், மண்பாண்ட ஓடுகள், ஆயுதங்கள், அக்கால மக்கள் பயன்படுத்திய பொருட்கள் யாவும் அங்குள்ளன. இத்தனைச் சிறப்புமிக்க அந்த அருங் காட்சியகத்தின் காப்பாட்சியர் எழுதிய கட்டுரை இது:

சங்க காலத்தில் தமிழ் நாட்டிற் கும் ரோமாபுரிக்கும் வாணிபத் தொடர்புகள் நெருக்கமாக இருந்து வந்தது என்பதை வரலாறு நாம் அறிவோம். அதை இலக்கியங்களும், தொல்பொருள் ஆய்வுகளும் சிறபங் களும் உறுதி செய்வதோடு அவ்வப் பொழுது தமிழ்நாட்டில் புதைய லாகக் கிடைக்கும் பொற்காசுகளும் உறுதி செய்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தைச் சேர்ந்த கோட்டகம் என்ற ஊரில் கிடைத்த பொற்காசுப் புதையலில் இருந்து, இது மேலும் தெளிவாகின் றது. இந்தப் புதையலில்- கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டு களில் ரோமாபுரியை அரசோச்சிய நீரோ, நீரோ சீசர், அன்டோனியஸ் பயஸ், அகஸ்டஸ் போன்ற மன்னர் களின் பொற்காசுகள் இருக்கின்றன.

முதலில் அவைகள் செலாவணிக் காகப் பயன்பட்டுள்ளன. பின்னர் அணிகலன்களாகப் பயன்பட்டிருக் கின்றன. மக்கள் பொதுவாகப் பொன்னில் செய்த மாங்காய் மாலை, முத்துமாலை, மணிமாலை போன்றவற்றைத் தங்களுடைய கழுத்தில் அணிந்து அழகைக் கூட்டிக் கொண்டதுடன் வாழ்க்கை நிலை யிலும் பொருளாதார நிலையிலும் தங்களை உயர்த்திக் கொண்டனர்.

பொற்காசுகளையே மாலை

**ம. காந்தி,**
**காப்பாட்சியர்,**
**அரசு அருங்காட்சியகம்,**
**கடலூர், தெ.ஆ.மாவட்டம்**

யாகக் கோத்து மக்கள் கழுத்தில் அணிந்திருந்தனர் என்பதற்குச் சில புதையல் பொருள்கள் சான்றாகின் றன. ஏன்? இன்றும் பொன்னில் செய்த கால் காசுகளையும் கால் பௌன்களையும் கோத்து பெண்கள் தங்களுடைய கழுத்தில் அணிந்து கொள்ளுகின்றனர்.

கள்ளக்குறிச்சி வட்டம், கல்வ ராயன் மலையில் கிடைத்த புதையல் காசுகள், கழுத்து மாலையாகக்

கோக்கப்பட்டதாகும். அந்த மாலையில் ஆங்கிலப் பேரரசர்களின் பொற்காசுகளும் இரண்டாம் நெப்போலியனின் பொற்காசும் சேர்ந்திருக்கின்றன.

கோட்டகம் புதையலோ ரோமானியர்களுடைய பொற்காசுகளாகும். இந்தப் புதையலில் பதினாறு காசுகள் குழாய் வைத்ததாகும். அதில் நான்கு காசுகளின் குழாய்கள் விழுந்துவிட்டன. இதிலிருந்து இந்தப் பொற்காசுகள் கழுத்தில் அணியும் மாலைக்குப் பயன்பட்டிருக்கின்றன என்பது புலனாகிறது.

இவற்றின் குழல்கள் பொன் தகட்டால் செய்யப்படாமல் பொன் கம்பியை ஒரு பெரிய கம்பியின் மீது நெருக்கமாகச் சுற்றி அதைப் போதுமான அளவிற்கு வெட்டி எடுத்து ஒவ்வொரு காசின் விளிம்பிலும் இணைத்துப் பயன்படுத்தி இருக்



கின்றனர். இதே போன்ற பாணியைக் காசுகளின் குழல்களில் தென்னார்க்காட்டில் பயன்படுத்துகின்றனர். கம்பி போன்று பொற்காசின் குழாயின் தகட்டில் கோடு கீரியுள்ளனர். இது பண்டைய கம்பி பாணியை நினைவுபடுத்துவதாகும்.

இவ்வாறு அல்லாமல் சில பொற்காசுகளின் விளிம்பின் உட்பகுதியில் இணையான துளைகள் இட்டு அதனூடே நுலைக்கோத்து பதக்கமாக அணிந்திருக்கலாம் என எண்ண இடமேற்படுகின்றது. ஏனெனில் சில பொற்காசுகளின் விளிம்பில் இரண்டு துளைகள் காணப்படுகின்றன. இந்தப் புதையலுடன் ஒரு பொன் மோதிரமும் கிடைத்தது. இந்த மோதிரத்தைச் சுற்றிலும் பதின்மூன்று வெள்ளைக் கற்கள் அணிசெய்கின்றன.

கோட்டகம் புதையலில் கிடைத்த ரோமானியப் பொற்காசுகளின் முன் பக்கங்களில் பொதுவாக மன்னன் அல்லது அரசி இவர்களுடைய தலைகளும் பின் பக்கங்களில் தேவதைகளின் உருவங்களும் விலங்கினங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பொற்காசின் முன் பக்கத்தில் அகஸ்டினா அகஸ்டா என்ற பொறிப்பும் மறுபக்கத்தில் ஒருவர் ஒரு குதிரை மீது சவாரி செய்வதாகவும் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

அகஸ்டஸின் நாணயத்தின் முன்பக்கத்தில் அவருடைய தலை மட்டும் உள்ளது; மறுபக்கத்தில், நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியில் ஒருவர் சவாரி செய்கின்றார்.

டெஸ்பாசினஸினுடைய காசின் மறுபக்கத்தில் இதேபோன்று பொறிப்புள்ளது. இந்த வண்டியின் கீழே விக்டோரியா என்ற பொறிப்பைக் காணலாம்.

நீரோ சீசருடைய பொற்காசின் மறுபக்கத்திலும் வேறு ஒரு மன்னனுடைய பொற்காசின் மறுபக்கத்திலும் ஐரோப்பாவிற்கே உரிய நீண்ட உடலையும் சிறிது கீழ் அழுந்திய முதுகையும் குட்டையான கொம்புகளையும் உடைய எருதின் உருவம் பொறித்துள்ளனர். மற்றொரு காசின் மறுபக்கத்தில் கருடன் இறக்கையை விரித்து நிற்கின்றது.

தியாபௌஸ்டினா என்ற பெண்ணரசியின் காசின் மறுபக்கத்தில் தோகையை விரிக்காத மயில் தன்னுடைய தலையைப் பின் பக்கமாகத் திருப்பிப் பார்க்கின்ற உருவம் பதிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு அன்றைய பொற்காசுகளில் விலங்கினங்கள் பொறிப்பையும் பொற் காசுகள் மாலையாகப் பயன்பட்டதையும் நாம் அறியலாம். ●

## தமிழ்நாடு வக்ஃப் வாரியத்துக்குப் புதிய உறுப்பினர்கள்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்துக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 11 உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

வக்ஃப் வாரியத் தனி அதிகாரியின் பதவிக் காலம் முடிவதையடுத்து, இந்த நியமனத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்தப் புதிய உறுப்பினர்களின் பதவிக்காலம் 16.3.1993 முதல் 5 ஆண்டுகள் ஆகும்.

புதிய உறுப்பினர்களின் விவரம் வருமாறு:

1. ஆர்க்காடு இளவரசரும் சென்னை நகர முன்னாள் செரீப்பும் ஆன திரு. நவாப்ஜாதா முகமது அப்துல் அலி.
2. அரசின் தலைமைக் காஜி திரு. ஹாஜி சலாவுதீன் முகம்மது அயூப்.
3. ஷியா காஜி திரு. மௌலானா மௌலாவி குலாம் அஷ்காரி அலிகான்.
4. திரு. எல்.கே.எஸ். சையது அகமத்.
5. திரு. கே.வி.எம். அப்துல் கரீம்.
6. திரு. ஆளூர் ஜலீல்.
7. திரு. ஹாஜி பி.சி. அப்துல் காதர் மரக்காயர்.
8. திரு. ஜி.எஸ்.பி. சையத் மீரான் சாகிப்.
9. திரு. கரூர் சாகுல் அமீத்.
10. திரு. ஓ.எஸ். சையத் மதூத்.
11. திரு. எம்.கே. ஹாஜா நஜிமுதீன்.



## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

**வெ. இறையன்பு, இ.ஆ.ப.,**
கூடுதல் ஆட்சியர் (மேம்பாடு)
மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமை
கடலூர்

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களை மேம்படச் செய்வதே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தில் பயனடையும் பயனாளிகள் அனைவரும் கிராமப்புறத்தில் வசிப்பவராகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.8,500-க்கு மிகாமலும் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஊராட்சிக்கும் தேர்வு செய்யப்பட்ட வேண்டிய பயனாளிகளின் எண்ணிக்கை அந்த ஊராட்சியின் மக்கட்தொகை அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்தத் திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மொத்தக் கடனில் 50 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும் மொத்த மானியம் ரூ.5000 வரை மட்டுமே மானியமாக வழங்கப்படும்.

பயனாளிகள் உடல் ஊனமுற்றவர்களாக இருப்பின், எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருப்பினும் மொத்தக் கடனில் 50 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும் மொத்த மானியம் ரூ.5000 வரை வழங்கப்படும்.

இதர வகுப்பினருக்குச் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியமாகவும், குறுவிவசாயிகளுக்கு 33 1/3 சதவிகிதம் மானியமாகவும், மொத்த மானியம் ரூ.3000-க்கு மேற்படாமல் வழங்கப்படும். 1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு மொத்த இலக்கு 11151. நிதித்திறன் 394.148.

இம்மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் பிப்ரவரி 1993 முடிய 9123 பயனாளிகளுக்கு 313.70 இலட்சம் மானியமாகச் செலவிடப்பட்டுள்ளது. ரூ.418.39 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் ஒரு அங்கமாகும். சிறு தொழில் மற்றும் வியாபார ரீதியில் மகளிருக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து பொருளாதார நிலையை உயர்த்த வகுக்கப்பட்ட ஒரு சிறந்த திட்டமாகும். குடும்பத்தில் வருவாய் ஈட்டக்கூடியவராகவும், சமூகத்தில் தன்னம்பிக்கையும், செயல் திறனும், இல்லத்தை மேம்படுத்தும் மகளிராகவும் விளங்க இத்திட்டம் உதவுகின்றது.

கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் 10



முதல் 15 மகளிர் சேர்த்து குழுவாக அமைத்து ஒன்றாக உழைத்து வருமானம் பெறக்கூடிய தொழில்களுடன் கூடிய வியாபாரம் செய்து அதன் மூலம் மகளிர் அனைவரும் தொடர் வேலை செய்யவும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்து கிடைக்கும் லாபத்தை அனைவரும் ஒன்றாகப் பகிர்ந்து குடும்ப வருவாய் பெருகிட பொருளாதார உயர்வு உண்டு பண்ணுவது இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின் இதுநாள்வரை 513 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது (1992-93) 40 குழுக்கள் அமைத்து ஆக மொத்தம் 543 குழுக்களில் 9845 மகளிர் அங்கத்தினர்களாக உள்ளனர். இக்குழு உறுப்பினர்கள் 33 வகையான தொழில்கள் செய்து வருகின்றனர். இவர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 50 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.

### கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புறங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள இளைஞர்களுக்குப் போதிய திறமையும், தொழில் நுட்ப அறிவும் கிடைக்கும் வகையில் பயிற்சி அளித்து இவர்கள் சுயமாகத் தொழில் தொடங்க வழிவகை செய்வதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் பயிற்சியளித்து அவர்கள் சிறு தொழில்கள் துவங்கவும், விவசாயம் மற்றும் சார்ந்த தொழில்களில் சுய தொழில் செய்யவும் இத்திட்டம் கிராமப்புற இளைஞர்களுக்கு வழிவகுக்கும்.

வயது வரம்பு: 18 முதல் 35 வரை, ஒதுக்கீடு: தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பழங்குடியினர் - 50 சதவிகிதம்,

பெண்கள் - 40 சதவிகிதம், உடல் ஊன முற்றோர் - 3 சதவிகிதம். 1992-93-இல் இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திர் கு 1,860 கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுநாள்வரை 1,860 நபர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். மேலும் 69 பயிற்சி நிறுவனங்களின் மூலம் பயிற்சி யளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற் கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.42.18 இலட்சம், இதுவரை செலவு செய்தது ரூ.36.062 இலட்சம்.

**ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்**

மத்திய அரசின் வேலை வாய்ப்புத் திட்டத்தையும், கிராம மக்களின் அடிப் படைத் தேவைகளை நிறைவு செய்யச் சில சிறப்புத் திட்டங்களையும் இணைத்து மாநில அரசுசெயல்படுத்துவது இத்திட்டத் தின் சிறப்பு அம்சமாகும்.

இத்திட்டத்தினை நடப்பு ஆண்டில் நல்முறையில் செயல்படுத்த ஊரக வளர்ச்சி இயக்குநரால் தெளிவான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டு, இதன்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான நடப்பு ஆண்டுக் கான மொத்த நிதி ஒதுக்கீடு - 2475.13 இலட்சம். இதுநாள் வரை 1966.21 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



மேலும் இத்திட்டத்தில் கீழ்க்கண்ட இனங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொகுப்பு வீடுகள் - 3400, புதிய பள்ளிக் கட்டடங்கள் - 62, ஊராட்சி மன்றக் கட்டடங்கள் - 88, சத்துணவுக் கட்டடங்கள் - 62, மெட்டல் சாலைகள் - 200 கி.மீ., ஜீவன்தாரா கிணறுகள் (1991-92- ஆம் ஆண்டில் அனுமதித் தது) - 750, இதர வேலைகள் 80 சதவிகிதம், ஊராட்சி வேலைகள் - 700.

**சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்**

இயற்கையின் எழிலை வளப்படுத்த வும், சுற்றுப்புறச் சூழல் மாசைக் கட்டுப் படுத்தவும், கிராம மக்களுக்கு எரி பொருள் தேவையினைப் பூர்த்தி செய்ய வும், கால்நடைகளுக்குத் தீவனம் கிடைக் கவும் 1981 முதல் இம்மாவட்டத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

இம்மாவட்டத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தொகுப்புத் தோட்டங்கள் 48,438 எக்டேரிலும், தீவனம் சாலையோரத் தோட்டங்கள் 1·035 எக்டேரிலும், இடைபடு காடுகள் தோட்டங்கள் 150 எக்டேரிலும் வளர்க் கப்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் சமூகக் காடுகளினால் கிடைக் கப்பட்ட வருவாயில் 34 ஊராட்சி ஒன்றி யங்களுக்கு ரூ.75,52,300 வழங்கப்பட வுள்ளது. இத்திட்டத்திற்கு நடப்பு நிதி யாண்டில் ரூ.76.18 இலட்சம் ஒதுக்கப் பட்டு, இதுநாள் வரை 56.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.'

**சாண எரிவாயுக் கலன் அமைக்கும் திட்டம்**

சாணம் மற்றும் மக்கியப் பொருள் களிலிருந்து தயாரிக்கப்படும் எரிவாயு சாண எரிவாயு எனப்படுகிறது. இவ் வாயுவைத் தயாரிக்க மூன்றுவகைச் சாதனம் உள்ளது. டிரம் மாடல், டோம் மாடல், ரிங் மாடல்.

கலன் அமைக்க வங்கி மூலம் கடனும், மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமையின் மூலம் மானியமும் கீழ்க்கண்டுள்ளவாறு வழங்கப்படுகிறது. கலன் பழுதடைந்து விட்டாலும் இதனைச் சரிசெய்ய ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 680 கலன்கள் அமைக்கக் குறியீடு நிர் ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 103 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**சூளா அடுப்பு அமைக்கும் திட்டம்**

சமையல் செய்வதற்குத் தேவைப்படும் விறகுகளுக்கான மரங்களை அதிக அளவில் வெட்ட வேண்டிய சூழ்நிலை யைத் தவிர்க்கும் பொருட்டு, மைய அர சினால் சூளா திட்டம் அமல்படுத்தப் படுகிறது. இதன்மூலம் அதிகமாக விறகு களைப் பயன்படுத்தத் தேவையில்லை. இவ்வித அடுப்புகளைப் பயன்படுத்து வதால் வீட்டில் கரிப்பிடிக்காது. எரி பொருட்கள் செலவும் குறையும். இத் திட்டத்திற்கான மொத்தக் குறியீடு - 7000. இதுவரை 4359 சூளா அடுப்புகள் முடிக்கப்பட்டுள்ளன

மாண்புமிகு முதல்வர் அவர்களால் இச்சிறப்புமிகு திட்டம் தமிழகத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ரூபாய் ஒரு கோடி எனத் திட்டமிடப் பட்டு இதுவரை வளர்ச்சியைக் காணாத ஊரகப்பகுதிகளுக்குத் தேவையான அடிப் படை வசதிகளை அளிப்பதற்கான கால இலக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1991-92 மற்றும் 1992-93 இவ்விரண்டு ஆண்டுக்கும் உரிய திட்டம். இச்சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் - சாலை மேம்பாட்டுப் பணிகள் (ஊரகச் சாலைகள் மற்றும் பேருந்துச் சாலைகள்), குடிநீர் விநியோகத் திட்டம், தெரு விளக்குகள் அமைத்தல், சிறு பாசனக் குளங்கள், கசிவு நீர்க்குட்டைகள் சீரமைத்தல், துவக்கப் பள்ளிகளுக்கான பள்ளிக் கட்டடங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் (வண்ணம்) அளித்தல் ஆகிய பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அமல்படுத்தும் அரசுத் துறைகளுக்குக் கால இலக்கு நிர்ணயிக்கப் பட்டு முடித்திட உரிய வழிகாட்டு நெறிமுறைகள் அரசினால் அளிக்கப் பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டுக்கு ரூ.1486.54 இலட்சம் பெறப்பட்டு ரூ.1302.83 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டு மேற்குறிப்பிட்ட அடிப்படை வசதிகள் கிராமப்புறங்களுக்கு அளிக்கப்பட்டுள் ளது. 1992-93-ஆம் ஆண்டுக்கு ரூ.1071.013 இலட்சம் பெறப்பட்டு திட்டத்தினைச் செயல்படுத்தும் துறை களுக்குப் பிரித்தளிக்கப்பட்டு காலக்கெடு வுக்குள் முடித்திட உரிய நெறிமுறைகள் வழங்கப்பட்டு, சிறப்புமிகு திட்டமான சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் சீரிய முறையில் இம்மாவட்டத்தில் நடை பெற்று வருகிறது.

## இந்தியாவிலேயே முதல் பெண் பேருந்து ஓட்டுநர்!

கன்னியாகுமரி மாவட்டம், கடம்பாவிளை வீடு, ரீத்தாபுரத்தைச் சேர்ந்தவர் திருமதி எம். வசந்தகுமாரி. இவர் நேசமணி போக்கு வரத்துக் கழகத்தில் ஓட்டுநர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டார். ஆனால், நேர்முகத் தேர்வின் போது இவருக்கு ஓட்டுநருக்கான உயரம் இல்லை என இவரது மனு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் இவர் நேசமணி போக்குவரத்துக் கழகத் தின் நிர்வாக இயக்குநருக்கு, தான் ஒரு சிறந்த ஓட்டுநர் என்றும், தனது மனுவைத் தனி மனு வாகக் கருதி தனக்கு ஓட்டுநர் பதவி அளிக்க வேண்டும் என்றும்கேட்டுக் கொண்டிருந்தார்.

இவரது மனுவைத்தனி மனுவாகக் கருதி நேர் முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டபோது, இவர் ஆண் ஓட்டுநருக்கு நிகராகச் சிறந்த ஓட்டுநராக இருந்ததைக் கண்டு இவரது தேர்வு நிலையைப் பரிந்துரைத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவிக்கப் பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இவரது தேர்வு நிலையைக் கனிவுடன் பரிசீலித்து, திருமதி வசந்தகுமாரிக்கு ஓட்டுநர் பதவி வழங் கலாம் என உத்தரவிட்டதன் பேரில், 30.3.93 அன்று தலைமைச் செயலகத்தில் கன்னியாகுமரி மாவட்ட நேசமணி போக்குவரத்துக் கழகத்தில் பேருந்து ஓட்டுநர் நியமன உத்தரவை, திருமதி வசந்தகுமாரிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்!

இந்தியாவிலேயே ஒரு பெண்மணி பேருந்து ஓட்டுநராக நியமிக்கப்பட்டு இருப்பது, இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.



# கோவை-ஊட்டி தினசரி சுற்றுலா!

தமிழக அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழகத்தின் தொழில் நகர் கோவையில் இருந்து மலை அரசி ஊட்டிக்குக் கோடைக் கால தினசரிச் சுற்றுலாவை - 25.4.93 அன்று காலை, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சி.வி. சங்கர், இ.ஆ.ப., அவர்களால் பச்சைக்கொடி காட்டித் தொடங்கி வைக்கப்பட்டது.

கோடைக் காலத் தினசரிச் சுற்றுலாவின் முதல்கட்டமாக, குன்னூர் 'சிம்ஸ் பார்க்' என்ற பூவகைகளும், மர வகைகளும் நிரம்பிய புதுமையான பூங்காவைப் பார்க்கிறோம். ஐரோப்பிய சூழ்நிலையைப் படம்பிடித்து வைத்தது போன்று, அமைந்துள்ள இப்பூங்கா, 1874-ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்டது. கடல் மட்ட உயரம் 1,780 மீட்டர். பூங்காவின் பரப்பளவு 12.14 எக்டேர். 85 தாவரக் குடும்பங்களும், 1000 தாவரங்களும் இங்கே வாழ்ந்து, வருவோர்க்கு வண்ணப் பசுமை விருந்தை வாரி வழங்கி வருகின்றது. இதனைக் கண்டு சுற்றுலா வந்தோர் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்து நின்றனர். அடுத்து, பேருந்து ஊட்டி சென்றது.

சுற்றுலாக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் படகு வீட்டைப் (Boat House) பார்க்கிறோம். வீட்டில் வாழ்ந்து மண்வாசனை சுவாசித்து பழகியவர்கள், சில மணி நேரங்கள் தண்ணீர்சூழ் படகு வீட்டில் குடியிருந்து பரவசப்படுவதற்கு வாய்ப்புள்ள இடம் இது.

அகன்ற ஏரி - மிகுந்த நீர்ப் பரப்பு நீர்ப்பாப்பில் மலர்கள் - பறவை மற்றும் பல வடிவங்களில் சிறுசிறு தோணி! சுற்றுலாப் பயணிகளே இயக்குகின்ற படகும், அதற்குரிய ஓட்டுநர்கள் இயக்குகின்ற படகும் உண்டு. இயற்கை வளப்பைக் கண்டுகளிக்க சிறிய, சிங்கார இரயில் உண்டு. ஊர்ந்து செல்லும் இரயிலில் அமர்ந்து பயணிகள் இருபக்கமுள்ள இயற்கை அழகைப் பருகிவிட உரியதாக இருக்கும், புகைவண்டி இயக்கமும், சிறப்புக்குரியதான ஒன்று. பறவைகளும் அங்கங்கே பறந்து இன்பம் பயக்கின்றது. சின்ன இரயிலில் செல்லும் போது நாமும் சின்னவர்களாகின்றோம். சிறகடித்துப் பறக்கின்றோம்.

ஊட்டியை அடுத்த தொட்டபெட்டா சிகரம் செல்கிறோம். அடர்ந்த பனியும், வளர்ந்த பச்சைப் புல்லினமும் அலங்கரிக்கும் சிகரங்கள், சிரசுகளைச் சிகரங்களில் இருந்து நேருக்கு நேர் தம்மைப் பார்க்க வைக்கும் இயற்கை விஞ்ஞானத்தின் விந்தையான படைப்புதான் தொட்டபெட்டா மலைச் சிகரம். மலை மீது நின்று மலை முடிகளைக் காணுகின்ற சுற்றுலாப் பயணிகள், மலைமகளின் உற்சாக ஊஞ்சலாகத் தொட்டபெட்டா திகழ்கின்றது என மனமாரப் புகழ்ந்தார்கள்.

பின்னர், ஊட்டி வந்து தாவரவியல் பூங்காவினைப் பார்த்தோம். பூக்களில் இத்தனை விதமா; இத்தனை நிறமா; இத்தனை இனமா; பசுமையில் இத்துணை வர்ண ஜாலங்களா என்று காணவரும் அனைவரின் சிந்தையைச் செயலற்றதாக்கி - பூக்களும் - தாவரங்களுமே சுற்றுலாப் பயணிகளின் உயிரோட்டத்தில் கலந்து விடுகிறது. கல்லாகிப் போன மரங்கள் காட்சி தருகின்றன. 5 அடி உயரம் நறுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட சவுக்கின் ஊசி இலைகளில் வடிக்கப்பட்ட மிருக வடிவங்கள இயற்கைக்கு எழில் கூட்டும் வகையில் மனிதனின் கைத்திறமும் உதவுகிறது என்பதைக் காண முடிகிறது. வெட்டப்பட்டு வளர்க்கப்படும் சவுக்கு வகைகளினால் மதில் சுவர்கள், கட்டப்படாமல் வளர்க்கப்படுகிறது. அந்தத் தட்பவெட்ப நிலைகளில் மட்டுமே தயாராகும் அந்தக் காட்சிகளை வேறு எங்கும் காண்பதற்கில்லை.

இயற்கை எழிலை ஆராதித்த மனநிறைவோடு சுற்றுலாப் பயணிகள், இரவு கோவை வந்தடைந்தனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாவைத் திறம்பட அமைத்துள்ளதை, சுற்றுலாப் பயணிகள் பாராட்டினார்கள். கோவை-ஊட்டி தினசரிச் சுற்றுலா, பயணிகளுக்கு மலையரசியைக் காணும் பேறு என்றால் மிகையாகாது!

-எம். ராஜேந்திரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர் மாவட்டம்



## அடுத்த இதழில்...

அரசு கண் மருத்துவமனை இயக்குநரும், கண் காணிப்பாளருமான டாக்டர் வி.எம். லோகநாதன் அவர்கள் வழங்கும், வாசகர்களின் கேள்விகளுக்கான பதில்கள் இடம்பெறும்.



## TNPSC

விளம்பர எண்.19/93

கீழ்க்காணும் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 7.6.1993 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

### (1) தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு மற்றும் காப்பு மருந்துப்பணியில் நல்வாழ்வு அலுவலர் (Health Officer)

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2500-75-3100-100-4200

காலியிடங்கள்: 16

ஆதிதிராவிட வகுப்பினர்:- 3 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்:- 3 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்:- 4 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

பகிரங்கப் போட்டி: 6 (இரண்டு காலியிடங்கள் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது)

குறிப்பு: தெரிவு செய்யப்பட, தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அக்காலியிடங்கள் ஆண் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

வயது: 1.7.1993 அன்று 35 வயதிற்குக் குறைவாக.

குறிப்பு: (1) கல்வித்தகுதி சலுகை

**Degree** - No age limit for Scheduled Castes, Scheduled Tribes, Most Backward Classes/Denotified Communities, Backward Class and Destitute Widows of all Castes.

**Diploma** - No age limit for Scheduled Castes, Scheduled Tribes, Most Backward Classes/Denotified Communities, Backward Classes and Destitute Widows of all Castes if they have obtained the Diploma after passing Pre-Technical Course/PUC/H.S.C. The prescribed age limit will be increased by five years in respect of Scheduled Castes, Scheduled Tribes or in respect of Destitutes Widows of all Castes who have obtained the Diploma after passing S.S.L.C.

(Some more Concessions are given below)

(ii) The period of services rendered by a candidate as Short Services/Regular Commissioned Officer in the Army Medical Corps will subject to a maximum period of five years be excluded in computing his age.

தகுதி: 7.4.1993 அன்றுள்ளபடி (அடியிற் குறிப்பிட்டுள்ளவை அல்லது அவற்றின் இணையானவை).

(1) B.S.Sc. degree or the Diploma in Public Health of the University of Calcutta.

or

(2) A certificate of having undergone a special Course of training in Sanitary Science in the Medical College, Madras for a period of not less than one year and of having passed the examination for Licenceiate in Public Health held at the end of that courses.

or

(3) If fully qualified candidate are not available up to the number required application from candidates possessing the M.B.B.S. degree or from candidates possessing the Diploma in Medicine and Surgery or the Diploma of L.M.P. granted by the Board of Examiners, Medical College Madras will be considered for selection subject to certain conditions.

### (2) தமிழ்நாடு தொழிற்சாலைப் பணியில் உதவித் தொழிற்சாலை ஆய்வாளர் (Assistant Inspector of Factories)

*சம்பளம்:* மாதம் ஒன்றுக்கு ரூபாய் *1640-60-2600-75-2900*

காலியிடங்கள்: *2*
பகிரங்கப் போட்டி: *1*
ஆதிதிராவிட வகுப்பினர்: *1*

**வயது:** *1.7.1993* அன்று *30* வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் எல்லா வகுப்பு ஆதரவற்ற விதவைகளுக்கும் வயது வரம்பு இல்லை.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன).

**தகுதி:** *27.4.1993* அன்றுள்ளபடி (கீழ்க்காண்பவை அல்லது அவற்றின் இணையானவை).

A Degree in Mechanical, Electrical or Chemical Engineering or Textile Technology.

(இரண்டு பதவிகளுக்கும் பொருந்தும்)

**குறிப்புகள்:** *(1)* இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண் களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களை விட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

*(2) 19.9.89/4.9.90* நாளிட்ட தேர்வாணையத்தின் அறிவிக்கைக்கிணங்க நல்வாழ்வு அலுவலர் (Health Officer) உதவி தொழிற்சாலை ஆய்வாளர் (Assistant Inspector of Factories) பதவிக்கு நியமனம் செய்யப்பட ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மற்றபடி தகுதியானவர்களாயிருந்து அவர்கள் விரும்பினால் இந்த நியமனத்திற்கும் விண்ணப்பிக்கலாம்.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'-களில் தரப்பட்டுள்ளன. ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர் களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக் கான விதிமுறை'களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-*600 002* அவர்களுக்கு எழுத்து மூலம் கோரி பெற்றுக் கொள்ள லாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-*600 002* அவர்களுக்கு வழங்கக்கூடிய *1.5.93* அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் *10*) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கொடுட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய *1.5.1993* அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-*600 006* ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத் தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் *10*) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (*26 x 12* செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அதனுடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

**குறிப்பு:** ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக கோரிக்கைகள் அனுப்பவேண்டும். பத்து ரூபாய்க்கான அஞ்சல் ஆணை அல்லது கேட்புக் காசோலை ஒவ்வொரு கோரிக்கையுடனும் அனுப்ப வேண்டும்.

DIPR/710/MS/93



## திருப்பூர் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்:

# ஒரு வரப்பிரசாதம்

கோவை மாவட்டத்திலுள்ள திருப்பூர் நகரம் தமிழ்நாட்டில் ஒரு முக்கிய தொழில் மையமாக அமைந்து, அந்நியச் செலாவணி யாகச் சுமார் ரூபாய் *2000* கோடிக்கு மேல் ஆண்டொன்றுக்கு ஈட்டித்தருகிறது. கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளில் இந்நகரம் மிகப் பிரம்மாண்டமான அளவில் உரு வாகியிருக்கிறது. தொழில் சம்பந்த மாக திருப்பூர் நகருக்கு நாள் தோறும் ஆயிக்கணக்கான மக்கள் வருகை புரிகின்றனர். *1981*-இல் *1.65* இலட்சம் மக்கள் தொகை கொண்ட இந்நகரம், *2011*-ஆம் ஆண்டில் சுமார் 3 இலட்சம் மக்கள் தொகையை அடையும் என எதிர் பார்க்கப்படுகிறது.

நாளுக்குநாள் வளர்ந்துவரும் திருப்பூர் நகரின் குடிநீர்த் தேவை யைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ.*20* கோடி செலவில் ஒரு மிகப் பெரிய திட்டத்தைத் தீட்டி முனைப் புடன் செயல்படுத்திவருகிறது. இந்தத் திட்டம் திருப்பூர் நகராட்சி மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

### தற்போதைய குடிநீர்த் திட்டம்

முதன் முதலில் திருப்பூர் நகராட் சிக்குக் கோயில்வழியில் அமைக்கப் பட்ட நீர் உறிஞ்சும் கிணற்றை ஆதாரமாகக் கொண்டு ஒரு குடி நீர் திட்டம் நிறுவப்பட்டது. இத் திட்டத்தால் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாததால் *1963*-இல் மேட்டுப்பாளையம் அருகில் பவானி ஆற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு *400* மி.மீ. விட்டமுள்ள வார்ப்பு இரும்புக் குழாய்கள் மூலம் நீர் உந்தப்பட்டு, திருப்பூர் நகருக்கு *7.00* மில்லியன் லிட்டரும், வழியோரக் கிராமங் களுக்கு *1.62* மில்லியன் லிட்டரும் குடிநீர் வழங்கும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கப் பட்டு, தற்போது நடைமுறையில் உள்ளது.

திருப்பூர் மக்கட் தொகை *2011*-ஆம் ஆண்டில் *3* இலட் சத்தை அடையும் என்று எதிர் பார்க்கப்படுவதால், நாளொன்றுக்கு *33* மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் முறையில் ஒரு மேம் பாட்டுத் திட்டம் அவசியமாயிற்று.

''நீரின்று அமையாது உலகு'' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, பட்டி தொட்டிகளிளெல்லாம் குடி நீர்த் தேவையை நிறைவேற்றி வரும் தமிழக அரசு, திருப்பூர் நகராட்சி, நான்கு பேரூராட்சிகள் மற்றும் *44* வழியோர ஊராட்சிகளில் *7* இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர் வளர்ச்சித் திட்டத்தை ரூ.*20.34* கோடி மதிப்பீட்டில், (ஆண்டு பராமரிப்புத் தொகை ரூ.*0.65* கோடி) செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு அரசு ஆணை வழங்கியுள்ளது.

இத்திட்டம், திருப்பூர் நகராட் சிக்கு நாளொன்றுக்கு *26* மில்லியன் லிட்டரும் அன்னூர், அவினாசி, திருமுருகன் பூண்டி மற்றும் வேலம்பாளையம் ஆகிய *4* பேரு ராட்சிகளுக்கும், *44* வழியோர ஊராட்சிகளுக்கும் சேர்த்து மொத்தம் *18* மில்லியன் லிட்டரும் குடிநீர் வழங்கும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான குடிநீர், மேட்டுப்பாளையத்திற்கு அருகில் பவானி ஆற்றிலிருந்து ஒரு கிணறு மூலம் எடுக்கப்பட்டு, அருகில் நிறுவப் படும் *46* மில்லியன் லிட்டர் கொள் ளளவு கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படும்.

பவானி ஆற்றின் அருகே நிறுவப்பட்டுள்ள *23* மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்ச் சுத்திகரிப்பு நிலையம்.



பின் இங்கிருந்து 54 கிலோமீட்டர் தூரத்திற்கு 800 மி.மீ. 700 மி.மீ. விட்டமுள்ள முன் வலுவூட்டப்பட்ட கான்கிரீட் குழாய்கள் மூலம் குடிநீர் திருப்பூருக்குக் கொண்டு செல்லப் படும். தலைப்பிடத்திலிருந்து 400 குதிரைத்திறன் நீரேற்றி மூலம் (Booster) நடூர் நீருந்து நிலையத் திற்கு நீர் ஏற்றப்பட்டு, அங்கிருந்து 400 குதிரைத்திறன் நீரேற்றி மூலம் போகலூர் நீருந்து நிலையத்திற்குக் குடிநீர் ஏற்றப்படும். மீண்டும் 400 குதிரைத்திறன் நீரேற்றி மூலம் மேல் கிணறு அருகில் உள்ள உயர்மட்ட இடத்திற்கு ஏற்றப்பட்டு பின்பு தன் உந்துதல் மூலம் திருப்பூரில் அமைக் கப்பட்டுள்ள 8 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு நீர் கொண்டு செல்லப்பட்டு, 110 கி.மீ. பகிர் மானக் குழாய்கள் மூலம் திருப்பூர் மக்களுக்குக் குடிநீர் விநியோகிக்கப் படும்.

1988-இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குடிநீர்த் திட்டத்தை சூன் 1993-க்குள் முடிக்கத் திட்டமிடப் பட்டிருப்பதாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் திரு வி.ஆர். வைத்திய நாதன் அவர்கள் தெரிவிக்கிறார்.

தற்போது நடைபெற்றுக் கொண் டிருக்கும் திருப்பூர் குடிநீர் மேம் பாட்டுத் திட்டப் பணிகளை நேரில் பார்வையிட சென்னையிலிருந்து ஒரு பத்திரிகையாளர் குழு அண்மை யில் திருப்பூர் நகருக்கு வருகை புரிந்தது. திருப்பூரில் இந்தக் குழு வினரைச் சந்தித்த கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி.வி சங்கர், இ.ஆ.ப., அவர்கள், இந்தத் திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளில் துரித மாகச் செயல்படுத்தப்பட்டு இவ் வாண்டு மே மாத இறுதிக்குள் திட்டப் பணிகளை முடித்து, திருப்பூர் மக்களுக்குக் குடிநீர் வழங்க முடியும் என நம்பிக்கை தெரிவித் தார். அந்த அளவுக்குப் பணிகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேட்டுப்பாளையம் அருகிலுள்ள பவானி ஆற்றிலிருந்து கொண்டு வரப்படும் இந்தக் குடிநீரைச் சேமித்து வைக்கத் திருப்பூர் நகராட் சியில் 8 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 26 இலட்சம் லிட்டர் கொள் ளளவுள்ள நீர்த் தேக்கத் தொட்டி தான் மிகப் பெரிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியாகும். இந்த நீர்த் தேக்கத் தொட்டி தற்சமயம் முடியும் தறுவாயில் உள்ளது.

44 வழியோர ஊராட்சிகளி லுள்ள 412 வழியோரக் கிராமக் குடியிருப்புகளுக்கு ரூ.18.26 கோடி செலவில் குடிநீர் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடி யிருப்புகளுக்குத் தேவையான குடிநீர் திருப்பூர் குடிநீர்த் திட்டத்தின் நீர் உந்துக் குழாயில் 10 இடங்களில் பிரித்து எடுத்து விநியோகம் செய்யத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடிநீர்த் திட்டப் பணி யில் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களும் (சிமெண்ட், இரும்பு உட்பட) நல்ல தரமானவைதானா என்று பரிசோதிக்கப்பட்ட பிறகே கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்படு வதாக இந்தத் திட்டப்பணிகளை மேற்பார்வையிடும். தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் திரு. வி.ஆர். வைத்திய நாதன் அவர்கள் கூறினார்.

இந்தத் திட்டத்துக்கு இதுவரை 16 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

தற்சமயம் முடியும் தறுவாயில் இருக்கும் திருப்பூர் மேம்பாட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்து திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. பழனிச்சாமி அவர்கள் கருத்து தெரிவிக்கையில், கடந்த 2 ஆண்டுக் காலமாக மிகுந்த வேகத்துடன் இந்தப் பணி நடைபெற்று வருவதாக வும், தற்போது நிதி ஒதுக்கீடு அதி கரித்து, அலுவலர்கள் சிறப்பாகவும் வேகமாகவும் பணியாற்றி வருவதா கவும் கூறி. தமிழ்நாடு குடிநீர் வடி கால் வாரிய அலுவலர்களைப் பாராட்டினார்.

**திருப்பூர்க் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

திருப்பூர் நகரின் துரித வளர்ச்சி யைக் கருத்தில் கொண்டு திருப்பூர் நகராட்சி, இரண்டு பேரூராட்சி மற்றும் அருகாமையிலுள்ள 14 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி திருப்பூர் பிரதான விரிவாக்கத் திட்டப் பகுதி என அறிவிக்கப் பட்டுள்ளது. இப்பகுதியின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மூன்றாவது கூட்டுக் குடி நீர்த் திட்டம் ஒன்று தற்போது ஆய்வில் இருப்பதாகக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார். இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் திருப்பூர் நகரிலிருந்து 55 கி.மீ. தொலைவிலுள்ள காவேரி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 200 கோடி என மதிப்பிடப் பட்டுள்ளது.

- ஜே. சந்திரன்

மேட்டுப்பாளையத்திலிருந்து திருப்பூருக்குக் குடிநீர் கொண்டு செல்ல 700 மி.மீ. விட்டமுள்ள முன்வலுவூட்டப் பட்ட கான்கிரீட் குழாயைப் புதைக்கும் காட்சி.



மாணவர் பக்கம்:

# நலமாய் வாழ்ந்திடு

(புலவர் தணிகை உலகநாதன்)





பெருமை மிக்க பாரத நாட்டில்
பிறந்தோம் நாமெல்லாம்
ஒருதாய் மக்கள் என்னும் நல்ல
உணர்வால் வாழ்ந்திடுவோம்.

இமயம் முதல் குமரி வரையில்
இந்தியப் பெருவீடு
சமயம் சாதி வேற்றுமை யின்றிச்
சமமாய் வாழ்ந்திடுவோம்.

இந்து முஸ்லீம் கிறித்தவர் புத்தர்
எவராய் இருந்தாலும்
சொந்தக் காரர் எனப்பா ராட்டிச்
சுகமாய் வாழ்ந்திடுவோம்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவன்'
உயர்ந்த கொள்கை இதை
நன்றே எண்ணிக்கூடிப் பழகி
நலமாய் வாழ்ந்திடுவோம்.

ஒருமைப் பாட்டை உயிராய்க் காப்போம்
உலகம் புகழ்ந்திடவே
அருமை யான வெற்றிகள் பலவும்
அடைந்தே வாழ்ந்திடுவோம்.





**இது உங்கள் பக்கம்**

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். குட்டிக்கதை, கவிதை, கட்டுரை, பொது அறிவுத் துணுக்குகள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். அத்துடன் உங்களைப் பற்றிய குறிப்பையும் எழுதி அனுப்பலாம்.

அதாவது, விளையாட்டு, ஓவியம், பேச்சு, கட்டுரைப் போட்டி முதலானவற்றில் திறமைமிக்கவர்கள் - இவற்றில் பரிசு பெற்றவர்கள் தங்கள் புகைப்படத்துடன் (பாஸ்போர்ட்) தங்களைப் பற்றிய தகவல்களை அனுப்பி வைக்கலாம்.

ஆனால் ஒன்று, அனுப்பும்போது, தங்கள் பள்ளி ஆசிரியர் சான்றுடன் அனுப்ப வேண்டும்.

எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்க்கலாம்!

• குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பொறுத்தே, ஒரு நாட்டின் எதிர்காலம் அமையும்.



## பொது அறிவுத் தகவல்கள்

• ஐம்பெரும் காப்பியங்கள் எவை?
1. சிலப்பதிகாரம்,
2. மணிமேகலை,
3. சீவகசிந்தாமணி,
4. வளையாபதி,
5. குண்டலகேசி.

• மேற்கு வங்காளத்திலுள்ள துர்க்காபூர் எத்துறைக்குப் பெயர் பெற்றது?

இரும்புத் தொழிற்சாலை.

இந்தியாவில் தங்கச் சுரங்கம் உள்ள இடம் - கர்நாடகாவிலுள்ள - கோலார்.

• நாட்டின் மிகப் பெரிய பாலைவனம் எது?

தார் பாலைவனம்

• நாட்டின் மிகப் பெரும் மசூதி எது?

ஜும்மா மசூதி.

• நாட்டின் மிகப் பெரும் அருங் காட்சியகம் எது?

இந்தியா மியூசியம் (கல்கத்தா)

• உலகிலேயே 12 மாதமும் அதிக மழை பெய்து கொண்டிருக்கும் பகுதி சிரபுஞ்சி ஆகும். இது இந்தியாவில் உள்ளது.

• சர்வதேச கடற் பாதுகாப்பு நிறுவனம் இலண்டனில் உள்ளது.

• உலகிலேயே மிக உயரமான நீர் வீழ்ச்சி வெனிசுலாவில் உள்ள சால்டோ ஏஞ்சல் நீர்வீழ்ச்சியாகும்.

• உலகிலேயே மிகப் பெரிய பணக் கார நாடு - குவைத்.

• முதன்-முதலில் கலைக்களஞ்சியம் வெளியிட்ட நாடு - பிரான்ஸ்.

• சுருக்கு எழுத்து முறையை ஆங்கிலத்தில் வகுத்தவர் சர் ஐசக் பிட்மென்.



# தென்னார்க்காடு மாவட்டத்தில் கனிமச் செல்வங்கள்

கல்வராயன் மலையைத் தவிர, தென்னார்க்காடு மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளும் சமவெளியாகவே காட்சியளிக்கிறது. இம்மாவட்டத்தில் கனிம வளங்கள் பரவலாக அமைந்துள்ளது. இங்கு ஜல்லிக் கற்கள், கிரானைட், சிலிகா மணல், சுண்ணாம்பு போன்ற பல கனிமப் பொருட்கள் கிடைக்கின்றன.

இம்மாவட்டத்தில் ஓடும், தொண்டியாறு, பெண்ணையாறு, கடிலம், மணிமுக்தர், கோமுகி ஆகிய ஆற்றின் ஓரங்களில் ஏராளமான மணல் கிடைக்கின்றது. இங்கு 16 இடங்களில் மணல் தோண்டி எடுக்கப்படுகிறது. இதனால் அரசுக்குக் கணிசமான வருமானம் கிடைக்கிறது.

ஜல்லிக் கற்களைப் பொறுத்தவரையில் இம்மாவட்டத்தில் 45 இடங்களில் வெட்டி எடுக்கப்படுகின்றன.

செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் தாலுக்காக்களில் பல வண்ண கிரானைட் கற்கள் கிடைக்கின்றன.

இங்கே கிடைக்கும் கிரானைட் கற்கள் பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. திண்டிவனம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி தாலுக்காக்களில் கருப்பு கிரானைட் கற்கள் வெட்டியெடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தென்னார்க்காடு மாவட்டம் குன்னம் எனுமிடத்திலிருந்து வெட்டியெடுக்கப்படும் கிரானைட் கற்கள் உலகப் பிரசித்தி பெற்றவை.

ஜப்பானில் வாழும் பெரும் செல்வந்தர்கள், ''தங்களது கல்லறையை, குன்னம் கிரானைட் கற்கள் கொண்டு எழுப்ப வேண்டும்'' என்று உயிலில் குறிப்பிடும் அளவிற்கு, குன்னம் கிரானைட் கற்கள் பிரசித்தி பெற்றவை ஆகும்.





இம்மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கிரானைட் கற்களினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.6 கோடி அந்நியச் செலாவணியாகக் கிடைக்கிறது.

திண்டிவனம் தாலுகா கடற்கரைப் பகுதிகளில் சிலிகா மணல் (Silica Sand) ஏராளமாகக் கிடைக்கின்றது.

இனி வருங்காலத்தில், இம்மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கனிமப் பொருட்களின் மூலம் நம் நாட்டிற்கு ஏராளமான அந்நியச் செலாவணி கிடைக்கப்போவது திண்ணம்.

— என். இளங்கோ

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)PP-23

# ண்ணாமலைப் பல்கலைக்கழகம்



## தொலைதூரக் கல்வி இயக்ககம் மற்றும்
## திறந்த முறைப் பல்கலைக்கழக அமைப்பு

இளங்கலை, முதுகலை மற்றும் பட்டயப் படிப்பு விபரங்களுக்கு: **தொடர்பு அதிகாரி,** அண்ணாமலைப் பல்கலைக்கழக **படிப்பு மையங்களுடன்** கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 19, மார்ஷல் சாலை, எழும்பூர், சென்னை – 600 008. | 32–பி, 7வது குறுக்குத் தெரு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி–620018 | 15, டாக்டர் சுப்பராயன் சாலை, பாலஸ் தியேட்டர் அருகில், சேலம் – 636 001. |
| 72, சரோஜினி தெரு, ராம்நகர், கோவை – 641 009 | 316 – இ. கே. [illegible]லை, நாகர்கோயில் – 629 001 | 176, வடக்கு வெளி வீதி, மதுரை – 625 001 |
| 4, தியாகராஜபுரம், லெக்ஷ்மி தியேட்டா அருகில், வேலூர் – 632 001 | 49–சி, கைலாசபுரம் வடக்குத் தெரு, பாவா பில்டிங், 2வது மாடி, திருநெல்வேலி – 627 001 | 7 – 7வது வீதி, சுப்ரமணியபுரம், காரைக்குடி – 623 002 (14–4–1993 முதல்) |
| 127 10, மணிக்டாலா மெயின் ரோடு, கல்கத்தா – 700 054 (1–5–1993 முதல்) | F, 249, இரண்டாவது மாடி, ராமா மார்க்கட், முனிர்கா, புது டில்லி – 110 067 | தொலைதூரக் கல்வி இயக்ககம், அண்ணாமலைநகர் – 608 002. |



பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR/273

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...

புதிய அமைச்சர்கள் பதவியேற்பு ... 2
மாண்புமிகு அமைச்சர்கள் பொறுப்பு வகிக்கும் துறைகள் விவரம் ... 4
மீன்வளம் பெருக.. மீனவர் வாழ்க்கைத் தரம் உயர ... 11
நாடும் வீடும் நலம்பெற நாளும் சேமிப்போம்! ... 15
தீண்டாமை வேண்டாமே! ... 17
பாவேந்தர் பாரதிதாசனின் உலகப் பார்வை ... 19
வாரிசுகள் வளரட்டும் (சிறுகதை) ... 24
சுகந்தரும் சுற்றுலாத் தலம் ... 28
சுவாமி சகஜானந்தா கல்விக் கழகம் ... 31
நினைவாற்றல் தரும் கண்டைக்காய் ... 33
கண் மருத்துவம் - டாக்டர் பதில்கள் ... 35
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் ... 39
வேளாண் பொறியியல் துறையின் விரைவான பணிகள் ... 45
நூல் நயம் ... 48

164878

## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

21.5.93 அன்று சென்னைக்கு வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாட்டின் குடிநீர்த் திட்டங்கள் குறித்து விவாதித்தார்.

**நான்காம் அட்டை:**

உதகை ஏரியின் உள்ளங் கவர் காட்சி.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2024
வைகாசித் திங்கள் - 19
மலர்:23 இதழ்:23
1-6-1993
விலை: ரூபாய் மூன்று

# புதிய அமைச்சர்கள் பதவியேற்ற காட்சி




மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள்.




மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. துரை. இராமசாமி அவர்கள்.




மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜனார்த்தனன் அவர்கள்.




மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள்.




மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. ம. சின்னசாமி அவர்கள்.




மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கு. லாரன்ஸ் அவர்கள்.






மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள்.




மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள்.




மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மேலூர் அ.மா. பரமசிவன் அவர்கள்.




மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன் அவர்கள்.




மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு. டி.வி. நடேசன் பால்ராஜ் அவர்கள்.



மாண்புமிகு சுதார்த்துறை அமைச்சர் திரு.பி. ஈசுவரமூர்த்தி அவர்கள்.

## மாண்புமிகு அமைச்சர்கள்

**முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா:**
பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணிகள், இந்திய காவல் பணிகள், இதர அகில இந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல்துறை, லஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு ஆயத்தீர்வை, எரிசாராயம், சிறு பான்மையினர், மின்னனுவியல்.

**நிதியமைச்சர்**
**டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:**
நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம்.

**சட்டத்துறை அமைச்சர்**
**திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:**
சட்டம், நீதிமன்றம், சிறைச்சாலை, எடை அளவுகள் பற்றிய சட்டம் இயற்றல், கடன் நிவாரணம், கடன் வழங்குதல், சீட்டு நிதிகள், கம்பெனிகள் பதிவு செய்தல் ஆகியவை பற்றி சட்டம் இயற்றுதல்.

**வருவாய்த்துறை அமைச்சர்**
**திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:**
வருவாய்த்துறை, மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை மாவட்ட ஆட்சித் தலைவர், பதிவு செய்தல், தபால்தலை சட்டம், எழுதுபொருள், அச்சு, அரசு அச்சகம், பூதான், கிராமதான், பாஸ்போர்ட்.

**உணவுத்துறை அமைச்சர்**
**திரு. இராம. வீரப்பன்:**
உணவு, நுகர்பொருள் வழங்கல்.

**மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**
**திரு. எஸ். முத்துசாமி:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்பக் கட்டுப்பாடு, சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

**போக்குவரத்துத்துறை அமைச்சர்**
**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:**
போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகன சட்டம், துறைமுகங்கள், சின்கோனா.

**கைத்தறி மற்றும் ஜவுளித்துறை அமைச்சர்**
**திரு. இ.மதுசூதனன்:**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை

**பொதுப்பணித்துறை அமைச்சர்**
**திரு.எஸ். கண்ணப்பன்:**
பொதுப்பணித்துறை, நீர்ப்பாசனம் (சிறிய நீர்பாசனம் உள்பட) நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, இரும்புக் கட்டுப்பாடு.

**வீட்டுவசதித்துறை அமைச்சர்**
**திரு. எஸ். ரகுபதி:**
வீட்டுவசதி, குடிசைப்பகுதி மாற்றுத்திட்டம், கிராமப்புற வீட்டுவசதி மேம்பாடு, வீட்டு வாடகைக் கட்டுப்பாடு, நகர்புறத் திட்டம், நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்.

**ஊரகத்தொழில் அமைச்சர்**
**திரு. துரை ராமசாமி:**
சிறுதொழில், ஊரக தொழில்கள், குடிசைத் தொழில்கள்.

**வேளாண்மைத்துறை அமைச்சர்**
**திரு. கு.ப. கிருஷ்ணன்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண்மைச் சேவைக் கூட்டுறவு, தோட்டக் கலை, கரும்பு வரி, கரும்பு வளர்ச்சி.

**பால்வளத்துறை அமைச்சர்**
**திரு. டி. ஜனார்த்தனன்:**
பால், பால்வளம், கால்நடை.

முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் நினைவு நாளையொட்டி, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் 'கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள்' உறுதிமொழி எடுத்துக் கொண்டார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள் (21.5.'93).



## பொறுப்பு வகிக்கும் துறைகள் விவரம்:

**வணிகவரித்துறை அமைச்சர்**
**திரு. வி. சத்தியமூர்த்தி:**
வணிகவரிகள்.

**தொழில்துறை அமைச்சர்**
**திரு. எம். சின்னசாமி:**
தொழில்கள், கனிமச் சுரங்கங்கள், கனிமங்கள்.

**சமூகநலத்துறை அமைச்சர்**
**புலவர் திருமதி. இந்திரகுமாரி:**
சமூகநலம், ( மகளிர் குழந்தைகள் நலம் உள்பட) சத்துணவுத் திட்டம், பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

**வனத்துறை அமைச்சர்**
**திரு. கு. லாரன்ஸ்:**
காடுகள்.

**செய்தி விளம்பரத்துறை அமைச்சர்**
**திரு. மு. தென்னவன்:**
செய்தி மற்றும் விளம்பரத்துறை, திரைப்பட தொழில்நுட்பம், திரைப்படச் சட்டங்கள், செய்தித் தாள்கள் கட்டுப்பாடு.

**கல்வித்துறை அமைச்சர்**
**பேராசிரியர் க. பொன்னுசாமி:**
கல்வி, தொழில்நுட்பக் கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல்பொருள் ஆய்வு, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாடு.

**தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**
**திரு. மேலூர் ஏ.எம். பரமசிவன்:**
தொழிலாளர் நலம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற, கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள்தொகை கணக்கெடுப்பு.

**கூட்டுறவுத்துறை அமைச்சர்**
**திரு. கா.ப. பட்டாபிராமன்:**
கூட்டுறவு.

**உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. டி.எம். செல்வகணபதி:**
நகராட்சி நிர்வாகம், கிராமப்புற மேம்பாடு, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன்கள், நகர்ப்புற, கிராமப்புற நீர் விநியோகம்.

**ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்**
**திரு. எம். ஆனந்தன்:**
ஆதிதிராவிடர் நலம், மலைவாழ் மக்கள், கொத்தடிமைகள் ஒழிப்பு, முன்னாள் இராணுவத் தினர் நலன்.

**அறநிலையத்துறை அமைச்சர்**
**திரு. டி.வி. நடேசன் பால்ராஜ்:**
இந்து அறநிலையத்துறை.

**பிற்பட்டோர் நல, மீனளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார்:**
பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், கடல் கடந்து வாழும் இந்தியர் நலன், அகதிகள் மற்றும் மீனளம்.

**சுற்றுலாத்துறை அமைச்சர்**
**திரு. எஸ். நாகூர் மீரான்:**
வக்பு, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

**கதர்த்துறை அமைச்சர்**
**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி:**
கதர் மற்றும் கிராமத் தொழில்.





தமிழகப் புதிய அமைச்சரவை (17.5.1993)

## புதிய அமைச்சர்கள் பதவி ஏற்பு விழா

பன்னிரண்டு புதிய அமைச்சர்கள் பதவி ஏற்கும் விழா, கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் 17.5.93 அன்று மாலை சிறப்பாக நடைபெற்றது.

ஆளுநர் மாளிகையில் உள்ள அழகிய புல்தரையில் இதற்காகத் தனி மேடையும், அலங்காரப் பந்தலும் அமைக்கப்பட்டிருந்தன. புதிதாகப் பதவி ஏற்க வந்திருந்த அமைச்சர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர்.

புதிய அமைச்சர்களை மேதகு ஆளுநர் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிமுகப்படுத்தி வைத்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. அவர்கள் புதிதாக அமைச்சரவையில் இடம்பெறும் அமைச்சர்களுக்குப் பதவி ஏற்பு உறுதிமொழியினையும், ரகசியக்காப்பு உறுதிமொழியையும் செய்து வைக்குமாறு மேதகு ஆளுநர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

முதலில் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள், உணவு அமைச்சராகப் பதவி ஏற்பு உறுதி மொழியையும், ரகசியக்காப்பு உறுதிமொழியையும் எடுத்துக் கொண்டார். அதைத் தொடர்ந்து திரு. துரை ராமசாமி அவர்கள் ஊரகத்தொழில் அமைச்சராகவும், திரு. டி. ஜனார்த்தனன் அவர்கள் பால்வளத்துறை அமைச்சராகவும், திரு. வி. சத்தியமூர்த்தி அவர்கள் வணிகவரித்துறை அமைச்சராகவும், திரு. மா. சின்னசாமி அவர்கள் தொழிலமைச்சராகவும், திரு. கு. லாரன்ஸ் அவர்கள் வனத்துறை அமைச்சராகவும், திரு. மு. தென்னவன் அவர்கள் செய்தி-மக்கள் தொடர்புத் துறை அமைச்சராகவும், பேராசிரியர் சே. பொன்னுசாமி அவர்கள் கல்வித்துறை அமைச்சராகவும், திரு. மேலூர் எம். பரமசிவம் அவர்கள் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும், திரு. கா. பட்டாபிராமன் அவர்கள் கூட்டுறவுத்துறை அமைச்சராகவும், திரு. டி.வி. நடேசன் பால்ராஜ் அவர்கள் இந்து அறநிலையத்துறை அமைச்சராகவும், திரு. பி. ஈசுவரமூர்த்தி அவர்கள் கதர்த்துறை அமைச்சராகவும் பதவியேற்றனர்.

பதவி ஏற்பு விழா 30 நிமிட நேரம் நடைபெற்றது. பின்பு, மேதகு ஆளுநர் அவர்கள் அனைவருக்கும் தேநீர் விருந்து அளித்தார். அதைத் தொடர்ந்து புதிய அமைச்சரவையுடன் மேதகு ஆளுநர் அவர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இந்த இனிய விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அவர்களது குடும்பத்தினர், அரசு உயர் அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

—என். இளங்கோ



## குடிநீர்ப் பிரச்சினை: மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு முதல்வர் ஆலோசனை

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 'ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டம்' குறித்தும் அதனைத் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் சென்னை விமான நிலையத்தில் 21.5.1993 அன்று ஒரு மனுவைச் சமர்ப்பித்தார்.

ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழ், இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவான விவாதங்கள் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தைப் பாராட்டத்தக்க அளவில் அமல்படுத்திய பின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் விளக்கிக் கூறினார்.

வறட்சிப் பகுதியாகவும், மழையே இல்லாத பகுதியாகவும் (Rain shadow region) விளங்கும் தர்மபுரி மாவட்டத்தின் மிகக் கடுமையான குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார். ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வருவது ஒன்றே தர்மபுரியின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வழி என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

இப்பகுதியில் வாழும் 18.5 இலட்சம் மக்களுக்கு நாளொன்றுக்கு 102 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்க ரூ.400 கோடி செலவில் ஒரு விரிவான திட்டம் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார். ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தின்கீழ் 'தீவிர கிராமக் குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின்' நிதி உதவியுடன் செயல்படுத்த இது மிகவும் ஏற்ற திட்டமாகும். இத்திட்டத்தை அமல்படுத்த நிதி உதவி வழங்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டார்.

சென்னை நகரில் ஏற்பட்டுள்ள தீவிர குடிநீர்ப் பஞ்சத்தைச் சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டன. தண்ணீர்ப் பஞ்சத்தால் அவதியுறும் சென்னைக்கு கொண்டு வரும் குடிநீருக்கு இரயில்வே துறை, விதிக்கும் வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

உடனடி நிவாரணமும் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற உண்மையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தினார். புதிய வீராணம் திட்டத்தின் கீழ், வீராணம் ஏரியிலிருந்து (220 கி.மீ. தொலைவிலிருந்து) நாள்தோறும் 40 மில்லியன் காலன் நீரை சென்னைக்குக் கொண்டு வருவது ஒன்றே நடைமுறையில் சாத்தியமாகக் கூடிய நிவாரணம் ஆகும்.

பெரு நகரங்களுக்கு வழங்கப்படும் உதவிகளின் கீழ், இத்திட்டத்திற்குச் சிறப்பு நிதியுதவி வழங்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். பல்வேறு நிறுவனங்களிலிருந்து நிதியுதவி பெறவும், தேவைப்பட்டால் கடனுதவியும் பெற்றுத்தர மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி உதவ வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

ரூ.75 கோடி செலவில், சென்னைக்கு நாளொன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் தண்ணீரைப் பெற, கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு நிதியுதவி வேண்டுமெனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் கீழ் ஒரு பெரிய தொழிற்சாலையையும், பல சிறிய தொழிற்சாலைகளையும் ரூ.57 கோடி செலவில் நிர்மாணிக்கும் முதல் கட்டப்பணிக்கு ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாக, நிதியுதவி ஒதுக்கி தரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். ராஜீவ் காந்தி தேசிய குடிநீர் முனைப்புத் திட்டத்தின் கீழும், தீவிர கிராமத் தண்ணீர் விநியோகத் திட்டத்தின் கீழும் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதன் அவசியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்தினார்.

மாநிலத்தின் கடுமையான குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முதல்வர் சமர்ப்பித்த திட்டத்தில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் தீவிரக் கவனம் செலுத்தினார். மேலும் கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் மூலம் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர ஆந்திர அரசை மாண்புமிகு பிரதமர் அவர்கள் வலியுறுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த மனுவில் உள்ள விவரங்களைத் தீவிரமாகப் பரிசீலிப்பதாக மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறினார்.

## படமும் செய்தியும்



முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் நினைவு நாளையொட்டி, ஸ்ரீபெரும்புதூருக்கு வருகை புரிந்து புதுடெல்லி திரும்பிய மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ், திருமதி. சோனியாகாந்தி, திரு. ராகுல், செல்வி. பிரியங்கா ஆகியோரை மேதகு ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண் சிங், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் சென்னை விமான நிலையத்தில் அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள் (21.5.'93).

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், ஊட்டியில் 98-வது மலர்க்காட்சியினைக் குத்துவிளக்கு ஏற்றிவைத்துத் துவக்கி வைத்தார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. இ. மதுசூதனன், திரு. கு.பா. கிருஷ்ணன், திரு. கு. லாரன்ஸ், திரு. வி. நடேசன் பால்ராஜ் மற்றும் செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித் தலைவர் வீனா நாயர், இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளார்கள் (22.5.'93).



## இறந்துபோன வனத்துறை ஊழியர் குடும்பங்களுக்கு ரூ.20 இலட்சம் நிதி உதவி

கடந்த 9.4.1993 அன்று சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் வைத்த கண்ணிவெடி சம்பவத்தில் இறந்துபோன இரண்டு வனத்துறை ஊழியர்களான திரு. வி. ஸ்ரீரங்கன், திரு. கே. சண்முகம் ஆகியோரது குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் அரசு உதவி தொகையாக ரூ. 10 இலட்சம் வீதம் மொத்தம் 20 இலட்சம் ரூபாய் வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இக்குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஏற்கெனவே தலா 3 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது.

இறந்துபோன வனத்துறை ஊழியர் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ.7 இலட்சம் வீதம் 14 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மறைந்த வனத்துறை ஊழியர்களின் துணைவியார் திருமதி. சரஸ்வதி, திருமதி. ராதாமணி ஆகிய இருவருக்கும் 21.5.93 அன்று நேரில் வழங்கினார்.





வாழ்த்துக்கள்

## திரு. வி.கே. பெரியசாமி

**காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)**

**மூலனூர்**

**பெரியார் மாவட்டம்**

## திரு. ஆர். அய்யாவு

**காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)**

**சென்னிமலை**

**பெரியார் மாவட்டம்**

## திரு. ஆர். லட்சுமணன்

**காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)**

**சென்னிமலை**

**பெரியார் மாவட்டம்**



# மீன்வளம் பெருக... மீனவர் வாழ்க்கைத் தரம் உயர...



உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் வளர்ப்புப் பற்றிய நவீன முறைகளை மக்களிடையே பரவச் செய்வதுடன், மீன் உற்பத்தியை அதிகரித்து, மக்களுக்கு நியாயமான விலையில் புரதச்சத்து மிகுந்த மீன் கிடைக்கச் செய்வது, குளங்களை நீண்டகாலக் குத்தகைக்கு எடுத்தல்; மீன் வளர்ப்புக்கேற்ற குளங்களைப் புனரமைப்பு செய்ய வங்கியின் மூலம் கடன் பெற உதவுதல்; சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கிராமப் புறங்களில் உள்ள படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு மீன் வளர்ப்பின் மூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருதல் - ஆகியவை, மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமையின் முக்கிய நோக்கங்களாகும்.

தென்னார்க்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமை 1980-ஆம் ஆண்டு, தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரைப் பெருந்தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்டது. இம் முகமை தொடங்கப்படுவதற்கு முன், இம்மாவட்டத்தில் மீன் உற்பத்தி ஒரு எக்டேருக்கு 135 கிலோவாக இருந்தது. இம்முகமையின் மூலம் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில், விருத்தாசலம், பண்ணுருட்டி, உளுந்தூர்ப்பேட்டை, கடலூர் வட்டங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்தும் மீன் வளர்ப்புக்கு ஏற்ற குளங்களை 10 ஆண்டு நீண்டகாலக் குத்தகைக்கு எடுத்துள்ளது.

கிராமப்புறத்திலுள்ள - படித்து வேலையில்லாத இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, மீன் வளர்ப்புக்கு எடுத்த குளங்களுக்கு மீன் வளர்ப்போர்களாக நியமனம் செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு நவீன மீன் வளர்ப்பு முறைகள் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. கடலூர் யுனைடெட் கமர்சியல் வங்கி மூலம் அவர்களுக்கு நிதி உதவி பெற்றுத் தருவதுடன், இம்முகமையின் மூலம் தொழில் நுட்ப முறைகளைக் குறித்த விளக்கமும் அளிக்கப்படுகிறது.

இம்முகமை ஆரம்பிக்கப்பட்டபோது, 18.5 எக்டேர் நீர்ப்பரப்பு இருந்தது. தற்போது சனவரி 1993 முடிய 396.8 எக்டேர் நீர்ப் பரப்பு உள்ள 568 குளங்கள் 588 மீன் வளர்ப்போர்களுக்கு ஒதுக்கப்பட்டு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் 13 மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமைகளில் இம்முகமையே கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து சிறந்த செயல்பாடுள்ள முகமைகளில் இரண்டாம் இடத்தை வகித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

1991-ஆம் ஆண்டு நவம்பரில் இம் மாவட்டத்தில் பெய்த பெருமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் இம்முகமை மூலம் மீன் வளர்ப்பவர்களின் குளங்களில் 12.11.91 ஆம் தேதி வரை இருப்பு செய்யப்பட்ட மீன் குஞ்சுகள் மற்றும் நுண்மீன் குஞ்சுகள் வெள்ளத்தில் வெளியேறியதால் ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்யும் முகத்தான், முகமைப் பெருந்தலைவர்-மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சீரிய முயற்சியால் ரூ.3.53 இலட்சம் வெள்ள நிவாரண நிதியாகப் பெறப்பட்டு அத்தொகை முழுவதும் அரசு ஆணைப்படி பாதிக்கப்பட்ட 248 மீன் வளர்ப்பவர்களின் நிலுவைகளுக்கு எதிராக வரவு வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இயங்கி வரும் 13 மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமைகளிலேயே இது போன்று நிவாரணநிதி பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

1988-89-ஆம் ஆண்டில் இம்முகமை தான் முதன் முதலாக நுண் மீன் குஞ்சுகளை மிதவைக் கூடுகள் மற்றும் கச்சா நர்சரிகள் மூலம் விரலளவு மீன் குஞ்சுகளாக வளர்த்தெடுக்க மீன் வளர்ப்போர்களை ஈடுபடுத்தியது. இதன் மூலம் மீன் பிடிப்பு இல்லாத காலங்களில் மீன் வளர்ப்போர்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்ததுடன், வளர்த்தெடுத்த விரலளவு மீன் குஞ்சுகள் குளங்களில் உரிய காலத்தில் இருப்புச் செய்யவும் முடிந்தது. இம்முகமைக்கு மட்டுமன்றி, மீன் வளர்ப்போர்கள் வளர்த்த மீன் குஞ்சுகளைத் தனியார் மீன் பண்ணையில் மீன் வளர்ப்போருக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் மூலம் இம்முகமையின் மீன் வளர்ப்போர்கள் நுண்மீன் குஞ்சுகளை விரலளவு மீன் குஞ்சுகளாக வளர்த்தெடுப்பதில் இம்மாநிலத்தில் முன்னோடிகளாக விளங்குவதுடன், மீன் வளர்ப்போருக்கு மீன் குஞ்சு வளர்ப்பு மூலம் லாபம் கிடைக்கச் செய்வதுடன், முகமையும் சொந்த மீன் பண்ணை செயல்படுத்தும்வரை மேற்படி மீன் வளர்ப்போரின் மூலமே முகமையின் மீன் குஞ்சுத் தேவையை ஈடுசெய்யவும் இயலுகிறது. 1992-93-ஆம் ஆண்டிற்கு முகமை மூலம் 42.5 இலட்சம் நுண்மீன் குஞ்சுகள் மீன் வளர்ப்பிற்கு அளிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கிராமக் குளங்களை நம்பியே மீன் வளர்ப்பினைத் தொடரவேண்டியிருந்தது. தற்போது தனியார் தங்கள் சொந்த நிலத்தில் மீன் வளர்ப்புக் குளங்கள் அமைத்து வெற்றிகரமாக மீன் வளர்ப்புச் செய்கின்றனர். இதற்கு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, திட்ட மதிப்பீடு அறிக்கை தயாரித்துக் கொடுக்கிறது. நீர் தேங்கக்கூடிய தாழ்வான - விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியாத நிலங்களை மீன் வளர்ப்பிற்குப் பயன்படுத்தலா

மென்ற நிலை இருந்தது. ஆனால், தற்போதுதான் இக்கருத்து மக்களிடையே விரிவடைந்து வருகிறது. இதைப் பயன்படுத்தி அரசும் புதிதாக வகுத்துள்ள கொள்கைப்படி குளம் அமைப்பதற்கான நிரந்தரச் செலவில் அதிகப்பட்சமாக ஒரு எக்டேருக்கு 20 சதவிகித மானியம் (ரூ.20,000 வரை) வழங்க ஆணை வழங்கி உள்ளது. ஒரு எக்டேர் பண்ணை அமைக்க ரூபாய் ஒரு இலட்சம் வரை செலவாகும். அதில் ரூ.20,000 அரசு மானியம் போக, பாக்கியை வங்கிகள் கடன் வசதி மூலம் பெறலாம். தேசிய விவசாய வங்கி முழுக் கடனையும் வங்கிகளுக்கு அளிக்கிறது. ஒரு எக்டேருக்குச் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.40,000 வரை வருமானமாகப் பெற வாய்ப்புள்ளது. இது மற்ற விவசாயம், கரும்பு போன்றவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயைவிட மிக அதிக வருவாய் கிடைக்கும் தொழிலாகும். முகமை தொழில் நுட்ப ஆலோசனை கொடுப்பதுடன் திட்ட மதிப்பீடு தயாரித்து வங்கிக்குப் பரிந்துரை செய்கிறது. குளம் அமைத்த பின் முகமையில் உறுப்பினராகச் சேர்த்து பயனடையலாம்.

**தென்னார்க்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமையின் சாதனைகள்**

முகமை ஆரம்பிக்கப்பட்ட நாள் - 1.12.1980, இம்மாவட்டத்தில் உள்ள மொத்த நீர்பரப்பு - 50,975 எக்டேர்; கிடைக்கப்பெறும் குட்டை மற்றும் குளங்களின் பரப்பு - 2,800 எக்டேர். முகமை ஆரம்பிப்பதற்கு முன்பு இருந்த சராசரி மீன் உற்பத்தி - 25 முதல் 130 கிலோ ஒரு எக்டேருக்கு. முகமை ஆரம்பித்த பின்பு சராசரி மீன் உற்பத்தி - 831 முதல் 1,459 கிலோ ஒரு எக்டேருக்கு. மீன் வளர்ப்போர்க்கு எடுக்கப்பட்ட குளங்கள் - 568, அவைகளின் பரப்பு - 396 8 எக்டேர். பயனடைந்த மீன் வளர்ப்போர் - 588, பயிற்சி அளிக்கப்பட்ட மீன் வளர்ப்போர் - 687.

1991-92-ஆம் ஆண்டில் இருப்பு செய்யப்பட்ட மீன்குஞ்சுகள் - 17,61,220. 1992-93-ஆம் ஆண்டில் இருப்பு செய்யப்பட்ட மீன்குஞ்சுகள் (இதுநாள் வரை) - 13,67,410. 1992-93-ஆம் ஆண்டில் பிடிக்கப்பட்ட மீன்களின் எடை - 246.124 டன்கள். யூ.கோ. வங்கி நிதியுதவியுடன் புனரமைப்பு செய்த குளங்கள் - 185, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட குளங்கள் - 72. இதுவரை வங்கியின் மூலம் புனரமைப்புக்கு வழங்கப்பட்ட கடன் தொகை - ரூ.10,76,644. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வழங்கிய மானியம் - ரூ.74,128, இம்முகமையின் மூலம் வழங்கிய புனரமைப்புக் கடன் மானியம் - ரூ.2,06,735. புனரமைப்புக் கடன் வசூல் செய்தது மற்றும் வங்கியால் தள்ளுபடி செய்தது - ரூ.8,48,001.20. வங்கி மூலம் வழங்கிய இடுபொருள் கடன் - ரூ.26,81,045. இம்முகமையின் மூலம் வழங்கிய மானியம் - ரூ.1,99,758. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் வழங்கிய மானியம் - ரூ.1,77,464. இடுபொருள் கடன் வசூல் செய்தது - ரூ.24,56,118.

**மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் உதவி**

கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஆர்வமுள்ள மீன் வளர்ப்பவர்களுக்கு, போக்குவரத்துக்காக மிதி வண்டிகள், நுண்மீன் குஞ்சுகளை 'விரலிகளாக்க மிதவைக்கூடுகள் மற்றும் மீன் குஞ்சு உற்பத்திக்கான சாதனங்கள் வாங்க மானியத்துடன் கடன் கோரி வழங்குவதால், மீன் வளர்ப்போர்களின் நிதி நிலை மற்றும் வாழ்க்கை உயர்த்தப்பட வாய்ப்பு ஏற்படுவதோடு, அதனால் இம்மாவட்டம் முழுவதற்கும் முகமை மீன் வளர்ப்போர்களால் வளர்க்கப்படும் மீன் குஞ்சுகளையே முழுமையான அளவில் பூர்த்தி செய்யும் நிலையும் ஏற்படும்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண பசுமைப் புரட்சி உதவியதுபோல் ஊட்டச்சத்து மிகுந்த மீனின் உற்பத்தியைப் பெருக்கிட தென்னார்க்காடு மாவட்ட மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமை பெரிதும் செயல்பட ஒளிமயமான வாய்ப்பு உள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.


தமிழரசு

புதிய சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர்' அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க








M/s. கிருஷ்ணா பார்மசி
1-பி, நேதாஜி சாலை
மஞ்சகுப்பம்
கடலூர்-1.



நல்வாழ்த்துக்கள்





எமது நிறுவனத்தின் பணிகள்
சமூகக் கல்வி இயக்கம்
பயிற்சி ஆதார மையம்
பெண்கள் முன்னேற்றத் திட்டம்

இப்படிக்கு

கல்வி கேந்திரா
(இது ஒரு கல்வி மற்றும் மேம்பாட்டு மையம்)
விழுப்புரம் - 605 602

வாழ்த்துக்கள்



## திரு. கே.எஸ். சின்னச்சாமி

காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)

காங்கேயம்

பெரியார் மாவட்டம்

## திரு. எம்.ஆர். தங்கராஜ்

காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)

பெருந்துறை

பெரியார் மாவட்டம்

## திரு. எம்.எஸ். குமாரசாமி

காண்டிராக்டர் (பொதுப்பணித்துறை)

மூடச்சூர் - கோபி

பெரியார் மாவட்டம்





# நாடும் வீடும் நலம்பெற நாளும் சேமிப்போம்!

**வி. ஸ்ரீகிருஷ்ணா**
உதவி இயக்குனர் (சிறுசேமிப்பு),
மாவட்ட ஆட்சியரகம் (ஊவ),
கடலூர்.

தென்னார்க்காடு மாவட்டத்திற்குத் தமிழக அரசு கடந்த நிதியாண்டிற்கு (1991-92) ரூ.20 கோடி நிகர வதூல் செய்திட இலக்கு நிர்ணயித்தது. ஆனால், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையின்கீழ் அரசு அலுவலர்களும், சிறுசேமிப்பு முகவர்களும், இலக்கிற்கு மேல் ரூ.4.75 கோடி திரட்டி, ரூ.24.75 கோடி நிகர வதூல் எய்தி சாதனை படைத்தார்கள்.

தமிழக அரசு இம்மாவட்டத்திற்கு நடப்பு நிதியாண்டிற்கு (1992-93) ரூ.25 கோடி எய்திட இலக்கு நிர்ணயித்துள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் மாவட்ட நிர்வாகமும், சிறுசேமிப்பு முகவர்களும், முனைப்புடன் செயல்பட்டு ரூ.30 கோடி சாதனைபடைக்கச் செயல்பட்டு வருகிறார்கள்.

தென்னார்க்காடு மாவட்டம் கடந்த நிதியாண்டில் (1991-92) மட்டுமே, முதன்முறையாக இலக்கிற்கும் கூடுதலாக வதூலித்து சாதனை படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

1991-92-இல் 60,000 புதிய ஆர்.டி. கணக்குகள் இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டன. இந்த நிதியாண்டில் (1992-93)-இல் 1,00,000 புதிய ஆர்.டி. கணக்குகள் தொடங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் புள்ளி விவரங்களால் இம்மாவட்டத்தில் மக்களிடையே சிறுசேமிப்புத் திட்டங்கள் பற்றி நல்ல விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்கள் தாங்களாகவே சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செலுத்தத் தொடங்கி உள்ளனர் என்பது தெரிகிறது.

**சிறுசேமிப்புப் பிரச்சாரப் பாதயாத்திரைகள்:**

சிறுசேமிப்புத் திட்டங்கள் மக்களிடையே நல்ல விளம்பரம் பெற வேண்டுமென்பதற்காகவும், அரசின் சிறப்புத் திட்டங்களை எடுத்துக்கூறி பொதுமக்களைச் சிறுசேமிப்புத் திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டுமென்ற நோக்கத்துடனும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் கடலூர், விழுப்புரம், சிதம்பரம், விருத்தாசலம், திருக்கோயிலூர், திண்டிவனம் ஆகிய நகரங்களில் 23.3.93 அன்று சிறுசேமிப்பு விழிப்புணர்வு ஊர்வலங்கள் நடத்த உத்தரவிட்டார். இந்தச் சிறப்பு இயக்கத்தினால், ஒரே நாளில் சிறுசேமிப்பு வதூல் வர்த்தகர்கள், சிறுதொழில் உரிமையாளர்கள், பொது மக்கள் இவர்களின் ஈடுபாட்டால் ரூ.30 இலட்சத்திற்கும் மேலாக குவிந்தது.

**இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம்:**

தமிழக அரசு மாவட்ட அளவில் இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத்தை 1990-91-ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. 1990-91-இல் தமிழக அரசு ஒவ்வொரு வரிசையிலும் மாருதி கார் உட்பட 262 பரிசுகளை வழங்கியது. இம்மாவட்டத்தில் 1990-91-இல் ஏ, பி, சி என்ற மூன்று வரிசைகளில் முதலீட்டுதாரர்கள் 3 இலட்சம் கூப்பன்களைப் பெற்றார்கள். 1991-92-இல் தமிழக அரசு இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத்தில் பரிசுகளை 352 ஆக உயர்த்தியது.

இந்த நிதியாண்டில், இம் மாவட்டத்தில் ஏஏ, ஏபி, ஏசி என்ற மூன்று வரிசைகளில் 3 இலட்சம் கூப்பன்களைப் பெற்றுப் பயனடைந்தார்கள். இந்த நிதியாண்டில் (1992-93)-இல் தமிழக அரசு இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத்தில் பரிசுகளை 536 ஆக உயர்த்தியது. இந்த நிதியாண்டில் ஏடி, பிஏ, பிபி மற்றும் பிசி என்ற நான்கு வரிசைகளில் 4 இலட்சம் கூப்பன்கள் பெற்றுப் பொது மக்கள் பயனடைந்துள்ளார்கள்.

இந்த நிதியாண்டில் அதிக அளவில் பொது மக்கள் பரிசுக் கூப்பன்களைப் பெற்றுள்ளதை நோக்கும்போது இத்திட்டம் பொது மக்களிடையே அமோகமாக வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதும் தெள்ளத் தெளிவாகிறது.

**மாவட்ட ஊக்கத் தொகை:**

மாவட்டங்கள் சிறுசேமிப்பில் எய்தும் சாதனைக்கு ஏற்றவாறு தமிழக அரசு ஆண்டுதோறும் சிறுசேமிப்பு வதூலில் ஒரு குறிப்பிட்ட தொகையை ஊக்கத்தொகையாக வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற மாவட்டங்களுக்கு வழங்கி வருகிறது. இதில் 1989-90-இல் எய்திய சாதனைக்கு ஏற்ப ரூ.8 இலட்சம், 1990-91-இல் எய்திய சாதனைக்கு ஏற்ப ரூ.20 இலட்சம், 1991-92-இல் எய்திய சாதனைக்கு ஏற்ப ரூ.33 இலட்சம் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற இம்மாவட்டத்திற்குத் தமிழக அரசு வழங்கியது.

பள்ளிக் கட்டடம் கட்டுதல், குடிநீர் வசதி செய்து தருதல், சாலைகள் செப்பனிடுதல் போன்ற பணிகள் அவசரத் தேவைக்கு ஏற்ப மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணைப்படி நிறைவேற்றப்பட்டு வருகின்றன, இம்மாவட்டத்தில் பொதுமக்கள் சிறுசேமிப்பில் அதிக அளவில் ஈடுபாடு

# நினைவுச் சின்னம்

தமிழக அரசு கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறைக்கு அருகில் உள்ள சிறிய மலைப் பாறையில் கிரானைட் கல்லால் ஆன 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை நிறுவ முடிவு செய்துள்ளது. சிலை செய்ய ரூ.3.60 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. சிலை நிறுவப்பட உள்ள சிறிய பாறையைத் தயார் செய்ய சுமார் ரூ.84 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.1.605 கோடி இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. கல் வேலைக்காக இதுவரை ரூபாய் 48 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இப்பணி இன்னும் 1½ வருடங்களில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தியாகி சங்கரலிங்கனார், தமிழ்த்தென்றல் திரு.வி.க., சுதந்திரப் போராட்ட வீரர் செண்பகராமன், சென்னை மாநகர முன்னாள் மேயர் சிவராஜ் ஆகியோரின் சிலைகள் நிறுவப்பட உள்ளன.

வள்ளுவர் கோட்டத்தின் மேம்பாட்டுப் பணிக்காகவும், செப்பனிடவும் தமிழக அரசு ரூ.26.61 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன்விழா ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் கிண்டி காந்தி மண்டபத்தில் ஒரு நினைவுத் தூண் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

கொள்ளும்போது அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து அதிக அளவில் மாவட்டத்திற்கு ஊக்கத் தொகையாக வளர்ச்சிப் பணிகளுக்குத் திரும்பவும் கிடைக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை**

சிறு சேமிப்பில் சிறந்த சாதனை புரியும் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.50,000 வீதமும், சிறந்த நகராட்சிக்கு ரூ.50,000, ஐந்து சிறந்த கிராமப் பஞ்சாயத்திற்கு ரூ.10,000 வீதம் ஒவ்வொன்றுக்கும் வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்ற மாவட்ட ஆட்சியர் ஒதுக்குகிறார். இந்த அளவில் கடந்த நிதியாண்டிற்குக் க்டலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கும், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கும், சிதம்பரம் நகராட்சிக்கும் ஒவ்வொன்றிற்கும் ரூ.50,000 வழங்கப்பட்டது.

**முதலீடுதாரர் ஊக்கத் தொகை**

சிறு சேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யும் முதலீடுதாரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதலீடுதாரர்களுக்கும் ஒரு சதவிகிதம் முதல் 3 சதவிகிதம் வரை அரசின் அறிவிப்புக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மட்டும் ஏறக்குறைய 10,000 முதலீடுதாரர்களுக்கு ரூ.30 இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**முகவர் ஊக்கத் தொகை**

இம்மாவட்டத்தில், அஞ்சலக ஆர்.டி. திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஏறக்குறைய 300 மகளிர் முகவர்களும் MPKBY பி.பி.எப். (P.P.F.) திட்டத்தில் முதலீடு திரட்டுவதற்காக 50 முகவர்களும், என்.எஸ்.ஸி. கிசான் விகாஸ் பத்திரம் போன்ற ஏனைய திட்டங்களில் முதலீடு திரட்டுவதற்காக 250 நிலை முகவர்களும் (SAS) நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் தமிழக அரசு, மத்திய அரசு கழிவுத் தொகை (Commission) வழங்குவது போல, மாநில அரசும் ஊக்கத் தொகை வழங்கி வருகிறது. இந்த நிதியாண்டில் மட்டும் ரூ.15 இலட்சம் சிறு சேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

சிறு சேமிப்புத் திட்டங்களில் பெருமளவில் மக்களை ஈடுபடுத்தத் தமிழக அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

வருமான வரி விலக்குப் பெற விரும்புவோர் தேசிய சேமிப்புப் பத்திரம், தேசிய சேமிப்புத் திட்டம், 15 ஆண்டு பொதுச் சேமநலநிதித் திட்டம் ஆகியவற்றில் சேர்ந்து ரூ.60,000 வரை வரும்மான வரிச் சட்டம் பிரிவு 88-இன் கீழ் வரி விலக்குப் பெறலாம்.

அதிக லாபம்-வட்டி பெற விரும்புவோர் இந்திரா விகாஸ் பத்திரம், கிசான் விகாஸ் பத்திரம் ஆகிய திட்டங்களில் சேர்ந்து 20 சதவிகிதம் வரை வட்டி பெற்று 5 ஆண்டுகளில் இரட்டிப்புப் பணம் பெறலாம்.

ஓய்வு பெற்றோர், வர்த்தகர்கள், நிலையான மாத வருமானம் பெற அஞ்சலக மாதாந்திர வருமானத் திட்டத்தில் முதலீடு செய்து 14 சதவிகித வட்டியும் ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் 10 சதவிகித போனசும் பெறலாம்.

சிறுகச் சிறுகச் சேமித்துப் பெருந் தொகை பெற 5 ஆண்டு அஞ்சலக ரெக்கரிங் டெபாசிட் கணக்கும் தொடங்கலாம்.

பள்ளிச் சிறார்களுக்கு இளமைப் பருவத்திலேயே சேமிப்புப் பழக்கம் ஏற்படச் செய்வதற்காகப் பள்ளிகளிலேயே 'சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது. அதில் சேர்ந்து அவர்களும் பயன் பெறலாம். மாணவர்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்தி அதிக அளவில் வசூலித்துக் கொடுக்கும் ஒவ்வொரு பள்ளிக்கும் அரசு சலுகையாக ஒவ்வொரு ரூ.10,000-க்கும் ஒரு மின்விசிறி வழங்குகிறது. இதன் மூலம் பள்ளிகள் பயன்பெறுகின்றன.

சிறு சேமிப்புத் திட்டத்தினால், நாடும் வீடும் நலமும் வளமும் பெறுகின்றன என்றால் அது மிகையல்ல!





# தீண்டாமை வேண்டாமே!

தீண்டாமை என்கின்ற தீய எண்ணம்
தீராத புற்றுநோய் போன்ற தாகும்;
வேண்டாத விளைவுகள் விபரீ தங்கள்
வீணாக நமக்குள்ளே தோற்று விக்கும்;
ஏன்தானோ மானிடர்கள் உணரா துள்ளார்
எத்தனைபேர் அத்தீயில் கருகிச் சாவார்?
வீண்தானோ இப்பிறவி? எண்ணிப் பாரும்;
வேருடனே ஒழித்தாலே நன்மை சேரும்.

வேண்டாத பிரிவினைகள் சாதிப் பேரால்
விதவிதமாய் வகைவகையாய் அமைவ தாலே
தூண்டாமல் தோன்றுதய்யா கிளர்ச்சி கள்தாம்
துன்பங்கள் அளவின்றிப் பெருகு தய்யா;
மாண்டோர்கள் எண்ணிக்கை சொல்லப் போமோ
மற்றவர்கள் உயிரென்றால் வெல்லப் பாகோ?
தீண்டாமை எதற்குச் சொல், தீய தற்கே;
திருவற்று ஏழ்மையுற்ற எளியார்க் கல்ல!

பத்துமாதம் கருப்பைதான் சுமப்போ ருள்ளே
பல்வேறு வேற்றுமைகள் இருக்க லாமோ?
எத்தனைதான் உருவங்கள் மாறி னாலும்
எல்லார்க்கும் ரத்தம்செந் நிறந்தா னன்றோ?
இத்தரைத்தாய் பெற்றமக்கள் நாமெல் லாமாய்
இருக்கையிலே தீண்டாமை என்ன லாமோ;
சத்தியவான் காந்திமகான் வெறுத்த தன்றோ;
சமுதாயம் சீர்குலையச் செய்வ தன்றோ!

எல்லாரும் ஓர்குலம் தம் இனமும் ஒன்றே;
எல்லாரும் இந்நாட்டு மன்ன ரென்றும்
எல்லாரும் ஓர்நிறையே இங்கே வாழும்
எல்லாரும் இந்தியா மக்க ளென்றும்
எல்லாரும் போற்றும் பாரதி சொன்னானே!
எல்லாரும் எந்நாளும் ஏற்க வேண்டும்;
'எல்லாரும் எல்லார்க்கும் சகோத ரர்கள்'
என்றாலே தீண்டாமைத் தீங்கு மாயும்!

கவிஞர் கலைப்பொழிலன்

**The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,**

TNSC BANK

**233, N.S.C. Bose Road, Madras-600 001.**

**Rate of Interest on Deposits (Effective from 1.3.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 11.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 11.00% |
| | For 1 YEAR and above | 11.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE






# பாவேந்தர் பாரதிதாசனின் உலகப்பார்வை

கவிஞர் அ. மறைமலையான்

தமிழ் மண்ணில் இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய முதல் பகுத்தறிவுப் பாவலர் - 'புரட்சிக் கவிஞர்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பெற்ற பாரதிதாசன் அவர்களே!

அறியாமை இருளில் ஆழ்ந்து கிடந்த தமிழ் இனத்துக்குத் தமது கவிதைக் கதிரொளியால் விழிப்புணர்ச்சியைப் பாய்ச்சிய செந்தமிழ்ச் செங்கதிரோன் - பாவேந்தர் பாரதிதாசன்.

அவருடைய பாடல்களில் - அருவியும் ஆடி வரும்; அனற்பொறியும் ஓடி வரும்! நறுமண மலர் சிரிக்கும்; நடுங்க வைக்கும் வெடி வெடிக்கும்! இன்னிசைப் பண் தவழும்; விண் பிளக்கும் இடி முழங்கும்!

ஆண்டுதோறும் ஏப்ரல் திங்களில் அவரையும் அவர் தம் படைப்புகளையும் எண்ணி எண்ணித் தங்களுக்கு எழுச்சியூட்டிக் கொள்வது தமிழர் ஒவ்வொருவருடைய கடமையாகும். ஏனெனில் 1891 ஏப்ரல் 21-இல் அவர் மலர்ந்தார்; 1964 ஏப்ரல் 29-இல் அவர் உதிர்ந்தார்.

புதுவை மாநிலத்தில் திரு. கனகசபை, திருமதி இலக்குமி ஆகியோர்க்கு மகனாய்ப் பிறந்த அவரது இயற்பெயர்: கனக சுப்புரத்தினம். விடுதலைக் கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியாரிடம் தமக்கு உண்டான ஆழ்ந்த பேரன்பால் 'பாரதிதாசன்' என்று தம் பெயரை அவர் மாற்றிக் கொண்டார்.

1908-இல் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய அவர் 37 ஆண்டுகளுக்குப் பின் 1946 நவம்பரில் ஓய்வு பெற்றார். பிரெஞ்சு அரசு அவருடைய புரட்சி நடவடிக்கைகளுக்காக 15 மாதச் சிறை வாழ்வைத் தந்தது.

### அண்ணா அளித்த பொற்கிழி

பெரியார் அவர்களுடைய பத்தறிவுக் கருத்துக்களால் ஈர்க்கப்பெற்ற பாரதிதாசன், அந்தச் சீர்திருத்தச் சிற்பியால் வெளியிடப் பெற்ற 'குடியரசு' 'பகுத்தறிவு' ஏடுகளில் பாடல்கள் எழுதினார். இந்தியாவிலேயே முதன் முதல் குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பாடல் தீட்டிய பெருமைக்குரியவர் அவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களது பெரு முயற்சியால் சென்னையில் 1946 தூலை 29-இல் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் 'புரட்சிக் கவி' பட்டத்துடன் ரூபாய் இருபத்தையாயிரம் பொற்கிழி வழங்கப்பட்டது.

பாவேந்தர் இயற்றியுள்ள மொத்தப் படைப்புகள் 72. இவற்றில் கவிதை நூல்கள் 33; (கதைப் பாடல்) காவியங்கள் 17; நாடகங்கள் 12; சிறுகதைத் தொகுப்புகள் 2 - முதலானவை அடங்கும்.

இந்தியாவிலேயே முதன்முதல் கவிதையிலேயே இதழ் நடத்திய ஆசிரியர் பாவேந்தரே! சர்வோதயத் தலைவர் எஸ்.ஆர். சுப்பிரமணியன் அவர்களது உறுதுணையுடன் 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' என்னும் திங்கள் இதழை அவர் வெளியிட்டு வந்தார். பின்னர் 'குயில்' கிழமை இதழ் நடத்தினார்.

புதுவை மாநிலச் சட்டமன்றத் தலைவராகவும் அவர் பெருமை பெற்றுள்ளார். தமிழ் வளர்ச்சிக்கும் தமிழின விழிப்புக்கும் பாடல் வெள்ளத்தைப் பாயவிட்ட பாவேந்தர் -'உலகப் பார்வை' மிகுந்தவராகவும் ஒளி வீசினார். அவரது அந்தப் பரந்த பொதுநோக்கை ஓரளவேனும் தொட்டுக்காட்டுவது இக்கட்டுரை நோக்கம்.

### தமிழ் இலக்கியங்களில் உலகம்

உலகின் முதல் மொழியினராக - முதல் இனத்தவராகத் - தோன்றிய தமிழர், தொன்றுதொட்டே 'உலகப் பார்வை' உடையோராகவே வாழ்ந்தனர்; வளர்ந்துள்ளனர்.

பழந்தமிழ்ப் பாவலர் பலரும் தத்தம் பாடல்களில் 'உலகு' 'உலகம்' 'ஞாலம்' 'வையம்' 'பார்' 'புவி' முதலான சொற்களை ஆண்டு தங்கள் உலகப் பொதுப் பார்வையைச் சிறப்பாக உணர்த்தியுள்ளனர்.

சங்க காலப் புலவர்களுள் தலைசிறந்தவராகப் போற்றப்பெறும் கடியலூர் உருத்திரங்கண்ணனார், தமது பெரும்பாணாற்றுப் படை நூலில்-

'மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும் - முரசு முழங்கு தானை மூவர். என்று மூவேந்தர்களைப் போற்றும் பொழுதே 'உலகு' என்னும் சொல்லை ஆண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

திருவள்ளுவர் தமது முதல் திருக்குறளிலேயே 'உலகு' என்னும் சொல்லைப் பெய்து தமக்குள்ள பரந்த புவி



நோக்கைப் புலப்படுத்தியுள்ளார்.

வால்மீகியின் இராம கதையை வழி நூலாகத் தமிழில் வடித்த கம்பரும்,

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்'

என்னும் வரி வாயிலாகத் தமது வையக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சைவ சமயச் சான்றோர் தம் வாழ்க்கைக்குப் பாட்டு வடிவம் படைத்த சேக்கிழாரும்,

'உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்'

- என்னும் வரியின் மூலமாகத் தாம் கொண்ட ஞாலப் பார்வையை அறிமுகம் செய்துள்ளார்.

பெண்பாற் புல்வர்களுள் அறநெறிகளையெல்லாம் அழகுற வடித்த அவ்வை மூதாட்டியும்,

'மேதினியில்...
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'

- என்று வெண்பாவைத் தீட்டி தமக்குள்ள விரிந்த உலகப் பார்வையை வெளிப்படுத்தியுள்ளார்.

இத்தகைய முற்காலப் புலவர்களைப் போன்றே இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய முதல் பகுத்தறிவுப் பாட்டுப் பகலவனாம் பாரதிதாசன் அவர்களும், தம்முடைய பலாச்சுளைக் கவிதைகள் பலவற்றில் ஒப்பற்ற எழிலோடு உலகப் பார்வையை உணர்த்தியுள்ளார்; உயர்த்தியுள்ளார்.

இச்சிறு கட்டுரையில் அவருடைய சிற்சில 'உலகப் பார்வை' வரிகளையாவது தொட்டுக்காட்டுவது படிப்பாளர்க்குப் பயனுள்ள விருந்தாகும் எனக் கருதுகிறோம்.

**உலகப் போர்களை ஒழிக்க...**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எத்துணை உள்ளார்ந்த உலகப் பார்வைக்குத் தம்மை இளமையிலேயே ஈடுபடுத்திக் கொண்டார் என்பதனைத் தம்முடைய தனிப்பாடல்கள் சிலவற்றுக்கு அவர் தந்துள்ள தலைப்புகளில் இருந்தே தெளிவுறலாம்.

'உலக ஒற்றுமை' 'உலகப்பன் பாட்டு' 'உலகம் உன்னுடையது' 'புதிய உலகு செய்வோம்' 'தன்மான உலகு' 'கற்பனை உலகில்' 'துன்ப உலகிலும் தொண்டு' 'உலக அமைதியைக் கெடுக்காதே'.

-இவை யாவும் அவருடைய நான்கு தனிப்பாடல் தொகுதிகளிலும் காணப் பெறும் 'உலகு' என்னும் சொல் அமைந்த தலைப்புகள் ஆகும்.

மனித இனம் ஆட்சிகளை அமைத்துக் கொள்ளும் அரசியல் அறிவு பெற்ற பண்டைக் காலந்தொட்டு சண்டை நடைபெறாத நாடும் இல்லை; நாளும் இல்லை.

தனி மனிதரும் சரி, நாடுகளும் சரி, தங்களுக்குள் சண்டையடித்துக் கொண்டு சாவதற்கும் வீழ்வதற்கும் மூல நெருப்பாகக் கொழுந்து விடுவது தன்னல வெறியே!

இரண்டு உலகப் போர்களால் பேரழிவு ஏற்பட்டு, உலக அமைதியை நிலை நாட்ட அனைத்து நாடுகளும் இணைந்த ஐக்கிய நாடுகள் மன்றம் அமைந்த பிறகும் புவி முழுவதும் போர்கள் ஒழிந்தனவா என்றால்.... இல்லை! கொரியாவில் போர், வியட்நாமில் போர், லெபனானில் போர், பாலத்தீனத்தில் போர், ஈராக்கில் போர், இறுதியாக யுகோசுலாவியாவில் போர் - என்றெல்லாம் எண்ணத் தொலையாத போர்கள் நடந்துகொண்டே தான் இருக்கின்றன.

தன்னல வெறியைத் தகர்த்தால் அன்றி, தனி மனிதராயினும், உலக நாடுகளாயினும் அமைதித் தென்றலைத் தழுவவே முடியாது.

அதனால் தான் தன்னலக் கொடுமையைச் சாடியும் உலக அமைதிக் கொடியை உயர்த்திப் பிடித்தும் அழகு கொஞ்சும் அரிய பாடலைப் பாவேந்தர் பாரதிதாசன் இவ்வாறு தீட்டுகிறார்:

'தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்உலக மக்களெலாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே!''

- பாவேந்தரது பொது நல நோக்கைப் புலப்படுத்தும் 'உலகப் பார்வை' கொண்ட ஒப்பற்ற செந்தேன் வரிகள் அல்லவா இவை?

இன்று ஐ.நா. மன்றம் தனக்கு என்று அமைதிப் படைகளை உருவாக்கிக் கொண்டு, சண்டைகள் நடைபெறும் நாடுகளுக்கெல்லாம் அனுப்பிப் பகைமைத் தீயை அணைக்க முயல்வதைப் பார்க்கிறோம். அத்தகைய அமைதிப் படைகளே போர்ப் பரணியாகப் பாடிச் செல்லக் கூடிய பாடல் வரிகளையும் எத்துணை ஆண்மை தெறிக்கப் பாவேந்தர் இயற்றியிருக்கிறார் பாருங்கள் -

''புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!''



ஐ.நா. மன்ற அமைதிப் படை வீரர்களுக்கே தனியெழுச்சி தரத்தக்க உரம் செறிந்த பாடல் படைக் கலன்கள் தாமே இவை!

**சுயமரியாதைச் சூறாவளி**

பகுத்தறிவுப் பகலவன் பெரியார், சாதிவெறி நாகத்தின் பற்களைப் பிடுங்கவும் மூட நம்பிக்கையின் முதுகெலும்பை முறிக்கவும் 'சுயமரியாதை இயக்கம்' என்னும் சமூகச் சீர்திருத்தத் தன்மான அமைப்பினைத் தோற்றுவித்தார். அவருடைய கனல் தெறிக்கும் கருத்துகளுக்கெல்லாம் கவிதை வடிவம் தந்து புனல் வெள்ளம்போல் அவற்றைப் பாய விட்டவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

அவ்வாறு பெரியாருடைய சுயமரியாதைக் கொள்கைகளைச் சூறாவளிப் பாடல்களாகச் சுழலவிட்ட போதும் தமது உலகப் பார்வையை உதறிவிடவில்லை இந்தப் புதுவைப் பூங்குயில்.

**இதோ ஓர் எடுத்துக்காட்டு**

''சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப் போம்பின்னர்
ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடைய அவ்வுல கத்திற்குப்
பேசு 'சுயமரியாதை உலகு' எனப் பேர்வைப்போம்!
ஈதேகாண் சமூகமே யான்சொன்ன வழியில்
ஏறு நீ! ஏறு நீ! ஏறு நீ ஏறே!''

- 'முன்னேறு' என்னும் தலைப்பில் தீட்டப்பெற்றுள்ள இந்தப் பாடல், உலகிலே எந்த நாட்டிலே இழி பிறவியாய் ஒடுக்கப்படும் மனித இனத்துக்கும் தன்மான உணர்வினை ஊட்டும் உந்துவிசை தானே!

**சமய வெறிக்குச் சாட்டையடி!**

இன்று இந்தியத் துணைக் கண்டத்தில் சமய வெறி, பல்லாயிரக் கணக்கான மக்களைப் பலி வாங்கித் தாண்டவம் ஆடுவதைப் பார்க்கிறோம். அதனுடைய அளப்பரிய பேரழிவுகளைப் பற்றிப் பல ஆண்டுகளுக்கு முன்னரே சிந்தித்துச் செயலாற்றுமாறு கவிதையிலேயே வினாக் கணைகளைத் தொடுத்துள்ளார் பாவேந்தர்.

''சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமய பேதம் வளர்த்தே தளர்வது நன்றா?
மாந்தரில் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரே குலமாய் வாழ்வது சரியா?''



ஒழுக்கத்தை அடியோடு அழிப்பது குடி.
—அண்ணல் காந்தியடிகள்

இந்தியாவில் மட்டும்தான் சமயவெறிச் சண்டைகள் நடைபெறுகின்றன என்பது இல்லை. லெபனான் என்னும் மேற்கு ஆசிய நாட்டில் இசுலாமிய சமயத்தவர்க்கும், கிறித்தவ சமயத்தவர்க்கும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே சண்டைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எனவேதான் அந்த நாளிலேயே 'உலகப் பார்வை' தழுவ, சமய வெறியைச் சாடி. 'ஆய்ந்து பார்' என்னும் தலைப்பில் இந்தக் கவிதை முரசைக் கொட்டியிருக்கிறார் பாவேந்தர்.

**சமூக நீதிக்குப் போர்ப்பரணி**

இந்த உலகத்தை இயங்கச் செய்யும் உயிர் மூச்சே உழவரும் தொழிலாளரும் அளிக்கின்ற உழைப்புதான். நெற்றி வேர்வை முத்துக்களால் நிலக்கோளத்துக்கு வாழ்வை வழங்கும் அந்த உழைப்பாளி இனமோ வற்றிய பீர்க்கங்காய்களாக வயிறு ஒட்டி வாடிக் கருகுகின்றனர். காலம் காலமாக உலகம் முழுவதும் ஊடுருவியுள்ள உழைப்புச் சுரண்டலை ஒழிக்கவும், பொருளியல் மேடு-பள்ளங்களை நிரவல் செய்யவும் வடிக்கப்பட்ட ஒரு சமூக நீதிக் கருவியே காரல் மார்க்சின் பொதுவுடைமைத் தத்துவம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அந்தச் சமனிலைப் பொருளியல் கோட்பாடே உருக்குலையும் உழைப்பாளி இனத்துக்கு வறுமைக் கடலிலிருந்து மீள்வதற்கேற்ற 'உயிர்ப் பட்கு' என உறுதியாக நம்புகிறார். எனவே இப்படி ஓர் எழுச்சிப் பரணி பாடுகிறார்.

''வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் - புவி
மக்களெல்லாம் ஒப்புடையார்.
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ? - இதை
இன்பம் எனச் சிலர் கொள்ளுவதோ?
கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளையடிப்பதும் நீதியோ - புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ?''



- சமாதானமும், சகிப்புத் தன்மையுமே நமது இலட்சியங்கள்.
- நம்மிடையே தீண்டாமையும், சாதியும் உள்ள வரை, சமதர்மமோ, ஜனநாயகமோ தழைக்க முடியாது.

- 'சாய்ந்த தராசு' என்னும் தலைப்பில் எழுதப்பெற்ற பாடல் தான் இது. 'புவி' என்னும் தமது 'உலகப் பார்வை'யைப் பாவேந்தர் இதில் ஒளிரச் செய்கிறார்.

**'உலகம் உன்னுடையது'**

இத்துடன் அவர் நிற்கவில்லை. மனிதப் பிறவியாய்த் தோன்றிய ஒவ்வொருவருமே இந்த உலகை எவ்வாறு பார்க்க வேண்டும் - அதன் ஏற்றத்துக்குப் பொது நோக்கோடு எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டும் - என்பதையும் பரந்த உள்ளம் கொண்ட பாவேந்தர் தெளிந்த சிந்தையோடு இவ்வாறு அறிவுறுத்துகிறார்.

''எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!

''அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
பிரிவிலை எங்கும் பேதம் இல்லை
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!
புகல்வேன்: உடைமை மக்களுக்குப் பொது
புவியை நடத்து'' பொதுவில் நடத்து!
வானைப் போல் மக்களைத் தாவும்
வெள்ள அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே!''

- 'உலகம் உன்னுடையது' என்னும் தலைப்பிலேயே வையத்து மாந்தர் அனைவர்க்குமே இந்த வழிகாட்டிப் பெருவிளக்கைப் பாடலாகத் தருகிறார் பாவேந்தர்!

தமிழ் மண்ணில் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கோடிக் கணக்கான பாவலர்கள் தோன்றியிருக்கின்றனர். அவர்களுள் ஆண்டவனின் அருளைப் பற்றியோ, (நாட்டை) ஆண்டவர்களின் பரிசுகள் பற்றியோ கவலைப்படாமல் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையோடு - 'உலகப் பார்வை'யோடு - குமுகாய அறநெறிக்காகக் குரல் எழுப்பிய ஒரே பாட்டுக் குயில் - புரட்சிக் குயில் - பாவேந்தர் பாரதிதாசன் ஒருவரே! ●

## நாடக வளர்ச்சியை ஊக்குவிக்கும் புரட்சித் திட்டம்

### மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழகத்தில் புதிய நாடகக் கலைஞர்களை ஊக்குவித்து, நாடக வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறந்த 10 புதிய நாடகங்களுக்கு 2 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளார். ஒவ்வொரு நாடகத்திற்கும் ஏறத்தாழ 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கும் இந்தத் திட்டம் தமிழக நாடக வரலாற்றிலேயே முதல் தடவையாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள புதுமையான திட்டம் ஆகும்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழகத்திலுள்ள நாடகக் குழுக்களிடமிருந்து வரப்பெற்ற 41 நாடகங்களை, நாடக வல்லுநர் குழு ஒன்றின் மூலம் ஆய்வு செய்து சிறந்த 10 நாடகங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. அவை வருமாறு:

1. ஒன்றே குலம் ஒருவனே தேவன்
   - காஞ்சி ரங்கமணி, அழகிரி நாடக மன்றம்
2. அன்பு வழி - குடியாத்தம் நாகராஜ்
3. வேலிகள் - லியோ பிரபு
4. இரண்டாம் சாணக்கியன்
   - கலாமந்திர் சாணக்கியன்
5. ஓ அந்தக் கவிதைக்கு விலை
   - அஞ்சலி கிரியேஷன்
6. இந்த மண் எனது கண்
   - மேட்டூர் எமராஜன்
7. ராஜ ரகசியம் - எஸ். பார்த்திபன் ராஜா
8. கோடை நிலவு - தோட்டக்கார விஸ்வநாதன்
9. அப்பா வருவாரா? - அக்கினி புத்திரன்
10. அன்பு இல்லம் - புதுவை வே. முகுந்தன்

மானியத்தொகை பெறும் இந்த 10 நாடகங்களுக்கும், சென்னையில் நடைபெறவுள்ள கோடை நாடக விழாவில் அரங்கேற்றப்படும்.




# இந்தியன் வங்கியின் பிக்சட் டெபாசிட் திட்டம்.

## உங்கள் வளமைக்கு வழிகாட்டி

பாதுகாப்பு
உடனடி பணம் பெறும் வசதி
அதிக வருமானம்

இந்தியன் வங்கியின் பிக்சட் டெபாசிட் திட்டத்தின் கீழ் உங்கள் டெபாசிட்டின் மீது உங்களுக்கு மூன்று மாதத்திற்கொருமுறை வட்டி கிடைக்கிறது. மாத வட்டியும் பெறலாம் — ஆனால் சற்று குறைந்த விகிதத்தில்.

உங்கள் பணம் பத்திரமாக இருக்கும். மேலும், டெபாசிட் முதிர்ச்சி அடையும் காலத்திற்கு முன்பே பணம் தேவைப்பட்டால், விதிகளின்படி கணக்கிடப்பட்ட வட்டியுடன் டெபாசிட் தொகையைப் பெறலாம். 75% வரை கடனாகவும் பெறலாம்.

தனிப்பட்ட கவனம் மற்றும் சிறப்பான சேவையில் புகழ்பெற்ற இந்தியன் வங்கி, வளமைக்கு வழிகாட்டி வாழ்வுக்கு ஒளியூட்டுகிறது.

**இந்தியன் வங்கி**
உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி
31, இராஜாஜி சாலை, சென்னை - 600 001.

# வாரிசுகள் வளரட்டும்

''எலே, கருப்பா, அங்க கீழ வெளி நாத்தங்காலு ஒரமா நெல்லு கட்டு சொமந்துகிட்டு போறானே, பாத்தா நம்ம ராசுமவ ரத்னம் மாதிரி இல்ல'' என்று களத்து மேட்டு வைக்கோல்போர் மேல் குடைபிடித்து அமர்ந்தபடியே விசாரணை செய்து கொண்டிருந்தார் கணக்கப்பிள்ளை.

''ஆமாங்க, சாமி!... அவனே தான்'' கையிலிருந்த வைக்கோல் கட்டை உதறி, களத்தில் காய வைத்துக் கொண்டே பதில் சொன்னான் பண்ணையாள் கருப்பன்.

''அவன் நம்ம தாலுக்கா ஆபீஸ்ல கிளார்க்கால்ல... இருந்தான்?''

''ஆமாங்க, ஆனா இப்ப வேல காலியில்ல'ன்னு வேலயவுட்டு எடுத்துட்டாங்களாம்'' அனுதாபத்தோடு கருப்பன் கூறினான்.

''வேல இல்ல'ன்னு எடுத்தாங்களா இல்ல... தப்பு தண்டா ஏதாவது பண்ணிட்டு...'' கணக்கப்பிள்ளை கூறிமுடிப்பதற்குள் கருப்பன் குறுக்கிட்டு, ''அப்படி ஏதுமில்லீங்க, ரத்னம் நல்ல புள்ளங்க'' என்று நற்சான்றளித்தான்.

''ஹூம், படிச்சவனுங்க வேல வெட்டியில்லாம ஊருல இருந்தா அது ஊருக்குதான் ஆபத்து. தாலுக்கா ஆபீசில இருந்தப்பவே தலைகாலு புரியாம நின்னான்னு கேள்விப்பட்டேன். ஏய், அவனை சித்த கூப்பிடு'' என்று கட்டளையிட்டார் கணக்கப்பிள்ளை.

''ஏ... ரத்னம்... கொஞ்சம் களத்தண்ட வந்துட்டுப் போயேன்.. கணக்கப்புள்ள ஐயா கூப்புடுறாங்க'' என்று கூவி அழைக்கவே, ரத்தினம் அங்கு வந்து சேர்ந்தான்.

''கணக்கப்புள்ள ஐயா, வரச் சொன்னீங்களா?'' என்று பணிவோடு கேட்டவனிடம், ''ஆமாண்டாப்பா, ரத்னம்!... தாலுக்கா ஆபிசில வேல செஞ்சியே, என்னாச்சு திடீர்னு இங்க வந்து வயல் காட்டுல...'' என்று ஏகடியம் செய்தவர் மூஞ்சில் அடிச்சாற்போல, ''அதெல்லாம் என் சொந்த விஷயமுங்க..., இங்க ஆக வேண்டிய வேலையிருந்தா சொல்லுங்க'' என்றான் ரத்னம்.

''இந்தத் திமிர் பேச்சுக்கு ஒண்ணும் கொறைச்சல் இல்ல, போ, போ,... உன் வேலயப் பாரு?...'' என்று அதட்டலாகக் கூறினார் கணக்கப்பிள்ளை.

''வேல போயிட்டுதேன்னு அந்தத் தம்பியே நொந்து போயிருக்கு, நீங்க வேற இன்னும் நோகடிக்காதீங்க,... நாலு எழுத்து படிக்காம ஊர்சுத்தற பசங்களே பேண்ட்ட எடுத்து மாட்டிக்கிட்டா வயக்காட்டு பக்கம் வரவே வெக்கப்படுறானுங்க. அப்படியிருக்க, படிச்சபுள்ள வந்து வயலை மறக்காம உழைக்குதேன்னு' பெருமைப்படுங்க சாமி'' என்றான் கருப்பன்.

''வயித்துப் பொழப்புக்கு வேற வேல கெடைக்கில, அதனாலதான் கிளார்க்கு கட்டு சுமக்குறாரு...'' என்று இடக்காகப் பேசினார் கணக்கப்பிள்ளை.

''அப்படியெல்லாம் நம்ம உழைப்ப நாமே கேவலப்படுத்தக் கூடாதுங்க, வெள்ளாமை நமக்கு மட்டுமில்ல, நம்ம தேசத்துக்கே உயிர் நாடிங்க, புள்ள சேதி தெரியுங்களா, அந்தத் தம்பிக்கு பேங்கில வேல கெடைச்சிருக்காம். இன்னும் பத்து நாள்ள பட்டணம் போவப் போவுது தெரியுங்களா?'' என்று கருப்பன் கூறக் கேட்டதும், 'சரி, சரி, உன் பிரசங்கத்தை நிறுத்திட்டு வேலயப் பாரு!...'' என்று உத்தரவிட்டார்.

அன்று மாலை ரத்தினத்தைத் தேடி வீட்டிற்குவந்த கருப்பனிடம், ''என்னப்பா, என் புள்ள இப்ப உத்யோகத்தில இல்லியே, அவனால என்ன காரியம் ஆவணும்?'' என்று விசாரித்துக்கொண்டே அவன் தாயார் வாயிலருகே வந்தார்.

''அம்மா, ரத்னம் வேலையில இருந்தாலும் ஒண்ணுதான், இல்லண்ணாலும் ஒண்ணுதான். வேலையில இருக்கிறவங்க எல்லாம் உதவி செய்வாங்க, காரியம் சாதிச்சுக் கொடுங்பாங்க'ன்னு சொல்லிட முடியாதும்மா, அதே போல வேலயில இல்லாதவங்க எல்லாம் உதவாக்கரை'ன்னு ஒதுக்கிடவும் முடியாது. தம்பியை ஊரு சாவடிக்கு அழைச்சிக்கிட்டுப் போகவந்தேன்''.

''ஊர்ச் சாவடிக்கா?''

''ஆமாம்மா...''

''எதுக்கு?...''

''எனக்கே தெரியாது. எல்லாம் நல்லத்துக்கா'தான் இருக்கும் என்றான் வெகுளியாக.

''தோட்டத்துல மாட்டுக்குத் தீனி வைச்சிக்கிட்டிருக்கான். இதோ கூப்பிடுறேன்...'' என்று கூறிக்கொண்டிருக்கும்போதே, 'அடடே, வாங்கண்ணே வாங்க,... கொஞ்சம் பொறுங்க இதோ நொடியில



''தம்பி உங்க ஏற்பாடு படியே ஒரு பத்து பதினைஞ்சு பேரை ஊர்ச் சாவடியில கூட்டியாந்துட்டேன். எதுக்கு, என்னத்துக்கு'ங்கிற விவரம் தெரிஞ்சிக்கணுமாம். எனக்குக் கூட தெரிஞ்சிக்க ஆசையா இருக்கு'' என்று கருப்பன் கேட்டபோது, ''பொறப்படுங்க, பேசிக்கிட்டே போவலாம்'' என்று கூறி புறப்பட்டான். ''போயிட்டு வரோம்மா'' என்று இருவரும் ஒரே சமயத்தில் கூறி விடைபெற்றபோது, 'என்ன மோப்பா, ஊரு வம்பை விலைக்கு வாங்காம வந்தா சரிதான்' என்று கவலையோடு எச்சரித்தாள் தாயார்.

சாவடியில் கூடியிருந்தவர்கள் எல்லோருக்கும் தன் வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு, ''நம்ம ஊர்ல ஒரு நல்ல காரியம் தொடங்கணும்'னு நெனைக்கிறேன். அதுக்கு உங்க ஆதரவைக் கேட்கத்தான்...,'' என்று ரத்னம் சொல்லி முடிப்பதற்குள்,

''தம்பி, எனக்கே விஷயம் புரியல, கொஞ்சம் விவரமாதான் சொல்லேன், அப்படி என்ன நல்ல காரியம்?'' என்று ஆவலோடு கருப்பன் கேட்டான்.

''அண்ணே, நேத்து உங்களுக்கு ஒரு லெட்டர் வந்துதே தெரியுமா?''



## தமிழ்நாடு மின் வாரியம் – தென்னார்க்காடு

கடலூர் மின்பகிர்மான வட்டத்தில் 1992-93-இல் நிறைவேற்றப்பட்டுள்ள விரிவாக்கத் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ரூ.101.63 இலட்சம் செலவில் காட்டுமன்னார் கோவிலில் 33 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கப்பட்டது.

ரூ.0.57 இலட்சம் செலவில் எறையூர் மின்விசை ஊக்கி (பூஸ்டர்) அமைக்கப்பட்டது. ரூ.10 இலட்சம் செலவில் புவனகிரி 'லைன் டைப்' துணை மின் நிலையமும், ரூ.12 இலட்சம் செலவில் டி.வி. புத்தூர் 'லைன் டைப்' துணை மின் நிலையமும், ரூ.24.07 இலட்சம் செலவில் கண்டமங்கலம் துணை மின் நிலையத்தில் 'கெப்பாசிடர் பேசும்' அமைக்கப்பட்டன.

'93-94-ஆம் ஆண்டில் மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. ரூ.406.083 இலட்சம் மதிப்பீட்டில் கோ. பூவனூரில் 110 கி.வோ திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. ரூ.721.308 இலட்சம் மதிப்பீட்டில் பி.முட்லூரில் 110/33/11 கி.வோ திறன் கொண்ட துணை மின் நிலையமும் ரூ.1760 இலட்சம் மதிப்பீட்டில் கடலூரில் 230/110 கி.வோ திறன் கொண்ட துணை மின் நிலையமும் அமைக்கப்பட உள்ளன. இம்மூன்று திட்டங்களுக்காக மொத்தம் ரூ.2887.391 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

என்று ரத்னம் கேட்க, "ஆமாம், வயல்காட்டில இருக்கச்சே என் பொண்ணு கஞ்சி கொண்டாந்தப்ப கொடுத்தது?" என்று பதில் கூறினான் கருப்பன்.

"அது சரி, உங்க பொண்ணுக்கு என்ன வயசு?" என்று ரத்னம் வினவ, வியப்பால் நெற்றிப் புருவம் உயர அங்கிருந்த அனைவரும் அவனைக் கூர்ந்து கவனித்தனர். அதில் ஒருவர் குறுக்கிட்டு, "ஏம்பா, இதெல்லாம் என்ன கேள்வி, விஷயத்துக்கு வா!" என்றார். ஆனா கருப்பனோ அதைச் சிறிதும் சட்டை செய்யாமல், "பதினஞ்சு வயசு ஆவுது தம்பி" என்றான்.

"லெட்டரைக் கொடுத்துட்டு என்ன சொல்லுச்சு?"

"நம்ம, ஊரு தபால்காரர் கிட்டே லெட்டரைப் படிச்சுக்காட்டச் சொல்லிச்சாம். 'அவர் கூட்டுறவு சொஸைட்டியில பணம் கட்டச் சொல்லி டவுன்லேயிருந்து நோட்டீச வந்திருக்கிறதாவும் பணத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லச் சொன்னாரு'ன்னு தகவல் சொல்லுச்சு?" என்றான் கருப்பன்.

"ஏன்'னே, ஒரு கடுதாசியைப் படிக்கணும்'னாலே தபால் காரரையும், வாத்தியாரையும் நம்பிக்கிட்டு எவ்வளவு நாளைக்கு இருக்கறது?" என்று ரத்னம் வினவ, அருகிலிருந்த ஒருவர் -

"அதுக்கு நாம என்ன தம்பி பண்ண முடியும். நம்ம தலையெழுத்து அப்படி?... நம்ம புள்ளைங்களுக்குப் படிப்பு வருமா?" என்று தலைவிதியை நொந்துகொண்டார்.

"அதுதான் தப்பு. தலையெழுத்து, தலையெழுத்து'ன்னு சொல்லி சோம்பேறித் தனத்தைத் தான் வளர்த்துக்கிட்டோம். கல்விச் செலவுக்காக அரசாங்கம் கோடி கோடியா பணம் ஒதுக்குது. 'ஆனா படிக்காம நாமதான் பதுங்கிகிட்டு இருக்கோம்?" என்று பளிச்செனப் பதில் சொன்னான் ரத்னம்.

"தம்பி, அதுக்கென பண்றது? நாங்க படிக்க வைக்கலாம்'னு ஆசைப் பட்டாலும் அதுக்கு நம்ம ஊர்ல ஒரு பள்ளிக்கூடம் இல்லியே?" என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார் மற்றொருவர்.

"அதைத்தான் சொல்ல வர்றேன். நம்ம ஊர்ல பள்ளிக்கூடம் இல்லங்கறது வாஸ்தவம்தான். அதுக்காக நாம படிக்கக் கூடாது'ன்னு இல்ல. சினிமா கொட்டகையைத்தேடி பக்கத்து ஊருக்கு சினிமா பார்க்கப்போவனும்'னு தோணுற அளவுக்கு பக்கத்து ஊரு பள்ளிக் கூடத்துக்கு அனுப்பி நம்ம புள்ளைங்கள படிக்க வைக்கணும்கற எண்ணம் ஏன் வரமாட்டங்குது?" என்று அவர்களுக்குத் தெரிந்த விஷயத்தின் மூலம் சிந்தனையைக் கிளறினான்.

"தம்பி, ஆவுற கதைய சொல்லுங்க?..." என்றார் மற்றொருவர்.

"ஆவுற கதையைச் சொல்லத் தான் உங்களையெல்லாம் இங்க வரச் சொல்லியிருக்கேன். அய்யா, நம்ம ஊர்ல பள்ளிக்கூடம் இல்லன்னு வருத்தப்பட்டீங்க இல்லையா!... அந்தக் குறையைப் போக்க ஒரு புதுத் திட்டம் சொல்லப் போறேன். அதாவது தினமும் சாயங்காலம் ஏழு மணியிலிருந்து எட்டு மணி வரை இந்த ஊர்ச் சாவடி 'இரவுப் பள்ளிக்கூடமா' மாறப் போவது?" என்று ரத்னம் குறிப்பிட்டபோது கருப்பன் குறுக்கிட்டு, அப்படின்னா வாத்தியாரு?" என்றொரு கேள்வியைக் கேட்டான்.

"அண்ணே, கொஞ்சம் பொறுமையா கேளுங்க. புத்தகம், சிலேட்டு பலகையெல்லாம் சேகரம் பண்ணிக்கிட்டு நானே பாடம் சொல்லிக் கொடுக்கலாம்'னு முடிவு பண்ணியிருக்கேன்."

"தம்பி, ரத்னம். எங்களுக்குக் கூட படிக்கணும்னு ஆசைதான். ஆனா, வழி தெரியாம தவிச்சிக்கிட்டு இருந்தோம். இப்ப படிக்கற வயது எங்களுக்கு இல்ல, இருந்தாலும் உன் மூலமா எங்க வாரிசுகளாவது படிச்சவங்களா மாறினா சரிதான்... அது சரி,... நீ தான் இன்னும் ஒரு வாரத்தில பட்டணத்துக்கு வேல பார்க்கப்போறதா கேள்விப்பட்டோம். அப்படியிருக்க இது சாத்தியப்படுமா?" என்று தன் சந்தேக முடிச்சை அவிழ்த்தார்.

"நான் பட்டணத்துக்குப் போகப் போறதில்லைங்க?..." ரத்தினத்தின் இந்த வார்த்தை எல்லோரையும் திகைப்பில் ஆழ்த்தியது.



## சரியான தமிழ்ச் சொற்கள்

| | |
|---|---|
| Buffet | - பரப்புணவு |
| Buzzer | - இமிரி |
| Booster | - ஊக்கியம் |
| Bureau | - நிலையகம் |
| Cabinet maker | - கலைக்கலன் செய்பவர் |
| (Furniture maker | - அறைகலன் செய்பவர்) |
| Cancel | - களை |
| (Cancellation | - களைவு) |
| Canopy | - மேலாப்பு |
| Canteen | - அலுவலக உணவகம் |
| Cartoonist | - பகடிப்படம் வரையுநர் |
| Cassette | - ஒலிப்பேழை |
| Cell | - சிற்றம் |
| Championship | - வாகையம் |
| (Champion | - வாகையன்) |
| Circus | - அருந்திறல் அரங்கு |
| Clinic | - மருத்துவக் கூடம் |
| Clue | - சுவடு |
| Co-brother | - உடன் மருகர் |
| Command words | - கட்டளைச் சொற்கள் |
| Complex | - இணைவம் |
| (Federation | - இணையம்) |
| Confirmation | - நிலைப்பாடு |
| Consulting Room | - மருத்துவக் காண்பகம் |
| Co-option | - தேர்விணைப்பு |
| Counter | - கவிப்பு, முகப்பிடம் |

—நன்றி: 'ஆட்சி மொழி அருஞ்சொற்கள்'
திரு கோ. முத்துப்பிள்ளை

"என்ன? நெசமாவா?..." ஒருவர் கேட்க, "ஏன் தம்பி உனக்கென்ன பைத்தியமா? அவனவன் வேலைக்குப் பேயா அலையறான்... நீ என்னமோ சர்வ சாதாரணமா..." என்று கருப்பன் வேதனையோடு கேட்டான்.

"இருட்ல மூழ்கிகிட்டு கெடக்கிற நம்ம கிராமத்தை விட்டுவிட்டு வெளிச்ச வெள்ளத்தில மிதக்கிற நகரத்தில போய் தீவட்டி பிடிக்கறதனால பிரயோசனம் இல்லீங்க... நான் நம்ம கிராமத்திலேயே தங்கிடறா முடிவு பண்ணிட்டேன்" என்று திட்டவட்டமாகக் கூறினான் ரத்னம்.

"இவ்வளவு தூரம் வாயைக் கட்டி, வயித்தக்கட்டி உன்னை கஷ்டப்பட்டு படிக்க வைச்சு. நீ படிச்ச அந்தப் படிப்பெல்லாம் பாழா போயிடுமேப்பா" என்று கவலைப்பட்டார் ஒரு பெரியவர்.

"ஏன்யா, காந்தி, நேரு, வ.உ.சி., அண்ணா இவங்களப் பத்தி என்ன நெனக்கறீங்க?", என்று ரத்னம் வினவ, உடனே, அதற்கு, "அவங்களெல்லாம் பெரிய மேதைங்க" என்று அவர் பதில் கூறினார்.

"அதைவிட ரொம்ப முக்கியமான விஷயம் என்ன'ன்னா அவங்க வெட்டியா பேசி பொழுதைக் கழிக்கல, செயல்ல செஞ்சுக்காட்டி வரலாற்றை உண்டாக்கினாங்க! அப் படிப்பட்ட அவங்க எல்லாம் பெரிய படிப்பு படிச்சவங்க, அதாவது உங்களுக்குத் தெரியுமா?"

"தம்பி, அவங்க மலை, நாம மடுவு..."

"இல்லங்கையா, மடுவாயிருந்து தங்கள் பட்டத்தையும் சுகத்தையும் தியாகம் பண்ணினதால மலையா உயர்ந்துட்டாங்க. அவங்க படிச்ச படிப்புக்குப் பெரிய ஜட்ஜாவோ, கலைக்டராவோ ஆகியிருக்கலாம்... ஆனா, அவங்க அப்படி சுயநலவாதிகளா வாழ விரும்புல..." என்று விளக்கமளித்த ரத்னத்தைப் பார்த்து, "ஏம்பா, உன் வாழ்க்கையை பாழடிச்சிக்கிற!" என்று நா தழுதழுக்கக் கேட்டான் கருப்பன்,

"அண்ணே! கடை கடையா ஏறி இறங்கி நல்லதா, சொத்தை இல்லாததா் பார்த்து காய்கறி வாங்கிட்டு வந்தாலும் அதை சரியா சமைக்கலன்னா எப்படி உபயோகமில்லாம போயிடுதோ அது போல அரசாங்கம் எப்படி எப்படி நல்ல திட்டங்களைப் போட்டாலும் அதைப் பயன்படுத்துற பொது மக்களுக்குப் போதிய அறிவில்லேன்னா திட்டம் முழுமையா வெற்றி பெறுவது சிரமம். அதைப் பயனுள்ளதா செய்யணும்'னா முதல்ல நமக்கு எழுத்தறிவோடு கூடிய தியாக உணர்வும் வரணும்..."

"அய்யா, நீங்களே சொல்லுங்க, நான் வேலைக்குப் போனா என் குடும்பம் மட்டும்தான் முன்னேற முடியும். பேங்க் உத்யோகத்தில கொஞ்சம் கொஞ்சம் கூடுதலா சம்பளம் கிடைக்கும் அவ்வளவுதான். ஆனா நான் இங்க இருந்தா நம்ம ஊரையும் முன்றேற்ற முடியும், அதிக ஊக்கத்தோட செயல்பட முடியும்?..."

"தம்பி, உன் முடிவு சரியோ, தப்போ! அதை எங்களால தீர்மானிக்க முடியல, ஆனா காந்தியை மறந்து போனவங்களுக்கு அவர் கண்ட கிராம சுயராஜ்யத்தை உருவாக்க இப்படியொரு புள்ள ஒவ்வொரு ஊருக்கும் இப்ப தேவைப் படுதுப்பா!"

"நாங்க என்ன செய்யணும், அதையும் தான் சொல்லேன்"? என்று ஆர்வமுடன் சிலர் கேட்டனர். அவர்களின் நம்பிக்கைக்கு உயிரூட்டம் அளிக்கும் வகையில், "மொதல்ல, உங்க வீடுகள்'ல படிக்கணும்'னு ஆர்வமுள்ள குழந்தைகள தினமும் காலையில ஆறுமணிக்கு என் வீட்டுக்கு அனுப்பி வையுங்க, அதே மாதிரி சாயந்திர நேரத்தில இந்த ஊர்ச்சாவடியில உங்கள மாதிரி பெரியவங்களுக்கும் சேர்த்துப் பாடம் சொல்லிக் கொடுக்கலாம்'னு நெனைக்கிறேன். நீங்க என்ன சொல்றீங்க?" என்று ரத்னம் கேட்டபோது ஏறக்குறைய எல்லோருமே ஒருமித்த குரலில் அவன் திட்டத்தை ஆமோதித்தார்கள். ●

# சுகந்தரும்

தருமபுரி மாவட்டத்தில், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் நிறைய உண்டு.

அதியமான் கோட்டைப் பகுதியில் உள்ள சென்றாய பெருமாள் கோயில், கிருஷ்ணகிரி தீர்த்தேக்கம், ஓசூர் கோட்டை மாரியம்மன் கோயில், சந்திரசூடேஸ்வரர் கோயில், தீர்த்த

# சுற்றுலாத் தலம்



மலையில் உள்ள தீர்த்தகிரீஸ்வரர் கோயில், 'சின்ன இங்கிலாந்து' என்று போற்றப்படும் தளி, ஓசூர் போன்ற பல இடங்கள் இம்மாவட்டத்திற்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கக் கூடியவைகளாக இருக்கின்றன.

ஆனால் - இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல விளங்குவது ஒன்று உண்டென்றால் - அது, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியேயாகும்!

காடும் மலையும் கவினுறக் காட்சி தரும் இவ்விடத்தில் தவழும். காவிரியை - நீர்த்திவலை புகைபோல் எழ மலை மீதிருந்து துள்ளி வீழும் காவிரியை நாம் கண்டு மகிழலாம். இதயம் பூரிக்க இந்த அருவியிலே சுற்றுலாப் பயணிகள் குளித்து மகிழலாம். வட்டப் பரிசலில் வகையுற அமர்ந்து நீரோட்டத்தில் உலா வரலாம்.

பொதுமக்கள் வசதிக்கென நவீன கழிப்பறைகள், ஆண்-பெண் உடை மாற்று அறைகளெல்லாம் தனித்தனியே இங்கே கட்டிவிடப்பட்டுள்ளன.

காவிரியாற்றின் அழகைத் தொங்கு பாலத்தில் நின்றும் நடந்தும் பயணிகள் மிக உயரத்திலிருந்தே கண்டு களிக்கும் நாள் விரைவிலேயே வரவிருக்கிறது.

ஆம். அதற்காகச் சுற்றுலாத்துறை மூலம் ரூ.7.50 இலட்சம் செலவில் தொங்கு பாலம் அமைக்கும் பணி தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்குள்ளேயே ஒகேனக்கல்லுக்குச் சுற்றுலா வருவோர்க்கு உவப்பூட்டும் இந்த உன்னதப் பணி நிறைவேறிவிடும்.

இங்கு வரும் பயணிகள் தங்குவதற்காக, மாவட்ட ஆட்சியாளரைத் தலைவராகக் கொண்ட - தருமபுரி மாவட்ட சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இங்கே ஒரு விடுதி கட்டிவிட்டிருக்கிறது. இது தவிர, வனத்துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊராட்சி ஒன்றியம் ஆகியவைகளுக்கும் இங்கே தனித்தனி ஓய்வில்லங்கள் கட்டிவிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவு மற்றும் ஓய்வு விடுதி ஒன்றும் இங்குள்ளது. திரு. வி. சந்திரசேகரன் மேலாளராக உள்ள இதில் 31 தங்கும் அறைகள் உள்ளன; குளிர்பதன வசதி செய்யப்பட்ட அறைகள் இரண்டு இருக்கின்றன.

சுமார் 14 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இதில், 45 படுக்கை வசதி உடைய இளைஞர் விடுதியும் இருக்கிறது.

ஒகேனக்கல்லுக்கு வருவோரில், தமிழ்நாட்டைத் தவிர, கர்நாடகம், ஆந்திரம், கேரளம் போன்ற பிற மாநிலங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் வந்து போகிறார்கள் என்றார் இந்த இளம் மேலாளர்.

காவிரித்தாய், தமிழ்நாட்டினுள் பூவிரித்துப் புகும் பகுதியான ஒகேனக்கல்லில் 146 மான்கள் துள்ளிவிளையாடும் மான் பூங்கா ஒன்றும் - 205 முதலைகள் மொழுமொழுவென்று வளரும் முதலைப் பண்ணை ஒன்றும் - இவை தவிர - மயில், மலைப்பாம்புகள், வண்ணப்





## மறைந்த சிறுத்தை

ஆண்டு முழுவதும் பனி மூடிய சிகரங்களும், வறண்டு கிடக்கும் பாலை வனமும் உண்டு; அடர்ந்த காடுகளும் உண்டு, அலை தழுவும் தீவுகளும் உண்டு. இதுதான் நமது தாய்நாடு. மலை, பீட பூமி, பள்ளத் தாக்குத் தீவுகள் எனப் புவியியலில் எத்துணை வகை நிலப்பாகு பாடுகள் உண்டோ அத்துணையும் இங்கு உண்டு.

75,000 வகை உயிரினங்கள் இங்குக் காணப்படுகின்றன. பாலூட்டிகள் - 500, பறவையினம் - 2,000- ஊர்வன - 420, மீன் வகை - 2,000, பூச்சிகள் - 50,000 மற்றும் எண்ணற்ற முதுகெலும்பற்ற உயிர் வகைகள்.

இத்தகைய அபூர்வ இந்திய மண்ணில் வாழ்வதற்கு மனிதர்களுக்கு மட்டுந்தானா உரிமை? மற்ற உயிரினங்களைக் காக்கும் கடமையும் இருக்கிறது என்பதை நாம் மறந்ததால், இந்த நூற்றாண்டிலேயே சில அரிய இனங்களை நாம் இழக்க வேண்டியதாயிற்று. சிறுத்தை, வெளிர் சிவப்பு வண்ணத் தலையுடைய வாத்து, மலைக் காடை ஆகியவை நம் மண்ணிலிருந்து முற்றிலுமாக மறைந்துவிட்டன.

மெத்தனமாய் இருந்தால் மொத்தமும் அழிந்து விடும்!



பறவைகள் வசிக்கும் வசீகரமான காட்சி சாலைகளும் இருக்கின்றன.

பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கூத்தப்பாடி ஊராட்சியிலிருக்கும் ஒகேனக்கல் பற்றி மேலும் விவரமறிய - அவ்வூர் கிராம நிர்வாக அதிகாரியாக இருக்கின்ற திரு. ஆர். அம்சராஜ் நமக்குக் கிடைத்தார். விசாரித்தோம், ஒகேனக்கல் பற்றி அவர் தெரிவித்த கருத்துக்கள் இவை: "ஒகேனக்கல்லுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க

• ஓசூர் தொழிற்பேட்டையில் உள்ள 'டைட்டான்' கைக்கடிகார நிறுவனத்தில்- உதிரிபாகங்களைச் சரி வரப் பொருத்திக் கடிகாரம் உருவாக்கப்படும் பிரிவின் உட்புறப் பகுதி.





வேண்டுமானால், ஒய்வில்லங்களின் வாடகை குறைக்கப்பட வேண்டுவது முக்கியம். இந்தச் சுற்றுலாப் பகுதியும் மாஸ்டர் பிளானில் சேர்க்கப்படவேண்டும். உணவு விடுதி போன்ற கடைகள் வைக்கப்போதுமான இடத்தை அரசே இங்கு ஒதுக்கித் தந்தால் - கண்டவர்களும் வந்து கண்ட இடத்தில், கண்டபடி கடைவைத்து அழகான இப்பகுதியை அசிங்கப்படுத்தும் நிலைமையைத் தவிர்க்கலாம்.

''காடும் மலைகளும் மலிந்துள்ள இவ்விடத்தில் விஷப் பாம்புகளின் தொல்லை அதிகம்; இதற்கேற்ப இங்கே ஒரு மருத்துவமனை கட்டப்பட வேண்டும்; சில உரிமம் பெறாத பரிசலோட்டிகளால், எதிர்பாராமல் ஒகேனக்கல் அருவியில் மூழ்கிவிடுவோரின் உயிரைக் காக்கவும் அது வசதியாக இருக்கும். சுத்திகரிக்கப்பட்ட குடிநீரும், நிரந்தர பஸ் ஸ்டாண்டும் இங்கு இல்லை என்ற நிலைமைகள் நீக்கப்படவேண்டும்.

''ஒகேனக்கல்லிலிருந்து சிறிது தொலைவில் உள்ள பெலிகுண்டு கிராமத்தினருகே ராசி மணல் என்ற இடத்தில்தான் கர்நாடகத்திலிருந்து காவிரியாறு தமிழ்நாட்டினுள் நுழைகிறது. அதற்குக் கொஞ்ச தூரத்தில் பஞ்சலிங்கமும் இருக்கிற தேச நாதஸ்வரர் கோயில் இருக்கிறது; அகஸ்திய மாமுனிவரே இதைப் பிரதிஷ்டை செய்ததாகச் சொல்லப்படுகிறது; அதையும், சாது சாணி சாமியார் என்ற ஞானதேசிகாசாரியார் சமாதியுள்ள இயற்கை எழில்மிக்க இடத்தையும்கூட சுற்றுலாத் தலமாக்கலாம். மைதூர், தலைச் சீரங்கம் எனப்படுகிறது; இங்கிருந்து சிறிது தூரத்திலிருக்கும் ஆலம்பாடிதான் கடைச் சீரங்கம்; அதையும் சுற்றுலாத் தலமாக்கலாம்.

''தருமபுரி மாவட்டத்திலேயே அதிக வருமானம் எங்கள் ஊராட்சி மூலம்தான் கிடைக்கிறது; இப்பகுதியில் அதே அளவுக்குச் செலவும் செய்யப்பட்டால் அரசுக்குச் சுற்றுலாப் பயணிகளால் இன்னும் வருமானமும் அதிகரிக்கும்; இந்தப் பகுதியை டவுன்சிப்பாக ஆக்கினால்கூட நன்றாயிருக்கும் என்பது என் கருத்து...''

- என்றெல்லாம் நம்மிடம் தமது கருத்தைத் தெரிவித்தார், கிராம நிர்வாக அதிகாரியான திரு. ஆர். அம்சராஜ்.

மகிழ்வோடு எப்போதும் 'ஜே.ஜே' என்று சுற்றுலாப் பயணிகள் வந்து போகும் ஒகேனக்கல்லில், ஆடிப்பெருக்கு என்றால் அலாதி விசேஷமாம்; சொன்னார்கள்.

- 'கங்கைகொண்டான்'

# சந்தூர் ஒட்டு மா!

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் என்பது நமக்குத் தெரியும்; தருமபுரி மாவட்டத்தில் உள்ள சந்தூருக்குச் செல்லுவோமானால் அவரது வகையறாவைச் சேர்ந்த 15 குடும்பத்தார் அங்கே வாழ்ந்து வருவதையும்நாம்தெரிந்துகொள்ளலாம்!

மூன்று தலைமுறையாக இங்கே வாழ்ந்துவரும் அவர்கள் தொழில் என்ன தெரியுமோ? புதுரக ஒட்டு மாஞ்செடி உருவாக்குவதுதான்!

தமிழ்நாட்டில் மட்டுமல்ல; சந்தூர் ஒட்டு மாம்பழத்திற்கு இந்தியா முழுவதுமே நல்ல கிராக்கி! அந்த வம்சா வழியினரால், சந்தூரில் மற்றவகை மா இனங்களும் மிகுந்த அக்கறையோடு வளர்க்கப்படுகின்றன.

- இரா. ஜெயக்குமார்.





# சுவாமி சகஜானந்தா கல்விக் கழகம்



'தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில், தென்னார்க்காடு மாவட்டமே ஆதிதிராவிட மக்கள் அதிக அளவில் வாழும் மாவட்டமாகும். அங்கே அவர்கள் கல்வி வசதி பெறப் பாடுபட்ட ஒருவரின் சாதனைச் சரித்திரம் இது:'

சிதம்பரத்திற்கும் சீர்காழிக்கும் இடையே உள்ள ஓமகுளத்தில் இருக்கிறது 'ஸ்ரீநந்தனார் கல்விக் கழகம்'; இது தென்னார்க்காடு மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனமாக விளங்குவதாகும். ஆதிதிராவிடப் பெருமக்களின் கல்விக்கண் திறக்கவென்றே அரும் பணி ஆற்றிவருகின்ற அரியதோர் அமைப்பு இது.

**நந்தனார்**

அதன் நிறுவனர், சுவாமி சகஜானந்தா என்பவர் ஆவார். அவரைப் பற்றி அறியுமுன், அவ்வமைப்பின் பெயருக்கு உரியவரான நந்தனார் குறித்தும் சிறிது தெரிந்துகொள்ளுவது நல்லது.

சிதம்பரத்திற்கு அண்மையில் உள்ள ஆத்தூரில், ஆதிதிராவிடர் குலத்தில் பிறந்தவர் நந்தனார். இவர், திருப்புங்கூரில் ஒரு திருக்குளம் அமைத்தார். அவ்வூர்க் கோயிலில் இறைவனைத் தரிசிக்க இவர் உள்ளே செல்வது மறுக்கப்படவே, வெளியே நின்று வணங்கிட முற்பட்டார். அப்போது முன்னாலிருந்த நந்தி மறைத்தது. 'சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குது' என்றார், நந்தனார்; இதைக் கேட்ட இறைவனே நந்தியை விலகியிருக்கச் செய்து அவருக்குத் தரிசனம் கொடுத்தான் என்கிறது புராணம்.

'தில்லைக் கூத்தனைத் தரிசிக்க சிதம்பரத்திற்கு நாளை போவேன்... நாளை போவேன்' என்று சொல்லிக்கொண்டே இருந்தவராதலால் 'திருநாளைப் போவார் நாயனார்' என்ற புராணப் புகழும் பெற்றார் நந்தனார்.

முடிவாகத் தில்லைக்குச் சென்று தீப்பாய்ந்து இறைவனைத் தரிசித்து அவனடி சேர்ந்தார் அவர் என்பார்கள்.

இவரைப்பற்றிப் பிற்காலத்தே கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நடத்திய 'நந்தனார்கிந்தனார் கலாட்சேபமும் இங்கு நினைவு கூரலாம்.

**நந்தனார் கல்விக் கழகம்**

அத்தனைப் புகழ் பெற்ற நந்தனார் பெயரில் - சிதம்பரத்திற்கு அருகே உள்ள ஓமக்குளத்தில் சுவாமி சகஜானந்தா அவர்களால் நிறுவப் பெற்றதுதான் 'ஸ்ரீநந்தனார் கல்விக் கழகம்'.

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் இங்கே தனித்தனி மேனிலைப்பள்ளிகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

21.1.1890-இல், ஆரணி வட்டத்திலுள்ள ராயபுதுப்பாக்கத்தில் பிறந்தவர் சுவாமி சகஜானந்தா. இவரது இயற்பெயர் முனுசாமி. பெற்றோர் பெயர் அண்ணாமலை-அலமேலு அம்மையார்.

1906-ஆம் ஆண்டு முதல் 1910 வரை, சென்னைக்குச் சென்ற

இ[illegible]ப்பிரகாச சுவாமிகள் மடத்தில் - அவரது மாணாக்கராக இருந்து தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பாண்டித்யம் பெற்றார். பிறகே, ஆன்மீக உணர்வு மேம்பட்ட முனுசாமியாக இருந்த இவர் 'சகஜானந்தம்' எனப் பெயர் சூட்டப்பட்டார்.

பாரதியார், வ.உ.சிதம்பரனார் ஆகியோர் இவருக்குச் சமகாலத்தவர் ஆவர்; அவர்களோடும் இவருக்குத் தொடர்பு இருந்தது எனப்படுகிறது.

ஆன்மீகத்துறையில் - பரஞ்சோதி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், மௌன குரு சுவாமிகள் ஆகியோருடன் இவர் மிகப் பணிவான நட்புடன் பழகிவந்தார்.

**நல்வழிப்படுத்துதல்**

நாளடைவில், ஆதிதிராவிட மக்களையெல்லாம் நல்வழிப்படுத்தும் நோக்கோடு, ஓமகுளம் தென் கரையில், அரசூர் ஆறுமுக சுவாமிகளுடன் தனது சமுதாய சீர்திருத்தப் பணியினைத் தொடங்கினார் சுவாமி சகஜானந்தர்.

திரு மாரிமுத்து போன்றோர்களின் உதவியோடு முதலில் பத்துப் பதினைந்து ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்குக் கல்விக் கண் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டார். நாளடைவில் அதுவே 50-க்கும் மேலானோர் கல்வி பயிலும் உறைவிடப் பள்ளி ஆகியது.

இதுவே 'ஸ்ரீநந்தனார் கல்விக் கழகம்' என்று பின்னாளில் எல்லோராலும் சிறப்புறக் குறிப்பிடப் படுவதாயிற்று.

**சட்டமன்றத் தந்தை**

தன்னை வளர்த்து ஆளாக்கிய மாசிலாமணி-அமிர்தம்பாள் தம்பதியரை இக்கல்விக் கழகத்தின் நிர்வாகிகளாக்கினார் சகஜானந்தா. தானே அவ்வமைப்பின் பொதுச் செயலாளராகவும் இருந்தார். செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், அதன் அமைப்பாளராகப் பொறுப் பேற்றார்.

சகஜானந்தா, சிதம்பரம் ஓமகுளத்தில் சிவலோக ஆலயம் ஒன்றையும் பொது நிதி மூலம் கட்டினார். அதில், சைவ-வைணவத் தெய்வங்கள் இரண்டுமே இடம் பெற்றன.

இவரும் தனது நெற்றியில் திருநீறும், திருமண் நாமமும் இட்டுக் கொண்டார்; 'எம்மதமும் சம்மதமே' என்ற கருத்தைப் பரப்பினார்.

சிதம்பரம் நகரமன்ற உறுப்பினராகவும், நகரமன்றத் தலைவராகவும், தமிழகச் சட்ட மேலவை-பேரவை உறுப்பினராகவும் இருந்து முப்பதாண்டுகளுக்கு மேல் சிறப்புறப் பணியாற்றியிருக்கிறார் சுவாமி சகஜானந்தா.

இதனாலேயே இவருக்குச் 'சட்ட மன்றத் தந்தை' என்ற புகழ்ப் பெயரும் அந்நாளில் சூட்டப்பட்டது உண்டு.

இவருடைய நோக்கம், இறுதி மூச்சுவரையில் ஆதிதிராவிட மக்கள் அடிமைத் தனம் நீங்கிக் கல்வி பெறவும் - எழுச்சியுறவும் - மேன்மை பெறவும் வேண்டும். என்பதற்காகவே இருந்திருக்கிறது.

**மூதறிஞர் உதவி**

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், சுவாமி சகஜானந்தா வேண்டுகோளின் படி 'ஸ்ரீநந்தனார் கல்விக் கழகம்' அரசு அங்கீகாரம் பெற்றது.

இந்தக் கல்விக் கழகமானது - பண்டிதநேரு, சுபாஷ் சந்திரபோஸ், மேயர் சிவராஜ், மூதறிஞர் ராஜாஜி, காமராசர், கக்கன், இராசேந்திரப் பிரசாத் போன்றோரெல்லாம் வந்து சென்ற பெருமையும் உடையதாகும்.

சிதம்பரம் அண்ணாமலை நகரில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், ஸ்ரீநந்தனார் கல்விக் கழகத்திற்கும் அந்நாளிலேயே ஓர் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. அந்த உடன்பாட்டின்படி சுவாமி சகஜானந்தா அவர்கள் 1959-ஆம் ஆண்டு வரை அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த உடன்பாட்டின் அடிப்படையில் இவருக்குப் பின் திரு எல். இளையபெருமாள் அந்தப் பொறுப்பை வகித்தார். அவரை அடுத்து இப்போது திரு கே.எஸ். மாணிக்கம் என்பார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் செனட் உறுப்பினராகவும், ஸ்ரீநந்தனார் கல்விக் கழகத்தின் செயலாளராகவும் இருந்து சீரிய முறையிலே செயல்பட்டு வருகிறார்

**சிலைத் திறப்பு**

29 உறுப்பினர்களால், இக் கல்விக் கழகமும், 7 உறுப்பினர்களால் அவர் உருவாக்கிய மடமும் இப்போது செவ்வனே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1.5.1959-இல் மறைந்த சுவாமி சகஜானந்தரின் ஆதிதிராவிடர் நலப் பணிகளைப் போற்றும் வகையில் அன்னாரின் திருவுருவச் சிலையொன்றும் அக்கல்விக் கழகத்திலே நிறுவப்பட்டுள்ளது. இரண்டாண்டுகளின் முன், அவரது நூற்றாண்டு விழாவும் அரசால் கொண்டாடப் பட்டது.

இப்போது, தென்னார்க்காடு மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கும் அந்தக் கல்விக் கழகத்தில் 2,500 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த மாணவிகளும், 4,000 மாணவர்களும் படித்துப் பயன் பெற்று வருகின்றனர்.

மாணவர் விடுதியிலோ 1,500 ஆதிதிராவிட வகுப்பு மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர்.

- பி.எல்.ஆர்.

## பொருட்காட்சிகள்

**செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவு இதுவரை 66 பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. இப்பொருட்காட்சிகள் பொதுமக்களின் நல்ல வரவேற்பைப் பெற்றுத் திகழ்வதுடன், இதுவரை ரூ.3.9 கோடி வருவாயையும் அரசுக்கு ஈட்டித் தந்துள்ளன.**

**மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற இடங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. பொருட்காட்சிகள் பொழுது போக்கு அம்சமாக மட்டுமல்லாது செய்திகளைத் தெரிவிக்கும் சாதனமாகவும் இருப்பதால் இந்த ஆண்டு மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களுடன் கூடுதலாக திருச்சி, திருநெல்வேலி போன்ற இடங்களில் பொருட்காட்சிகள் நடத்தப்படும்.**





# நினைவாற்றல் தரும் சுண்டைக்காய்

- டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

சுண்டைக்காய், பெரும்பாலும் மலைகளில் பயிராகும் செடி. பொதுவாகவே, சுண்டைக்காய் பற்றித் தெரியாதவர்கள் இருக்க முடியாது. மூதாதையர்கள் தங்கள் இல்லங்களில் சுண்டைக்காயை மோரில் கலந்து உலர்த்திப் பதம் பண்ணிப் பானையில் சேகரித்து வைப்பதுண்டு. உடலுக்கு நலம் தருவதுடன், நல்ல மருந்தாகவும் இது பயன்படுகிறது.

இந்த நவநாகரீகமான காலத்தில் சுண்டைக்காயை மக்கள் மறந்து விட்டார்கள் போலும்! சுண்டைக் காய் என்றால் என்ன என்று கேள்வி கேட்கும் அளவுக்கு நாகரீகம் முற்றிவிட்டது. நோயும் முற்றி விட்டது! இயற்கை நமக்கு அளித்த இந்தச் சுண்டைக்காய், பிணியிலிருந்து நம்மை விடுவிக்கும் சஞ்சீவி ஆகும்.

**தீரும் நோய்கள்**

வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், வயிற்றில் பூச்சிகள், மார்ச்சளி, ஆஸ்துமா, தீக்குற்றத்தாலுண்டான ஏப்பம், காசநோய், செரியாமை, செரியாக்கழிச்சல், பெருமூச்சு, தலைசுற்றல், பித்தம், வாந்தி, அஜீரணபேதி, மூலநோய், நல்ல பசி, குடல் கிருமிகள், சீதக்கட்டு, சுவையின்மை மற்றும் பல.

**பயன்முறை**

மார்புச் சளி உள்ளவர்கள் சுண்டைக்காயை உணவில் வற்றலாகச் சமைத்துச் சாப்பிட, நாளடைவில் மார்புச் சளி, மூலநோய் நீங்கும்!

சுண்டைக்காயைப் பச்சையாகப் பக்குவப்படுத்திச் சாப்பிடும்போது சளி, வயிற்றுப் பூச்சி போன்றவைகளை அகற்றும். வற்றலைக் குழம்பு வைத்துச் சாப்பிட்டால் சீதக்கட்டு, குடல் கிருமிகள், சுவையின்மை, மார்புச் சளி, அஜீரண பேதி, மூல நோய் ஆகிய பணிகளை அகற்றும், நல்ல பசியை உண்டாக்கும்.

பித்தக் கிறுகிறுப்பைப் போக்கும், மயக்கம், தலைவலி இவைகளைக் குணப்படுத்தும், கபத்தை வெளியேற்றும், ஜீரண சக்தியை உண்டாக்கும். மூளை பலம் ஏற்படும். ஞாபக சக்தி பெருகும், தோல் வழவழப்பாகும். பற்கள் உறுதியாகும். இரத்தத்திலுள்ள தொற்று நோய்க் கிருமிகளை அழிக்கும். நரம்புகள் வலிமை பெறும்.

சுண்டைக்காயை வதக்கிச் சாப்பிட பசி ஏற்படும். சுண்டைக் காயை மோரில் ஊறவைத்து, காய வைத்து, வறுத்து உணவோடு சாப்பிட நெஞ்சு சளி, ஆஸ்துமா, காசநோய் குணமாகும்.

சுண்டைக்காயைச் சிற்றாமணக் கெண்ணெய் இட்டு வறுத்த பிறகு, சீரகம், வெந்தயம், உப்பு, கறி வேப்பிலை ஆகியவற்றையும் சிறிது வறுத்துக் கூட்டிப் பொடித்துச் சாதத்துடன் கலந்து உண்ணின் மந்தம், மூலம், செரியாமை நீங்கும்.

சுண்டைவேர், தும்பைவேர், இலுப்பைப் பிண்ணாக்கு இம் மூன்றையும் சம எடையாக எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு இப்பொடியை நுகர, முப்பிணி நீங்கும். (முப்பிணி என்பது வாதம், பித்த, சிலேட்டுமம்).

இதன் வேரைக் குடிநீரில் கலந்து வைத்திருந்து வலி, ஜூரத்திற்கு மூதாதையர்கள் கொடுப்பதுண்டு.

சுண்டைக்காயைப் பாதியாக நறுக்கிப் பசு மோரில் ஊறப் போட்டு உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு சிறிது நேரம் உலர்ந்த பின் மீண்டும் மோரில் ஊறவைத்து உலர்ந்த பின் இவ்விதமாக 5 அல்லது 6 தடவையாவது செய்யும் பட்சத்தில் நன்றாக இருக்கும்.

இச் சுண்டைக்காயை நல்லெண்ணெய்யில் வறுத்து இரவு சாப்பாட்டில் சாப்பிடலாம். தவிர, சுண்டை வற்றல் குழம்பு உடலுக்கு ஆரோக்கியம் தர வல்லது. மேலும், சுண்டைக்காயைத் தொடர்ந்து சமையலில் உபயோகித்துவரின் காசம், மார்புச் சளி, பெருமூச்சு, தலைச் சுற்றல், ஆஸ்துமா ஆகியவை நீங்கும்.

வாரத்திற்கு இரண்டு நாட்கள், சுண்டை வற்றல் குழம்பும், மற்ற நாட்களில் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப எண்ணெய்யில் பொரித்த சுண்டைக்காயும் சாப்பிட்டு வந்தால், உடல் நலமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.



**எஸ்.கே.எம்.**

## அருவி போல் பால் தரும் கறவைகளின் தீவனம்

கறவையினங்களின் பயனை நீங்கள் முழுவதும் அடைய உதவுகிறது எஸ்.கே.எம். மாட்டுத் தீவனம் பயன்படுத்துவதால் உங்கள் கறவையின் பால் வளம் பெருகுவதோடு, கறவையினங்களும் ஆரோக்கியமாக வளர்கிறது. நோயெதிர்ப்புச் சக்தியால் கறவைகளின் ஆயுளும் அதிகரிக்கிறது.

எஸ்.கே.எம். மாட்டுத் தீவனங்கள் பால் கொடுக்கும் கால்நடைக்குப் பலன் கொடுக்கும் தீவனம்.

தயாரிப்பாளர்கள்

எஸ்.கே.எம். அனிமல் ஃபீட்ஸ்
அண்டு புட்ஸ் (இந்தியா) லிமிடெட்
180, காந்தி ரோடு, ஈரோடு-638 002
போன்: 75213-17 EPBAEX
தந்தி பவுல்டரி ஈரோடு டெலக்ஸ்
0856, 226 SKMIN



# கண் மருத்துவம்

டாக்டர் வி.எம். லோகநாதன்
(இயக்குநர்-கண்காணிப்பாளர்-
அரசு கண் மருத்துவமனை),
சென்னை.

## பதில்கள்!

ம.ந. வடிவேலு
ஆவத்திபாளையம்

- 'மெட்ராஸ்-ஐ' என்பது என்ன டாக்டர்? அதற்கு ஏன் அந்தப் பெயர் வந்தது?

''இது ஒருவகை வைரஸ் கிருமிகளால் ஏற்படும் கண் நோய்தான். காற்றினாலும், தண்ணீர் மூலமும் அடுத்தவர்களுக்கு வேகமாகப் பரவக் கூடியது; கண்களைச் சுத்தமாக வைத்துக் கொண்டாலே இவ்வகை நோய் வராமல் தவிர்க்கலாம். இந்த நோயினால் விழிகளுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை.

''இந்த நோய்க்கு மூலகாரணமான அடினோ வைரஸ் என்ற நோய்க் கிருமி உலகிலேயே - சென்னை - எழும்பூரில் உள்ள அரசு கண் மருத்துவ மனையில்தான் 1918-இல் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால்தான் இதற்கு (Madras-eye) அந்தப் பெயர் வந்தது.''

சீனிவாஸ் பிரபு
சென்னை-90.

- தொலைக்காட்சியோ, திரைப் படமோ பார்க்கும்போது கண்ணீர் வருகிறது. இதைத் தடுப்பது எப்படி?

''கண்ணைப் பரிசோதித்துக் கண்ணாடி போட்டுக் கொள்ளுங்கள்; கண்ணீர் வராது. வைட்டமின் 'பி' சத்துக் குறைவால் கூட இப்படி வரலாம்; எதற்கும் கண் டாக்டரிடம் சோதித்துக் கொள்ளுங்கள்.''

- கண்களைப் பாதுகாக்க எவ்வாறான உணவு வகைகளை உட்கொள்ளலாம்?

''பச்சைக் காய்கறிகள், மீன், முட்டை, கீரை வகைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து சாப்பிட்டால் விழிகளுக்கு எவ்விதக் கோளாறும் லேசில் வராது.''

"Cataract" என்றால் என்ன டாக்டர்? அது ஏன் வருகிறது?

''கண்புரை நோய் என்பதே அது; இந்நோய் கண்டவர்களுக்கு, எப்போதும் நீர்வீழ்ச்சியைப் பார்ப்பது போலவே பார்வை இருக்கும்; இதை முறையான அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கிவிடலாம்.''

எம். சீரங்கன்
தே. சித்தப்பட்டி

- எனது கண்ணின் வெண்படலத்தில் ஒரு மச்சம் இருக்கிறது; இது அதிர்ஷ்டமா? இதனால் ஆபத்து ஏதும் உண்டா?

''அதனால் கண்ணுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை; அதிர்ஷ்டமும்



இல்லை; அதற்காகப் பயப்படத் தேவையும் இல்லை''

பி.பி. மகாதேவன்
ராசிபுரம்

● **எனக்குச் சர்க்கரை வியாதி இருக்கிறது. இதனால் பார்வை போய் விடும் என்பது உண்மையா டாக்டர்?**

''நீங்கள் கேட்பது ரொம்பவும் உண்மை. சர்க்கரை வியாதி கண்ட மூன்று ஆண்டிலிருந்து ஐந்தாண்டுக்கு ஒருவருக்குப் பார்வைக் கோளாறு ஏற்படும். சர்க்கரை வியாதி கண்ட ஆரம்பத்திலேயே தகுந்த டாக்டரிடம் ஆண்டுக்கு ஒருமுறை பரிசோதித்துக் கொள்வது நல்லது. அதிகப் பார்வை பாதிப்பு இருக்கும் பட்சத்தில் லேசர் சிகிச்சை மூலம் அதைக் குணப்படுத்தி விட முடியும்.

''ஆனால் ஒன்று - பார்வை அடியோடு போய்விட்ட பிறகு அதைக் குணப்படுத்துவது மிகவும் கடினம்''.

'மாங்கனி செல்வம்
கல்லாவி-தருமபுரி

● **தொடர்ந்து எழுதினால் கண்ணில் நீர் வருகிறது; பார்வை மங்குவது போலிருக்கிறது; தலைச்சுற்றலும் இருக்கிறது; என்ன செய்வது?**

''நீங்கள் உங்கள் வயதைச் சொல்லவில்லையே? உங்களுக்கு வயது நாற்பதுக்கு மேலாகியிருந்தால் பரிசோதித்துக் கண்ணாடி போட்டுக் கொள்ளுங்கள். சரியாகி விடும். குறைந்த வயதுள்ளவராக இருந்தால், கண்களைத் தகுந்த டாக்டரிடம் காட்டிப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.

ம.ந.வ. வேலு
ஈரோடு

● **சிறுவயது முதலே என் கண்களில் செவ்வரி படர்ந்தது போல் இருக்கிறது; இதனால் பாதிப்பு உண்டா?**

''இதற்குப் பல காரணங்கள் உண்டு; நேரில் பார்க்காமல் பதில் சொல்ல இயலாது.''

● **கண்களின் சராசரி ஆயுட்காலம் எவ்வளவு?**

''அப்படி எந்தவிதமான கணக்கும் கிடையாது''.



● **சிறு குழந்தைகளின் கண்களைப் பெரியவர்களுக்குப் பொருத்த முடியுமா?**

''தாராளமாகப் பொருத்தலாம்; கண்ணைப் பொறுத்துவது என்றால், அப்படியே விழிகளை எடுத்துப் பொருத்துவது என்று அர்த்தமில்லை; கண்ணிலுள்ள கருவிழியை மட்டும்தான் எடுத்துப் பொருத்துவோம் - இப்போது புரிகிறதா?''

எம்.பி. சுப்பிரமணியம்
நெடுங்குணம்

● **என் மகள் விழிகளில் ஆர்.பி. நோய் என்று டாக்டர்கள் சொன்னார்கள்; இதற்கு மருந்தே இல்லையாமே - உண்மையா?**

''ஆம். 'Retintis Pigmentosa' என்று கூறப்படும் இந்த மார்லைக் கண் நோய்க்கு இதுவரையில் எவ்வித மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை; மருத்துவ ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது''.

சி. பிரின்ஸ்
வாலிபாளையம்

● **விழிகளில் கண்ணீர் சுரக்கும் பகுதி எது? வெங்காயம் உரித்தால் கண்ணீர் வருவது ஏன்?**

''விழி நீர் உற்பத்தி செய்யும் நாளங்கள் கண்களின் மேலே வலது உட்புறம் உள்ளது. சிறிய நாளங்களின் வழியே கண்ணுக்கு நீர் வருகிறது; அதுவே கண்களைச் சுத்தப்படுத்துகிறது. இமையினுள் உள்ள சிறு துவாரத்தின் மூலம் கசிகிற கண்ணீர் விழிகளை ஈரமாக இருக்கச் செய்கிறது. அப்படி வரும் கண்ணீர், இமைகளை மூடும்போது வெளியே வழிகிறது. வெங்காயம் உரிக்கையில் காரம் மிக்க அந்தச் சாறானது விழியின் வெண்படலத்திலோ, கருவிழியிலோ பட்டால், உறுத்தல் ஏற்படும்; இதனால் கண்ணீர் வரும் அளவு அதிகரிக்கும்.

ச. பொன்னுசாமி
கு. அய்யம்பாளையம்

● **கண்களில் அடிக்கடி 'பூளை' கட்டிக் கொள்ளக் காரணம் என்ன?**

''இதற்குப் பல காரணங்கள் உண்டு. இப்படி எல்லோருக்குமே வருவதும் இல்லை; அவரவர் பார்க்கிற வேலைக்கு ஏற்பவே இதுபோல் ஏற்படும். சாதாரணமாகக் கண்களில் விழி வெண்படலத்தில் பாக்டீரியாக்கள் மற்றும் வைரஸ்கள் தாக்குவதால் கண் சிவக்கும்; பிறகு அப்படி அழுக்கு (கண்பூளை) வெளிப்படும். இதற்கு 'Antibiotics' கலந்த சொட்டு மருந்து போட்டால் சரியாகிவிடும். அப்படி அதை ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை விழிகளில் இட்டுக்கொண்டாலும் ஒரு பாதிப்பும் ஏற்படாது.''

ப. சண்முகம்
அனந்தகோபாலபுரம்

● **ஆசிரியர் தொழில் புரியும் எனக்கு 40 வயதாகிறது; என்னால் சிறிய எழுத்துக்களைப் படிப்பது சிரமமாக இருக்கிறது; படித்தால் கண் எரிச்சல் எடுக்கிறது; என்ன செய்யலாம்?**

''40 வயதானதும், சிறிய எழுத்துக்களைப் படிக்க முடியாததற்குக் காரணம் விழி லென்ஸானது கிட்டப் பார்வையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்க ஆரம்பிக்கும் (Loss of Accommodation) இதனால் சிறு எழுத்துக்களைப் படிப்பது சிரமமாக இருக்கும்; ஆகவே, நீங்கள் கண்ணாடி அணிவதைத் தவிர்க்க முடியாது; கண்களைப் பரிசோதித்துக் கண்ணாடி போட்டுக்கொண்டே ஆகவேண்டும்; இல்லாவிட்டால் கண்களைச் சுருக்கிப் படிக்க நேரிடும்; அதனால் கண்வலி ஏற்படும்.

ப. சிவராம கிருஷ்ணன்
விருதுநகர்

● **சில மாதங்களாக என் கண் ஓரங்களில் இரத்தம் கட்டியிருப்பது போலிருக்கிறது; இதற்கு என்ன செய்யலாம்?**

''இதற்குப் பல காரணங்கள் உண்டு; ஒருவகைக் கண் வலியாகவும் இது இருக்கலாம். அல்லது கண்களோடு தொடர்பில்லாத வேறு நோய்களாலும் இப்படி ஏற்படலாம். தகுந்த கண்டாக்டரிடம் காட்டவும்.

எஸ். சுந்தரவடிவேலு
இராப்பூசல்

● **கண்களில் தூசி விழுந்துவிட்டால் எங்கள் ஊர்ப் பக்கம் ஒருவர் அதை நாக்கால் துழாவி எடுக்கிறார்; நிறையத் தூசியும் மண்ணுமாக வருகிறது இந்த முறை மருத்துவம் பற்றித் தங்கள் கருத்து என்ன?**

''மிகவும் ஆபத்தான முறை இது; கூடவே கூடாது. டாக்டர்களாகிய நாங்கள் கைகளை நன்றாகக் கழுவிவிட்டு அல்லது கையுறையெல்லாம் அணிந்து கொண்டுதான் கண் பாதிக்கப்பட்டவரின் கண்களைத் தொடுகிறோம்; பரிசோதிக்கிறோம்; இதுதான் முறை. அப்படியின்றிக் கண்களை நாவால் ஒருவர் துழாவினால் அவருக்குள்ள ஏதாவது நோய் உங்களுக்கும் வரக்கூடும். இத்தகைய கோரமான செயலால் கண்பார்வையே போய்விடக்கூடிய அபாயமும் இருக்கிறது. ஜாக்கிரதை.''

ஆர்.வி.என். ரமேஷ்
முதுகுளத்தூர்

● **75 வயதான ஒருவருக்குக் கண் காசப்படலம் வளர்ந்துள்ளது; எப்போதும் கண் உறுத்தல் - அரிப்பு இருக்கிறதாம்; பார்வைத் தெளிவும் இல்லை. இதைக் குணப்படுத்த முடியாதா டாக்டர்?**

''ஏன் முடியாது? முடியும். கேடராக்ட் அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்திவிடலாம் வேறு வழியில்லை. நல்ல பார்வையையும் பிறகு அவர் பெற்றுவிடலாம்.

ரா. கிருஷ்ணமூப்பனார்
ஊர்க்காடு

● **எனக்கு 63 வயதாகிறது; இப்போது கண்ணாடி போடாமல் படிக்க முடியும்; ஆனால், சமயத்தில் கண் எரிச்சல் ஏற்படுகிறதே - எப்படி இதை நீக்கலாம்?**

''தங்களுக்கு 'கேடராக்ட்' நோய் ஆரம்பக் கட்டமாக இருக்கும் போலிருக்கிறது. சில காலம் தான் இப்படி உங்களால் படிக்கமுடியும்; பிறகு அறுவைச் சிகிச்சை செய்யும்படி ஆகிவிடும். இப்போதே தகுந்த டாக்டரிடம் காட்டி கண்ணாடி போட்டுக் கொள்ளுங்கள் - நல்லது''. - தொகுப்பு: பி.எல்.ஆர்.

**—இன்னும் வரும்...**


தமிழரசு

16.6.93 இதழ்

திருநெல்வேலி
கட்டபொம்மன்
மாவட்டச் சிறப்பிதழாக
மலர்கிறது!



● வரலாற்றுக் குறிப்புகள்
● வளர்ச்சிப் பணிகளின் சிறப்புகள்
● திருப்பும் பக்கமெல்லாம் தேன்சிந்தும்
செய்திச் சுதம்பம்!

● மண்வாசனை மணக்கும் சிறுகதை... மற்றும் கவிதை!
● மாவட்டம் குறித்து முழுமையாகத் தெரிந்து கொள்ள முத்தான வாய்ப்பு!

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க

With the best compliments from

**TVL. PALLAVA**

**GRANITE INDUSTRIES**

(Black Granite Exporters)

10, Sriram Nagar (North Street)
Alwarpet, Madras - 600 018.








# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

- சா. குமரப்பா
மாவட்ட வருவாய் அலுவலர்
கடலூர்

அன்னை காவேரியின் கடைக் கண் பார்வையினால் பூரித்து நிற்கும் மருத நில நஞ்சை வயல்களுடன் குறிஞ்சி, முல்லை, நெய்தல் மற்றும் பாலை ஆகிய ஐவகை நிலங்களையும் தன்னுள்ளே கொண்ட தென்னார்க்காடு மாவட்டம், தமிழகத்திலேயே ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழும் மாவட்டமாகும்.

அண்ணல் காந்தியடிகளின் கனவை நனவாக்கும் வகையில் பட்டி தொட்டிகளில் வாழ்கின்ற ஆதிதிராவிடர்களுக்கும், மலைப் பகுதியில் வாழ்கின்ற பழங்குடியினர்களுக்கும் அவர்களது வாழ்க்கை மேம்பாட்டிற்கெனத் தமிழக அரசு பல்வேறு துறைகளின் மூலம் பல்வேறு நலப் பணிகளைச் செய்து வருகிறது. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் ஏழை எளிய ஆதிதிராவிட மாணவர்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, தங்க மாணவ, மாணவியர் விடுதிகள், கல்வி உதவித் தொகை. ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள், இலவச தொழிற் கருவிகள், விவசாயத்திற்கு உழவு மாடுகள் ஆகியவற்றை வழங்கி ஆதிதிராவிடர்களுடைய நலனைக் காத்து வருகிறது.

## கல்வி உதவித் தொகை

புத்தியே சகல சக்தியும் என்பதற்கிணங்கக் கல்வியின் மூலம் அறிவை வளர்த்து அதனால் கீழ்நிலை மக்களின் பொருளாதார- சமூக நிலையை உயர்த்த அரசு அவர்களின் நலத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினால் பாதிக்கும் மேலான தொகையினை, அவர்களின் கல்வி வளர்ச்சிக்கென நலத் துறையின் கீழுள்ள பள்ளிகள், விடுதிகள், தொழிற் பயிற்சிக் கூடம் ஆசிரியர் பயிற்சி, சிறுதொழிற் பயிற்சி, தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி போன்றவைகளை ஏற்படுத்தி, அதில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, உடை, பாடநூல், குறிப்பேடுகள், காலணிகள் போன்றவைகள் வழங்கச் செலவிடுகிறது.

இலவசக் கல்வி உதவித்தொகை, கடன் மூலம் கல்வி உதவித்தொகை, சிறப்புக் கல்வி உதவித்தொகை (Merit Scholarship) போன்றவைகளின் மூலம் சுமார் 69,300 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.77,71,000 செலவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் அனைத்துத் தொகையும் செலவிடப்பட்டு, 76,301 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## இலவசப் பாடப்புத்தகங்கள் குறிப்பேடுகள் வழங்குதல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளில் கல்வி பயிலும் 39,249 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.17 இலட்சம் அளவில் பாடப்புத்தகங்கள் வழங்க இலக்கு நிர்ணயித்தது. இதில் 39,249 மாணவர்களுக்கு ரூ.19.97 இலட்சம் அளவில் பாடப்புத்தகங்களை இத்துறையின் கீழ்ப்பணிபுரியும்வட்டாட்சியர்கள், உதவிக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளித் துணை ஆய்வர் ஆகியோரின் செயல் திறன்களினால் உரிய காலத்தில் வழங்கப்பட்டன.

மேலும், இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் மற்றும் பொதுப் பள்ளிகளில் பயிலும் 1,50,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்புள்ள குறிப்பேடுகள் இலவசமாக வழங்க

## கிராமப்புறப் பெண்கள் சுய வேலைவாய்ப்புப் பெற...

திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் டோக்ரா திட்டம், அதாவது மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 14 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 50 டோக்ரா சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுத் தொடங்கப்பட்டுள்ளன

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், செயற்கை வைரம் பட்டை தீட்டுதல், காளான் வளர்ப்பு, ஆயத்த ஆடைகள் தயாரிப்பு, காய்கறி வியாபாரம் போன்ற தொழில் தொடங்க, இம்மாவட்டத்தில் உள்ள 50 சங்கங்களின் மூலம், தலா ரூ.15 ஆயிரம் வீதம் ரூ.7.5 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

டோக்ரா திட்டத்தின்கீழ் பயன்பெறவுள்ள சங்கங்களின் தலைவி, உறுப்பினர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், கிராம நல ஊழியர், கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் போன்றவர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் உள்ள கிராமப்புறப் பெண்கள் முன்னேற்றத்திற்காக, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுச் செயல்படுகிறது. இத்திட்டத்தில் 50 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் மூலம் செயற்கை வைரம் பட்டைத் தீட்டுதல், காளான் வளர்ப்பு, ஆயத்த ஆடை தயாரித்தல், காய்கறி விற்பனை செய்தல், கவரிங் பூச்சுத் தொழில், சாம்பரர் பொடி தயாரித்தல், கறவை மாடு வளர்ப்பு, போன்ற தொழில்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் கிராமப்புறங்களில் பெண்கள் சுய வேலைவாய்ப்புப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி முகாமில், திருச்சி ஜெம் பார்க் அலுவலர் செல்வி உஷா, கனரா வங்கியின் முதன்மை வங்கி அலுவலர் திரு. ஜஹாரூருதீன், மத்தியக் கூட்டுறவு வங்கி அலுவலர் திரு. அம்மானுலா, மாவட்டத் தொழில் மையப் பொது மேலாளர் திரு ரெங்கநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு. கலியபெருமாள், உதவித் திட்ட அலுவலர் (கால்நடை) டாக்டர் ராஜ்குமார், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கே.பி. நல்லதம்பி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

---

இலக்கு நிர்ணயித்துச் செயல்படுத் தப்பட்டு வருகிறது.

### இலவசச் சீருடைகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் இன 61,848 மாணவ, மாணவியர்களுக்கு இலவசச் சீரு டைகள் வழங்க ரூ.29.59 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் 61,848 மாணவ, மாணவியர் களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டு இலக்கீடு அடையப்பட்டுள்ளது.

### விடுதிகள் பராமரிப்பு

இம்மாவட்டத்தில், அரசு ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகள் பழையன 66-ம், புதியன 40-ம் உள்ளன. இதில் மூன்று அரசு தொழிற் பயிற்சி மைய விடுதியும் உள்ளன. நடப்பாண்டில் இவையல் லாமல் 9 புதிய விடுதிகளும் திறக்கப் பட்டுள்ளன. இவைகளில் 8,700 ஆண் மற்றும் 2,150 பெண் மாணவர்கள் தங்கியுள்ளனர். இவை களின் பராமரிப்புச் செலவுக்காக ரூ.1.37 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டு, ஒதுக்கீட்டுத் தொகை அனைத் தும் செலவிடப்பட்டுள்ளது.

### வீட்டுமனைப் பட்டா

அடிப்படைத் தேவைகளில் ஒன் றான வீட்டு வசதிக்கெனவும் மற்றும் சுடுகாடு, பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்காகவும் ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டு, வீடற்ற 10 ஆயிரம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நிலங் களைக் கையகப்படுத்த இதுவரை ரூ.65 இலட்சம் செலவிடப்பட்டு 7,340 வீடற்றவர்கள் பயனடைந் துள்ளனர்.

### உழவுமாடு மானியம் தொழிற் கருவிகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் இன விவசாயிகளின் வாழ்க் கைத் தரத்தை மேம்படுத்தும் வகை யில் வங்கிகள் மூலம் உழவுமாடு வாங்குபவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.1,500 கடன் வழங்கப்படுவதின் பேரில், இத்துறை மூலம் நபர் ஒரு வருக்கு ரூ.1,500 வீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத் திற்கென ரூ.2.17 இலட்சம் ஒதுக் கீடு செய்யப்பட்டு, 181 பய னாளிகள் பயனடைய இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டதில் 181 பய னாளிகள் இதுவரை பயனடைந்துள் ளனர்.

தொழில் புரிபவர்களுக்குத் தச்சுக் கருவிகள், கருமாரக் கருவிகள், சலவைப்பெட்டி, காலணி தொழிற் கருவிகள், தையல் இயந்திரங்கள் போன்ற தொழிற் கருவிகள் இது வரை 348 நபர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

### குடிதண்ணீர் வசதி

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் பொருட்டு 30 புதிய குடி தண்ணீர்க் கிணறுகள் தோண்ட ரூ.2.03 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டது. அதற்கு இதுவரை 36 கிணறுகள் தோண்டப்பட்டு இலக் கீடு அடையப்பட்டுள்ளது.

இவையல்லாமல், தூய்மையாக வைக்கப்படும் ஆதிதிராவிடர் குடி யிருப்புக்கு வானொலிப் பெட்டி யும், தீண்டாமை ஒழிப்பில் சாதனை படைத்த கிராமங்கட்கு வானொலிப் பெட்டியும் வழங்கப்பட்டு வருகிறது.

### கொத்தடிமை மறுவாழ்வு

1990-ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசம், ராஜ் நகரிலிருந்து விடு விக்கப்பட்ட 12 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.69,500, 1992-93-ஆம் ஆண்டில் வழங்கப் பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி கண்காணிப்பில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் அம்சம் 6, 11 ஏ, 11 பி மற்றும் 14 ஏ-இல் அனைத் திலும் முழுமையான அளவில் முறைப்படி குறியீடு எட்டப்பட்டிருக் கிறது. ●



With Best Compliments From:

**Tirukoilur Groundnut & Paddy Merchants**

**Association**

**Registered No.19/74**

**146, Kamaraj Road, Arakandanallur-605 752**

President:
S.V. KANNABRAN

Secretary:
R. KASIVISWANATHAN

Vice-President:
A.R. ARUNACHALAGANI

Assistant Secretary:
M.K. SHAMSUDEEUN

Treasurer:
P.M.Y. BHASHEER AHAMED



# தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

1992-ஆம் ஆண்டில் 4,18,424 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டுக்கு வந்தனர். 1991-இல் 3,33,877 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தனர். அதாவது 1992-இல் 25.3 சதவிகிதம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்துள்ளனர். 1992-இல் 1,31,09,863 உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர்.

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் வருவது அதிகரித்துள்ளது என்பது இதிலிருந்து தெரிகிறது. மத்திய அரசும், மாநில அரசும் மேற்கொண்ட ஊக்க நடவடிக்கைகளும், நாட்டின் இப்பகுதியில் நிலவும் அமைதியான சூழ்நிலையும் இதற்கு ஓரளவு காரணமாகும்.

**மாவட்டச் சுற்றுலா மையங்கள்**

உள்ளூர் மக்களிடையே சுற்றுலா பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அவர்களிடையே சுற்றுலாப் பயணத்தை ஊக்குவிக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மாவட்டச் சுற்றுலா மையம்' அமைக்கும் திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 'மாவட்டச் சுற்றுலா மையமாக' மேம்படுத்துவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அணைக்கட்டுப் பகுதிகள், அருவிகள் போன்ற இடங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன.

இம்மையங்களில், குடிநீர், கழிவறைகள், உடை மாற்றும் அறைகள், பேருந்து நிறுத்துவதற்கான இடவசதி, பொழுதுபோக்குப் பூங்காக்கள், உணவகங்கள் போன்ற வசதிகள் அளிக்கப்படும். இதன் பொருட்டு, அரசு அனைத்து மாவட்டங்களிலும் 42 மையங்களைத் தெரிந்தெடுத்துள்ளது.





**நீலகிரியில் வட்டார உணவக நிறுவனம்**

மத்திய அரசின் ஒத்துழைப்புடன், நீலகிரியில் வட்டார உணவக நிறுவனம் ஒன்றை அமைப்பது குறித்துப் பரிசீலிக்கப்பட்டுவருகிறது.

**செலவு ஏற்கும் விருந்தினர் திட்டம்**

முக்கியமான சுற்றுலா மையங்களில், சுற்றுலாப் பயணிகளுக்கு இடவசதி கிடைப்பதைப் பெருக்கும் நோக்கத்துடன், செலவு ஏற்கும் விருந்தினர் திட்டமொன்றைக் கொண்டுவர தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

ஒவ்வொரு சுற்றுலா மையத்திலும் செலவு ஏற்கும் விருந்தினர் தங்குவதற்கான இடவசதி கிடைக்கும் விவரக் குறிப்புப் புத்தகம் ஒன்று வெளியிடப்படும்.



அண்ணா பூங்கா



## தமிழ்நாட்டிற்குச் சொகுசு இரயில் போக்குவரத்து

ஒரு வட்டாரத்தில் சுற்றுலா வளர்ச்சியில் இரயில்வே முக்கியப் பங்காற்றுகிறது. குறிப்பாக, உள்நாட்டுச் சுற்றுலா மேம்பாட்டில் இரயில்வே தலையாய பங்கு வகிக்கிறது. இதன் மூலம் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அதன் பங்கை ஆற்றுகிறது. இரயில்வேயின் பல சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களில் இராஜஸ்தானில் செயல்படுத்தப்பட்டு வரும் 'இரயிலிலேயே சென்று சுற்றுலா இடங்களைப் பார்வையிடும் திட்டம்' (Palace on Wheels Project) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. பல்வகைச் சிறப்புச் சுற்றுலா இடங்களைக் கொண்ட தமிழகம் இத்தகைய சிறப்பு இரயிலை விடுவதற்கான வாய்ப்பு வளத்தைக் கொண்டுள்ளது. இக்கருத்தினை தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சகத்துக்கும், இரயில்வே அமைச்சகத்துக்கும் தெரிவித்தது. மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் ரூ.48 இலட்சம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. இரயிலுக்குத் தேவையான இணைப்புப் பெட்டிகளை வழங்க இரயில்வே நிருவாகம் ஒப்புக் கொண்டுள்ளது. 'தென்னிந்தியா ரோவர் சிறப்பு இரயில்' (South India Rover Special Train) 1993 இறுதியில் இயக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**'குடை ஆன்டினா'**

1993-94-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், உதகமண்டலம், கொடைக்கானல், மதுரை ஆகிய இடங்களிலுள்ள முக்கியமான ஓட்டல்களில் 'குடை ஆன்டினா' பொருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வசதிகளை அளிப்பதற்காக இந்த ஓட்டல்களில் ரூ.20 இலட்சம் செலவில் 100 தொலைக் காட்சிப் பெட்டிகள் வாங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்து வரும் பொருட்டு, மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள சுற்றுலா முகவரமைப்புகளுடன் சுற்றுலாத் தொடர்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இச்சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களின் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது.

புதியதோர் உலகம் செய்வோம்!

சமூக பொருளாதாரக் கல்வி முன்னேற்ற அறக்கட்டளை
(SEED TRUST)

தலைமை அலுவலகம்
அசோக் நகர், சென்னை-83.

கிளை அலுவலகம்
இறையூர், உளுந்தூர்ப்பேட்டை, விழுப்புரம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

சமூகத்தில் நலிந்த மக்களின்
ஒட்டு மொத்தமான முன்னேற்றத்திற்காகப்
பாடுபடும் எம் நிறுவனம்.

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

P. ரமேஷ் சுந்தன் பிரபு, M.Com., M.B.A.,
S/o. T.K.K. பழனிச்சாமி செட்டியார்

உரிமையாளர்:
ஸ்ரீபுவனேஸ்வரி டாக்கீஸ்
பண்ருட்டி, தென்னார்க்காடு மாவட்டம்

போன்: 2068



## வளரும் வேளாண்மை

# வேளாண் பொறியியல் துறையின் விரைவான பணிகள்!

வேளாண்மை வளர்ச்சிக்கு, வேளாண்மைப் பொறியியல் துறைக்கும் பெரும் பங்குண்டு. தென்னார்க்காடு மாவட்டத்தில் 10 புல்டோசர்களும், 10 டிராக்டர்களும் உள்ளன. நிலம் சமன் படுத்த புல்டோசரும், இயந்திரச் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ள டிராக்டரும், விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம், பணிகளைத் துறை நிறைவேற்றி வருகின்றது. புல்டோசர்கள் ஆண்டுதோறும் 14,000 மணி நேரம் பணிபுரிந்து, சுமார் 560 எக்டேர் நிலத்தைச் சமன்படுத்துகின்றன. டிராக்டர்கள் 5,800 மணி நேரம் பணிபுரிந்து 1,160 எக்டேர் நிலத்தில் உழவுப் பணிகளை நிறைவேற்றுகின்றன.

16, பர்குசன் துளைக் கருவி, 15 ரோட்டரி துளைக் கருவி, 3 இன்வெல் துளைக் கருவி, 8 பாறை வெடிக் கருவி, 1 நீர்த்துளைக் கருவி, 110 கைத்துளைக் கருவி, 2 காற்றழுத்தக் கருவி, 1 மின்சார வாகிங் கருவி, 2 ரெசின்டிவிடி மீட்டர் ஆகிய இயந்திரங்கள் உள்ளன. இவை புதிய நீர்வளமுள்ள இடங்களைத் தேர்வு செய்யவும், குழாய்க் கிணறுகள் அமைக்கவும், வறண்ட கிணறுகளை ஆழப்படுத்தவும், பக்கவாட்டில் துளையிடவும், வாடகை முறையில் உழவர்களுக்கு வழங்கிப் பணிகளை நிறைவேற்றி வருகிறது. ஆண்டுதோறும் 1,700 புதிய குழாய்க்கிணறுகள் அமைக்கப்படுகின்றன. 500 கிணறுகள் புத்துயிர் ஊட்டப்படுகின்றன. இதன் வாயிலாக 6,800 எக்டேர்கள் பாசன வசதி பெறுகின்றன.

### மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

மழை நீரை மண்ணுக்குள் ஈர்த்து மண்ணின் ஈரம் காத்திடவும், மண்ணரிப்பைத் தடுக்கவும், வழிந்தோடும் மழை நீரைத்தகுந்த இடங்களில்தேக்கி வைத்துப் பலன் பெறவும், நிலத்தின் தன்மைக்கேற்ப அதன் உபயோக முறையினை மாற்றியமைக்கவும், மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சமவெளிப் பகுதியில் சமஉயர வரப்பிடல், தடுப் பணைகள் அமைத்தல், ஆழ உழவு, மரம் வளர்த்தல், நிலச்சமன் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1957 முதல் இம்மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இது வரை சுமார் 360 இலட்சம் செலவில் 125 ஆயிரம் எக்டேரில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

### சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டம்

இத்திட்டத்தின் சிறு மற்றும் குறு விவசாயிகள் புதிய குழாய்க் கிணறு அமைத்தல்/கிணற்றை ஆழப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு ஆகும் செலவில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சம் ரூ.5,000 மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 30.3.92 முடிய ரூ.60.52 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு 2717 சிறு/குறு விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். இவ்வாண்டில் (1992-93) இதுவரை ரூ.34 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு 680 சிறு/குறு விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

### சிறப்புத் திட்டங்கள்

இந்து ஆதிதிராவிட விவசாயிகளின் வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், நிலையான வருவாய்க்கு வழி வகுக்கவும் ஏதுவாகக் குழாய்க் கிணறு மற்றும் கிணறு ஆழப்படுத்தும் பணி இவைகளுக்கு ஆகும் செலவில் (ஒன்பது இடு பொருள்களுக்கு) 50 சதவிகிதம் (அதிகபட்ச வரையறை ஏதுமின்றி) மானியம் வழங்கப்படுகிறது.

### ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்

மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக, மண்வளப் பாதுகாப்புப் பணிகள், கல்வராயன் மலைப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றன. நிலம் சமன் செய்தல், மலைப்பகுதிகளில் சம உயர கற்சுவர், தடுப்பணைகள், ஆழ உழவு, கிணற்றில் சுற்று சுவர் கட்டுதல் போன்ற பணிகள் 100 சதவிகித மானியத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை, 972 எக்டேருக்கு ரூ.30.2 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

### தேசிய நீர்ப் பிடிப்புப் பகுதி மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம்

மானாவாரி நிலங்களில், சாகுபடியை மேம்படுத்தும் நோக்கத்தில் மண் அரிப்பைத்தடுத்துஓடைகளை நிலப்படுத்த தடுப்பணைகள் கட்டும் பணி மற்றும், நீரோடை மேம்பாட்டுப்பணி (Run off Management) முதலியவை 100 சதவிகித மானியத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இதுவரை ரூ.2.60 இலட்சம் செலவில் 45 தடுப்பணைகள் பண்ருட்டி, வல்லம்,

மேல்மலையனூர், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**மகளிர் மேம்பாட்டுத் திட்டப்பணி**

பெண் விவசாயிகளின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதன் மூலம் சமுதாயத்தில் அவர்களின் நிலையினை மேம்படுத்த இத்திட்டம் சின்ன சேலம், கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், விருத்தாசலம் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன.

1. நிலம் சமன் செய்தல், 2. குழாய்ப் பணி, 3. கிணற்றில் குழாய்க் கிணறு அமைக்கும் பணி, 4. கிணறு புத்துயிருட்டல், 5. கிணற்றில் சுற்றுச் சுவர் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதுவரை ரூ.33.22 இலட்சம் செலவில் 564 பெண் விவசாயிகளின் நிலங்களில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் நிலத்தடி நீர் வளத்தினைப் பெருக்கவும் வேலையின்றி வாடும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரவும், கிராம மக்கள் மற்றும் கால்நடைகளுக்கும் பயன் தரும் விகிதத்தில் 325,18 இலட்சம் செலவில் 348 கசிவு



நீர்க் குட்டைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 8 சிறு பாசன ஏரிகள் 13 இலட்சம் செலவில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

**சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம்**

பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதில் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ச் சாதனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இத்திட்டத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கும் செலவில் 50 சதவிகிதம் அதிகப்பட்சம் ரூ.50,000 (அதிகப்பட்ச நிலப்பரப்பு - 4 எக்டேர்) மானியம் வழங்கப்படுகிறது. தெளிப்பு நீர்ப் பாசனம் அமைக்கும் செலவில் முதல் எக்டேருக்கு ரூ.12,500, 2-வது எக்டேருக்கு ரூ.10,000, மூன்றாவது எக்டேருக்கு ரூ.7,500 அதிகப்பட்சம் ரூ.30,000 மானியம் வழங்கப்படுகிறது.

இவ்வாண்டில் ரூ.6.32 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு 36 விவசாயிகளுக்கு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**வெள்ள நிவாரணப் பணிகள்**

இயற்கை இடர்ப்பாடுகளினால் உண்டாகும் வெள்ளப் பெருக்கினால் விளை நிலங்களில் மணல் படிந்து விவசாயம் மேற்கொள்ள இயலாத நிலை சில சமயங்களில் ஏற்படுகின்றது. அத்தகையத் தருணங்களில் இத்துறை தம் வசமுள்ள புல்டோசர்களைப் பயன்படுத்தி நிலத்தில் படிந்துள்ள மணலை அகற்றி விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்றுகின்றது. இதுவரை 1972, 1977, 1985 மற்றும் 1992-இல் இம்மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின்போது, இத்துறை அரசு அளிக்கும் மானிய உதவியுடன், நிவாரணப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு விவசாயிகளுக்குப் பெரிதும் உதவியுள்ளது.

கடந்த நவம்பர்த் திங்களில், கள்ளக்குறிச்சி வட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 75.70.5 எக்டேர் நிலம் ரூ.5.88 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது.


நல்வாழ்த்துக்கள்



கிருஷ்ணா ஆட்டோ ஸ்பேர்ஸ்

**போன்:**

**சிதம்பரம்: 2343**
**கடலூர்: 20919**
**சேத்தியாதோப்பு: 64**





With Best Compliments From:

**VANAVIL DYES AND CHEMICALS LIMITED**

**Manufacturers of:**

**DYES AND DYE INTERMEDIATES**

**REGISTERED OFFICE and FACTORY:**

Kudikadu - P.O.
Cuddalore - 607 005
South Arcot District
Tamil Nadu

Phones: 22059, 22297, 22462, 22483
Telex: 0462 - 209 VDCL IN
Fax: 041428 - 218
Grams: VANAVIL

MADRAS OFFICE:

20, South Leith Castle Road
Santhome
Madras-600 028

Phone: 75045, 75054
Telex: 041 - 8230 VDCL IN
Fax: 044 - 74722
Grams: VANTHOL

BOMBAY OFFICE:
4th Floor, Cambata Building
(Above Eros Theatre)
42, Maharshi Karve Road
Churchgate,
Bombay 400 020

Phone: 2041474
Telex: 011 - 82955 CCLC IN

DELHI OFFICE:

905, New Delhi House
27, Barakhamba Road
New Delhi 110 001

Phones: 3312889/3310382
Telex: 031-65398 CCL IN

AHMEDABAD OFFICE:
H.K. House
3rd Floor, Ashram Road
Ahmedabad 380 009

Phones: 449270/445175
Telex: 0121-6939 ACCL IN




நலலெண்ணங்கள் என்ற அஸ்திவாரத்தின் மீதுதான் நிலைத்திருக்கின்றது என்ற உண்மையை அறிந்து கொள்ளுங்கள்'' என்கிறார் ஆசிரியர். எனவே எண்ணங்களைப் பற்றி ஆராயும் ஆசிரியர், மனம் என்பது என்ன? என்று ஒரு வினாவை எழுப்பி, அதற்கு விளக்கம் தரும் பாங்கை, 'உடலே மனம்' என்னும் கட்டுரையில் பார்க்கிறோம்.

பொதுவாக, சிந்தனையைத் தூண்டும் ஒரு அரிய நூலாகத் திகழ்கிறது இது.

### இராமாயணத்தில் நக்கீரன்

**ஆசிரியர்:** கொடைக்கானல் காந்தி

**வெளியீடு:**

இளைஞர் வெளியீடு,
7, சின்னப்ப ராவுத்தர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

பக்கம்:220 விலை:ரு.30/-

வேறுபட்ட நடையில் மாறுபட்ட கோணத்தில் வாலியை நக்கீரனாகக் காட்ட எடுக்கப்பட்ட வசன முயற்சி இது. 26 தலைப்புகள் 26 கவிதை வரிகளாய் அமைந்துள்ளன. நூலின் ஒவ்வொரு வரியும் ஒரு கவித்துவ வீச்சோடு வந்து உரைநடையின் ஆழத்தை அதிகப்படுத்துகிறது.

வாலியைப் பற்றி வந்துள்ள கருத்துரைகள், தீர்ப்புரைகள் எல்லாம் மறுபடி உரைகல்லில் உரைத்துப் பார்க்கப்படுகின்றன. திறனாய்வைப் படைப்பிலக்கியத்துக்கு உயர்த்தலாம் என்பதை உணர்த்துகின்ற நூல் இந்த நூல்.

ஆசிரியரின் பரந்த கல்வியும், விரிந்த கேள்வியும், செறிந்த அறிவும் நமது பார்வையை விசாலப்படுத்துகின்றன. சிறந்த திறனாய்வு நூலாகிய இந்த நூலில் அடிக்கடி தலைநீட்டும் அச்சுப் பிழைகள் அடுத்த பதிப்பிலாவது களையப்பட வேண்டும். திறனாய்வாளருக்குத் திகட்டாத நூல் இந்த நூல்.

—இளந்தேவன்

### டாக்டர் தயாவின் இலக்கிய இறையியல் படைப்புகள்

**பதிப்பாசிரியர்:** ம.வி. கதாகர்

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க் டவுன், சென்னை-600 003.

பக்கம்:145 விலை:ரு.50/-

அருள்திரு டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ், மிகச்சிறந்த எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர். இலக்கிய இறையியல் படைப்புகள் பலவற்றைப் படைத்தவர். அன்னாரின் மணிவிழா ஆய்வரங்கத்தில் படிக்கப்பட்ட- படைக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். ஒவ்வொரு கோணத்தில் எழுதப் பெற்ற ஒவ்வொரு கட்டுரையும் டாக்டர் தயாவின் எழுத்தாற்றலை வெளிப்படுத்துகின்றது.

### புகழ்பெற்ற பேரூர்கள்

**ஆசிரியர்:** தங்கவயல் லோகிதாசன்

**வெளியீடு:**

அம்பிகா பதிப்பகம்,
9/10, ராணி அண்ணா நகர்,
சென்னை-78.

பக்கம்:20 விலை:ரு.25/-

இந்தியா என்கிற மகுடத்தில், ஒவ்வொரு மாநிலமும் ஒரு வைரக்கல்லாக ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது. அவற்றில் காணத்தக்க அரிய இடங்களும் உள்ளன. அந்த வகையில் இந்த நூலில் இந்தியாவின் பல மாநிலங்களைப் பற்றியும், அங்குள்ள முக்கியத் தலங்கள் பற்றியும் தகவல்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

காஷ்மீர், ரிசிகேசம், குருக்ஷேத்திரம், டில்லி, தட்சசீலம், பிருந்தாவனம், ஜெய்ப்பூர், ஹரியானா, பம்பாய், கோவா, துளுநாடு, யஜபூர், ஐதராபாத், சென்னை, மயிலை, திருவொற்றியூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களைப் பற்றிய சுவையான தகவல்கள் நிறைந்துள்ள நூல். அனைவரும் படித்து மகிழலாம்.

- மறைமலை.

### வெற்றி தரும் எண்ணங்கள்

**ஆசிரியர்:** மானோஸ்

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
சென்னை-600 004.

பக்கம்:200 விலை:ரு.25/-

எண்ணங்களைப் பற்றி அறிவியல பூர்வமாக விளக்கிக் காட்டும் ஆசிரியரின் திறன் அறிந்து எண்ணி எண்ணி மகிழலாம்.

'வெற்றியின் கட்டடமே,

### என் பக்கம்

**ஆசிரியர்:**

ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

**வெளியீடு:**

சுதா பதிப்பகம்,
4, முத்து முதலித் தெரு,
சென்னை-600 007.

பக்கம்:112 விலை:ரு.15/-

பல்வேறு சந்தர்ப்பங்களில், பலருடன் பழகுகிற வாய்ப்புகளை, அனுபவ மொழிகளாக உதிர்த்திருக்கிறார் ஆசிரியர். 'கவிதை உறவு' இதழில் கடைசிப் பக்கக் கட்டுரையாக எழுதிவந்த தொகுப்புதான் இது.

ஆசிரியரின் அனுபவங்கள், அணுகுமுறைகள், ஆலோசனைகள், அறிவுரைகள் எல்லாம் இந்தக் கட்டுரைகளில் விரவியுள்ளன. படித்து மகிழவும் பயன் பெறவும் உதவும் நூல்.

—பி.வி.ஜி.

### "நெருப்பிலே வாழுகின்ற மலர்கள்"

**ஆசிரியர்:** நெல்லை செல்வம்

**வெளியீடு:**

செல்லப் பாப்பா பதிப்பகம்,
என்.6, கஸ்தூரிபாய் நகர்,
4-வது தெரு, அனகாபுத்தூர்,
சென்னை-600 070.

பக்கம்:96 விலை:ரு.12/-

வரதட்சிணைக் கொடுமை, தொண்டு, சாதிச் சண்டை, மென்மையான காதல் உணர்வு, இரக்கமற்ற மனிதர்கள் எனப் பல விஷயங்கள் இக்கதைகளில் கருவாக இருக்கின்றன.

எதையும், விரைவாய், அழுத்தமாய்ச் சொல்லிவிட வேண்டுமென்ற வேகம் எழுத்தில் தெறிக்கிறது. மகாத்மாக்கள், இதயமற்ற மனிதர்கள் போன்ற கதைகள் சிறப்பாக உள்ளன.

—குமார்

சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

164878


எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

